

# வேதாகமத்தின் ஆய்வு

## டேவிட் ரோப்பர்

## பழைய ஏற்பாட்டின் ஆய்வு

1. ஒரு வருடத்தில் வேதாகமம் முழுவதும்
2. ஆதியாகமம்: தொடக்கங்களின் புத்தகம்
3. யாத்திராகமம்: புறப்பட்டு செல்லதலின புத்தகம்
4. லேவியராகமம்: ஆசாரியர்களின் கைப்புத்தகம்
5. எண்ணாகமம்: வனாந்தரத்தில் ஜனத்தொகை அறிக்கை
6. உபாகமம்: மோசேயின் பிரியாவிடை உரை
7. யோசுவா: கானானில் வெற்றி!
8. நியாயதிபததகள் மற்றும் ரூத்: கொந்நளிப்பின் மத்தியில் அன்பு
9. 1 சாமுவேல்: ராஜ்யம் நிலைநாட்டப்படுதல்
10. 2 சாமுவேல்: தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதர்
11. 1 இராஜாக்கள்: இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்
12. 2 இராஜாக்கள்: ராஜ்யத்தின் கடைசி நாட்கள்
13. 1 மற்றும் 2 நாளாகமங்கள்: சிறையிருப்பிலிருந்து திரும்புவதற்கு ஆயத்தம்
14. எஸ்றா மற்றும் நெகேமியா: சிறையிருப்பிலிருந்து திரும்புதல்
15. எஸ்தர்: தேவன் தமது மக்களைப் பாதுகாக்கின்றார்
16. யோபு: வேதாகமத்தில் மிகவும் பொறுமையான மற்றும் பொறுமையற்ற மனிதர்
17. சங்கீதம்: யூதர்களின் பாடல் புத்தகம்
18. நீதிமொழிகள்: நடைமுறை ஞானத்தின் புத்தகம்
19. பிரசங்கி: வாழ்வின் வெறுமை
    சாலொமோனின் உன்னதப்பாட்டு: அன்பின் பாடல்
20. ஏசாயா: மேசியாத்துவத் தீர்க்கதரிசி
21. ஏரெமியா மற்றும் புலம்பல்: அழுகின்ற தீர்க்கதரிசி
22. எசேக்கியேல்: நாடு கடத்தப்பட்டிருத்தலின் தீர்க்கதரிசி
23. தானியேல்: அந்நிய நாட்டில் ஒரு அந்நியர்
24. சிறிய தீர்க்கதரிசிகள்: பெரிய செய்திகயையக் கொண்ட சிறிய புத்தகங்கள்

## புதிய ஏற்பாட்டு ஆய்வு

25. மத்தேயு: கிறிஸ்து, ராஜா
26. மாற்கு: கிறிஸ்து, ஊழியர்
27. லூக்கா: கிறிஸ்து, மனுஷகுமாரன்
28. யோவான்: கிறிஸ்து, தேவகுமாரன்
29. நடபடிகள்: சபை நிலைநாட்டப்படுதலும் பரவுதலும்
30. ரோமர்: விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல்

31. 1கொரிந்தியர்: உலகத்தன்மையுடன் போராடுதல்
32. 2கொரிந்தியர்: பவுலின் இருதயத்தில் இருந்து
33. கலாத்தியர்: கிறிஸ்துவுக்குள் சுயாதீனம்
34. எபேசியர்: கிறிஸ்துவும் அவரது சபையும்
35. பிலிப்பியர்: கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாயிருத்தல்
36. கொலோசெயர்: கிறிஸ்துவின் சகலத்திலும் போதுமான தன்மை
37. 1தெசலோனிக்கேயர்: புதுக் கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்துதல்

# ஒரு வருடத்தில் வேதாகமம் முழுவதும்

*நீங்கள் எப்போதாவது, ஒரு வருடத்திற்குள் வேதாகமம் முழுவதையும் வாசித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தது உண்டா? நீங்கள் எப்போதாவது, "வேதாகமத்தை இந்த வருடத்திற்குள் மும்முரமாகப் படித்துவிட வேண்டியது எனக்கு அவசியமாக உள்ளது" என்று கூறிக்கொண்டது உண்டா? நம்மில் பலர், நாம் செய்யத்தேவையானது என்ன என்று அறிந்திருக்கின்றோம், ஆனால் வேதாகம வாசிப்பு மற்றும் வேதாகமப் படிப்பிற்கென்று நம்மை ஒழுங்குபடுத்திக்கொள்வது என்பது கடினமாயிருக்கிறது.*

*அடுத்த பன்னிரெண்டு மாதங்களுக்கு, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும், வேதாகமம் முழுவதையும் விசேஷமாகப் படித்தல் என்ற விஷயத்தில் ஈடுபடும்படி உங்களுக்கு நான் அறைகூவல் விடுக்கின்றேன். இந்தப் பாடங்கள் அறுபத்தியாறு புத்தகங்களையும் பற்றிய மேல்கண்ணோட்டத்தை அளிக்கின்றன. நீங்கள் உங்களை இந்தப் பாடத்திற்கு ஒப்புக்கொடுத்தால், இது உங்களுக்கு தேவனுடைய வசனத்தைப் பற்றி, நீங்கள் முன் எப்போதும் கொண்டிராத ஒரு உட்கண்ணோட்டத்தைத் தரமுடியும்.*

*தனிப்பட்ட ஆதாயம் மற்றும் தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சி ஆகியவற்றிற்கு தனிப்பட்ட ஈடுபாடு என்பதே திறவுகோலாக உள்ளது. படிக்கப்பட்டிருத்தலுக்கு நீங்கள் ஒவ்வொரு புத்தகத்தில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளை வாசிக்க வேண்டும். நீங்கள் இந்த அதிகாரங்களைப் படித்து இவற்றின்மீது தியானம் செய்தால், ஒவ்வொரு பாடமும் உங்களுக்கு மிக அதிகமாக அர்த்தப்படும்.*

*ஆலோசனையாகத் தரப்பட்டுள்ள வாசிப்பு அட்டவணையில், ஒரு நாளில் வாசிப்பதற்கென்று மூன்று அல்லது நான்கு அதிகாரங்கள் வரையறைப்படுத்தப்பட்டுள்ளன. இது உங்களுக்கு ஒவ்வொரு புத்தகத்தைப் பற்றியும் நல்லதொரு மாதிரியைக் கொடுக்கும், ஆனால் இது பல அதிகாரங்களை வாசிக்கப்படாது விட்டுவைப்பதாகவும் இருக்கும். நீங்கள் தாண்டிச்சென்ற அதிகாரங்களுக்குப் பிற்பாடு திரும்ப வந்து அவை யாவற்றையும் வாசிக்க வேண்டும். வேதாகமம் முழுவதையும் வாசித்து முடித்தலில் பெரிய அளவு மனதிருப்தியும் மதிப்பும் உள்ளது.*

*முழு வேதாகமத்திலும் நன்கு பழக்கப்படுதல் ஆவதின் மதிப்பு 2 தீமோத்தேயு 3:16, 17ல் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது: "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." "வேதவாக்கியங்களெல்லாம்" என்ற சொற்றொடர், புதிய ஏற்பாடு வேதவசனத்தை உள்ளடக்குகிறது (2 பேதுரு 3:15, 16), ஆனால் சந்தர்ப்பப்பொருளானது குறிப்பாகப் பழைய ஏற்பாட்டு வசனங்களைப் பற்றிப் பேசுகிறது (2 தீமோத்தேயு 3:14, 15ஐக் காணவும்). வேதாகமத்தில் இருந்து முழு பயனைப் பெறுவதற்கு, நாம் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் நன்கு பழக்கமாவதென்பது அவசியமாக உள்ளது.*

இது நாம் இன்றைய நாட்களில் பழைய ஏற்பாட்டின் கீழ் இருக்கின்றோம் என்று அர்த்தப்படுவது இல்லை. "ஏற்பாடு" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "உடன்படிக்கை" அல்லது "ஒப்பந்தம்" என்று அர்த்தப்படுகிறது. பழைய ஏற்பாடு என்பது தேவனுக்கும் யூத மக்களுக்கும் இடையிலான ஒரு உடன்படிக்கையாய் இருந்தது. அது ஒரு தற்காலிக மான உடன்படிக்கையாய் இருந்தது (எரேமியா 31:31-34; எபிரெயர் 8:8-12). கிறிஸ்து, "அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து" நீக்கிப்போட்டார் என்று பவுல் கூறினார் (கொலோசெயர் 2:14). இயேசுவின் புதிய ஏற்பாடு (மத்தேயு 26:28) கர்த்தருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான ஒரு உடன்படிக்கையாய் இருக்கிறது. இது இயேசு சிலுவையில் மரித்தபோது அமுலுக்கு வந்தது (எபிரெயர் 9:16, 17).

பழைய ஏற்பாட்டைப் படித்தல் என்பது இன்னமும் மதிப்புள்ளதாகவே இருக்கிறது. இது நமக்குப் பயன்தரும்படி முன்னதாகவே எழுதப்பட்டது என்று பவுல் வலியுறுத்தினார்: "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமை யினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4). பழைய ஏற்பாடு, நாம் கற்றுக்கொள்ளக்கூடிய உதாரணங்களைக் கொண்டுள்ளது என்று அவர் கூறினார்: "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; ... நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரிந்தியர் 10:11).

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் பழைய ஏற்பாட்டில் நன்கு பழக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டியது ஏன் என்பதற்குக் குறைந்த பட்சம் ஆறு காரணங்கள் உள்ளன:

1. அண்டம் மற்றும் மனிதனின் தோற்றம் பற்றிய கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்கு.

2. இயேசுவின் தெய்வீகத்துவத்தை நிரூபிப்பதற்கு.

3. இயேசு மற்றும் கிறிஸ்தவத்தின் முன்நிழலின் வகைகளைப் படிப்ப தற்கு.

4. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையிலான ஒற்றுமைகளைக் கவனிப்பதற்கு.

5. பழைய ஏற்பாட்டு போதனைகளைப் புதிய ஏற்பாட்டுப் போதனை களுடன் நேரெதிராய் ஒப்பிடுவதற்கு.

6. கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் உதாரணங்களை பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்கு.

இந்தப் பாடங்களின் முழு மதிப்பையும் நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு, உங்களுக்கு உதவுவதற்காக நீங்கள் பின்வருபவற்றைச் செய்ய விரும்பலாம்:

(1) இந்தப் பாடங்களில் உள்ள கருத்துக்கள் பற்றி ஒரு குறிப்புப்புத்தகம் தயாரியுங்கள், மற்றும் (2) இந்தப் பாடங்களைக் கவனமாய்ப் படியுங்கள். உலகத்திலேயே மாபெரும் புத்தகத்தை நாம் ஒன்றாக ஆராய்ந்து பார்க்கப்போகும் இந்த ஆண்டு நமக்கு ஒரு மன எழுச்சிமிகுந்த ஆண்டாக இருக்கப்போகிறது!

# 1

# ஆதியாகமம்: தொடக்கங்களின் புத்தகம்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:** 1-4, 6-8, 12, 18, 21, 22, 25, 28, 35, 37, 39-42, 45, 46, 49, 50.*

***தலைப்பு***

*பழைய ஏற்பாடு அடிப்படையில் எபிரெய மொழியில் எழுதப்பட்டிருந்தாலும், பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் பலவற்றின் தலைப்புகள் கிரேக்க மொழியிலேயே அமைந்துள்ளன. அவைகள் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப்பதிப்பாகிய செப்துவஜிந்த் என்ற புத்தகத்தில் இருந்து வருகின்றன, இப்புத்தகம் ஏற்பாடுகளுக்கு இடையிலான காலகட்டத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. "ஆதியாகமம்" என்ற தலைப்பு "தோற்றம்" அல்லது "தொடக்கம்" என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையாக உள்ளது. இந்தத் தலைப்பு, "ஆதியிலே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள இப்புத்தகத்தின் முதல் வசனத்தில் உள்ள முதல் வார்த்தையில் இருந்து வருகிறது. இந்தத்தலைப்பு ஏற்புடையதாகவே உள்ளது, ஏனெனில் இப்புத்தகம் பல விஷயங்களின் தோற்றம் பற்றிக் கூறுகிறது.*

***பின்னனி***

*பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்கள் சில வேளைகளில், "ஐந்து புத்தகங்கள்" அல்லது "ஐந்து தொகுதிகளால் ஆன புத்தகங்கள்" என்று அர்த்தப்படுகிற "பென்ட்டகூக்" என்ற கிரேக்கச் சொற்றொடரைக் கொண்டு குறிப்பிடப்படுகின்றன. நாம் பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களை "நியாயப்பிரமாணத்தின் புத்தகங்கள்" என்று அழைக்கின்றோம், ஏனெனில் மோசேயின் நியாயப்பிரமாணத்தினுடைய இருதயம் போன்ற மையப்பகுதி இங்கு காணப்படுகிறது, விசேஷமாக கடைசி நான்கு புத்தகங்களில் அது காணப்படுகிறது. இந்தப் புத்தகத்தில் அதிகமான வரலாறு, சில கவிதைகள் மற்றும் சில தீர்க்கதரிசனங்களும்கூட அடங்கியுள்ளன.*

*இஸ்ரவேல் மக்களை அடிமைத்தளையிலிருந்து வெளியே வழிநடத்திசென்ற மோசே, முதல் ஐந்து புத்தகங்களின் எழுத்தாளராக இருக்கின்றார். ஆதியாகமம் என்ற புத்தகம் எப்போது எழுதப்பட்டது என்று மிகச்சரியாக நாம் அறிவதில்லை, ஆனால் இது அனேகமாக, இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்து கொண்டிருந்த வேளையின்போது எழுதப்பட்டிருக்கலாம். இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலையின் அருகில் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் செலவிட்டிருந்ததால், அக்காலகட்டத்தில் ஒரு வேளை ஆதியாகமம் எழுதப்பட்டிருக்கலாம்.*

*ஆதியாகமம் என்பது நியாயப்பிரமாணப் புத்தகங்களில் விசேஷித்த புத்தகமாக உள்ளது, ஏனெனில் இது யூதமக்களுக்குத் தரப்பட்டிருந்த விசேஷித்த பிரமாணங்கள் எதையும் கொண்டிருப்பதில்லை. பழைய ஏற்பாடு, இஸ்ரவேலர் அல்லது யூதர்கள் என்ற ஒரு மக்களினத்திற்கு மாத்திரம் எழுதப்பட்டது என்பதை*

*நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். பழைய ஏற்பாடு எழுதப்படுவதற்கு முன்பு, எழுதப்பட்ட பிரமாணம் எதையும் தேவன் கொடுத்திருக்கவில்லை. அவர் மனித குலத்துடன் மிகவும் நேரடியாக, "முற்பிதாக்கள்" என்று அழைக்கப்பட்ட குடும்பங்களின் தலைவர்கள் மூலமாகச் செயல்பட்டார். தேவன் இஸ்ரவேலின் இனத்தைப் பிரித்து அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பதற்கு முற்பட்ட காலகட்டத்தைப் பற்றி ஆதியாகமம் கூறுகிறது.*

*பழைய ஏற்பாடு யூதர்களுக்காக எழுதப்பட்டது மற்றும் ஆதியாகமம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முந்திய காலகட்டத்தில் நடந்தவற்றைப் பற்றியது என்றால், பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் இடம் பெற்றுள்ளது ஏன்? ஆதியாகமம் பழைய ஏற்பாட்டிற்கு ஒரு முன்னுரையாகப் பயன்படுகிறது. இது யூதர்களுக்கு அவர்களின் பின்னணியைப் பற்றியும் அவர்கள் எவ்வாறு தேவனுடைய விசேஷித்த மக்களானார்கள் என்பதை பற்றியும் கூறிற்று. ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோருக்குத் தரப்பட்டிருந்த வாக்குத்தத்தங்கள் யூதர்களுக்கு விசேஷித்த தனிச்சிறப்புடையவைகளாயிருந்தன.*

*ஆதியாகமம் நமக்கும் விசேஷித்த தனிச்சிறப்பைக் கொண்டுள்ளது, ஏனென்றால் அது நமக்குத் தொடர்புடைய பல விஷயங்களின் தோற்றம் பற்றிக் கூறுகிறது: அது மனிதகுலத்தின் தோற்றம், திருமணம் மற்றும் இல்லம் ஆகியவற்றின் தோற்றம், இயேசு கிறிஸ்துவில் உச்சம் பெற்று முடித்துவைக்கப்பட்ட தேவனுடைய திட்டத்தின் தோற்றம் ஆகியவற்றை எடுத்துரைக்கிறது.*

*ஆதியாகமம் ஒரு அறிமுகப் புத்தகமாய் இருப்பதால், அது பல வருடங்களை ஒரு குறுகிய இடைவெளியில் கூறிமுடிக்கிறது. ஆதியாகமத்தின் ஐம்பது அதிகாரங்கள் 2,000க்கும் மேற்பட்ட வருடங்களில் நடந்தவற்றைப் பற்றிக் கூறிமுடிக்கின்றன, அதே வேளையில் பழைய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியானது 1,500க்கும் சற்றுக்குறைவான வருடங்களில் நடந்தவற்றைப் பற்றிக் கூறிமுடிக்கின்றன. வம்சவழி அட்டவணைகள், பரம்பரை வரிசையில் ஒவ்வொரு நபரையும் உள்ளடக்குதலைவிட பரம்பரை வரிசையைப் பற்றி அதிக அக்கறை செலுத்துவதாய் இருப்பதால், ஆதியாகமத்தின் தொடக்கத்தினுடைய காலக்குறிப்பு பற்றி நாம் முற்றிலும் சரியாகக் கணித்தறிய இயலாது. இருப்பினும், வேதாகமம் மனிதனின் தோற்றம் பற்றிச் சில அறிவியல் அறிஞர்கள் சித்தரிப்பதுபோல் பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது என்று கூறுவதற்கு மாறாக, அவனது தோற்றத்தைச் சார்புநிலையில் சமீபத்தில் ஏற்பட்டதாகச் சித்தரிக்கிறது.*

*இந்தப் புத்தகம் யோசேப்பின் மரணத்துடன் முடிவடைகிறது.*

**வரைகுறிப்பு**

I. *உலகத்தின் தொடக்கம் (1:1-2:3).*

II. *மனிதனின் தொடக்கம் (2:4-25).*

III. *பாவத்தின் தொடக்கம் (3:1-13).*

  A. *கீழ்ப்படியாமையின் தொடக்கம்.*

  B. *மரணத்தின் தொடக்கம்.*

IV. *மனிதனை மீட்பதற்குத் தேவனுடைய திட்டத்தின் தொடக்கம் (3:14-5:32).*

A. பலியின் தொடக்கம்.
B. கொலையின் தொடக்கம்.
C. கைத்தொழில் மற்றும் வணிகம் ஆகியவற்றின் தொடக்கம்.

V. மீண்டும் தொடக்கம் (6-11).
A. வெள்ளப் பெருக்கிற்குப் பின்பு புதிய தொடக்கம்.
B. மக்கள் இனங்களின் தொடக்கம்.

VI. ஆபிரகாமுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் தொடக்கம் (12-50).
A. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யோசேப்பு ஆகியோரின் வரலாறுகள்.
B. இஸ்ரவேல் மக்களினத்தின் தொடக்கம்.

**ஆதியாகமத்தில் இருந்து பாடங்கள்**

ஆதியாகமம் என்ற புத்தகம், நாம் தாழ்ந்த நிலையிலான விலங்குகளின் வடிவிலிருந்து பரிணாமமடையவில்லை என்பதை நமக்குக் கூறுகிறது. நாம் தேவனுடைய சாயலாக உருவாக்கப்பட்டோம் - நாம் அதற்கேற்ப செயல்பட வேண்டும்!

ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்கள், வாழ்க்கைக்கு ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்குமான திருமணத்தைத் தேவன் எவ்வாறு ஏற்படுத்தினார் என்று கூறுகின்றன. வேதாகமத்தின் எஞ்சிய பகுதியில் திருமணம் பற்றிக் கலந்துரையாடப்படும்போது, இந்த அதிகாரங்கள் குறிப்புக்கான கருத்துக்களாக இருக்கின்றன (மத்தேயு 19:3-9).

மனிதன் பாவம் செய்தபோது, மனிதனின் மீட்புக்கென்று ஒரு திட்டத்தைத் தேவன் உடனடியாகச் செயல்படுத்தத் தொடங்கினார் (ஆதியாகமம் 3:15). பழைய ஏற்பாட்டின் எஞ்சியபகுதியானது, தேவன் இந்தத் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்தினார் என்பதைப் பற்றிய வரலாறாக உள்ளது. இயேசுவில் நிறைவேற்றம் அடைந்ததான, ஆபிரகாமுக்கு தரப்பட்ட "சந்ததி" பற்றிய வாக்குத்தத்தம் இந்தத் திட்டத்தின் முக்கியமான படிநிலைகளில் ஒன்றாக உள்ளது (ஆதியாகமம் 22:18; இவற்றுடன் கலாத்தியர் 3:16, 19).

---

## இறுதியான சோதனை (ஆதியாகமம் 22:1-19)

ஆதியாகமம் பற்றிய இந்தப் படிப்பானது வேதாகமத்தில் ஒரு வருடப் பயணம் என்பதைத் தொடங்கி வைக்கிறது. நீங்கள் உங்கள் ஆவிக்குரிய ஓட்டக் காலணியைக் கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன், ஏனென்றால் இது நமது விரைவான பயணமாய் இருக்கப்போகிறது.

ஒருமுறை ஒரு மனிதர் தமது மகனை, அவர் வளர்ந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் செய்தவற்றை எடுத்துக்கூறி அவர் அவற்றைச் செய்த இடங்களையும் காண்பித்தார். அவர் தமது மகனுக்கு அவரது வேர்களைப் பற்றிக் கூறினார். ஆதியாகமம் யாவும் வேர்களைப் பற்றியதாயிருக்கிறது.

"ஆதியாகமம்" ("Genesis") என்பது, "தோற்றங்கள்" அல்லது "தொடக்கங்கள்" என்று அர்த்தப்படுகிறது; இப்புத்தகம் பலவிஷயங்களின் தொடக்கம் பற்றிக் கூறுகிறது. ஆபிரகாமுக்குத் தரப்பட்டதான சந்ததி பற்றிய வாக்குத்தத்தம் போன்று அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக வேறெதுவும் இருப்பதில்லை -

*மற்றும் ஆபிரகாம் போன்று இப்புத்தகத்தின் மையமாக வேறெவரும் இருப்பதில்லை. உலகம் முழுவதும் புறதெய்வ வணக்கத்திற்குச் சென்றிருந்த வேளையில், அவர் இன்னமும் யெகோவா என்ற உண்மையான ஒரே தேவன்மீது நம்பிக்கையாய் இருந்தார்.*

*ஆபிரகாமின் வாழ்வில் இறுதியான சோதனையை நாம் உற்று நோக்குவோம். ஆபிரகாமின் விசுவாசம் அதற்கு முன்னதாகவும் சோதிக்கப்பட்டிருந்தது, ஆனால் 22ம் அதிகாரத்தில் உள்ளது போன்ற சோதனை வேறெதுவும் இல்லை. 17:19 மற்றும் 21:1-3, 12 மற்றும் அதன்பின்பு 22ம் அதிகாரம் ஆகியவற்றைக் கண்ணோக்கவும்.*

I. *ஆபிரகாமுக்கு இறுதியான சோதனை.*
   A. *தேவன் ஆபிரகாமைச் சோதித்தார் (22:1-19).*
      1. *இறுதியான நிபந்தனை/செயல்தேவை (வசனங்கள் 1, 2).*
         a. *பல ஆண்டுகளாக ஆபிரகாம் தேவனிடத்தில் இருந்து எந்த வார்த்தையையும் கேள்வியுறாதிருந்தார். "நல்லது செய்தாய்!" என்று தேவன் தம்மிடம் கூறும்படி அவர் எதிர்பார்த்திருக்கலாம்.*
         b. *இந்தக் கட்டளை அனேகமாக அவர் எதிர்பார்த்த கடைசி விஷயமாக இருக்கும்.*
      2. *இறுதியான பதில்செயல் (வசனங்கள் 3-10).*
         a. *ஆபிரகாம் தேவனிடத்தில் வாக்குவாதம் செய்திருக்கலாம். அவர் மாற்றுச் செயல்களை ஆலோசனையாகக் கூறியிருக்கலாம். அவர் தனது தயாரிப்புப் பணிகளை நீளச் செய்திருக்கலாம். ஆனால் இவற்றிற்குப் பதிலாக, அவர் தேவனுடைய சித்தத்தின்படி செய்வதற்கு "அதி காலையில் எழுந்தார்."*
         b. *5ம் வசனத்தில் உள்ள விசுவாசத்தைக் கவனியுங்கள்: "நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுது கொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம்." 8ம் வசனம், "தேவன் ... பார்த்துக் கொள்வார்" என்று கூறுகிறது.*
         c. *120 - வயதான ஒரு மனிதர், மிகவும் இளையவனான பையனை - மற்றும் அனேகமாக மிகவும் பெலசாலியானவனை - எவ்வாறு கட்ட முடிந்தது? அவர் தமது மகனைச் சரியான வகையில் வளர்த்திருந்தார்!*
      3. *இறுதியான வெகுமதி (வசனங்கள் 11-19).*
         a. *ஆபிரகாம் தனக்கு நேர்ந்த சோதனையைச் சந்தித்தார். இந்த நிகழ்ச்சி, ஆபிரகாமின் விசுவாசத்திற்கு மாபெரும் உதாரணமாகப் பயன்படுத்தப்படுகிறது (ரோமர் 4:1-22; யாக்கோபு 2:21-23).*
            (1) *தேவனைத் தவிர வேறு எவரும்/எதுவும் ஆபிரகாமுக்கு அதிக முக்கியத்துவமாயிருக்க வில்லை!*
            (2) *தேவனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் வேறு*

எதுவும் இவ்வுலகில் நமக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதா? வேலை, ஆரோக்கியம், குடும்பம், உடைமைகள், திட்டங்கள் மற்றும் கனவுகள்?

b. தேவன் பார்த்துக்கொண்டார்.

c. தேவன் தமது உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். "சந்ததி" பற்றி வாக்குத்தத்தம் தரப்பட்டிருந்தது (வசனம் 18) மற்றும் அது கிறிஸ்துவில் நிறைவேற்றப்பட்டிருந்தது (கலாத்தியர் 3:16).

B. ஆபிரகாம் சோதனையை எவ்வாறு சந்தித்தார் (எபிரெயர் 11:17-19).

1. அவர் விசுவாசத்தினால் சோதனையைச் சந்தித்தார் (எபிரெயர் 11:17).

a. எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும் ஒரு தேவனில் அவர் விசுவாசம் கொண்டார் (ஆதியாகமம் 22:8, 15).

b. மாபெரும் திறன்களைக் கொண்ட ஒரு தேவனில் அவர் விசுவாசம் கொண்டார் (எபிரெயர் 11:19).

2. ஆபிரகாம் எல்லாவற்றையும் நேர்த்தியாகக் கணக்கிட்டிருக்க வில்லை. தேவன் ஈசாக்கை மரித்தோரில் இருந்து எழுப்ப வில்லை (எபிரெயர் 11:19); தேவன் ஒரு ஆட்டுக்குட்டியைத் தரவில்லை (ஆதியாகமம் 22:8), ஆனால் அதற்கு மாறாக அவர் ஒரு ஆட்டுக்கடாவைத் தந்தார். ஆபிரகாம், தேவன் எல்லாவற் றையும் நன்மைக்கேதுவாகச் செய்வார் என்ற விசுவாசத்தைக் கொண்டிருந்தார் - அவ்வாறே செய்யப்பட்டது!

II. நமக்கு இறுதியான சோதனை.

A. நாம் யாவருமே நமது வாழ்வில் சோதனைகளை எதிர்கொள்ளு கின்றோம், ஆனால் சில வேளைகளில் நாம் இறுதியான சோதனை களைச் சந்திக்கலாம், அதாவது, நாம் மிகவும் மதிக்கின்ற சிலவற்றை விட்டுவிடும்படி கேட்டுக்கொள்ளப்படலாம்.

1. கோர்ரீ டென் பூம் என்பவர், "விலைமதிப்பானவற்றை நான் தளர்வாகப் பிடித்திருக்க முயற்சி செய்கின்றேன், ஏனெனில் அவைகளை எடுத்துக்கொள்ள தேவன் எனது விரல்களைபிரிக்கும் போது [நான் அவற்றை இறுக்கமாய் பற்றியிருந்தால்] எனக்கு வேதனையாய் இருக்கும்" என்று கூறினார்.

2. நம்மைச் சந்தோஷமான, வசதிநிறைந்த மக்களாக ஆக்க வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாயிருப்பதில்லை; நம்மை மேன்மையான மக்களாக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய நோக்கமாயிருக்கிறது.

B. இறுதியான சோதனையினூடே நாம் கடந்து செல்லும்போது, தேவனால் எல்லாம் கூடும் என்று நம்மால் விசுவாசிக்க முடியுமா? தேவன் பார்த்துக்கொள்வார் என்று நாம் விசுவாசிக்க முடியுமா? தேவன் எல்லாவற்றையும் நன்மைக்கேதுவாக வாய்க்கச் செய்வார்

*என்று நம்மால் விசுவாசிக்க முடியுமா (ரோமர் 8:28)? "ஆம்" என்பதே பதிலாக உள்ளது!*

*முடிவுரை*

*நீங்கள் இப்போது இறுதியான சோதனையினூடே கடந்து கொண்டிருக்கலாம். தேவன் உங்களுடன் இருப்பாராக. நீங்கள் ஒரு மேன்மையான நபராகுவீர்கள் ... அல்லது ஒரு கசப்பான நபராகுவீர்கள். ஆபிரகாம் கொண்டிருந்த விசுவாசத்தை நீங்களும் காத்துக்கொள்ளப் பிரயாசப்படுங்கள். அவர் பார்த்துக்கொள்ளுவார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.*

# 2

# யாத்திராகமம்: புறப்பட்டு செல்லுதலின் புத்தகம்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *1-5, 7-14, 16, 19, 20, 24, 25, 27, 28, 30, 32, 34, 35, 40.*

***தலைப்பு***

*"யாத்திராகமம்" என்ற தலைப்பு, "வெளிச்செல்லுதல்" அல்லது "புறப்பட்டுச் செல்லுதல்" என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையாக உள்ளது. இது "வெளியே" என்று அர்த்தப்படும் கிரேக்க முன்னிடைச் சொல்லான ek மற்றும் "சாலை" அல்லது "வழி" (இயேசு, "நானே வழி" என்று கூறியபோது பயன்படுத்திய சொல்) என்பதற்கான கிரேக்கச் சொல்லான hodos ஆகியவை இணைந்த கூட்டு வார்த்தையாக உள்ளது. நேரடியான அர்த்தத்தில் இவ்வார்த்தை "வெளியே செல்லும் வழி" என்று பொருள்படுகிறது. இது "exit" என்ற நமது ஆங்கில வார்த்தைக்குத் தொடர்புடையதாகும்.*

*இப்புத்தகத்தின் தலைப்பு, இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து வெளியேறி யெகோவாவுடன் ஒரு விசேஷித்த உறவை நிலைநாட்டியதைக் குறிக்கிறது.*

***பின்னணி***

*ஆதியாகமம் விட்ட இடத்தில் இருந்து யாத்திராகமம் தொடருகிறது. மோசே இதன் எழுத்தாளராயிருக்கின்றார். இந்தப் புத்தகம் தேவன் தமது வலியுறுத்தத்தை தனிநபர்களில் இருந்து இஸ்ரவேல் மக்களினம் என்ற ஒரு மக்களினத்திற்கு மாற்றிக்கொண்டதை வெளிப்படுத்துகிறது.*

*யோசேப்பை அறியாத ஒரு பார்வோன் அதிகாரத்திற்கு வந்தான், அவன் இஸ்ரவேல் மக்களை அடிமைகளாக்கினான். தேவன் மோசேயை ஒரு விடுவிப்பாளராக எழுப்பினார். யாத்திராகமத்தில் தேவன் மோசேயை அழைத்து, அவர் பார்வோனை எதிர்த்து நின்றது, மற்றும் பத்து வாதைகள் முதலியவை பற்றிய மனங்கவரும் வரலாறுகள் அடங்கியுள்ளன. கடைசியில் மோசே இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து வெளியே அழைத்துச் சென்று, செங்கடலைக் கடந்து, வனாந்தரத்திற்குள் சென்று, சீனாய் தீபகற்பம் மற்றும் சீனாய் மலைக்குச் சென்று, அங்கு பத்து கற்பனைகளும் அவை தொடர்பான நியாயப்பிரமாணமும் கொடுக்கப்பட்டது எவ்வாறு என்றும் இப்புத்தகம் நமக்குக் கூறுகிறது. ஆராதிக்க ஆசரிப்புக்கூடாரம் என்ற விசேஷித்த இடம் ஒன்று கட்டப்பட்டது. இப்புத்தகத்தின் முடிவில், மக்கள் இன்னமும் சீனாய் மலையின் அடிவாரத்திலேயே இருந்தனர்.*

*தொடர்ச்சிக்காக, நாம் இப்புத்தகத்தின் தலைப்பில் இருந்து "செல்லுதல்" என்ற கருத்தை எடுத்து நமது வரைகுறிப்பின் பிரதானக் கருத்துக்களுக்குப் பயன்படுத்துவோம்.*

***வரைகுறிப்பு***

I. *வெளியே செல்லுதல்: விடுதலை.*

   A. *அடிமைகளாக எபிரெய மக்கள் (1).*

B. மோசே பார்வோனின் அரண்மனைக்கு எடுத்துச் செல்லப்படுதல் (2).

C. விடுதலை (3-14).

D. விடுதலைப் பாடல் (15:1-22அ).

II. முன்னோக்கிச் செல்லுதல்: பயணம் செய்தல்.

A. வனாந்தரத்தில் பயணம் செய்தல் (15:22ஆ-18:27).

B. சீனாய் மலையை அடைதல் (19:1, 2).

III. தேவனுடன் செல்லுதல்: உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளுதல்.

A. தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையில் ஒரு உடன் படிக்கை ஏற்படுத்தப்பட்டது (19:3-25; 3-6 வசனங்கள் திறவு கோல் வசனங்களாக உள்ளன).

B. பத்துக்கட்டளைகள் (20:1-17).

C. தொடர்புடைய நியாயப்பிரமாணங்கள் (20:18-23:19).

D. உடன்படிக்கை விரிவாக்கப்பட்டது (23:20-24:11).

1. தேவடைய பகுதி: "நான் உங்களை ஆசீர்வதிப்பேன்."

2. இஸ்ரவேல் மக்களுடைய பகுதி: "நாங்கள் உமக்குக் கீழ்ப்படிவோம்."

IV. தேவனிடம் செல்லுதல்: ஆராதனை - ஆசரிப்புக்கூடாரம்.

A. சீனாய் மலையில் மோசே நாற்பது நாட்கள் இரவும் பகலும் இருத்தல் (24:12-18).

B. ஆசரிப்புக்கூடாரம் பற்றிய அறிவுறுத்தல் (25:1-31:11).

C. கடைசி அறிவுறுத்தல்கள் (31:12-18).

V. தேவனை விட்டு விலகிச் செல்லுதல்: பொன் கன்றுக்குட்டி (32).

VI. தேவனிடம் மீண்டும் திரும்பிச் செல்லுதல்: மனந்திரும்புதலும் ஆசரிப்புக்கூடாரம் கட்டப்படுதலும்.

A. தேவனுடைய எச்சரிக்கை; மனந்திரும்புதல் (33:1-11).

B. நியாயப்பிரமாணத்தை இரண்டாம் முறையாகப் பெறுவதற்காக மோசே மலைக்குத் திரும்பிச் செல்லுதல் (33:12-34:35); உடன் படிக்கை புதுப்பிக்கப்படுதல் (34:10லிருந்து.).

C. ஆசரிப்புக்கூடாரம் கட்டப்படுதல் (35-39).

D. ஆசரிப்புக்கூடாரம் எழுப்பப்பட்டு ஆராதனை தொடங்குதல் (40; இவற்றுடன் 33:7-11).

**யாத்திராகமத்தில் இருந்து பாடங்கள்**

மோசே தாம் செய்யும்படி தம்மிடத்தில் தேவன் கேட்டிருந்ததைத் தம்மால் செய்ய முடியும் என்று நினைக்கவில்லை, ஆனால் தேவன் எவரொருவரும் செய்ய முடியாத ஒன்றைச் செய்யும்படி யாரிடத்திலும் கேட்பதில்லை. மோசே அந்த வேலையைச் செய்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் அவருக்குத் தேவன் தந்தருளியிருந்தார். நமக்குத் தேவை யானவற்றையும் - நாம் தேவனு டைய பணிக்கு நம்மையே அர்ப்பணித்திருக்கும் வரையில் - தேவன் நமக்கும் தந்தருளுவார்.

தேவன் இஸ்ரவேல் மக்களுடன் ஒரு உடன்படிக்கையை (பரிசுத்தமான ஒப்பந்தத்தை) ஏற்படுத்தி இருந்தார். இஸ்ரவேல் மக்கள் தேவனுக்குக்

கீழ்ப்படியத் தங்களையே உறுதியாய் ஒப்புக்கொடுத்திருந்தனர். அதைத் தேவன் இலேசானதாக எடுத்துக்கொள்ளவில்லை. நாம் ஞானஸ்நானம் பெறும்போது, நம்முடன் தேவன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளுகின்றார். அவர் நம்மை ஆசீர்வதிக்கத் தாமே உறுதி எடுத்துக் கொள்கின்றார், நாம் நமது வாழ்வின் எஞ்சிய காலம் முழுவதும் அவருக்குக் கீழ்ப்படிந்திருப்போம் என்று நமக்கு நாமே உறுதி எடுத்துக்கொள்கின்றோம். நமது உறுதிப்பாட்டினை நாம் மும்முரமானதாய் எடுத்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய பிள்ளையாய் இருக்கிற ஒருவர் தேவனுடைய புத்தகத்தில் இருந்து "கிறுக்கிப்போடப்பட" முடியும் (32:32, 33).

பத்துக்கட்டளைகளுக்குப் பின்பு நியாயப்பிரமாணத்தின் எஞ்சிய பகுதி யானது, அடிப்படையில் அந்தப் பத்தின் விரிவாக்கமாக உள்ளன. 21:22, 24; 22:16, 17, 25, 26, 27; 23:2, 4, 8 ஆகியவற்றில் ஆர்வத்திற்குரிய பிரமாணங்கள் உள்ளடங்கி இருக்கின்றன.

ஆசரிப்புக்கூடாரம் கட்டுதல் பற்றி மிக விவரமாக அறிவுறுத்துதல்களைத் தேவன் கொடுத்தார். ஆராதனை என்பது தேவனைப் பொறுத்த மட்டில் ஒரு மும்முரமான விஷயமாக உள்ளது. இஸ்ரவேல் மக்கள் தாங்கள் விரும்பியபடி ஆசரிப்புக்கூடாரத்தை ஏற்படுத்த இயலாதிருந்தது. (25:9, 40; 39:32; எபிரெயர் 8:5; ஆகியவற்றைக் கவனிக்கவும்.)

யாத்திராகமம் கிறிஸ்துவின் பல "வகைகளை" அல்லது சித்தரிப்புக்களைக் கொண்டுள்ளது: பஸ்கா ஆட்டுக்குட்டி (யோவான் 19:36), வானத்திலிருந்து மன்னா (யோவான் 6:33), தண்ணீர் கொடுத்த கன்மலை (1 கொரிந்தியர் 10:4), முதலியன.

## எகிப்தில் உடன்பாடு (யாத்திராகமம் 7-10)

பார்வோனுக்கும் மோசேக்கும் இடையில் நடந்த இழுபறிப் போராட்டம், மனவிருப்பங்களின் மோதல் என்பதை எந்த வரலாறு அல்லது கதையில் கண்டறிதல் என்பது கடினமானதாக உள்ளது. அது ஒரு நீண்ட, இழுபறியான போராட்டமாக இருந்தது.

மோசேக்கும் பார்வோனுக்கும் இடையில் ஏற்பட்ட முதல் மோதல்/ எதிர்த்து நிற்குதல் என்பது, மோசே, " 'வனாந்தரத்தில் எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களை அனுப்பிவிடவேண்டும் என்று சொல்லும்படி' எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் என்னை உம்மிடத்திற்கு அனுப்பினார்" என்று கூறுகையில் (யாத்திராகமம் 7:16), அந்த எதிர்த்து நிற்குதல் பற்றிக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்க வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில், வாதைகளின் நாடகத்துவமான வரிசைத் தொடர் நடைபெற்றது. பார்வோன் மற்றும் மோசே ஆகியோரின் மனவிருப்பங்களுக்கு இடையிலான மோதலை அல்லது மிகச்சரியாகச் சொல்வதென்றால், பார்வோனுக்கும் தேவனுக்கும் இடையில் நடைபெற்ற மோதலைப் பார்வையில் இருந்து தவறவிடுதல் என்பது சுலபமானதாக உள்ளது.

பார்வோனின் பொருளாதார பலம் அவனது அடிமைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது; எனவே அவனால் அவர்களைப் போகும்படி அனுமதிக்கக் கூடாதிருந்தது. இஸ்ரவேல் மக்களைப் பிடித்துவைத்துக் கொள்வதற்கு அவன் பயன்படுத்திய வழிமுறைகள் யாவை? உடன்பாடு. அவனுடைய

உடன்பாடுகள் மேம்போக்காகப் பார்த்தால் ஒன்றுமறியாதவைபோல் ஒலித்தன, ஆனால் அப்படிப்பட்ட உடன்பாடுகள், மோசே - மற்றும் தேவன் - நிறைவேற்றும்படி விரும்பிய விஷயங்களின் இருதயத்தையும் ஆன்மாவையும் அழித்துவிடுவதாயிருக்கும்.

உடன்பாடுகள் இன்றைய நாட்களிலும் நம்மை அச்சுறுத்துகின்றன. முற்றிலும் மோசமான கீழ்ப்படியாமைக்கு நம்மைத் தூண்டுவது பற்றிச் சாத்தான் அதிகமாய்க் கவலைப்படுவதில்லை; நம்மை உடன்பாடுகள் செய்துகொள்ளும்படிச் செய்ய அவன் முயற்சி செய்கின்றான். சில வழிகளில், உடன்பாடு அவனுக்கு மேன்மையானதாகப் பொருந்துகிறது, ஏனெனில் அது மனச்சாட்சியை அதிகம் வஞ்சிப்பதாக உள்ளது மற்றும் அது கிறிஸ்துவின் ஊழியத்திற்கு அதிக சேதம் விளைவிக்கவும் முடியும்.

பார்வோன் மோசேயிடம் முன்வைத்த நான்கு உடன்பாடுகளைக் கவனிப்போம்:

I. "தேசத்திலேதான் பலியிடுங்கள்" (8:25).
   A. உடன்பாடு:
      1. "இங்கு எகிப்தில் இன்னொரு கடவுளைச் சேர்த்துக்கொள்வது பற்றி எங்களுக்குக் கவலையில்லை (மற்றும் நாங்கள் உங்கள்மீது எங்கள் கண்களை வைத்திருக்க முடியும்)."
      2. இன்றைய நாட்களில்: "ஆராதனையும் நன்மை செய்தலும் முக்கியமான விஷயங்கள் - மற்றும் அவற்றை நாம் எவ்விடத்தில் செய்கின்றோம் என்பது முக்கியமற்றது."
   B. மோசேயின் பதில்: 8:26, 27.
      1. "நாங்கள் அதை இங்கு செய்ய முடியாது. அது தேவனுக்கு அருவருப்பானதாயிருக்கும்."
      2. "எங்கு" என்பது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. சபை என்பது தேவனுடைய இரத்தத்தைக் கொண்டு விலைக்கு வாங்கப்பட்ட நிறுவனமாக உள்ளது (நடபடிகள் 20:28; எபேசியர் 1:22, 23; 2:16; 3:10). வெளியே வருதல் என்பது அறைகூவலாக உள்ளது: " 'ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய்,' 'அசுத்த மானதைத் தொடாதிருங்கள்; என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், ...' " (2 கொரிந்தியர் 6:17, 18).

II. "அதிக தூரமாய்ப் போக வேண்டாம்" (8:28).
   A. உடன்பாடு:
      1. "நான் உங்கள்மீது கண் வைத்து இருக்கும் இடத்திலேயே மற்றும் நீங்கள் என்பிடிக்குள் இருக்கும் இடத்திலேயே தங்கியிருங்கள்."
      2. இன்றைய நாட்களில்: "மதத்தைப் பற்றிப் பைத்தியம் பிடித்துத் திரிய வேண்டாம்!"
   B. நாங்கள் கர்த்தருடன் "வழி முழுவதிலும்" போக வேண்டியது அவசியமாய் இருக்கிறது!
      1. உபதேசத்தில் "வழி முழுவதிலும்," கிறிஸ்தவ வாழ்வில் "வழி

முழுவதிலும்."

2. மோசே பார்வோனின் பிரசன்னத்தை விட்டுச் சென்றார் - உடன்பாடு இல்லை!

III. "பிள்ளைகளை இங்கேயே விட்டுச் செல்லுங்கள்" (10:8-11).

A. உடன்பாடு: "ஆண்கள் மாத்திரம்" செல்ல முடியும்.

1. பார்வோனின் புத்திசாலித்தனமான வேண்டுகோள்: "நீங்கள் இதைச் செய்தால், நீங்கள் வெகுதூரம் செல்லமாட்டீர்கள்; நீங்கள் அனேகமாகத் திரும்பி வந்துவிடுவீர்கள்; மற்றும் நீங்கள் திரும்பி வராதிருந்தாலும், நீங்கள் இறக்கும்போது இந்த இயக்கம் அழிந்துபோய்விடும்."

2. இன்றைய நாட்களில்: "தேவபக்தியாய் இருங்கள், ஆனால் உங்கள் தேவபக்தியை உங்களுடைய பிள்ளைகளிடம் வற்புறுத்தாதீர்கள்."

B. இந்தப் பகுதியில் உடன்பாடு எதுவும் இருக்க முடியாது!

1. மோசே (அனேகமாக பார்வோனின் முகத்தில் ஒரு சினக் குறிப்புடன்) துரத்தப்பட்டார்.

2. பெற்றோர்கள் என்ற வகையில் நமக்குத் தேவன் உதவுகின்றார்: ஆவிக்குரிய சூழ்நிலையைக் கொடுப்பதற்கு, உண்மையான மதிப்பீடுகளைப் போதிப்பதற்கு, நமது பிள்ளைகளுக்கு முன்பாக கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு. அவர்கள் இதை விரும்பாதபோது, அவர்களுக்குள் ஒரு விருப்பத்தை உருவாக்கு வதற்குத் தேவன் நமக்கு உதவுகின்றார்!

IV. "ஆட்டு மந்தைகளையும் மாட்டு மந்தைகளையும் விட்டுச் செல்லுங்கள்" (10:24).

A. உடன்பாடு:

1. "இவ்விதமாய் நீங்கள் பலிசெலுத்தக் கூடாது போகும்; உங்களுக்கு உணவு இராது, எனவே நீங்கள் திரும்பி வருவீர்கள்."

2. இன்றைய நாட்களில்: "வேலை செய்வதற்கான வழிகளை (பணம், திறமைகள், காலம்) விட்டுச் செல்லுங்கள். அவற்றில் ஈடுபாடு கொள்ளாதிருங்கள்."

B. உடன்பாடு ஏற்படுத்திக்கொள்ளாத ஆவிக்கு மாபெரும் செயல்: 10:25, 26.

முடிவுரை

A. இஸ்ரவேல் மக்கள், பார்வோனின் நிபந்தனைகளின்படியல்ல, ஆனால் தேவனுடைய நிபந்தனைகளின்படியே எகிப்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர்.

B. அவர்கள் மிருகங்களைப் பலிசெலுத்தினர்: நாம் நமது வாழ்வைப் பலியாகச் செலுத்த வேண்டியுள்ளது. ரோமர் 12:1, 2 பின்வருமாறு கூறுகிறது, "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை."

# 3

# லேவியராகமம்: ஆசாரியர்களின் கைப்புத்தகம்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *1-5, 8-14, 16, 17, 19, 22, 23, 25, 26.*

***தலைப்பு***

*"லேவியராகமம்" என்பது "லேவியருக்கு உரியது" என்று அர்த்தப்படுகிறது. லேவியர்கள் என்போர், யாக்கோபினுடைய பன்னிரெண்டு மகன்களில் ஒருவரான, லேவியின் வழித்தோன்றல்களாக இருந்தனர். லேவியின் சந்ததி யார்கள் "ஆசாரியத்துவக் கோத்திரமாக" ஆயினர். ஆரோன் என்ற, முதல் பிரதான ஆசாரியர், ஒரு லேவியராய் இருந்தார்; பிரதான ஆசாரியத்துவம் என்பது குடும்பத்தின் முதல் மகனில் இருந்து அடுத்து வரும் முதல் மகனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆரோனின் மற்ற சந்ததியார் ஆசாரியர்கள் ஆயினர். மற்ற எல்லா லேவியர்களும், ஆசாரியர்களுக்கு உதவியாளர்களாய் இருந்தனர். லேவியர்கள், ஆசரிப்புக்கூடாரம் மற்றும் பிற்பாடு தேவாலயம் ஆகியவை தொடர்புடைய பல கடமைகளைக் கவனிக்கும்படி அவற்றை எடுத்துக் கொண்டிருந்தனர்.*

***பின்னணி***

*இந்தப் புத்தகம், யாத்திராகமம் எழுதப்பட்டதற்குச் சற்றே பின்பு மோசேயினால் எழுதப்பட்டது என்பது உறுதி. இது பிரமாணங்களின் புத்தகமாய் இருக்கிறது; இது சிறிதளவு வரலாற்றுத் தகவல்களையும் கொண்டுள்ளது. ஆராதனை தொடர்பான பல பிரமாணங்கள் ஆசாரியர்களால் நிர்வகிக்கப்பட வேண்டியிருந்தன.*

*"பரிசுத்தம்" என்பது இப்புத்தகத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது, இது இப்புத்தகத்தில் எண்பத்தேழு முறை காணப்படுகிறது. "பரிசுத்தம்"* ["holy"] *என்ற வார்த்தை "பரிசுத்தப்படுத்துதல்"* [sanctified] *என்பதைப் போன்றதாகவே உள்ளது; இவ்விரண்டுமே, ஒரு விசேஷித்த நோக்கத்திற்குத் "தனியே பிரித்துவைத்தல்" என்று அர்த்தப்படுகிறது. இஸ்ரவேல் மக்களிடத்தில் தேவன், "கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிற படியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுபிரித்தெடுத்தேன்" என்று கூறினார் (20:26;* NASB*).*

***வரைகுறிப்பு***

I. *பரிசுத்த பலிகள்.*
   A. *முற்றிலும் எரிக்க வேண்டிய தகன பலி (1).*
   B. *போஜன பலி (2).*
   C. *சமாதான பலி (3).*
   D. *அறியாமல் செய்த பாவங்களுக்காகப் பாவநிவாரண பலி (4).*
   E. *குற்ற நிவாரண பலி (5).*

F. இந்த பலிகள் குறித்து ஆசாரியர்கள் தங்கள் கடமைகளை எவ்வாறு நிறைவேற்ற வேண்டியிருந்தது (6, 7).

II. பரிசுத்த நடத்துனர்கள், பாகம் 1.
   A. ஆரோனையும் அவரது மகன்களையும் பரிசுத்தப்படுத்துதல் (8).
   B. அவர்கள் தங்கள் முதல் பலிகளைச் செலுத்துதல் (9).
   C. நாதாப் மற்றும் அபியூ ஆகியோர் அந்நிய அக்கினியில் பலி செலுத்துதல் (10).

III. பரிசுத்தமான மக்கள், பாகம் 1.
   A. சுத்தமான மற்றும் அசுத்தமான மிருகங்கள் (11).
   B. பிள்ளை பிறந்தபின்பு தாயைச் சுத்திகரிக்கும் முறைமை (12).
   C. தொழுநோய் பற்றிய பிரமாணங்கள் (13, 14).
   D. அசுத்தமானவை சம்பந்தப்பட்டவை (15).

IV. பரிசுத்தமான நாட்கள், பாகம் 1: பாவநிவாரணச் சடங்கு (16, 17).

V. பரிசுத்தமான மக்கள், பாகம் 2.
   A. கானான் மக்களின் அருவருப்புகள் (18).
   B. ஒழுக்கத்திற்குத் தேவனுடைய தர அளவை (19).
   C. அவர்களைச் சுற்றிலும் உள்ள மக்களினங்களைப் பின்பற்றா திருக்கும்படி எச்சரிக்கை (20).

VI. பரிசுத்தமான நடத்துனர்கள், பாகம் 2: ஆசாரியர்கள் பிரித்து வைக்கப் பட்ட மற்றும் பரிசுத்தமான மக்களாய் இருக்க வேண்டியது (21, 22).

VII. பரிசுத்தமான நாட்கள், பாகம் 2.
   A. வாராந்திர ஓய்வுநாளும் வருடாந்திரப் பண்டிகைகளும்: பஸ்கா, அறுவடை (பெந்தெகொஸ்தே), எக்காளங்கள் (23).
   B. தேவசமூகத்து அப்பங்களை வாராந்திரம் உண்ணுதல்; ஒரு நிகழ்ச்சி (24).
   C. விசேஷித்த "நாட்கள்": ஓய்வு ஆண்டு மற்றும் யூபிலி ஆண்டு (25).

VIII. பரிசுத்தமான மக்கள், பாகம் 3, மற்றும் முடிவுரை.
   A. கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை - மற்றும் விளைவுகள் (26).
   B. பொருத்தனைகள் பற்றிய பிரமாணங்கள் (27).

**லேவியராகமத்தில் இருந்து பாடங்கள்**

*நீங்கள் லேவியராகமத்தை வாசிக்கும்போது, பழைய உடன்படிக்கைக்குப் பதிலாகப் புதிய உடன்படிக்கையின் (ஏற்பாட்டின்) கீழ் நீங்கள் இருப்பது பற்றி மகிழ்ச்சியடைவதில்லையா? பிரமாணங்களின் சிக்கல் என்பதே அனேகமாக பிரமாணத்தினுடைய "அடிமைத்தனத்தின் நுகத்தடி"யினுடைய பாகமாய் இருந்தது (கலாத்தியர் 5:1).*

*இருப்பினும், இந்தப் பிரமாணங்கள் யாவும் முக்கியமானவைகளாய் இருந்தன. அவைகள் மேசியா வரவிருந்த மக்களினத்தை வழிநடத்தவும் பாதுகாக்கவும் முக்கியமானவைகளாய் இருந்தன. அவைகள் பாவம் பயங்கர மானதென்று அறிவித்தன; இரத்தம் (மரணம்) மாத்திரமே பாவத்திற்குப் பரிகாரமாய் இருந்தது. செலுத்தப்பட்ட ஒவ்வொரு பலியும், சிலுவையில் இயேசு செலுத்தும் பூரணமான பலிக்கு மக்களின் மனங்களை ஆயத்தப்படுத்த உதவின.*

*தேவன் தமது மக்கள் பரிசுத்தமான மக்களாக, தமது பரிசுத்த நோக்கங்களுக்கென்று உலகில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று இன்னமும் விரும்புகின்றார் (1 தெசலோனிக்கேயர் 3:13; 4:3 முதல்.)!*

*பிரமாணங்களைக் கண்டுகொள்ளாது விட்டுவிடலாம் என்பதாக உள்ள சிக்கல்களில் அகப்படாமல் புறம்பே உள்ளது, பிறர்மீது அன்புகூர வேண்டும் என்ற கட்டளையாகும், இதை இயேசு பழைய ஏற்பாட்டின் இரண்டாவது மிகமுக்கியமான கட்டளை என்று அழைத்தார் (லேவியராகமம் 19:18; மாற்கு 12:31)!*

## பாவம் சந்தோஷத்தை எவ்வாறு அழிக்கிறது (லேவியராகமம் 10:1-11)

*ஆரோனின் வாழ்வில் அது மிகவும் மன எழுச்சியுள்ள நாட்களில் ஒன்றாகத் தொடங்கிற்று. ஒரு சில மாதங்களுக்கு முன்பு ஆரோன் ஒரு அடிமையாயிருந்தார், நம்பிக்கையற்ற எதிர்காலத்தை எதிர்கொண்டிருந்தார். பின்பு மோசே வந்து, "யெகோவா உன்னை எனக்காகப் பேசுபவராக நியமித்து இருக்கின்றார்" என்று கூறினார். ஆரோன் தமது சகோதரனின் தோளோடு தோள்கொடுத்து நின்று, தேவன் மக்களை அடிமைத்தளையில் இருந்து வெளியே கொண்டு வந்ததைக் கண்டிருந்தார். பின்பு அவரைத் தேவன் பிரதான ஆசாரியராக நியமித்தார். இந்த நாளில் அவர் தனது புதிய பிரதான ஆசாரியருக்கான உடையில் பெருமையும் சந்தோஷமும் உள்ள மனிதராக நின்றார். அவருடன் தேவனால் ஆசாரியர்களாக நியமிக்கப்பட்ட அவரது மகன்கள் இருந்தனர், அவர்களில் மூத்தமகன் அடுத்து பிரதான ஆசாரியராக வர இருந்தார். அவர்களின் முதல் பலியைப் பட்சிக்கும்படி இயற்கைக்கு மாறான அக்கினியை அனுப்பியதுமூலம், தேவன் தமது அங்கீகாரத்தைச் சைகை காண்பித்தபோது, ஆரோனின் சந்தோஷம் பொங்கிப் பெருக்கெடுத்திருக்க வேண்டும் (லேவியராகமம் 9:22-24).*

*இருப்பினும், சில நிமிடங்களில் அந்த நாளானது ஆரோனின் வாழ்வில் கவலைமிகுந்த நாட்களில் ஒன்றாகிப் போனது. அவர் தமது மூத்த மகன்கள் இறந்துபோனதையும் அவர்கள் தங்கள் ஆசாரியத்துவ உடையிலேயே, அவமான மிக்க கல்லறையொன்றில் அடக்கம்செய்யத் தூக்கிச்செல்லப்பட்டதையும் கண்டார். அவர் தேவனுடைய வாயிலிருந்து உறுதிமிக்க எச்சரிப்புகளைக் கேட்டார். இவையாவும் பாவத்தினிமித்தமாக நடைபெற்றன. பாவம் ஆரோனின் சந்தோஷத்தை அழித்தது - அது நமது சந்தோஷத்தையும் அழிக்கக்கூடும். பாவம் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது.*

I. *பாவம் வாழ்வை அழிக்கக்கூடும் (10:1-3).*

 A. *பாவம், நாதாப் மற்றும் அபியூ ஆகியோரின் உயிரை அழித்தது.*

  1. *அவர்கள் "அந்நிய அக்கினியை" செலுத்தியபோது, பலிகளைப் பட்சித்த அதே அக்கினி அவர்களையும் பட்சித்துப்போட்டது.*

   a. *"அந்நிய அக்கினி" என்பது என்னவென்று நாம் நிச்சயமாய் அறிவதில்லை, ஆனால் அது அங்கீகரிக்கப்படாத*

அக்கினியாய் இருந்தது. "இந்த அக்கினியை எனக்கு செலுத்த வேண்டாம்" என்று தேவன் சொல்லியிருந்தார் என்பதால் அல்ல, ஆனால் அதற்கு மாறாகத் தேவன் தமது அறிவுறுத்துதலைக் கொடுத்திருந்தார், மற்றும் நாதாபும் மற்றும் அபியூவும், வேறு சிலவற்றையும் செய்வது நல்லதுதான் என்று நினைத்தனர்.

b. இன்றைய நாட்களில் "அந்நிய அக்கினியை" செலுத்தாதபடி நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். மக்கள், "இதை அல்லது அதைச் செய்யக்கூடாது என்று எங்கே கூறப்பட்டுள்ளது என்று எனக்குக் காண்பியுங்கள்" என்று அடிக்கடி கேட்கின்றனர். "நாம் செய்யும்படி தேவன் கூறியுள்ளவை யாவை?" என்பதே கேட்கவேண்டிய கேள்வியாக உள்ளது. மற்றவையாவும் "அந்நிய அக்கினியாகவே" உள்ளது.

2. அவர்கள் ஏன் இந்த அந்நிய அக்கினியைச் செலுத்தினர் என்று நாம் அறிவதில்லை. அவர்களின் நோக்கம் நல்லதாக இருந்திருக்கலாம்; அவர்கள் உணர்வுப்பூர்வமான இக்காட்சிக்கு வனப்பூட்ட விரும்பியிருக்கலாம். நல்ல நோக்கங்கள் என்பவை கீழ்ப்படியாமையை இழப்பீடு செய்ய இயலாது.

B. பாவம் இன்னமும் இன்றைய நாட்களிலும் வாழ்வை அழிக்கிறது.

1. நாமும் தேவனுக்கு முன்பாக ஆசாரியர்களாய் இருக்கின்றோம் (1 பேதுரு 2:5). நாதாப், அபியூ ஆகியோர் செல்வாக்குக் கொண்டிருந்தது போலவே நாமும் செல்வாக்குக் கொண்டிருக்கிறோம் (மத்தேயு 5:13-16). கீழ்ப்படியாமையைத் தேவனால் தண்டியாமல் விடமுடியாது (லேவியராகமம் 10:3).

a. சில பாவங்கள் நமது உடல்ரீதியான வாழ்வை அழிக்கக் கூடும்.

b. எல்லாப் பாவங்களும் நமது ஆவிக்குரிய வாழ்வை அழிக்கக் கூடும்.

2. நாம் எல்லாவற்றிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கத் தீர்மானம் செய்வோம்!

II. பாவம் இருதயங்களை அழிக்கக்கூடும் (10:4-7).

A. ஆரோனின் மகன்கள் எடுத்துச் செல்லப்படுவதை ஆரோன் கவனிக்கும் பரிதாபமான காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். அவர் [ஆரோன்] புலம்புவதற்கு அனுமதிக்கப்படாதிருந்தார், ஏனெனில் அது தேவனுடைய செயல்பாட்டிற்கான பிரதிபலித்தல் என்று மக்களால் விளக்கம் கொள்ளப்படும். சவ அடக்கத்திற்குச் செல்வதற்கு அவர் அனுமதிக்கப்படாதிருந்தார். நியமிக்கப்பட்ட வேளை முழுமையடையும் வரையில் அவர் தமது பதவிநிலையில் தரித்திருக்க வேண்டியதாய் இருந்தது. அவரது இருதயம் எப்படி உடைந்து போயிருக்கும் என்று நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்!

B. *பாவம் இருதயங்களைத் தொடர்ந்து உடைக்கிறது.*

1. *பாவம் நிறைந்த மக்கள் தாங்கள் விதைத்ததை அறுக்கின்றனர்.*
2. *பாவம் நிறைந்த தனிநபர்கள் தங்கள் துணைவர்களின் இருதயங்களை உடைக்கின்றனர்.*
3. *பாவம் நிறைந்த பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் இருதயங் களை உடைக்கின்றனர்.*
4. *பாவம் நிறைந்த கிறிஸ்தவர்கள் சபையின் இருதயத்தை - மற்றும் தேவனின் - இருதயத்தை உடைக்கின்றனர்!*

III. *பாவம் ஞானத்தை அழிக்கக் கூடும்: ஞானமாக முடிவெடுக்கும் திறன் (10:8-11).*

A. *8-11 வசனங்கள் "எஞ்சிய வரலாற்றை" கூறுகின்றனவா?*

1. *இரு பகுதிகளிலும் உள்ள இணைவுகளினிமித்தம் பல கல்வி யாளர்கள் இவ்வாறே நினைக்கின்றனர்.*
   a. *நாதாப் மற்றும் அபியூ ஆகியோர் இறந்தனர் (வசனம் 2); மதுபானம் மரணத்தைக் கொண்டுவரக்கூடும் (வசனம் 9).*
   b. *நாதாப் மற்றும் அபியூ ஆகியோர், தேவனால் "அங்கீ கரிக்கப்படாத" அக்கினிக்கும் அங்கீகரிக்கப்பட்ட அக்கினிக்கும் இடையில் வித்தியாசப்படுத்தத் தவறி விட்டனர் (வசனம் 1); மதுபானம் ஒருவரை பரிசுத்த மானதற்கும் தீட்டானதற்கும் இடையில் வித்தியாசப் படுத்தக் கூடாதபடிக்கு ஆக்கக்கூடும் (வசனம் 10).*
2. *ஒருவேளை நாதாபும் அபியூவும் மதுபானம் பண்ணி அந்த விசேஷித்த நாளை "கொண்டாடி" இருக்கலாம். விஷயம் அப்படி இருந்தாலும் இல்லாவிட்டாலும், மதுபானம் ஒருவரின் தீர்மானமான முடிவுசெய்யும் திறனைப் பாதிக்கிறது என்பது உண்மையாகவே உள்ளது.*

B. *இன்றைய நாட்களில்:*

1. *பாவம் என்பது மக்களின் முடிவுசெய்யும் திறனை மேகம் போல் சூழ்ந்துகொள்ளத் தொடருகிறது.*
   a. *விளக்கம்: ஏதேன் தோட்டம்.*
   b. *சில பாவங்கள் முடிவுசெய்யும் திறனை அழித்துப்போடு கின்றன: மேட்டிமை, தப்பான எண்ணங்கள் மற்றும் வேறுபாடுள்ள எண்ணங்கள்.*
2. *குடிக்கும் மதுபானம் என்பது இன்னமும் ஒரு தலையாய குற்றம் தூண்டும் பொருளாக உள்ளது.*
   a. *ஆசாரியர்கள் "கடமையில்" இருக்கும்போது மதுபானம் பண்ணக்கூடாது என்பதைக் கவனியுங்கள். ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆசாரியராய் இருக்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் - மற்றும் நாம் எப்போதுமே "கடமையில்" இருக்கின்றோம்.*
   b. *மதுபானம் பண்ணுதல் என்பது ஆசாரியரின் போதிக்கும்*

*திறனைப் பாதிக்கும் என்று வசனப்பகுதி சுட்டிக் காண்பிக்கிறது. இன்றைய நாட்களில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டியுள்ளது (மத்தேயு 28:18-20), ஆனால் மதுபானமானது போதகர்கள் என்ற வகையில் நமக்குள்ள செல்வாக்கை அழித்துவிட முடியும். மதுபானம் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருமே அது இல்லாமல் இருக்கக்கூடிய ஒன்றாக உள்ளது!*

*முடிவுரை*

*நாம் பரிசுத்தமானவை மற்றும் பரிசுத்தமல்லாதவை ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசப்படுத்திக்காண்பதற்கு, தேவனுக்குக் கீழ்ப்படியும்படி தீர்மானம் செய்வதற்கு, தெளிவான முடிவுகளை மேற்கொள்ளும் நமது திறனைத் தடைசெய்யக்கூடிய எதையும் நமது வாழ்வில் இருந்து நீக்கிப்போடுவதற்குத் தேவன் நமக்கு உதவுவாராக. இது ஒன்றுதான் வாழ்வில் நாம் உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டிருப்பதற்கான ஒரே வழியாக உள்ளது!*

# 4

# எண்ணாகமம்:
# வனாந்தரத்தில் ஜனத்தொகை அறிக்கை

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *1, 3, 6, 9-11, 13, 14, 16, 17, 20-27, 30-33, 35.*

***தலைப்பு***

*நமது ஆங்கில (தமிழ்) வேதாகமத்தில் உள்ள "எண்ணாகமம்" என்ற தலைப்பு, யுத்தம் செய்யக்கூடிய ஆண்களின் தொகைபற்றி மேற்கொள்ளப்பட்ட இரண்டு ஜனத்தொகைக் கணக்கெடுப்பைக் குறிக்கிறது. அவற்றில் ஒன்று (அதிகாரம் 1), மக்கள் சீனாய் மலையை விட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குச் செல்லக் கிளம்பியபோது எடுக்கப்பட்டது. இன்னொன்று (அதிகாரம் 26), முப்பத்து எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு, அடுத்த தலைமுறையினர் கானான் நாட்டிற்குள் செல்ல ஆயத்தமானபோது எடுக்கப்பட்டது.*

***பின்னணி***

*மோசே இந்தப் புத்தகத்தின் எழுத்தாளராய் இருக்கின்றார் (1:1 மற்றும் 33:2 ஆகியவற்றைக் கவனிக்கவும்). இது வனாந்தரத்தில் அலைந்து திரிதல் முடிந்த வேளையில் எழுதப்பட்டது. செயல்பாட்டில், இப்புத்தகம் யாத்திராகமத்தைப் பின்தொடருகிறது; பிரமாணங்களில் இப்புத்தகம் லேவியராகமத்தைப் பின்தொடருகிறது.*

*தேவனை எவ்வாறு அணுகுவது என்பது பற்றிய அறிவுறுத்தலைப் பெற்றுக்கொண்ட நிலையில், மக்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் செல்லத் தயாராயினர். அவர்கள் சீனாய் மலையை விட்டுப் புறப்பட்டு, சற்றே குறுகிய அணிநடையில் கானானின் வடபகுதியை நோக்கி முன்னேறினர். அவர்கள் தெற்கு எல்லையை அடைந்தபோது, நாட்டை வேவுபார்த்து வரும்படி வேவுகாரர்கள் அனுப்பப்பட்டனர். அவர்களில் ஏமாற்றம்தரும் அறிக்கையைக் கொண்டுவந்த பத்துப்பேரை மக்கள் நம்பினர். அவர்களின் அவிசுவாசம் என்ற பாவத்தினால், எகிப்தில் இருந்து புறப்பட்ட சந்ததியாரில் பெரும்பான்மையானவர்கள் இறந்து போகும் வரைக்கும் மக்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தனர். இது முப்பத்தியெட்டு ஆண்டுகள் காலத்தை உள்ளடக்குவதாக இருந்தது (எண்ணாகமம் 1:1; உபாகமம் 1:13).*

*"எண்ணிக் கணக்கிடுதல்" மற்றும் "கொலைசெய்தல்" என்ற இருவார்த்தைகள் இப்புத்தகத்தின் கருத்துக்களைத் தொகுத்துரைக்கின்றன.*

***வரைகுறிப்பு*** *(பிரமாணங்கள் சாய்வெழுத்துக்களில் குறிப்பிடப்பட்டு உள்ளன)*

I. *சீனாய் மலையை விட்டுப் புறப்படத் தயாராகுதல்.*
   A. *முதல் ஜனத்தொகைக் கணக்கெடுப்பு (1).*
   B. *பயணம் செய்வதற்கென்று முகாமை ஒழுங்கமைத்தல் (2-4).*

C. சுத்திகரித்தல் மற்றும் நசரேய விரதம் பற்றிய பிரமாணங்கள் (5, 6).
D. ஒவ்வொரு கோத்திரமும் செலுத்திய பலிகள் (7).
E. லேவியர்கள் பற்றிய பிரமாணங்கள் (8).
F. பஸ்கா ஆசரிக்கப்படுதல்; மேகம் வழிகாட்டுதல் (9).
G. சைகை செய்யும் எக்காளங்கள் (10:1-10).

II. நாற்பது ஆண்டுகள் காலம் எடுத்துக்கொண்ட நாற்பது நாள் பயணம்.
A. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்கு முதல் பயணம்.
1. நாட்டை நோக்கிச் செல்லத் தொடங்குதல் (10:11-36).
2. வழியில்; முறுமுறுத்தல் (11, 12).
3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் தெற்கு முனையும் பத்து வேவுகாரர்களும் (13).
4. நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் அலைந்து திரியும்படி சீரழிக்கப்படுதல் (14).
B. அலைந்து திரிதல் (சிறிதளவே தகவல் தரப்பட்டுள்ளது).
1. குறிப்பிட்ட சில காணிக்கைகள் பற்றிய பிரமாணங்கள்; ஒரு மனிதன் கல்லெறியப்படுதல் (15).
2. கோரா மற்றும் பிறரின் கலகம் (16, 17).
3. காணிக்கைகள் பற்றிய பிரமாணங்கள் (18).
4. தண்ணீர் சுத்திகரிக்கப்படுதல் (19).
C. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குக் கடைசிப் பயணம்.
1. காதேசில் இருந்து பயணம் தொடங்குதல்; மோசேயின் பாவம் (20).
2. வழியில்; முறுமுறுத்தல் (21).
3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் கிழக்குப் பகுதிக்கு வந்து சேருதல் (22:1).

III. கானானுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாகுதல்.
A. பாலாக் மற்றும் பாலாம் ஆகியோரிடத்தில் இருந்து எதிர்ப்பு (22:2-25:18).
B. இரண்டாம் முறை ஜனத்தொகைக் கணக்கெடுத்தல் (26).
C. சுதந்தரவிகிதம் பற்றிய ஒரு பிரச்சனை; யோசுவா தேர்ந்தெடுக்கப் படுதல் (27).
D. குறிப்பிட்ட நாட்களில் செலுத்தப்படும் காணிக்கைகள் மற்றும் பொருத்தனைகள் பற்றிய பிரமாணங்கள் (28-30).
E. மீதியானியருக்கு எதிரான ஒரு யுத்தம் (31).
F. இரண்டரைக் கோத்திரத்தார் யோர்தான் நதிக்குக் கிழக்குப் புறத்தி லேயே தங்கிக்கொள்ள முடிவு செய்தல் (32).
G. வனாந்தரத்தில் அலைந்து திரிந்தது பற்றிய தொகுப்புரை (33).
H. அவர்கள் கானான் நாட்டிற்குள் பிரவேசித்த பின்பு சுதந்திர விகிதம் பற்றிய அறிவுறுத்தல் (34-36).

**எண்ணாகமத்தில் இருந்து பாடங்கள்**

1 கொரிந்தியர் 10ல், பவுல் வல்லமை நிறைந்த ஒரு விவாதத்தை

ஏற்படுத்துகின்றார். அவர் அதில் வனாந்தரத்தில் அலைந்து திரிதல்கள் பற்றிக் கூறுகின்றார், ஒரே சம்பவத்தில் தேவனுடைய மக்கள் எத்தனை பேர் இறந்தனர் என்று குறிப்பிடுகின்றார், அதன்பின்பு, "தன்னை நிற்கிறவ னென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" என்று கூறுகின்றார் (வசனம் 12). தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறவர் விழக்கூடும். எண்ணாகமம் 1ல் இருந்த யுத்தம் செய்யக்கூடிய ஆறுலட்சம் ஆண்களில், யோசுவா மற்றும் காலேப் என்ற இருவர் மாத்திரமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்க முடிந்தது!

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரும்கூட, எச்சரிக்கை செய்வதற்கு இஸ்ரவேல் மக்களின் உதாரணத்தைப் பயன்படுத்துகின்றார் (எபிரெயர் 3:7-4:12). அவர்கள் கீழ்ப்படியாமையினால் விழுந்தனர் என்று அவர் கூறுகின்றார் (3:11), இது அவர்களின் அவிசுவாசத்திற்கு ஒரு அடையாளமாயிருந்தது (3:12). இஸ்ரவேல் மக்களின் முறையீடு என்பது அவர்களின் அவிசுவாசத்திற்கு மிகத் தெளிவான செயல் விளக்கமாய் இருந்தது. நாம் எப்போதாவது இந்தப் பாவத்தினால் குற்றப்பட்டு இருக்கிறோமா?

எண்ணாகமம் 6:24-26ல் உள்ள ஆசீர்வாதம் போன்ற நினைவு கூறத்தக்க வசனப்பகுதிகள் பல எண்ணாகமத்தில் உள்ளன. இருப்பினும், பழைய ஏற்பாட்டில் உள்ள ஒவ்வொன்றும் (1) மனிதர்களைக் கிறிஸ்து வினிடம் கொண்டு வருதலுக்கோ அல்லது (2) அவருக்கென்று மனங்களைத் தயார் செய்வதற்கோ நடந்தவைகளாய் இருக்கின்றன என்பதை நினைவில் வைக்கவும். வெண்கல சர்ப்பம் (எண்ணாகமம் 21:8, 9) மற்றும் சிலுவையில் கிறிஸ்து (யோவான் 3:14, 15) ஆகியவற்றிற்கு இடையிலான இணைவைக் கவனிக்கவும்.

## வனாந்தரத்தில் சர்ப்பம் (எண்ணாகமம் 21:4-9)

கிறிஸ்துவுக்குப் பல "முன்மாதிரிகள்," அல்லது அடையாளங்கள், பழைய ஏற்பாட்டில் உள்ளன. கிறிஸ்து தனிப்பட்ட வகையில் வனாந்தரத்தில் சர்ப்பம் (யோவான் 3:14-17; எண்ணாகமம் 21:4-9) என்ற ஒரே ஒரு விஷயத்தை அடையாளம் காண்பித்தார். நாம் இந்தப் பழைய ஏற்பாட்டு வரலாற்றிற்கும் புதிய ஏற்பாட்டில் அதன் நடைமுறைப் பயன்பாட்டிற்கும் இடையில் ஒரு இணைவைத் தரவழைப்போம்.

I. மக்கள் பாவம் செய்து தண்டிக்கப்பட்டனர் (21:4-6).

   A. இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்தனர்.

      1. பாவம்: இஸ்ரவேல் மக்கள் நாற்பது ஆண்டுகளாக அலைந்து திரிந்தனர். இப்போது அவர்கள் மீண்டுமாகப் பாலைவனத்தில் வெப்பகாலத்தில் செல்ல வேண்டியிருந்தது (அதிகாரம் 33 மற்றும் 20), அவர்கள் தனிமையான சமவெளிப் பகுதியான "செங்கடல் வழியாக" பயணம் செய்துகொண்டிருந்தனர். ஏதோமியர்களினிமித்தம், அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை நோக்கியல்ல, ஆனால் அதைவிட்டுப் புறம்பே சென்று கொண்டிருந்தனர். அவர்கள் ஊக்கம் இழந்து போயிருந்தனர் (வசனம் 4) மற்றும் முறையிட்டனர் (வசனம் 5).

      2. தண்டனை: கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள் முகாமை வியாதி

யாலும் மரணத்தாலும் நிரப்பின (வசனம் 6).

B. இன்றைய நாட்களில், நாம் பாவம் செய்து ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் இருக்கின்றோம்.

1. எல்லாரும் பாவம் செய்தோம் (ரோமர் 3:23). அதை ஒரு சர்ப்பம் தொடங்கிற்று (ஆதியாகமம் 3; வெளிப்படுத்தின விசேஷம் 12:9). ரோமர் 6:23 ஆக்கினைத் தீர்ப்பைப் பற்றிக் கூறுகிறது.
2. இஸ்ரவேல் மக்களைப்போல், நாம் அடிக்கடி தேவன் யாரென்பதையும், அவர் நமக்குச் செய்துள்ளவை என்ன என்பதையும் மதிக்கத் தவறிவிடுகின்றோம்!

II. தேவன் இரட்சிப்பின் வழியை அருளியிருக்கின்றார் (21:7, 8).

A. தேவன் தப்புவதற்கான வழியை அருளியிருக்கின்றார். மக்களால் அது முடியாது; மோசேயினால் அது முடியாதிருந்தது; தேவன் மாத்திரமே அதை அருள முடியும்.

1. மக்கள் மோசேயினிடத்திற்குத் திரும்பினர் (வசனம் 7). இந்த ஒரே ஒரு முறைதான் மோசே வேண்டுதல் செய்யும்படி இஸ்ரவேல் மக்கள் கேட்டுக்கொண்டனர். அவர்கள் தங்கள் பாவங்களை ஒப்புக் கொண்டனர், மோசே அவர்களுக்காக ஜெபித்தார்.
2. தேவன், "நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை" என்று கூறினார் (வசனம் 8). "ஒரு கம்பம்" என்பது "உயரமாக உள்ள ஒரு மேடை" என்று நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. "கொள்ளிவாய்ச் சர்ப்பம்" அல்லது "வெண்கல சர்ப்பம்" தயாரிக்கப்பட்டது (வசனம் 9).
   a. இது சிலருக்கு மதியீனமானதாகத் தோன்றியிருக்கும், ஆனால் தேவன் இதைச் செய்யும்படி கூறினார் (ஏசாயா 55:8, 9)!
   b. தேவனுடைய திட்டம் மாத்திரமே தப்பிக்கும் வழியாக இருந்தது.

B. இன்றைய நாட்களிலும் தங்கள் பாவம் நிறைந்த தன்மையை எதிர்கொள்ள மனவிருப்பமாய் இருப்பவர்களுக்குத் தேவன் இரட்சிப்பின் வழியை அருளியிருக்கின்றார்.

1. நான் அந்த வழியை அருள இயலாது; உங்களாலும் அது இயலாது (எரேமியா 10:23; நீதிமொழிகள் 14:12). தேவனால் மாத்திரமே இயலும். ஒரே ஒரு வழிதான் உள்ளது (யோவான் 14:6).
2. தேவன் அருளியது என்ன? இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டார் (யோவான் 3:14-17; 12:32; ரோமர் 5:8-10)!
   a. வல்லமைநிறைந்த ஒரு இணைகருத்து.
      (1) இஸ்ரவேல் மக்கள் சர்ப்பங்களால் கடியுண்டனர், மற்றும் ஒரு சர்ப்பம் கோலில் உயர்த்தப்பட்டது.
      (2) பாவம் நம்மை அழிக்கிறது. சிலுவையில் இயேசு

*நமக்காகப் பாவமானார் (2 கொரிந்தியர் 5:21).*

b. *இது சிலருக்கு மதியீனமாகத் தோன்றுகிறது (1 கொரிந்தியர் 1:18), ஆனால் இதுவே இன்னமும் இரட்சிப்புக்குத் தேவனுடைய அளிப்பாக - அவரது ஒரே அளிப்பாக உள்ளது (நடபடிகள் 4:12).*

III. *தேவனுடைய அளிப்பு ஏற்புடையதாக்கப்பட வேண்டும் (21:8, 9).*

A. *குணமாக்குவதற்குத் தேவனுடைய வழியானது தானாகவே ஒவ்வொருவரையும் சர்ப்பத்தின் கடியிலிருந்து குணப்படுத்தவில்லை; கடிபட்டவர்கள் குணமாவதற்குச் சிலவற்றைச் செய்ய வேண்டியிருந்தது.*

1. *அவர்கள் சர்ப்பத்தை நோக்கிப் பார்ப்பதன்மூலம் தங்கள் விசுவாசத்தைச் செயல்விளக்கப்படுத்த வேண்டியிருந்தது (வசனம் 8).*
2. *அதை அவர்கள் செய்தபோது, அவர்கள் குணமாக்கப்பட்டனர் (வசனம் 9).*

B. *எல்லாருக்காகவும் இயேசு மரித்தார் (யோவான் 3:16), ஆனால் எல்லாரும் இரட்சிக்கப்படுவது இல்லை (மத்தேயு 7:13, 14). தேவன் நமக்குச் செய்துள்ளதை நாம் நமக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டும்.*

1. *நமது இரட்சிப்பை நாமே ஈட்டிக்கொள்ள இயலாது (எபேசியர் 2:8, 9), ஆனால் நாம் கீழ்ப்படிய வேண்டும் (மத்தேயு 7:21).*
2. *இரத்தத்தின் மூலம் இரட்சிப்பைப் பெறுவதற்கு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று இயேசு கூறினார் (மாற்கு 16:16).*

a. *இரத்தம்/ஞானஸ்நானம் உறவைக் கவனியுங்கள் (இ.வ. மத்தேயு 26:28 மற்றும் நடபடிகள் 2:38; வெளிப்படுத்தின விசேஷம் 1:5 மற்றும் நடபடிகள் 22:16; எபிரெயர் 9:14 மற்றும் 1 பேதுரு 3:21).*

b. *இவ்வசனப்பகுதிகளுக்கு இடையில் எதிர்மாறு எதுவும் இல்லை. இவ்வசனப்பகுதிகளின் ஒரு குழு நம்மை இரட்சிப்பது எது என்று கூறுகிறது (இரத்தம்); இன்னொரு குழு எப்போது என்று கூறுகிறது (ஞானஸ்நானத்தின்போது).*

IV. *ஏற்புடையதாக்காமல் இருத்தல் சாத்தியமா.*

A. *ஒருவர் கடியுண்டால், அவர் சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கும் போது குணமாக்கப்படுவார் என்று 9ம் வசனம் வலியுறுத்துகிறது. கடியுண்ட ஒருவர் அவ்வாறு நோக்கிப்பார்க்காது இருந்தால், அவர் குணமாக்கப்படவில்லை.*

1. *தேவனுடைய அளிப்பைக் குறைந்தபட்சம் ஒருசிலராவது பயன்படுத்தத் தவறியிருப்பர் - அநேகமாக இது அவிசுவாசத்தினால், மாறுபாடான கருத்தினால், அல்லது அவர்கள் அதிகநேரம் காத்திருந்ததினால் நடந்திருக்கலாம்.*

2. *நமக்கு நிச்சயமாகத் தெரிவதாவது: ஏற்புடையதாக்காமல் இருத்தல் என்ற சாத்தியக்கூறு நிலவுகிறது; தேவன் தமது ஆசீர் வாதங்களை எவரொருவர்மீதும் வலிந்துதிணிப்பதில்லை. எவராவது குணமாக்கப்படவில்லையென்றால், அது அவரது தவறுதானே தவிர தேவனுடைய தவறல்ல.*

B. *இன்றைய நாட்களில், இரட்சிப்புக்குச் சிலுவையின்மூலம் தேவன் அருளியுள்ளவற்றை ஏற்புடையதாக்காமல் இருக்கச் சாத்தியம் உள்ளது.*

1. *இதைச் செய்துள்ளவர்களுக்கு நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கின்றோம்: பெந்தெகொஸ்தே அன்று (ஏறக்குறைய) மூவாயிரம் பேர் (நடபடிகள் 2:36-38, 41), முதலியவர்கள்.*
2. *சிலர் இதைச் செய்யாதிருந்தனர் (நடபடிகள் 24:25; 26:28).*

*முடிவுரை*

*நாம் இழந்துபோகப்பட்டிருந்தால், நம்மைத் தவிர நாம் வேறு யாரையும் குற்றம் சாட்ட இயலாது!*

# 5

# உபாகமம்:

# மோசேயின் பிரியாவிடை உரை

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *1-8, 17, 18, 24, 27, 28, 30-32, 34.*

***தலைப்பு***

*"உபாகமம்" என்ற தலைப்பு, "இரண்டாவது பிரமாணம்" என்ற நேரடி அர்த்தம் தரும் கிரேக்கக் கூட்டு வார்த்தையாக உள்ளது. இருப்பினும், இது இரண்டாவது பிரமாணம் அல்ல, ஆனால் பிரமாணத்தை இரண்டாம் முறை கொடுத்தலாக (திரும்பக் கொடுத்தலாக) உள்ளது. பத்துக் கட்டளைகள் கொடுக்கப்பட்டு நாற்பது ஆண்டுகள் கடக்கும் வேளையின் அருகில், மாண்புமிக்க நடத்துனரான மோசே, பிரமாணத்தையும் வனாந்தரத்தில் நடைபெற்றவற்றையும் மறுகண்ணோட்டம் இடுகின்றார்.*

***பின்னணி***

*வனாந்தரத்தில் அலைந்து திரிதல்கள் முடிந்து போயின. இஸ்ரவேல் மக்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் செல்வதற்குத் தயாராக யோர்தான் நதியின் கிழக்குப்பகுதியில் இருக்கின்றனர். மோசே தமது நடத்துவத்தை யோசுவா என்ற தம் வலதுகைபோன்ற மனிதருக்குக் கொடுப்பதற்கு முன்னர் பல விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றார். அவரது "பிரியாவிடை உரை" உண்மையில் நான்கு செய்திகள் நெருக்கமாய் ஒன்றுகூட்டித் தரப்பட்டதாக உள்ளது (வரைகுறிப்பின் நான்கு மடங்கு பிரிவைக் கவனிக்கவும்).*

*மோசேயே உபாகமத்தின் பெரும்பகுதியை எழுதியவராக இருக்கின்றார், ஆனால் இப்புத்தகத்தினுடைய இறுதிப்பகுதியில் மோசேயின் மரணம் பதிவுசெய்யப்பட்டுள்ளதால், இந்தக் கடைசிக்குறிப்பு யாரேனும் ஒருவரால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அடுத்த புத்தகத்தை யோசுவா எழுதியிருப்பார் என்றால் (யோசுவா புத்தகத்தின் பின்னணியைக் காணவும்), இப்புத்தகத்தின் கடைசி வார்த்தைகள் அனேகமாக அவராலேயே எழுதப்பட்டிருக்கலாம்.*

*உபாகமத்தின் பெரும்பகுதியானது (முன்பு கூறப்பட்டதையே) திரும்பக்கூறுதலாக இருப்பதால், இதைப் புறக்கணிக்கும்படி சோதனை ஏற்படுவது உண்டு. இருப்பினும், இயேசு சோதிக்கப்பட்டபோது, அவர் மேற்கோள் காண்பித்தது, உபாகமம் புத்தகத்தில் இருந்துதான் என்பதை ஆழ்ந்து சிந்திக்கவும் (மத்தேயு 4:4, 7, 10; உபாகமம் 6:13, 16; 8:3). இயேசு இப்புத்தகத்தை மனப்பாடம் செய்ய வேண்டிய அளவுக்கு முக்கியமானதாக நினைத்திருப்பார் என்றால், நாம் இதை இலேசாக நினைக்கக் கூடாது.*

***வரைகுறிப்பு***

I. *அறிமுகம்: வரலாற்று மறுகண்ணோட்டம் (1-4).*
II. *பிரமாணம் மறுகண்ணோட்டமிடப்படுதல், விரிவாக்கப்படுதல் மற்றும்*

*நடைமுறைப்படுத்தப்படுதல் (5-26).*

A. *பின்னோக்கிக் காணுதல்: பிரமாணம் மறுகண்ணோட்டமிடப் பட்டது (5-11).*
   1. *பிரமாணத்தின் பின்னணியில் பின்னோக்கிக் காணுதல் (5-7).*
      a. *பிரமாணத்தின் அடிப்படை: பத்துக் கட்டளைகள் (5).*
      b. *கீழ்ப்படிதலின் அடிப்படை: தேவனிடத்தில் அன்பு (6)!*
      c. *தூய்மையின் அடிப்படை: கானானியர்களையும் அவர்களின் விக்கிரகங்களையும் அழித்தல் (7).*
   2. *பயணத்தையும் வனாந்தரத்தில் அலைந்து திரிதல்களையும் பின்னோக்கிக் காணுதல்; சில நடைமுறைப் பயன்பாடுகள் (8-11).*

B. *முன்னோக்கிக் காணுதல்: பிரமாணத்தின் பகுதிகள், கானான் நாட்டில் அவர்கள் சந்திக்க இருந்த சூழ்நிலைக்குத் தக்கவகையில் விரிவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன (12-26).*

III. *"தேர்ந்துகொள்ளுதல் உங்களுடையது: தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஆசீர்வதிக்கப்பட்டிருத்தல் அல்லது தேவனுக்குக் கீழ்ப்படியாமல் சாபத்தைப் பெற்றுக்கொள்ளுதல்" (27-30).*

A. *ஏபால் மலையில் பிரமாணம் பதிவு செய்யப்பட வேண்டியது (27).*

B. *தேர்ந்துகொள்ளுதல்களும் அவற்றின் விளைவுகளும் வரைகுறிப் பிடப்பட்டன (28).*

C. *தேவனுடனான அவர்களின் உடன்படிக்கை நினைவூட்டப் பட்டது (29).*

D. *"இவைகளெல்லாம் நடக்கும்போது, நினைவுகூருங்கள் ..." (30).*

IV. *முடிவுரை: மோசேயின் கடைசி நாட்கள் (மற்றும் கடைசி வார்த்தைகள்) (31-34).*

A. *மோசேயின் 120ம் பிறந்த நாளன்று (31-33):*
   1. *பிரமாணம் நிறைவடைந்தது; ஒரு பாடல் (31, 32).*
   2. *மோசே கோத்திரங்களை ஆசீர்வதிக்கின்றார் (33).*

B. *மோசே மலையுச்சிக்குச் சென்று, கானானைப் பார்க்கின்றார், மரிக்கின்றார், மற்றும் அறியப்படாத கல்லறையொன்றில் புதைக்கப் படுகின்றார் (34).*

***உபாகமத்தில் இருந்து பாடங்கள்***

*மோசேயின் வாழ்வு என்பதே மாபெரும் பாடங்களில் ஒன்றாக உள்ளது. மோசே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்க இயலாது என்று அவரிடத்திலேயே கூறப்பட்டிருந்த போதிலும், அவர் மனக்கிலேசம் அடைய வில்லை (தம் பணியைவிட்டு) வெளியேறவும் இல்லை. அவர் முடிவுபரியந்தமும் விசுவாசத்துடன் நிலைத்து நின்றார்!*

*6:4-9ல் காணப்படுகிற ஷேமா என்பது எபிரெய மதத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தது. இவ்வார்த்தைகள் பரிசுத்தமான ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பயபக்தியுள்ள யூதர்களால் பேசப்பட்டன (மற்றும் பேசப்படுகின்றன). "நியாயப்பிரமாணத்திலேயே பெரிய கட்டளை எது?" என்று*

*இயேசுவினிடத்தில் கேட்கப்பட்டபோது (மத்தேயு 22:35-38), அவர் இவ்வசனப் பகுதியில் இருந்துதான் மேற்கோள் காண்பித்தார்: " 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக.' இது முதலாம் பிரதான கற்பனை" (வசனம் 38).*

*28ம் அதிகாரத்தில் உள்ள வல்லமை நிறைந்த வசனப்பகுதியொன்று, நாம் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது வருகிற ஆசீர்வாதங்களையும், நாம் அவருக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது நாமே நம்மீது வருவித்துக் கொள்கிற சாபங்களையும் விவரிக்கிறது. 28ம் அதிகாரத்தை மறுபடியும் வாசித்து, யூதமக்களின் பின்தொடர்ந்த வரலாறு பற்றி நினைத்துப் பாருங்கள். ஒரு மக்களினம் என்ற வகையில் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை இது முன்னுரைக்கிறது.*

*உபாகமத்திற்கும் கிறிஸ்துவின் வாழ்வுக்கும் இடையில் பல பிணைப்புகள் உள்ளன. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளவைகளுடன் கூடுதலாக 18:15-19 மற்றும் 21:23 ஆகியவற்றைக் காணவும்.*

## தேவனிடத்தில் அன்புகூரும்படி பிள்ளைகளுக்குப் போதித்தல் (உபாகமம் 6:4-9)

*நமது வேதபாடப் பகுதியாகிய உபாகமம் 6:4-9, யூதமக்களின் மையமாக இருந்தது. இதில் 4ம் வசனம் ஷேமா என்று அழைக்கப்பட்டது, ஏனென்றால் "கேள்," என்பதற்கான எபிரெய வார்த்தையான ஷேமா என்பது (எபிரெய மொழியில்) இவ்வசனத்தின் முதல் வார்த்தையாக உள்ளது. காலம் கடந்தபோது, ஷேமா என்பது 9ம் வசனம் வரை விரிவாக்கப்பட்டது மற்றும் சிலவேளைகளில் இது ஏற்புடைய மற்ற குறிப்புகளையும் உள்ளடக்கிற்று. "இஸ்ரவேலே கேள்! நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்!" என்ற வசனப்பகுதியைத் தொடர்ந்து, தேவனை ஒருவர் தமது முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்புகூரவேண்டும் என்ற அறைகூவல் தரப்படுகிறது, இது யூத மக்களின் ஆராதனைக்கான அழைப்பாக, யுத்தக் கூக்குரலாக, மற்றும் மரிக்கும் வேளையில் அவர்களின் ஜெபமாக ஆயிற்று. இது ஒரு தெய்வ வணக்கத்தின் சிறப்புக்கூற்றாகவும் ஒரே தேவனுடன் ஒரு நபர் கொண்டுள்ள உறவுமுறையாகவும் உள்ளது.*

*இவ்வசனப்பகுதியின் முக்கியத்துவத்தைக் கிறிஸ்தவர்களுக்கு இயேசு வலியுறுத்தினார் (மத்தேயு 22:37-40). அவரது வார்த்தைகள், நாம் தேவன்மீது நமக்குள் இருக்கும் யாவற்றுடனும் அன்புகூரவேண்டுமென்று - மற்றும் அதன்பின்பு அவ்வாறே செய்யும்படி நமது பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டுமென்று - நமக்கு அறைகூவல் விடுக்கின்றன.*

I. தேவன்மீது அன்புகூரும்படி நமது பிள்ளைகளுக்கு நாம் போதிக்க வேண்டியது ஏன்?

   A. தேவன்மீது அன்புகூருதலில் தேவனுக்குக் கீழ்ப்படிதல் - கிறிஸ்தவராகுதல்கூட - உள்ளடங்கியிருக்கிறது (யோவான் 14:15; 1 யோவான் 5:3; ரோமர் 6:17, 18; 1 கொரிந்தியர் 13:1-3).

   B. தேவன்மீது அன்புகூருதல் என்பது கிறிஸ்தவர் என்ற வகையில்

*மகிழ்வுடன் இருப்பதற்கு அத்தியாவசியமானதாக உள்ளது (1 யோவான் 4:18; ரோமர் 8:28).*

C. *நம்மில் பெரும்பான்மையானவர்களுக்கு, தேவன்மீது அன்பு கூருதல் என்பது மரணபரியந்தம் உண்மையாய் இருத்தல் என்பதுடன் வலிவார்ந்த வகையில் இணைவுகொண்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 2:10; 2:4).*

II. *தேவன்மீது அன்புகூரும்படி நமது பிள்ளைகளுக்கு நாம் எவ்வாறு போதிக்க முடியும் (6:4-9)?*

A. *நாமே தேவன்மீது அன்புகூருவதைக் கொண்டு நாம் தொடங்குகின்றோம் (வசனங்கள் 5, 6).*

1. *6:4-9ல் நமக்கு முதலில், தேவன்மீது நாம் நமக்குள்ள யாவற்றுடனும் அன்புகூர வேண்டும் என்றும் பின்பு அதை நமது பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது. நமது பிள்ளைகள் தேவன்மீது அன்புகூர வேண்டும் என்றால், அவர்கள் அந்த அன்பை முதலில் நமக்குள் காணவேண்டும்.*
2. *நாம் தேவன்மீது எவ்வாறு அன்புகூர முடியும்? "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1 யோவான் 4:19).*

a. *நாம் தேவனுடைய அன்பை வேதாகமத்தில் இருந்து கற்றுக் கொள்வோமாக - பின்பு நாம் தேவன் நமக்குச் செய்துள்ள யாவற்றைக் குறித்தும் தியானிப்போமாக.*

b. *நாம் தேவனில் அன்பு கூருகின்றோம் என்பதை நம் செயல்கள் காட்டட்டும்; நம் முழு பலத்தோடும் நாம் அவரில் அன்பு கூருவோமாக (வெளிப்படுத்தின விசேஷம் 2:5).*

B. *பின்பு நாம் அந்த அன்பை நமது பிள்ளைகளிடத்தில் பகிர்ந்து கொள்வோமாக (வசனம் 7).*

1. *நமது பிள்ளைகள் அந்த அன்பைப் பற்றித் தாமாகவே அறிந்து கொள்ளமாட்டார்கள்; நாம் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.*
2. *நாம் அவர்களுக்கு எல்லா வேளைகளிலும் போதிப்பது அவசியமாய் இருக்கிறது: நாம் நடக்கையிலும், நிற்கையிலும், உட்கார்ந் திருக்கையிலும், படுத்துக்கொள்ளுகையிலும்! சில ஆலோசனைகள்:*

a. *சபையின் எல்லா வகுப்புக்களையும் இளைஞர்களுக்கான எல்லா நடவடிக்கைகளையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.*

b. *வீட்டு தியானங்கள் மற்றும் திட்டமிட்ட நடவடிக்கைகளை அளியுங்கள்.*

c. *எந்த மற்றும் ஒவ்வொரு வேளையையும்/நிகழ்வையும் போதித்தலுக்கான வேளையாக மாற்றுங்கள்: நல்ல வேளைகள், மோசமான வேளைகள், இல்லத்தின் உள்ளே, இல்லத்திற்கு வெளியே, உறவுமுறைகள்*

தொடர்பானவை (1 யோவான் 4:11).

d. நமது பிள்ளைகள் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி நாம் அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்; கீழ்ப்படிதல் இன்றி அன்பு இருக்க முடியாது (1 யோவான் 5:3).

C. கடைசியாக, நாம் நமது பிள்ளைகளுக்கு அன்பின் சூழ்நிலையை அளிக்க வேண்டும் (வசனங்கள் 8, 9).

1. இவ்வார்த்தைகள் கையில், கண்களுக்கு இடையில், மற்றும் கதவுநிலைகளில் வைக்கப்பட வேண்டியவையாக இருந்தன. யூதர்கள் பைலேக்டரிகள் [phylacteries என்பது "காவலர்கள்" என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையாகும்] என்ற சிறியபெட்டிகளைக் கண்டுபிடித்தனர், அவற்றினுள் இவ்வார்த்தைகள் இருக்கும், அப்பெட்டிகளை அவர்கள் தங்கள் கைகளிலும் நெற்றிகளிலும் அணிந்துகொண்டனர் (மத்தேயு 23:5). மோசே தமது கரமானது அன்பிலிருந்து செயல்படும்படி, அதில் அன்பின் பிரமாணத்துடனும்; மூளையானது அன்பில் இருந்து சிந்திக்கும்படி; தலையில் அன்பின் பிரமாணத்துடனும், இல்லமானது அன்பினால் நிறைந்திருக்கும்படி, கதவுநிலைகளில் அன்பின் பிரமாணத் துடனும் பேசிக்கொண்டிருந்தார்.

2. சில ஆலோசனைகள் நமது இல்லங்களை அன்பினால் நிரப்பு கின்றன:

   a. நமது பிள்ளைகள் தேவன்மீதான நமது அன்பைக் காணட்டும்.

   b. நமது பிள்ளைகள் நாம் அவர்களின்மீது கொண்டுள்ள அன்பைக் காணட்டும் (தீத்து 2:4).

      (1) நாம் எப்போதும் "அவர்களுக்கு மிகச் சிறந்தவற்றை நாடுவோமாக" (agape என்ற அன்பின் அர்த்தத்தை).

      (2) நாம் இரக்கம், பொறுமை முதலானவைகளுடன் இருப்போமாக (1 கொரிந்தியர் 13:4-7).

      (3) நாம் அவர்களை அன்புடன் ஒழுங்குபடுத்துவோ மாக (எபிரெயர் 12:6, 7, 9).

      (4) நாம் மன்னிப்பவர்களாய் இருப்போமாக. (தந்தையர்களுக்குக் குறிப்பு: ஒரு பிள்ளை தனது தந்தையைக் கண்ணோக்கும் வழியே பொதுவாக தேவனைப் பற்றிய கருத்தை அந்தப் பிள்ளைக்குள் வடிவமைக்கிறது!)

   c. இல்லத்தில் ஒவ்வொருவரும் மற்ற ஒவ்வொருவரையும் அன்பு கூருவதை நமது பிள்ளைகள் காணட்டும் (எபேசியர் 5:25, 28, 33; தீத்து 2:4; 1 யோவான் 4:20ஐ நினைவில் வைக்கவும்).

முடிவுரை

யூதர்களைப்போல் நாமும், நமது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும்

வேதவசனங்களின் போதனையை அமுல்படுத்தப் பிரயாசப்பட வேண்டும். இதைச் செய்வதால் மாத்திரமே நாம் நமது பிள்ளைகளுக்குத் தேவன்மீது அன்புகூருதலின் முக்கியத்துவத்தைப் போதிக்க முடியும்.

# 6

# யோசுவா: கானானில் வெற்றி!

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *1-11, 13, 14, 18, 21-24.*

***தலைப்பு***

*யோசுவா புத்தகமானது அதன் பிரதானப் பாத்திரத்தைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது, அவர் மோசேக்குப் (பின்பு அவருக்குப்) பதிலாக இஸ்ரவேல் மக்களின் நடத்துனராக இருந்தார். அவரது பெயரானது "இரட்சிப்பு" என்று அர்த்தப்படுகிற ஓசேயா (எண்ணாகமம் 13:8), என்று இருந்தது; ஆனால் மோசே அப்பெயரை, "யெகோவா இரட்சகராயிருக்கிறார்" என்று அர்த்தம் தரும் "யோசுவா" என்று மாற்றினார் (எண்ணாகமம் 13:16), இது இப்புத்தகத்தின் பொருளடக்கத்திற்கு ஏற்ற தலைப்பாக உள்ளது. "இயேசு" என்பது புதிய ஏற்பாட்டில் "யோசுவா" என்ற பெயருக்குச் சமமானதாக உள்ளது.*

***பின்னணி***

*இந்தப் புத்தகம் உபாகமத்தின் பின்தொடர்ச்சியாய் இருந்தபோதிலும், இது பழைய ஏற்பாட்டின் ஒரு புதிய உட்பிரிவைத் துவக்குகிறது: (யூதத்துவ) வரலாற்றின் பன்னிரெண்டு புத்தகங்கள். பழைய ஏற்பாட்டின் முதல் பதினேழு புத்தகங்கள், பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் யாவற்றிற்கும் வரலாற்றுச்சட்டக அமைவை அளிக்கின்றன.*

*கடைசியாக, யோசுவாவினுடைய நடத்துவத்தின்கீழ், இஸ்ரவேல் மக்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசித்தனர். இப்புத்தகத்தின் முதல் பாதியானது, தேவனுடைய உதவியுடன் இஸ்ரவேல் மக்கள் நாட்டை வெற்றிகொள்வதைப் பற்றிக் கூறுகிறது. எரிகோவும் ஆயீயும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன, நாடு இரண்டு பாதியாகப் பிரிக்கப்படுகிறது. நாட்டின் தென்பகுதியும் பின்பு வடபகுதியும் வெற்றி கொள்ளப்படுகின்றன.*

*இப்புத்தகத்தின் பின்பாதியானது நாட்டைப் பங்கிடுதல் பற்றிக் கூறுகிறது. ஒவ்வொரு கோத்திரமும் ஒருபகுதியைப் பெறுகின்றன. காலேப் மற்றும் யோசுவா என்ற உண்மை நிறைந்த இரண்டு வேவுகாரர்களுக்கு விஷேச அளிப்புகள் ஏற்படுத்தப்பட்டன. லேவியர்கள் தங்களின் சுதந்தரவீதமாக நகரங்களையும் நிலத்தையும் பெற்றனர். மக்களிடத்தில் யோசுவா விடுத்த அறைகூவல் மற்றும் அவரது மரணம் ஆகியவற்றுடன் இப்புத்தகம் முடிவடைகிறது. யோசுவா 11ல் உள்ள மூன்று வசனங்கள் இப்புத்தகத்தினுடைய கருத்துக்களைத் தொகுத்துரைக்கின்றன: 15, 18, 23. பதினைந்து மற்றும் இருபது ஆண்டுகளுக்கிடையிலான வரலாறு எடுத்துக்கூறப்பட்டுள்ளது (24:29; உபாகமம் 34:5-9).*

*இந்தப் புத்தகத்தை யார் எழுதினார் என்று நாம் நிச்சயிக்க முடிவதில்லை. இதை எழுதியிருப்பதாக ஆலோசனை செய்யப்படும் எழுத்தாளர்களில் பினேகால் மற்றும் எலெயேசர் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். யோசுவாவே இப்புத்தகத்தை எழுதினார் என்று யூதப்பாரம்பரியம்*

கூறுகிறது. நாம் கொண்டுள்ள தகவலும் இதை யோசுவா எழுதியிருப்பார் என்பதற்குக் கருத்தொருமைப்படுகிறது. 5:1ல் தன்மைப் பெயர்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள விஷயமானது, இதை எழுதியவர் யோர்தானை கடந்து சென்றார் என்று சுட்டிக்காண்பிக்கிறது; 24:26, இந்தப்புத்தகத்தின் எல்லாப்பகுதி யையும் அல்லது ஒருசிலபகுதிகளை யோசுவா எழுதியிருத்தல் பற்றிப் பேசுகிறது. யோசுவா இப்புத்தகத்தை எழுதினார் என்றால், இப்புத்தகத்தின் முடிவில் உள்ள யோசுவாவின் மரணம் பற்றிய விவரத்தை இன்னொரு எழுத்தாளர் எழுதி இப்புத்தகத்தை முடித்துவைத்தார்.

**வரைகுறிப்பு**

அறிமுகம்: நடத்துவத்துவம் யோசுவாவினிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது (1).

I. நாட்டைப் பிடித்தல் (2-12).
   A. எரிகோவை வேவுபார்த்தல் (2).
   B. உலர்ந்த நிலத்தில் யோர்தானைக் கடத்தல் மற்றும் நினைவுச் சின்னம் ஒன்றை அமைத்தல் (3, 4).
   C. யுத்தத்திற்கு ஆயத்தம்செய்தல் (5).
   D. எரிகோவை மேற்கொள்ளுதல் (6).
   E. ஆயியை மேற்கொள்வதில் பிரச்சனைகள்; ஆசீர்வாதங்களும் சாபங் களும் வாசிக்கப்படுதல் (7, 8).
   F. தந்திரமுள்ள/கபடு நிறைந்த கிபியோன்; தெற்கில் இருந்த அரசர் களுடன் யுத்தம் (9, 10).
   G. வடக்கில் இருந்த அரசர்களின் தோல்வி (11).
   H. யுத்தங்கள் பற்றிய ஒரு தொகுப்புரை (12).

II. நாட்டைப் பங்கிடுதல் (13-22).
   A. இரண்டரைக் கோத்திரத்தாருக்குச் சுதந்தரவீதம் (13).
   B. காலேபுக்குச் சுதந்திரவீதம் (14).
   C. யூதாவின் கோத்திரத்தில் எஞ்சியிருந்தவர்களுக்குச் சுதந்தரவீதம் (15).
   D. யோசேப்பின் பிள்ளைகளில் எஞ்சியிருந்தவர்களுக்குச் சுதந்தரவீதம் (16, 17).
   E. எஞ்சியிருந்த ஏழு கோத்திரங்கள் மற்றும் யோசுவா ஆகியோருக்குச் சுதந்திரவீதம்; ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்படுதல் (18, 19).
   F. அடைக்கலப் பட்டணங்கள் (20).
   G. லேவியர்களுக்குச் சுதந்தரவீதம் (21).
   H. இரண்டரைக் கோத்திரத்தார் இல்லம் திரும்புதல்; நினைவுச் சின்ன மாக பலிபீடம் ஒன்று எழுப்பப்படுதல் (22).

முடிவுரை: யோசுவாவின் பிரியாவிடை மற்றும் மரணம் (23, 24).

**யோசுவாவின் புத்தகத்தில் இருந்து பாடங்கள்**

யோசுவாவின் புத்தகம், தேவனுடைய மக்கள் விசுவாசத்தின்மூலமாக எவ்வாறு வெற்றிக்கொள்ள முடியும் என்று கூறுகிறது. இப்புத்தகம், தேவன் தமது மக்களுடன் இருத்தல், மற்றும் - அவர்கள் அவரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தால் - அவர்களுக்கு வெற்றியை கொடுத்தல் ஆகியவை பற்றி

மாபெரும் வசனப்பகுதிகளைக் கொண்டுள்ளது. 1:5-9 அத்தகைய வசனப்பகுதி களில் ஒன்றாக உள்ளது.

தேவனுக்குக் கீழ்ப்படியும் விஷயத்தில், உச்சச்செயல்முனைப்புகளாகிய பின்வருவனவற்றிற்கு சென்றுவிடுதல் சுலபமானதாக உள்ளது: சட்டவியல் (தேவன் ஏற்படுத்தியிராத பிரமாணங்களைக் கட்டுவித்தல்) என்பதன் வலது கடைசி முனைக்குச் செல்லுதல் அல்லது விடுதலையியல் (தேவன் ஏற்படுத்தி யுள்ள பிரமாணங்களைத் தளர்த்துதல்) என்பதன் இடது கடைசி முனைக்குச்செல் லுதல். 1:7ல், நாம் பிரயாசப்பட வேண்டிய சமான நிலையைக் காணுகின்றோம்: "அதைவிட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக."

ஆகானின் பாவத்தைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள், "பாளையத்தில் பாவம் இருக்கும்"போது தேவனுடைய மக்கள் வெற்றியடைய முடியாது என்பதைச் செயல்விளக்கப்படுத்துகின்றன. 7:20, 21ல், நாம் ஒரு மனிதனின் வாழ்வில் பாவம் உட்புகுந்து வளருவது எவ்வாறு என்று கண்டறிகின்றோம். இதை யாக்கோபு 1:14, 15உடன் ஒப்பிடவும்.

யோசுவா புத்தகத்தின் வசனப்பகுதிகளுக்குப் புதிய ஏற்பாட்டில் பல குறிப்புகள் உள்ளன. (நடபடிகள் 7:16; 13:19; எபிரெயர் 4:8; 11:22, 30, 31; 13:5; யாக்கோபு 2:25 ஆகியவற்றைக் கவனிக்கவும்.) இயேசுவின் முன்னோர்களில் ஒருத்தியான இராகாப் என்பவளின் வரலாறு அனேகமாக இயேசுவுக்கு மிகவும் அக்கறைக்குரிய ஒன்றாக இருந்திருக்கலாம் (மத்தேயு 1:5).

## மதில்கள் இடிந்து விழுந்தன (யோசுவா 6)

யோசுவாவின் புத்தகமானது, இஸ்ரவேல் மக்கள் யோசுவாவின் நடத்துவத் தின்கீழ் கானான் நாட்டை வெற்றிக்கொண்டது பற்றிக் கூறுகிறது. "விசுவாசத்தின் மூலம் வெற்றி" என்பதே இப்புத்தகத்தினுடைய ஆய்வுப்பொருளாக உள்ளது (1:5-9). நாம் யாவரும் வெற்றியுள்ள வாழ்வை வாழ விரும்புவோம். நாம் அதை எவ்வாறு செய்ய முடியும் என்று காண்பதற்கு, எரிகோ யுத்தத்தில் தேவன் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்த வெற்றியைக் கண்ணோக்குவோம், அங்கு (பழம் பாடல் ஒன்றின் வரிகளைப் பயன்படுத்துவதென்றால்) "மதில்கள் இடிந்து விழுந்தன"! இவைகள் மூன்றுமாடி அளவுக்கு உயரமும் பதினெட்டு அடிகள் கனமும் உடைய மாபெரும் மதில்களாய் இருந்தன!

நமக்கும் தேவனுக்கும் இடையில், நமக்கும் மற்ற மக்களுக்கும் இடையில், நாம் என்னவாக இருக்கின்றோம் மற்றும் நாம் என்னவாக இருக்க வேண்டும் என்பவற்றிற்கு இடையில் இருக்கின்றவைகளும் இடித்து வீழ்த்தப்பட வேண்டியவைகளுமான "மதில்களை" நாம் யாவருமே கொண்டுள்ளோம்: நாம் திருமணம் மற்றும் குடும்ப மதில்கள், நிதிநிலை மதில்கள், உடல் ஆரோக்கிய மதில்கள் மற்றும் உணர்ச்சிப்பூர்வம் என்ற மதில்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளோம். நன்கு பழக்கமான இந்த வரலாறு, குறைந்தபட்சம் நான்கு பாடங்களை, மதில்கள் "இடிந்து கீழே விழுதல்" என்பதை ஏற்படுத்துவதற்கு அவசியமான நான்கு விஷயங்களைப் போதிக்கிறது:

I. தேவனுடைய வழிகள் மதிக்கப்பட வேண்டும்.

A. ஒரு சிறு பையன், வேதாகம வகுப்பில் தான் கற்றுக் கொண்டதைத் தனது தாயினிடத்தில் (பின்வருமாறு) கூறினான்: "அவர்கள் விமானங் களையும் டாங்கிகளையும் ஏவுகணைகளையும் எடுத்துச்

சென்று எரிகோவின் மதில்களைச் சாய்த்தனர்!" அவனது தாய் நம்பிக்கையற்று அவனிடத்தில், "உங்கள் ஆசிரியை நிச்சயமாக இவ்வாறுதான் இவ்வரலாற்றைக் கூறினார்களா?" என்று கேட்டாள். அதற்கு அந்தச் சிறு பையன், "இல்லை, ஆனால் அவர்கள் கூறியதை நான் உங்களுக்குச் சொன்னால் நிச்சயமாகவே நீங்கள் என்னை (நான் கூறுவதை) நம்பமாட்டீர்கள்" என்று கூறினான். உண்மையில், யோசுவா 6ம் அதிகாரம் நாம் எவ்வாறு ஒரு நகரத்தைப் பிடிப்போம் என்பதைப் பற்றியதல்ல - மற்றும் அது அந்த நாட்களில் படைகள் எவ்வாறு நகரங்களைப் பிடித்தன என்பதைப் பற்றியதும் அல்ல. அவர்கள் வீரநடையிடும் படைகளை, வில்லாளர்களின் கோபுரங்களை, ஏறிச் செல்லப் பயன்படும் ஏணிகளை மற்றும் யுத்தத்தினுடைய பிற இயந்திரங்களைப் பயன்படுத்தினர். பின்பு ஏன் தேவன் தாம் செயல்பட்ட வழியைத் தேர்ந்து கொண்டார்?

1. அவர், "என்னுடைய வழிகள் உங்களுடைய வழிகள் அல்ல" என்று கூறினார். அவர், "இது உங்களுடைய வெற்றியல்ல, ஆனால் என்னுடைய வெற்றி என்று நீங்கள் அறிய வேண்டும் என்று விரும்புகின்றேன்" என்று கூறினார்.
2. யோசுவாவும் இஸ்ரவேல் மக்களும் தேவனுடைய வழிகளை மதித்தனர்; வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் என்பது அவர்களைத் தேவன் மிகச்சிறந்தவற்றை அறிகிறார் என்று நம்பச் செய்தது.

B. தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல என்பது இன்னமும் உண்மையாய் இருக்கிறது (ஏசாயா 55:8, 9).

1. தேவனுடைய இரட்சிப்பு, ஆராதனை, ஒழுக்கம் மற்றும் பொதுவாக தேவபக்தி ஆகியவற்றைப் பற்றி மனிதர்கள் இரண்டாவது யூகம் செய்ய முயற்சிக்கின்றனர்.
2. தேவனுடைய வழியை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்ற அவசியமின்றி, அவர் கூறியிருப்பதினாலேயே நாம் அவரது வழியைக் கற்று அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய வழி செயல்படுகிறது!

II. தேவனுடைய வரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

A. இந்த வரலாற்றில், கிருபையின்மீது வல்லமைமிக்க செய்தி ஒன்றுள்ளது. தேவன் அந்த நகரத்தை இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்தார் என்பதைக் கவனியுங்கள் (6:2, 16). எனவே அவர்கள் செய்வதற்கு ஒன்றுமில்லாதிருந்தது என்று இது அர்த்தப்படுகிறதா? இல்லை, இந்த வரத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் செய்ய வேண்டிய விஷயங்கள் இன்னமும் இருந்தன (6:3முதல்.).

B. இன்றைய நாட்களில், நாம் கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம் என்பதை மக்கள் அறியும்போது (எபேசியர் 2:5), சிலர் "அது நாம் எதையும் செய்ய அவசியமில்லை, எதையும் செய்ய இயலாது என்று அர்த்தப்படுகிறது" என்று கூறுகின்றனர். கொடைகள் என்பவை ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது மறுக்கப்படவோ முடியும். நாம்

செய்யும்படி தேவன் நமக்குக் கூறியுள்ளவற்றை செய்வதின்மூலம் நாம் தேவனுடைய கொடையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. எபேசியர் 2:8, விசுவாசத்தினாலே நாம் தேவனுடைய ஆவிக்குரிய கொடையை ஏற்றுக்கொள்ளுகின்றோம் என்று வலியுறுத்துகிறது. விசுவாசமே வெற்றியைக் கொடுக்கிறது (1 யோவான் 5:4)!
2. இது செத்த அல்லது செயல்துடிப்பற்ற விசுவாசமோ அல்ல (யாக்கோபு 2:14-26). நமக்கு ஜீவனுள்ள மற்றும் செயல் துடிப்புள்ள விசுவாசம் தேவை (கலாத்தியர் 5:6). இஸ்ரவேல் மக்கள் தேவனை விசுவாசித்தபடியினால் அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தனர்.

III. நமது விசுவாசம் செயல்விளக்கப்படுத்தப்பட வேண்டும்.

A. எபிரெயர் 11:30, எரிகோவின் மதில்கள் விசுவாசத்தினால் இடிந்து விழுந்தன என்று வலியுறுத்துகிறது, ஆனால் "பின்பு" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். அது, மக்கள் பலவற்றைச் செய்த பின்பே நடைபெற்றது (6:8முதல்.).

B. அதுபோலவே, தேவன்மீது நாம் கொண்டுள்ள விசுவாசமும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1. ஒரு கிறிஸ்தவராவதற்கு (மாற்கு 16:16; நடபடிகள் 2:36-38; 8:35-39).
2. கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு, வெளிப்படுத்தின விசேஷம் 2:10: "உண்மையாயிரு" என்பது "உண்மைநிறைந்திரு" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது.

IV. நமது கீழ்ப்படிதல் நிறைவடைய வேண்டும்.

A. மக்கள் முதல் நாளிலும், இரண்டாவது நாளிலும், ... ஆறாவது நாளிலும், ஏழாவது நாளில் ஆறாம் முறையாகவும் அந்த நகரத்தைச் சுற்றி வந்த காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள்: பூமியில் அதிர்ச்சி எதுவும் ஏற்படவில்லை; மதில்களில் விரிசல் எதுவும் ஏற்படவில்லை. ஏழாம் நாளில் அந்த நகரம் ஏழாவது முறை சுற்றி வரப்பட்டபோது, எக்காளங்கள் ஊதப்பட்டன, மக்கள் முழக்கமிட்டனர், பின்பு மதில்கள் இடிந்து விழுந்தன (6:20). எபிரெயர் 11:30, அவர்கள் ஏழு நாட்கள் சுற்றிவந்த பின்பு மதில்கள் இடிந்து விழுந்தன என்று வலியுறுத்துகிறது.

B. முற்றிலுமான கீழ்ப்படிதல் என்பது எப்போதுமே நமது வாழ்வின் இலக்காக இருக்க வேண்டும் (மத்தேயு 7:21; எபிரெயர் 5:8, 9). நாம் ஒருவேளை அந்த இலக்கை ஒருக்காலும் அடையாதவர்களா யிருக்கலாம், ஆனால் ஏதொன்றிற்கும் குறைவாகக் குறிவைத்தல் என்பது நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பு கின்றாரோ, அதைவிடக் குறைவுபட்டு இருத்தலும் நமது ஆத்து மாக்களை இடர்ப்பாட்டிற்கு உட்படுத்துதலுமாக இருக்கிறது.

*முடிவுரை*

நாம் தேவனிடம் விவாதம் செய்யாதிருப்போமாக. நாம் தேவனை விசுவாசிப்போமாக (எபிரெயர் 13:5ஆ, 6) மற்றும் அவர் கூறுபவற்றையும்

*செய்வோமாக. அப்போது நமது மதில்களும் இடிந்து கீழே விழும்! நாம் தேவனுடைய வழியை முற்றிலுமாகப் புரிந்துகொண்டிருப்பினும் இல்லாதிருப்பினும், அது செயல்படுகிறது!*

# 7

# நியாயாதிபதிகள் மற்றும் ரூத்: கொந்தளிப்பின் மத்தியில் அன்பு

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *நியாயாதிபதிகள் 1-4, 6-16; ரூத் 1-4.*

**தலைப்பு**

*நியாயாதிபதிகள் என்ற தலைப்பு, யோசுவா மரணத்திற்குப் பின்பு தேவனால் (2:16) எழுப்பப்பட்ட இஸ்ரவேல் மக்களின் நடத்துனர்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய கிரேக்க மொழித்தலைப்பானது, "நீதிபதிகள்" என்று மாத்திரம் அர்த்தப்படுத்துவதாயிருக்கலாம், ஆனால் இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஒருக்காலும் எந்த ஒரு நீதி மன்றத்திலும் தலைமை வகித்திருந்ததில்லை. எபிரெய மொழியில் இந்தத் தலைப்பானது மிகவும் பொருள் விரிவானதாக உள்ளது, இது "நீதிபதிகள், ஆட்சியாளர்கள், விடுதலையாளர்கள்" என்று அர்த்தப்படுகிறது.*

*ரூத் புத்தகத்தின் தலைப்பானது, அதன் முக்கியமான கதாபாத்திரத்தில் ஒருவரான, உண்மையான தேவனில் விசுவாசியான ரூத் என்ற மோவாபியப் பெண்ணின் பெயரிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.*

**பின்னணி**

*நியாயாதிபதிகளின் காலம் கொந்தளிப்பின் காலமாக இருந்தது. யோசுவாவின் மரணத்திற்குப் பின்பு, மைய அரசு எதுவும் இருக்கவில்லை; "அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானபடி செய்துவந்தான்" (17:6; 18:1; 19:1; 21:25).*

*அந்த நாட்டின் குடிகளை முற்றிலுமாகத் துரத்திவிடும்படி தேவன் இஸ்ரவேல் மக்களுக்குக் கூறியிருந்தார், ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை (1:21-36). அவர்களிடையில் இருந்த புறதெய்வ ஜனங்களின் செல்வாக்கினால் இஸ்ரவேல் மக்கள் தேவனை விட்டுப் புறம்பே திரும்பினார்கள். அவர்கள் இதைச் செய்தபோது, மற்ற மக்களினங்கள் வந்து இஸ்ரவேல் மக்களை அடக்கியாளத் தேவன் அனுமதித்தார். அவர்கள் (இஸ்ரவேல் மக்கள்) மனந்திரும்பியபோது, தேவன் ஒரு விடுதலையாளரை, "ஒரு நியாயாதிபதியை" அனுப்பினார் (2:16-19). சற்றுக்காலம் மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள்; பின்பு அவர்கள் மீண்டும் விக்கிரகாராதனையில் வீழ்ந்துபோவார்கள், பின்பு முன்கூறப்பட்ட செயல்கள் யாவும் திரும்பவும் நடைபெறும். மீண்டும் விழுந்துபோகுதல், தண்டனை பெறுதல், மனந்திரும்புதல் மற்றும் மீட்கப்படுதல் என்ற சுழற்சியானது திரும்பத் திரும்ப நடைபெற்றது.*

*நியாயாதிபதிகள் நாட்டை முழுவதும் ஆண்ட அரசர்களைப்போல் இருக்கவில்லை, மாறாக அவர்கள் குறிப்பிட்ட தேவைகளுக்காகத் தேவனால் எழுப்பப்பட்ட உள்ளூர் விடுதலையாளர்களாய் இருந்தனர். அனேகமாக அவர்களின் ஊழியமானது ஒன்றின்மீது இன்னொன்று கவிந்திருந்தது.*

ஒருவர் நியாயாதிபதிகளின் புத்தகத்தை வாசிக்கும்போது, நாட்டில் வன்முறை மாத்திரமே இருந்தது என்ற கருத்து ஏற்படலாம்; ஆனால் ரூத் என்ற அமைதியும் இனிமையும் உடைய புத்தகமானது "நியாயாதிபதிகள் ஆண்ட நாட்களில்" நடைபெற்றதைக் குறிப்பதாக உள்ளது. கலகத்தின் மத்தியிலும் சாதாரண மக்கள் இன்னமும் தேவனுக்கு உண்மையுள்ள வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தனர்.

தாவீது அரசரின் வம்சவழியை நிலைநாட்டுதல் (4:21, 22) மற்றும் நிறைவாக இயேசுவின் வம்சவழியை நிலைநாட்டுதல் (மத்தேயு 1:5, 6) என்பதே ரூத் புத்தகத்தின் அடிப்படை நோக்கமாகக் காணப்படுகிறது. இந்தப் புத்தகங்களை எழுதியது யார் என்று நாம் அறிவதில்லை; இஸ்ரவேல் மக்களின் கடைசி நியாயாதிபதியான சாமுவேல் இவற்றை எழுதியிருக்கலாம் என்பது நல்ல யூகமா யிருக்கும்.

**நியாயாதிபதிகள் புத்தகத்தின் வரைகுறிப்பு**

பின்னணி: இஸ்ரவேல் மக்கள் (கானான் நாட்டின்) குடிகளை முற்றிலுமாகத் துரத்தியிருக்கவில்லை (1), இதனால் தேவன் அவர்கள்மீது பிரியமற்றுப் போனார் (2:1-5). கடும் தீமையான சுழற்சியொன்று தொடங்கிற்று (2:6-3:4).

I. முதல் சுழற்சி.
   A. விசுவாச விலக்கம் (3:5-7).
   B. மெசொப்பொத்தாமியர்களின்: அடக்குமுறைக் கொடுமை (3:8).
   C. விடுவிக்கப்படுதல்: ஒத்னியேல் (3:9-11).

II. இரண்டாம் சுழற்சி.
   A. விசுவாச விலக்கம் (3:12அ).
   B. அம்மோனியர்கள் மற்றும் அமலேக்கியர்களுடன் சேர்ந்து மோவாபியர்களின்: அடக்குமுறைக் கொடுமை (3:12ஆ-14).
   C. விடுவிக்கப்படுதல்: ஏகூத் (3:15-30).

III. மூன்றாம் சுழற்சி.
   A. அடக்குமுறைக் கொடுமை: பெலிஸ்தர்கள் (3:31).
   B. விடுவிப்பவர்: சம்கார் (3:31).

IV. நான்காம் சுழற்சி.
   A. விசுவாச விலக்கம் (4:1).
   B. அடக்குமுறைக் கொடுமை: கானானியர்கள் (4:2, 3).
   C. விடுவிப்பவர்கள்: தெபொராள் மற்றும் பாராக் (4:4-5:31).

V. ஐந்தாவது சுழற்சி.
   A. விசுவாச விலக்கம் (6:1அ).
   B. அடக்குமுறைக் கொடுமை: அமலேக்கியர்களுடன் சேர்ந்து மீதியா னியர்கள் (6:1ஆ-10).
   C. விடுதலையாளர்: கிதியோன் (6:11-8:32).
   D. மீண்டும் விசுவாச விலக்கம் (8:33-35).
   E. அபகரிப்பாளன்: அபிமெலேக்கு (9).
   F. விடுதலையாளர்கள்: தோலா (10:1, 2) மற்றும் யாயீர் (10:3-5).

VI. ஆறாம் சுழற்சி.
   A. விசுவாச விலக்கம் (10:6).

B. *அடக்குமுறைக் கொடுமை: பெலிஸ்தர்கள் மற்றும் அம்மோனியர்கள் (10:7-18).*

C. *விடுதலையாளர்கள்: யெப்தா (11:1-12:7), இப்சான் (12:8-10), ஏலோன் (12:11, 12), மற்றும் அப்தோன் (12:13-15).*

VII. *ஏழாம் சுழற்சி.*

A. *விசுவாச விலக்கம் (13:1அ).*

B. *அடக்குமுறைக் கொடுமை: பெலிஸ்தர்கள் (13:1ஆ).*

C. *விடுதலையாளர்: சிம்சோன் (13:2-16:31).*

*பிற்சேர்க்கை: ஒழுக்கச் சூழ்நிலை (17-21).*

***ரூத்தின் சரித்திரம் என்ற புத்தகத்தின் வரைகுறிப்பு***

*பிரசங்க வரைகுறிப்பில் காணவும்.*

***நியாயாதிபதிகள் மற்றும் ரூத்தின் சரித்திரம் என்ற புத்தகங்களில் இருந்து பாடங்கள்***

*மனிதன் தேவனுடைய வழியைப் பின்பற்றுவதற்குப் பதிலாகத் தனது சொந்த வழியைப் பின்பற்றும்போது, குழப்பமே விளைகிறது. தேவன் தமது மக்களின் மத்தியில் பாவத்தை சகித்துக்கொண்டிருப்பதில்லை. நம்மைத் தட்டியெழுப்புவதற்காகத் தேவன் நம்மீது தண்டனையை அனுப்பலாம். நாம் மனந்திரும்பினால், தேவன் நம்மைத் திரும்பவும் ஏற்றுக்கொள்வார்.*

*நாம் நமது பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். நாம் தவறினால், ஒரு தலைமுறையிலேயே சபையானது இழந்து போகப்படக்கூடும் (நியாயாபதிகள் 2:10-13ஐக் காணவும்).*

*நாம் உலகத்தில் மோசமான நிலையைக் கொண்டிருந்தாலும், நகோமி, ரூத், மற்றும் போவாசு ஆகியோர் செய்ததைப் போன்று நாமும் நமது தேவனுக்கு உண்மை நிறைந்த வாழ்வை வாழ்ந்து அதன்மூலம் நமது கடமையை நிறைவேற்ற முடியும்.*

*தேவன் உலகத்திற்கு இயேசுவைக் கொண்டுவருதல் என்ற தமது திட்டத்தைத் தொடர்ந்தார் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது!*

## *அன்பின் வரலாறு (ரூத்)*

*நியாயாதிபதிகளின் முரட்டுத்தனமான ஆளுகையைப் பற்றி நாம் வாசித்தபின்பு, இஸ்ரவேல் மக்கள் உண்மையற்றதன்மை, விசுவாசவிலக்கம், மற்றும் ஒழுக்கச் சீர்குலைவு ஆகியவற்றினால் மாத்திரம் நிரப்பப்பட்டிருந்தனர் என்று நாம் நினைக்கத் தலைப்படலாம். ரூத் என்ற அழகிய புத்தகமானது, அமைதியான காட்சிகளில் உண்மை, நற்பண்பு, மற்றும் அன்பு ஆகியவை இன்னமும் தங்கியிருந்தன என்று காண்பிக்கிறது. மிக மோசமான காலங்களிலும்கூட, தேவனுக்கு உண்மைநிறைந்தவர்கள் இருக்கின்றனர்.*

*இந்த அன்பின் வரலாறு உண்மையில் அன்பின் மூன்று வரலாறுகளாக உள்ளது. இவற்றில் முதல் இரண்டு ரூத்தை மையமாகக் கொண்டுள்ளன: நகோமியின்மீது ரூத்தின் அன்பு மற்றும் ரூத் மற்றும் போவாசு ஆகியோரின் அன்பு. மூன்றாவது அன்பின் வரலாறு குறைவான தெளிவுடையதாக உள்ளது, ஆனால் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இவ்வரலாற்றை*

நாம் திரும்பவும் கூறுகையில் இதை உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா என்று பாருங்கள்.

I. ரூத்தும் நகோமியும் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பு.

A. பலஸ்தீன நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக, எலிமெலேக்கும் நகோமியும், தங்கள் இரண்டு மகன்களுடன் மோவாபிய நாட்டிற்குச் சென்றனர். அங்கு, அவர்கள்மீது துன்பத்தின் மேல் துன்பமாக விழுகிறது. எலிமெலேக்கு மரிக்கின்றார். மகன்கள் மோவாபியப் பெண்களான ஓர்ப்பாள் மற்றும் ரூத் என்பவர்களைத் திருமணம் செய்துகொள்கின்றனர். இரண்டு மகன்களும் மரிக்கின்றனர் (1:3-5, 13, 20, 21).

B. யூதேயாவில் நிலைமை இப்போது மேன்மையானது என்பதை அறிந்த நகோமி, இல்லம் திரும்ப முடிவு செய்கின்றாள். அவளது மருமகள்களும் அவளுடன் நாட்டு எல்லை வரையிலும் செல்லுகின்றனர். நகோமியின் வற்புறுத்தலினால், ஓர்ப்பாள் திரும்பிச் செல்லுகின்றாள் (1:8-10, 14), ஆனால் ரூத்தோ நகோமியைவிட்டுச் செல்வதற்கு மறுத்து விடுகின்றாள் (1:15-17).

1. ரூத் 1:16, 17ல் உள்ளவை, ஒப்புக்கொடுத்தலுக்கென்று வேதாகமத்தில் உள்ள மாபெரும் கூற்றுக்களில் ஒன்றாக உள்ளது. அன்பு என்பது ஒருவர், மற்றொருவரின் மகிழ்ச்சிக்காகத் தன்னையே தியாகம் செய்தலாக உள்ளது.

2. நாம் நமது துணைவர்களிடம்/துணைவியர்களிடம் இவ்வகையான ஒப்புக்கொடுத்தலை ஏற்படுத்துதல் அவசியமாய் இருக்கிறது. நாம் கர்த்தரிடத்திலும் இவ்வகையான ஒப்புக்கொடுத்தலை ஏற்படுத்துதல் அவசியமாய் இருக்கிறது.

II. ரூத்தும் போவாசும் ஒருவர் மற்றவர்மீது கொண்டிருந்த அன்பு.

A. ரூத் தனக்கும் நகோமிக்கும் பிழைப்பு உண்டாகும்படிக்கு வயல்களில் கோதுமையைப் பொறுக்கினாள் (லேவியராகமம் 23:22ஐக் கவனிக்கவும்). அவள் அவ்வாறு கோதுமையைப் பொறுக்கிக் கொண்டிருந்தபோது, உறவினனான போவாசு வயலுக்கு வருகின்றார் (2:1, 4) மற்றும் அவர் அவளது அன்பின் தியாகம் அறியப்பட்டது என்று வெளிப்படுத்துகின்றார் (2:11, 12). போவாசு ரூத்தின் செய்கையால் மனம் கவரப்படுகின்றார் (2:5, 6) மற்றும் அவர் அவளிடம் தனது வேலைக்காரர்களுடன் கோதுமையைப் பொறுக்கிக்கொள்ளுவதில் சுதந்திரமாய்ச் செயல்படும்படி அவளிடம் கூறுகின்றார். அன்று இரவில் அவள் ஒரு எப்பா (மூன்றுபடி) அளவு வாற்கோதுமையை - இது பல நாட்களுக்குப் போதுமானது சேர்த்திருந்தாள்.

B. நகோமி, போவாசு நெருங்கிய உறவினன் என்பதைக் கவனிக்கின்றாள் (2:19, 20) மற்றும் "இது நல்லது" என்று கூறுகின்றாள் (2:22). மரணம் அடைந்தவரின் நெருங்கிய உறவினர், மரணம் அடைந்தவரின் உடைமைகளை மீட்டுக்கொள்ளும் உரிமையையும், (லேவியராகமம் 25:25) மரணம் அடைந்தவரின் பெயரில் பிள்ளைகளைப் பெற்றுவளர்க்கும் உரிமையையும் (மத்தேயு

*22:24ஐக் காணவும்) நியாயப்பிரமாணம் அளித்திருந்தது.*

C. *போவாசு ரூத்தின்மீது தனது பிரியத்தைக் காண்பிக்கின்றார், ஆனால் அவர் அவளைவிட முதியவராய் இருந்தபடியால் தமது திருமண உறவை அவளிடம் வலியுறுத்தவில்லை. நகோமி, காலம் மற்றும் இடத்தின் பழக்க வழக்கங்களை அறிந்தவளாக, ரூத் ஆர்வ மாய் இருப்பதைப் போவாசிடம் கூறுவது எப்படி என்று அவளுக்குக் கூறுகின்றாள்.*

1. *ரூத் போவாசின் பாதங்களின் கீழ் இருக்கின்றாள் (3:9, 10). போவாசு மன எழுச்சியடைகின்றார்! காரியங்கள் செயல்படும் என்பதை நகோமி அறிகின்றாள் (3:18).*
2. *போவாசும் (முதல் உரிமையைக் கொண்டிருந்த இன்னொரு) உறவினனும் (4:1, 3-6, 8) சந்திக்கின்றனர். பாதரட்சையைக் கழற்றிப்போடும் சடங்கு பெறுகிறது (உபாகமம் 25:9முதல்.).*

D. *போவாசும் ரூத்தும் திருமணம் செய்துகொள்கின்றனர், ஒரு மகன் பிறக்கின்றான் (4:13).*

III. *இஸ்ரவேல் மக்கள் மற்றும் நம்மீது தேவனுடைய அன்பு.*

A. *தேவன் தம் மக்கள்மீது கொண்ட அன்பு என்பது மிகக்குறைவாய் வெளிப்படுத்தப்பட்ட வரலாறாக இதில் உள்ளது.*

1. *தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பதற்கு இப்புத்த கத்தில் பல குறிப்புகள் இருக்கின்றன என்பதைக் கவனியுங்கள் (1:6, 8, 9, 17, 20, 21; 2:4, 12; 4:11-14). நாம் நகோமியின் இறையியல்மீது (1:20, 21) வாக்குவாதம் செய்யலாம், ஆனால் அவளது விசுவாசத்தின்மீது வாக்குவாதம் செய்ய இயலாது.*
2. *தேவன் இந்த வரலாற்றை வேதாகமத்தில் உள்ளடக்கியது ஏன்?*
   a. *ஏனென்றால் அன்பு என்பது ஒரு அழகுமிக்க விஷயமாக உள்ளது.*
   b. *அவர் மனிதருக்கென்று தாம் கொண்டுள்ள திட்டத்தைச் செயல்படுத்துவதைக் காட்டுவதற்காக இதை உள்ளடக்கி னார். இங்கு தேவன், தாவீது அரசர் வரக்கூடிய வம்ச வழியை நிலை நாட்டினார் (4:17)!*

B. *ரூத்தின் சரித்திரமானது, இஸ்ரவேல்மீது தேவன் கொண்ட அன்பையும் நம்மீது தேவன் கொண்டுள்ள அன்பையும் காண் பிக்கிறது.*

1. *காலங்கள் எப்படியிருப்பினும், தேவன் இன்னமும் தமது அன்பைக் காண்பிப்பார்: என்று இப்புத்தகம் இஸ்ரவேல் மக்களுக்குக் கூறிற்று.*
   a. *அவர் தம்மீது விசுவாசம் கொண்டிருந்த சாதாரண மக்களின் வாழ்வில் செயல்பட்டுக்கொண்டிருந்தார்.*
   b. *அவர் இஸ்ரவேல் மக்களினத்திற்குத் தாவீது அரசரைக் கொடுப்பதற்காக அவர்களிடத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தார்.*
2. *இப்புத்தகம் நமக்கும் சிலவற்றை உரைக்கிறது: காலங்கள்*

எப்படி இருப்பினும், தேவன் எப்போதும் தமது அன்பைக் காண்பிப்பார்.

a. தேவன் மக்கள்மீது பொதுவில் தமது அன்பைக் காண்பிக்கின்றார். தாவீதின் வம்சவழியானது நிறைவாகக் கிறிஸ்துவைக் கொண்டுவந்தது (மத்தேயு 1:15, 16)!

b. தேவன் நம்மீது கொண்டுள்ள அன்பை, நாம் வாழ்கின்ற ஒவ்வொரு நாளிலும் குறிப்பாகக் காண்பிக்கின்றார்!

*முடிவுரை*

A. ரூத் நகோமியின்மீது அன்புகூர்ந்தாள், ஆனால் நகோமியும் ரூத்தின் மீது அன்புகூர்ந்தாள்.

B. போவாசு ரூத்தின்மீது அன்புகூர்ந்தார், ஆனால் ரூத்தும் போவாசு மீது அன்புகூர்ந்தாள்.

C. தேவன் நம்மீது அன்புகூருகின்றார்.

D. அன்பு என்பது ஒரு பக்கம் மாத்திரமே உள்ளது என்றால் அது கவலைப்படக் கூடியதாக இருக்காதா (1 யோவான் 5:2, 3)?

# 8

# 1 சாமுவேல்: ராஜ்யம் நிலைநாட்டப்படுதல்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *1-4, 7-13, 15-18, 20, 21, 23-25, 27, 28, 31.*

***தலைப்பு***

*1 சாமுவேல் என்ற இப்புத்தகம், கடைசி நியாயாதிபதியும், ராஜாக்களை ஏற்படுத்திய மாபெரும் மனிதருமான சாமுவேலின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது (இவர் இஸ்ரவேலின் முதல் இரு அரசர்களான: சவுல் மற்றும் தாவீது ஆகியோரை அபிஷேகம் பண்ணினார்). தொடக்கத்தில் 1 மற்றும் 2 சாமுவேல் என்ற புத்தகங்கள் ஒரு புத்தகமாகவே இருந்தது, இது 1 இராஜாக்கள் என்று அழைக்கப்பட்டது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் செப்துவஜிந்த் மொழி பெயர்ப்பு உண்டாக்கப்பட்டபோது, இப்புத்தகங்கள் பிரிக்கப்பட்டன. "சாமுவேல்" என்றால் "தேவனிடத்தில் கேட்கப்பட்டவர்" என்று அர்த்தமாகும் (1:20).*

***பின்னணி***

*இப்புத்தகம், நியாயாதிபதிகளின் ஆட்சியில் இருந்து ராஜாக்களின் ஆளுகைக்கு மாறுதல் பற்றி கூறுகிறது. பிரதான ஆசாரியரான ஏலி, சாமுவேல் ஆகிய இருவருமே நியாயாதிபதிகளாக இருந்தனர் (4:18; 7:15). சாமுவேல் ஒரு மாபெரும் மனிதராய் இருந்தார். அவர் ஒரு ஆசாரியராகவும் நியாயாதிபதி யாகவும் இருந்ததுடன் கூடுதலாக, முதன்முதலான வாய் மொழித்தீர்க்கதரிசி என்றும் அறியப்பட்டு இருந்தார் (3:20, 21; 4:1அ).*

*இருப்பினும், மக்கள் தங்களைச் சுற்றிலும் இருந்த மற்ற இனத்தவர்கள் கொண்டிருந்ததுபோலத் தங்களுக்கும் ஒரு அரசன் வேண்டும் என்று விரும்பினர் (8:5). இது சாமுவேலையும் (தேவபக்தியற்ற அவரது மகன்களையும்) புறக்கணித்தல் என்பதைவிட தேவனுடைய ராஜரீகத்தையே அதிகமாய்ப் புறக்கணித்தலாக இருந்தது (8:7). மக்கள் பூமிக்குரிய அரசரைக் கொண்டிருத்தலில் உண்டாகும் விளைவுகள் பற்றி எச்சரிக்கப்பட்டனர், ஆனாலும் அவர்கள் இன்னமும் தங்களுக்கு ஒரு அரசன் வேண்டுமென்று கூக்குரலிட்டனர் (8:10-22). அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்ததைத் தேவன் அவர்களுக்குத் தந்து அருளினார்.*

*இப்புத்தகத்தின் பெரும்பகுதியானது, சமஸ்த இஸ்ரவேல்மீதும் முதல் அரசராக, சாமுவேலினால் அபிஷேகம் செய்விக்கப்பட்ட சவுலைப் பற்றிக் கூறுகிறது. தொடக்கத்தில் சவுல், ஒரு தாழ்மையான இளைஞராகவே இருந்தார், ஆனால் விரைவிலேயே அவர் தேவனுடைய கட்டளைகளைப் பொறுத்தமட்டிலும்கூட, தாம் விரும்பியபடியெல்லாம் செய்யலாம் என்ற உணர்வுகொண்ட மேட்டிமைநிறைந்த ஆட்சியாளர் ஆனார். தேவன் அவரை ஒரு ராஜாவாக இராதபடிப் புறக்கணித்தார், மற்றும் அடுத்த அரசராய் இருக்கும்படி எதிர்பார்க்கப்பட்ட தாவீது என்ற இளைஞர், சாமுவேலினால் அபிஷேகம் செய்விக்கப்பட்டார். இப்புத்தகத்தின் கடைசிப் பகுதியானது தாவீதின்*

எழுச்சி மற்றும் சவுலின் வீழ்ச்சி ஆகியவற்றைப் பற்றிப் கூறுகிறது. (தாவீதின் சங்கீதங்களில் பெரும்பான்மையானவை அனேகமாக இந்த இடர்ப்பாடு மிக்க வேளையில் எழுதப்பட்டிருக்கலாம்; சங்கீதம் 37ஐக் கவனிக்கவும்.) இப்புத்தகம் சவுலின் தற்கொலை பற்றிய கவலைமிக்க குறிப்புடன் முடிகிறது.

இந்தத் தொகுதியின் பெரும்பான்மையான பகுதியை அனேகமாக சாமுவேல் எழுதியிருக்கலாம் (10:25; 1 நாளாகமம் 29:29 ஆகியவற்றைக் கவனிக்கவும்). அவர் எழுதியிருந்தார் என்றால், அவரது மரணத்திற்குப் பிந்திய பகுதியானது (25:1) வேறு யாரேனும் ஒருவரால், அனேகமாக தீர்க்கதரிசிகளான நாத்தான் மற்றும் காத் ஆகியோரால் (1 நாளாகமம் 29:29) எழுதப்பட்டிருந்தது.

**வரைகுறிப்பு**

I. ராஜாக்களை ஏற்படுத்திய மாமனிதர்: சாமுவேல் (1-8).
  A. சாமுவேலின் தொடக்ககால வாழ்வு (1-3).
    1. சாமுவேலின் பிறப்பு (1:1-2:11).
    2. சாமுவேலின் வளர்ச்சியும் அதனுடன் முரண்பட்ட ஏலியின் தோல்வியும் (2:12-36).
    3. சாமுவேலின் தீர்க்கதரிசன அழைப்பு (3).
  B. இன்னொரு சுழற்சி (4-7).
    1. பெலிஸ்தர்களின் அடக்குமுறை (4:1-7:2).
    2. மனந்திரும்புதலும் விடுதலையும் (7:3-17). சாமுவேல் நியாயாதிபதியாய் இருக்கின்றார்.
  C. சாமுவேல் புறக்கணிக்கப்படுகின்றார்; மக்கள் ஒரு அரசர் வேண்டுமென்று விரும்புகின்றனர் (8).

II. சமஸ்த இஸ்ரவேல் நாடு முழுவதற்கும் முதல் அரசர்: சவுல் (9-31).
  A. சவுல் அபிஷேகிக்கப்படுகின்றார் மற்றும் சாமுவேல் புறக்கணிக்கப்படுகின்றார் (9-12).
  B. சவுலின் வீழ்ச்சி (13-15).
  C. தாவீதின் எழுச்சி (16:1-18:9).
  D. தாவீது துன்புறுத்தப்படுதல் (18:10-27:12) மற்றும் சாமுவேலின் மரணம் (25:1).
  E. சவுலின் கடைசிநாட்களும் மரணமும் (28-31).

***1 சாமுவேல் புத்தகத்தில் இருந்து பாடங்கள்***

ஒரு நல்ல மனிதராகவும் அதேவேளையில் ஒரு மோசமான தந்தையாகவும் இருப்பதற்குச் சாத்தியமுள்ளது. இதற்கு ஏலி ஒரு உதாரணமாக இருக்கின்றார் (2:12, 17, 22). அவர் தமது மகன்கள் செய்து கொண்டிருந்தவற்றைக் கவனிக்கவில்லை. அவர்களின் செயல்கள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு அவர் மிகவும் காலம் தாழ்த்தினார். அவர்களை அவர் ஒழுங்குபடுத்த முயற்சி செய்தபோது, அவர் போதிய அளவுக்கு உறுதி வாய்ந்தவராக இருக்கவில்லை (3:13). சாமுவேல் இன்னொரு உதாரணமாக இருக்கின்றார் (8:2, 3). அவர் அனேகமாகத் தமக்குத் தாமே நற்செயல்களைச் செய்வதில் பணிமும்முரமாயிருந்து, அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தனர் என்பதைக் கவனிக்க இயலாமற்போய், தமது பிள்ளைகளை இழந்து போயிருக்கலாம்.

*சவுல் "தன்னையே முட்டாளாக்கிக்கொண்ட மனிதனுக்கு" மிகச் சிறந்த உதாரணமாக உள்ளார் (26:21). அவர் குறைந்தபட்சம் சாவுக்கேதுவான ஆறு தவறுகளைச் செய்தார்: பொறுமையின்மை (13), அவசரம் (14), சுயசித்தம் (15), பொறாமை (18:8, 9), கடைசியும் நிறைவுமான கீழ்ப்படியாமை (28), மற்றும் தற்கொலை (31:4). உண்மையான மனம் வருந்துதலும் வாழ்வில் மாற்றமும் இன்றி, "நான் பாவம் செய்தேன்," என்று கூறுவது ஒரு மனிதருக்குச் சாத்திய மாகவே உள்ளது (26:21).*

*தேவன் மனிதரின் வெளித்தோற்றத்தையல்ல, ஆனால் இருதயத்தைப் பார்க்கின்றார் (16:7). ஒரு ஊழியக்காரன் "தம்முடைய (தேவனுடைய) இருதயத்திற்கு ஏற்ற மனிதராய்" இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (13:14; நடபடிகள் 13:22ஐக் காணவும்).*

*இயேசு புதிய ஏற்பாட்டில், கிறிஸ்து என்று அழைக்கப்படுகின்றார். "கிறிஸ்து" என்பது "அபிஷேகம்பெற்ற ஒருவர்" என்பதற்கான கிரேக்கச் சொல்லாகும். "மேசியா" என்பது "அபிஷேகம்பெற்றவர்" என்பதற்கான பழைய ஏற்பாட்டுச் சொல்லாகும்; இவ்வார்த்தை 2:10ல் முதன்முதலாகக் காணப்படுகிறது. ஆசாரியர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளைப் பிரதிஷ்டை செய்வதற்கு/பணிய மர்த்துவதற்கு அபிஷேகம் பயன்படுத்தப்பட்டது, ஆனால் அபிஷேகம் செய்யப்படுதலினால் அரசர்கள் தனிப்படப் பிரித்துவைக்கப்பட்டனர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது (10:1; 16:13). சவுல், "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று அழைக்கப்பட்டார் (24:6; 26:9, 11), இது "கர்த்தருடைய மேசியா" என்ற நேரடி அர்த்தம் உடையதாகும். யூதர்கள் மேசியாவை எதிர்நோக்கியிருந்தபோது அவர் வேறு எப்படியிருப்பதைக் காட்டிலும் அதிகமாக, ஒரு அரசராய் இருக்க வேண்டும் என்றே எதிர் பார்த்தனர்.*

## *ராட்சதர்களுடன் போரிடுதல் பற்றி நினைவில் வைக்க வேண்டிய ஏழு விஷயங்கள் (1 சாமுவேல் 17)*

*நாம் யாவருமே நமது வாழ்வில் எதிர்கொள்ள வேண்டிய ராட்சதர்களைக் கொண்டுள்ளோம்: மக்கள், வற்புறுத்துதல்கள், கவலைகள் மற்றும் பயங்கள். எனக்கு ராட்சதனாக இருப்பது உங்களுக்கு ராட்சதனாகக் காணப்படாதிருக் கலாம், ஆனால் அது இன்னமும் எனக்கு மிக உண்மையானதாகவே உள்ளது - அது எதிர்கொள்ளப்பட வேண்டும்.*

*வாழ்வின் கோலியாத்துகளை நாம் எவ்வாறு தோல்வியுறச் செய்ய முடியும்? 1 சாமுவேல் 17ல், நாம் ராட்சதர்களுடன் போரிடுதல் பற்றி நினைவில் வைக்க வேண்டிய ஏழு விஷயங்களைக் காண்கிறோம்.*

I. *ராட்சதர்களை நீங்கள் எதிர்பாராமல் இருக்கும்பொழுது அவர்கள் தோன்றுகின்றார்கள்.*
   A. *தாவீது ராட்சதர்களுடன் போராடுவதற்காக அல்ல, ஆனால் தமது சகோதரர்களைக் காண்பதற்காகவே வந்தார்.*
      1. *கோலியாத், இஸ்ரவேல் மக்களின் படைக்கு அறைகூவல் விடுக்கின்றான் (17:1-11, 16).*
      2. *தாவீது தமது சகோதரர்களை நலம் விசாரிக்கும்படி அனுப்பப்*

படுகின்றார் (17:12-19).

3. தாவீது அங்கு சென்றபோது, அவர் கோலியாத்தைக் காணு கின்றார் (17:20-23).

B. நீங்கள் பின்வரும் கருத்தை நிச்சயப்படுத்த முடியும்: விரைவிலோ அல்லது தாமதமாகவோ, நீங்கள் உங்கள் ராட்சதனை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

II. நீங்கள் ராட்சதர்களைப் பயத்துடனோ அல்லது விசுவாசத்துடனோ எதிர் கொள்ளமுடியும்.

A. படைவீரர்களுக்கும் தாவீதுக்கும் இடையில் இருந்த நேரெதிரான இயல்பைக் கவனியுங்கள்.

1. இஸ்ரவேலின் மனிதர்கள் பயமடைந்திருந்தனர் (17:24).
2. தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டதால் தாவீது சினமுற்றி ருந்தார். மாபெரும் ஊக்கப் பரிசுகள் வாக்களிக்கப்பட்டன, ஆனால் தாவீது அந்தபலன்களின்மீது ஆர்வம் கொண்டிருக்க வில்லை; அவர் தமது தேவனுடைய கனம் பற்றிக் கவலையாய் இருந்தார் (17:25-27).

B. நாம் நமது வாழ்வில் ராட்சதர்களால் மூழ்கடிக்கப்படக் கூடும் - அல்லது அவர்களை நாம் தேவனை மகிமைப்படுத்துவதற்கான வாய்ப்பாகக் காணக்கூடும்.

III. உங்களை உற்சாகமிழக்கச் செய்வதற்கு யாரேனும் ஒருவர் எப்பொழுதும் தயாராக இருப்பார்.

A. பல மனிதர்கள் தாவீதைக் கீழே நிறுத்த (தடைசெய்ய) முயற் சித்தனர்.

1. தாவீதின் சகோதரன் (17:28, 30).
2. சவுல் (17:31-37).
3. கோலியாத் (17:43).

B. "உங்களால் அதைச் செய்ய முடியாது" என்று மக்கள் கூறினால், திகைப்படைய வேண்டாம்!

IV. உங்கள் ராட்சதர்களை நீங்கள் சந்திக்கும் முன்பாகவே நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

A. கோலியாத் காணப்பட்டபோது, தாவீது தயாராக இருந்தார். அவர் ஆயத்தம் செய்திருந்தார்:

1. சிங்கங்களுடனும் கரடிகளுடனும் போராடியிருந்தார் (17:34-36).
2. மேய்ப்பனின் வயலில் தனிமையில் தமது விசுவாசத்தை மேம் படுத்தியிருந்தார் (17:37; 16ம் அதிகாரத்தைக் காணவும்).

B. வாழ்வின் சிறு பிரச்சனைகளைச் சந்திப்பதன்மூலம் - தேவனுடைய உதவியுடன் - நீங்கள் வாழ்வின் பெரிய பிரச்சனைகளைச் சந்திக்கத் தயாராகின்றீர்கள்.

V. உங்களால் இயன்ற அளவு சிறப்பாகத் தயார்செய்துகொண்டு; பின்பு தேவனைச் சார்ந்திருங்கள்.

A. தாவீது தம்மீது அல்ல, ஆனால் தேவன்மீதே நம்பிக்கை வைத்தி ருந்தார்.

1. அவர் தமது பயிற்சியின்மீது நம்பிக்கை கொண்டிருந்தார் (17:38, 39).
2. அவர் தமது கருவிகள்மீது நம்பிக்கை கொண்டிருந்தார் (17:40).
3. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் தேவன்மீது நம்பிக்கை வைத்திருந்தார்.
    a. கோலியாத்தின் அறைகூவல் (17:41-44).
    b. நம்பிக்கை பற்றி தாவீதின் மாபெரும் சொல்விளக்கம் (17:45-47).

B. விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ நீங்கள் தனியே நின்று வெற்றி கொள்ள இயலாத ஒரு ராட்சதனை நீங்கள் எதிர்கொள்வீர்கள். தேவனுடனான உங்கள் உறவைச் செயல்படுத்துங்கள்.

VI. நீங்கள் ராட்சதர்களைக் கொண்டிருந்தால், உடனடியாக எதிர்த்து நில்லுங்கள்.

A. தாவீது கோலியாத்தைச் சந்திப்பதற்கு ஓடினார் (17:48), மற்றும் வெற்றி அவருடையதாக இருந்தது (17:49-51)!

B. உங்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ளுவதை நீங்கள் எவ்வளவு அதிகம் தள்ளிப் போடுகின்றீர்களோ, அவ்வளவுக்கு அவைகள் பெரிதாகின்றன.

VII. ஒரு வெற்றி இன்னொரு வெற்றிக்கு ஆயத்தம் செய்கிறது.

A. தாவீதின் வெற்றி மற்றவர்களுக்கு - மற்றும் அவருக்கேகூட உதவிற்று.
1. இஸ்ரவேல் மக்களின் படை அதன்பின்பு தைரியத்தால் நிரம்பிற்று (17:51-53).
2. இப்போது தாவீது, பிந்திய யுத்தங்களுக்காகத் தமது விசுவாசத்தைப் பெலப்படுத்தும் அனுபவம் கொண்டிருந்தார் (17:54).

B. ஒரு யுத்தத்தை வெற்றிகொள்ள உங்களுக்குத் தேவன் உதவுகின்ற ஒவ்வொரு முறையும், பின்வரும் சத்தியத்தை உங்கள் இருதயத்தில் செதுக்கி வையுங்கள். எதிர்கால யுத்தங்களில் (இதைவிட) அதிகமான பெலத்தை உங்களுக்கு வேறெதுவும் தராது!

முடிவுரை

உங்கள் வாழ்வில் நீங்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ளுகையில், நீங்கள் பலத்திற்காகத் தேவனைச் சார்ந்திருக்க முடியும். உங்கள் போராட்டங்களை எதிர்கொண்டு அவற்றை மேற்கொள்ளும்படிக்கு நீங்கள் தயாராயிருப்பதற்கு அன்றாடம் உங்கள் விசுவாசத்தைக் கட்டியெழுப்புங்கள். ஒவ்வொரு வெற்றியும் உங்களை அடுத்த போராட்டத்திற்குப் பெலப்படுத்தும்.

# 9

# 2 சாமுவேல்:

# தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதர்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:** 1-7, 9-20, 23, 24.*

***தலைப்பு***

*2 சாமுவேல் என்ற இப்புத்தகத்தில் சாமுவேல் காணப்படாத போதிலும், தொடக்கத்தில் 1 மற்றும் 2 சாமுவேல் புத்தகங்கள் ஒரே புத்தகமாய் இருந்ததால், இது அவரது பெயரைத் தாங்கியுள்ளது (1 சாமுவேல் புத்தகம் பற்றிய குறிப்புகளில் காணவும்).*

***பின்னணி***

*2 சாமுவேல் புத்தகம் தாவீதின் ஆட்சியைப் பற்றியதாக உள்ளது. தாவீது நாற்பது ஆண்டுகள் ஆட்சிசெய்தார், ஆனால் இவற்றில் முப்பத்து மூன்று ஆண்டுகள் மாத்திரமே சமஸ்த இஸ்ரவேல்மீதும் ஆட்சிசெய்தார்; முதல் ஏழு ஆண்டுகளும் ஆறுமாதங்களும், அவர் யூதாவின்மீது மாத்திரம் ஆட்சி செய்தார் (5:4, 5). இந்தப் பிரிவினையானது, சாலொமோனுடைய மரணத்திற்குப் பின்பு நாடு பிரிந்த ராஜ்யமாக உடைபடும்வரையிலும் தொடர்ந்து நிலவிவந்தது.*

*தாவீதின் ஆளுகையானது நிறைவாக, மற்ற எல்லா ஆளுகைகளும் அளக்கப்படுவதற்கான அளவு தொகையாயிற்று (1 இராஜாக்கள் 15:3; முதலியன.). எருசலேமில் தலைநகரத்தை நிலைநாட்டுதல் என்பது தாவீதின் சாதனைகளில் ஒன்றாக இருந்தது (5:6-10), அந்த நகரம் பெரும்பான்மையான இஸ்ரவேல் மக்களின் சிந்தைகளில், அவர்களின் தேவபக்திக்கு/மதத்திற்கு மையமாயிற்று.*

*வேதாகமம் மனிதர்களிடத்தில் இருந்தல்ல, ஆனால் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளது என்பதற்கு, அதன் மாபெரும் பாத்திரங்கள் பற்றிய அதன் திறந்த தன்மை ஒரு ஆதாரமாக உள்ளது. தாவீதின் பாவங்கள் மூடி மறைக்கப்பட்டு இருப்பதில்லை. தாவீது பூரணமானவர் என்பதால் அல்ல, ஆனால் அவர் மனந்திரும்பி தேவனிடம் திரும்ப மனவிருப்பம் கொண்டிருந்ததாலேயே, அவர் "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராக" இருந்தார் (சங்கீதம் 32 மற்றும் 51 ஆகியவற்றைக் காணவும்).*

*நாத்தான் மற்றும் காத் என்பவர்கள் இப்புத்தகத்தை எழுதியிருக்கச் சாத்தியக்கூறுள்ளது (1 சாமுவேல் புத்தகத்திற்கான குறிப்புகளில் காணவும்).*

***வரைகுறிப்பு***

I. *தாவீதின் புகழ் (1-10).*
   A. *சவுலின் மரணம் குறித்துத் தாவீதின் புலம்பல் (1).*
   B. *தாவீது யூதாவின்மீது மாத்திரம் அரசராக ஏற்படுத்தப்படுதல் (2:1-11).*

C. *உள்நாட்டு யுத்தத்தின் காலம் (2:12-4:12).*
D. *தாவீது சமஸ்த இஸ்ரவேல்மீதும் அரசராக ஏற்படுத்தப்படுதல்; அவர் அற்புதமான வகையில் ஆட்சி செய்கிறார் (5, 6).*
E. *என்றென்றைக்கும் இருக்கும் ராஜ்யம் பற்றி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை (7).*
F. *தாவீதின் ஆட்சியில் உச்சக் கட்டம் (8-10).*

II. *தாவீதின் வெட்கக்கேடு (11-24).*
A. *தாவீது பத்சேபாளுடன் பாவம் செய்தல் (11).*
B. *தாவீதின் மனந்திரும்புதல் (12:1-14).*
C. *பட்டயம் அவர் வீட்டை விட்டு நீங்காதிருத்தல் (12:15-18:33).*
1. *பிள்ளையின் மரணம் (12:15-25).*
2. *தாமார் கற்பழிக்கப்படுதல் (13:1-22).*
3. *அப்சலோம் அம்மோன்மீது பழி வாங்குதல் (13:23-29).*
4. *அப்சலோமின் கலகம் (14-17).*
5. *அப்சலோம் கொல்லப்படுதல் (18).*

D. *தாவீதின் கடைசி நாட்கள்: கலக்கம் அடைதல், ஆனாலும் வெற்றி கொள்ளுதல் (19-24).*
1. *தாவீது எருசலேமில் மீண்டும் நிலைநாட்டப்படுதல் (19).*
2. *மீண்டும் உள்நாட்டு யுத்தம் (20).*
3. *பஞ்சமும் யுத்தமும் (21).*
4. *நன்றி செலுத்தலின் சங்கீதம் (22).*
5. *தாவீதின் கடைசி வார்த்தைகள் (23).*
6. *ஜனத்தொகைக் கணக்கெடுத்தல் என்ற பாவமும் கொள்ளை நோயும் (24).*

***2 சாமுவேல் புத்தகத்தில் இருந்து பாடங்கள்***

*தாவீதின் வாழ்வு, பாவத்தின் விளைவின்மீதான மாபெரும் கருத்து நோக்கப் பாடமாக உள்ளது. கலாத்தியர் 6:7, 8ன் சத்தியமானது இந்த அண்டத்தின் பின்னலுக்குள் எழுதப்பட்டுள்ளது: "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்." ஒருவர் மனந்திரும்பி, அவரது பாவக்குற்றம் நீக்கப்பட்டாலும்கூட, பாவத்தின் விளைவு இன்னும் உள்ளது. அறுபது நிமிட நடவடிக்கையானது அறுபது ஆண்டுகள் வாழ்வை நிர்மூலமாக்கக்கூடும். இளம் மக்களே, முதிய மக்களே பாவத்தில் இருந்து விலகியிருங்கள்! பாவம் பயங்கரமானதாக உள்ளது!*

*யாரேனும் ஒருவர் எப்போதும் நமக்கு மோசமான ஆலோசனைகளைக் கொடுப்பதற்கென்று இருக்கின்றார் (13:3-5).*

*வஞ்சகமான ஆண்கள், பெண்ணிடம் "நீ உண்மையிலேயே என்னை நேசித்தால், என்னுடன் நீ படுத்துக்கொள்வாய்" என்று கூறுகின்றனர். அவர்கள் தாங்கள் விரும்பியதைப் பெற்ற பின்பு, அவர்களின் "அன்பு" என்பது பொதுவாக வெறுப்பாக மாறுகிறது (13:1, 15).*

*தாவீது தமது மகனைப் பற்றி, "அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பி வரப் பண்ணக்கூடுமோ?" என்று கேட்கும் 12:23ம் வசனமும், எபூசியனாகிய அர்வனாவிடத்தில் தாவீது, "நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தாமல்" என்று கூறும் 24:24ம் வசனமும் சிந்தனையைத் தூண்டும் இரண்டு வசனங்களாக உள்ளன.*

*2 சாமுவேல் 7, வேதாகமத்தில் உள்ள மாபெரும் அதிகாரங்களில் ஒன்றாகும், அதில் நாம் தாவீதுடன் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையானது, ஒரு பகுதி சாலொமோன் மற்றும் யூதாவின் அரசர்களில் நிறைவேறிற்று (1 நாளாகமம் 22:6-10; 28:3-6), ஆனால் இது இயேசு கிறிஸ்துவின் வருகையில் முற்றிலுமாக நிறைவேறிற்று (எபிரெயர் 1:1-8).*

---

## *இளம்பிராயத்துக் கலகக்காரன் (2 சாமுவேல் 13-18)*

*தாவீதை அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடிய நிலையில், "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே" என்று அழுவதைச் சித்தரித்துப் பாருங்கள் (2 சாமுவேல் 18:33). தாவீது இவ்வளவு அதிகமாய் அன்பு செலுத்திய இந்த இளைஞனை நாம் கண்ணோக்குவோம்.*

I. *நல்ல எதிர்காலத்தைக் கொண்டிருந்த ஒரு இளைஞன்.*

  A. *நமது வரலாறு, அப்சலோம் இளைஞனாக, ஒருவேளை இன்னும் தனது விடலைப்பருவத்தில் இருக்கையில் தொடங்குகிறது.*

    1. *நமது உலகம் இன்றைய நாட்களில் இளமையாக உள்ளது. நமது மக்கள்தொகையில் மிக உயர்ந்த சதவிகிதம் இளைஞர்களாக உள்ளது - மற்றும் எஞ்சியுள்ள நாம் இளைஞர்களாய் இருப்பது போன்று நடிக்க முயற்சி செய்கின்றோம்.*
    2. *இளம்பிராயம் என்பது அற்புதமான காலமாக உள்ளது, ஆனால் இது பொறுப்பின் காலமாகவும் உள்ளது.*

  B. *அப்சலோம் இளைஞனாயிருந்தது மட்டுமின்றி; மாபெரும் எதிர்காலத்தையும் கொண்டிருந்தார்.*

    1. *அவர் அரசரின் - தாவீது அரசரின் - மகனாயிருந்தார்.*
    2. *அவர் நல்ல தோற்றம் மற்றும் ஆளுகைத்தன்மை ஆகியவற்றினால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார். அவர் மக்கள் நேசித்த ஒரு மனிதனாக இருந்தார்.*

II. *கலகக்காரர்.*

  A. *அப்சலோமைப் போன்ற சில இளைஞர்களுக்கு, கலகம்* ["rebellion"] *என்பது "நான்காவது" போன்றதாக உள்ளது.*

    1. *பெரும்பான்மையான மனிதர்கள் தங்கள் விடலைப் பருவத்தில் கலகம் விளைவிக்கும் காலகட்டம் ஒன்றினூடே கடந்து செல்கின்றனர், ஆனால் அவர்களின் பெரும்பான்மையானவர்கள் இந்தக் காலகட்டத்தில் சிறிதளவு சேதமே அடைகின்றனர்.*
    2. *இருப்பினும், சில மனிதர்களுக்கு, இந்தக் கலகம் என்பது*

*வாழ்வின் வழியாகிறது, அவர்கள் இதிலிருந்து எவ்வகையிலும் வளர்வதில்லை. அப்சலோம் இவர்களில் ஒருவராக இருந்தார்.*

B. *அப்சலோமின் இருதயம் நேர்மையாக இருக்கவில்லை என்பதே இடர்பாடாக இருந்தது.*

1. *வெளிப்புறத்தில் அவர் அழகியவராய் இருந்தார்; உள்ளேயோ அவர் அழகற்றவராக இருந்தார்.*
2. *அவர் அனேகமாக பத்சேபாளிடத்தில் தாவீது செய்த பாவத்தை சுட்டிக்காட்டியிருக்கலாம் - மற்றும் ஒரு வேளை அவரைத் தாவீது புறக்கணித்திருக்கலாம் - ஆனால் அவர் இன்னமும் தேவனுக்கு முன்பாகத் தமக்காகப் பொறுப்பு ஒப்புவிக்க வேண்டியவராக இருந்தார்.*

C. *அவரது கலகத்தின் சில வெளிப்பாடுகள்:*

1. *அவர் வஞ்சகமானவராக இருந்தார். அவர் தமது தந்தையிடம் ஒரு முகத்தையும் மக்களிடம் வேறொரு முகத்தையும் முன் வைத்தார். அவர் ஆதரவை ஆதாயப்படுத்துவதற்காக குசுகுசுப்பு ஒன்றைத் தொடங்கினார்.*
2. *அவர் தவறான கூட்டத்துடன் சேர்ந்து ஓடினார்.*
   a. *சிலர் தவறான கூட்டத்தால் ஈர்க்கப்பட்டு, பின்பு அதி லேயே நிலைத்து விடுகின்றனர்.*
   b. *கூட்டத்துடன் சென்றுவிடாதபடி இயேசு நமக்கு அறைகூவல் விடுக்கின்றார். இது கடினமானதாக உள்ளது, ஆனால் அவர் உதவ முடியும்.*
3. *அவர் ஒழுக்கமற்றவராக இருந்தார்.*
   a. *அவரது ஒழுக்கவீனத்தின் வரலாறு கீழ்த்தரமானதாக இருக்கிறது.*
   b. *தேவன் உங்களுக்குப் பாலுறவு என்ற கொடையைக் கொடுத்தார்; அதைத் தவறாகப் பயன்படுத்த வேண்டாம்.*
4. *அவர் சுயநலமுள்ளவராக இருந்தார். அவர் அரசராக இருக்க விரும்பிய காரணத்தால் 20,000 பேர்களுக்கும் அதிகமான வர்கள் கொல்லப்பட்டனர். அவர் தம் வழியில் செல்வதற்கு முடிகின்ற வரையில், யார் துன்புற்றார் என்பது பற்றி அவர் அக்கறை கொள்ளாதிருந்தார்.*

D. *அவர் ஓரளவு தேவபக்தியுள்ளவராக இருந்தார், அது மிகவும் கொஞ்சமாக இருந்தது - அது அவரது வாழ்வில் செயல்விளைவை ஏற்படுத்த உண்மையில் போதுமானதாக இருந்ததில்லை - என்பது அவரது பிரச்சனைகளில் ஒன்றாக இருந்தது.*

III. *கடைசியில் நியாயத்தீர்ப்பு வந்தது.*

A. *அவரிடத்தில் தேவன் பொறுமையாய் இருந்தார், ஆனால் அப்ச லோமின்மீது கடைசியில் நியாயத்தீர்ப்பு வந்தது.*

1. *இது இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் ஆகிய அனை வருக்கும் வருகிறது.*

2. *அப்சலோமின் கவலைதரும் மரணம். (அப்சலோமே, அது எந்த அளவுக்குத் தகுதியானதாக இருந்தது?)*

B. *ஒரு கருத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்: அவர்மீது தாவீது கொண்டிருந்த அன்பு, நியாயத்தீர்ப்பு வருவதைத் தடைசெய்ய இயலாததாக இருந்தது.*

1. *நாம் தொடங்கிய காட்சிக்குப் பின்திரும்புதல்.*
2. *தேவன் உங்கள்மீது அன்பு கூருகின்றார்! அவர் தமது குமாரனை உங்களுக்காக மரிக்கும்படி அனுப்பினார்! நீங்கள் அவரை மறுதலித்தால், நியாயத்தீர்ப்பு வரும்! தேவனுக்கு எதிராகக் கலகம் செய்யாதீர்கள்!*

*முடிவுரை*

*ஒரு பெற்றோரின் மாபெரும் அன்புகூட, பாவத்தின் விளைவைத் தடுத்து நிறுத்த முடியாது. கலகம் செய்கின்ற பிள்ளை அழிந்து போவான், அவனது பெற்றோரும் அவனுடன் சேர்ந்து துன்புறுவார்கள். நமது பிதாவாகிய தேவன், நமது பாவங்களின் விளைவுகளில் இருந்து நாம் புறம்பே திரும்ப ஒரு அளிப்பை ஏற்படுத்தியுள்ளார். அவரது அன்பிற்குப் பதில் அவரது நியாயத்தீர்ப்பைத் தேர்ந்து கொள்ளாதீர்கள்!*

# 10

# 1 இராஜாக்கள்: இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

*வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்: 1-19, 21, 22.*

**தலைப்பு**

*தொடக்கத்தில் 1 மற்றும் 2 சாமுவேல் புத்தகங்கள் போன்றே 1 மற்றும் 2 இராஜாக்கள் புத்தகங்களும் ஒரே புத்தகமாகவே இருந்தன. 1 மற்றும் 2 சாமுவேல் புத்தகங்கள் "1 இராஜாக்கள்," என்றும் 1 மற்றும் 2 இராஜாக்கள் புத்தகங்கள் "2 இராஜாக்கள்" என்றும் அறியப்பட்டிருந்தன. நாம் தற்போது கொண்டிருக்கின்ற 1 மற்றும் 2 இராஜாக்கள் புத்தகங்கள், எபிரெய மொழியில் 1 இராஜாக்கள் 1:1ல் முதலாவதாக உள்ளது, தமிழ் மொழிபெயர்ப்பில் "இராஜா. ..." என்றும் உள்ளதுமான வார்த்தையைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளன.*

**பின்னணி**

*1 இராஜாக்கள் புத்தகம் இயல்பான இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது: (1) சமஸ்த இஸ்ரவேல்மீது சாலொமோனின் ஆளுகை மற்றும் (2) இஸ்ரவேல், தெற்கு ராஜ்யம் மற்றும் வடக்கு ராஜ்யம் என்று பிரிக்கப்படுதல்.*

*சாலொமோனின் ஆளுகை, 120 ஆண்டுகளாக இருந்த ஒன்றுபட்ட ராஜ்யத்தின் கால அளவை நிறைவு செய்தது. சவுல், தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோர் ஒவ்வொருவரும் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்தனர். சாலொமோன் தேவாலயத்தைக் கட்டினார் என்ற வகையில் குறிப்பாகப் பேசப்படுகின்றார். அவரது ஆட்சியின்போது, இஸ்ரவேல் பேரரசானது, பொருளாதாரம், அரசியல் மற்றும் புவியியல் ஆகிய ரீதியில் தனது உச்சத்தை அடைந்திருந்தது (4:21; 10:23, 24).*

*சாலொமோன் மரணத்திற்குப்பின்பு, அவரது மகன், ரெகொபெயாம், மோசமான ஆலோசனைகளுக்குச் செவிசாய்த்தார். வடக்கில் இருந்த பத்துக்கோத்திரங்கள் கலகம் செய்து இஸ்ரவேல் என்ற ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொண்டன. ரெகொபெயாமுக்கு, தெற்கில் இருந்த இரண்டு கோத்திரங்கள் மாத்திரம் விடப்பட்டன, அது யூதா ராஜ்யம் என்று அறியப்பட்டது. அவ்வேளையில் இருந்து, நாட்டில் எப்போதும் இரண்டு அரசர்கள் இருந்தனர்: ஒருவர் தெற்கிலும் இன்னொருவர் வடக்கிலும் இருந்து ஆட்சிசெய்தனர். இது தொடக்ககால மாணவர்களுக்கு குழப்பமானதாக இருக்கக்கூடும். எல்லாவற்றையும் நேராக்குவதற்காக, இடது புறத்தில் யூதாவின் அரசர்களையும் வலதுபுறத்தில் இஸ்ரவேலின் அரசர்களையும் பட்டியலிடும் வரைவட்டவணை ஒன்றைத் தயார் செய்யுங்கள்.*

*2 சாமுவேல் 7ல், தாவீதுக்குச் செய்யப்பட்ட வாக்குத்தத்தத்தின் காரண மாகவே, யூதாவின் அரசர்கள் தாவீதின் அரசபரம்பரை ஆட்சியைத் தொடர்ந்தனர். சிலர் நல்லவர்களாய் இருந்தனர்; சிலர் மோசமானவர்களாயிருந்தனர். வடக்கில்,*

*எப்போதாவது ஒருமுறைதான் ஒரு தந்தையின் அரியணையில் அவருக்குப் பதிலாக அவரது மகன் அமர்ந்தார். வடக்கில் இருந்த எல்லா அரசர்களுமே மோசமானவர்களாய் இருந்தனர்! சிலர் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் மோசமானவர்களாய் இருந்தனர். ஆகாப் என்ற அரசன், தன் மனைவி யேசபேலுடன் சேர்ந்து, மிகமிக மோசமானவனாய் இருந்தான். ஆகாபின் ஆட்சியின்போது, தேவன் உயிர்வாழ்ந்தவர்களில் மிகவும் திகைப்புக்குரிய மனிதர்களில் ஒருவரான: எலியா என்ற, தீர்க்கதரிசியை அனுப்பினார்.*

*இப்புத்தகத்தை எரேமியா எழுதினார் என்று யூதப்பாரம்பரியம் கூறுகிறது. அப்படி அவர் எழுதியிருந்தால், அவர் இராஜாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகளால் பாதுகாக்கப்பட்ட சில பதிவேடுகளை (1 இராஜாக்கள் 11:41; 2 நாளாகமம் 9:29; முதலியன.; இ.வ. ஏசாயா 36-39 மற்றும் 2 இராஜாக்கள் 18-20) பயன்படுத்தும்படிக்குப் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டிருக்கலாம். அவர் 2 இராஜாக்கள் புத்தகத்தின் எழுத்தாளராயிருந்தால், இதன் கடைசி அதிகாரத்தை வேறு யாரேனும் ஒருவர் எழுதினார் என்றாகிறது.*

**வரைகுறிப்பு**

I. *சாலொமோனின் ஆளுகை (1-11).*
   A. *வேதாகமத்திலேயே மிக ஞானமுள்ள மனிதர் (1-10).*
      1. *சமஸ்த இஸ்ரவேல்மீது மூன்றாவது அரசர் (1, 2).*
      2. *சாலொமோன் ஞானத்தைத் தேர்ந்து கொள்ளுதல் (3).*
      3. *சாலொமோனின் அதிகாரம், செல்வம் மற்றும் ஞானம் (4).*
      4. *தேவாலயம் கட்டப்படுதல் (5-8).*
      5. *சாலொமோனுடைய ராஜ்யத்தின் மேன்மை (9, 10).*
   B. *வேதாகமத்திலேயே மிகவும் மதியீனமான மனிதன் (11).*
      1. *சாலொமோனின் மனைவிகள் (11:1-3).*
      2. *விசுவாச விலக்கம் (11:4-8).*
      3. *ராஜ்யம் பெரும்பகுதியும் எடுத்துக்கொள்ளப்படுதல் (11:9-40).*
      4. *சாலொமோனின் மரணம் (11:41-43).*

II. *பிரிந்த ராஜ்யம் (12-22).*
   A. *ராஜ்யத்தின் பிரிவினை (12:1-24).*
   B. *தொடர்ந்து வந்த வரலாறு (12:25-22:53).*
      1. *இஸ்ரவேலில் யெரொபெயாமின் ஆளுகை (12:25-14:20).*
      2. *யூதாவில் ரெகொபெயாமின் ஆளுகை (14:21-31).*
      3. *யூதாவில் அபியாமின் ஆளுகை (15:1-8).*
      4. *யூதாவில் ஆசாவின் ஆளுகை (15:9-24).*
      5. *இஸ்ரவேலில் நாதாபின் ஆளுகை (15:25-31).*
      6. *இஸ்ரவேலில் பாசாவின் ஆளுகை (15:32-16:7).*
      7. *இஸ்ரவேலில் ஏலாவின் ஆளுகை (16:8-14).*
      8. *இஸ்ரவேலில் சிம்ரியின் ஆளுகை (16:15-20).*
      9. *இஸ்ரவேலில் உம்ரியின் ஆளுகை (16:21-28).*
      10. *இஸ்ரவேலில் ஆகாபின் ஆளுகை (16:29-22:40); எலியாவின் ஊழியம்!*

11. யூதாவில் யோசபாத்தின் ஆளுகை (22:41-50).
12. இஸ்ரவேலில் அகசியாவின் ஆளுகையினுடைய தொடக்கம் (22:51-53).

**1 இராஜாக்கள் புத்தகத்தில் இருந்து பாடங்கள்**

கிறிஸ்தவராகுதல் என்று முடிவெடுத்தலுக்கு அடுத்ததாக, ஒருவர் அல்லது ஒருத்தி யாரைத் திருமணம் செய்து கொள்வது என்று முடிவெடுத்தலானது மிகவும் முக்கியமானதாக உள்ளது. அந்நியப் பெண்களுடன் சாலொமோன் செய்த திருமணங்களையும் ஆகாப் யேசபேலைத் திருமணம் செய்து கொண்டதையும் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

"முதியோர் ... சொன்ன ஆலோசனையை ... தள்ளிவிட்டு" தன் வயதுடையவர்கள் கூறியதைக் கவனித்துக் கேட்ட (12:8; 1 கொரிந்தியர் 15:33) ரெகோபெயாமிடத்தில் இருந்து கற்றுக்கொள்ளுங்கள்.

தேவனுடைய கட்டளைகள் மீதான அக்கறை குறைவடையும்போது, பிரிவினை பொதுவாக விளைகிறது.

ஒரு பொய்யை நம்பி அதனால் கொல்லப்பட்ட ஒரு இளம் தீர்க்கதரிசியின் வரலாறு வேதாகமத்திலுள்ள மிகவும் கவலைக்குரிய வரலாறுகளில் ஒன்றாக உள்ளது (13). தேவனுக்காகப் பேசுகின்றோம் என்று கூறுபவர்களைச் சோதித்தறியும் பொறுப்பைத் தேவன் நம்மீது வைத்துள்ளார் (1 யோவான் 4:1).

யோவான் ஸ்நானன் எலியாவின் ஆவியுடன் வந்தார் (மல்கியா 3:1-3; மத்தேயு 17:10-13), அவர் மேசியா (இயேசு)வுக்கு வழியை ஆயத்தம் செய்தார்.

## தண்ணீர் அற்றுப்போகச் செய்தவர் யார்? (1 இராஜாக்கள் 17:1-16)

நீங்கள் உங்கள் வீட்டில் தண்ணீர் அற்றுப்போன அனுபவம் எதையாவது கொண்டிருக்கின்றீர்களா? ஆம் என்றால், நீங்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருப்பீர்கள்: "தண்ணீரை அற்றுப்போகச் செய்தது யார்?" மற்றும் "ஏன்?" நாம் 1 இராஜாக்கள் 17:1-15ஐப் படிக்கையில், "தண்ணீர் அற்றுப்போகச் செய்தவர் யார்?" மற்றும் "ஏன்?" என்ற இரு கேள்விகளைக் கேட்போம்.

"ஏன்?" என்பது போராட வேண்டிய கேள்வியாக உள்ளது: "ஆண்டவரே, நான் என்னால் இயன்ற அளவுக்கு மிகச்சிறந்தவற்றைச் செய்து கொண்டிருக்கின்றேன். பின்பு ஏன் மோசமான இந்தக் காரியங்கள் யாவும் எனக்கு நடைபெறுகிறது?" நாம் "ஏன்?" என்ற கேள்வியைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது, ஏசாயா 55:8, 9ஐ நமது சிந்தைகளில் காத்துக்கொள்ள வேண்டும். இதை நாம் மற்றவர்களுக்கு நடைமுறைப்படுத்தும் வரையில் இவ்வசனப்பகுதியின் சத்தியத்தை நியாயமாகக் கையாளுகின்றோம். இதை நமக்கு நடைமுறைப்படுத்துதல் என்பது மிகக் கடினமானதாக உள்ளது!

I. இஸ்ரவேல் நாட்டில் தேவன் தண்ணீர் அற்றுப்போகச் செய்தது ஏன் (17:1)?
   A. இஸ்ரவேல் நாட்டில் என்ன நடந்திருந்தது என்று நாம் மறுகண்ணோட்டம் இடுவோம்.
      1. உபாகமம் 7:1-6ல் உள்ள, சுற்றிலும் இருக்கும் மக்களினங்

களுடன் கலப்புத்திருமணம் செய்ய வேண்டாம் என்ற எச்சரிக்கையைக் கவனியுங்கள். இந்த எச்சரிக்கை கவனமாக பின்பற்றப்படவில்லை. ஆகாபின் அருகில் யேசபேல் இருக்கின்றாள்.

2. தேவன் தமது அச்சுறுத்துதல்களைச் செயல்படுத்த என்ன செய்தார்? அவர் எலியாவை ஆகாபிடம் அனுப்பினார்: 1 இராஜாக்கள் 17:1. "வருஷங்கள்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள்; மூன்றரை வருடங்களாக மழை பெய்யாதிருந்தது (லூக்கா 4:25; யாக்கோபு 5:17).

B. தேவன் இஸ்ரவேல் நாட்டில் தண்ணீரை அற்றுப்போகச் செய்தது ஏன்?

1. தேவனுடைய எச்சரிக்கை (உபாகமம் 7) பின்தொடரப்பட்டது (உபாகமம் 11:16, 17). எலியா மழை பெய்யாதிருக்கும்படி ஜெபித்தார் (யாக்கோபு 5:17). உபாகமம் 11ல், தேவன் தாம் செய்யும்படி நோக்கங்கொண்டிருந்ததைச் செய்ய வேண்டும் என்று எலியா ஜெபித்தார் என்பது தெளிவு.

2. "ஏன்?" என்ற கேள்விக்குத் தேவன் பதில் அளிக்கக்கூடும்:

   a. "ஏனென்றால் மக்கள் என் குரலுக்குக் கீழ்ப்படியாமல், போய் தண்டனை பெறத்தக்கவர்கள் ஆயினர்."

   b. "ஏனென்றால் உண்மையுள்ள என் ஊழியக்காரன் எலியா ஊக்கமாய் ஜெபித்தான்."

   c. "நானே தேவன் என்று காண்பிக்கவும்; அவர்களுடைய வழிகளின் தவறை அவர்களுக்குக் காண்பிப்பதினால் அவர்கள் மனந்திரும்பி என்னிடம் திரும்பிவரவும்."

II. தேவன் கேரீத் ஆற்றில் தண்ணீரை அற்றுப்போகச் செய்தது ஏன் (17:2-7)?

A. ஆகாபுக்கு எச்சரிக்கை செய்தபின்பு தேவன் தமது திட்டத்தில் இரண்டாம் படியை விடுவித்தார்.

1. ஒரு தடவை ஒரு படிமுறைச் செயலை மாத்திரம் செய்யும்படி எலியா கூறப்பட்டார்.

2. இரண்டாவது படிமுறைச் செயல் என்பது எதிர்பாராததாக இருந்தது: "நீ ... போய், ... கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக் கொண்டிரு" (வசனங்கள் 3, 4).

3. எலியா செய்யும்படி தேவன் கூறியவற்றை எலியா செய்தார் (வசனங்கள் 5, 6).

   a. "கேரீத்" என்றால் "துண்டிக்கப்பட்டிருத்தல்" அல்லது "பிரிவு" என்று அர்த்தப்படுகிறது. அந்த நீரோடைக்கருகில் தங்கியிருந்த ஒன்று அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான ஆண்டுக்காலம், எலியா மற்ற எல்லாரிடத்தில் இருந்தும் துண்டிக்கப்பட்டிருந்தார்.

   b. செயலற்ற இந்தக் காலம் எலியாவுக்குக் கடினமாக இருந்திருக்க வேண்டும்.

B. பின்பு தேவன் கேரீத் ஆற்றில் இருந்த தண்ணீரை அற்றுப்போகச்

*செய்தார்!*

1. *எலியா இருக்கும்படி தேவன் விரும்பிய இடத்திலேயே அவர் இருந்தார், ஆனால் தண்ணீர் அற்றுப்போயிற்று! (வசனம் 7).*
2. *தேவன் கேரீத் ஆற்றில் இருந்த தண்ணீரை அற்றுப் போகச் செய்தது ஏன்?*
   a. *ஏனென்றால் எலியா ஜெபித்திருந்தார் (வசனம் 7; யாக்கோபு 5:17). சில வேளைகளில் நமது ஜெபம் நாம் எதிர் பார்த்திராத வகையில் பதில் அளிக்கப்படுகின்றன.*
   b. *ஏனென்றால் அது அடுத்த படிமுறைச் செயலுக்கான காலமாய் இருந்தது. நாம் தேவன்மீதும் நம் வாழ்விற்கு அவர் கொண்டுள்ள திட்டத்தின்மீதும் நம்பிக்கை வைக்கக் கற்றுக் கொள்வது அவசியமாய் இருக்கிறது.*

III. *சாரிபாத் ஊரில் தேவன் தண்ணீரை அற்றுப்போகச் செய்தது ஏன் (17:8-16)?*

A. *தேவன் எலியாவை சாரிபாத் ஊருக்குப் போகச் சொன்னார் (வசனங்கள் 8, 9).*

1. *சாரிபாத் என்பது இஸ்ரவேல் நாட்டிற்கு நேர் வடக்கில் உள்ள பெனிக்கியா நாட்டின் கடலோரத்தில் இருந்த ஒரு சிறிய நகரம் ஆகும். இது எலியா இருந்த இடத்தில் இருந்து வடமேற்கில், வரட்சி தாக்கிய பகுதியில் 75 முதல் 100 மைல்களுக்கு அப்பால் இருந்தது. எலியா இன்னமும் மிகத் தாழ்ந்த நிலையைத் தக்க வைக்க வேண்டியிருந்தது. அவர் அங்கு ஒரு விதவையின் வீட்டில் தங்க வேண்டியிருந்தது.*
2. *எலியா எவ்வாறு பதில்செயல் செய்தார்? "அவர் எழுந்து சென்றார்."*

B. *எலியா அங்கு சென்றபோது, அங்கேயும்கூடத் தண்ணீர் அற்றுப் போயிற்று!*

1. *அவர் சென்று தங்கியிருக்க வேண்டிய வீட்டின் விதவை பட்டினியால் இறந்துகொண்டிருந்தாள்!*
2. *சாரிபாத் ஊரில் தேவன் தண்ணீர் அற்றுப்போகச் செய்தது ஏன்?*
   a. *இஸ்ரவேல் நாட்டில் இருந்த இடர்ப்பாடு வடக்கில் இருந்து வந்தது; எனவே, அவர்கள் விளைவுகளிலும் பங்கேற்க வேண்டியிருந்தது.*
   b. *எலியாவை நிர்ப்பந்திக்கத் தொடர்ந்தது, அவர் தேவனை முற்றிலுமாகச் சார்ந்திருக்க வேண்டும் என்பதற்காக.*
   c. *யெகோவாதாம் உண்மையான தேவனாக இருக்கின்றார் என்று ஒரு ஏழை விதவையை நம்பச் செய்வதற்காக.*

*முடிவுரை*

A. *வாழ்வில் நமக்கு என்ன நேர்ந்தாலும், தேவன் நம்மை மறந்துவிடவில்லை, ஆனால் இன்னமும் நம்மீது அன்புகூருகின்றார் மற்றும் நமக்குத் தேவையானவற்றை அளிப்பார் என்று நாம் உணர்ந்தறிதல் எவ்வளவு முக்கியமானதாக உள்ளது (ஏசாயா 49:14-16)!*

B. *1 இராஜாக்கள் 17:1-15ல் உள்ள ஒருசில மாபெரும் பாடங்கள் பின்வருமாறு:*

1. *உங்களால் புரிந்துகொள்ள இயலாதபோதும்கூட, தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்.*
2. *நீங்கள் முற்றிலும் புரிந்துகொண்டிராதபோதும்கூட, தேவன்மீது நம்பிக்கை வையுங்கள்.*
3. *நீங்கள் விரும்பியதைக் கொண்டிராதபோதும்கூட, நீங்கள் கொண்டுள்ளவைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.*

# 11

# 2 இராஜாக்கள்: ராஜ்யத்தின் கடைசி நாட்கள்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:** 2-25.*

***தலைப்பு***

*1 மற்றும் 2 இராஜாக்கள் என்ற புத்தகங்கள் தொடக்கத்தில் ஒரே புத்தகமாக, 1 இராஜாக்கள் புத்தகத்தின் தொடக்க வார்த்தையைப் பின்பற்றிப் பெயரிடப்பட்டதாக இருந்தது (1 இராஜாக்கள் மீதான குறிப்புகளைக் காணவும்).*

***பின்னணி***

*இந்தப் புத்தகம் 1 இராஜாக்கள் புத்தகத்தின் தொடர்ச்சியாக உள்ளது. இப்புத்தகத்தின் தொடக்கத்தில், ராஜ்யம் இன்னமும் பிரிந்ததாகவே உள்ளது. இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யம், கி.மு. 722ல் அசீரியாவினால் முற்றிலுமாக அழிக்கப்பட்ட வரையிலும் தொடர்ந்து சீர்கெட்டுப்போனது. வடக்கு ராஜ்யத்தில் மொத்தம் பத்தொன்பது அரசர்கள் ஆண்டனர், அவர்கள் யாவருமே தீயவர்களாய் இருந்தனர்.*

*அசீரியர்கள் வடக்கு ராஜ்யத்தை அழித்த பின்பு, அவர்கள் யூதா என்ற தெற்கு ராஜ்யத்திற்குள் அணிவகுத்து வந்தனர். எசேக்கியா அரசர் மற்றும் ஏசாயா தீர்க்கதரிசி ஆகியோரின் முயற்சியால், தேவன் தெற்கு ராஜ்யத்தைக் காத்தார், அது மேலும் 150 ஆண்டுகள் வரையில் நிலைத்திருந்தது. இருப்பினும், கடைசியில், தெற்கு ராஜ்யமும் விழுந்தது; அது கி.மு. 586ல் பாபிலோனியர்களால் பிடிக்கப்பட்டது. யூதாவும் மொத்தம் பத்தொன்பது அரசர்களைக்கொண்டிருந்தது. எசேக்கியா மற்றும் யோசியா ஆகியோரைப் போன்று சிலர் நல்லவர்களாய் இருந்தனர். பெரும்பான்மையானவர்கள் தேவனையும் விக்கிரகங்களையும் ஆராதித்தனர்.*

*அடிப்படையில் சரித்திரப் புத்தகங்களான 1 மற்றும் 2 இராஜாக்கள், மக்களைத் தேவனிடத்திற்குத் திரும்பும்படி அழைக்க முயற்சி செய்த தீர்க்கதரிசிகளின் கருத்துநோக்கில் எழுதப்பட்டன. அரசர்களின் பெரும்பான்மையான அரசியல் சாதனைகள், தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றிற்குப் பொருத்தமற்றவை என்ற வகையில் கண்டுகொள்ளப்படாதுள்ளன.*

*1 மற்றும் 2 இராஜாக்கள் என்ற புத்தகங்களை எரெமியா தீர்க்கதரிசி எழுதினார் என்று யூதத்துவ பாரம்பரியம் கூறுகிறது (1 இராஜாக்கள் பற்றிய குறிப்புகளில் காணவும்).*

***வரைகுறிப்பு***

I. *பிரிந்த ராஜ்யம் தொடருகிறது.*
   A. *இஸ்ரவேல் நாட்டில் அகசியாவினுடைய ஆளுகையின் தொடர்ச்சி மற்றும் யோராமின் ஆளுகை (1:1-8:15, 28, 29; 9:1-26, 30-37).*

1. எலியா சுழற்காற்றில் எடுத்துக்கொள்ளப்படுதல்.
2. எலிசாவின் அற்புதங்களின் ஆரம்பம்.

B. யூதாவில் யோராம் மற்றும் அகசியா ஆகியோரின் ஆளுகை (8:16-29; 9:17, 18, 27-29).

C. இஸ்ரவேலில் ஏகூவின் ஆளுகை (10).

D. யூதாவில் அத்தாலியாளின் "ஆளுகை" மற்றும் யோவாசின் ஆளுகை (11, 12).

E. இஸ்ரவேலில் யோவகாஸ் மற்றும் யோவாஸ் ஆகியோரின் ஆளுகை (13:1-13; 14:8-16).

F. யூதாவில் அமசியா மற்றும் உசியா (அல்லது அசரியா) ஆகியோரின் ஆளுகை (14:1-14, 17-22; 15:1-7).

G. இஸ்ரவேலில் யெரொபெயாம், சகரியா, சல்லூம், மனாயீம், பெக்கக்கியா மற்றும் பெக்கா ஆகியோரின் ஆளுகை (14:23-29; 15:8-31; 16:5முதல். காணவும்.); யோனாவின் தீர்க்கதரிசனம் குறிப்பிடப்பட்டுள்ளது (14:25).

H. யூதாவில் யோதாம் மற்றும் ஆகாஸ் ஆகியோரின் ஆளுகைகள் (15:32-38; 16).
   1. இஸ்ரவேலில் ஓசியாவின் ஆளுகை.
   2. அசீரியர் சிறை (captivity) பிடித்தல் (17).

II. யூதா ராஜ்யம் மாத்திரம்.

A. எசேக்கியாவின் ஆளுகை (18-20); ஏசாயா (19:2முதல்.).

B. மனாசேயின் ஆளுகை (21:1-18).

C. ஆமோனின் ஆளுகை (21:19-26).

D. யோசியாவின் ஆளுகை (22:1-23:30).

E. யோவகாசின் ஆளுகை (23:31-34).

F. யோயாக்கீமின் ஆளுகை (23:35-24:5).

G. யோயாக்கீனின் ஆளுகை (24:6-16).

H. சிதேக்கியாவின் ஆளுகையும் எருசலேமின் அழிவும் (24:17-25:21).

முடிவுரை (25:22-30).

**2 இராஜாக்கள் புத்தகத்தில் இருந்து பாடங்கள்**

ஒரு நபர் தம்மைத் தேவனுக்கென்று அர்ப்பணித்திருந்தால், அவரால் வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும். எலியாவையும் எலிசாவையும் கண்ணோக்குங்கள்.

வாழ்வு நம்மை மூழ்கடிப்பதாக நாம் உணருகின்றபோது, தேவன் நமது ஆவிக்குரிய ஆதாரமூலங்களை நாம் காணும்படிக்கு நமது கண்களைத் திறக்கும்படி ஜெபித்தல் நமக்கு அவசியமாக இருக்கலாம் (6:16, 17). எபேசியர் 3:20 தேவன் "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராய்" இருக்கின்றார் என்று சுட்டிக்காண்பிக்கிறது.

தேவன் நம்மை அளவற்ற வகையில் ஆசீர்வதித்திருக்கின்றார். நாம் அமைதியாக இருந்து, நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளாமல் போவோமானால், அது எவ்வளவு பரிதாபத்திற்குரியதாக இருக்கும் (7:9; ரோமர் 1:14, 15)!

*பூமியில் உள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் 2 இராஜாக்கள் புத்தகத்தில் செய்தியொன்றுள்ளது. ஒரு நாடு தேவனை விட்டு விலகிப் போகும்போது, அழிவு என்பது தவிர்க்க இயலாததாகிறது. சிலவேளைகளில் அழிவு தாமதமாக லாம், ஆனால் அது அப்போதும் தவிர்க்க இயலாததாகவே உள்ளது. தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார், மற்றும் அவர் பரியாசம்பண்ணவொட்டார் (கலாத்தியர் 6:7).*

*மேசியாவை உலகத்திற்குக் கொண்டுவருதல் என்ற தேவனுடைய திட்டத் திற்கு இடையூறு செய்ய சாத்தான் தொடர்ந்து முயற்சி செய்தான். துன்மார்க்க மான அத்தாலியாள் தாவீதின் வம்சத்தை அழிக்க முயற்சி செய்தாள், ஆனால் தேவனுடைய திட்டங்கள் தடைசெய்யப்பட முடியாது (11:1-3).*

---

## *"அவனோ குஷ்டரோகியாயிருந்தான்"*
## *(2 இராஜாக்கள் 5:1-15)*

*வேதாகமம் ஒரு மனிதன் தன் இயல்பைக் காணும்படி ஒரு கண்ணாடியைப் பிடித்து நிற்கிறது. அதன் பக்கங்களினூடே நடந்து செல்லும் வண்ணமிக்க பாத்திரங்களை நாம் கண்ணோக்குகையில், நம்மைச் சுற்றிலும் உள்ள மக்களை மற்றும் நம்மையும்கூடக் கண்ணோக்காமல் இருக்க முடியாது. நாகமானின் வரலாற்றில் - நாகமான் வியாதிப்படுகையில், அவர் ஒரு நோய்நீக்குமுறையை நாடுகையில், வைத்தியக்குறிப்பு அவருக்குப் பொருந்தாதிருக்கையில் - பல சித்தரிக்கப்படுவதை நாம் காணுகின்றோம். அவர் சினம் தணிந்து வைத்தி யக்குறிப்பை மேற்கொள்ளுகையில்கூடச் சில சித்தரிக்கப்படுவதை நாம் கண்ணோக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.*

I. *நோய் ஆய்வு (5:1).*

   A. *நாகமானைக் கண்ணோக்குங்கள்.*

      1. *அவரைப் பற்றிப் பல நல்ல விஷயங்கள் கூறப்பட்டுள்ளன (வசனம் 1).*
      2. *"ஆனால் அவனோ குஷ்டரோகியாயிருந்தான்." இது சித்த ரிப்பை முற்றிலும் மாற்றுகிறது! அவர் ஒரு வல்லமை நிறைந்த மனிதராயிருந்தார், ஆனால் அவரால் நோய் ஆய்வுக்குறிப்பை மாற்றக்கூடாதிருந்தது.*

   B. *ஒரு இணை நிகழ்வு.*

      1. *இன்றைய நாட்களில் பல நல்ல மனிதர்கள் இருக்கின்றனர், அவர்களைப் பற்றிப் பல நல்ல விஷயங்களைக் கூறமுடியும்.*
      2. *ஆனால் ... அவர்கள் பாவிகளாய் இருக்கின்றனர், சுவிஷே சத்திற்குக் கீழ்ப்படியாமல் இருக்கின்றனர். அவர்கள் இழந்து போகப்பட்டுள்ளனர்.*

         a. *நாம் எவ்வளவு நல்லவர்களாய் இருப்பினும், நாம் இன்னமும் பாவிகளாய் இருக்கின்றோம் (ரோமர் 3:23; பிரசங்கி 7:20), பாவத்தில் இழந்துபோகப்பட்டிருக்கின்றோம் (ரோமர் 6:23). நல்ல நபராக இருத்தல் என்பது மாத்திரம் எவரொருவரையும் இரட்சித்துவிட முடியாது (நடபடிகள் 10:2, 22).*

b. *கிறிஸ்துவில் மாத்திரமே இரட்சிப்பு கண்டறியப்படுகிறது (நடபடிகள் 4:12); நாம் "கிறிஸ்துவுக்குள்" ஞானஸ்நானம் பெறுதல் அவசியமாயிருக்கிறது (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27).*

c. *ஒருவர் தம் சொந்த வாழ்வினால் இரட்சிக்கப்பட முடியும் என்று நினைப்பாரென்றால், அவர் சுயநீதியுடைமை என்ற பாவத்தினால் குற்றப்பட்டுள்ளார் (நீதிமொழிகள் 30:12; ரோமர் 10:3) மற்றும் அவர் தமது ஆவிக்குரிய உண்மை நிலையைக் கண்ணோக்குதல் அவசியமாய் இருக்கிறது (ஏசாயா 64:6).*

II. *நோய்நீக்கக் குறிப்பு (5:2-13).*

A. *என்ன செய்ய வேண்டும் என்று நாகமானுக்குக் கூறப்பட்டது.*

1. *ஒரு நம்பிக்கையின் கதிர் (வசனம் 3).*
2. *முதலில் அவர் தவறான இடத்திற்குச் சென்றார்; அவர் அதி காரத்திற்கு ஒரு பட்டப்பெயரைக் கொண்டு குழப்பிக் கொண்டார்.*
3. *கடைசியில் அவர் எவ்வாறு குணமாக்கப்பட முடியும் என்பதன் மீதான அறிவுறுத்துதல்களைப் பெற்றுக்கொண்டார் (வசனம் 10). அறிவுறுத்துதல் எளியதாகவும் நிபந்தனைக்கு உட்பட்டதாகவும் இருந்தது.*
4. *நோய்நீக்கக் குறிப்பு நோயாளிக்குப் பிரியமானதாக இருக்க வில்லை (வசனம் 11). அது நாகமானுடைய ஆணவத்தைத் துன்புறுத்திற்று; அது எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்று அவர் முன்பே தீர்மானித்திருந்தார் (வசனம் 11). அவர் ஒரு பதிலிச் செயல்முறையைக் கருத்துத் தெரிவித்தார் (வசனம் 12). அவர் கோபத்துடன் சென்றார்!*

B. *அது சிறுபிள்ளைத்தனமானது, ஆனால் சிலர் இன்றைய நாட் களிலும் அதையே செய்கின்றனர்.*

1. *அவர்கள் பாவம் என்ற தொழுநோய் கொண்டுள்ளனர், ஆனால் நம்பிக்கையின் கதிர் ஒன்றுள்ளது (யோவான் 8:32)!*
2. *ஒருவேளை அவர்கள் தவறான இடத்திற்குச் செல்கின்றனர். மனிதர்களிடத்தில் அவர்கள், "நீங்கள் நினைப்பது என்ன?" என்று கேட்கின்றனர் (நீதிமொழிகள் 14:12). தேவனுடைய வசனம் மாத்திரமே பதிலைக் கொண்டுள்ளது (யோவான் 17:17).*
3. *அறிவுறுத்துதல்கள் கொடுக்கப்பட்டுள்ளன (மாற்கு 16:16; நடபடிகள் 2:38). நோய்நீக்கக்குறிப்பு எளிமையானதாக மற்றும் நிபந்தனைக்கு உட்பட்டதாக இருக்கிறது.*
4. *கர்த்தர் தரும் நோய்நீக்கக்குறிப்பு பலருக்குப் பிரியமானதாக இருப்பதில்லை. "இதோ, நான் நினைப்பது"! அவர்கள் பதி லிச் செயல்முறைகளை முயற்சி செய்கின்றனர். சிலர் இதைக் குறித்துக் கோபம்கூட அடைகின்றனர் (கலாத்தியர் 4:16).*

III. *குணமாகுதல் (5:14).*

A. *நமது வரலாற்றில் ஒரு திருப்புமுனை உள்ளது.*

1. *நாகமானின் வேலைக்காரன் ஒரு கேள்வியைக் கேட்டார் (5:13).*
2. *நாகமான் நோய்நீக்கக்குறிப்பை எடுத்துக்கொண்டார். அவர் தீர்க்கதரிசி கூறியதை அப்படியே செய்ய வேண்டியிருந்தது (வசனம் 14அ).*
3. *இதன் விளைவாக அவர் குணமாக்கப்பட்டார் - அந்த குணமாகுதல் அவர் நம்பி எதிர்பார்த்திருந்ததைவிட மகாப் பெரியதாய் இருந்தது (வசனம் 14ஆ)!*

B. *நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் எப்போதுமே திருப்புமுனையாக உள்ளன.*

1. *நாம் முற்றிலுமாக - கீழ்ப்படிய வேண்டும் (மத்தேயு 7:21-23).*
2. *நாம் அவ்வாறு செய்தால், நாம் - நம்மால் கற்பனை செய்யக் கூடியதைவிட அதிகம் ஆச்சரியம் நிறைந்த வகையில் - குண மாக்கப்படுவோம் (ரோமர் 6:3-11; எபேசியர் 3:20)!*

*முடிவுரை மற்றும் அழைப்பு*

*மாபெரும் வைத்தியரை நம்புங்கள்! அவருக்குக் கீழ்ப்படியுங்கள்!*

# 12

# 1 மற்றும் 2 நாளாகமங்கள்: சிறையிருப்பிலிருந்து திரும்புவதற்கு ஆயத்தம்

**வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:** *1 நாளாகமம் 13, 15, 17, 21-24, 28, 29; 2 நாளாகமம் 3, 6, 9, 11, 23, 24, 29, 32, 35, 36.*

**தலைப்பு**

தொடக்கத்தில் 1 மற்றும் 2 நாளாகமங்கள் ஒரே புத்தகமாய் இருந்தன. இதன் எபிரெயப் பெயர், "நாட்குறிப்புகள், இதழ்கள் அல்லது வரலாற்றுக் குறிப்புகள்" என்று அர்த்தப்படுகிறது. செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் உள்ள இதற்குரிய கிரேக்கப் பெயர் "கடந்துபோன விஷயங்கள்" என்று அர்த்தப்படுகிறது, இது தொகுப்புகளில் உள்ள துணை விஷயங்களைக் குறிக்கிறது. ஆங்கிலப் பெயரான "Chronicles" என்பது ஜெரோம் என்பவரால் கொடுக்கப்பட்டது.

**பின்னணி**

1 மற்றும் 2 நாளாகமங்கள் முதல் பார்வைக்கு, சோர்வு ஏற்படுத்தும் வம்சவழிகளும் திரும்பக்கூறுதல்களுமாகக் காணப்படுகின்றன. திரும்பக் கூறுதல்கள் சில உள்ளன, ஆனால் அவை திரும்பக்கூறுதல்களாக மாத்திரம் இருப்பதில்லை. இது வேறுபட்ட காலத்தில் வேறுபட்ட நோக்கத்திற்காக எழுதப்பட்ட விஷயமாக உள்ளது.

2 இராஜாக்கள் புத்தகத்தின் கடைசி நிகழ்ச்சிகள் நடந்து ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் கடந்திருந்தன. (அந்த எழுபது ஆண்டுக் கால கட்டத்திற்கென்று தனியான வரலாற்றுப் புத்தகங்கள் எதுவும் இல்லை; சிறையிருப்பின் ஆண்டுகள் மீதான தகவலுக்கு எசேக்கியேல் மற்றும் தானியேல் தீர்க்கதரிசனப் புத்தகங்களைக் காணவும்.) இஸ்ரவேல் மக்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்ப தயாராக இருக்கின்றனர் (2 நாளாகமம் 35:25; 36:23 ஆகியவற்றைக் கவனிக்கவும்). 1 மற்றும் 2 நாளாகமப் புத்தகங்கள் (இஸ்ரவேல்) நாட்டில் திரும்பக் குடியமர்வதற்கும் தேவாலய ஆராதனையை திரும்பவும் நிலைநாட்டுவதற்கும் அவசியமான தகவல்களைத் தருவதற்காக எழுதப்பட்டன. மக்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்றால் - மற்றும் அவர்கள் கடந்துபோன துன்பங்கள் திரும்ப நிகழாது காத்துக்கொள்ள வேண்டுமென்றால் - தேவனுக்குக் கீழ்ப்படிவது அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டது.

1 மற்றும் 2 நாளாகமப் புத்தகங்களை, 1, 2 சாமுவேல் மற்றும் 1, 2 இராஜாக்கள் என்ற புத்தகங்களுடன் ஒப்பிடுவதில், நாம் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கவனிக்கலாம்: (1) 1 மற்றும் 2 நாளாகமப் புத்தகங்களில், யூதா என்ற தெற்கு ராஜ்யம் மாத்திரமே வலியுறுத்தப்படுகிறது, மற்றும் (2) இந்தப் புத்தகங்களில் உள்ள வரலாறு, தீர்க்கதரிசிகளின் கருத்துநோக்கு என்பதைக்காட்டிலும் அதிகமாக, ஆசாரியர்களின் கருத்து நோக்கு என்பதிலேயே எழுதப்பட்டன.

1 மற்றும் 2 நாளாகமப் புத்தகங்களை, 1 மற்றும் 2 சாமுவேல்,

*1 மற்றும் 2 இராஜாக்கள் என்ற புத்தகங்களுடன் சேர்த்து வைத்து ஆய்வு செய்தல், விசேஷமாக 1 மற்றும் 2 நாளாகமப் புத்தகங்களில் உள்ள துணை/ கூடுதல் விவரங்களைக் கவனித்துப் பார்த்தல் என்பது, இப்புத்தகங்களைப் படிப் பதற்கு மிகச்சிறந்த வழிகளில் ஒன்றாக இருக்கிறது. பின்வரும் வரை குறிப்பானது இந்தத் தகவல்களில் சிலவற்றைக் குறிப்பிடுகிறது.*

*1 மற்றும் 2 நாளாகமம் என்ற புத்தகங்கள் ஆசாரியரான எஸ்றாவினால் எழுதப்பட்டன என்று யூதப்பாரம்பரியம் குறிப்பிடுகிறது (எஸ்றா புத்தகத் திற்கான பின்னணிக் குறிப்புகளைக் காணவும்). எஸ்றா என்ற புத்தகமானது 2 நாளாகமம் புத்தகம் விட்ட இடத்தில் இருந்து தொடருவதாலும், இம்மூன்று புத்தகங்களும் ஒரே நடையைக் கொண்டுள்ளதாலும், இவர் இவற்றை எழுதி யிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.*

**வரைகுறிப்புகள்**

***1 நாளாகமம்***

I. *வம்சவரலாறு (1-9).*
II. *தாவீதின் ஆளுகை (10-29).*
   A. *ஊசாவின் பாவம் பற்றிய மற்ற குறிப்புகள் (15:2, 13, 15). சரியான விஷயத்தைத் தவறான வழியில் செய்தலுக்கு இது மிகச்சிறந்த உதாரணமாக உள்ளது.*
   B. *தாவீதை ஜனத்தொகைக் கணக்கெடுக்கும்படி சாத்தான் தூண்டுதல் (21:1).*
   C. *தேவனால் ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரி தரப்பட்டது போலவே, தேவாலயத்திற்கான வடிவமைப்பு மாதிரிகள் தரப்பட்டது (28:11, 12, 19). தாவீது "கால மாற்றத்திற்கு" ஏற்றாற்போன்று "தகவமைப்பு" செய்யும் உரிமை கொண்டிருக்கவில்லை.*

***2 நாளாகமம்***

I. *சாலொமோனின் ஆளுகை (1-9).*
   A. *சாலொமோனுடைய அரசின் விரிவளவு (9:26).*
   B. *யூதர்களுக்குத் தரப்பட்ட தேசம் பற்றிய வாக்குத்தத்தம் நிறைவே றிற்று.*
II. *யூதாவின் அரசர்கள் (10:1-36:13).*
   A. *பத்துக் கோத்திரத்தார்களில், தேவனை அவர் கட்டளையிட்டபடி ஆராதிக்க விரும்பியவர்கள் ரெகொபெயாமைச் சேர்ந்து கொண் டனர் (11:16, 17). வேதாகமம், "இழந்துபோகப்பட்ட பத்துக்கோத் திரத்தார்" தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களில் பாக மாக நிலைத்து இருந்தனர் என்று கூறுவதில்லை.*
   B. *ஏசாயா (26:22; 32:20, 32) மற்றும் எரேமியா (35:25; 36:12, 21, 22ஐயும் காணவும்) ஆகியோரின் ஊழியம்.*
III. *சிறையிருப்பு (36:14-23).*
   A. *தேவனுடைய செய்தியாளர்கள் புறக்கணிக்கப்பட்டனர் (36:15, 16).*

B. எழுபது ஆண்டு காலகட்டம் ஒரு வசனத்தில் கூறிமுடிக்கப்படுகிறது (36:20).

C. அவர்கள் எழுபது ஆண்டுகள் சிறையிருப்பில் இருப்பார்கள் என்ற எரெமியாவின் தீர்க்கதரிசனம் - மற்றும் அதன் நிறைவேற்றம் (36:21-23).

***1 மற்றும் 2 நாளாகமப் புத்தகங்களில் இருந்து பாடங்கள்***

*திரும்பக்கூறுதல் என்பது மோசமாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. திரும்பக்கூறுதலில் இருந்து நாம் கற்றுக்கொள்கின்றோம்; அது வலியுறுத்தத்தை அளிக்கிறது. குறிப்பிட்ட சில தகவல்களைத் திரும்பத் கூறுதல் பொருத்தமானதென்று தேவன் காணுகின்றார் என்றால், அது முக்கியத்துவத்தைக் காண்பிக்கிறது. அதை நாம் கவனமாய்ப் படிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் அதன்மீது வைத்து அதை வலியுறுத்துகின்றார். இன்றைய நாட்களில் மக்கள் "நவமானகாரியங்களை" தேடுகின்றனர் (நடபடிகள் 17:21); இதற்குப்பதிலாக, தேவனுடைய நித்தியமான சத்தியங்கள் திருப்பிக்கூறப்படுதலே நமக்கு அவசியமானதாக உள்ளது: "இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என்கூடாரத்தைவிட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டிஎழுப்பி விடுவது நியாயமென்று எண்ணுகிறேன்" (2 பேதுரு 1:12, 13).*

*1 மற்றும் 2 நாளாகமம் புத்தகங்களில் உலர்ந்துபோன பட்டியல்களும் உண்மைகளும் மாத்திரம் இருப்பதில்லை. மேசியாத்துவம் பற்றிய ஆழமான செய்தியும் இருக்கிறது. பட்டியலிடப்பட்ட பெயர்கள் தேவனுடைய நோக்கங்கள் மலர்விக்கப்பட்ட மாபெரும் காலங்களைக் குறித்து நிற்கின்றன. தேவன் கடந்துபோன காலத்தில் தம் மக்களுக்காக அக்கறை கொண்டிருந்தது போன்றே, யூதமக்களிடம் தொடர்ந்து அக்கறை கொண்டிருப்பதாக அவர்களிடத்தில் கூறினார். ஏற்றகாலத்தில் அவர் மேசியாவுக்கான அவர்களின் நம்பிக்கைகளை நிறைவேற்றுவார்.*

*தேவன் தமது சொந்த ஜனங்கள்மீது தொடர்ந்து அக்கறையாய் இருக்கின்றார்!*

---

## உயிர்ப்பித்தலுக்குத் தேவனுடைய திட்டம்
## *(2 நாளாகமம் 7:14)*

*உயிர்ப்பித்தலுக்கான தேவை என்பது நமது நாட்களில் உள்ள மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது. பழைய ஏற்பாடு உயிர்ப்பித்தலுக்கான தேவனுடைய திட்டத்தை மறைவான வசனப்பகுதி ஒன்றில் தருகிறது: "நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும்போது, என்நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான்*

கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" ( 7:13, 14).

தேவாலயம் கட்டப்பட்டிருந்தது, சாலொமோன் அதைப் பிரதிஷ்டை செய்திருந்தார். அதற்குப் பதில்செயலாகத் தேவன், "சாலொமோனே, நான் இவ்வீட்டை ஏற்றுக்கொள்கின்றேன், ஆனால் வீடுகளைக் கட்டுதல் என்பது வாழ்வைக் கட்டியெழுப்பும் இடத்தை எடுத்துக்கொள்ள முடியும் என்று நினைக்காதே. இந்தக் கட்டிடத்தைப் பிரதிஷ்டை செய்ததுடன் கூடுதலாக, நீயும் உன் மக்களும் உங்களுடைய வாழ்வைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். நீங்கள் அதைச் செய்யாவிட்டால் உங்களை என்னிடத்திற்குத் திரும்ப கொண்டுவருவதற்கு, நான் உங்கள்மீது கொள்ளை நோயை - பஞ்சம், வெட்டுக்கிளிகள் மற்றும் எல்லா வகையான துன்பத்தையும் - அனுப்புவேன்" என்றே செயல்விளைவில் கூறினார். பின்பு அவர் நமது வேதபாடப்பகுதியான, 7:14ஐக் கொடுத்தார். உயிர்ப்பித்தலுக்குத் தேவனுடைய திட்டம் என்ன என்று காண நாம் இதை ஆராய்ந்து பார்ப்போம்.

I. மக்கள்: "சபைகளுக்குப் பழைய உறுப்பினர்கள் திடப்படுத்தப்படுவதைக் காட்டிலும் அதிகமாகப் புதிய உறுப்பினர்கள் அவசியமில்லை."
   A. "என் ஜனங்கள்."
      1. தேவன் எப்போதுமே தமது மக்களைக் கொண்டிருந்தார்.
      2. இன்றைய நாட்களில்: யோவான் 1:12; 3:5; 1 பேதுரு 1:22, 23.
   B. "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள்." தேவனுடைய மக்கள் அவரது நாமத்தைத் தரித்திருக்கின்றனர்.
      1. பழைய ஏற்பாடு (எண்ணாகமம் 6:27).
      2. புதிய ஏற்பாடு (1 யோவான் 3:1, 2; 1 கொரிந்தியர் 1:2; நடபடிகள் 11:26).

II. ஆவிக்குரியவகையில் ஆயத்தமாக்கப்பட்ட மக்கள்.
   A. தாழ்மையின் மூலமாக: "தங்களைத் தாழ்த்தி." நீதிமொழிகள் 6:16, 17; 8:13; 16:18; ஏசாயா 57:15; மத்தேயு 5:3; லூக்கா 14:11; யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5, 6 ஆகியவற்றைக் காணவும்.
   B. ஜெபத்தின் மூலமாக: "ஜெபம்பண்ணி." மத்தேயு 7:11; 21:22; யாக் கோபு: 1:17; 5:16; 1 யோவான் 5:14, 15 ஆகியவற்றைக் காணவும். "நாம் ஜெபித்திராதவரையில் நாம் ஆயத்தமாய் இருப்பதில்லை."
   C. தேவனுடைய முகத்தைத் தேடுதல் மூலமாக: "என் முகத்தைத் தேடி."
      1. இது முயற்சியை மறைமுகமாய் உணர்த்துகிறது.
      2. இது நமது சித்தங்களைத் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப் படுத்துதலை மறைமுகமாய் உணர்த்துகிறது (மத்தேயு 6:33; சங்கீதம் 27:8).
   D. வாழ்வில் மாற்றத்தின் மூலமாக: "தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால்."
      1. நாம் வேதாகமத்தைப் புறக்கணிப்பதை விட்டுத் திரும்புதல் (ஓசியா 4:6).
      2. நாம் ஒருவர் மற்றவர்மீது கொண்டுள்ள அழகற்ற எண்ணப்

போக்கிலிருந்து திரும்புதல் (யோவான் 13:35).

3. இழந்துபோகப்பட்டுள்ளவர்கள்மீது நாம் கொண்டுள்ள மாறு பட்ட சிந்தனையில் இருந்து திரும்புதல்.
4. உலகப்பிரகாரமான எல்லா விஷயங்களிலும் இருந்து, தேவனுக் குரியவைகளுக்கு மேலாக உலகத்திற்குரிய விஷயங்களை வைப்பதில் இருந்து, திரும்புதல். "நாம் தாழ்வான வாழ்விற்குள் இருக்கும்படி அதிகமாய் வற்புறுத்தப்படுகின்றோம்."

III. தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாக்கப் பட்ட ஜனங்கள்.

A. தேவன் (ஜனங்கள் கூறுவதை) கேட்கும் ஆசீர்வாதம்: "பரலோகத்தி லிருக்கிற நான் கேட்டு."

B. தேவனுடைய மன்னிப்பின் ஆசீர்வாதம்: "அவர்கள் பாவத்தை மன்னித்து."

C. தேவனுடைய குணமாக்குதலின் ஆசீர்வாதம்: "அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்."

1. பழைய ஏற்பாட்டில், சரீரப்பிரகாரமான க்ஷேமத்தின்மீது வலியுறுத்தம் இருந்தது.
2. புதிய ஏற்பாட்டில், ஆவிக்குரிய க்ஷேமத்தின்மீது வலியுறுத்தம் இருக்கிறது.

*முடிவுரை*

*சங்கீதம் 85:6ஐ ஆழ்ந்து சிந்திக்கவும்: "உமது ஜனங்கள்மீது உம்மில் மகிழ்ந்திருக்கும்படி, நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?" நாம் ஒவ்வொருவரும், "உயிர்ப்பித்தல் என்பது என்னில் இருந்து தொடங்கட்டும்!" என்று கூறுவோமாக.*

# 13

# எஸ்றா மற்றும் நெகேமியா: சிறையிருப்பிலிருந்து திரும்புதல்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *எஸ்றா 1, 3-10; நெகேமியா 1-8, 13.*

***தலைப்பு***

*எஸ்றா என்ற புத்தகம், பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் மக்களை இரண்டாம் முறை வழிநடத்தி வந்த ஆசாரியரின் பெயரால் வழங்கப்படுகிறது. நெகேமியா என்ற புத்தகம் மூன்றாம் முறை வழிநடத்தி வந்த அப்புத்தகத்தின் பிரதானப் பாத்திரப் பெயரால் வழங்கப்படுகிறது.*

***பின்னணி***

*எரெமியா, எழுபது ஆண்டுகளில் சிறையிருப்பு ஒழியும் என்று தீர்க்கதரிசனம் கூறியிருந்தார் (எரெமியா 25:11, 12; 29:10). இந்த எழுபது ஆண்டுகள் என்பவை, கி.மு. 605ல் ராஜரீக வம்சத்தை பாபிலோனுக்கு முதன்முறையாக இட்டுச் சென்றதில் இருந்து (2 இராஜாக்கள் 24; தானியேல் 1) செருபாபேலின் நடத்துவத்தின்கீழ் அவர்கள் முதல்முறை திரும்பி வந்தது வரையிலான (எஸ்றா 1) காலமாகும். இஸ்ரவேல் மக்கள் சிறையிருப்புக்கு கொண்டுபோகப்படுதல் மூன்று நிகழ்ச்சிகளின் படி நிலைகளிலும், அவர்கள் திரும்பிவருதல் மூன்று நிகழ்ச்சிகளின் படி நிலைகளிலும் நடந்தது.*

*எஸ்றாவின் புத்தகம் முதல் இரண்டு திரும்பி வருதல்களைப் பற்றிக் கூறுகிறது. கி.மு. 538ல் செருபாபேல் முதல் திரும்பி வருதலை வழி நடத்தினார், அவர் ஒரு அதிபதியாகப் பணிபுரிந்தார் (ஆகாய் 1:1). ஆசாரியரான யோசுவாவும் (எஸ்றா 3:2), தீர்க்கதரிசிகளான ஆகாய் மற்றும் சகரியா என்பவர்களும் (எஸ்றா 5:1, 2) அவருடன் ஊழியம் செய்தனர். தேவாலயத்தைத் திரும்பக்கட்டுதல் என்பதே அவர்களுக்கு மாபெரும் அறைகூவலாக இருந்தது.*

*யூதா என்ற ஒரு கோத்திரம் மாத்திரமே மொத்தமாக சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்திருந்தபடியால், எஞ்சியவர்கள் இப்போது "யூதர்கள்" என்று அழைக்கப்பட்டனர் (எஸ்றா 4:23). இருப்பினும் இது, யூதா கோத்திரத்தார் மாத்திரமே திரும்பி வந்தனர் என்று அர்த்தப்படுவதில்லை. பன்னிரெண்டு கோத்திரங்களில் எஞ்சியிருந்தவர்களும் திரும்பியிருந்தனர் (எஸ்றா 6:17; 8:35).*

*எஸ்தரின் வரலாறு தேவாலயம் திரும்பக் கட்டப்பட்ட காலகட்டத்திற்குப் பொருந்துகிறது. அறுபது ஆண்டுகள் கடந்து சென்றன, அதன்பின்பு கி.மு. 458ல் எஸ்றா இரண்டாவது திரும்புதலை வழி நடத்தினார். தேவாலய ஆராதனையை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பது அவரது ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. எஸ்றா நியாயப்பிரமாண விற்பன்னர்களில் முதலாவதானவராக இருந்தார், இவர் "வேதபாரகர்" என்று(ம்) அறியப்பட்டார் (எஸ்றா 7:6).*

*எஸ்றா, கி.மு. 444ல் மூன்றாவது திரும்பி வருதலை வழிநடத்திய நெகேமியாவுடன் இணைந்து, எருசலேமின் மதில்களைத் திரும்ப*

*எடுத்துக்கட்டுவதில் ஊழியம் செய்தார். நெகேமியா ஒரு அதிபதியாயிருந்து பணியாற்றினார் (நெகேமியா 5:14). மல்கியா என்ற தீர்க்கதரிசி அனேகமாக, நெகேமியா மற்றும் எஸ்றா ஆகியோருடன் ஊழியம் செய்திருக்கலாம்; அவர் நெகேமியா புத்தகத்தின் இறுதிப்பாதியில் கையாளப்பட்ட பிரச்சனைகளை எடுத்துரைத்தார்.*

*எஸ்றாவே தமது பெயர்கொண்ட இப்புத்தகத்தை எழுதியிருக்கலாம்; 7-10 வரையுள்ள அதிகாரங்களில் தன்மைப் பெயர்ச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் கவனியுங்கள். நெகேமியா என்ற புத்தகத்தையும் இவரே எழுதி யிருப்பார் என்றால், இவர் அனேகமாக நெகேமியாவின் தனிப்பட்ட பதி வேடுகளைப் பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலினால் பயன்படுத்தி யிருக்கலாம் (நெகேமியா 1:1ஐக் கவனிக்கவும்).*

**வரைகுறிப்புகள்**

***எஸ்றா***

I. *முதல் திரும்புதல்: தேவாலயத்தைத் திரும்பக் கட்டியெழுப்புதல் (1-6); சமாரியர்களால் எதிர்ப்பு (4).*
II. *இரண்டாம் திரும்புதல்: ஆவிக்குரிய தன்மையைத் திரும்ப கட்டி யெழுப்புதல் (7-10).*

***நெகேமியா***

I. *மூன்றாம் திரும்புதல்: மதில்களைத் திரும்பக் கட்டியெழுப்புதல் (1-6).*
   A. *"கட்டியெழுப்புதல்" எவ்வாறு என்பதற்கு மாபெரும் உதாரணம்.*
      1. *மாபெரும் நடத்துவத்துவம்: நெகேமியா (ஜெபத்தின் மனிதர்: 2:4; 4:4, 5; 6:9, 14).*
      2. *மாபெரும் பின்பற்றுதல்: மக்கள் (2:18; 4:6).*
   B. *ஊக்கமிழக்கச் செய்ய முயற்சிகள்.*
      1. *சக்கந்தம் பண்ணுதல் (4:1-6).*
      2. *யுத்தம் (4:7-23).*
      3. *"உச்சி" மாநாட்டிற்கு அழைப்பு (6:1-4).*
      4. *நெகேமியாவின் நோக்கங்கள் தவறு என்று குற்றம் சாட்டப் படுதல் (6:5-9).*
      5. *கள்ளத் தீர்க்கதரிசி (6:10-14).*

II. *ஆளுகைசெய்தல்: நாட்டைத் திரும்பக் கட்டியெழுப்புதல் (7-13).*

***எஸ்றா மற்றும் நெகேமியா என்ற புத்தகங்களில் இருந்து பாடங்கள்***

*யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்புதல் என்பது தேவன் இரண்டாவது வாய்ப்பு எதுவுமின்றி தேவனாகவே இருக்கின்றார் என்ற மாபெரும் சத்தியத்தை மீண்டும் அடிக்கோடு இடுகிறது.*

*விக்கிரகாராதனையின் விளைவு என்பது இஸ்ரவேல் மக்கள் தங்கள் சிறையிருப்பிலிருந்து கற்றுக்கொண்ட ஒரு பாடமாக இருந்தது. யூதர்களிடத்தில் விக்கிரகாராதனை என்பது திரும்ப ஒருக்காலும் ஒரு பிரச்சனையாக இருந்த தில்லை.*

*கலப்பினத் திருமணம் - யூதரல்லாதவர்களுடன் திருமண உறவு - என்பது அவர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டிருந்த ஒரு பிரச்சனையாக இருந்தது (எஸ்றா 9, 10; நெகேமியா 13). ஒருவர் யாரைத் திருமணம் செய்துகொள்கின்றார் என்பது உண்மையிலேயே மாறுபாட்டை ஏற்படுத்துகிறது.*

*உண்மையான போதித்தல், பிரசங்கித்தல், மற்றும் வேதவாசிப்பு ஆகியவை பற்றிய மாபெரும் விவரிப்புகளில் ஒன்று நெகேமியா 8:8ல் தரப்பட்டுள்ளது.*

*தேவன், மேசியாவை உலகிற்குக் கொண்டுவருதல் என்ற தமது திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தினார். செருபாபேல் என்பவர் தாவீதின் ராஜரீக வம்சத்தில் வந்த யோயாக்கீன் என்ற அரசரின் கொள்ளுப்பேரனாக இருந்தார் (1 நாளாகமம் 3:19), அவர் கிறிஸ்துவின் முன்னோர்களில் ஒருவராயிருந்தார் (மத்தேயு 1:12)!*

---

## கர்த்தருடைய வீட்டைக் கைவிடுதல் (நெகேமியா 13:1-11)

*நெகேமியா எருசலேமின் மதில்களைக் கட்டுவித்தவர் என்று அறியப்படுகின்றார், ஆனால் அவர் அதைக் காட்டிலும் அதிகக் கடினமான பணிமுயற்சிகளைச் செய்திருந்தார். அவரது புத்தகத்தின் முதல் ஆறு அதிகாரங்கள், மதில்களைக் கட்டியெழுப்புதல் என்ற விஷயத்தைச் சுற்றிச்சுழல்கின்றன; கடைசி ஏழு அதிகாரங்கள், அவர் யூதாவின் அதிபதியாக இருந்து பணியாற்றுதலைப் பற்றியவைகளாக இருக்கின்றன. மக்களைக் கட்டியெழுப்புதல் என்பது மதிலைக் கட்டியெழுப்புதலைக் காட்டிலும் கடினமான பணிமுயற்சியாக உள்ளது.*

*13ம் அதிகாரமானது, நெகேமியா எதிர்கொண்ட மிகக்கடினமான பணி முயற்சியைப் பற்றிக் கூறுகிறது. அவர் பன்னிரெண்டு ஆண்டுகள் அதிபதியாகப் பணியாற்றிய பின்பு, சற்றுக்காலம் பாபிலோனுக்குத் திரும்பவும் சென்றிருந்தார். அவர் யூதாவுக்குத் திரும்பி வந்தபோது, அவர் செய்து முடித்திருந்தவற்றில் பலவிஷயங்கள் மீண்டும் செய்யப்பட வேண்டியவைகளாய் இருந்தன. இந்தப் பிரச்சனையைத் தொகுத்துரைக்கும் கேள்வியொன்று 13ம் வசனத்தில் காணப்படுகிறது: "தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டுப் போவானேன்?"*

*நெகேமியா (யூதேயாவைவிட்டு பாபிலோனுக்கு) போவதற்கு முன்பு, மக்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்யவும் அவரை மகிமைப்படுத்தவும் தங்களை அர்ப்பணித்திருந்தனர் (10:28, 29). இருப்பினும், அவர்கள் செய்வதாகக் கூறியிருந்த யாவற்றையும் அவர்கள் செய்திருக்கவில்லை; அவர்கள் செய்ய மாட்டோம் என்று கூறியிருந்த யாவற்றையும் அவர்கள் செய்திருந்தனர். அவர்கள் கர்த்தருடைய வீட்டைக் கைவிட்டிருந்தனர்.*

*கர்த்தருடைய வீட்டைக் கைவிடுதல் என்பதில், அவர்கள் தேவாலயத்தில் நியமிக்கப்பட்டிருந்த ஆராதனைகளைக் கைவிடுதல் மற்றும் குறிப்பிடப்பட்ட பலிகளைச் செலுத்தத் தவறுதல் ஆகியவை உள்ளடங்கியிருந்தன, ஆனால் இவற்றைக் காட்டிலும் அதிகமானவையும் அதில் உள்ளடங்கியிருந்தன. தேவாலய ஆராதனை ஊழியத்தைக் கைவிடுதல் என்பது மக்களின் பொதுவான மதரீதியான வீழ்ச்சியின் அடையாளமாயிருந்தது. தேவனைச் சேவித்தலும் தேவனை மகிமைப்படுத்துதலும் அவர்களின் இருதயங்களிலும் வாழ்விலும் இரண்டாம் இடத்தையே பெற்றிருந்தன.*

*“ஏன்?” என்பதே கேள்வியாக உள்ளது. நமது வேதபாடப்பகுதியானது, கர்த்தருடைய வீடு கைவிடப்பட்டிருந்தது ஏன் - மற்றும் இன்றைய நாட்களில் மக்கள் அதை(யே) செய்வது ஏன்? என்பதற்குப் பல காரணங்களைக் கொடுக்கிறது.*

I. *அறியாமையினால் மக்கள் கர்த்தருடைய வீட்டைக் கைவிடுகின்றனர் 13:1-3).*
   A. *இது மற்ற எல்லாப் பிரச்சனைகளுக்கும் அடிப்படையாக உள்ளது. அவர்கள் தேவனுடைய சித்தத்தை அறியாதிருந்தனர்.*
   B. *நாம் வருகைதருதல் அல்லது ஈடுபாடு இவற்றில் எதைப்பற்றிப் பேசினாலும், அறியாமை என்பது தேவனுடைய வீட்டைக் கைவிடும் எல்லாருக்கும் பின்பாக உள்ளது.*

II. *மக்கள் தங்களை இவ்வுலகில் இருந்து பிரித்துக்கொள்ளாமல் இருக்கின்றதினால் அவர்கள் தேவனுடைய வீட்டைக் கைவிடுகின்றனர் (13:1-3).*
   A. *யூதர்கள் ஒரு தனிப்பட்ட மக்களாக இருக்க வேண்டியிருந்தது (உபாகமம் 23:3-5). புறதெய்வ மக்களுடன் அவர்கள் கொண்டிருந்த ஒரு நெருக்கமான இணைவு, அவர்கள் தங்கள் தனித்தன்மையை இழந்துபோகச் செய்தது.*
   B. *நாம் இன்னமும் ஒரு தனித்தன்மையான மக்களாக நிலைத் திருக்க வேண்டியுள்ளது (2 கொரிந்தியர் 6:14-18; ரோமர் 12:2; யாக்கோபு 4:4; 1 யோவான் 2:15-17). நாம் இவ்வுலகத்தில் இருக்க வேண்டும், ஆனால் இவ்வுலகத்தாராக இருக்கக்கூடாது (யோவான் 17:11, 14-16).*

III. *மக்கள் தங்கள் வாழ்வில் உள்ள அசுத்தங்களினால் கர்த்தருடைய வீட்டைக் கைவிடுகின்றனர் (13:4-8).*
   A. *நடத்துனர்கள் உடன்படுதல் என்ற ஆவியினால் பாதிக்கப்பட்டும் இருந்தனர். அவர்கள் பிரச்சனைக்குத் தீர்வு காணமுடிவதற்குமுன்பு அசுத்தத்தன்மையை ஒதுக்கிப்போட வேண்டியதாக இருந்தது.*
   B. *நாம் சிந்தனையிலும் (பிலிப்பியர் 4:8) வாழ்விலும் (யாக்கோபு 1:27; 1 தீமோத்தேயு 5:22) தூய்மையானவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.*

IV. *பேராசை மற்றும் கருமித்தனம் ஆகியவற்றினால் மக்கள் கர்த்தருடைய வீட்டைக் கைவிடுகின்றனர் (13:10-13).*
   A. *நெகேமியா தசமபாகங்கள் செலுத்தப்படுதலை உறுதியாக்க நடவடிக்கை மேற்கொண்டார்.*
   B. *புதிய ஏற்பாட்டில் நாம் தசமபாகம் செலுத்தும்படியல்ல, ஆனால் கொடுக்கும்படி கூறப்பட்டுள்ளோம்: 1 கொரிந்தியர் 16:2; 2 கொரிந்தியர் 9:6, 7.*

V. *மக்கள் கர்த்தரின் நாளானது மற்ற எந்த நாளையும் போன்றே இருப்பதாக நினைப்பதால், அவர்கள் கர்த்தருடைய வீட்டைக் கைவிடுகின்றனர் (13:15-17).*
   A. *மக்கள் தேவனுடைய விஷயங்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பதற்காக ஓய்வுநாள் ஒதுக்கப்பட்டிருந்தது.*

B. *கர்த்தருடைய நாளை உலகப்பிரகாரமாக்குதல் என்பது நாம் இன்றைய நாட்களில் எதிர்கொள்ளுகிற மாபெரும் அறைகூவல் களில் ஒன்றாக உள்ளது. நாம் பிரச்சனையின் பாகமாக இருக்கின் றோமா அல்லது தீர்வின் பாகமாக இருக்கின்றோமா?*

VI. *மக்கள் தங்களைக் கர்த்தரிடத்தில் இருந்து புறம்பே இழுத்துப் போடுபவர்களைத் திருமணம் செய்து கொள்வதால், கர்த்தருடைய வீட்டைக் கைவிடுகின்றனர் (13:23-25, 28).*

A. *ஒருவரின் துணைவர்/துணைவி மற்ற/எதிர்த்திசையில் இழுக்கும் போது தேவனைச் சேவித்தல் என்பது கடினமானதாக உள்ளது.*

B. *2 கொரிந்தியர் 6:14ஐக் காணவும்.*

*முடிவுரை: இவ்வதிகாரத்தில் இரண்டு விஷயங்கள் நிலைநிற்கின்றன:*

A. *நெகேமியா கர்த்தருடைய வீட்டின்மீது அன்பாய் இருந்தார். நாம் சபையின்மீது அன்பாய் இருக்கின்றோமா (1 தீமோத்தேயு 3:15)?*

B. *தேவனுடைய சித்தத்துடன் தொடர்புடைய சிலவிஷயங்கள் செய்யப்படத் தேவையாக இருந்தபோது, நெகேமியா அதைச் செய்தார். நாம் அவ்வாறு செய்கின்றோமா?*

# 14

# எஸ்தர்: தேவன் தமது மக்களைப் பாதுகாக்கின்றார்

*வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்: 1-10.*

***தலைப்பு***

*எஸ்தரின் புத்தகம் அதன் பிரதானப் பாத்திரத்தின் பெயரைக் கொண்டுள்ளது. "எஸ்தர்" என்ற பெயரானது "நட்சத்திரம்" என்பதற்கான பெர்சிய வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது என்பது உறுதி. "Myrtle" (ஒரு வாசனையான மரம்) என்பது எஸ்தரின் எபிரெயப் பெயருடைய அர்த்தமாகும்.*

***பின்னணி***

*எஸ்தரின் வரலாறு, சிறையிருப்பிலிருந்து முதல் மற்றும் இரண்டாம் முறை திரும்புதல்களுக்கு இடையில் வரலாற்றுரீதியாக நடைபெற்றுள்ளது (எஸ்றா ம ற்றும் நெகேமியா புத்தகங்களின் பின்னணிக் குறிப்புகளைக் காணவும்). இது, தேவன் தமது மக்கள் நிர்மூலமாகாதபடி எவ்வாறு காத்துகொண்டார் என்பது பற்றிக் கூறுகிறது. எஸ்தரின் தைரியம் இல்லையென்றால், மேசியா வருவதற்கான மக்களினம் இருந்திராது. எஸ்தரும் மற்றும் மொர்தெகாயும், எஸ்றா மற்றும் நெகேமியா ஆகியோரின் ஊழியத்திற்குப் பாதை அமைத்தனர்.*

*அகாஸ்வேரு (1:1) என்பது கி.மு. 486 முதல் 465 வரை பெர்சியாவை ஆண்ட அரசரின் பெயரான மகா எக்ஸெரெக்ஸ் என்பதற்கு இன்னொரு பெயராகக் கருதப்படுகிறது. அவரது ஆட்சியின் மூன்றாம் ஆண்டில் நடைபெற்ற (1:3முதல்.) பெரிய விருந்தானது, கிரேக்கர்களுக்கு எதிரான அவரது மிக மோசமான இராணுவப் படையெடுப்புக்கு ஆயத்தம் செய்வதாக இருந்திருக்கலாம். அப்படியிருந்தது என்றால், அவரது ஆட்சியின் ஆறாம் மற்றும் ஏழாம் ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் (2:12, 16) அகாஸ்வேரு ஆறுதலை நாடியதற்காக நடைபெற்றிருக்கக்கூடும்.*

*எஸ்தரின் வரலாறு பாபிலோனுக்குக் கிழக்கில் இருநூறு மைல்கள் தொலைவில் இருந்த பெர்சிய அரசர்களின் குளிர்கால வாசஸ்தலமான சூசான் நகரத்தில் (1:2) நடைபெற்றது. ஆதார் மாதம் (3:7) என்பது நமது மார்ச்சு அல்லது ஏப்ரல் மாதத்திற்கு இணையாகும்.*

*பூரிம் பண்டிகை என்பது யூதர்களின் மதரீதியான நாட்காட்டியில் மிகவும் மகிழ்ச்சிக்குரிய பண்டிகைகளில் ஒன்றாக உள்ளது. அந்தக் கொண்டாட்டத்தின்போது, எஸ்தரின் புத்தகம் வாசிக்கப்படுகிறது. சில ஜெபஆலயங்களில், பிள்ளைகளுக்குக் கிலுகிலுப்பைகள் தரப்படுகின்றன. ஆமானின் பெயர் வாசிக்கப்படும்போது, மக்கள் சீற்றக்குரல் எழுப்பு கின்றனர். எஸ்தர் அல்லது மொர்தெகாயின் பெயர் வாசிக்கப்படும் போதெல்லாம், மக்கள் உரத்துக்குரல் எழுப்பி கிலுகிலுப்பைகளைச் சுழற்றுகின்றனர்.*

*எஸ்தரின் புத்தகம் பழைய ஏற்பாட்டு வரலாற்றுப் புத்தகங்கள் பன்னிரெண்டில் கடைசியானதாயிருக்கிறது. எஸ்றா, நெகேமியா மற்றும் எஸ்தர் புத்தகங்களில் உள்ள நிகழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்ட பின்பு, பரிசுத்த வரலாறு*

மீண்டும் எழுதப்படுவதற்குச் சுமார் நானூறு ஆண்டுகள் ஆயிற்று. பழைய ஏற்பாட்டைப் பற்றிய நமது படிப்பில், இந்த இடத்தில் இருந்து நாம் எஞ்சியுள்ள புத்தகங்களை, நியாயப்பிரமாணம் மற்றும் வரலாறு பற்றிய பதினேழு புத்தகங்களின் வரலாற்றுச் சட்டக அமைவிற்குள் பொருத்திக் காண்போம்.

இந்தப் புத்தகத்தை எழுதியது யார் என்று நாம் அறிவதில்லை. எஸ்றா இதன் எழுத்தாளராக இருந்தார் என்று தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் சிலர் நினைத்தனர்; மற்றவர்கள் மொர்தெகாய் இதை எழுதியிருப்பார் என்று நினைத்தனர். வேதாகமத்தின் எல்லாப் புத்தகங்களையும் பொறுத்த மட்டில், அவற்றை எழுதிய மனித எழுத்தாளர் யார் என்பது முக்கியமானதல்ல, ஆனால் எழுத்தாளர்களைத் தேவன் தமது பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு ஏவினார் என்பதே முக்கியமானதாகும் (2 பேதுரு 1:21; 2 தீமோத்தேயு 3:16, 17).

**வரைகுறிப்பு**

I. எஸ்தர் ராணியாகின்றாள் (1:1-2:20).
II. ஆமானின் திட்டம் (2:21-3:15).
III. எஸ்தரின் எதிர்த்திட்டம் (4-7).
IV. மொர்தெகாய் உயர்த்தப்படுதல்; யூதர்கள் விடுவிக்கப்படுதல் (8:1-9:16).
V. பூரிம் பண்டிகை (9:17-32).
VI. மொர்தெகாயின் பெருமை (10).

**எஸ்தரின் புத்தகத்தில் இருந்து பாடங்கள்**

எஸ்தரின் வரலாறு என்பது தேவனுடைய அருளிரக்கம் பற்றிய மிக நேர்த்தியான பாடங்களில் ஒன்றாக உள்ளது. இது ரோமர் 8:28 வசனத்தின் கருத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது: "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." இவ்வரலாற்றில் உள்ள நிகழ்ச்சிகள் சங்கீதம் 37:12, 13ஐயும் உறுதிப்படுத்துகின்றன: "துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய்த் தீங்கு நினைத்து, அவன்பேரில் பற்கடிக்கின்றான். ஆண்டவர் அவனைப் பார்த்து நகைக்கிறார்; அவனுடைய நாள் வருகிறதென்று காண்கிறார்."

வஸ்தி தனது கணவருக்குக் கீழ்ப்படியாமற்போனதில் சரியாய் இருந்தாளா இல்லையா? ஒருவேளை. அந்த சமுதாயத்தில் பெண்கள் ஆண்களுடன் சமூகரீதியாக ஒன்று கலந்திருத்தல் என்பது ஏற்பற்றதாக இருந்திருக்கலாம் (1:9ஐக் கவனிக்கவும்), மற்றும் அரசன் மதுபானம் அருந்திய நிலையில் வஸ்தியைக் கூப்பிட்டதால் (1:10), அவரது வேண்டுகோள் தகுதியற்ற செயல்கள் சிலவற்றை உள்ளடக்கியதாக இருந்திருக்கலாம். அவள் நிர்வாணமாகத் தோன்ற வேண்டும் என்று அவன் ஆணையிட்டதாகச் சில கல்வியாளர்கள் நம்புகின்றனர். இருப்பினும், வஸ்தி செய்தது சரியா அல்லது தவறா என்பதல்ல, ஆனால் அவள் (அரசரின் வேண்டுகோளை) நிராகரித்தது எஸ்தர் ராணியாவதற்கு வாய்ப்பளித்து, அவள் தன் மக்களுக்கு உதவிசெய்யக்கூடிய பதவிநிலையில் அவளைக் கொண்டுபோய் வைத்தது.

இந்தப் புத்தகமானது தேவபக்தியுள்ள பெண்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் செயல் விளக்கப்படுத்துகிறது!

தேவன் தமது மக்களை, மேசியா வரவிருந்த மக்களினத்தைத் தொடர்ந்து பாதுகாத்தார்.

## "இப்படிப்பட்ட காலத்துக்கு" (எஸ்தர் 4:13-17)

தேவனுடைய நாமம் எஸ்தரின் புத்தகத்தில் காணப்படுவதில்லை. இருப்பினும், வேதாகமத்தின் வேறு எந்தப் புத்தகத்திலும் தேவனுடைய கரமானது இதைவிட அதிகம் தெளிவாகக் காணப்படுவது இல்லை. இது தேவனுடைய அருளிரக்கத்திற்கு அழகிய உதாரணமாக உள்ளது.

"அருளிரக்கம்" ["providence"] என்பது *provideo* (*pro* என்றால் "முன்னால்" என்று அர்த்தம்; *video* என்றால் "காண" என்று அர்த்தம்) என்ற இலத்தீன் வார்த்தையில் இருந்து வருகிறது. *The New Dictionary of Theology* என்ற புத்தகம் இதை "the beneficent outworking of God's sovereignty whereby all events are directed and disposed to bring about those purposes of glory and good for which the universe was made" [எல்லா நிகழ்வுகளும், மகிமையின் நோக்கங்கள் மற்றும் இந்த அண்டத்திற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள நன்மை ஆகியவற்றைக் கொண்டுவருவதை நோக்கிச் செயல்படுத்த மற்றும் இயக்கப்பட்டுள்ள தேவனுடைய ராஜரீகத்தின் பயன்மிக்க வெளிச்செயல்பாடு] என்று விளக்குகிறது.

இந்தப் புத்தகத்தில் தேவனுடைய செயல்கள், அவர் நமது வாழ்வில் செய்கிறதுபோல, காட்சிகளுக்குப் பின்னணியில் இருப்பதால், இது விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது. தேவன் செயல்படுகின்றார் என்பது தெளிவாக உள்ளது!

நமது வேதபாடப் பகுதியில், எஸ்தரின் சொந்த வாழ்வில் தேவனுடைய அருளிரக்கச் செயல்பாடுகள் பற்றி அவள் ஆழ்ந்து சிந்திக்கும்படி அவளுக்கு மொர்தெகாய் அறைகூவல் விடுக்கின்றார்: "நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்?" (4:14).

I. தொலைவான முடிவுகளைச் சென்றடையும் காலம் (1, 2).
   A. வஸ்தியை விலக்கி வைக்கும் முடிவு (1).
      1. அகாஸ்வேரு (எக்ஸெரெக்ஸ்) அறிமுகம்.
      2. அரசரின் ஆடம்பர விருந்தும் வஸ்தியின் மறுப்பும்.
      3. அரசரின் முடிவும் ஆணையும்.
   B. இன்னொரு ராணியை நியமிக்கும் முடிவு (2).
      1. அரசர் (கி.மு. 480-479ல் கிரேக்கர்களிடம் தோல்வியடைந்த பின்பு?) தனிமையில் இருக்கின்றார். அழகிப்போட்டிக்கான முன்மொழிதல்.
      2. மொர்தெகாய் மற்றும் எஸ்தர் ஆகியோரின் அறிமுகம்.
      3. எஸ்தர் தேர்ந்துகொள்ளப்படுதல். அவள் ஒரு யூதப்பெண் என்பது அறியப்படவில்லை.
      4. பக்கக்குறிப்பு: மொர்தெகாய், அரசருக்கு எதிரான ஒரு சதித் திட்டத்தை முறியடிக்கிறார்.

II. நீண்டு நிலைநிற்கும் பகையுணர்வின் காலம் (3).
   A. ஆமானின் பகையுணர்வு.
      1. ஆமானின் அறிமுகம். ("ஆகாகியன்" என்பவன், சாமுவேலி

னால் கொல்லப்பட்ட அமலேக்கிய அரசனான ஆகாகு என்பவனது பின்சந்ததியாரில் ஒருவனாக இருக்கின்றான்.)

2. ஆமான், பெர்சியாவில் ஒரு பெரும் நாசத்தைத் தூண்ட முடிவு செய்கின்றான். யூதர்களை ஒழிக்க மிகச்சிறந்த நாளைத் தீர்மானிக்க, பூர் என்ற சீட்டு போடப்படுகிறது.

B. ஆமானின் சூழ்ச்சி: யூதர்களை அழிப்பதற்கான உத்தரவில் அரசர் கையெழுத்திடும்படி ஆமான் அரசருக்கு இலஞ்சம் கொடுக்க முன்வருகின்றான். பத்தாயிரம் தாலந்து வெள்ளி என்பது 375 டன்களுக்குச் சமமானதாகும்!

III. உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் தெரிவுகளின் காலம் (4).

A. நாடுமுழுவதும் யூதர்களின் புலம்புதல்.

B. மொர்தெகாய் எஸ்தரிடத்தில், அவளது மக்களுக்காக (அரசரிடம்) வேண்டுதல் செய்யும்படி அறைகூவல் விடுக்கின்றார். அவள் இந்த செயலின் அபாயத்தைப்பற்றி அவருக்கு நினைவூட்டுகின்றாள். அவள் ஏன் இதைச் செய்ய வேண்டும் என்பதற்கு அவர் தமது விவாதத்தை ஏற்படுத்துகின்றார் (4:13-17). எஸ்தர் செல்வதற்குத் தயாராகி “நான் செத்தாலும் சாகிறேன்” என்று கூறுகின்றாள் (4:16).

C. மூன்று நாட்கள் உபவாசம் (மற்றும் ஜெபம்?).

IV. உயிரைக் காப்பாற்றும் நடவடிக்கையின் காலம் (5:1-9:16).

A. அரசர் எஸ்தரை ஏற்றுக்கொள்கின்றார், எனவே அவள் இறப்பதில்லை. முதல் விருந்து தரப்படுகிறது மற்றும் இரண்டாம் விருந்திற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

B. ஆமான், மொர்தெகாயைத் தூக்கில் இடுவதற்காக எழுபத்தி ஐந்து அடிகள் உயரமான தூக்கு மரத்தைத் தயார் செய்விக்கின்றான்.

C. மொர்தெகாய் அரசருக்குச் செய்த சேவைக்காகக் கனப்படுத்தப் படுகின்றார்.

D. இரண்டாவது விருந்தில், ஆமானின் சதித்திட்டம் வெளிப்படுத்தப் படுகிறது. அவன் தானே தயார் செய்வித்திருந்த தூக்கு மரத்தில் தூக்கிலிடப்படுகின்றான்.

E. [யூதர்களை] அழிப்பதற்கென்று பிறப்பிக்கப்பட்ட முதல் சட்டமானது திரும்பப் பெற இயலாது, ஆனால் ஒரு எதிர்ச்சட்டம் எழுதப்படுகிறது, அதில் யூதர்கள் தங்களைத் தற்காத்து கொள்வதற்கும் திருப்பித்தாக்குவதற்கும் அனுமதியளிக்கப்படுகிறது.

F. [யூதர்களை] அழிப்பதற்கென்று நியமிக்கப்பட்ட நாளில், யூதர்கள் அரசரின் சேனைகளிடம் இருந்து உதவிபெற்று மாபெரும் வெற்றியடைகின்றனர்.

V. நீடித்து நிற்கும் கொண்டாட்டத்திற்கான காலம் (9:17-10:3).

A. பூரிம் பண்டிகை நிலைநாட்டப்படுகிறது (“பூரிம்” என்பது “பூர்” என்பதன் பன்மைச்சொல் ஆகும்).

B. மொர்தெகாய் உயர்த்தப்படுகின்றார்.

முடிவுரை

இந்தப் புத்தகத்தில் பல பாடங்கள் உள்ளன: ஒரு நபரின் முக்கியத்துவம்,

*விரோதங்களைப் பற்றிக்கொண்டிருப்பதில் உள்ள அபாயம் முதலியன. நாம் நம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தால், அவர் நமது வாழ்வில் செயலாற்றுவார் என்பது மாபெரும் பாடமாக உள்ளது!*

*இங்கு நாம் யாவரும் ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய கேள்வியொன்று உள்ளது: இந்த வேளையில் தேவன் நம்மை இந்த இடத்தில் எதற்காக வைத்திருக்கின்றார்? நாம் "இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும் படி" இங்கிருக்கின்றோமா?*

# 15

# யோபு: வேதாகமத்தில் மிகவும் பொறுமையான மற்றும் பொறுமையற்ற மனிதர்

*வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்: 1-11, 32-42.*

**தலைப்பு**

*யோபு என்ற புத்தகம் அதன் மையமான பாத்திரத்தைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது. இதன் தோற்றகால எபிரெயப் பெயரானது "துன்புறுத்தப்பட்ட ஒருவர்" என்று அர்த்தப்பட்டது.*

**பின்னணி**

*யோபின் புத்தகம் யூதத்துவக் கவிதைப் புத்தகங்களில் முதலாவதாக உள்ளது. இது நீதிமொழிகள் மற்றும் பிரசங்கி என்ற புத்தகங்களுடன் "ஞான இலக்கியம்" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.*

*இந்தப் புத்தகம் ஒரு உருவக/புனைவு நூல் அல்ல. யோபு என்பவர் ஒரு வரலாற்றுப் பாத்திரமாயிருக்கின்றார் (எசேக்கியேல் 14:14; யாக்கோபு 5:11). அவர் நாளைய தலைப்புச் செய்திகளில்கூட இடம்பெறக்கூடிய ஒரு கேள்வியுடன் போராடியவராய் இருக்கின்றார்: "நான் என் வாழ்நாள் முழுவதையும் தேவனைச் சேவிப்பதில் செலவிட்டிருந்தும் பயங்கரமான விஷயங்கள் எனக்குச் சம்பவிப்பது ஏன்?"*

*இந்தப் புத்தகம் மிகவும் பழைமையானதாக, ஒருவேளை இப்போது இருப்பவற்றிலேயே மிகவும் பழைய புத்தகமாக உள்ளது. இதில் சித்தரிக்கப்பட்டுள்ளது முற்பிதாக்களின் மதமாகும் (1:5). யோபு அனேகமாக ஆபிரகாமின் காலத்தில் வாழ்ந்தவராய் இருக்கலாம்.*

*இந்தப் புத்தகத்தை இதன் நவீன மொழிபெயர்ப்பில் கண்ணோக்குங்கள். முதல் இரண்டு அதிகாரங்களும் கடைசி அதிகாரத்தின் பெரும்பான்மை யான பகுதிகளும் உரைநடையில் உள்ளன; இப்புத்தகத்தின் நடுப்பகுதி (முப்பத்து ஒன்பது அதிகாரங்களுக்கும் மேற்பட்டபகுதி) கவிதையில் உள்ளது. யோபுவுக்கும், அவருக்கு "ஆறுதல்கூற" வந்தவர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல் கவித்திறன் கொண்டதாக இருப்பதில்லை. பேச்சாளர்களின் முறைப்படியான வரிசை, அடுக்குமொழிநடை, மற்றும் பிறருடைய பிரசன்னம் (32:2முதல்.) ஆகியவை திட்டமிட்ட ஒரு பொதுப்பட்டிமன்றத்தை, ஒரு வேளை (முன்னரே) எழுதிவைக்கப்பட்ட உரைகளைக் (13:26) கருத்தாகத் தெரிவிக்கின்றன. உரைகள் எழுதப்பட்டிருந்தால், யாரேனும் ஒருவர் அறிமுகத்தையும் முடிவுரையையும் அவற்றுடன் சேர்த்தார் என்றாகிறது. யூதர்களின் தல்மூத் என்ற புத்தகம், இதை எழுதியவர் மோசே என்று குறிப்பிடுகிறது. நமக்குப் பக்திவிருத்தியூட்டுவதற்காகத் தேவன் இப்புத்தகத்தைப் பாதுகாத்துள்ளார் என்பதை நாம் உறுதியாக அறிகின்றோம் (ரோமர் 15:4).*

*அடுக்குமொழிநடையானது பங்கேற்பாளர்களின் விவாதங்களைப்*

*பின்பற்றுவதைக் கடினமாக்குகிறது, ஆனால் பிரதான சிந்தனை தெளிவாக உள்ளது: யோபின் "நண்பர்கள்" யோபுவுக்கு நேர்ந்த சோதனைகள் யாவும் அவரது பாவத்தின் விளைவுதான் என்று கூறுகின்றனர், அதாவது நீதிமான்கள் இவ்வளவாகத் தண்டிக்கப்படுவதில்லை - மற்றும் யோபு தமது பாவத்தை ஒப்புக்கொள்ளவில்லையென்றால், அவர் மாய்மாலம் என்ற பாவத்தையும் கூட்டிக்கொண்டார் என்று கூறுகின்றனர். யோபுவோ, தமக்கு நேர்ந்த துன்பங்கள் தமது சொந்தப் பாவங்களால் நேர்ந்தவை அல்ல என்று வலியுறுத்துகின்றார். அவர் தமது குற்றமின்மையைக் கூறி இறைஞ்சுவதுடன், குற்றமற்றவர்கள் துன்புறுகையில் துன்மார்க்கர் செழித்திருத்தல் என்பது அடிக்கடி நடைபெறுகிறது என்றும் குறிப்பிடுகின்றார். இப்புத்தகத்தின் முடிவில், யோபுவின் அடிப்படை நிலைப்பாடு சரியானதாக உள்ளது என்று தேவன் கூறுகின்றார் (42:7).*

*சிலர், எலிகூ என்பவர் தேவனுடைய பூமிக்குரிய அல்லது வானத்திற்குரிய செய்தியாளர் என்று நினைக்கின்றனர். இதற்கு, இப்புத்தகத்தின் முடிவில், தேவன் எலிகூவின் பெயரைக் குறிப்பிடாதிருத்தல் என்பது பலத்த ஆதார மாக உள்ளது (42:7முதல்.). இவ்வரலாற்றில் எலிகூவின் உரையானது, இம்மூன்று மனிதர்களுக்கும் யோபுவுக்கும் இடையில் நடைபெற்ற வாக்குவாதத்தில் இருந்து தேவனுக்கும் யோபுவுக்கும் இடையில் நடைபெறும் வாக்குவாதத்திற்கு மாறும் இடமாக செயல்படுகிறது.*

**வரைகுறிப்பு**

- I. *யோபுவின் துன்பங்களுக்கான பின்னணி (1, 2).*
- II. *யோபுவின் துன்பங்கள் பற்றிய கலந்துரையாடல் (3:1-42:6).*
  - A. *யோபு தமது "நண்பர்களுடன்" கலந்துரையாடுதல் (3-31).*
    1. *யோபுவின் முறையீடு (3).*
    2. *முதல் சுழற்சி (4-14).*
       - a. *எலிப்பாஸின் முதல் உரை; யோபுவின் பதில் (4-7).*
       - b. *பில்தாதின் முதல் உரை; யோபுவின் பதில் (8-10).*
       - c. *சோப்பாரின் முதல் உரை; யோபுவின் பதில் (11-14).*
    3. *இரண்டாம் சுழற்சி (15-21).*
    4. *மூன்றாம் சுழற்சி (22-31).*
  - B. *எலிகூவின் மாறுதல் ஏற்படுத்தும் உரை (32-37).*
  - C. *தேவன் சுழற்காற்றில் யோபுவுடன் பேசுதல் (38-41).*
    1. *தேவன் கேள்விகளை முன்வைக்கின்றார் (38, 39); யோபுவினால் பதில் அளிக்க இயலவில்லை (40:1-5).*
    2. *அதிகமான கேள்விகள் (40:6-41:34); யோபு மனந்திரும்புகின்றார் (42:1-6).*
- III. *யோபுவின் துன்பத்தினுடைய விளைவு (42:7-17).*
  - A. *யோபு சரியானவர் என்று நியாயப்படுத்தப்படுகின்றார் (42:7-9).*
  - B. *யோபு பலன் அளிக்கப்படுகின்றார் (42:10-17).*

**யோபுவின் புத்தகத்தில் இருந்து பாடங்கள்**

*யோபு அவரது பொறுமையைக் கொண்டு அறியப்படுகின்றார் (யாக்கோபு 5:11), ஆனால் அவரது விஷயத்தில் "பொறுமை" என்பது "தாழ்மையாக*

ஏற்றுக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படுவதில்லை. யோபு தமக்கு நேர்ந்ததைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ளவில்லை. என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அவர் அறியாதிருந்தார்; அவர் ஊக்கம் இழந்தார்; அவர் உரத்த குரலில் வெருட்டிக்கொண்டும் பிதற்றிக்கொண்டும் இருந்தார். நாம் வழக்க மாகப் பயன்படுத்தும் வகையின்படி யோபு பொறுமையற்றவராய் இருந்தார். பின்பு யோபு எவ்வாறு "பொறுமை" உள்ளவராய் இருந்தார்? இவ்விடத்தில் "பொறுமை" என்பது "சகிப்புத் தன்மை" அல்லது விட்டுக்கொடுக்க மறுத்தல் என்று அர்த்தப்படுகிறது. யோபு உண்மையில், "எனக்கு என்ன நேர்ந்தாலும், நான் தேவனுடனே தங்கியிருப்பேன்!" என்று கூறினார் (1:21; 2:10). சில வேளைகளில் நாம் யாவருமே ஊக்கம் இழந்து விடுகின்றோம்; அசைக்க இயலாத உறுதிப் பாட்டைத் தேவனிடம் கொண்டிருத்தல் என்பது நமது வாழ்வின் மாபெரும் தேவையாக உள்ளது ( யாக்கோபு 5:10, 11).

துன்புறுதல் (ஏன்?) என்ற கேள்விக்கு யோபுவின் புத்தகத்தில் உள்ள பதி லானது உங்களை ஏமாற்றம் அடையச் செய்யலாம். "ஏன்?" என்ற யோபுவின் கேள்விக்குத் தேவன் ஒருக்காலும் பதில் அளிப்பதில்லை, அதற்குப்பதிலாகத் தேவன் யோபுவினால் பதில் அளிக்க இயலாத, இயற்கையைப் பற்றிய பல கேள்விகளைக் கேட்கின்றார். யோபு காணக்கூடிய மற்றும் தொடக்கூடிய விஷயங்களைப் பற்றிப் புரிந்து கொள்ள இயலாது என்றால், அவர் ஆவிக்குரிய விஷயங்களை எப்படிப் புரிந்துகொள்ளமுடியும்? என்பதே இங்கு கருத்தாகக் காணப்படுகிறது. தேவனுடைய நோக்கங்களை நாம் புரிந்து கொள்ள இயலாது என்பதால், நாம் விஷயங்களைத் தேவனுடைய கரங்களில் விட்டுவிட்டு, அவர்மீது நம்பிக்கையுடன் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் இவ்வாறு செய்தால், விஷயங்கள் யாவும் யோபுவுக்குச் சரியானவைகளாய்த் திரும்பியது போன்றே, நமக்கும் சரியானவைகளாகத் திரும்பவும் (ரோமர் 8:28). இது அறிவுப்பூர்வமாகத் திருப்தியளிக்காததாக இருக்கலாம்; ஆனால் கிறிஸ்தவரின் வாழ்வில் துன்பம் தாக்குகிறபோது, இது ஒன்றுதான் அழியாத ஆறுதல் கொண்டுவரும் பதிலாக உள்ளது.

யோபுவின் புத்தகம் துன்புறுதலுக்குக் கடைசி வார்த்தையாக இருப்பதில்லை; துன்புறுதல்மீது மாபெரும் பாடம் புதிய ஏற்பாட்டில் - நாம் இரட்சிக்கப்படும்படிக்கு, நிறைவான நீதியுள்ள நபர் துன்புறுகையில் - காணப்படுகிறது (எபிரெயர் 2:9, 18; 2 தீமோத்தேயு 2:12).

## தேவனைச் சேவிப்பதற்கு நீங்கள் செலுத்தும் விலை என்ன? (யோபு)

யோபுவின் புத்தகத்தைப் பல படிநிலைகளில் படிக்க முடியும். இது வினோதமான பழக்கங்கள்கொண்ட மிகவும் பழமைவாய்ந்த புத்தகமாக உள்ளது. இது இயற்கையைப்பற்றிக் கூறக்கூடிய மனங்கவரும் விஷயங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. இது அனேகமாக, இன்னமும் நம்மை வாதிக்கக்கூடிய ஒரு பிரச்சனையைப்பற்றிப் போராடுகிற முதல் புத்தகமாயிருக்கலாம்: "நல்ல மனிதர்களுக்கு மோசமான விஷயங்கள் நடப்பது ஏன்?" இது பொறுமையுடன் சகித்திருத்தல் என்ற வேதாகமக் கருத்திற்கான சிறப்பான விவரிப்பாக உள்ளது (யாக்கோபு 5:11).

*நாம் இப்புத்தகத்தை நமது வாழ்வு முழுவதையும் தொடுகிற படிநிலைகளில் படிப்போமாக.*

I. *ஆழமான படிநிலை: ஆவிக்குரிய உலகத்தின் செயல்களுக்குள் ஒரு பார்வை.*

A. *இந்தப் புத்தகம் எல்லாவற்றையும் நமக்குக் கூறுவதில்லை, ஆனால் இது பூமியில் நடப்பவற்றின்மீது செயல்தாக்கம் ஏற்படுத்தும் வகையில் பரலோகத்தில் நடப்பவற்றை நாம் காணச்செய்கிறது.*

1. *பூமியில்: 1:1-5.*
2. *பரலோகத்தில்: 1:6-12 (1 பேதுரு 5:8ஐக் கவனிக்கவும்).*
3. *பூமியில்: 1:13-22.*
4. *பரலோகத்தில்: 2:1-6.*
5. *பூமியில்: 2:7-10.*

B. *இவ்வரலாற்றில் இருந்து சில உட்கண்ணோட்டங்கள்:*

1. *சாத்தான் மற்றும் அவனது செயல் ஆகியவற்றிற்குள் சில உட்கண்ணோட்டங்கள்.*
   a. *சாத்தான் உண்மையில் நிலவுகின்றான்.*
   b. *சாத்தான் மனிதனை அழிக்க முயற்சி செய்கின்றான்.*
   c. *சாத்தான் வல்லமை நிறைந்தவனாக இருக்கின்றான், ஆனால் அவன் சர்வவல்லமை, சர்வவியாபகம், அல்லது சகலமும் அறிந்தநிலை ஆகியவற்றைக் கொண்டிருப்ப தில்லை (யாக்கோபு 4:7).*
2. *தெய்வீக செயல்களுக்குள் சில உட்கண்ணோட்டங்கள்.*
   a. *சாத்தான் செய்கின்றவற்றைத் தேவன் அனுமதிக்கின்றார்; யோபுவுக்கு நடந்தவற்றில் தேவன் செயல்படும் நிலையில் இருந்தார் என்றுகூடக் கூறப்படுகிறார் (42:11). தேவனும் சாத்தானும் ஒரே நிகழ்ச்சியில் ஒரே வேளையில்செயல் பட்டுக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒத்துழைப்ப தில்லை; அவர்களின் நோக்கங்கள் முற்றிலும் மாறு பட்டதாக உள்ளன. சாத்தான் யோபுவை அழிக்க முயற்சி செய்கின் றான்; தேவன் யோபுவுக்கு உதவ முயற்சி செய்கின்றார். இவ்விருவரும் ஒருவர் அழிக்கவும், மற்றவர் உதவவும் ஒன்றாக செயல்படும் மற்ற நிகழ்ச்சிகள்: உதாரணத்திற்கு, சிலுவை மற்றும் பவுலின் "சரீரத்தில் இருந்த முள்" (2 கொரிந்தியர் 12:7, 9 ஆகியவற்றைக் காணவும்).*
   b. *தேவன் ஒருவேளை, யோபுவின் மேட்டிமைப் பிரச்ச னைக்கு உதவ முயற்சி செய்திருக்கலாம் (33:17; 42:5, 6 ஆகியவற்றைக் காணவும்).*

C. *இடர்ப்பாடு வருகிறபோது, அது நேரடியாகத் தேவனிடத்தில் இருந்து வருவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்வது அவசிய மாய் இருக்கிறது. தேவன் அந்த நிகழ்ச்சியை நாம் மேன்மையான மக்களாகும்படிக்குப் பயன்படுத்தக்கூடும் என்பதையும் நாம் புரிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது!*

II. *ஆழமானவரின் படிநிலை: நாம் தேவனைச் சேவிக்கின்றோம்.*

A. *தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான கருத்துப் பரிமாற் றத் தில், கீழாக இருக்கும் ஒரு ஆய்வுப்பொருள் உதயமாகிறது: மனிதன் சுயநல நோக்கம்இன்றி தேவனைச் சேவிப்பானா?*

1. *ஒவ்வொரு மனிதனும் தேவனைச் சேவித்தல் என்ற நிலைக்கு வரும் போது, தனக்கென ஒரு விலையைக் கொண்டுள்ளான் என்று சாத்தான் நம்புகின்றான் (1:10, 11; 2:4). எல்லாரும் இல்லை யென்றாலும், பெரும்பான்மையானவர்கள், தேவனைச் சேவிப்பதில் இருந்து கிடைக்கும் ஆதாயத்திற்காகவே - உலகப் பிரகாரமான செல்வம், மகிழ்ச்சியான குடும்பம், நல்ல ஆரோக்கியம் அல்லது வேறு ஏதாவது கிடைக்கும் என்பதற்காகவே - அவரைச் சேவிக்கின்றனர் என்று அவன் நினைத்தான், மற்றும் அவர்கள் அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுதல் நின்றுபோனால், அவர்கள் தேவனை விட்டுப் புறம்பே திரும்பிவிடுவார்கள் என்றும் சாத்தான் நினைத்தான்.*
2. *யோபுவின் நண்பர்கள் தங்களின் விசுவாசத்தை அவ்வாறு குறிப்பிடவில்லை; ஆனால் அவர்கள் இன்னமும், ஒருவர் தம் வாழ்வில் விரும்புகின்றவற்றைப் பெறுவதற்குத் தேவனைச் சேவிக்கலாம் என்றும், ஒருவர் வாழ்வில் தாம் விரும்புகின்ற வற்றைப் பெறாது இருந்தால், தேவனுடன் அவர் கொண்டுள்ள உறவில் ஏதோ தவறு இருக்கிறது என்றும் நம்பினர். இதே தத்துவக்கருத்தில் வளர்க்கப்பட்டிருந்த யோபுவும், "நியாய மில்லை! நியாயமில்லை!" என்று கதறினார்.*
3. *"ஆரோக்கியமான மற்றும் ஐசுவரியமிக்க சுவிசேஷத்தில்" சாத்தானின் செல்வாக்கு இன்னமும் காணப்படக்கூடும்: "தேவனைச் சேவியுங்கள் (மற்றும் எங்களுக்குப் பணம் அனுப்புங்கள்), அப்போது நீங்கள் விரும்புகின்ற யாவற்றையும் தேவன் உங்களுக்குக் கொடுப்பார்!"*
4. *நாம் இதே வலையில் விழக்கூடும். நாம் அடிக்கடி, "தேவனைச் சேவியுங்கள், அப்போது நீங்கள் மகிழ்வான வாழ்வை, மாபெரும் திருமணங்களை மற்றும் நிதிநிலையில் வளமான சூழ்நிலையைக் கொண்டிருப்பீர்கள்" என்கிறோம்.*
   a. *கிறிஸ்தவமானது எந்த வாழ்வையும் உயர்த்தக்கூடும்; ஆனால் இது மாத்திரமே நமது சிந்தனை அடைந்தி ருக்கக் கூடிய தொலைவாயிருந்தால், நமது சிந்தையில் சந்தேகத்தை நடுவதற்குச் சாத்தானுக்கு நாம் நமது சிந்தையை விரிவாய்த் திறந்து கொடுத்தவர்களாய் இருப்போம்.*
   b. *யோபுவுக்கு நடந்ததைப்போன்று, உலகமே நம்மீது விழும் போது என்ன நடக்கிறது? நாம் மதிப்புமிக்கவையாக பற்றிக்கொண்டுள்ள யாவும் நம்மிடத்திலிருந்து எடுக்கப் படும்போது இன்னும் நாம் தேவனைச் சேவிப்போமா?*

B. *தேவனைச் சேவித்தல் என்பது சரியானதாக இருப்பதால் நாம் அதைச் செய்ய வேண்டும்! இதை உணர்ந்தறிய யோபுவுக்கு நாற்பத்து இரண்டு அதிகாரங்கள் தேவைப்பட்டன, ஆனால் கடைசியில் அவர், "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" என்று, அதாவது உண்மையில், "நீர் தேவனாயிருக்கிறீர், அந்தக் காரணத்திற்காகவே நான் உம்முன் பணிகின்றேன், வேறு எதற்காகவுமல்ல" என்று கூறினார் (42:2). தேவன்மீது நாம் பற்றுறுதி கொண்டிருக்க அவர் பாத்திரராயிருக்கிறார்! இது கடினமானதா யிருக்கிறது, ஆனாலும் இது சரியானதாயிருக்கிறது!*

*முடிவுரை*

தேவனைச் சேவிப்பதற்கு நாம் விலை எதையாவது கொண்டிருக் கின்றோமா? இது நம்மை நாமே கேட்டுக்கொள்ளத் தகுதியான கேள்வியாக உள்ளது.

# 16

# சங்கீதம்: யூதர்களின் பாடல் புத்தகம்

***வாசிக்க வேண்டிய சங்கீதம்:** 1, 2, 8, 14, 15, 19, 22, 23, 32, 37, 42, 46, 51, 73, 90, 100, 110, 121, 122, 127, 136, 137, 139, 148.*

**தலைப்பு**

*சங்கீதம் என்பதற்கான எபிரெயப்பெயர், "துதிகளின் புத்தகம்" என்று அர்த்தப்படுகிறது. நமது தலைப்பானது, அடிப்படையில் "பாடல்கள்" என்று அர்த்தப்படுகிற psalmos என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது.*

**பின்னணி**

*சங்கீதங்களின் புத்தகம், இஸ்ரவேல் மக்களின் ஜெபபுத்தகமாகவும் பாடல்நூலாகவும் இருந்தது. இது தனிப்பட்ட மற்றும் பொதுவான ஆராதனையில் பயன்படுத்தப்பட்டது. தொடக்ககால சபையார் தங்களின் ஆராதனையில், சங்கீதங்களில் சிலவற்றைப் பயன்படுத்தியிருக்கலாம் (எபேசியர் 5:19). நாம் இன்னமும் சங்கீதங்கள் 19, 23, 100, மற்றும் பிறவற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட பாடல்களைப் பாடுகிறோம்.*

*சங்கீதங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருப் பினும், அவைகள் காலம் கடந்தவைகளாக நிலைத்துள்ளன. அவைகள் பெருவருத்தத்தின் ஆழங்களைப் பற்றியும் மகிழ்ச்சியின் உயரங்களைப் பற்றியும் கூறுகின்றன. அவைகள் எப்போதுமே, அவற்றை எழுதியவர் தேவனுடன் கொண்டுள்ள உறவுபற்றிப் பேசுகின்றன. அவைகள் இன்றைய நாட்களில் நமது இருதயங்களில் பதில் செயலை ஏற்படுத்தி, பல கிறிஸ்தவர்களுக்குப் பழைய ஏற்பாட்டில் இதை மிகவிருப்பமான புத்தகமாக ஆக்கியுள்ளன.*

*இப்புத்தகம் கவிதையாக எழுதப்பட்டுள்ளது (நவீன மொழி பெயர்ப்பைக் கவனிக்கவும்). யூதர்களின் கவிதை எதுகை மோனையுடன் அல்ல, ஆனால் சந்த இனிமையுடன் எழுதப்பட்டது. அவர்களின் கவிதை, இணைகருத்தியத்தைப் பயன்படுத்திற்று. ஒருபொருள் இணைகருத்தியம் (ஒரே விஷயத்தை மாறுபட்ட வார்த்தைகளில் கூறும் இரு வரிகள்; சங்கீதம் 19:1, 2ஐ கவனிக்கவும்) மற்றும் எதிர்ப்பொருள் இணைகருத்தியம் (முதல் வரி ஒரு சிந்தனையை வெளிப்படுத்த, அடுத்தவரி நாணயத்தின் மறு பக்கத்தை தரும் வகையிலானது; சங்கீதம் 1:6ஐக் கவனிக்கவும்) என்பவை இணைகருத்தியத்தின் மிகவும் பொதுவான வகைகளாய் இருந்தன.*

*இந்தப் புத்தகத்தை நாம் பொதுவாக தாவீதின் சங்கீதங்கள் என்று நினைக்கின்றோம். தாவீது "இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின"வர் என்று அறியப்பட்டிருந்தார் (2 சாமுவேல் 23:1; லூக்கா 20:42ஐயும் காணவும்). சங்கீதங்களுக்கு முன்பாக உள்ள குறிப்புகளின்படி, சங்கீதங்களில் குறைந்தது பாதியையாவது தாவீது எழுதியிருந்தாலும், மோசே, தாவீதின் பாடல் தலைவர்கள் மூவர் (1 நாளாகமம் 15:16-20; 16:37-42), மற்றும் சாலொமோன் உட்பட பல எழுத்தாளர்கள் இப்புத்தகத்திற்குப் பங்களித்துள்ளனர்.*

செப்துவஜிந்த் வேதாகமம், சங்கீதம் 1 மற்றும் 119 ஆகியவற்றை எஸ்றா எழுதினார் என்று குறிப்பிடுகிறது, அனேகமாக இவர் கடைசித் தொகுப்பாளராய் இருந்திருக்கலாம்.

சங்கீதங்களுக்கு முன்புள்ள குறிப்புகள் எங்கே தோன்றின என்று நாம் அறிவதில்லை, ஆனால் அவைகள் செப்துவஜிந்த் வேதாகமத்திற்கு முற்பட்டவைகளாய் இருக்கின்றன. இவைகள் ஏவுதல் பெற்றவையல்ல என்றாலும், பொதுவாக உதவிநிறைந்தவைகளாய் இருக்கின்றன. இக்குறிப்புகளில் பல, இசை இலக்குகளைக் குறிப்பிடுகின்றன; மறைவான அர்த்தம் கொண்டுள்ள சில வார்த்தைகள் அனேகமாக, நன்கு பழக்கப்பட்டிருந்த மெட்டுக்களின் பெயர்களாய் இருக்கலாம் (நல்ல பக்கக்குறிப்புகளும் அடிக்குறிப்புகளும் கொண்ட ஒரு வேதாகமத்தில் பரிசீலனை செய்யுங்கள்). சங்கீதங்களுக்குள்ளாகவே சில வேளைகளில் இசை இலக்குகள் காணப்படுகின்றன; உதாரணமாக, "சேலா," என்பது ஒரு சிறு இடைவேளையைக் குறிப்பிடலாம்.

**வரைகுறிப்பு**

சங்கீதங்களின் புத்தகம் ஐந்து புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உங்கள் வேதாகமத்தில் இது சுட்டிக்காண்பிக்கப்படவில்லை என்றால், ஒவ்வொரு பிரிவிலும் உள்ள கடைசிச் சில வசனங்களைப் பரிசீலனை செய்யுங்கள். ஒவ்வொரு புத்தகமும் "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படுவாராக. …" என்பது போன்ற வார்த்தைகளுடன் முடிகின்றன.

I. 1-41 (பிரதானமாக தாவீதின் சங்கீதங்கள்?).
II. 42-72 (பிரதானமாக வரலாற்று சங்கீதங்கள்?).
III. 73-89 (பிரதானமாக சடங்குரீதியான சங்கீதங்கள்?).
IV. 90-106 (பிரதானமாக சிறையிருப்பிற்கு முற்பட்ட சங்கீதங்கள்?).
V. 107-150 (பிரதானமாக, சிறையிருப்பின், மீளக்கட்டுவித்தலின் சங்கீதங்கள்?).

சங்கீதங்களில் ஆர்வத்திற்குரிய பல பிரிவுகளும் வகைகளும் உள்ளன. முதல் சில எழுத்துக்களை கூட்டுவதால் சொல்லுண்டாக்கும் சித்திரகவி (சங்கீதம் 25, 34, 37, 111, 112, 145 போன்ற) சங்கீதங்கள் உள்ளன; இந்த சங்கீதங்களில், முதல் வரியின் முதல் சொல்லானது எபிரெய அகர வரிசையின் முதல் எழுத்தைக் கொண்டிருக்கும், பின்வரும் ஒவ்வொரு வரியும் அடுத்தடுத்த எழுத்துக்களைக் கொண்டும் தொடங்கும். சங்கீதங்கள் 90 முதல் 100 வரையில் உள்ளவை யூதர்களின் தொடக்கப் பாடல் புத்தகமாக இருந்திருக்கலாம். ஹல்லெல் (அல்லது "துதி") சங்கீதங்கள் (113-118, 136) பஸ்காவில் பயன்படுத்தப்பட்டன (இவைகள் கடைசி இராப்போஜனத்தில் இயேசு மற்றும் அவரது சீஷர்களால் பாடப்பட்டிருக்கலாம்). "ஆரோகண சங்கீதங்கள்" (120-134) எருசலேமுக்குச் செல்லும் திருப்பயணிகளால் பாடப்பட்டன. இப்புத்தகம் அல்லேலூயா சங்கீதங்களுடன் முடிவடைகிறது (146-150). "அல்லேலூயா" என்றால் "யெகோவாவைத் துதியுங்கள்" என்று அர்த்தமாகிறது.

சங்கீதங்கள் பெரும்பாலும் அவற்றின் வகைகளின்படி படிக்கப்படுகின்றன: ராஜரீக சங்கீதங்கள் (சங்கீதம் 2 போன்றவை), வரலாற்று ரீதியான சங்கீதங்கள் (66), படைப்பின் சங்கீதங்கள் (8), தேவனின் வசனத்தை மகிமைப்படுத்தும் சங்கீதங்கள் (119), மனம்வருந்தும் சங்கீதங்கள் (51), நன்றிசெலுத்துதலின்

*சங்கீதங்கள் (103), முதலியன. சங்கீதம் 58 போன்ற பழிதீர்த்தலின் சங்கீதங்கள் என்பது நமக்கு மிகவும் கடினமான வகைப் பாடாக உள்ளது. இந்த சங்கீதங்களைப் பொறுத்த மட்டில், பின்வரும் கருத்துக்களை மனதில் வைத்துக்கொள்ளுங்கள் (1) சங்கீதங்களின் புத்தகம் பழைய ஏற்பாட்டில் உள்ளது (2) சங்கீதக்காரர், பழிதீர்த்தல் என்ற விஷயத்தைத் தேவனுடைய கரங்களில் விட்டு விடுகின்றார்; அவர் சட்டத்தை தமது சொந்தக் கைகளில் எடுத்துக் கொள்வதில்லை.*

***சங்கீதங்களில் இருந்து பாடங்கள்***

*இன்றைய நாட்களில் ஆராதனைக்கான குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு நாம் புதிய ஏற்பாட்டிற்குச் செல்ல வேண்டும் என்றாலும், சங்கீதங்களின் புத்தக மானது ஆராதனைக்குரிய ஆவியைப் பற்றி நமக்கு அதிகமாகப் போதிக்கிறது. உண்மையான ஆராதனை என்பது வெறும் சடங்காயிருப்பதில்லை; அது தேவனுடனான உறவின் அடிப்படையில் மற்றும் தேவனுடனான ஒரு வாழ்வின் அடிப்படையில் அமைந்துள்ளது (சங்கீதம் 84; யோவான் 4:23, 24 ஆகியவற்றை காணவும்).*

*சங்கீதங்களின் புத்தகத்தை தீர்க்கதரிசனம் என்பதற்கு மாறாக கவிதை என்று நாம் வகைப்படுத்தியிருந்தாலும், பழைய ஏற்பாட்டின் வேறு எந்தப் புத்தகத்தைக் காட்டிலும் சங்கீதங்களின் புத்தகத்தில் இருந்து அதிகமான குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. புதிய ஏற்பாட்டில் உள்ள 283 பழைய ஏற்பாட்டு மேற் கோள்களில், 116 சங்கீதங்களின் புத்தகத்தில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.*

*மேசியாத்துவக் குறிப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் இருக்கின்றன (லூக்கா 24:44ஐக் கவனிக்கவும்). சங்கீதங்களின் புத்தகமானது மற்ற விஷயங்களின் மத்தியில் இயேசுவின் குமாரத்துவம் (2:7), அவரது ஊழியம் (40:7, 8), அவரது வைராக்கியம் (69:9), அவர் புறக்கணிக்கப்படுதல் (118:22), மற்றும் அவர் காட்டிக்கொடுக்கப்படுதல் (41:9) ஆகியவற்றைப் பற்றி நமக்குக் கூறுகிறது. அவரது மரணம் சங்கீதம் 22ல் விவரிக்கப்படுகிறது, அதைப்பற்றிய விவரம் 34:20 மற்றும் 69:21 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளது. அவரது உயிர்த்தெழுதல் (16:8-10), பரத்துக்கேறுதல் (24:7-10; 68:18), மகிமையடைதல் (110:1), மற்றும் ஆளுகை (8:6) ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

## *"ஏன் என்னைக் கைவிட்டீர்?" (சங்கீதம் 22)*

*நீங்கள் "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்ற வார்த்தைகளைக் கேட்கும்போது, சிலுவையில் இயேசுவின் வார்த்தைகளைப் பற்றி நினைப் பீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் இவ்வார்த்தைகள் சங்கீதம் 22 முதல் வசனத்தில் இருந்து வருகின்றன. வேறு எந்த சங்கீதத்தைக் காட்டிலும் 22ம் சங்கீதத்தில் அதிகமான வரிகள் இயேசுவுக்கு நடைமுறைப்படுகின்றன. சங்கீதங்கள் 22, 23 மற்றும் 24 ஆகியவை இயேசுவைப் பற்றிக் கூறுகிற சங்கீதங்களின் மும்மைத் தொகுதியாக அடிக்கடி நினைக்கப்படுகின்றன: சிலுவை (22), வளைத்தடி (23), மற்றும் கிரீடம் (24).*

*சங்கீதம் 22ஐப் பின்வரும் மூன்று கண்ணோட்டக் கருத்துக்களில் அணுகமுடியும்: (1) இந்த சங்கீதத்தை எழுதிய தாவீதின் கண்ணோட்டம்; (2) இந்த சங்கீதத்தின் நிபந்தனைகளை முற்றிலும் நிறைவேற்றியவரான இயேசுவின் கண்ணோட்டம்; மற்றும் (3) இந்த சங்கீதம் நமக்காகப்*

பதிவுசெய்யப்பட்டுள்ளது, எனவே நமது கண்ணோட்டம் (ரோமர் 15:4).

I. துன்புறுதல் பற்றிய செய்தி.

A. தாவீதின் பிரச்சனைகள், இவை அவர் சவுலினால் துரத்தப்பட்டுக் கொண்டிருந்த காலத்தின்போது ஏற்பட்டிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது (வசனங்கள் 1-21).

1. சங்கீதங்களில் அடிப்படையாக மூன்று பிரச்சனைகள் பற்றிப் பேசப்படுகிறது; தாவீது இம்மூன்றைப் பற்றியும் பேசுகின்றார்:

a. தேவனால் கைவிடப்பட்டு இருப்பதாக உணருதல் (வசனம் 1; வசனங்கள் 6-8, 11, 19 ஆகியவற்றையும் காணவும்).

b. சரீரப்பிரகாரமான (மற்றும் ஆவிக்குரிய?) சுகவீனம் வசனங்கள் 14, 15, 17).

c. வலிமைமிக்க எதிரிகளின் துன்புறுத்தல் (வசனங்கள் 6-8, 12, 13, 16-18).

2. தாவீது கலக்கம் அடைந்திருந்தாலும், அவர் தமது விசுவா சத்தைக் கைவிடவில்லை. முதல் இருபத்தியோரு வசனங்களில் தாவீதின் கவனக்குவிப்பு அவரது இடர்ப்பாடு மற்றும் தேவன் ஆகிய இருதரப்பிற்கும் இடையில் தொடர்ந்து மாறிக் கொள்கிறது.

B. தாவீதின் துதி, இது ஒருவேளை, அவரது ஜெபத்திற்குத் தேவன் பதில் அளித்த பின்பு ஏறெடுக்கப்பட்டிருக்கலாம் (வசனங்கள் 22-31).

1. அவரைத் தேவன் எவ்வளவாக ஆசீர்வதித்திருந்தார் என்ப தற்காகத் துதித்தல்:

a. அவரை (தேவனை) தாவீது "சபையின் நடுவில்" துதிப்பார் மற்றும் அவரைப் பிறரும் துதிக்கும்படி உற்சாகப்படுத்துவார்.

b. அவர் தமக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொள்ளுவார்.

c. மற்றவர்கள் விசுவாசத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

2. இந்த சங்கீதம் தத்தளிப்பில் ("ஏன்?") தொடங்கி தன்னம்பிக் கையில் ("அவரே இவைகளைச் செய்தார்") முடிகிறது.

C. நமக்கு ஒரு பாடம்: நமது வாழ்வில் இடர்ப்பாடுகள் வரும்போது, நாம் சிலவேளைகளில், "தேவன் கைவிட்டார்" என்பதாக உணருவது உண்டு; ஆனால் தேவன் எப்போதுமே அங்கு இருக் கின்றார், நமது இடர்ப்பாடுகளின் மத்தியிலும் அவர் இருக்கின்றார் என்பதை நமது சிந்தையில் காத்துக்கொள்வது அவசியமாகும் (சங்கீதம் 46:1). நாம் விசுவாசத்தை இழக்காமல் இருந்தால், நாம் வெற்றிபெறுவோம்.

II. இரட்சிப்பைப் பற்றிய ஒரு பாடம்.

A. ஒரு சங்கீதத்தின் முதல்வரி கொடுக்கப்பட்டபோது, வேதவசனங்

களை அறிந்துள்ளவர்களின் சிந்தைகளுக்கு அந்த சங்கீதம் முழுவதும் நினைவில் கொண்டுவரப்படுகிறது.

B. சங்கீதம் 22ன் முதல் வரியை இயேசு எதிரொலித்தபோது, அவர் அந்த சங்கீதத்தில் உள்ள வேதனையைப் பற்றி மாத்திரம் அல்ல, ஆனால் அதில் உள்ள வாக்குத்தத்தம் பற்றியும் உரைத்திருக்கலாம் (1 பேதுரு 1:11).

1. இந்த சங்கீதமானது இயேசுவின் துன்பம் பற்றிய ஒரு அளவையின் ரீதியான சித்தரிப்பைத் தருகிறது.
    a. அவரது கைகளையும் கால்களையும் [ஆணியால்] உருவக் குத்துதல் (வசனம் 16; லூக்கா 23:33; 24:36-40; யோவான் 20:24-29).
    b. அவரது வஸ்திரங்கள் உரியப்படுதல்; கடந்துசென்றவர்கள் பார்வைக்கு வெளிப்படுதல் (வசனம் 17).
    c. அவரது உடையின்பேரில் சீட்டுப்போடுதல் (வசனம் 18; மத்தேயு 27:35; மாற்கு 15:24; லூக்கா 23:34; யோவான் 19:24).
    d. போர்ச்சேவகர்கள் மற்றும் கூட்டத்தார் ஆகியோரின் தவறான செயல்கள் (வசனங்கள் 6-8; மத்தேயு 27:39முதல்.; மாற்கு 15:20, 29முதல்.).
    e. இயேசுவின் விரோதிகளினுடைய வார்த்தைகள் (வசனம் 8; மத்தேயு 27:43; லூக்கா 23:35).
    f. சிலுவையில் அவரது கதறுதல் (வசனம் 1; மத்தேயு 27:46; மாற்கு 15:34).
    g. "நான் தாகமாயிருக்கிறேன்" என்ற வார்த்தைகள் (ஒரு வேளை வசனம் 15; யோவான் 19:28-30).
2. இந்த சங்கீதம் இயேசுவின் மகிமையையும் - அவரது உயிர்த்தெழுதல், அவர் பரத்துக்கு ஏறுதல், அவரது ராஜ்யம் நிலை நாட்டப்படுதல், மற்றும் அதன் வளர்ச்சி ஆகியவற்றை - முன்னெதிர் நோக்குகிறது. எபிரெயர் 2:12 வசனம் சங்கீதங்கள் 22ஐ மேற்கோள் காண்பிக்கிறது.

C. நமக்குப் பாடங்கள்:

1. இயேசுவின் மரணம் என்பது தேவனுடைய திட்டத்தின் படியானதாக, நமக்கு மீட்பைக் கொண்டுவரும் திட்டத்தின் படியானதாக இருந்தது. இந்த சங்கீதம் "ஏன்?" என்ற கேள்வியுடன் தொடங்குகிறது. இப்போது நாம் "எதற்காக" என்பதை அறிகின்றோம் (ஏசாயா 53:6; 1 கொரிந்தியர் 15:4).
2. தேவனுடைய அற்புதமான அளிப்புகளை நாம் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின்மூலம் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது!

முடிவுரை

தாவீதைப்போல, நாம் நல்ல மற்றும் மோசமான நேரங்களில், நமது விசுவாசத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். [அப்போது] நாம் வேதனையில் ஆறுதலையும் நமது இரட்சகரின் வாக்குத்தத்தத்தையும் கண்டறிய முடியும்.

# 17

# நீதிமொழிகள்: நடைமுறை ஞானத்தின் புத்தகம்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:** 1, 3, 5, 6, 8-25, 30, 31.*

***தலைப்பு***

*நீதிமொழிகள் என்ற இப்புத்தகத்தின் தலைப்பு இதில் உள்ள முதல் வரியில் இருந்து வந்ததாகும். "நீதிமொழி" என்பதற்குரிய எபிரெய வார்த்தை mashal என்பதாகும்; இதற்குச் சமமான கிரேக்க வார்த்தை paroimiai என்பதாகும். இவ்விரு வார்த்தைகளுமே "ஒரு ஒப்பீடு" என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றன. நீதிமொழி என்பது "ஒரு சிறு, பொருள் பொதிந்த (தன்னிலேயே சாட்சியுடைய) நிலையான உண்மைக் கூற்று" என்று விளக்கப்படுகிறது.*

***பின்னணி***

*தேவபக்தியான வாழ்க்கைக்கு சங்கீதங்களின் புத்தகம் உதவுவதுபோல், நடைமுறை வாழ்விற்கு நீதிமொழிகளின் புத்தகம் உதவுகிறது. சங்கீதங்களின் புத்தகம் தேவனை நோக்கி இருதயத்தை வெதுவெதுப்பாக்குகிறது; நீதிமொழி களின் புத்தகம் மனிதர்களை நோக்கி முகத்தைப் பிரகாசிக்கச் செய்கிறது.*

*ஞானத்தை ஊட்டுதல் என்பதே நீதிமொழிகள் புத்தகத்தின் எடுத் துரைக்கப்பட்ட நோக்கமாக உள்ளது (1:1முதல்.). நீதிமொழிகளின் புத்தகம், "ஒரு கவிதைப் புத்தகமாய்" இருப்பதுடன் கூடுதலாக "ஞான இலக்கியம்" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஞானம் என்பது "அறிவின் நடைமுறைப் பயன்பாடு" என்று விளக்கப்பட்டுள்ளது; நீதி மொழிகளில் உள்ள ஞானம் அதை உள்ளடக்குகிறது, ஆனாலும் இன்னும் ஆழமாக செல்கிறது. அது "விஷயங்களைத் தேவன் காண்பதுபோல் காணவருதலாக" உள்ளது. "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (9:10; 1:7ஐயும் காணவும்).*

*ஞானம் இந்தப் புத்தகத்தில் நீதிமொழிகளின் மூலம் ஊட்டப்படுகிறது. நீதிமொழி என்பது பெரும்பான்மையான மக்களால் அங்கீகரிக்கப்படுகிற பொதுவான உண்மையாக உள்ளது. "தன் வேலையில் ஜாக்கிரதையாயி ருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்" (22:29). அப்படிப்பட்ட மனிதன் வெற்றிநிறைந்தவனாக இருப்பான் என்பது உலகளாவிய உண்மையாயிராமல் பொதுவான உண்மை யாக உள்ளது. பொருளாதார சூழ்நிலைகள் மிகவும் உணர்வுப்பூர்வமான ஜாக்கிரதையாய் இருத்தலையும் விலக்கி வைக்க முடியும். மற்ற எல்லா விஷயங்களும் சமமாக இருக்கையில், ஜாக்கிரதையற்ற மனிதரைக் காட்டிலும் ஜாக்கிரதையாய் இருக்கும் மனிதர் அதிகம் வெற்றியடைவார். ஒரு நீதிமொழி என்ன கூறுகிறதோ அதைவிட அதிகம் கூறாதபடி எச்சரிக்கையாய் இருங்கள்.*

*சில நீதிமொழிகள் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் இப்புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதியானது, ஒரு பாடக்கருத்தில் இருந்து இன்னொரு பாடக்கருத்திற்கு, அவற்றின் ஆய்வுப் பொருள்களுக் கிடையில் சிறிதளவே தொடர்பு உடையநிலையில் மாறிச் செல்லுகிறது. அதிக*

*மான மக்கள் வாசிக்க முடியாதவர்களாயும், ஒருசில கையெழுத்துப் பிரதிகளே கிடைக்கக்கூடியதாகவும் இருந்த நிலையில், படிப்பிப்பதற்கு, நிதிமொழிகள் ஒரு முக்கியமான கருவியாக இருந்தன. நீதிமொழிகள் சுலபமாக மனப்பாடம் செய்யக்கூடியவைகளாயிருந்தன. இவைகள் இளைஞர்களுக்குப் போதிக்க விசேஷித்தவகையில் பயன்மிக்கவைகளாய் இருந்தன (1:8, 10; 2:1; முதலிய வசனங்களில் உள்ள "என் மகனே" என்ற சொற்றொடரைக் கவனிக்கவும்).*

*சாலொமோன் இந்தப் புத்தகத்தின் பிரதான எழுத்தாளராய் இருக்கின்றார் (1:1; 10:1; 25:1). சாலொமோன் தமது மத்திய வயதில் இப்புத்தகத்தை எழுதினார் என்று யூதப்பாரம்பரியம் கூறுகிறது. அவர் எழுதிய மூவாயிரம் நீதிமொழிகளில் (1 இராஜாக்கள் 4:32), இவைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆகூர் (30:1), மற்றும் அரசரான லேமுவேல் (31:1) உட்பட, மற்ற எழுத்தாளர்களும் இப்புத்தகத்திற்குப் பங்களித்துள்ளனர். சிலர் "லேமுவேல்" என்பது பத்சேபாள் தனது மகன், சாலொமோனுக்கு இட்டிருந்த செல்லப்பெயர் என்று நினைக்கின்றனர். "எசேக்கியாவின் மனுஷர்" (25:1) என்பவர்கள் இப்புத்தகத்தின் நிறைவான தொகுப்பாளர்களாய் இருந்தனர் என்பது உறுதி.*

**வரைகுறிப்பு**

*நீதிமொழிகளின் புத்தகம், சங்கீதங்களின் புத்தகம்போன்றே ஐந்து புத்தகங்களாக அமைவுசெய்யப்பட்டுள்ளது:*

I. *ஞானத்தைப் புகழ்தல் பற்றிய "சாலொமோனின் நீதிமொழிகள்" (1-9).*
II. *பல்வேறு பாடக்கருத்துக்களின் மீதான "சாலொமோனின் நீதிமொழிகள்" (10-24).*
III. *ஒருவேளை, பொருளாதரத்தின் மீதான வலியுறுத்தத்துடனான எசேக்கியாவின் தொகுப்பு (25-29).*
IV. *பிரதானமாக இயற்கையின் மீதான "ஆகூரின் வார்த்தைகள்" (30).*
V. *"அரசர் லேமுவேலின் வார்த்தைகள்," அவருடைய தாய் சம்பந்தப்பட்டது (31).*

*வழக்கமாக இப்புத்தகம் பாடக்கருத்துக்களைக் கொண்டு படிக்கப்படுகிறது. இங்கு நடைமுறைப் பாடக்கருத்துக்கள் சில தரப்படுகின்றன:*

1. *வேலை (6:6-11; 14:23; 18:9; 19:24; 22:13, 29; 24:30-34).*
2. *நேர்மை (11:1, 3; 16:11; 20:17).*
3. *சுய கட்டுப்பாடு (14:17, 29; 15:18; 16:32; 19:11; 25:28).*
4. *குடித்தலும் குடிபோதையும் (20:1; 23:20, 21, 29-32; 31:4-7).*
5. *நாவு (10:18, 19; 11:13; 12:22, 25; 13:3; 15:23; 18:21; 25:11).*
6. *வாய்ச்சண்டையிடுதல் (9:13; 19:13; 21:9, 19; 25:24; 27:15).*
7. *மனைவியாகவும் தாயாகவும் இருத்தல் (5:18-20; 11:16, 22; 12:14; 14:1; 18:22; 19:14; 31:10-31).*
8. *பிள்ளைகளை ஒழுங்குபடுத்துதல் (13:24; 19:18; 22:15; 23:13, 14; 29:15, 17).*

**நீதிமொழிகள் புத்தகத்தில் இருந்து பாடங்கள்**

*சங்கீதங்களின் புத்தகத்தைப் போன்று, நீதிமொழிகள் புத்தகமும் உலகளாவிய வேண்டுகோளைக் கொண்டுள்ளது. இந்தப் புத்தகத்தில் ஒரு*

சிறுபகுதி யூதத்துவத் தனித்தன்மையுடன் உள்ளது; இஸ்ரவேல் என்ற பெயர் காணப்படுவதில்லை, பண்டிகைகள், முதலானவை குறிப்பிடப்படுவதில்லை. இப்புத்தகத்தில் காணப்படுகிற சத்தியங்கள் சாலொமோனின் நாட்களில் இருந்தது போன்றே இன்றைக்கும் பொதுவாக உண்மையாகவே உள்ளன.

இப்புத்தகம் "ஒரு இளம் மனிதர் பின்பற்றக்கூடிய வெற்றிக்கான கையேடு" என்று அழைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது உலகம் விவரிக்கின்ற படியான வெற்றியாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. நீதிமொழி களின் புத்தகம் தேவன்மீது கொண்டுள்ள பயபக்தியின் அடிப்படையிலான வாழ்வுமுறையைப்பற்றிக் கூறுகிறது. மற்றும் ஞானம் ஆகியவற்றிற்கான பிறபுத்தகங்களைப்போல், "கர்த்தருக்குப் பயப்படுதல்" என்பது இந்தப் புத்தகத்தின் திறவுகோல் சொற்றொடராக உள்ளது (1:7, 29; 2:5; 8:13; 9:10; 10:27; 14:26, 27; 15:16, 33; 16:6; 19:23; 22:4; 23:17; 31:30). "கர்த்தருக்குப் பயப்படுதல்" என்ற சொற்றொடர், தேவன்மீது ஆழமான மரியாதையையும் நிலையான பயபக்தி யையும், நமது வாழ்வு உட்பட எல்லாவற்றிற்கும் அவரே ஆட்சியாளர் என்று ஒப்புக்கொள்வதையும் குறிக்கிறது. பூரணமான அன்பு என்பது தண்டனை பற்றிய பயத்தைப் புறம்பே தள்ளிவிடலாம் (1 யோவான் 4:18), ஆனால் அது "கர்த்தருக்குப் பயப்படுதலை" தள்ளிவிட முடியாது மற்றும் கூடாது (மத்தேயு 10:28; நடபடிகள் 10:35; 2 கொரிந்தியர் 7:1; எபிரெயர் 12:28; வெளிப்படுத்தின விசேஷம் 11:18; முதலியன.).

இயேசுவின் நடைமுறை போதனை அடிக்கடி நீதிமொழிகளின் புத்தகத்தில் உள்ள போதனைகளை எதிரொலித்தது. அவர் அடிக்கடி உவமைகளில் போதித்தார். (எபிரெயம் மற்றும் கிரேக்க மொழிகளில் உள்ள மூல வார்த்தைகள் "நீதிமொழி" மற்றும் "உவமை" ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசம் எதையும் ஏற்படுத்தவில்லை; இவ்விரண்டுமே ஒப்பீடுகளை ஏற்படுத்துதலினால் போதித்தன.)

## புறக்கணிக்கப்பட்ட தோட்டம்
## (நீதிமொழிகள் 24:30-34)

நீதிமொழிகளின் புத்தகம், ஏறக்குறைய நாம் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு பாடக்கருத்து பற்றியும் நடைமுறை அறிவுரைகளால் நிறைந் துள்ளது. ஜாக்கிரதை மற்றும் கடின உழைப்பு என்பது வலியுறுத்தப்படும் ஒரு தலைப்பாக உள்ளது. சோம்பேறித்தனம் என்பது வன்மையாகக் கண்டிக்கப்படுகிறது (6:6-11; 20:4; 22:13; 26:14). 24:30-32 இதன்மீது ஒரு திறவுகோல் வசனப்பகுதியாக உள்ளது: "சோம்பேறியின் வயலையும், மதியீன னுடைய திராட்சத்தோட்டத்தையும் கடந்துபோனேன். இதோ, அதெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது; நிலத்தின் முகத்தைக் காஞ்சொறி மூடினது, அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது. அதைக் கண்டு சிந்தனைபண்ணி னேன்; அதை நோக்கிப் புத்தியடைந்தேன்." புறக்கணிக்கப்பட்ட தோட்டம் நம் யாவருக்கும் பாடங்களைக் கொண்டுள்ளது.[1]

I. ஆச்சரியம் நிறைந்த சாத்தியத்தன்மை.
   A. மனிதன் தவறினான், ஆனால் பின்வரும் காரணங்களினால் அல்ல:
      1. வேலை செய்ய அவன் ஒரு தோட்டத்தைக் கொண்டிருக்க

வில்லை என்பதால். (தேவன் நமக்கு ஒரு வாய்ப்பளிக்க வில்லை என்பதினால் நாம் தவறுவதில்லை.)

2. மண் நல்லதாக இருக்கவில்லை என்பதினால். களைகள் வளரும் மண்ணிலேயே மலர்களும் காய்களும் வளரக்கூடும். (நம் ஒவ்வொருவருக்குள்ளும் நன்மைக்கோ - அல்லது தீமைக்கோ ஏற்ற சாத்தியத்தன்மை ஏராளமாக உள்ளது.)
3. தேவன் மழையையும் வெயிலையும் அனுப்பத் தவறினார் என்பதால். நல்ல தாவரங்களுக்குப்போன்றே, களைகளுக்கும் மழையும் வெயிலும் தேவைப்படுகின்றன. (தேவன் நம்மைத் தவறச் செய்வதில்லை; நமக்கு நாமே தவறுகின்றோம்.)
4. அவன் விலங்குகளை வெளியே துரத்த இயலவில்லை என்பதால். அவன் விலங்குகளைத் தவிர்ப்பதற்கு வயலில் ஒரு கற்சுவரைக் கொண்டிருந்தான், ஆனால் அது விழும்படிக்கு அவன் அனுமதித்திருந்தான். (நாம் சமூகத்தையோ, நமது பெற்றோர்களையோ, அல்லது சபையையோ குற்றம்சாட்ட இயலாது; நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இல் லையென்றால், நாம் நம்மைத்தான் குற்றம்சாட்டிக்கொள்ள வேண்டும்.)

B. அவனால் முடியாதிருந்தது என்பதினால் அவன் தவறவில்லை, ஆனால் அவன் வேலை செய்யவில்லை என்பதினாலேயே அவன் தவறினான். சாத்தியத்தன்மை அங்கிருந்தது!

II. வெட்கக்கேடான புறக்கணிப்பு.

A. அம்மனிதன் ஏராளமான சாத்தியத்தன்மைகளைக் கொண்டி ருந்தான், ஆனால் அவன் அந்த சாத்தியத்தன்மைகளைப் புறக் கணித்து விட்டான். இதன் விளைவு பின்வருமாறு:

1. அவன் பயிர் எதையும் வளர்க்கவில்லை; அவன் வாழ்விற்கு நேர்மறையான பங்களிப்பு எதையும் செய்யவில்லை.
2. அவன் சிலவற்றை - முள்ளுகளையும் காஞ்சொறிகளையும் - வளர்த்தான்; அவன் தன் வாழ்வைப் பிறருக்குக் கடினமான தாக்கினான்.
3. அவன் தனது ஆத்துமாவை அழித்துப்போட்டான்; அவன் "கருத்துணர்வில் குறைவு" கொண்ட மனிதன் ஆனான்.

B. நமது சாத்தியத்தன்மை பற்றிய விஷயம் என்ன? நாம் அதைப் புறக்கணித்துள்ளோமா? நாம் "கருத்துணர்வில் குறைவு" உடைய வர்களாய் இருக்கின்றோமா?

1. நாம் பணிமும்முரமாய் இருக்க வேண்டும், வேலை செய்ய வேண்டும், நமது வாய்ப்புக்களை அனுகூலப்படுத்திக்கொள்ள வேண்டும், நமது சாத்தியத்தன்மையை மேம்படுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார் (பிரசங்கி 9:10; மத்தேயு 24:46; லூக்கா 2:49; யோவான் 9:4; கலாத்தியர் 5:6; 6:9; எபேசியர் 4:28; கொலோசெயர் 3:23; 2 தெசலோனிக்கேயர் 3:10; 1 தீமோத்தேயு 6:18).
2. புறக்கணித்தலினால் நாம் இவ்விஷயங்களில் அடிக்கடி

*தேவனுக்குக் கீழ்ப்படியத் தவறிவிடுகின்றோம் (எபிரெயர் 2:3; 1 தீமோத்தேயு 4:14).*

a. *புறக்கணித்தல் என்பது நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யாதிருக்கவும், நாம் இருக்க வேண்டியபிரகாரம் இராதிருக்கவும் செய்துவிடும்.*

b. *புறக்கணித்தல் என்பது மற்றவர்களை எதிர்விதமாகப் பாதிக்கும்.*

c. *புறக்கணித்தல் என்பது கடைசியில் நமது ஆத்துமாக்களை அழித்துவிடும்.*

III. *பயங்கரமான விளைவு.*

A. *சோம்பேறித்தனம் மற்றும் புறக்கணித்தல் ஆகியவற்றின் காரண மாக, அம்மனிதன் வாழ்வில் தவறியவன் ஆனான்.*

B. *நாம் யாவருமே வெற்றியடைய விரும்புகின்றோம், ஆனால் வெற்றி என்பது பாதிவிலைக் கடையில் காணப்பட முடியாது. அதற்கு அதிகமான முயற்சி தேவைப்படுகிறது. தவறுகின்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் தாங்கள் தவற வேண்டும் என்று முடிவுசெய்ததாலோ அல்லது தவற வேண்டும் என்று விரும்பிய தாலோ தவறமாட்டார்கள், ஆனால் புறக்கணித்தலினாலேயே தவறுவார்கள். வெற்றியடைவதற்கென்று செயல்படுவதைவிட சிறிதளவே செயல்படுவதோ அல்லது செயல்படாது இருத்தலோ சுலபமானதாக உள்ளது.*

1. *ஒரு இயந்திரத்தைப் புறக்கணியுங்கள், அது தனித்தனியே கழன்று விழுந்து விடும்.*
2. *ஒரு திருமணத்தைப் புறக்கணியுங்கள், அது நொறுங்கிப் போகும்.*
3. *ஒரு பிள்ளையைப் புறக்கணியுங்கள், அவன் உங்கள் இருத யத்தை உடைந்துபோகப் பண்ணுவான் (29:15).*

*முடிவுரை*

*நாம் நமது ஆத்துமாக்களைப் புறக்கணித்து இருக்கின்றோமா?*

---

*குறிப்பு*

[1]Material has been taken from Clovis G. Chappell, *The Village Tragedy and Other Sermons* (New York: Abingdon Press, 1925), 158-68; George W. Bailey, "The Neglected Garden," *The Preacher's Periodical* 3 (August 1982): 15; and others.

# 18

# பிரசங்கி: வாழ்வின் வெறுமை

# சாலொமோனின் உன்னதப்பாட்டு: அன்பின் பாடல்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *பிரசங்கி 1-12; உன்னதப்பாட்டு 1-3, 7, 8.*

***தலைப்பு***

*பிரசங்கி என்ற புத்தகத்தின் தலைப்பு "சபை" அல்லது "சபைகூடுகை" என்பதற்கான கிரேக்க வார்த்தையுடன் (ekklesia) தொடங்கி, பின்பு தொழில் அல்லது அடிப்படை தேடுதல் என்பதைச் சுட்டிக்காட்டும் (tes) என்ற முடிவைக் கூட்டுகிறது. ஆங்கிலத்தில் இதன் "*Ecclesiastes*" என்ற வார்த்தையானது பொதுவாக "பிரசங்கி," என்று மொழிபெயர்க்கப்படுகிறது, ஆனால் இது "பிரசங்கி" என்பதற்கான வழக்கமான வார்த்தையாக இருப்ப தில்லை. "*Ecclesiastes*" என்பதற்கு "சபை மனிதன்" என்பதே நேரடி அர்த்த மான மொழிபெயர்ப்பாகும். இன்னும் நெருக்கமாக வரக்கூடிய நவீன மொழிபெயர்ப்பு "*lay preacher.*" இவர் வழக்கமாகப் பிரசங்கிப்பவரல்ல, ஆனால் பகிர்ந்துகொள்வதற்குச் செய்தியொன்றைக் கொண்டிருப்பவர் ஆவார் - என்பது இதற்கு நெருங்கிய அர்த்தம் கொண்டுள்ள நவீன இணைவார்த்தையாகும்.*

*"சாலொமோனின் உன்னதப்பாட்டு" என்பது இப்புத்தகத்தின் முதல் வரியினுடைய சுருக்கமான வடிவமைப்பாகும்: "சாலொமோன் பாடின உன்னதப்பாட்டு." "உன்னதப்பாட்டு" என்பது "பாடல்களிலேயே மகாப் பெரியது" என்பதற்கான எபிரெயச் சொல்விளக்கமாகும். சாலொமோன் 1005 பாடல்கள் எழுதினார் (1 இராஜாக்கள் 4:32); இது அவருக்கு மிகப்பிரியமான ஒன்றாயிருந்தது என்பது உறுதி.*

***பின்னணி***

*முதல் வாசிப்பில், பிரசங்கியின் புத்தகமானது ஒரு இருள்நிறைந்த புத்தக மாய் இருப்பதாகக் காணப்படுகிறது. இதன் எழுத்தாளர், சந்தோஷத்தைக் கண்டறிவதற்காக ஒவ்வொன்றையும் முயற்சி செய்திருந்து, அவை எல்லா வற்றையும் மாயையென்று கண்டார். "எல்லாம் மாயை," என்று அவர் முடிவு செய்கின்றார். ("மாயை" என்பது இவ்விடத்தில் "வெறுமை, பயனற்றது" என்று அர்த்தப்படுகிறது.) "மாயை மாயை" என்பது போன்ற சொற்றொடர்கள் இப்புத்தகத்தில் முப்பத்து நான்கு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. எழுத்தாளரின் கருத்துநோக்கத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முப்பத்து ஒரு முறை பயன்படுத்தப்பட்டுள்ள "சூரியனுக்குக் கீழே" என்ற சொற்றொடர், அவரது கருத்துநோக்கத்தைப் புரிந்துகொள்வதில் ஒரு திறவுகோல் சொல்விளக்க மாக உள்ளது. "சூரியனுக்குக் கீழே" (அதாவது, இந்த வாழ்வில்), எல்லாம் வெறுமையாயிருக்கிறது. இப்புத்தகம், இவ்வாழ்வில் உள்ள விஷயங்களில் சந்தோஷத்தைக் கண்டறிய முயற்சி செய்பவர்கள் யாவருக்கும் (லூக்கா 12:15; பிலிப்பியர் 4:11) வல்லமை நிறைந்த செய்தியைக் கொண்டுள்ளது.*

*சந்தோஷத்தைக் கண்டறிவதற்கு நாம் இவ்வாழ்க்கைக்கு அப்பால் கண்ணோக்க வேண்டும் என்று இப்புத்தகம் குறிப்புணர்த்துகிறது. "தேவன்" என்ற வார்த்தை நாற்பது முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் "சூரியனுக்கு" அப்பால் "தேவனை" கண்ணோக்க வேண்டும்; பின்பு வாழ்வு கருத்துணர்வை ஏற்படுத்தும் (12:13; ரோமர் 8:18-25).*

*சாலொமோன் தமது முதிர்வயதில் இப்புத்தகத்தை எழுதினார் என்று யூதத்துவப் பாரம்பரியம் கூறுகிறது. வரலாற்றுப் புத்தகங்கள் (1 இராஜாக்கள், 2 நாளாகமங்கள்) சாலொமோன் தேவனை விட்டு விலகிச் சென்றபின்பு தமது முதிர்வயதில் மனந்திரும்பியது பற்றிப் பதிவெதையும் செய்திருப்பது இல்லை; ஒருவேளை இப்புத்தகம் அவரது மனம் வருந்துதலின் கதறுதலாக இருக்கலாம்.*

*மேலும், யூதப் பாரம்பரியத்தின்படி, சாலொமோன் தமது இளம் பிராயத்தில் உன்னதப்பாட்டை எழுதினார் என்று கூறப்படுகிறது. அந்த எழுத்துக்களில், மணவாளன் (அனேகமாக சாலொமோன்) ஒரு சில மனைவியரையே கொண்டிருந்தார் (6:2, 3, 8) என்பதால், இது உண்மையாய் இருக்கலாம். பிரசங்கியின் புத்தகத்திற்கு நேரெதிரான வகையில், இப்புத்தகத்தில் வாழ்விற்கான பேரார்வம் நிறைந்துள்ளது. இது சாலொமோன் தமது மணவாட்டியினிடத்தில் கொண்ட அன்பைக் கொண்டாடுவதாகக் காணப்படுகிறது. சாலொமோனின் திருமணங்களில் பெரும்பான்மையானவை அரசியல்ரீதியான நோக்கம் கொண்டிருந்ததால், அன்பிற்காகத் திருமணம் செய்துகொள்ளுதல் என்பது ஒரு விசேஷமான விஷயமாயிருந்தது.*

*உன்னதப்பாட்டில் பேசுவது யார் என்பதைப் புரிந்துகொள்ளுதல் அடிக்கடி கடினமாக உள்ளது. எபிரெய வசனம், ஆண் மற்றும் பெண் பேசுவது போன்ற குறிப்புகளைக் கொண்டும், அடிக்கடி ஒரு தனிநபரில் இருந்து ஒரு குழுவுக்கு மாறுதல்கள் ஏற்படுவதையும் குறிப்பிடுகிறது. இதைக்காட்டுகிற பதிப்புகள் உதவிநிறைந்தவைகளாய் இருக்கின்றன.*

*திருமண அன்பின் முக்கியத்துவத்தைத் தேவன் உணர்ந்தறிகின்றார் என்பது இப்புத்தகத்தைக் கண்ணோக்குவதற்கான மிக எளிமையான வழியாக உள்ளது. இந்தப் புத்தகம் இஸ்ரவேல் மக்கள்மீது தேவனுடைய அன்பைப்பற்றி பேசுகிற ஒப்புவமையாக உள்ளது என்று நினைப்பதை யூதமக்கள் விரும்பித் தேர்ந்துகொண்டனர். இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய விசேஷித்த (தேர்ந்துகொள்ளப்பட்ட) மக்களாக, ஆனால் தேவனுடைய ஒரேமக்களாயிராமல் (யோனாவின் புத்தகம் காண்பிக்கிறபடி, தேவன் எல்லா மக்களினத்தைக் குறித்தும் அக்கறையாய் இருக்கின்றார்) இருந்தபடியால், இந்த விளக்கம் வேதாகமத்தின் பொதுவான சத்தியங்களை மீறுவதில்லை. பல கிறிஸ்தவ விளக்கவுரையாளர்கள், இப்புத்தகமானது சபைமீது கிறிஸ்து கொண்டுள்ள அன்பைப் பற்றிப் பேசுகிறது என்று பரிந்துரைக்கின்றனர், ஆனால் இந்தக் கருத்தில் பிரதானமான பிரச்சனையொன்று உள்ளது: இது சபையை அன்புகூரப்பட்ட பலரின் மத்தியில் ஒருத்தி என்றாக்குகிறது, ஆனால் விஷயம் அவ்வாறு இருப்பதில்லை (மத்தேயு 16:18; நடபடிகள் 20:28; எபேசியர் 1:22, 23; 5:23, 25). வழக்கமாக, கொடுக்கப்பட்ட வசனப்பகுதியொன்றைப் பற்றிய எளிமையான கண்ணோட்டமே சரியான ஒன்றாயிருக்கிறது.*

**வரைகுறிப்புகள்**

*பிரசங்கியின் புத்தகம் வரைகுறிப்பிடக் கடினமானதாக உள்ளது, சாலொமோனின் உன்னதப்பாட்டைப் பற்றிப் பல்வேறு வகையான கண்ணோக்குகள் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள வரைகுறிப்புகள் இவை ஒவ்வொன்றிற்குமான ஒரு அணுகுமுறையைக் குறிக்கின்றன:*

**பிரசங்கி**

*முன்னுரை (1:1-11).*

I. *சாலொமோன் ஞானத்தில் சந்தோஷத்தைத் தேடுகின்றார் (1:12-18).*
II. *சாலொமோன் செல்வங்களிலும் இன்பந்தரும் வாழ்க்கையிலும் சந்தோஷத்தைத் தேடுகின்றார் (2, 3).*
III. *சாலொமோன் மேன்மை, வல்லமை, மற்றும் மதிப்பு ஆகியவற்றில் சந்தோஷத்தைத் தேடுகின்றார் (4-6).*
IV. *சாலொமோன், உலகப் பிரகாரமானவற்றில், விலக்கப்பட்ட சிற்றின்பங்களில் சந்தோஷத்தைத் தேடுகின்றார் (7, 8).*
V. *சாலொமோன் இவற்றில் சந்தோஷம் காணப்படுவதில்லை, ஆனால் இந்த வாழ்வில் கடமைக்கு ஒப்புவித்திருத்தல் மற்றும் வரவிருக்கும் வாழ்விற்குத் தயார்செய்துகொள்ளுதல் ஆகியவற்றிலேயே சந்தோஷம் உள்ளது என்ற முடிவுக்கு வருகின்றார் (9:1-12:7).*

*பின்னுரை (12:8-14).*

**சாலொமோனின் உன்னதப்பாட்டு**

I. *காட்சி ஒன்று: அரசரின் அரண்மனையில் (1:2-2:7).*
II. *காட்சி இரண்டு: மணவாட்டி, வடக்கு பாலஸ்தீனத்தில் வசந்த காலத்தில் தன் மணவாளனுடன் இணைந்திருந்ததை நினைத்துப் பார்க்கின்றாள் (2:8-3:5).*
III. *காட்சி மூன்று: எழுத்தாளர், அரண்மனைக்கு மணவாட்டி திருமண நாளில் வந்ததை நினைத்துப் பார்க்கின்றார் (3:6-5:1).*
IV. *காட்சி நான்கு: அரண்மனைக் காட்சிக்குத் திரும்புதல், மணவாட்டி அவளது அன்பைப் பற்றிப் பாடுகின்றாள்; அவள் மணவாளனுடன் இணைந்திருந்த காட்சிக்குத் திரும்ப விரும்புகின்றாள் (5:2-8:4).*
V. *காட்சி ஐந்து: வடக்கு பாலஸ்தீனத்தில், திரும்பவும் இல்லத்தில் (8:5-14).*

**நமக்குப் பாடங்கள்**

*பிரசங்கியின் புத்தகத்திலோ அல்லது சாலொமோனின் உன்னதப் பாட்டிலோ, மேசியாவைப் பற்றிய நேரடியான குறிப்புகள் இல்லை, ஆனால் இயேசுவே வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்கின்றவர் (லூக்கா 11:31) ... மற்றும் அவரே நமது திருமணங்களை திருமணங்களாக்குகிறவர் என்பதை நாம் எப்போதுமே நமது சிந்தைகளில் காத்துக்கொள்ள வேண்டும்!*

---

## வாழ்வில் அர்த்தத்தை ஏற்படுத்தல் (பிரசங்கி 3:1-15)

*பிரசங்கி புத்தகத்தில் நன்கு அறியப்பட்டுள்ள வசனப்பகுதியான 3:1-9,*

பின்வருமாறு தொடங்குகிறது, "ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமய முண்டு," "பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு; நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு; கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு; ... அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு; ... காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு; ... மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு; சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு; யுத்தம்பண்ண ஒரு காலமுண்டு, சமாதானம்பண்ண ஒரு காலமுண்டு." சில கல்வியாளர்கள் இவ்வசனப்பகுதியை, வாழ்வின் சகலமும் முன்தீர்மானம் செய்யப்பட்டதாக உள்ளது என்று போதிக்க எடுத்துக்கொள்கின்றனர், ஆனால் அது மனிதனின் சுயாதீனமான ஒழுக்க முகமையை நீக்கிப்போடுவதாக இருக்கும். இவ்வசனங்கள் எல்லா விஷயங்களுக்கும் ஏற்புடையதான காலம் உண்டு என்று வலியுறுத்துகின்றன என்பதாகப் பிறர் கூறுகின்றனர். சாலொமோன் அந்தக் கருத்தை இந்தப்புத்தகத்தில் பலமுறை ஏற்படுத்துகின்றார் (3:11; 8:5, 6; 11:9; 12:1). நமது ஆய்வின்கீழ் உள்ள (2:26; 3:9, 10அ) இவ்வசனப்பகுதியானது, வாழ்வு சலிப்பூட்டுவதாயிருக்கிறது என்று போதிப்பதாகக் காணப்படுகிறது. செய்யப்படும் எந்த ஒரு விஷயமும் நிலைத்திருப்பதில்லை; நல்லவையும் மோசமானவையும் ஒன்றையொன்று வெளியேறச் செய்பவையாக உள்ளன.

வாழ்வில் கருத்துணர்வு ஏற்படுத்தும் வழியெதுவும் உள்ளதா? 1-9 வசனங்களைத் தொடர்ந்து இப்புத்தகத்தின் மிகவும் அர்த்தமுள்ள வசனப்பகுதிகளில் ஒன்று வருகிறது, இது பிரசங்கியின் புத்தகத்தில், பரலோகத்தின் சூரிய வெளிச்சம் பூமியின் இருளைக் கிழிக்கும் அரிதான வேளைகளில் ஒன்றாக உள்ளது. 10-15 வரையிலான வசனங்களில், வாழ்வில் கருத்துணர்வை ஏற்படுத்தும் நான்கு ஆலோசனைகளை நாம் காணு கின்றோம்:

I. நடைபெறும் எல்லா விஷயங்களிலும் தேவனுடைய கரம் இருக்கிறதென்பதை அறிதல் (3:10).
   A. 3:1-9ல் தேவனுடைய பெயர் குறிப்பிடப்படாதிருந்தது. இப்போது குறிப்பிடப்படுகிறது.
   B. நடைபெறும் எல்லா விஷயங்களிலும் தேவனுடைய திட்டமானது மனிதர்களை "பயிற்றுவிப்பதாக" உள்ளது.

II. நடைபெறும் எல்லா விஷயங்களிலும் மதிப்பு உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளுதல் (3:11).
   A. 3:1-8 வசனப்பகுதியில் உள்ள எல்லா விஷயங்களும் அவற்றின் காலத்தில் "அழகுமிக்கவை"யாக இருக்கின்றன ("அழகுமிக்கவை" என்பது எபிரெய மொழியின் நேரடி அர்த்தமாகும்). நாம் எப்போதுமே அழகைப் பார்க்காமல் இருக்கலாம், ஆனால் ரோமர் 8:28ஐப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.
   B. நடக்கிற எல்லாவற்றிலும் ஒரு மதிப்பு நிலவுகிறது: இவ்வுலகம் நமது இல்லமல்ல என்ற உண்மையில் நாம் யாவரும் மனம் கவரப்படுகின்றோம். தேவன் "நித்தியத்தை" நமது இருதயங்களில் அமைத்து வைத்துள்ளார் (NASB, NIV, மற்றும் பிற நவீன மொழிபெயர்ப்புகளைக் காணவும்), எனவே இவ்வுலகம் ஒருக்காலும் (நம்மை) திருப்திப்படுத்த முடியாது.

III. *நாம் மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டிய அதிகமான நன்மை இந்த வாழ்வில் உண்டு என்பதை உணர்ந்தறிதல் (3:12, 13).*

   A. *3:1-8ஐ மீண்டும் கண்ணோக்குங்கள். சந்தோஷமான வேளைகளைத் தொடர்ந்து கவலைமிகுதியான வேளைகள் வருகின்றன, ஆனால் கவலைமிகுதியான வேளைகளைத் தொடர்ந்து சந்தோஷமான வேளைகளும் வருகின்றன. முன்னெதிர்பார்த்து இருப்பதற்குச் சில விஷயங்கள் எப்போதுமுள்ளன.*

   B. *3:13ன் எளிமையான சந்தோஷங்களைக் கவனியுங்கள்; இவைகள் மிகவும் தாழ்மையுள்ள மனிதர்கள் கொண்டிருக்கக் கூடிய விஷயங்களாய் இருக்கின்றன. நாம் வாழ்வின் எளிமையான விஷயங்களை மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் (பிலிப்பியர் 4:11); இவை தேவன் நமக்கு அளித்துள்ள கொடையாயிருக்கின்றன.*

IV. *பின்பு தேவன்மீது நம்பிக்கை வைக்க - மற்றும் எல்லாவற்றையும் அவரது கரங்களில் விட்டுவிட - கற்றுக்கொள்ளுங்கள் (3:14, 15).*

   A. *15ம் வசனம் மீண்டும், வாழ்வின் முடிவற்ற திரும்பச் செய்யும் விஷயங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது, ஆனால் தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்ற முக்கியமான சிந்தனையை கூடுதலாகக் கூறுகிறது.*

   B. *14ம் வசனம், தேவன் சிலவற்றைச் செய்யும்போது இதை நாம் அறியச் செய்கிறது:*

      1. *அது நிரந்தரமானது என்று.*
      2. *அது பூரணமானது என்று.*
      3. *அது நோக்கம் கொண்டது என்று.*

   C. *தேவன் கட்டுப்பாடு செலுத்துவதினால், நாம் சில முடிவுகளை மேற்கொள்ளலாம்:*

      1. *நமக்குத் தேவன் தேவை; அவரின்றி எல்லாமே குழப்பமான வட்டாரமாயுள்ளது.*
      2. *நாம் அவருக்குப் பயப்படவும், அவரை மதிக்கவும், அவரது சித்தத்தைச் செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும் (12:13).*
      3. *நாம் அவர்மீது நம்பிக்கை வைப்பதும் எல்லா விஷயங்களையும் அவரது கரங்களில் ஒப்புவிப்பதும் அவசியம்.*

*முடிவுரை*

*பிரசங்கி 3:1-15 வசனப்பகுதியானது நம்மை நமது இடத்தில் வைக்கிறது. இது நம்மைத் தாழ்த்துகிறது, ஆனால் இது நம்மை நம்பிக்கையினால் நிரப்பவும் செய்கிறது. நாம் ஒன்றுமில்லை; தேவன் எல்லாமுமாக இருக்கின்றார். அவரில், யாவும் சரியாய் இருக்கிறது!*

# 19

# ஏசாயா: மேசியாத்துவத் தீர்க்கதரிசி

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *1, 2, 6-9, 13, 28, 35, 40, 43, 45, 49, 52, 53, 55, 57, 59, 60-62, 64-66.*

***தலைப்பு***

*ஏசாயாவின் புத்தகம் அதன் எழுத்தாளரின் பெயரால் அழைக்கப் படுகிறது. "ஏசாயா" என்றால் "இரட்சிப்பு யெகோவாவினுடையது" என்று அர்த்தமாகும்.*

***பின்னணி***

*ஏசாயாவின் புத்தகம், பழைய ஏற்பாட்டில் உள்ள பதினேழு தீர்க்கதரிசனப் புத்தகங்களில் முதலாவது ஆகும். முதல் ஐந்து தீர்க்கதரிசனப் புத்தகங்கள் "பெரிய தீர்க்கதரிசிகள்" என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. தீர்க்கதரிசி என்பவர் தேவனுக் காகப் பேசுபவராய் இருந்தார். தீர்க்கதரிசியானவர், தேவனுக்காகப் பேசியதில் சிலவேளைகளில் எதிர்காலத்தை முன்னுரைத்தார், ஆனால் இது அவரது ஊழியத்தின் பிரதான வலியுறுத்தமாக இருந்ததில்லை. அவரது முதன்மைச் சுமை யானது அவரது சொந்த நாட்களில் நடந்தவற்றைப் பற்றியதாயிருந்தது.*

*உசியா அரசரின் நாட்களில் தொடங்கி (1:1) எசேக்கியா மரணத்திற்குச் சற்றே பிறகு வரைக்கும் (2 நாளாகமம் 32:32). ஏசாயா ஒரு தீர்க்கதரிசியாக, கவிஞராக, அரசியல்வாதியாக, ஆலோசகராக, பேச்சாளராக, மற்றும் எழுத்தாளராக, ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகள் விரிவான ஊழியத்தைக் கொண்டிருந்தார். ஏசாயாவின் வாழ்நாள் காலத்தின்போது, இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யம் அசீரியாவினால் அழிக்கப்பட்டது. அவ்வேளையில், ஏசாயாவின் செல் வாக்கினால் எருசலேம் காப்பாற்றப்பட்டது. இருந்தபோதிலும் சீர்திருத்தத்தின் காலம் நிலைத்திராது என்று ஏசாயா முன்னெதிர்பார்த்தார், எனவே அவர் பாபிலோனிய சிறையிருப்பும் அந்த சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதலையும் முன்னதாகவே கண்ணோக்கினார். ஏசாயா தமது புத்தகத்தில், மூன்று செயல் களைச் செய்தார்: (1) யூதா மக்களுக்கு முன்பாக என்ன விழும் என்பது பற்றி அவர்களுக்கு அவர் எச்சரிக்கை செய்தார்; (2) மற்ற நாடுகளுக்கு எதிராகவும் அவர் தீர்க்கதரிசனங்களை முழங்கி, தேவன் (தம்மைக்கொண்டு) பேசுவது என்ன என்று அவர் [தேவன்] அறிந்திருக்கின்றார் என்று நிரூபித்தார்; மற்றும் (3) அவர் வெளிச்சமான நாட்களை முன்கண்ணோக்கினார்: சிறையிருப்பிற்குப் பின்பு திரும்பி வருதல், மற்றும் மேசியாவினுடைய வருகையும் அவரது ராஜ்யமும்.*

*ஏசாயா, கோரேஸ் என்ற பெர்சிய அரசர் பிறப்பதற்குச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குமுன்னரே அந்த அரசரின் பெயரைக் குறிப்பிட்டபடியால், வேதவசனங்களின் வாய்ச்சொல்லினாலான ஏவுதல்களை மறுப்பவர்கள், இரண்டு அல்லது அதற்கு அதிகமான "ஏசாயாக்களை" வேதாகமம் குறிப்பிடுகிறது, இவர்களில் குறைந்தபட்சம் ஒருவராவது கோரேஸுக்குப் பின்பு வாழ்ந்தவராய் இருந்தார் என்று நினைக்கின்றனர். இருப்பினும், ஏவுதல்பெற்ற வேதாகமம் (2 தீமோத்தேயு 3:16, 17ஐக் காணவும்) ஏசாயா என்று பெயர்கொண்ட ஒரே*

ஒரு தீர்க்கதரிசிதான் இருந்தார் என்று அறிந்துள்ளது. கோரேஸைப் பற்றிய தீர்க்கதரிசனம் (44:28; 45:1-14) வேதாகமத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கவற்றில் ஒன்றாக உள்ளது.

ஏசாயா அவரது மேசியாத்துவத் தீர்க்கதரிசனங்களைக் கொண்டு விசேஷமாக அறியப்படுகிறார் (லூக்கா 4:17-21; யோவான் 12:41; நடபடிகள் 8:26-35 முதல் ஆகியவற்றைக் கவனிக்கவும்.). அவர் புதிய ஏற்பாட்டில் நாற்பதுக்கும் அதிகமான முறைகள் - இது வேறு எந்தத் தீர்க்க தரிசியைக் காட்டிலும் அதிகமான முறையாகும் - மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளார். மேசியாவைப் பற்றியும் அவரது ராஜ்யத்தைப் பற்றியுமான அதிகமான வசனப்பகுதிகள் ஏசாயாவின் புத்தகத்தில் இருப்பதால், இது "ஐந்தாவது சுவிசேஷம்" அல்லது "ஏசாயா எழுதிய சுவிசேஷம்" என்றுகூடக் குறிப்பிடப்படுகிறது.

**வரைகுறிப்பு**

ஏசாயாவின் புத்தகம் "சிற்றளவில் வேதாகமம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தில் அறுபத்தியாறு புத்தகங்கள் உள்ளன, ஏசாயாவின் புத்தகத்தில் அறுபத்தியாறு அதிகாரங்கள் உள்ளன. இதில் முதல் முப்பத்து ஒன்பது அதிகாரங்கள் பழைய ஏற்பாட்டு வாசனையைக் கொண்டுள்ள வேளையில், கடைசி இருபத்தி ஏழு அதிகாரங்கள் புதிய ஏற்பாட்டு வாசனையைக் கொண்டுள்ளன.

I. எச்சரிக்கைகள் (1-39).
   A. அசீரியாவுடன் யூதா கொண்ட தேவபக்தியற்ற ஒப்பந்தத்திற்கு எதிராக (1-12).
   B. இஸ்ரவேல் மற்றும் யூதா ஆகிய இரண்டு தேசத்தாராலும் உதவிக்கு எதிர்பார்க்கப்பட்டு இருந்த பல்வேறு தேசங்களுக்கு எதிராக (13-27).
   C. எசேக்கியா அரசரால் எகிப்து நாட்டுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த வீணான உடன்படிக்கைக்கு எதிராக (28-35).
   D. முன்பு தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்த பல விஷயங்கள் நடந்தேறத் தொடங்கியதைக் காண்பிக்கிற வரலாற்றுரீதியான பகுதி (36-39; இ.வ. 2 இராஜாக்கள் 18-20).

II. ஆறுதல் (40-66).
   A. பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து விடுதலை (40-48).
   B. மேசியா வெளிப்படுத்தப்படுதல் (49-57); துன்புறும் ஊழியர் (53)!
   C. மேசியாவும் அவரது ராஜ்யமும்; சிறையிருப்பிலிருந்து திரும்புதலுக்கான குறிப்புகள் (58-66).

**ஏசாயாவின் புத்தகத்தில் இருந்து பாடங்கள்**

இங்கு கிறிஸ்து மற்றும் அவரது ராஜ்யம் பற்றி ஏசாயா புத்தகத்தில் இருந்து ஒரு சில வசனப்பகுதிகள் தரப்படுகின்றன: ஈசாயிலிருந்து புறப்படும் ஒரு வேர் (11:1), கன்னியிடம் இருந்து பிறத்தல் (7:14), யோவானின் ஊழியம் (40:3, 4), அவரது ஊழியம் (61:1, 2), யூதர்களால் புறக்கணிக்கப்படுதல் (8:14, 15; 28:16), அவரது பாடுகள் மற்றும் மரணம் (53), அவரது உயிர்த்தெழுதல் (25:8), பரலோகத்தில் தாவீதின் அரியணையில் அமருதல் (9:6, 7), சபை அல்லது ராஜ்யத்தை நிலைநாட்டுதல் (2:2, 3), தரப்பட விருக்கும் ஒரு புதிய பெயர் (62:12).

*மேசியாவைப் பற்றிய ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் பல இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்களினால் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டன - மற்றும் அவை இன்றைய நாட்களிலும் சிலரால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன. யூதர்கள் மாம்சப்பிரகாரமான நிறைவேற்றத்தைக் கண்ணோக்கினர், அதே வேளையில் இயேசு தமது ராஜ்யமானது "இவ்வுலகத்துக்கு அடுத்ததல்ல" என்று வலியுறுத்தினார் (யோவான் 18:36). வாழ்வைப் பொறுத்தமட்டில், ஏசாயா புத்தகத்தில் உள்ள சமாதானம் பற்றிய வாக்குத்தத்தமானது அதன் நிறைவேற்றத்தைத் தேவனுடைய மக்களின் இருதயத்தில் கண்டறிகிறது; இந்த வாக்குத்தத்தத்தின் இறுதி நிறைவேற்றமானது பரலோகத்தில் நடைபெறும். மீண்டும், "புதிய வானம் மற்றும் புதிய பூமி" (65:17) என்பது தோற்றகால உறவுமுறையை மீளக்கட்டுவிப்பதைக் குறித்தது. யூதர்களுக்கு இது சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதலைக் குறித்தது; நமக்கு, இது தேவனுடன் நாம் இருக்கப் போகும் இடமான பரலோகத்தைப் பற்றிப் பேசுவதாய் இருக்கிறது.*

*"லூசிஃபேர்" (14:12,* KJV; NASB*யில்* "star of the morning" [*"விடி காலையில் வெள்ளி"*] *என்று உள்ளது) என்பதைப் பற்றியும் தவறாகப் புரிந்துகொள்ளுதல் சூழ்ந்துள்ளது. "லூசிஃபேர்" என்ற பெயர் "பிரகாசிக்கும் ஒருவன்" என்று அர்த்தப்படுகிறது. இது சாத்தானையல்ல, ஆனால் பாபிலோனையே குறிப்பிடுகிறது. வேதவசனத்தில் "லூசிஃபேர்" என்ற பெயர் இந்த ஒரே ஒரு இடத்தில்தான் வருகிறது.*

*மற்ற தீர்க்கதரிசிகளைப்போன்றே, ஏசாயாவும் உண்மைத்தன்மைக்கு உதாரணமாய் இருக்கிறார். எபிரெயர் 11:37 வசனம் இவரையே குறிப் பிடுகிறது என்று பலர் நினைக்கின்றனர். ஏசாயா தமது தொண்ணூறாவது வயதில், மனாசே அரசனின் உத்தரவுப்படி ஒரு கரோப் மரத்தில் கட்டி வைக்கப்பட்டு, மரத்தோடு இரண்டாக அறுக்கப்பட்டார் என்று பாரம்பரியங்கள் கூறுகின்றன.*

---

## *"பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" (ஏசாயா 6:1-9அ)*

*உசியா ஐம்பத்து இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார் மற்றும் அவர் ஒரு மாபெரும் அரசராக இருந்தார்; நாடு வளம் பெற்றிருந்தது (2 நாளாகமம் 26:5). பின்பு உசியா அரசர் தேவாலயத்திற்குள் சென்று ஆசாரிய ஊழியம் செய்யும்படி மேட்டிமை அவரை வழிநடத்திற்று, அவரைத் தேவன் தொழுநோயைக் கொண்டு சபித்தார். அவர் விலக்கி வைக்கப்பட்டிருந்தார்; அவர் இறந்தபோது, அரசர்களுடன் புதைக்கப்படாமலும் இருந்தார் (2 நாளாகமம் 26:16-23). இது மனிதர்கள்மீது நம்பிக்கை வைத்திருந்த யாவரையும் அசைத்திருக்கும் என்பது உறுதி. உண்மையான அரசர் மரிக்கவில்லை என்பதைக் காண்பது ஏசாயாவுக்கு அவசியமாய் இருந்தது (6:1, 5)!*

*இன்றைய நாட்களில் நமது உலகில், நமது சமூகத்தில், நமது சபையில் மற்றும் நமது சொந்த வாழ்வில் உள்ள பிரச்சனைகள், நமது விசுவாசத்தை அசைக்கின்றன. ஜீவனுள்ள தேவனைக் கண்ணோக்குதல் நமக்கும்கூட அவசிய மாக உள்ளது!*

I. *தரிசனம் (6:1-4).*

   A. *ஏசாயா ஆலயத்தில், தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கின்றார்!*

      1. *தேவனைப் பற்றிய விவரிப்பு (வசனம் 1).*

a. சிங்காசனத்தின்மீது - அவர் ஆட்சி செய்கின்றார்.
b. உயரமும் உன்னதமுமானது - அவர் எல்லாவற்றிக்கும் மற்றும் எல்லாருக்கும் மேலானவராக இருக்கின்றார்.
c. அவரது வஸ்திரத்தொங்கல் (பிரசன்னம்) ஆலயத்தை நிரப்புகிறது!

2. சேராபீன்கள் (வசனங்கள் 2, 3).
a. இது "அக்கினிமயமானவர்கள்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. இந்த தூதர்கள் அல்லது தேவனுடைய மகத்துவத்தின் வெளிப்பாடுகள் தேவனுடைய பண்பை வெளிப்படுத்துகின்றனர்.
b. அவர்கள் ஒவ்வொருவரும் இரு செட்டைகளைக் கொண்டு, அறையினுள் மேலாகப் பறக்கின்றனர். மற்ற செட்டைகளைக் கொண்டு, அவர்கள் ஒவ்வொருவரும் தேவனுக்குத் தத்தமது பயபக்தியைக் காண்பிக்கின்றனர்.
c. அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று கூவுகின்றனர். தேவன் மிக மேன்மையான பரிசுத்தராக இருக்கின்றார். பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது; அவர் தேவாலயத்திற்குள் அடக்கப்படக் கூடியவரல்ல.

3. [தேவாலய] கட்டிடம் முழுவதும் நடுங்குகிறது மற்றும் புகையினால் நிறைந்துள்ளது (வசனம் 4).

B. தேவன் பரிசுத்தராய் இருக்கின்றார்! இயேசு பரிசுத்தராய் இருக்கின்றார் (யோவான் 12:37-41ஐக் காணவும்)!
1. நாம் யார் என்பதை நாம் அறியும் வரையில், நாம் அடையாளத்துவத்தில் இடர்ப்பாட்டைக் கொண்டிருப்போம். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாமே நம்மை எவ்வாறு கண்ணோக்குகின்றோம் என்பது, நாம் தேவனை எவ்வாறு கண்ணோக்குகின்றோம் என்பதைச் சார்ந்துள்ளது.
2. மிகப்பெரும்பான்மையானவர்கள், தங்கள் முடிவுக்குள் மற்றும் செயல்களை மன்னித்து விடும் "நல்லதொரு பெரிய பையன்" என்ற வகையில் தேவன் இருக்கிறார் என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர். பரிசுத்த தேவனை நாம் முகமுகமாய்க் காண வருதல் நமக்கு அவசியமானதாக உள்ளது!

II. கட்டளை (6:5-9அ).

A. இது அறிக்கையிடுதலின் "ஐயோ"வுடன் தொடங்குகிறது (வசனம் 5).
1. தீர்க்கதரிசிகள், மற்றவர்கள் மீதான "ஐயோக்கள்" பற்றி (தேவனுடைய சாபம்) அடிக்கடி பேசினர்; ஏசாயா தமக்குத் தாமே ஐயோ ஒன்றை உச்சரித்துக் கொண்டார்.
2. தேவனுடைய அக்கினிமயமான பிரசன்னத்தின் வெளிச்சத்தில், ஏசாயா முதன்முறையாகத் தம்மைத்தாமே தெளிவாகக்

*காண்கின்றார். (யோபு 42:4-6; தானியேல் 10:8, 15-17; ஆபகூக் 3:16; மாற்கு 4:41; லூக்கா 5:8; வெளிப்படுத்தின விசேஷம் 1:17 ஆகியவற்றையும் காணவும்.)*

3. *அவர் தாம் அதமாகப் போவதாக நினைக்கின்றார் (யாத்திராகமம் 33:20).*

B. *சுத்திகரிப்பின் ஒரு "குறிப்பினால்" எல்லாம் மாறுகின்றன (வசனங்கள் 6, 7).*

1. *ஏசாயா தம்மீது இரக்கம் காட்டும்படி கேட்டிருக்கவில்லை; தமது விஷயம் நம்பிக்கையற்றதென்று அவர் கருதுகின்றார்.*
2. *தேவனுடைய தரிசனத்தால், ஏசாயாவின் இருதயம் கலங்கியிருந்த காரணத்தினால், இரக்கம் காட்டப்பட்டது. தேவன் பரிசுத்தமான தேவனாக மாத்திரம் அல்ல; ஆனால் அவர் இரக்கமுள்ள தேவனாகவும் இருக்கின்றார்!*
   a. *எரிகிற நெருப்புத் தழல்: மனந்திரும்புதல் என்பது வேதனை நிறைந்ததாக உள்ளது; மாறுதல் என்பது வேதனை நிறைந்ததாக உள்ளது.*
   b. *அழகுநிறைந்த வார்த்தைகள்: "உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது."*

C. *இது கட்டளையின் "போய்" (வசனங்கள் 8, 9அ) என்ற சொல்லுடன் முடிகிறது.*

1. *முதன்முறையாக, தேவன் பேசுகின்றார்.*
   a. *"யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்?" இது ஏசாயாவினிடம் அல்ல, ஆனால் பரலோகத்தின் கூட்டத்தாரிடத்தில் பேசப்பட்டது.*
   b. *பாவத்தில் இழந்துபோகப்பட்டுள்ள உலகத்தைத் தேவன் கண்ணோக்கி இன்னமும் ஆச்சரியப்படுகின்றார்.*
2. *ஏசாயாவினிடம் கேட்கத் தேவையின்றியிருந்தது; அவர் தன்னார்வமாய் இருக்கின்றார்.*
   a. *"இதோ அடியேன் இருக்கிறேன்!" நான் செய்வேனா?*
   b. *ஏசாயா கர்த்தரைக் காண்பதற்கு முன், அவரால் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தார். இன்றைய நாட்களில் நமது பிரச்சனைகள், சுவிசேஷ ஊழியப் பிரச்சனைகளோ, வேதாகம வாசிப்புப் பிரச்சனைகளோ, சபைக்கு வருதலின் பிரச்சனைகளோ அல்லது காணிக்கைப் பிரச்சனைகளோ அல்ல. நமது பிரச்சனைகள், ஆராதனைப் பிரச்சனையாக உள்ளது; நாம் தேவன் உண்மையில் யாராக இருக்கின்றார் என்பதைக் கண்டிருப்பதில்லை! நாம் அவ்வாறு செய்யும்போது, நம்மிடத்தில் "இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும்!" என்று கூறும்படி வேண்டிக்கொள்ளவும் கெஞ்சவும் அவசியம் இராது.*
3. *தேவன், "போ ... ." என்று கூறுகின்றார். ஆமென், ஆமென், ஆமென்.*

*முடிவுரை*

*தேவாலயத்தில் தேவன் ஒரு சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதை நாம் காண முடியாது, ஆனால் நாம் அவரை வேதவசனங்களில் காண முடியும். ஏசாயாவைப்போல், நாமும் நம்மையே, தேவனுடைய பரிசுத்த தன்மைக்கு முன்பாகத் தெளிவாகக் காணக் கற்றுக்கொண்டால், பின்பு நாமும்கூட, "இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும்!" என்று கூறும்படி நம்மை வழிநடத்தும் உறுதியான விசுவாசத்தைக் கொண்டிருப்போம்.*

# 20

# எரேமியா மற்றும் புலம்பல்: அழுகின்ற தீர்க்கதரிசி

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *எரேமியா 1, 3, 6, 7, 9, 20, 23, 25, 26, 28, 29, 31, 32, 36-44, 52; புலம்பல் 1.*

***தலைப்பு***

*எரேமியாவின் புத்தகம் அதன் எழுத்தாளரைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது (எரேமியா 1:1). இந்தப் பெயரானது "யெகோவா நிலைநாட்டுகிறார்" மற்றும் "யெகோவா நியமிக்கிறார்" என்பது உட்படப் பல்வேறு விஷயங்களை அர்த்தப்படுத்தக்கூடும்.*

*"புலம்பல்" என்பது "அழுதல்" என்று அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தையின் உணர்வைப்பெறுவதற்கு, நாம் திருப்பப்பட இயலாத இழப்பு ஒன்றை அடைந்த ஒருவர் கட்டுப்படுத்த இயலாதபடிக்கு அழுவதை நினைத்துப் பார்க்க வேண்டும். இங்கு கவனிப்பின்கீழ் உள்ள "புலம்புதல்" எருசலேம் நகரத்தின் அழிவைப் பற்றியதாக உள்ளது (புலம்பல் 1:1; 5:22).*

***பின்னணி***

*ஏசாயாவைப் போன்றே, எரேமியாவும் தெற்கு ராஜ்யமாகிய யூதாவில் அந்நிய வல்லமையொன்று எருசலேமை அழிக்கப்போவதாக அச்சுறுத்திக் கொண்டிருக்கையில் ஊழியம் செய்தார். ஏசாயாவை போலின்றி, எரேமியாவால் அழிவையோ அல்லது அதைத்தொடர்ந்து மக்களை சிறையிருப்புக்கு இழுத்துச்செல்வதையோ தவிர்க்க இயலாதிருந்தது. எரேமியாவின் நாட்களில், மக்களின் இருதயங்கள் கடினப்பட்டிருந்தன; தேவனுடைய பொறுமை எல்லை கடந்திருந்தது/மீறிப்போயிருந்தது.*

*எரேமியா ஒரு நீண்ட ஊழியத்தைக் கொண்டிருந்தார், இவர் ஐந்து அரசர்களின் காலத்தில் ஊழியம் செய்திருந்தார். இவரது ஊழியம் சீர்திருத்தத்தின் காலமாகிய யோசியாவின் நாட்களில் தொடங்கியது, இருப்பினும் சீர்திருத்தம் அதிகநாட்கள் நீடிக்கவில்லை. எரேமியாவின் முயற்சிகள் இருந்தபோதிலும், ராஜ்யம் விரைவிலேயே சீரழியத் தொடங்கிற்று. பாபிலோனிய சிறையிருப்பு எழுபது ஆண்டுகள் நீடித்திருக்கும் என்பது எரேமியாவின் தீர்க்கதரிசனங்களில் கவனிக்கத்தக்க ஒன்றாகும் (25:11; 29:10). (குறிப்பு: இந்த எழுபது ஆண்டுகள் என்பவை கி.மு. 596ல் எருசலேம் அழிக்கப்பட்ட போதல்ல, ஆனால் கி.மு. 605ல் மக்கள் முதன்முறை சிறையிருப்பில் பிடிக்கப்பட்டுச் சென்றபோது தொடங்கிற்று என்பதைக் கவனியுங்கள்.)*

*அழிவு தவிர்க்க இயலாததாக இருந்ததென்று எரேமியா தெளிவாகக் கண்டபோது, அவர் தலைவர்களைப் பாபிலோனியரிடம் சரணடைந்து, தங்களுக்குத் தகுதியான தண்டனையை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினார். இவ்விதமாக, எருசலேம் தப்பிக்க முடிந்திருந்தது. இப்படிப்பட்ட செய்தியை உரைத்ததால் எரேமியா காட்டிக்கொடுப்பவர் என்று முத்திரை குத்தப்பட்டார்.*

*பழைய ஏற்பாட்டில் வேறு எவரைக்காட்டிலும் எரெமியாவைப் பற்றி அதிகம் தனிமனித வரலாற்றுக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன, இதில் தாவீதின் வரலாறும் உள்ளடங்குகிறது; இருப்பினும், எரெமியாவைக் குறித்து நம்மில் பெரும்பான்மையானவர்கள் ஒரு சிறிதளவே அறிந்திருக்கின்றோம். அவரது எழுத்துக்கள் நாள்வரிசையில் அமைக்கப்பட்டிருப்பதில்லை என்பதால் அவைகள் வாசிப்பதற்குக் கடினமாக உள்ளன. சாத்தியக்கூறுள்ள உதவியாக, பின்வரும் வரைகுறிப்புகள் நாள்வரிசை முறையில் அமைக்கப்பட்டுள்ளன.*

*யூதப்பாரம்பரியமானது, புலம்பலின் புத்தகம் எரெமியாவினால் எழுதப்பட்டது என்று கூறுகிறது; இந்தக்கூற்றுடன் இப்புத்தகத்தில் இருக்கும் உள்ளான ஆதாரங்கள் ஒத்துப்போகின்றன. செப்துவஜிந்த் வேதாகமத்தில், எரெமியாவின் தீர்க்கதரிசனமும் புலம்பலும் ஒரே புத்தகமாக உள்ளது.*

**வரைகுறிப்புகள்**

***எரெமியா***

I. *யோசியாவின் ஆட்சிக்காலத்தின்போது (1-12).*

II. *தீர்மானிக்க இயலாத ஒரு காலத்தில்: அடையாளங்களில் தீர்க்கதரிசனங்கள் (13-20).*

III. *யோவகாஸ் அரசரின் ஆட்சியின்போது ஆட்சி (இந்தக் காலகட்டத்திற்கென்று சிறப்பான நிகழ்ச்சி எதுவும் இல்லை).*

IV. *யோயாக்கீமின் ஆட்சியின்போது.*

   A. *ஆட்சியின் தொடக்கம் - எரெமியா விசாரிக்கப்படுதல் (26).*

   B. *ஆட்சியின் நான்காம் ஆண்டு - பாபிலோனியா நெருங்கிவருத (25).*

   C. *நான்காம் ஆண்டில் - அரசர் புத்தகச்சுருளை எரிக்கிறார் (36).*

   D. *நான்காம் ஆண்டில் - பின்தொடர் நிகழ்ச்சிகள் (45, 46).*

   E. *ஆட்சியின்போது - ரேகாபியர்களின் உதாரணம் (35).*

V. *யோயாக்கீனின் ஆட்சியின்போது (இந்தக் காலகட்டத்திற்கென்று சிறப்பான நிகழ்ச்சி எதுவும் இல்லை; ஒருவேளை அடையாளத்தீர்க்கதரிசனங்களில் சில இந்தக் காலகட்டத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம்).*

VI. *சிதேக்கியாவின் ஆட்சியின்போது.*

   A. *சிதேக்கியாவினுடைய ஆட்சியின் தொடக்கம்; எரெமியாவின் நுகத்தடி, கடிதம், மற்றும் பாடல் (27-31).*

   B. *எருசலேமின் அழிவிற்கு ஏழு ஆண்டுகள் முன்பாக; பாபிலோனின் வீழ்ச்சி பற்றிய ஒரு குறிப்பு (50, 51).*

   C. *முற்றுகையின் தொடக்கம் (21-24).*

   D. *சிதேக்கியாவின் பத்தாம் ஆண்டு ஆட்சி; சிறையில் எரெமியா (32-34).*

   E. *ஒன்பது முதல் பதினோறாம் ஆண்டு வரை: முற்றுகை மற்றும் எருசலேம் தீக்கிரையாகுதல் (37-39).*

VII. *சிறையிருப்பின்போது (40-44).*

VIII. *தீர்மானிக்க இயலாத ஒரு காலத்தில்: நாடுகளுக்கு எதிரான*

*தீர்க்கதரிசனங்கள் (47-49).*

IX. *கடைசி மறுகண்ணோட்டம் (52).*

***புலம்பல்***

I. *துன்மார்க்கத்தின் வழி (1).*
II. *தேவனின் கோபம் (2).*
III. *வருத்தத்தின் பாரம் (3).*
IV. *உதவியின் தேவை (4).*
V. *அக்கிரமத்தின் சேதம் (5).*

***எரெமியா மற்றும் புலம்பல் புத்தகங்களில் இருந்து பாடங்கள்***

*"உண்மையான மனிதர்கள்" அழுவார்களா? நமது கர்த்தர் அழுதார் (லூக்கா 19:41; யோவான் 11:35) எரேமியா "அழும் தீர்க்கதரிசி" என்று அறியப்படுகின்றார் (எரெமியா 9:1), ஆனால் அவர் தமக்காக அழவில்லை. அவர் தமது மக்களின் இழந்துபோன நிலையைக்குறித்து அழுதார். அழுதல் என்பது ஒரு மனிதர் பலவீனமாய் இருக்கின்றார் என்று நிரூபிப்பதாகச் சிலர் நினைக்கின்றனர், ஆனால் எரெமியா பலவீனமாயிருக்கவில்லை. நமது ஊழியத் திற்கு ஒழியாத விளைவுகள் எதையும் காணாது நம்மில் எத்தனை பேர் நாற்பது ஆண்டுகள் வரையிலும் பொறுமையாய் இருக்க முடியும்? உண்மையான ம னிதர்கள் கூருணர்வுடன் இருக்கின்றனர்; அவர்கள் அழ முடியும்.*

*நாம் கேட்பதால் மட்டும் அறிபவற்றைக் காட்டிலும் நாம் பார்ப்பதால் அறிபவற்றில் அதிகமானவற்றை நினைவில்வைக்கின்றோம். எரெமியாவின் புத்தகம், கெட்டுப்போன சணல் கச்சை (13), குயவனும் களிமண்ணும் (18), உடைந்த பானை (19), நுகத்தை அணிந்துகொள்ளுதல் (27, 28), மற்றும் ஒரு செய்தியுடன் கல் ஒன்றைக் கட்டி அதை ஐப்பிராத்து நதியில் எறிதல் (51) போன்ற பாடங்களினால் நிறைந்துள்ளது. சிலவேளைகளில் நாம் என்ன கூறிக்கொண்டிருக்கிறாம் என்பதை மக்கள் காண்பதற்குக் காட்சி உதவிகள் தேவைப்படுகின்றன.*

*புதிய உடன்படிக்கை பற்றிய எரெமியாவின் கூற்று தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது (31:31-34). பழைய ஏற்பாடு (உடன்படிக்கை) மாற்றப்பட வேண்டியதான ஒரு தற்காலிக உடன்படிக்கையாய் இருந்தது. எபிரெயர் 8:6-13 வசனப்பகுதியில் எரெமியா 31 மேற்கோள் காண்பிக்கப்படுகிறது, இதில் முதல் உடன்படிக்கையானது இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டினால் (உடன்படிக்கையினால்) மாற்றப்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது.*

*எரெமியாவின் புத்தகத்தில் மேசியாவைப் பற்றிப் பல குறிப்புகள் உள்ளன. (இ.வ. எரெமியா 31:15ஐ மத்தேயு 2:16-18உடன் ஒப்பிடவும்). விசேஷமாக, மேசியாவுக்கான சொற்றொடரான "கிளை," என்பது பற்றி எரெமியாவின் குறிப்புகளைக் கவனிக்கவும் (எரெமியா 23:5, 6; 33:14-18). மக்கள் இயேசுவைக் கண்டபோது, அவர்கள் எரெமியாவை நினைத்தனர் (மத்தேயு 16:14).*

## மகத்தான தோல்வி (எரெமியா)

*வெற்றியை நீங்கள் எவ்வாறு அளவிடுகின்றீர்கள் - சாதனைகளினாலா, இலக்குகளைச் சந்தித்தலினாலா, புகழ்ச்சியினாலா, வாழ்வை மகிழ்ச்சியுடன்*

அனுபவித்தலினாலா? நீங்கள் குறிப்பிடக்கூடிய ஏறக்குறைய எந்த ஒரு சொற்றொடரினாலும், எரெமியா தோல்வியடைந்தவராகவே இருந்தார். இருப்பினும், அவர் ஒரு மகத்தான தோல்வியடைந்தவராய் இருந்தார்.

எரெமியா ஐந்து அரசர்களின்கீழ் (யோசியா, யோவகாஸ், யோயாக்கீம், யோயாக்கீன் மற்றும் சிதேக்கியா) மற்றும் ஒரு அதிபதியின்கீழ், ஏறக்குறைய நாற்பதுக்கும் அதிகமான ஆண்டுகள் ஊழியம் செய்திருந்தார். நாம் இப்புத்தகத்தைக் கண்ணோக்கி, இந்தக் காலகட்டத்தில் இத்தீர்க்கதரிசி என்ன செய்தார் என்று காண்போம்.

I. எரெமியாவின் அறைகூவல்.
   A. அவரது அழைப்பு (1:4-10).
   B. அவரது செய்தி.
      1. அவர் யோசியாவின் நாட்களில் "நீங்கள் தேவனை விட்டுப் புறம்பே போயிருக்கின்றீர்கள் [3:12, 13, 22; 8:5]. நீங்கள் மனந்திரும்ப வேண்டும், மற்றும் அது மேம்போக்கானதாக இருக்கக்கூடாது; அது இருதயத்தில் இருந்து வரவேண்டும் [3:10; 4:4]. நீங்கள் அவ்வாறு செய்தால், நம்பிக்கை உண்டு" என்று கூறி (26:3) தமது ஊழியத்தைத் தொடங்கினார். அவர் ஒரு மேன்மையான நாளைப்பற்றியும் ஒரு புதிய உடன்படிக்கையைப் பற்றியும் பேசினார்.
      2. நன்கு பழக்கமான வசனப்பகுதிகள்: 6:16; 10:23; 17:9.
      3. காலங்கள் கடந்தபோது, அவர் தேவனுடைய பொறுமை எல்லை கடந்து கொண்டிருந்ததையும், தண்டனை என்பது தவிர்க்க இயலாததாய் இருந்ததையும் (2 நாளாகமம் 36:16), அவர்கள் தங்களுக்கு வரவிருப்பதை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும் என்பதையும் அதிகம் அதிகமாய் அறிவிக்க வேண்டியிருந்தது. "Magor-missabib"![1]
      4. கடைசியில் பாபிலோன் வந்தபோது, சரணடைதல் ஒன்றுதான் மக்கள் தங்கள் உயிரையும் தங்கள் நகரத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்கான ஒரேவழி என்று அவர் கூறினார் (38:2, 17).
   C. இந்தச் செய்தி பல வழிமுறைகளில் முன்வைக்கப்பட்டது:
      1. பிரசங்கித்தல்.
      2. எழுதுதல் (16:2; 30:2).
      3. கருத்து நோக்குப் பாடங்கள் (குறிப்புகளில் காணவும்). இந்தப் பாடங்களுக்கு மற்றவைகளும் முன்வைக்கப்பட்டன.
II. எரெமியாவின் தோல்வி.
   A. மக்கள் மனந்திரும்பினார்களா? அவர்களின் வாழ்வையும் நகரையும் அவர் காப்பாற்றினாரா? இல்லை.
      1. அவர்கள் கவனிக்கவில்லை (25:3).
      2. நாற்பது அல்லது அதற்குச் சற்றே கூடுதலான ஆண்டுகள் பிரசங்கத்திற்குப்பின்பு, ஒரு காலத்தில் அழகுமிக்க நகராக இருந்தது புகைந்து சிதிலங்களானதையே அவர் காண்பிக்கப் பெற்றிருந்தார் (39:6-8; 52:3-23; 2 நாளாகமம் 36:18, 19)!
   B. அவர் செய்வதற்கு முயற்சித்திருந்த விஷயத்திற்காக அவர் பாராட்டப்

*பட்டாரா? இல்லை. அவர் மக்களாலும், ஆசாரியர்களாலும், (கள்ள) தீர்க்கதரிசிகளாலும், மற்றும் அரசர்களாலும் எதிர்க்கப் பட்டார்.*

1. *அவர்கள் அவரை அச்சுறுத்தினர் (26:8முதல்.).*
2. *அவர்கள் அவரை ஏளனம் செய்தனர் (18:18; 20:7).*
3. *அவர்கள் அவரைத் தாக்கினர் (20:2).*
4. *அவர்கள் அவரது நடமாட்டத்தைத் தடைசெய்தனர் (36:5).*
5. *அவர்கள் அவரது செய்தியை எரித்துப்போட்டனர் (36).*
6. *அவர்கள் அவரைப் பொதுக்காவலறையில் போட்டனர் (20:2).*
7. *அவர்கள் அவரை ஆண்டுகணக்கில் சிறைவைத்திருந்தனர் (32:2, 3; 37:15, 21).*
8. *அவர்கள் அவரை மரிக்கும்படி இருட்டறைக்குள் போட்டனர் (38).*

C. *அவர் சந்தோஷமாய் இருந்தாரா? இல்லை.*

1. *அவர் பிரசங்கிக்கவே விரும்பவில்லை என்பது முதலிடத்தில் இருந்தது - அவர் தொடர்ந்து அதைச் செய்யவிரும்பவில்லை.*
2. *அவர் கர்த்தரிடத்தில் முறையிட்டார். குறைந்தபட்சம் இப்புத்தகத்தில் முறையீட்டின் ஐந்து பகுதிகள் இடம்பெறு கின்றன (அதிகாரங்கள் 11, 12, 15, 17, 18 மற்றும் 20).*
3. *அவர் "அழுகின்ற தீர்க்கதரிசி" என்று அறியப்பட்டுள்ளார் (9:1, 10; 14:17; புலம்பல் 1-5).*

III. *மகத்தான தோல்வி.*

A. *இவையெல்லாம் இருந்தும்கூட, அவர் தமது ஊழியத்தில் இருந்து வெளியேறவில்லை. அவர் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமது பணிக்கு உண்மையுள்ளவராய் இருந்தார் (20:9).*

B. *நமக்கு இந்தச் செய்தி அவசியமாக உள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 2:10ஐக் காணவும்).*

*முடிவுரை*

*சந்தோஷம் அல்லது பிரபலத்தன்மையைக் கொண்டல்ல, ஆனால் தேவன் அவருக்கு ஊழியம் செய்வதில் உண்மைத்தன்மையைக் கொண்டே வெற்றியை அளவீடு செய்கின்றார்.*

---

*குறிப்பு*

[1]"Magor-missabib" *என்ற எபிரெயச் சொல்வழக்கு எரெமியாவின் புத்தகத்தில் ஐந்து முறைகள் காணப்படுகிறது, இது "எல்லாப் பக்கத்திலும் பயங்கரம்!" என்று அர்த்தப்படுகிறது.*

# 21

# எசேக்கியேல்: நாடு கடத்தப்பட்டிருத்தலின் தீர்க்கதரிசி

**வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:** *1-5, 8, 9, 11, 12, 14, 16, 18, 20, 22, 24, 28, 33, 34, 36, 37, 40, 43, 47, 48.*

**தலைப்பு**

*எசேக்கியேலின் புத்தகம் அதன் எழுத்தாளரின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது (1:3). "எசேக்கியேல்" என்றால் "தேவன் பெலப்படுத்துவார்" என்று அர்த்தப்படுகிறது.*

**பின்னணி**

*எசேக்கியேல் கி.மு. 597ல் இரண்டாம்முறை சிறைப்பிடித்துப் போகப்படுதலில் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார். அவர் நாடுகடத்தப்பட்டிருந்தவர்களுடன் "கேபார் நதியண்டையில்" குடியிருந் தார் (1:1, 2), இது ஒரு வேளை ஐப்பிராத்து நதியிலிருந்து பிரிந்த ஒரு பெரும் வாய்க்காலாக இருக்கலாம். அவர் சிறையிருப்பிலிருந்த யூதர்கள் மத்தியில் பிரசங்கித்த வேளையில், தானியேல் (இவர் கி.மு. 605ல் பிடித்துக்கொண்டு போகப்பட்டவர்) அரண்மனையில் ஊழியம் செய்தார். எசேக்கியேலும் தானியேலும் அனேகமாக ஒருவரையொருவர் நன்கு அறிந்திருக்கலாம் (14:12, 20; 28:3).*

*தீர்க்கதரிசி என்ற வகையில் எசேக்கியேல் இரு பணிப்பொறுப்புகளைக் கொண்டிருந்தார்: (1) எருசலேமின் அழிவுக்கு முன்னர், அவர் மட்டுமீறிய தன்னம்பிக்கையுடன் போரிட வேண்டியிருந்தது. நாடு கடத்தப்பட்டவர் களின் தன்னம்பிக்கையானது மூன்று விஷயங்களின் அடிப்படையில் அமைந்தி ருந்தது: அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாராக இருந்தனர், தாவீதின் சந்ததியாரில் ஒருவர் இன்னமும் அரியணையில் வீற்றிருந்தார், மற்றும் தேவனுடைய ஆலயம் இன்னமும் நின்றிருந்தது. (2) நகரத்தின் அழிவுக்குப் பின்பு, அவர் மட்டுமீறிய பெருவருத்தத்துடன் போரிட வேண்டியிருந்தது.*

*எசேக்கியேல் பல்வேறு வகையான போதனை உதவிப்பொருட்களைப் பயன்படுத்தினார். தேவன் அடிக்கடி எசேக்கியேலை நடக்கவிருக்கும் ஒன்றிற்கு செயல்படும்படி/நடிக்கும்படி கூறினார்; இந்த அடையாளத்துவச் செயல்பாடுகளில் பல எசேக்கியேலுக்குத் தனிப்பட்ட வகையில் கடினமான தாயிருந்தது. தரிசனங்கள் என்பவையே இப்புத்தகத்தின் மிகக்கடினமான பகுதி களாக இருந்தன. ஒரு தரிசனத்தின் விவரங்களில் ஈடுபாடுகொண்டு அதன்மூலம் முன்வைக்கப்படும் கருத்தின் மீதான பார்வையை இழந்து போகுதல் என்பது சுலபமானதே. ஒவ்வொரு தரிசனத்தையும் அடிப்படை சத்தியத்தின் மனோரம்மியமான கண்ணோட்டமாக நினைத்துப் பாருங்கள்.*

**வரைகுறிப்பு**

I. *எருசலேமின் அழிவுக்கு முன்னதாக: நியாயத்தீர்ப்பின் பிரசங்கியார் (1-24).*

A. நாடுகடத்தப்பட்டிருத்தலின் ஐந்தாம் ஆண்டு (1-7).
   1. எசேக்கியேலுக்குத் தரப்பட்ட ஊழியக்கட்டளை (1-3).
   2. எருசலேமின் அழிவு முன்னுரைக்கப்பட்டது (4-7).
B. நாடுகடத்தப்பட்டிருத்தலின் ஆறாம் ஆண்டு (8-19).
   1. எசேக்கியேல் தரிசனத்தில் எருசலேமுக்குப் பயணமாகுதல் (8-11).
   2. உண்மையற்ற மனைவியைக்கொண்டு கூறப்பட்ட ஒப்புவமை (16).
C. நாடுகடத்தப்பட்டிருத்தலின் ஏழாம் ஆண்டு (20-23); இஸ்ரவேல் மற்றும் யூதா ஆகியோரின் பாவங்கள்.
D. நாடுகடத்தப்பட்டிருத்தலின் ஒன்பதாம் ஆண்டு (24).
   1. முற்றுகை தொடங்குகையில், எசேக்கியேலின் மனைவி இறக்கின்றாள்.
   2. எசேக்கியேல் ஊமையாகின்றார்.

II. முற்றுகையும் அழிவும்: நாடுகளுக்கு எதிராக தீர்க்கதரிசனங்கள் (25-32).

III. எருசலேமின் அழிவிற்குப் பின்பு: ஆறுதலின் பிரசங்கியார் (33-48).

A. நாடுகடத்தப்பட்டிருத்தலின் பன்னிரெண்டாவது ஆண்டு (33-39; 32:17; 33:21 ஆகிய வசனங்களைக் கவனிக்கவும்).
   1. ஊழியக்கட்டளை புதுப்பிக்கப்பட்டது (33); எருசலேம் வீழ்ந்திருந்தது என்ற செய்தி வருகிறது.
   2. இஸ்ரவேலின் மேய்ப்பர்கள் மீதான குற்றச்சாட்டுகள் (34).
   3. நாட்டில் மீண்டும் குடியேற வேண்டியதாக, நாடு உயிர்ப்பிக்கப்பட வேண்டியதாக இருத்தல் (36, 37).
B. நாடுகடத்தப்பட்டிருத்தலின் இருபத்தி ஐந்தாம் ஆண்டு (40-48); தேவாலயம் மீண்டும் கட்டப்படுதல் பற்றிய தரிசனம்.

**எசேக்கியேலின் புத்தகத்தில் இருந்து பாடங்கள்**

எசேக்கியேலின் புத்தகம், பிரசங்கியாருக்கு இருக்கிற இருமடங்குப் பணிப்பொறுப்பைக் காண்பிக்கிறது: துன்புற்றிருப்பவர்களுக்கு ஆறுதல் அளித்தல் மற்றும் வசதிமிகுதியாய் (ஆண்டவரை மறந்து) இருப்பவர்களை (ஆண்டவருடைய வசனத்தை உணர்த்தி) துன்புறுத்தல்.

தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிப்பவர்களும் போதிப்பவர்களுமாயிருக்கிற நமக்கு, ஒவ்வொருவரையும் மனம்மாற்றும் பொறுப்பு இருப்பதில்லை, ஆனால் தேவனுடைய செய்தியை உண்மையுடன் அறிவிக்கும் பொறுப்பு உள்ளது (3:17). நாம் அவ்வாறு செய்யும்போது, நமது உரையைக் கேட்பவர்கள் நேர்மறையான வகையில் பதில்செயல் செய்தாலும் செய்யாவிட்டாலும், நாம் நமது பொறுப்பை நிறைவேற்றுகின்றோம் (3:18-21; 33:7-9).

மனிதர்கள் என்ற வகையில், நாம் நமது பிரச்சனைகளுக்குப் பிறரைக் குற்றம்சாட்ட விரும்புகின்றோம். சிலர் தங்களின் சுற்றுச்சூழலைக் குற்றம்சாட்டுகின்றனர். மதவியலாளர்கள், மனிதகுலப் பிரச்சனைகள் யாவற்றிற்கும், அடிக்கடி ஆதாமைக் குற்றம்சாட்டுகின்றனர். இஸ்ரவேல் மக்கள் தங்கள் முன்னோர்களைக் குற்றம்சாட்டினர் (18:2). இருப்பினும், வேதாகமம், தனிப்பட்ட பொறுப்புகளைப் போதிக்கிறது; நாம் நமது சொந்த பாவங்களுக்கும்

*அவற்றின் விளைவுகளுக்கும் வேறொருவரைக் குற்றம்சாட்ட முடியாது (18:3, 4, 19, 20)!*

*எசேக்கியேல் புத்தகத்தில் உள்ள, கள்ளத் தீர்க்கதரிசிகள் பற்றிய வசனப்பகுதிகள் (34:11-31) இன்றைய நாட்களில் உள்ள தேவனுடைய மேய்ப்பர்கள் (மூப்பர்கள்) யாவராலும் வாசிக்கப்பட வேண்டிய பகுதியாக உள்ளது (1 பேதுரு 5:1-3). இன்றைய நாட்களில் இயேசுவே பிரதான மேய்ப்பராக இருக்கின்றார் (யோவான் 10:8-11); எபிரெயர் 13:20; 1 பேதுரு 2:25; 5:4).*

*தேவாலயம் பற்றிய தரிசனம் (40-48) செரூபாபேல் அல்லது ஏரோது ஆகியோரால் கட்டப்பட்ட தேவாலயத்தைக் குறிப்பதில்லை; எசேக்கியேலின் தரிசனத்தில் உள்ள கட்டமைப்புபோல் அந்தக் கட்டமைப்பு இருக்கவில்லை. அந்த அதிகாரங்கள் எதிர்காலத்தில் ஒரு ஆயிரம் ஆண்டு ஆட்சிக்காலம் பற்றிய திட்டப்படத்தைத் தருவதும் இல்லை; இந்தக் காலகட்டத்தில் மிருகங்களைப் பலிசெலுத்துதல் இன்னமும் நடைமுறையில் இருந்தது (43:18முதல்.), ஆனால் இவைகள் இயேசுவின் பரிபூரணமான பலிக்குப் பின்பு ஒழிக்கப்பட்டன (எபிரெயர் 10). மாறாக, இந்தத் தரிசனமானது, கிறிஸ்தவ யுகம் பற்றிய தரிசனமாய் இருந்தது, தேவனுடைய மக்களாகிய சபையார், தேவன் வாசம்பண்ணும் இடமாக, அல்லது தேவாலயமாக இருக்கின்றனர் (1 கொரிந்தியர் 3:16). இந்தத் தீர்க்கதரிசனம் இயேசுவின் ஆவிக்குரிய பலியையும் (எபிரெயர் 9:11-15, 23-28) கிறிஸ்தவர்களின் ஊழியத்தினுடைய ஜீவபலியையும் (ரோமர் 12:1) குறிப்பிடுகிறது.*

---

## உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு *(எசேக்கியேல் 37:1-14)*

*பாபிலோனுக்கு இஸ்ரவேல் மக்களை இரண்டாந்தரம் சிறையிருப்புக்குக் கூட்டிச் சென்றபோது எசேக்கியேல் அவர்களுடன் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டார். இவ்விதமாக, அவர் (மூன்றாம் முறை மக்கள் பிடித்துக்கொண்டு போகப்படுகையில்) எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன்பு மற்ற யூதர்களுடன் பாபிலோன் சென்று சேர்ந்தார். முதலில் அவர் சென்று சேர்ந்தபோது பிடிக்கப்பட்டிருந்தவர்கள், எருசலேம் அழிக்கப்பட முடியாது என்று அஸ்திபாரமற்ற நப்பாசை கொண்டிருந்தனர். எருசலேம் அழிக்கப்படும் என்ற புகழ்ச்சியற்ற செய்தியைக் கொடுத்தல் என்பதே எசேக்கியேலுக்குத் தேவன் அளித்திருந்த முதல் பணிப் பொறுப்பாய் இருந்தது. எருசலேம் வீழ்ந்தபோது - தேவாலயம் அழிக்கப்பட்டு, மதில்கள் இடித்து வீழ்த்தப்பட்டபோது - பிடிக்கப்பட்டிருந்தவர்கள் பெரும்வருத்தத்தினால் நிரப்பப்பட்டனர். பின்பு எசேக்கியேல் விடுத்த செய்தியானது நம்பிக்கை தருவதாயிருந்தது. மேன்மையான நாள் வரவிருந்தது; மக்கள் மனந்திரும்புவார்கள் என்றால், தேவன் அவர்களை நாட்டில் மீளக்கட்டுவிப்பார். இந்த நம்பிக்கையின் செய்திகளில் ஒன்றை நாம் அதிகம் விரிவாய்க் கண்ணோக்குவோம்.*

I. *பழைய உலர்ந்த எலும்புகளுக்குக்கூட நம்பிக்கை உள்ளது (37:1-14).*

  A. *தரிசனம்: வசனங்கள் 1-10.*

    1. *தேவன் எசேக்கியேலை, உலர்ந்த எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கிற்கு எடுத்துச் செல்கின்றார். யுத்தத்தில் மடிந்து*

வீழ்ந்திருந்த வீரர்களின் எலும்புகள் சூரிய ஒளியில் உலர்த்தப் பட்டு, காட்டு மிருகங்களினால் சிதறடிக்கப்பட்டுக் கிடந்தன. அந்த எலும்புகள் பழையவையாக, உலர்ந்தவையாக, நொறுங்கத் தயாரானவையாக இருந்தன.

2. அந்த எலும்புகளுக்குப் பிரசங்கிக்கும்படி எசேக்கியேலிடம் தேவன் கூறுகின்றார்.
3. உற்சாகமான காட்சியொன்றில், அந்த உலர்ந்த எலும்புகளுக்குள் உயிர் திரும்பிற்று.
   a. ஒரு இரைச்சலும் அசைவும் உண்டாயிற்று.
   b. எலும்புகள் எலும்புக்கூடுகளாக ஒன்றிணைந்தன, நரம்புகள் அந்த எலும்புக் கூடுகளில் எலும்புகளை ஒன்றிணைத்தன, எலும்புகளைச் சதைமூடியது, மற்றும் கடைசியில் சதைகளைத் தோல் மூடிற்று. இப்போது அந்தப் பள்ளத்தாக்கு முழுவதும் இறந்த பிரேதங்களால் மூடப்பட்டிருக்கிறது.
   c. தேவனுடைய ஆவி அந்தப் பிரேதங்களுக்குள் வருகிறது, மற்றும் அந்த சேனை கர்த்தருக்காக, மீண்டும் ஒருமுறை யுத்தம் செய்யத் தயாராக எழுந்து நிற்கிறது.

B. விளக்கம்: வசனங்கள் 11-14.
   1. எலும்புகள் என்பவை பெரும்வருத்தத்தினால் நிறைந்திருந்த இஸ்ரவேல் மக்களாவார்கள். தேவன் அவர்களுக்குப் புதிய ஜீவனைக் கொடுக்கவும் அவர்களின் நாட்டில் அவர்களை மீளக்கட்டவும் கூடியவராய் இருந்தார். அவர்கள் கர்த்தர் மீதுள்ள தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொண்டிருக்க வேண்டியது அவசியமாயிற்று!
   2. இது இஸ்ரவேல் மக்கள் சிறையிருப்பிலிருந்து மீண்டும் தங்கள் நாட்டிற்குத் திரும்ப வந்தபோது நிறைவேறிற்று. உலர்ந்த எலும்புகளுக்குத் தேவன் திரும்பவும் உயிர் அளித்தார்!

II. நமக்கும்கூட நம்பிக்கை உள்ளது!
   A. நாம் பெரும்வருத்தத்தினால் சூழப்பட்டு இருக்கின்றோம்.
      1. உலர்ந்த எலும்புகள் உலகத்தில் உள்ளன.
         a. நாடளாவிய மற்றும் உலகளாவிய உலர்ந்த எலும்புகள்.
         b. தனிப்பட்ட வாழ்க்கையில் உலர்ந்த எலும்புகள்.
      2. சபையில்கூட உலர்ந்த எலும்புகள் இருக்கக்கூடும். ஆவிக்குரிய வாழ்வு இல்லாது, நாம் பெரும் வருத்தத்தினால் நிறைந்தி ருக்கக் கூடும் (லூக்கா 24:21).
         a. சபைக்குழுமரீதியான உலர்ந்த எலும்புகள்.
         b. தனிநபர்த்துவமான உலர்ந்த எலும்புகள்: நமது கனவுகள், நமது ஆசைகள் ஆகியவை தகர்ந்திருக்கலாம். சிலருக்கு ஒவ்வொருநாளும், சற்றே உற்சாகமற்ற தன்மை தவிர, கடைசியான நாள்போன்று காணப்படலாம்.
   B. நமக்கு நம்பிக்கை தேவைப்படுகிறது (1 கொரிந்தியர் 13:13)!
      1. நம்பிக்கையின் முக்கியத்துவம் (ரோமர் 8:24; தீத்து 1:3).

2. *உண்மையான நம்பிக்கையானது, விஷயங்கள் மேன்மையடையும் என்பதற்கான தெளிவற்ற சாத்தியக்கூற்றில் இருந்து வருவதில்லை; மாறாக, உண்மையான நம்பிக்கையானது ஒரு நபருக்குள்ளாகவே உள்ளது.*
   a. *சங்கீதம் 42:5; ரோமர் 4:18; 10:11 ஆகியவற்றை வாசிக்கவும் (2 கொரிந்தியர் 11:24-27ஐக்கூட காணவும்).*
   b. *தேவனுடைய ஆச்சரியமான வாக்குத்தத்தங்களைப் பற்றி நினையுங்கள் (மத்தேயு 17:20; யோவான் 14:14; 16:33; மத்தேயு 28:20; ரோமர் 8:28; யோவான் 14:1-6). இந்த வாக்குத்தத்தங்கள், நம்பிக்கையுடனும் கீழ்ப்படிதலுடனும் அவரைப் பற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு உரித்தானவையாகும்.*

*முடிவுரை*

A. *நாம் நம்பிக்கையைப் பற்றிக்கொள்வோமாக; நமது வாழ்வில் உள்ள உலர்ந்த எலும்புகளைத் தேவன் மீளக்கட்டுவிக்கக் கூடியவராய் இருக்கின்றார்!*

B. *உங்களுக்கு இந்த நம்பிக்கையைத்தரக்கூடியதான ஒரு உறவை நீங்கள் தேவனுடன் கொண்டிருக்கின்றீர்களா? சங்கீதக்காரர், "என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தயங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; ..." என்று கூறுகின்றார் (சங்கீதம் 42:5).*

# 22

# தானியேல்: அந்நிய நாட்டில் ஒரு அந்நியர்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *1-12.*

***தலைப்பு***

*தானியேலின் புத்தகம் அதை எழுதியவரைக் கொண்டு பெயரிட்டு அழைக்கப்படுகிறது (8:1). "தானியேல்" என்றால் "தேவன் எனது நியாயாதிபதி யாய் இருக்கின்றார்" என்று அர்த்தப்படுகிறது.*

***பின்னணி***

*ராஜரீக வம்சத்தைச் சேர்ந்த தானியேலும் மற்றவர்களும், கி.மு. 605ல் முதலாம் சிறைப்பிடித்தலின்போது பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டனர். இந்த வேளையில் தானியேல் தமது பிந்திய இளமைப்பருவம் அல்லது இருபதுகளின் முந்தியபருவம் உடைய ஒரு மிகச்சிறிய இளைஞராக இருந்திருக்கலாம். தானியேல் தம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தபடியால், நேபுகாத்நேச்சாரின் அரசாங்கத்தில் ஒரு மேன்மைவாய்ந்த பதவிக்கு உயர்த்தப்பட்டார். சிறையிருப்பின் காலத்தின்போது, தானியேல் அரண்மனையில் சேவை செய்தார், அதே வேளையில் எசேக்கியேல் நாடுகடத்தப்பட்டிருந்தவர்களுக்குப் பிரசங்கித்தார் (எசேக்கியேலின் புத்தகம் பற்றிய பாடத்தில் உள்ள பின்னணிக் குறிப்புகளைக் காணவும்).*

*தானியேலின் புத்தகத்தில், நேபுகாத்நேச்சாருக்குப் பின்பு உடனடியாக, பெல்ஷாத்சார் என்பவர் குறிப்பிடப்படுகின்றார். நேபுகாத் நேச்சாருக்கும் பெல்ஷாத்சாருக்கும் இடையில் நான்கு ஆட்சியாளர்கள் இருந்தனர் என்று உலகப்பிரகாரமான எழுத்துக்களில் இருந்து நாம் அறிகின்றோம், இவர்களில் பெல்ஷாத்சாரின் தந்தை நபோனிதஸ் என்பவரும் உள்ளடங்கியிருந்தார். பாபிலோனின் வீழ்ச்சியில், பெல்ஷாத்சார் தனது தந்தை இல்லாத வேளையில் அரியணையில் வீற்றிருந்தார். பெல்ஷாத்சார் என்பவர் அரசாங்கத்தில் இரண்டாவது ஆட்சியாளராக இருந்ததால், "மூன்றாம் அதிபதி" என்பதே அவர் தானியேலுக்கு அளிக்கக்கூடிய மிக உயர்ந்த பதவியாய் இருந்தது (5:16, 29). சிறையிருப்பானது எழுபது ஆண்டுகள் நீடித்திருந்ததால் (9:2), மேதிய-பெர்சியர் அதிகாரத்திற்கு வந்தபோது, தானியேல் தமது பிந்திய எண்பதுகள் அல்லது முந்திய தொண்ணூறுகள் வயதுடையவராய் இருந்திருக்கலாம்.*

*இந்தப் புத்தகம் தனிவகைப்பட்ட இரண்டு பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. முதல் பாதி வரலாற்றுரீதியானதாக உள்ளது; கடைசிப்பாதி தீர்க்கதரிசன மாக உள்ளது. தானியேல் இப்புத்தகத்தின் முதல் பகுதியில் படர்க்கைப் பெயர்ச்சொல்லையும், இரண்டாம் பகுதியில் தன்மைப் பெயர்ச்சொல்லையும் பயன்படுத்துகின்றார். ஒவ்வொரு பகுதியும் நாள்வரிசை அட்டவணைமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது; அவைகள் பல ஆண்டுகள் ஒன்றின்மீது இன்னொன்று கவிந்த நிலைகொண்டுள்ளன.*

*தீர்க்கதரிசனப்பகுதி மிகச்சிறந்த இறைவெளிப்பாட்டு மொழி நடையைப்*

பயன்படுத்துகிறது. இறைவெளிப்பாட்டு இலக்கியம், தேவனுடைய மக்கள் அடக்கிவைக்கப்பட்டபோது உதித்தது. அடையாளமொழி நடையில் எழுதப்பட்ட அதன் செய்தி, உண்மையுடன் நிலைத்திருப்பவர்களுக்கு ஆறுதல் தருவதற்கானதாக இருந்தது. இந்த அடையாளங்கள் எல்லா வற்றையும் நீங்கள் புரிந்துகொள்ளாது இருந்தால் அதற்காக வருத்தப்படாதீர்கள்; தானியேலும்கூட இவையெல்லாவற்றையும் புரிந்துகொள்ளவில்லை (8:27)! (இறைவெளிப்பாட்டு இலக்கியம்பற்றிய இன்னும் அதிக விவரங்களை வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கான குறிப்புகளில் காணவும்.)

**வரைகுறிப்பு**

- I. *வரலாற்றுப் பகுதி (1-6).*
  - A. *நேபுகாத்நேச்சாரின் ஆளுகை (1-4).*
    1. *தானியேலும் அவரது நண்பர்களும் (1).*
    2. *நான்குவித உலோகங்களால் ஆன சிலை (2).*
       - a. *பொன்னால் ஆன தலை - முதல் ராஜ்யமான பாபிலோன் பேரரசு.*
       - b. *வெள்ளியால் ஆன மார்பும் புயமும் - இரண்டாவது ராஜ்யமான மேதிய - பெர்சியப் பேரரசு.*
       - c. *வெண்கலத்தால் ஆன வயிறும் தொடையும் - மூன்றாவது ராஜ்யமான கிரேக்கப் பேரரசு.*
       - d. *இரும்பினால் ஆன கால் மற்றும் இரும்பும் களிமண்ணும் கலந்த பாதங்கள் - நான்காவது ராஜ்யமான ரோமப் பேரரசு.*
    3. *அக்கினிச்சூளை (3).*
    4. *நேபுகாத்நேச்சாரின் அறிவிப்பு (4).*
  - B. *பெல்ஷாத்சாரினுடைய ஆட்சியின் முடிவு; சுவரில் கையுறுப்பு எழுதுதல் (5).*
- II. *தீர்க்கதரிசனப் பகுதி (7-12).*
  - A. *பெல்ஷாத்சாரின் ஆளுகை (7, 8).*
    1. *நான்கு மிருகங்களைப் பற்றிய தரிசனம் (7); இது 2ம் அதிகாரத்தின் நான்கு ராஜ்யங்களைப் பற்றிய தரிசனத்தைப் போன்றதாகவே உள்ளது.*
    2. *ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடா பற்றிய தரிசனம் (8); இரண்டாம் மற்றும் மூன்றாம் ராஜ்யங்களைப் பற்றிய விவரங்கள்.*
  - B. *தரியுவின் ஆளுகை (9).*
    1. *இஸ்ரவேல் மக்களின் திரும்புகைமீது தானியேல் பணியாற்றுதல் (9:1-19).*
    2. *எதிர்காலம் பற்றிய தரிசனம் (9:20-27). "எழுபது வாரங்கள்" என்பது ஒருவேளை, மேசியாவின் ஊழியம்பற்றிய கால அட்டவணையைத் தரலாம்.*
  - C. *கோரேஸ் என்பவரின் ஆளுகை; இரண்டாம் மற்றும் மூன்றாம் ராஜ்யங்கள் பற்றிய அதிகமான தீர்க்கதரிசனங்கள் (10-12).*

***தானியேல் புத்தகத்தில் இருந்து பாடங்கள்***

*அனனியா, மீஷாவேல் மற்றும் அசரியா என்று நீங்கள் குறிப்பிட்டால், அனேகமாக நீங்கள் வெறுமையான பார்வையினால் வாழ்த்தப்படுவீர்கள், ஆனால் நம்மில் பெரும்பான்மையானவர்கள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற பெயர்களைப் புரிந்துணருகின்றோம். சில காரணங்களினால், நாம் தானியேலின் மூன்று நண்பர்களை அவர்களின் எபிரெயப் பெயர்களுக்கு மறாக, அவர்களின் பாபிலோனியப் பெயர்களைக் கொண்டு அழைக்கின்றோம். நாம் அவர்களை எப்படி அழைத்தாலும், இந்த மூன்று எபிரெய இளைஞர்களும் தானியேலுடன் இணைந்து, எதிர்ப்பின் முகத்தில் உண்மைத் தன்மையுடனும் பண்பின் பலத்துடனும் இருத்தல் பற்றி தலைமுறை தலைமுறையாக ஏவுதல் செய்யத் தொடருகின்றனர். இவர்களைப்போல், நாமும் ஒரு அந்நிய நாட்டில் அந்நியர்களாக இருக்கின்றோம் (எபிரெயர் 11:13; 1 பேதுரு 2:11, 12); இவர்களைப்போல், நாமும் தேவனுடைய உதவியுடன் வெற்றியாளர்களாக விளங்க முடியும்!*

*மனிதர்களின் ராஜ்யங்களில் தேவன் ஆளுகை செய்கின்றார் என்பது தானியேலின் புத்தகம் முழுவதும் ஊடாடுகின்ற ஒரு ஆய்வுக்கருத்தாக உள்ளது (4:17). இதில் உள்ள பெரும்பான்மையான தீர்க்கதரிசனங்கள் இந்தக் கருத்திற்குத் தொடர்புடையவைகளாய் இருக்கின்றன. தானியேலின் புத்தகம், பாபிலோனியப் பேரரசில் இருந்து ரோமப் பேரரசு, எருசலேமின் அழிவு ஆகியவை வரையிலான வரலாற்றை வரைகுறிப்பிடுகிறது (தானியேல் 9:27; 12:11; மத்தேயு 24:15முதல்.). உலகத்தில் விஷயங்கள் மோசமானவைகளாகக் காணப்படும்போது, தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பதையும் நிறைவில் அவர் தமது திட்டங்களைச் செயல்படுத்துவார் என்பதையும் உணர்ந்தறிதல் முக்கியமாயிருக்கிறது.*

*தானியேலின் பல தீர்க்கதரிசனங்கள், மேசியாவின் வருகை மற்றும் அவரது ராஜ்யம் ஆகியவற்றைப் பற்றி நேரடியாக எடுத்துரைக்கின்றன. தானியேல் 2:44 வசனம், ராஜ்யம் அல்லது சபை என்பது "நான்காவது ராஜ்யமான" ரோமப்பேரரசின் நாட்களின்போது நிலைநாட்டப்படும் என்று முன்னுரைக்கிறது. தானியேல் 7:13, 14 வசனப்பகுதிகள் இயேசு பரத்துக்கேறுதலையும் அதற்கு பத்துநாட்களுக்குப்பின் யூதர்களின் பெந்தெகொஸ்தே நாளில் ராஜ்யம் நிலைநாட்டப்படுதலையும் முன்னெதிர்நோக்குகிறது (மாற்கு 9:1; லூக்கா 24:46-53; நடபடிகள் 1:6-12; 2:1-4, 33, 36, 47).*

## ***சிங்கக் குகையில் தானியேல் (6:1-28)***

*தானியேல், நேபுகாத்நேச்சாரின் காலத்தில் இருந்து (4:37) பாபிலோனியப் பேரரசின் முடிவு வரையிலும் (5; மற்றும் 6:30ஐயும் கவனிக்கவும்) "அலமாரியில் கிடத்தப்பட்டு" இருந்தார். மேதியரான தரியு, கோரேஸ் என்ற பெர்சிய அரசரால் பாபிலோனியாமீது அரசராக அமர்த்தப்பட்டபோது (9:1), தானியேல் எண்பது அல்லது தொண்ணூறு வயதுடையவராய் இருந்திருக்கலாம், ஆனால் அவர் அப்போதும் வேலை செய்யக்கூடியவராக, முழுமையான விசுவாசம் கொண்டவராக, இன்னமும் கர்த்தரால் பயன்படுத்தப்படுவதற்கு ஆயத்தமானவராக இருந்தார்!*

I. *தானியேலின் விரோதிகள் அவரை அழிக்க முயற்சி செய்கின்றனர் (6:1-*

*17).*

A. *கண்ணி நாடப்பட்டது (வசனங்கள் 1-5).*
   1. *தானியேலின் வெற்றியானது அவரது உடன் பணியாளர்களிடம் பொறாமையை உண்டாக்குகிறது.*
   2. *அவர்கள், அவருக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடியதான சில விஷயங்களைக் கண்டறியும்படி, அவரது பொது மற்றும் தனிவாழ்வைப் பரிசோதிக்கின்றனர், ஆனால் அவர்களால் ஒன்றையும் கண்டறிய முடியவில்லை.*
      a. *"அவர்கள் குற்றச்சாட்டிற்கு அடிப்படையையோ அல்லது மோசடிக்கு ஆதாரத்தையோ கண்டறியக் கூடாதிருந்தது, அவர் அந்த அளவுக்கு உண்மை நிறைந்தவராயிருந்தார், மற்றும் புறக்கணித்தல் அல்லது மோசடி எதுவும் அவரிடத்தில் காணப்படாதிருந்தது"* (NASB).
      b. *யாரேனும் ஒருவர் நம்மீது குற்றம்சாட்டும் தகவலைக் கண்டறிய ஆழமாகத் தோண்டிக்கொண்டிருந்தால் எப்படியிருக்கும்? (நீதிமொழிகள் 20:6).*

B. *கண்ணி அமைக்கப்பட்டது (வசனங்கள் 6-9).*
   1. *தானியேலின் விரோதிகள் அரசரிடத்தில் சென்று ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிக்கூறுபவனின் கருவிகள் யாவற்றையும் பயன்படுத்துகின்றனர்: முகஸ்துதி, பொய்கள் மற்றும் வற்புறுத்தல்.*
   2. *அவர்களின் முன்மொழிதலைத் தரியு ஒப்புக்கொள்கின்றார், இது இரண்டு பலவீனங்களைச் சுட்டிக்காண்பிக்கிறது: மேட்டிமை மற்றும் அவசரத்தன்மை.*

C. *கண்ணி பிடிக்கத்தாவியது (வசனங்கள் 10-17).*
   1. *தானியேல் விளைவுகளை அறிந்துள்ளார், ஆனால் அவர் இன்னமும் சரியானதையே செய்கின்றார் (6:10), அதாவது, தேவனுடைய சித்தத்திற்கு நேரெதிரான சட்டம் ஒன்றிற்குக் கீழ்ப்படியாது இருக்கின்றார் (நடபடிகள் 5:29ஐக் காணவும்).*
      a. *அவர் தாம் செய்கின்றதை மறைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளவில்லை. அவர் எருசலேமை நோக்கிப் பலகணி திறந்திருக்க (1 இராஜாக்கள் 8:33, 35, 48; 2 நாளாகமம் 6:18-40; 7:11-16) தினமும் மூன்று முறை ஜெபிக்கின்றார் (சங்கீதம் 55:17). மாதிரி ஜெபம் ஒன்றை வாசியுங்கள் (9).*
      b. *இது தானியேலின் வாழ்வுமுறையாக இருக்கிறது.*
         (1) *அவர் பெருமையாய் காட்டிக்கொள்ளவில்லை.*
         (2) *அவர் ஜெபத்தை ஒரு அவசரகால அளவையாகப் பயன்படுத்தவில்லை.*
   2. *தானியேலின் விரோதிகள் கவனித்துக்கொண்டே இருந்தனர், அவர்கள் உடனே அரசரிடத்திற்கு விரைந்து சென்றனர் (மேதிய மற்றும் பெர்சியரினுடைய சட்டத்தின் மாற்றப்பட*

*இயலாத இயல்பை கவனியுங்கள்; எஸ்தர் 1:19; 8:8 ஆகிய வசனங்களைக் காணவும்.) தரியு இந்தச் சட்டத்தை மாற்றிப்போட விரும்புகின்றார், ஆனால் தானியேலின் விரோதிகள் இதை அனுமதிக்க மாட்டார்கள். தானியேல் சிங்கங்களின் குகையில் போடப்படுகின்றார்.*

3. *தானியேல் சரியானதைச் செய்தமைக்காகத் துன்புறும் முதல் நபரோ அல்லது கடைசி நபரோ அல்ல (1 பேதுரு 2:20ஐக் காணவும்).*

II. *தேவன் தானியேலைக் காப்பாற்றுகின்றார் (6:18-28).*

A. *தானியேல் காப்பாற்றப்படுகின்றார், மற்றும் தேவன் மகிமைப் படுத்தப்படுகின்றார்.*

1. *அரசர் மகிழ்ச்சியற்ற ஒரு இரவைச் செலவிடுகின்றார், ஆனால் அடுத்த நாள் காலையில் தானியேல் நன்றாயிருக்கின்றார்.*

a. *அவர் "எந்த விதமான காயமும் அடையவில்லை"; "அவர் மீது ஒரு சிறு கீறல்கூட இருக்கவில்லை." (தூதர்களின் ஊழியத்தைக் கவனிக்கவும்; எபிரெயர் 1:14.)*

b. *ஏன்? "ஏனென்றால் அவர் தமது தேவன்மீது நம்பிக்கை வைத்திருந்தார்" (வசனம் 23).*

2. *கண்ணியினால் தானியேலைப் பிடிக்க இயலாதிருந்தது; அதற்குப்பதிலாக, அது அவரது விரோதிகளையும் அவர்களின் குடும்பங்களையும் பிடித்தது! (இது கிழக்கு நாடுகளின் நீதி பற்றிய ஒரு விவரிப்பாக உள்ளது; சிங்கங்கள் பழக்கப்படுத்தப் படாதவைகளாகவும் பசியுடனும் இருந்தன என்பதைக் காண்பிப்பது இவ்வரலாற்றின் நோக்கமாகும்.)*

3. *யெகோவாபற்றி தரியுவினால் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது (வசனங்கள் 25-27); தானியேல் தொடர்ந்து ஊழியம் செய் கின்றார் (வசனம் 28).*

B. *தேவனை நாம் உண்மையிலேயே நம்பினால், அவர் நமக்கு சரீரப் பிரகாரமான துன்பம் நேர அனுமதிக்கமாட்டார் என்பது இவ்வரலாற்றின் கருத்தாக உள்ளதா?*

1. *இல்லை. சிங்கங்களுக்கு இரையாகும்படி எரிந்துவிடப்பட்ட தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் பற்றிய விஷயம் என்ன? முதல் கிறிஸ்தவ வேதசாட்சியாக மரித்த ஸ்தேவான் பற்றிய விஷயம் என்ன?*

2. *இருப்பினும், இவ்வரலாறு, தேவன் நம்மை - நமக்கு மிகச் சிறப்பான வழிமுறையிலும் அவரது நோக்கங்களுக்கு மேன் மையாகச் செயல்படும் வழிமுறைகளிலும் - பாதுகாப்பார் என்று நமக்குக் கூறுகிறது. நமது விசுவாசத்திற்காக நாம் கொலை செய்யப்பட்டாலும், நமது புதிய உடல்களுடன் கல்லறையில் இருந்து நாம் எழும்புகையில், "ஒரு சேதமும் காணப்படவில்லை" என்று நம்மைப்பற்றிக் கூறப்படக் கூடும்!*

*முடிவுரை*

*ஒரு தானியேலாக இருக்கத் துணியுங்கள்! சரியானதற்காகத் தனியாக(வும்) நிற்கத் துணியுங்கள்!*

# 23

# சிறிய தீர்க்கதரிசிகள்: பெரிய செய்தியைக் கொண்ட சிறிய புத்தகங்கள்

***வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:*** *ஓசியா 1-3; யோவேல் 1, 2; ஆமோஸ் 3, 4; ஒபதியா 1; யோனா 1, 3; மீகா 4, 5; நாகூம் 1, 3; ஆபகூக் 1, 2; செப்பனியா 1, 3; ஆகாய் 1, 2; சகரியா 7, 8; மல்கியா 1, 4.*

***சிறிய தீர்க்கதரிசிகள்***

*பழைய ஏற்பாட்டில் உள்ள கடைசி பன்னிரெண்டு புத்தகங்கள் "சிறிய தீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப்படுகின்றன. எபிரெய வேதாகமத்தில் இவைகள் ஒரே புத்தகமாக இணைக்கப்பட்டிருந்தன. இவைகள் முக்கிய மானவையல்ல என்பதால் இவைகள் "சிறிய" என்று அழைக்கப்படுவதில்லை; மாறாக, இவைகள் "பெரிய தீர்க்கதரிசிகள்" புத்தகங்களைக் காட்டிலும் சிறியவைகளாய் இருக்கின்றன என்பதால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன. இப்புத்தகங்களில் சில ஆட்சியாளர்களைக் குறிப்பிடுகின்றன; இது அந்த மனிதர்கள் ஆண்டகாலங்களின்போது இருந்த ஆவிக்குரிய சூழ்நிலையை நீங்கள்புரிந்துகொள்ள உதவும். சில புத்தகங்கள் தேதியிடப்படாதிருப்பதால், அவைகள் எப்போது எழுதப் பட்டன என்று நாம் மிகச்சரியாகக் கூற இயலாது. இருப்பினும், தேதியிடப் பட்ட எல்லாப் புத்தகங்களும் நாள்வரிசைமுறையின்படி அடுக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனியுங்கள். தேதியிடப்படாத ஒரு புத்தக மானது, அதற்கு முன்னதாகத் தேதியிடப்பட்டுள்ள புத்தகமும் அதற்குப் பின்னதாகத் தேதியிடப்பட்டுள்ள புத்தகமும் எழுதப்பட்ட காலங்களுக்கு இடைப்பட்ட வேளையில் எழுதப்பட்டிருக்கும் என்று நினைப்பது தீமை எதையும் செய்வதில்லை.*

***ஓசியா***

*"ஓசியா" என்றால் "இரட்சிப்பு" அல்லது "விடுதலை" என்று அர்த்தமாகிறது. ஓசியா இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் ஊழியம் செய்தார் (7:5), இவரது ஊழியக்காலம் யெரொபெயாம் அரசரின் ஆளுகையின் நாட்களில் இருந்து தொடங்கிற்று. அவர் தெற்கு ராஜ்யமான யூதாவில் ஊழியம் செய்த ஏசாயாவின் காலத்தில் வாழ்ந்திருந்தார் (1:7). 1-3 அதி காரங்கள் இப்புத்தகத்தின் திறவுகோலாய் இருக்கின்றன. இவைகள் ஓசியாவின் மனைவியான கோமேர் என்பவளிடத்தில் இருந்த உண்மையற்றத்தன்மை பற்றியும் அவள் தொடர்ந்து ஓசியாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றியும் கூறுகின்றன. கோமேர் என்பவள் இஸ்ரவேல் நாட்டின் மாதிரியாய் இருக்கின்றாள்; ஓசியா தேவனுக்கு மாதிரியாய் இருக்கின்றார். தேவனுடைய மக்கள் புறம்பே சென்றபோதிலும், தேவன் அவர்கள்மீது அன்புகூருகின்றார் மற்றும் அவர்கள் திரும்பவேண்டும் என்று ஏங்குகின்றார் என்பதே செய்தி யாக உள்ளது. ஓசியா 11:1 வசனம் மத்தேயு 2:15ல் மேற்கோள் காண் பிக்கப்பட்டுள்ளது.*

**யோவேல்**

*"யோவேல்" என்றால் "யெகோவா தேவன்" என்று அர்த்தமாகிறது. யோவேல் தெற்கு ராஜ்யத்தில் ஊழியம் செய்தார். அவர் வெட்டுக்கிளி களின் வாதையைச் சித்தரித்தார் (அனேகமாக, இது நேரடியாகவே வந்தது; ஆமோஸ் 4:9ஐக் காணவும்). வெட்டுக்கிளிகள் என்பவை தேவனுடைய நியாயத்தீர்ப்பின் அடையாளத்துவமாய் இருக்கின்றன. வெட்டுக்கிளிகளின் உருவகம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பிரதிபலிக்கப்படுகிறது (9:1-11). யோவேல் 2:28-32 வசனங்கள் பேதுருவினால் நடபடிகள் 2:16-21ல் மேற் கோள் காண்பிக்கப்படுகிறது.*

**ஆமோஸ்**

*"ஆமோஸ்" என்றால் "சுமை சுமப்பவர்" என்று அர்த்தமாகிறது. வாழ்வின் ஊழியம் என்ற வகையில் அவர் ஒரு தீர்க்கதரிசியுமல்ல, ஒரு தீர்க்கதரிசியின் மகனுமல்ல, ஆனால் அவர் ஒரு விவசாயியாக இருந்தார் (1:1; 7:14). யூதாவின் அரசரான உசியா மற்றும் யெரொபெயாம் ஆகியோரின் நாட்களில் தேவன், ஆமோஸை தெற்கு ராஜ்யத்தில் இருந்த அவரது இல்லத்தில் இருந்து அழைத்து (1:1), தீர்க்கதரிசனம் உரைப்பதற்காக வடக்கு ராஜ்யத்திற்குச் செல்லும்படி கூறினார் (7:15). அவர் வடக்கு ராஜ்யத்திற்குச் சென்று (7:10, 13), இஸ்ரவேல் மக்களுக்கு எதிரான நியாயத் தீர்ப்புபற்றிய தேவனுடைய செய்தியைப் பேசி, பின்பு தமது இல்லம் திரும்பினார்.*

**ஒபதியா**

*"ஒபதியா" என்றால் "யெகோவாவின் ஊழியக்காரன்" என்று அர்த்தப் படுகிறது. இது பழைய ஏற்பாட்டிலேயே மிகச்சிறு புத்தகமாக உள்ளது. ஒபதியாவின் செய்தியானது அடிப்படையில், ஏசாவினுடைய சந்ததியரான ஏதோமியர்களுக்கு எதிரானதாகும் (ஆதியாகமம் 25:30; 36:1). அவர்களின் வரலாறு முழுவதிலும் இஸ்ரவேல் மக்களும் ஏதாமியர்களும் ஒருவர் மற்ற வர்மீது வெறுப்புணர்வு கொண்டிருந்தனர். எருசலேம் அழிக்கப்பட்ட போது ஏதோமியர்களின் நடவடிக்கை கடைசி அடியாக இருந்தது (வசனங்கள் 10-14).*

**யோனா**

*"யோனா" என்றால் "புறா" என்று அர்த்தப்படுகிறது. யோனா வடக்கு ராஜ்யத்தில் யெரொபெயாமின் நாட்களில் வாழ்ந்து ஊழியம் செய்தார் (2 இராஜாக்கள் 14:25). அவர் அந்தப்பகுதியில் எலியா மற்றும் எலிசா ஆகியோரின் ஊழியத்தைப் பின்தொடர்ந்தார். அவரிடம் தேவன், அசீரியாவின் தலைநகரான நினிவே என்ற பட்டணத்துக்குப் பிரசங்கிக்கும்படி கூறினார், அந்த நகரம் சில ஆண்டுகளுக்குப்பின்பு வடக்கு ராஜ்யத்தை அழித்தது. பெரிய மீனின் வயிற்றுக்குள் யோனாவின் அனுபவம் என்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன்மாதிரியாக உள்ளது (மத்தேயு 12:39, 40).*

**மீகா**

*"மீகா" என்றால் "யெகோவாவைப் போன்றவர் யார்?" என்று அர்த்தப் படுகிறது. மீகா தெற்கு ராஜ்யத்தில் யோத்தாம், ஆகாஸ் மற்றும் எசேக்கியா*

ஆகியோரின் ஆளுகைகளின்போது வாழ்ந்தார் (1:1). அவர் ஏசாயாவின் நாட்களில் வாழ்ந்தவராய் இருந்தார். அவர் தமது செய்தியை வடக்கு ராஜ்ய மான இஸ்ரவேலுக்கும் தெற்கு ராஜ்யமான யூதாவுக்கும் உரைத்த ஒரே ஒரு சிறிய தீர்க்கதரிசியாக இருக்கின்றார் (1:5). அவர் சிறையிருப்பிலிருந்து திரும்பிவருதலையும் (2:12, 13), இயேசுவின் பிறப்பையும் (5:2), மற்றும் சபை நிலைநாட்டப்படுதலையும் (4:1-4) முன்னோக்கினார்.

**நாகூம்**

"நாகூம்" என்றால் "தேற்றுதல்" அல்லது "ஆறுதல்கூறுபவர்" என்று அர்த்தப்படுகிறது. நாகூம் என்பவரின் செய்தியானது யூதர்களுக்குத் தேறுதல் அளிக்கும் ஒரு செய்தியாய் இருந்தது, அதாவது, அவர்களின் மிகமோசமான விரோதியான அசீரியா அழிக்கப்படவிருந்தது என்பதே அச்செய்தியாகும். அவர் அசீரியாவின் தலைநகரான நினிவேயில் யோனாவின் பிரசங்கம் மனம் வருந்துதலை ஏற்படுத்தியதற்குப்பின்பு நூறுஆண்டுகளுக்கும் சற்று அதிகமான காலம் கடந்தபிற்பாடு ஊழியம்செய்தார். நாகூமுடைய நாட்களில், தேவனு டைய பொறுமை எல்லைகடந்துவிட்டது.

**ஆபகூக்**

"ஆபகூக்" என்றால் "பற்றிக்கொண்டு அல்லது அணைத்துக்கொண்டிருக்கும் ஒருவர்" என்று அர்த்தப்படலாம். ஆபகூக்கின் தலைப்பான, கல்தேயர்களின் (பாபிலோனியப் பேரரசின்) அழிவு என்பது தனிவகைப்பட்டதல்ல, ஆனால் அவரது அணுகுமுறை தனிவகைப்பட்டதாகும். முதல் இரண்டு அதிகாரங்கள் ஆபகூக்கு மற்றும் தேவன் ஆகியோருக்கிடையில், துன்மார்க்கம் மற்றும் துன்புறுதல் பற்றியதான உரையாடலாக இருக்கின்றன. கடைசி அதிகாரம் இவ்விஷயத்தைத் தீர்த்துவைக்கும் ஒரு ஜெபப்பாடலாக உள்ளது. தேவன் ஒரு திட்டமும் நோக்கமும் கொண்டுள்ளார், எனவே நாம் அவரில் நம்பிக்கை வைத்து அவரை விசுவாசிக்க வேண்டும் என்பது இப்புத்தகத்தின் செய்தியாகும். ஆபகூக் 2:4 வசனம் ரோமர் 1:17, கலாத்தியர் 3:11, மற்றும் எபிரெயர் 10:38 ஆகிய வசனங்களில் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது.

**செப்பனியா**

"செப்பனியா" என்றால் "யொகோவா காத்துள்ளார் அல்லது மறைத் துள்ளார்" என்று அர்த்தப்படுகிறது. செப்பனியா, யோசியா அரசரின் ஆளுகையின்போது ஊழியம் செய்தார் (1:1). அவர் எரெமியாவின் காலத்தில் வாழ்ந்தவராவார். அவர் யூதாவின் வீழ்ச்சியைப்பற்றி விவரிப்பதோடு; சுற்றிலும் இருந்த நாடுகளின் வீழ்ச்சியைப் பற்றியும் விவரித்தார். அவர் பழைய ஏற்பாட்டின் பல தீர்க்கதரிசனங்களை ஒரு பொதியில் உருவப்படுத்தினார்.

**ஆகாய்**

"ஆகாய்" என்பது "யெகோவாவின் பண்டிகை" என்று அர்த்தப்படும் எபிரெயசொல் ஒன்றின் சுருக்கவடிவமாக உள்ளது. ஆகாய் சிறையிருப்பி லிருந்து திரும்பியிருந்த இஸ்ரவேல் மக்கள், செருபாபேல் மற்றும் யோசுவா ஆகியோருக்குப் பின்பு கட்டாது விட்டொழிந்திருந்த தேவாலயத்தை மீண்டும்

*கட்டியெழுப்பும்படி உற்சாகமூட்டினார்.*

***சகரியா***

*"சகரியா" என்றால் "யெகோவா நினைவுகூர்ந்தார்" என்று அர்த்தப்படுகிறது. சகரியா தேவாலயத்தைத் திரும்பக் கட்டியெழுப்பும்படி உற்சாகப்படுத்துதலில் ஆகாயுடன் இணைந்து ஊழியம்செய்தார். ஆகாய் இஸ்ரவேல் மக்களைக் கட்டியெழுப்பும்படி வற்புறுத்தியபோது, நிகழ்காலம் மற்றும் உடனடியான எதிர் காலம் ஆகியவற்றைப் பிரதானமாகக் கையாண்டார்; சகரியா வெளிச்சமிகுந்த எதிர்காலம் பற்றிய வாக்குத்தத்தத்தை முன்வைத்து உற்சாகமூட்டினார். அவரது புத்தகத்தில், வெற்றிப்பிரவேசம் (9:9, 10) மற்றும் காட்டிக்கொடுக்கப்படுதல் (11:12, 13) போன்ற மேசியாத்துவத் தீர்க்கதரிசனங்கள் பல உள்ளன. இப்புத்தகம் சங்கீதங்களைத்தவிர பழைய ஏற்பாட்டின் வேறு எந்தப்புத்தகத்தைக் காட்டிலும், சிலுவையில் அறையப்படுதல் பற்றி அதிகம் திட்டவட்டமான குறிப்புகளைக் கொண்டுள்ளது (12:10-12; 13:6, 7 ஆகியவற்றைக் கவனிக்கவும்).*

***மல்கியா***

*"மல்கியா" என்பது "யெகோவாவின் செய்தியாளர்" என்று அர்த்தப்படும் எபிரெய வார்த்தையினுடைய சுருக்கவடிவமாய் இருக்கிறது. மல்கியா அனேக மாக நெகேமியாவுடன் இணைந்து ஊழியம் செய்தவராய் இருந்திருக்கலாம்; அவர்கள் ஒரே விதமான பிரச்சனைகளைக் கையாண்டனர்: ஆராதனையில் இருந்த மாறுபாடுகள், திருமண உறவில் இருந்த மாறுபாடுகள், முதலியன. வரவிருந்த எலியா (4:5, 6), அல்லது யோவான் ஸ்நானன் (மத்தேயு 11:7-14ஐக் காணவும்) பற்றிய மல்கியாவின் தீர்க்கசரிசனம், பழைய ஏற்பாட்டின் இந்தக் கடைசிப்புத்தகத்தைப் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்துடன் பிணைக்கிறது.*

***பெரிய செய்தி***

*தேவன் தேவனாக இருக்கின்றார்! நாம் அவரைப் பற்றி மும்முரமாய் நினைக்க வேண்டும். "தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்" (கலாத்தியர் 6:7).*

---

## தேவனுடைய பிள்ளைகள் சலிப்படையும்போது (மல்கியா)

*பாழாக்கப்பட்ட பிள்ளை தனது பொம்மைகளைக் கீழே எறிந்து, "நான் சலிப்படைந்திருக்கின்றேன்!" என்று பிணக்குடன் கூறுகிறது. வெற்றி நிறைந்த மனிதர் தமது உடைமையின் மத்தியில் கைகால்களைப் பரப்பிக்கிடந்து, "நான் சலிப்படைந்திருக்கின்றேன்!" என்று முறையிடுகின்றார். தேவனுக்கு நன்றியில் லாத அவருடைய பிள்ளை தனது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் காண்பதை விட்டுவிட்டு, "நான் சலிப்படைந்திருக்கின்றேன், சலிப்படைந்திருக்கின்றேன், சலிப்படைந்திருக்கின்றேன்!" என்று கதறுகின்றது.*

*யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பியபோது, அவர்கள் மிகவும் பணிமும்முரமாய் இருந்தனர், அவர்கள் சலிப்படையும் அளவிற்கு வெற்றிகொள்ளவேண்டிய தடைகள் ஏராளமாய் இருந்தன. படிப்படியாக அந்தத்தடைகள் நீக்கப்பட்டன: தேவாலயம் மீண்டும் கட்டப்பட்டது; தேவாலய*

*ஆராதனை திரும்பவும் தொடங்கப்பட்டது; எருசலேமின் மதில்கள் மீண்டும் கட்டப்பட்டன; இஸ்ரவேல் மீண்டும் ஒரு நாடாக நிலைநாட்டப்பட்டது. பின்பு, வாழ்க்கை சாதாரண நிலைக்கு திரும்புகையில், இஸ்ரவேல் மக்கள் தங்களுக்கு யெகோவா செய்திருந்த எல்லாவற்றிற்காகவும் களிகூர்ந்திருக்கக்கூடிய (மற்றும் வேண்டிய) போது, அவர்கள் அலுப்படைந்தனர்.*

I. *ஆராதனையில் சலிப்படைதல் (1:6-14).*

   A. *வாரத்திற்குப் பின் வாரம் ஒரே விஷயமே செய்யப்பட்டது: மிகச் சிறந்த ஆட்டுக்குட்டியை, மிகச்சிறந்த கன்றுக்குட்டியை, அல்லது மிகச்சிறந்த வெள்ளாட்டைத் தேர்ந்துகொண்டு (லேவியராகமம் 22:20-24; உபாகமம் 15:21) அதைப் பலிசெலுத்துவதற்காக ஆசாரியரிடம் கொண்டுவருதல். "எவ்வளவு அயர்ச்சியாக இருக்கிறது! என்ன ஒரு சுமை!" (வசனம் 13;* NASB; NIV*). இதன் விளைவாக, அவர்களின் ஆராதனை ஒரு அரை மனதுடன் செய்யப்படும் சடங்காச்சாரமாகச் சீர்குலைந்துபோனது (வசனங்கள் 7, 8).*

   B. *தீர்க்கதரிசியின் பதில்:*

      1. *"ஆராதனை ஏற்பாட்டில் பிரச்சனை எதுவும் இருப்ப தில்லை. உங்களிடம்தான் பிரச்சனை இருக்கிறது. நீங்கள் தேவனை எவ்விதமாகக் கண்ணோக்குகின்றீர்கள் என்பதே பிரச்சனையாக இருக்கிறது!" (வசனம் 6).*
      2. *நம்மிடம் உள்ள மிகச்சிறந்தவற்றை நாம் தேவனுக்குக் கொடுக்க முடியாதென்றால், சபையின் கதவுகளை மூடிப் போடுவது மேன்மையானதாய் இருக்கும் (வசனம் 10)!*
      3. *நாம் கொடுக்க முடியாதவற்றைத் தேவன் ஒருபோதும் எதிர் பார்ப்பதில்லை, ஆனால் நம்மிடம் உள்ளவற்றில் மிகச் சிறந்தவற்றை அவர் எதிர்பார்க்கின்றார். அதைவிடக் குறை வானதை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார் (வசனம் 14; இவற்றுடன் 2:13; 3:3, 4).*

   C. *நமக்குப் பாடம்: ஆராதனையில் நாம் சலிப்படைந்தால், முதலில் நாம்* நம்மையே *நோக்குவோமாக. நம்மில் ஒவ்வொருவரும், "தேவனுடன் எனது உறவுமுறை எவ்வாறுள்ளது? நான் ஆராதிக்க வந்தது எதற்காக? எனது பணி அட்டவணையில் நான் தேவனை பொருத்துகின்றேனா? நான் எப்போதுமே தேவனுக்கு என்னிடம் உள்ளவற்றில் மிகச்*சிறந்தவற்றைக் *கொடுக்கின்றேனா?" (யோவான் 4:23, 24ஐக் கவனிக்கவும்.)*

II. *திருமணத்தில் சலிப்படைதல் (2:10-16).*

   A. *இது சிந்தனையில் ஒரு திடீர்த்தடையாக உள்ளதா? இல்லை. அவர்கள் ஆராதனையில் தவறியதென்பது, அவர்கள் தேவன் யார் என்று புரிந்துகொள்ளத் தவறியதாகவே இருந்தது. தேவன் உடன்படிக்கையின் தேவனாக இருக்கின்றார் (வசனங்கள் 4, 5, 8, 10; 3:1), அவர் வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தி அவற்றைக் காத்துக்கொள்கின்ற தேவனாக இருக்கின்றார்! அவர் தமது மக்கள் உடன்படிக்கையின் மக்களாகவும் தங்களின் வார்த்தையைக்*

*காத்துக்கொள்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். இந்த மக்கள் தங்கள் வாக்குறுதிகளை காத்துக்கொள்ளவில்லை. ஆதாரம்: அவர்கள் திருமண உடன்படிக்கையைக் காத்துக்கொள்ளவில்லை.*

1. *இரு விஷயங்கள் குறிப்பிடப்படுகின்றன: புறதெய்வ வணக்கம் செய்யும் பெண்களுடன் திருமணம் (வசனம் 11; எஸ்றா 9:1முதல். காணவும்.) மற்றும் அவர்கள் இளம்பிராயத்தில் இருந்தபோது திருமணம் செய்துகொண்ட அவர்களின் மனைவியரைத் தள்ளிவிடுதல் (வசனங்கள் 14-16).*
2. *இந்தப் பிரச்சனைகள் அனேகமாக ஒன்றாயிணைந்து சென்றிருக்கலாம்: ஆண்கள் தங்களுடைய யூத மனைவியரிடத்தில் அலுப்படைந்து, புறதெய்வ வணக்கப் பெண்களிடம் திரும்பினர்.*

B. *அவர்களின் சிந்தனைவரியை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும்: "நான் இந்தத் திருமணத்தில் சலிப்படைந்துள்ளேன். எல்லாக் கேளிக்கைகளும் இதைவிட்டு வெளியேறியிருக்கிறது. நான் சந்தோஷமாய் இருப்பதில்லை. தேவன் நிச்சயமாகவே நான் சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்!" தீர்க்கதரிசியின் மறுசெயல்:*

1. *"தேவனே உங்களையும் உங்கள் மனைவியையும் படைத்தார்; நீங்கள் அவளை மதிக்க வேண்டும் [வசனம் 10]! அதற்குப் பதிலாக, நீங்கள் அவளுக்குத் துரோகம் செய்கின்றீர்கள்" (வசனம் 14).*
2. *"நீங்கள் ஒருவர் ஏற்படுத்தக்கூடிய இரண்டாவது மிகமுக்கியமான உடன்படிக்கையை மீறுகின்றீர்கள் - இது தேவனுடன் ஏற்படுத்தக்கூடிய உடன்படிக்கைக்கு மாத்திரமே இரண்டாவதாக உள்ளது" (வசனம் 14).*
3. *திருமணத்தின் நோக்கம் என்பது உங்களுக்கு அரிப்பெடுக்கும் இடத்தில் சொறிந்து கொள்வதல்ல, ஆனால் தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறுதல் (வசனம் 15), அதாவது, தேவன்மீது அன்புகூர்ந்து அவருக்குக் கீழ்ப்படிகின்ற பிள்ளைகளைப் பெறுதல் என்பதே அதன் நோக்கமாக உள்ளது.*
4. *தள்ளிவிடுதலைத் (விவாகரத்து) தேவன் வெறுக்கின்றார் (வசனம் 16)!*

C. *இந்த செய்தி இன்றைய நாட்களில் அவசியமாயிருக்கிறது (மத்தேயு 19:3-9)!*

III. *கொடுத்தலில் சலிப்படைதல் (3:7-12).*

A. *இது எதிர் உச்சக்காட்சியாகக் காணப்படலாம், ஆனால் நமது கொடுத்தலைக் கண்ணோக்குதல் என்பது தேவனுடனும் பிறருடனும் நமக்குள்ள உறவு சீர்குலைந்து போகிறதா என்பதை கூறுவதற்கான ஒரு வழிமுறையாக உள்ளது. தேவன் தமது பிள்ளைகளை மனந்திரும்பும்படி அறைகூவல் விடுக்கின்றபோது, அவர்கள் உண்மையில், "மனந்திரும்ப எங்களிடத்தில் ஒன்று*

*மில்லை" என்று கூறினர். அதற்குத் தேவன், "நீங்கள் மனந்திரும்ப வேண்டியவை என்ன என்பது பற்றி விரிவான உதாரணம் தருவேன்: நீங்கள் என்னிடத்தில் களவுசெய்கின்றீர்கள்!" என்று பதில் அளித்தார் (3:7, 8).*

1. *தசமபாகம், அல்லது 10 சதவிகிதம் (லேவியராகமம் 27:30-33; எண்ணாகமம் 18:21-32; உபாகமம் 12:17, 18; 14:28, 29).*
2. *தசமபாகத்துடன் கூடுதலாக, வருடாந்திரப் பங்களிப்புகள் உள்ளிட்ட காணிக்கைகள் (உபாகமம் 12:6, 11, 17).*

B. *மீண்டுமாக நாம் மக்களின் நியாயப்படுத்தலைக் கற்பனை செய்ய முடிகிறது: "பணம், பணம், பணம்! இதைக்கேட்டுக் கேட்டு எனக்கு சலித்துவிட்டது! பொருளாதாரம் மோசமாக இருப்பதை அவர்கள் உணர்ந்தறியமாட்டார்களா (வசனங்கள் 11, 14)? தொடர்ந்து நான் கொடுத்துக் கொண்டேயிருந்தால், எனது வீட்டையும், எனது இரதங்களையும், எனது அடிமைகளையும், சேக்கல்களின் நாணய மதிப்பு நிலையில் உள்ள எனது மதிப்புமிக்க பொருட்களையும் நான் எப்படிப் பராமரிக்க முடியும்?" தீர்க்கதரிசியின்பதில்:*

1. *கொடுக்கத்தவறுதல் என்பது ஒருவர் தமது ஆசீர்வாதங்களின் மூலாதாரத்தை உணர்ந்தறியத் தவறுதலாகவும் தேவனே எல்லாவற்றிற்கும் உரிமையாளராய் இருக்கின்றார் என்பதைப் புரிந்துகொள்ளத் தவறுதலாகவும் உள்ளது (வசனம் 8).*
2. *ஒருவர் தாம் வேண்டியபிரகாரம் கொடுக்கத் தவறுதல் என்பது, ஒரு வங்கிக்குச் சென்று கொள்ளையடிப்பதைப் பார்க்கிலும் மோசமானதாக உள்ளது; அது தேவனிடமே களவுசெய்வதாக உள்ளது (வசனம் 8).*
3. *ஏற்ற வகையில் கர்த்தருக்குப் போதுமான அளவு கொடுக்க நாம் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்காது இருப்பது, நமது பொருளாதாரப் பிரச்சனைகளுக்குக் காரணமாய் இருக்கலாம் (வசனங்கள் 9-12; 2 நாளாகமம் 31:10ஐக் கவனிக்கவும்).*

C. *புதிய ஏற்பாட்டில் தேவன் தசமபாகத்தைக் கட்டாயப்படுத்துவதில்லை, ஆனால் நாம் உதாரத்துவமாய்க் கொடுக்கவேண்டும் என்று அவர் கட்டளையிட்டுள்ளார் (2 கொரிந்தியர் 9:6, 7; 1 கொரிந்தியர் 16:2). நாம் அவ்வாறு செய்தால், அவர் நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார் (லூக்கா 6:38; 2 கொரிந்தியர் 9:10).*

*முடிவுரை*

*நாங்கள் "எனக்கு சலிப்பாய் இருக்கிறது" என்று கூறும்போது, எங்கள் பாட்டியார் கூறும் பதிலை நான் நினைத்துப்பார்க்கின்றேன். அவர்கள் எங்களிடத்தில், "நீங்கள் ஈடுபட்டுள்ள விஷயத்தில் இருந்து வெளியே வாருங்கள்" என்று கூறுவார். தேவனை ஆராதித்தல் வீணானது என்று கூறியவர்களிடத்தில் மல்கியா, சாரம்சத்தில் இதே விஷயத்தையே கூறினார்: "அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக்கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே*

*அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன். அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்" (3:16-18).*

# 1

# மத்தேயு: கிறிஸ்து, ராஜா

*தலைப்பு*

*"தேவனுடைய ஈவு" என்று அர்த்தப்படுகிற மத்தேயு என்னும் பெயரை உடைய இவர், தமது பெயரைத் தாங்கியுள்ள புத்தகத்தை எழுதினார் என்று தொடக்ககால சபை எழுத்தாளர்களால் மதிப்பு அளிக்கப்பட்டார். இயேசுவைச் சந்திக்கும்முன்பு ஒரு ஆயக்காரராக இருந்த மத்தேயு, பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரானார் (மத்தேயு 9:9முதல்.; 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:15; நடபடிகள் 1:13). இவர் லேவி என்றும் அறியப்பட்டார் (மாற்கு 2:14; லூக்கா 5:27முதல்.).*

***பின்னணி***

*தானியேல் 2ன் உருவகம், தேவன் தமது ராஜ்யத்தை அமைக்கும் காலம் வரைக்கும் உலகத்தின் வரலாற்றைத் தொகுத்துரைத்தது: பொன்னால் ஆன தலை பாபிலோன் பேரரசைக் குறித்தது; வெள்ளியால் ஆன மார்பும் புயமும் மேதிய -பெர்சிய பேரரசைக் குறித்தது; வெண்கலத்தால் ஆன வயிறும் தொடைகளும் கிரேக்கப் பேரரசைக் குறித்தது; இரும்பால் ஆன கால்கள் (இரும்பும் களி மண்ணும் கலந்திருந்த கலவையால் ஆன பாதங்களுடன்) ரோமப்பேரரசைக் குறித்தது. பழைய ஏற்பாடு முடிவடைந்தபோது, பாபிலோனியர்கள் மேதிய-பெர்சியர்களால் தோற்கடிக்கப்பட்டிருந்தனர், மற்றும் யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பியிருந்தனர். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையிலான நானூறு ஆண்டுகளில், மேசிய-பெர்சியப் பேரரசைத் தொடர்ந்து கிரேக்கப் பேரரசு எழும்பிற்று, அதில் மகா அலெக்சாண்டர் என்பவர் உலகம் முழுவதையும் கைப்பற்றினார். அலெக்சாண்டர் இறந்தபோது, அவர் ஆண்ட ராஜ்யம் கிரேக்கு, ஆசியா, எகிப்து, மற்றும் சீரியா என்று நான்கு பகுதி களாகப் பிரிக்கப்பட்டது. யூதர்களின் நாடானது முதலில் எகிப்தியர்களாலும், பின்பு சீரியர்களாலும் கட்டுப்படுத்தப்பட்டது. சீரியாவின் ஆட்சியாளர்களில் ஒருவரான அந்தியோகஸ் எபிபெனெஸ் என்பவரின் வரம்புமீறிய கொடுங்கோன்மை, மக்கபேயரின் கலகத்திற்கும் யூதர்கள் சற்று விடுதலையாய் இருந்த காலத்திற்கும் வழிநடத்தியது. விடுதலையின் இந்தக் காலகட்டமானது, நாடு ரோமர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தபோது முடிவடைந்தது. வரலாற்றில் அந்தக் காலகட்டத்தில், "காலம் நிறைவேறினபோது, தேவன் தமது குமாரனை அனுப்பினார்" (கலாத்தியர் 4:4).*

*புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் இயேசுவின் வாழ்வைச் சித்தரிக்கின்றன. இந்த நான்கு புத்தகங்கள் பெரும்பாலும், "சுவிசேஷங்கள்" என்று அழைக்கப்படுகின்றன, ஆனால் இவற்றை "சுவிசேஷ விவரங்கள்" என்று நினைப்பதே விரும்பத்தக்கதாக உள்ளது, ஏனெனில் சுவிசேஷம் (நற்செய்தி) என்பது ஒன்றே ஒன்றுதான் உள்ளது. இந்தப்புத்தகங்கள் அடிக்கடி, "வாழ்க்கை வரலாறு" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் இவைகள் வாழ்க்கை*

*வரலாற்றிற்கான பொதுவான வடிவமைப்புக்களைப் பின்பற்றுவதில்லை. இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான நாள் வரிசை அமைவின்படியான விவரங்களைக் கொடுத்தல் என்பது இந்த நான்கு எழுத்தாளர்களின் நோக்க மாயிருப்பதில்லை. மாறாக, அவர்கள் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, இயேசு யார் என்பதையும் அவர் பூமிக்கு வந்தது ஏன் என்பதையும் காண்பிப்பதற்காக அவரது வாழ்விலிருந்து நிகழ்ச்சிகளைத் தேர்ந்து கொண்டனர். முதல் மூன்று சுவிசேஷப் புத்தகங்கள் "ஒப்பீட்டு சுவிசேஷப் புத்தகங்கள்" என்று அழைக்கப்படுகின்றன, ஏனென்றால் அவைகள் ஒன்றுபோல் உள்ளன மற்றும் அனேகமாக ஒரே கால கட்டத்தில் எழுதப்பட்டன. யோவானின் சுவிசேஷ விவரம் மாறுபட்ட நோக்கத்திற்காக எழுதப்பட்டது, அனேகமாக இது முதல் மூன்று நூல்கள் எழுதப்பட்டப் பல ஆண்டுகளுக்குப் பின்பு எழுதப்பட்டது.*

*சுவிசேஷ விவரம் ஒவ்வொன்றும் மனதில் வெவ்வேறு மக்கள் கூட்டத்தைக் கொண்டு எழுதப்பட்டது; இவை ஒவ்வொன்றும் தத்தனது விசேஷித்த வலியுறுத்தத்தைக் கொண்டுள்ளது. மத்தேயு எழுதிய சுவிசேஷப் புத்தகம் அடிப்படையில் யூத மக்கள்கூட்டத்தார், நாசரேத்தூர் இயேசுவே பழைய ஏற்பாட்டு வேதவசனங்களில் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என்று நம்பி இணங்கச் செய்வதற்காக எழுதப்பட்டது. மத்தேயு ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளை மேற்கோள் காண்பிக்கின்றார் (1:23; 2:6, 15, 23; முதலியன.). அவர் யூதர்களுக்குப் பழக்கமான "தாவீதின் குமாரன்" (1:1) போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றார். இயேசு தமது ராஜ்யத்தை நிலைநாட்ட வந்த ராஜா என்று இதில் வலியுத்தப் படுகின்றார். "ராஜ்யம்" என்ற வார்த்தை இந்தப் புத்தகத்தில் ஐம்பத்தி ஐந்து முறை காணப்படுகிறது.*

*24ம் அதிகாரத்தின் முன்னுரைக்கும் இயல்பின் காரணத்தால், இப்புத்தகம் கி.பி. 70ல் எருசலேம் அழிவதற்கு முன்பு எழுதப்பட்டது என்று யூகித்தல் நியாய மானதாகவே உள்ளது. பழங்காலப் பாரம் பரியத்தின்படி, மத்தேயு சுவிசேஷப் புத்தகம்தான் முதன் முதல் எழுதப்பட்ட சுவிசேஷ விவரமாகும்.*

**வரைகுறிப்பு**

- I. *பின்னணி மற்றும் தயாரிப்பு (1-4).*
- II. *கலிலேயாவில் ஊழியம் (5-18).*
  - A. *மலைப்பிரசங்கம் (5-7).*
  - B. *அற்புதங்கள் (8:1-11:1).*
  - C. *உவமைகள் (11:2-13:53).*
  - D. *எதிர்ப்புகளும் பின்வாங்குதலும் (13:54-16:12).*
  - E. *இயேசுவின் மரணம் முன் எதிர்பார்க்கப்படுதல் (16:13-18:35).*
- III. *கடைசி ஊழியம் (19-28).*
  - A. *எருசலேமுக்குப் பயணம் செல்லுதல் (19; 20).*
  - B. *வெற்றிப் பிரவேசம் (21:1-16).*
  - C. *போதித்தல் (21:17-25:46).*
  - D. *கடைசி மணிகள் (26; 27).*
  - E. *உயிர்த்தெழுதலும் பிரதான கட்டளையும் (28).*

*மத்தேயு சுவிசேஷப் புத்தகத்தில் இருந்து பாடங்கள்*

*சுவிசேஷ விவரங்களில், பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி, ஆண்டுகளினூடே தேவன் செய்திருந்த யாவற்றினுடைய உச்சக்கட்டத்தை நாம் கொண்டுள்ளோம். இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்பதும் இயேசு நமக்காக மரிக்க இப்பூமிக்கு வருமளவுக்கு நம்மீது அதிகமாய் அன்புகூர்ந்தார் என்பதும் இந்த சுவிசேஷ விவரங்களில் உள்ள மிக முக்கியமான பாடங்களாக இருக்கின்றன. அவருக்கு நாம் நமது வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும் என்பது இந்த சத்தியங்களின்மீது தர்க்கரீதியான பயன்பாடாக உள்ளது!*

*இருப்பினும், சுவிசேஷ விவரங்கள், நடைமுறைப் போதனை நிறைந்தவைகளாக உள்ளன. இது இயேசுவை மாபெரும் போதகராக முன்வைக்கும் மத்தேயு சுவிசேஷத்தைப் பொருத்தமட்டில், விசேஷித்த உண்மையாக உள்ளது. மத்தேயு சுவிசேஷம் மாத்திரமே மலைப்பிரசங்கத்தைப் பதிவு செய்துள்ளது (5-7). மத்தேயு சுவிசேஷம் 25ம் அதிகாரத்தில் உள்ள, பத்துக் கன்னியர்களின் உவமை போன்ற, மற்ற எழுத்தாளர்களால் பதிவு செய்யப்பட்டிராத பல உவமைகளையும் கொண்டுள்ளது.*

*மத்தேயு சுவிசேஷம், சபை என்பதே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ராஜ்யம் என்பதைக் கூறும் சுவிசேஷ விவரமாகவும் உள்ளது (16:18, 19). ராஜாவாகிய இயேசு தமது ராஜ்யத்தை நிலைநாட்ட வந்ததால், இது தேவனுடைய திட்டம் மற்றும் நோக்கங்களில் சபையின் முக்கியதுவத்தைப் பற்றிய சில விஷயங்களைக் கூறுகிறது!*

*மத்தேயு சுவிசேஷம், மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட மாபெரும் அறைகூவலுடன் முடிகிறது. இயேசு, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, ..." என்று கூறினார் (28:19). தொடக்ககால சபையானது இந்த அறைகூவலைச் சந்தித்தது. நாம் இதைச் சந்திக்கின்றோமா?*

---

## *"ஏழு எழுபது தரம்" (மத்தேயு 18:21-35)*

*மன்னிக்கும் இருதயத்தைப் பெற்றிருத்தல் என்பது இயேசு தமது மக்களுக்காகக் கொண்டுள்ள திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. இது மத்தேயு சுவிசேஷத்தில் மாத்திரமே பதிவுசெய்யப்பட்டுள்ள இரக்கமற்ற வேலைக்காரன் பற்றிய உவமையில், தெளிவாகக் காணப்படுகிறது.*

I. *மன்னித்தல் போதிக்கப்பட்டது: பேதுருவின் கேள்வி (18:21, 22).*
   A. *பேதுருவின் கேள்வி (வசனம் 21): "ஏழு முறை" ஏன்? ஒரு வேளை இயேசு மன்னித்தல் பற்றி முன்பு பேசுகையில் இந்த எண்ணைப் பயன்படுத்தினார் என்பது காரணமாயிருக்கலாம் (லூக்கா 17:4).*
   B. *இயேசுவின் பதில்: "ஏழு எழுபது தரம்" (வசனம் 22).*
      1. *நமது மன்னித்தலுக்கு இயேசு வரையறை எதையும் வைப்பதில்லை. மாறாக, மிகப்பெரிதான எண் வலியுறுத்தப்படுகிறது:*
         a. *நாம் மன்னிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.*

b. நமக்குச் செய்யப்பட்ட தவறுகளைப் பற்றி "பதிவைக் காத்துக்கொள்ள" முயற்சி செய்தல் என்பது மதியீன மானதாக உள்ளது! (1 கொரிந்தியர் 13:5, NIVஐக் கவனிக்கவும்.)

2. மன்னித்தல் என்பது இயேசு தமது சபைக்குக் கொண்டுள்ள திட்டத்தின் மிகமுக்கிய பகுதியாக உள்ளது (6:14, 15; லூக்கா 6:37; எபேசியர் 4:31, 32; கொலோசெயர் 3:13).

II. மன்னித்தல் விளக்கியுரைக்கப்பட்டது: இரக்கமற்ற வேலைக்காரன் பற்றிய உவமை (18:23-35).

A. இந்த உவமையில், கடன்பெறப்பட்ட இரண்டு தொகைகளுக் கிடையிலான ஒப்பீட்டு வேறுபாடு உள்ளது.

1. இன்றைய நாட்களின் வழக்கப்படி இந்தத் தொகையினை மிகச் சரியாக மதிப்பீடுதல் பற்றி நாம் உபதேசரீதியாக எதுவும் கூற இயலாது; 10,000 தாலந்துகள் என்பது குறிப்பிட்ட ஒரு பணத்தின் பத்தாயிரம் எண்ணிக்கையைக் குறிப்பதில்லை, ஆனால் இது விலையுயர்ந்த உலோகம் ஒன்றின் குறிப்பிட்ட அளவிலான எடையைக் குறிப்பிடுவதாயிருக்கிறது. ஒரு நூறு "வெள்ளிப்பணம்" (KJV) என்பது அந்த நாட்களில் ஒரு சாதாரண தொழிலாளி நூறு நாட்களில் சம்பாதிக்கக் கூடிய நூறு தினேரியங்களைக் குறிக்கிறது. மிகச்சரியான தொகைகள் எது என்பதல்ல, ஆனால் இவ்விரு தொகைகளுக்கு இடையிலான ஒப்பீட்டு வேறுபாடு என்ன என்பதே முக்கிய மானதாக உள்ளது. நமது நோக்கத்திற்காக, நாற்பது கோடி ரூபாய்களுடன் எழுநூறு ரூபாய்களை ஒப்பிட்டுப்பாருங்கள்! இரக்கமற்ற வேலைக்காரனுக்கு நாற்பது கோடி ரூபாய்கள் மன்னிக்கப்பட்டது, ஆனால் அவன் எழுநூறு ரூபாய்க் கடனை மன்னிக்க மறுத்துவிட்டான்!

2. கருத்து: நாம் பாவம் செய்து, நம்மால் ஒருக்காலும் செலுத்தக் கூடாத கடனைக் கொண்டிருந்தோம், ஆனால் தேவன் நம்மை மன்னித்தபோது நமக்கு "இலவசக் கொடை" ஒன்றைக் கொடுத்தார் (ரோமர் 6:23). ஆகையால், நாம் நமக்குச் செய்யப்பட்டுள்ள சிறுதவறுகளை மன்னிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

B. உவமையின் மாபெரும் பாடம்:

1. இந்த உவமையானது, தேவனுடைய கிருபை இல்லாத நிலையில் பாவியின் நம்பிக்கையற்ற தன்மையை அடிக் கோடிட்டுக் காண்பிக்கிறது.

2. இது மன்னிக்கப்பட்டவர் மன்னிப்பவராய் இருக்க வேண்டி யதின் அவசியத்தைப் போதிக்கிறது (வசனம் 35)!

III. மன்னித்தல் கலந்துரையாடப்பட்டது: சில நடைமுறை விஷயங்கள்.

A. மன்னித்தல் என்பதன் அர்த்தம் என்ன? உண்மையிலேயே நாம் "மன்னித்து மறந்துவிட" முடியுமா? இல்லை. தேவன்கூட உண்மையில் "மன்னித்து மறந்துவிடுவது" இல்லை. (அவ்வாறு

இல்லையென்றால், மன்னிக்கப்பட்டது பற்றிய பதிவுகளைக் கொண்ட ஆதியாகமம் புத்தகத்தை நாம் பெற்றிருக்க மாட்டோம்.) தேவன் "நமது பாவங்களை இனியும் நினைவுகூருவது இல்லை" என்று வேதாகமம் கூறும்போது (எரெமியா 31:34), அவர் அந்தப் பாவங்கள் நடைபெறவில்லை என்பதுபோல் நம்மை நடத்து கின்றார் என்றே அர்த்தப்படுகிறது. நாமும் அதையே செய்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். மன்னித்தல் என்பது உண்மையில் இரண்டு படி நிலைகளில் நடைபெறுகிறது:

1. குறுகிய கால மன்னித்தல், அல்லது உடனடியான மன்னித்தல் என்பது நமது வேதவசனப்பகுதி வலியுறுத்தும் விஷயம் ஆகும். மற்ற விஷயங்களின் மத்தியில், இது பின்வருமாறு அர்த்தப் படுகிறது:
    a. கடந்தவற்றை மீண்டும் கொண்டுவராதிருப்பது என்று நாம் முடிவு செய்கிறோம்; அவை நமது உறவுமுறைகளைப் பாதிக்காதிருப்பதற்கு நாம் முயற்சி செய்கின்றோம், ஆனால் "எல்லா மனுஷருடனும் சமா தானமாயிருக்க" நாம் முயற்சி செய்கின்றோம் (ரோமர் 12:18).
    b. பழிவாங்காதிருப்பது ஆனால் அப்படிப்பட்ட விஷயங் களைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவித்துவிடுவது என்று நாம் தீர்மானம் செய்கின்றோம்: " 'பழி வாங்குதல் எனக்குரியது, நானே பதில்செய்வேன்,' என்று கர்த்தர் கூறுகிறார்" (ரோமர் 12:19).
    c. நம்மால் மன்னிக்கப்பட்டவர்களுக்கு மிகச்சிறந்தவற்றை நாம் நாடுகின்றோம்; நாம் அவருடைய நலத்தை நாடு கின்றோம். ரோமர் 12:20, "உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்கு பானங்கொடு; நீ இப்படிச்செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்" என்று கூறுகிறது.
2. நீண்டகால மன்னித்தல் நேரம் எடுத்துக்கொள்கிறது.
    a. மன்னிக்கப்பட்டவரை நடத்துதலில் நாம் ஏதொன்றும் நடைபெற்றிராதுபோல் தொடர்ந்து செயல்படுகின்றோம். நாம் நமது உணர்வுகளின்மீது செயல்புரிந்து தேவன் நமக்கு உதவும்படி கேட்க வேண்டும்.
    b. நடந்த நிகழ்ச்சியை நாம் வேதனையின்றி நினைத்துப் பார்க்க முடியும்போது மன்னிக்கும் செயல்முறை முற்றுப்பெறுகிறது.

B. மன்னிப்பு உங்களுக்கு என்ன செய்ய முடியும்:
1. அது கசப்புணர்வை உங்கள் இருதயத்தில் இருந்து வெளி யேற்றும் (எபிரெயர் 12:15ஐக் காணவும்).
2. அது உங்களை விடுதலை உணர்வுடையவர்களாக்கும்.

*(கசப்புணர்வு உங்கள் ஆத்துமாவை உண்ணும்படி நீங்கள் அனுமதித்தால், அந்தக் கசப்புணர்வின் நோக்கமானது உங்களுடைய வாழ்வை கட்டுபடுத்தும்படி நீங்கள் அனுமதிக்கின்றீர்கள் என்றாகிறது!)*

3. *அது உங்களுக்கு ஆவிக்குரிய வகையில், உணர்வுரீதியில், மற்றும் சரீரப்பிரகாரமான வகையில் உதவும்.*
4. *அது உங்களுக்கு மனநிறைவையும் சமாதானத்தையும் கொண்டுவரும்.*

*முடிவுரை*

*இந்தப் பாடத்தை உங்களுக்குரியதாக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் யாரை மன்னிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்?*

# 2

# மாற்கு: கிறிஸ்து, ஊழியர்

***தலைப்பு***

*மாற்கு சுவிசேஷம் அதை எழுதியவரின் பெயரைக்கொண்டுள்ளது. இதை யோவான் மாற்கு எழுதினார் என்பதில் பொதுவான கருத்து உடன்பாடு உள்ளது (நடபடிகள் 12:25; 15:37), இவரது வீடு எருசலேமில் இருந்தது (நடபடிகள் 12:12). யோவான் என்பது எபிரெயப் பெயராயிருந்தது, ஆனால் இவரை நாம் இவரது ரோமப்பெயரான மாற்கு என்பதைக் கொண்டே நன்கு அறிகின்றோம்.*

***பின்னணி***

*மாற்கு என்பவர் பேதுருவினால் மனம் மாற்றப்பட்டிருந்தார் என்பது உறுதி (1 பேதுரு 5:13), இது அனேகமாக எருசலேமில் பேதுரு ஊழியம் செய்தபோது நடைபெற்றிருக்கலாம். மாற்குவின் விவரங்கள் "பேதுரு எழுதிய சுவிசேஷமாக" இருக்கிறது, இதில் மாற்கு (பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல் பெற்று) பேதுருவின் பிரசங்கித்தலையும் நினைவுக் குறிப்புகளையும் எழுதினார் என்று தொடக்ககால எழுத்தாளர்கள் கூறுகின்றனர். நடபடிகள் 10:34-43ல் உள்ள, புறஜாதியிலிருந்து முதன்முதல் மனமாற்றப்பட்டவர்களுக்கான பேதுருவின் பிரசங்கமானது இந்த சுவிசேஷ விவரத்திற்கு ஒரு வரைகுறிப்பாகப் பயன்படக்கூடும் (வசனம் 38ஐக் கவனிக்கவும்). மாற்கு தனது கையெழுத்துப்பிரதியைப் பேதுரு சரிபார்க்கும்படி அனுமதித்து இருந்தால், அவரது விவரமானது பேதுருவின் மரணத்திற்கு (இது கி.பி. 65க்கும் 68க்கும் இடைப்பட்ட காலமாய் உள்ளது) முன்பே எழுதப்பட்டது என்பதாக பாரம்பரிய வரலாறு கூறுகிறது.*

*மாற்கு என்பவர் பர்னபாவுக்கு இனத்தவராய் இருந்தார் (கொலோசெயர் 4:10). அவர் முதல் சுவிசேஷப் பயணத்தைப் பர்னபாவுடனும் பவுலுடனும் தொடங்கினார், ஆனால் அதில் இருந்து அவர் பின்வாங்கித் திரும்பிவிட்டார் (நடபடிகள் 13:13). பவுலும் பர்னபாவும் இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் மாற்குவை அழைத்துச் செல்வதில் கருத்து வேறுபட்டபோது, பர்னபா தம்முடன் மாற்குவை அழைத்துக்கொண்டு சீப்புருத் தீவிற்குச் சென்றார் (நடபடிகள் 15:36-41). மாற்கு மறுபடியும் பவுலின் நம்பிக்கைக்கு உரியவரானார் என்பது உறுதி, ஏனென்றால் பல ஆண்டுகளுக்குப்பின்பு, அவர் ரோமாபுரியில் பவுலுடன் இருந்தார் (கொலோசெயர் 4:10; பிலேமோன் 24; 2 தீமோத்தேயு 4:11ஐக் காணவும்).*

*மத்தேயு சுவிசேஷத்தைப் போலின்றி, மாற்குவின் விவரமானது யூதரல்லாத மக்கள்கூட்டத்திற்கு எழுதப்பட்டதாகக் காணப்படுகிறது. இவர் தலைமுறை அட்டவணைகள் (ஒரு விதிவிலக்கு தவிர), தீர்க்கதரிசன நிறைவேற்றம் போன்ற புறஜாதியாருக்கு ஆர்வமற்றதாக இருக்கக் கூடியவற்றை நீக்கிவிட்டார். இவர் யூதப்பின்னணியின்மீது சிறிதளவே வலியுறுத்தம் வைத்தார்; இவர் யூதத்துவப் பாரம்பரியங்கள் பற்றிக் குறிப்பிடும்போது பொதுவாக அதை விளக்கியுள்ளார். மாற்கு ரோம மக்கள் கூட்டத்திற்கு எழுதினார் என்று பல எழுத்தாளர்கள்*

உணருகின்றனர். மற்ற சுவிசேஷ எழுத்தாளர்கள் வரலாறுகளில் கிரேக்கச் சொற்றொடர்களைப் பயன்படுத்தியிருக்க, இவர் அவற்றில் இலத்தீன் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார்.

மத்தேயு இயேசுவை ஒரு ராஜாவாக வலியுறுத்தினார்; மாற்கு இயேசுவை ஒரு ஊழியக்காரராக வலியுறுத்துகின்றார். மாற்கு சுவிசேஷம், செயல்பாட்டின் விவரமாக உள்ளது, இது இயேசுவைப் போதிக்கின்றவராக மட்டுமின்றி, பிறருக்கு உதவுவதற்காகக் காரியங்களைச் செய்பவராக முன்வைக்கிறது. மாற்கு 10:45 ஒரு திறவுகோல் வசனமாக உள்ளது: "மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." மாற்கு, இயேசுவின் அற்புதங்களை வலியுறுத்துகின்றார், ஏனெனில் அவற்றில் இயேசுவை மக்களின் தேவையில் ஊழியம் செய்பவராகக் காணமுடியும்.

மாற்கு சுவிசேஷத்தின் கடைசி பன்னிரெண்டு வசனங்கள் பல முக்கிய மான கையெழுத்துப்பிரதிகளில் இருப்பதில்லை. இவைகள் வேதபாடத்திற்கு உரியவை - அதாவது, மாற்குவினால் பிற்பாடு கூட்டப் பட்ட ஒரு குறிப்பு என்ற வகையில் அல்லது (உபாகமம், யோசுவா முதலியவற்றில் உள்ளதுபோன்று; மேற்கூறப்பட்ட புத்தகங்கள் பற்றிய குறிப்புகளைக் காணவும்). இன்னொரு எழுத்தாளரால் கூட்டப்பட்டதான ஏவுதல் பெற்ற அடிக்குறிப்பு என்ற வகையில் மூலப்பிரதியின் பாகமாயிருக்கின்றன என்று பெரும்பாலான பழமைவாத எழுத்தாளர்கள் நம்புகின்றனர். மாற்கு 16:9-20ல் உள்ள உபதேசங்கள் யாவும் புதிய ஏற்பாட்டில் வேறிடங்களில் காணப்படுகின்றன என்பதை மனதில் வைக்கவும்; இந்தப் பன்னிரெண்டு வசனங்களை மாத்திரம் சார்ந்துள்ள அடிப்படை சத்தியம் என்று எதுவும் இல்லை.

**வரைகுறிப்பு**

I. *ஊழியக்காரர் ஊழியம் செய்வதற்குத் தயாராகின்றார் (1:1-13): இயேசு தமக்குரிய மதிப்புகளைப் பெறுகின்றார்.*

II. *ஊழியக்காரர் ஊழியம் செய்யத் தொடங்குகின்றார் (1:14-8:30).*
   - A. *ஊழியத்தின் தொடக்கம் (1:14-2:12).*
   - B. *விமர்சனம் தொடங்குதல் (2:6-3:35).*
   - C. *ஊழியத்தின் அறைகூவல்; போராட்டம் (4:1-8:30); உச்சகட்டம்: நல்ல அறிக்கை (8:27-30).*

III. *ஊழியக்காரர், ஊழியத்தின் மாபெரும் செயலுக்காகத் தயாராகின்றார்: சிலுவையில் மரித்தல் (8:31-15:47).*
   - A. *அவரது முடிவு ஊழியம் (8:31-10:52).*
     1. *அவர் தமது சீஷர்களை ஆயத்தப்படுத்த முயற்சி செய்கின்றார்.*
     2. *அவர் எருசலேம் நோக்கிப் பயணம் தொடங்குகின்றார்.*
   - B. *மிக முக்கியமான ஒரு காலம்: அவரது ஊழியத்தின் கடைசி வாரம் (11:1-14:42).*
   - C. *அவர் சிலுவையில் அறையப்படுதலும் அடக்கம் பண்ணப்படுதலும் (14:43-15:47).*

IV. *ஊழியக்காரர் உயிர்த்தெழுதலினால் மேன்மைப்படுத்தப்படுகின்றார்*

*(16); பிரதான கட்டளை (16:15, 16).*

***மாற்கு சுவிசேஷத்தில் இருந்து பாடங்கள்***

*மாற்கு சுவிசேஷமானது - மற்ற சுவிசேஷப் புத்தகங்களைப்போன்றே - இயேசுவை மேசியாவாக, தேவகுமாரனாக, நமது இரட்சகராகக் காண்பித்தல் என்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்புத்தகமானது "தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்" என்ற வார்த்தைகளுடன் தொடங்குகிறது (1:1). அணுகுமுறையில் மாத்திரமே மாற்கு மற்ற சுவிசேஷங்களின் எழுத்தாளர்களில் இருந்து மாறுபடுகின்றார். இப்புத்தக மானது இயேசுவைப் பற்றிய ஒரு சுருக்கமான சித்தரிப்பை முன்வைக்கிறது, பின்பு அச்சித்தரிப்பு தனக்காகப் பேசும்படி அனுமதிக்கிறது.*

*மாற்கு சுவிசேஷம் "அக்கறையின் சுவிசேஷம்" என்று அழைக்கப் பட்டுள்ளது. இயேசு, மக்களின் உடல்நலம், பசி, சந்தோஷம், உதவியற்ற தன்மை, மற்றும் துன்பங்கள் ஆகியவற்றைக் குறித்து அக்கறை கொண்டி ருக்கின்றார். பிறருக்கு ஊழியம் செய்வதில் நாம் அவரைப்போல் இருக்கும்படி அறைகூவல் விடப்படுகின்றோம் (10:42-45).*

*மாற்கு சுவிசேஷத்தில் (16:15, 16) தரப்பட்டுள்ளபடி இயேசுவின் பிரதான கட்டளையைக் கவனமாக வாசியுங்கள்; பின்பு இது நடபடிகளில் செயல்படுத்தப்படுவதைக் கவனியுங்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும் மற்றும் விசுவாசமும் ஞானஸ்நானமும் அதற்கு ஏற்ற பதில் செயலாகும் என்று இயேசு கூறினார். இவ்விரு நிபந்தனைகளும் சந்திக்கப்படும்போது, கடந்தகாலப் பாவங்களில் இருந்து இரட்சிப்பு என்பது விளையும். சுவிசேஷம் முதன்முறை பிரசங்கிக்கப்பட்டபோது (நடபடிகள் 2:36), மக்கள் அந்தச் செய்தியை விசுவாசித்து என்ன செய்ய வேண்டும் என்று அறிவதற்கு விரும்பினர் (நடபடிகள் 2:37). இயேசுவின் அறிவுறுத்துதல்களைக் கவனமாய்ப் பின்பற்றிய பேதுரு, அவர்களிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி கூறினார், அது கடந்தகாலப் பாவங்களுக்கு மன்னிப்பை விளைவிக்கும் (நடபடிகள் 2:38). இயேசுவின் வரிசைமுறை மதிப்பளிக்கப்பட வேண்டும்: பிரசங்கிக்கப்படும் சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும், விசுவாசிக்க வேண்டும், ஞானஸ்நானம் பெற வேண்டும், அதன்பின்பு இரட்சிப்பைப் பெற வேண்டும்.*

## *இயேசுவே பதில் (மாற்கு 2:1-12)*

*நம் எல்லாருக்கும் பிரச்சனைகள் உண்டு: திருமணப்பிரச்சனைகள், நிதிநிலைப் பிரச்சனைகள், உடல்நலப் பிரச்சனைகள், உணர்வுரீதியான பிரச்சனைகள். நமது பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும், அவற்றிற்கு இயேசுவே பதிலாக இருக்கின்றார். புதிய ஏற்பாடு முழுவதும் இம்மாபெரும் சத்தியத்தை அறிவிக்கிறது, ஆனால் நமது நோக்கங்களுக்காக, நாம் மாற்கு 2ல் காணப்படுகிற இயேசுவின் வாழ்வில் ஒரு நிகழ்ச்சியைக் கண்ணோக்குவோம்.*

I. *நான்கு நண்பர்களும் வியாதிப்பட்ட மனிதனும்: இயேசுவே பதி (2:1-4).*
   A. *காட்சியமைவு (வசனங்கள் 1-3).*
      1. *இயேசு கலிலேயாவில் பிரசங்கித்து மக்களைக் குண மாக்கிய பின்பு கப்பர்நகூம் என்ற ஊருக்கு வருகின்றார்.*

அவர் மீளவும் புத்துணர்வடையச் சற்றுநேரம் [ஓய்வுபெற] விரும்பினார் என்பது உறுதி (1:4, 5, 35), ஆனால் [அவர் அங்கிருப்பது பற்றிய] வார்த்தை பரவிற்று: "இயேசு திரும்பி வந்திருக்கின்றார்!" விரைவிலேயே, இயேசு தங்கியிருந்த வீடு மக்களால் நிரம்பலாயிற்று.

2. நான்கு நண்பர்கள், திமிர்வாதம் கொண்ட ஒரு மனிதனைக் கொண்டு வந்தனர், அம்மனிதன் "திமிர்வாதம்" என்ற பயங்கர நிலைகொண்ட நோய்வாய்ப்பட்டிருந்தான்.

B. இந்த நான்கு தனிநபர்களும் தங்கள் நண்பனை அங்கு கொண்டு வந்தது ஏன்? அவர்கள் இயேசுவே பதில் என்பதை உணர்ந்தறிந்திருந்தனர் (வசனம் 5).

1. அவர்கள் இயேசுவின் உதவும் வல்லமையில் விசுவாசம் கொண்டிருந்தனர் (வசனம் 10).
   a. இது கப்பர்நகூமிலும் கலிலேயாவின் பயணத்திலும் முன்னதாகச் செயல் விளக்கப்படுத்தப்பட்டிருந்தது.
   b. நமது பிரச்சனைகளுக்கு எவரொருவரும் உதவ இயலாது என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கலாம், ஆனால் கர்த்தரைப் பொறுத்தமட்டில் எல்லாவிஷயங்களும் சாத்தியமானவைகளே (10:27)!
2. அவர்கள், இயேசு தாம் அக்கறை கொண்டவர்மீது தமது வல்லமையைப் பயன்படுத்த மனவிருப்பமாய் இருந்தார் என்று விசுவாசம் கொண்டிருந்தனர்!
   a. இயேசு தமது சமீபத்திய பயணத்தில், ஒரு தொழு நோயாளியைக் குணமாக்கியிருந்தார்: "இயேசு மனதுருகி கையை நீட்டி, அவனைத் தொட்டு, ..." (1:41). தொடுதல் என்பது குணமாக்குதலுக்கு அவசியமற்றதாயிருந்தது; அது மனதுருக்கத்துடனான தொடுதலாய் இருந்தது.
   b. நமது பிரச்சனைகளுக்கு இயேசு பதிலாய் மாத்திரமே இல்லை; அவர் நமக்கு உதவ விரும்புகின்றார் என்று நாம் உணர்ந்தறிய வேண்டியது அவசியமாய் இருக்கிறது! அவர் நம்மீது அக்கறை கொள்ளுகின்றார்!

C. கூட்டம் மிகுதியாய் இருந்ததால் அவர்களால் உள்ளே நுழையக் கூடாதிருந்தது (வசனம் 4).

1. அவர்கள் முயற்சியைக் கைவிடவில்லை:
   a. அவர்கள் கடினமான பணியைச் செய்தனர். மேற்கூரையின் மீது அவர்கள் தங்களுடைய நண்பர்களைக் கொண்டு செல்லுதல் என்பது சுலபமாய் இருந்திராது. (வெளிப்புறம் படிக்கட்டுகள் இருந்தன என்று வேதவசனம் ஒன்றும் கூறுவ தில்லை.)
   b. அவர்கள் எதிர்பாராத செயலைச் செய்தனர். அவர்கள் கூரையில் ஒரு துளை ஏற்படுத்தினர்.
   c. அவர்கள் செலவுபிடிக்கும் செயல் ஒன்றைச் செய்தனர். ஒன்று அவர்கள் கூரையில் ஏற்படுத்திய சேதத்திற்கு

நஷ்ட ஈடு செலுத்தியிருக்க வேண்டும் அல்லது அவர்களே அதைச் சரிசெய்து கொடுத்திருக்க வேண்டும்.

2. நாம் யாவரும் இயேசு தேவைப்படுகிற நண்பர்களைக் கொண்டுள்ளோம். அவர்களை கர்த்தரிடம் கொண்டு வருவதற்கு, நாம் கடினமான, எதிர்பாராத, செலவுபிடிக்கும் செயலைச் செய்ய மனவிருப்பமாய் இருக்கின்றோமா?

II. இயேசுவும் வியாதிப்பட்ட மனிதனும்: ஒவ்வொரு பிரச்சனைக்கும் இயேசுவே பதிலாயிருக்கின்றார் (2:5-12).

A. நாம் நமது பார்வையை இயேசுவை நோக்கித் திருப்புகின்றோம் (வசனம் 5).

1. அந்த நண்பர்களை இயேசு கடிந்துகொள்ளவில்லை. நாம் பிரச்சனைகள் கொண்டுள்ளபொழுதெல்லாம் இயேசு நமக்குக் கிடைக்கக் கூடியவராகவே இருக்கின்றார்.

2. இயேசு அம்மனிதரின் இருதயத்திற்குள் கண்ணோக்கி அவர் குற்றத்துடன் போராடிக் கொண்டிருந்ததைக் கண்டார் (வசனம் 5ஐக் கவனியுங்கள்). அம்மனிதரின் உடல்ரீதியான பிரச்சனை பாவத்தின் விளைவு என்று இயேசு கூறவில்லை (யோவான் 9:1-3); அவர் மிக முக்கியமான பிரச்சனைக்கு முதலில் சிகிச்சை அளித்தார்.

B. எல்லாவற்றிற்கும் மேலாகப் பாவம் என்ற பிரச்சனைக்கு இயேசுவே பதிலாக இருக்கின்றார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

1. நாம் நமது பிரச்சனைகளைக் கையாளக்கூடியவர்களாக்கு வதற்கு, வாழ்வின் புதிய ஒரு தத்துவத்தை நமக்குக் கொண்டு வருவதற்காக இயேசு வரவில்லை. அதைச் செய்வதற்கு தேவன் ஒரு மாபெரும் போதகரை [மாத்திரம்] அனுப்பியிருக்கக்கூடும். இயேசு நமது பாவங்களுக்காக மரிப்பதற்கென்று வந்தார் (மத்தேயு 20:28)!

2. நீங்கள் துன்புற்றிருந்தால், நிம்மதியை விரும்புவீர்கள்; ஆனால் முதலில், பின்வரும் கேள்வியைக் கேட்டுப்பாருங்கள், "இயேசுவுடன் எனது உறவு எப்படிப்பட்டதாக உள்ளது?" இரட்சிப்பு அவசியமான நிலையில் நாம் பாவிகளாய் இருக்கின்றோம் என்ற பெரிய விஷயத்தை அடிக்கடி மறந்து விடும் அளவுக்கு நாம் பல விஷயங்களைக் குறித்துக் கவலை கொண்டிருக்கின்றோம் (ரோமர் 3:23; 6:23)!

C. இவ்வரலாற்றின் எஞ்சியபகுதியில் இயேசு, பாவம் என்ற பிரச்சனைக்கு மாத்திரமல்ல, ஆனால் வாழ்வின் ஒவ்வொரு பிரச்சனைக்கும் அவரே பதிலாக இருக்கின்றார் என்பதைக் காண்பித்தார் (வசனங்கள் 6-12).

1. விமர்சிப்பவர்கள் எப்போதுமே இருக்கின்றனர் (வசனங்கள் 6, 7). இயேசு தேவனல்ல என்றால், அவர் மரணத்திற்குப் பாத்திர மான தேவ தூஷணம் கூறுபவராய் இருந்திருப்பார். "அவர் தேவனாக இருக்க முடியுமா?" என்பதே அடுத்த கேள்வியாய் இருந்திருக்க வேண்டும். இதைக் கருதிப்பார்ப்பதற்கு அவர்

*களின் தப்பெண்ணம் அவர்களை அனுமதித்திருக்காது.*

2. *அவர்களின் சிந்தனைகளுக்கு இயேசுவின் பதிலுரை (வசனங்கள் 8-11):*
    a. *"உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று கூறுவது சுலபம் என்பது உறுதி (வசனம் 9).*
    b. *இயேசு தம்மால் ஆவிக்குரிய பிரச்சனைகளை எடுத்துப் போட முடியும் என்று நிரூபிப்பதற்காக, உடல்ரீதியான பிரச்சனைகளை எடுத்துப்போடக்கூடிய தம் வல்லமையைப் பயன்படுத்தினார் (வசனங்கள் 10, 11). கர்த்தர் நமது ஆவிக்குரிய பிரச்சனையை எடுத்துக்கொண்டுள்ளதால், அவர் நமது பிற பிரச்சனைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் அக்கறைகொள்ளுவார் (ரோமர் 8:32).*
3. *விளைவு பற்றிய நிச்சயமின்மையைக் கற்பனை செய்து பாருங்கள்! ஒன்றும் நடக்கவில்லையென்றால், இயேசு ஒரு நடிப்பாளர் என்று நிரூபணமாகியிருக்கும். அம்மனிதன் எழுந்திருப்பான் என்றால், இயேசு தாம் உரிமைகோரியபடியெல்லாம் இருக்கின்றார் என்பதை அவர் காண்பிப்பார்! (வசனம் 12ஐக் காணவும்.)*
    a. *புதிய ஏற்பாட்டின் எல்லா அற்புதங்களையும் போலவே, இதுவும் உடனடியானதாக, முழுமையானதாக, நம்ப வைக்கக்கூடியதாக இருந்தது!*
    b. *இது அவர்களைத் திகைக்கவைத்தது (மத்தேயு 9:8; லூக்கா 5:26)!*

*முடிவுரை*

A. *வாழ்வில் நமது பிரச்சனைகளுக்கு இயேசுவே பதிலாய் இருக்கின்றார்!*

B. *நீங்கள் பிரச்சனைகளைக் கொண்டிருந்தால், உங்களுக்கு உதவ இயேசுவை அனுமதியுங்கள்!*

1. *முதலில் பாவத்தின் பிரச்சனையைப் பற்றிக் கவனம் செலுத்துங்கள் (16:16).*
2. *வாழ்வு எதைக்கொண்டுவந்தாலும் அதை எதிர்கொள்ளுவதில் உங்களுக்கு உதவுவதற்கு அவரைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அவர் உடல்ரீதியான அற்புதத்தை அளிக்கமாட்டார், ஆனால் உங்களுக்குத் தேவையான ஆதாரமூலங்கள் யாவற்றையும் அவர் உங்களுக்குத் தருவார்: அவரது ஜீவனுள்ள பிரசன்னம் (எபிரெயர் 13:5), உங்களுக்குப்பெலம் அளிக்க அவரது ஆவி (நடபடிகள் 2:38), தேவனிடத்திலிருந்து ஞானம் (யாக்கோபு 1:5), மற்றும் சபை என்று அழைக்கப்படக்கூடிய அக்கறை கொள்ளும் ஒரு குடும்பம் (நடபடிகள் 2:41, 47)!*

# 3

# லூக்கா: கிறிஸ்து, மனுஷகுமாரன்

***தலைப்பு***

*லூக்கா சுவிசேஷம் அதை எழுதியவரின் பெயரைக்கொண்டுள்ளது. தொடக்ககாலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களில் பலர் “பிரியமான வைத்தியனாகிய” லூக்காவை (கொலோசெயர் 4:14) இதன் எழுத்தாளர் என்று அடையாளப்படுத்தியுள்ளனர். இந்த நிலைப்பாட்டை இப்புத்தகத்தின் உள்ளான ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன (உதாரணமாக, இதன் எழுத்தாளர் மருத்துவச் சொற்றொடர்கள் பலவற்றைப் பயன்படுத்துகின்றார்).*

***பின்னணி***

*லூக்காவின் விவரத்தைப் பொறுத்தமட்டில், அறிமுகப்பகுதியில் (1:1-4) தியோப்பிலு (“தேவப்பிரியர்”) என்பவருக்கு இந்நூல் எழுதப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் என்பது தனிச்சிறந்த விஷயமாக உள்ளது. இந்த அறிமுகம் லூக்கா இயேசுவின் வாழ்நாள் காலத்தின் போதல்ல, ஆனால் பிற்பாடு ஒருவேளை பவுலினால் போதிக்கப்பட்டு சீஷராகியிருக்கலாம் என்று முடிவு செய்யும்படி நம்மை வழிநடத்துகிறது. இந்த அறிமுகமானது, லூக்கா பரிசுத்த ஆவியானவருக்காக எழுதுபவராக மாத்திரமல்ல, ஆனால் அவர் “உண்மையில் நடந்தவற்றை” பற்றிய தனிப்பட்ட ஆய்வை மேற்கொண்டார் என்பதையும் காட்டுகிறது. பவுலுக்குத் தரப்பட்ட விசேஷித்த வெளிப்படுத்துதல் (1 கொரிந்தியர் 11:23) என்பது லூக்காவுக்குக் கிடைத்திருந்த ஆதாரமூலங்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இயேசுவின் தாயான மரியாளிடத்தில் இருந்து வந்ததான கிறிஸ்துவின் தொடக்ககால வாழ்வுபற்றிய தகவல்களையும் பாரம்பரியம் கொண்டுள்ளது.*

*லூக்காவின் சுவிசேஷம் தனது தொடர்நூல் ஒன்றைக் கொண்டுள்ளது என்பதும் இதன் இன்னொரு தனிச்சிறப்பு விஷயமாக உள்ளது: நடபடிகள் என்ற புத்தகம் இந்தத் தொடர் நூலாகும் (இவற்றுடன் 1:1-4 மற்றும் நடபடிகள் 1:1). நடபடிகள் புத்தகத்தில் தன்மைப் பெயர்ச்சொல் கொண்ட வசனப்பகுதிகள் (நடபடிகள் 16:10; 20:5; 21:1; முதலியன.) லூக்கா அடிக்கடி பவுலுடன் பயணம் செய்தார் என்று நமக்குக் கூறுகின்றன. சமீபத்திய புதைபொருள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள், லூக்கா ஒரு மிகச்சரியான வரலாற்றாளராயிருந்து, இயேசுவின் வாழ்வு மற்றும் அதைத்தொடர்ந்த நிகழ்ச்சிகளுக்கு மாபெரும் கனம் கொடுத்திருந்தார் என்பதை உறுதிப்படுத்துகின்றன.*

*மாற்குவைப்போல் லூக்காவும் யூதரல்லாத மக்கள்கூட்டத்திற்கு எழுதினார் என்பது உறுதி. இருப்பினும், மாற்குவின் சுவிசேஷ விவரம், செயல்பாட்டு அமைவு கொண்ட ரோமர்களுக்கு எழுதப்பட்டிருக்க, லூக்காவின் சுவிசேஷ விவரம், மதிநுட்பம் வாய்ந்த மாணவருக்கு எழுதப்பட்டதாகக் காணப்படுகிறது. லூக்கா தமது சிந்தையில் கிரேக்க மக்கள்கூட்டத்தைக் கொண்டிருந்தார் என்று பலர் முடிவு செய்கின்றனர். லூக்கா தாமே ஒரு கிரேக்கராய் இருந்தார் என்றால்*

(இது சாத்தியமானதே; கொலோசெயர் 4:10, 11, 14 ஆகிய வசனங்களைப் படிக்கவும்), அவர் ஒருவர்தாம் புதிய ஏற்பாட்டில் யூதரல்லாத ஒரே எழுத்தாளராய் இருந்தார் என்றாகிறது.

லூக்காவின் சுவிசேஷம், "மனுஷகுமாரனான," இயேசுவின் பூரண மான மனிதத்துவத்தை வலியுறுத்துகிறது, இது "தேவகுமாரனான" இயேசுவின் தெய்வீகத்தை வலியுறுத்தும் யோவான் சுவிசேஷத்திற்கு நேர்மாறானதாக உள்ளது. இப்புத்தகத்தின் கருத்து 19:10ல் தொகுத்துரைக்கப்பட்டுள்ளது: "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தி ருக்கிறார்."

நடபடிகள் புத்தகம் திடீரென்று முடிவடைந்ததால், லூக்கா தமது எழுத்தை அனேகமாக கி.பி. 62ல், ரோமாபுரியில் பவுல் முதல்முறை விசாரிக்கப்படுவதற்கு முன்பு முடித்திருக்க வேண்டும். நடபடிகள் புத்தகத்தை எழுதுவதற்குச் சற்றுகாலம் முன்னதாக லூக்கா தமது சுவிசேஷ விவரத்தை எழுதியிருப்பார் என்றால், அவர் அதை எழுதிய காலம் கி.பி. சுமார் 60-62 ஆக இருந்திருக்கும். இவ்விதமாக, மூன்று ஒப்பீட்டு சுவிசேஷங்களும் 60களின் முந்திய ஆண்டுகளில் எழுதி முடிக்கப்பட்டன (மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷப் புத்தகங்களுக்கான குறிப்புகளைக் காணவும்).

"ஒப்பீட்டுப் பிரச்சனை" பற்றிச் சில வார்த்தைகள் கூறப்பட்டாக வேண்டும். இந்த "பிரச்சனை" என்பது விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் மாறுபட்டுள்ளது. வாய்மொழி ஏவுதலில் விசுவாசம் கொண்டுள்ளவர்கள், ஒரேவிதமான வரலாற்றின் விவரங்களில் எழுத்தாளர்கள் மாறுபடுவது ஏன் என்ற கேள்வியுடன் போராடுகின்றனர். உண்மையில், இது சாட்சியம் என்ற வகையில் அவற்றின் நம்பகத்தன்மையை மேம்படுத்துகின்றது; வார்த்தைக்கு வார்த்தை ஒரே வகையான சாட்சியம் கொடுக்கும் சாட்சிகள் பற்றி நாம் சந்தேகப்படுகின்றோம். மற்றவர்களுக்கு, இந்த மூன்று விவரங்களும் ஏன் ஒரே மாதிரியாக உள்ளன என்பது "ஒப்பீட்டுப் பிரச்சனை"யாக உள்ளது. பல கோட்பாடுகள் வளர்க்கப்பட்டுள்ளன: எழுத்தாளர்களில் ஒருவர் மற்றவரின் எழுத்துக்களில் இருந்து பிரதி எடுத்துள்ளனர், அவர்கள் யாவரும் ஒரு பொதுவான பதிவில் இருந்து பிரதியெடுத்துள்ளனர், முதலியன. ஒன்றுபட்ட தன்மைகள் இருக்கின்றன என்பதில் பிரச்சனை இல்லை, ஏனென்றால் சுவிசேஷ விவரங்கள் யாவும் பரிசுத்த ஆவியானவர் என்ற ஒரு பொதுவான எழுத்தாளரைக் கொண்டுள்ளன: (2 தீமோத்தேயு 3:16, 17; 2 பேதுரு 1:21ஐக் கவனிக்கவும்).

**வரைகுறிப்பு**

I. மனுஷகுமாரன் ஆயத்தமாகுதல் (1:1-4:13).
   A. பெத்லகேமில் அவரது பிறப்பு.
   B. நாசரேத்தில் அவரது பிள்ளைப்பருவம்.
   C. யோர்தானில் அவர் ஞானஸ்நானம் பெறுதல்.
   D. வரலாற்றில் அவரது பின்னணி (வம்சவழி).
   E. சாத்தானுடன் அவரது யுத்தம் (சோதிக்கப்படுதல்).
II. மனுஷகுமாரனின் வல்லமை (4:14-9:50).
   A. ஊழியம் தொடங்குதல் (4:14-5:16).
   B. ஊழியம் விமர்சிக்கப்படுதல் (5:17-6:11).

C. ஊழியம் தொடருதல் *(6:12-8:56).*

D. ஊழியம் உச்சக்கட்டத்தை அடைதல் *(9:1-50).*

III. மனுஷகுமாரனின் பிரசங்கம் *(9:51-18:30).*

A. இயேசு "எருசலேம் நோக்கித் தமது முகத்தைத் திருப்புதல்" *(9:51-13:21).*

B. இயேசு "எருசலேம் நோக்கிப் பயணம் செய்தல்" *(13:22-17:10).*

C. எருசலேமுக்குச் செல்லும் வழியில், அவர் கலிலேயா மற்றும் சமாரியாவைக் கடந்து செல்லுதல் *(17:11-18).*

IV. மனுஷகுமாரனின் பாடுகள் *(18:31-23:56).*

A. கடைசிப் பயணம் *(18:31-19:27).*

B. கடைசி வாரம் *(19:28-22:46).*

C. கடைசி நாள் *(22:47-23:56).*

V. மனுஷகுமாரன் பூரணப்படுதல் *(24).*

A. உயிர்த்தெழுதல் *(24:1-49).*

B. பரத்துக்கேறுதல் *(24:50-53).*

**லூக்கா சுவிசேஷத்தில் இருந்து பாடங்கள்**

லூக்கா சுவிசேஷம், வேறு எந்த ஒப்பீட்டு சுவிசேஷத்தைக் காட்டிலும் மிகத்தனிச்சிறப்பான விஷயங்களைக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, லூக்கா மாத்திரமே இயேசுவின் பிறப்பு மற்றும் பிள்ளைப் பிராயம் ஆகியவற்றைப் பற்றிக்கூறுகிறார். வரைகுறிப்பில் "மனுஷகுமாரனின் பிரசங்கம்" என்ற IIIம் பிரிவின் பெரும்பான்மையான பகுதியானது லூக்கா சுவிசேஷத்திற்கு மாத்திரமே உரிய தனிச்சிறந்த பகுதியாகும். இந்தப் பிரிவில்: கெட்ட குமாரனின் உவமை என்ற உலகமக்களுக்கு மிகவும் பிரியமான கதைகளில் ஒன்றைக் காணுகின்றோம் (15:11-32).

லூக்கா சுவிசேஷம் விசேஷித்த வலியுறுத்தங்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இது மரியாள், நாயீன் பட்டணத்து விதவை, பாவம் நிறைந்த பெண், முதலிய வரலாறுகளில் பெண்களுக்கு விசேஷித்த கவனத்தைக் கொடுக்கிறது. மேலும் இது இயேசுவின் ஜெபவாழ்வு பற்றியும் வலியுறுத்துகிறது. இது, இயேசுவின் வாழ்வில் பிரதான நிகழ்ச்சிகளின் போது, அவர் ஜெபித்தார் என்று காண்பிக்கிறது (3:21; 6:12, 13; 9:18முதல்.; முதலியன.).

இயேசு உண்மையிலேயே ஒரு கன்னிப் பெண்ணிடம் இருந்து பிறந்தார், இயேசு உண்மையிலேயே மக்களின் உடல்நோய்களைக் குணமாக்கினார், இயேசு உண்மையிலேயே சிலுவையில் மரித்தார் (அவர் அதில் மயக்கமாக மாத்திரம் இருக்கவில்லை), மற்றும் இயேசு தமது சரீரத்தில் உயிர்த்தெழுந்தார் என்றெல்லாம் மூடநம்பிக்கை கொண்ட ஒரு குடியானவரல்ல, ஆனால் கல்வியறிவுபெற்ற ஒரு மருத்துவர் எழுதினார். நாம் சுவிசேஷ விவரங்களையும் அவற்றில் எழுதியுள்ள எல்லாவற்றையும் நம்ப முடியும்!

## எம்மாவூருக்குச் செல்லும் சாலை (லூக்கா 24:13-35)

பாப் ஹோப் மற்றும் பிங் கிராஸ்பி ஆகியோர் நடித்த புகழ்பெற்ற சாலைத் திரைப்படங்களான: "சிங்கப்பூர் செல்லும் சாலை," "சான்ஸிபார் செல்லும் சாலை," மற்றும் "மொராக்கோ செல்லும் சாலை," போன்றவை நினைவில்

*இருக்கிறதா? இந்தப் பொழுதுபோக்குத் திரைப்படங்களைக் காட்டிலும் அதி கமாக எல்லையற்ற வகையில் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு சாலைத் சித்திரத்தை நாம் கண்ணோக்குவோம்: "எம்மாவூருக்குச் செல்லும் சாலை" (24:13-35; மாற்கு 16:12, 13ஐயும் காணவும்).*

*இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்த நாளின் பிற்பகல் வேளையா யிருந்தது. "நம்பிக்கை" - சலிப்பு ஏற்பட்டிருந்த ஒரு நம்பிக்கை - என்பதே ஆய்வுக்கருத்தாக உள்ளது: "அவரே இஸ்ரவேலை மீட்டி இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்" (வசனம் 21). "எம்மாவூருக்குச் செல்லும் சாலைக்கு" என்னுடன் வாருங்கள்.*

I. *நம்பிக்கை அற்றுப்போனது (24:13, 14).*
   A. *கிலெயோப்பா (24:18) என்பவரும் இன்னொரு நபரும் எருசலேமில் இருந்து சுமார் ஏழு மைல்கள் தூரத்தில் உள்ள எம்மாவூரை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். வசந்த காலத்தின்போது அவர்கள் இல்லம் நோக்கிய தங்கள் பயணத்தில் மகிழ்ச்சியுடன் இருந்திருக்க வேண்டும், ஆனால் அவர்கள் ஒரு சவ அடக்கத்திற்குச் சென்று மீண்டும் இல்லம் திரும்பிக் கொண்டிருந்தனர். இது சாதாரண மான ஒரு சவ அடக்கமாயிருக்கவில்லை, ஆனால் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்திருந்த ஒருவரின் சவ அடக்கமாக - இயேசுவின் சவ அடக்கமாக இருந்தது.*
   B. *அவர்கள் நடந்து செல்லுகையில், இயேசுவின் மரணத்தைப் பற்றி, வெறுமையாயிருந்த கல்லறையின் புதிரான விஷயம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனர் (24:22-24). அவர்கள் பேசி, கலந்துரையாடி, மற்றும் தர்க்கம் செய்துகொண்டிருக்கின்றனர் (24:15), ஆனால் அவர்கள் திருப்தியான பதில் எதையும் கொண்டிருக்கவில்லை. நம்பிக்கை அற்றுப்போயிருக்கிறது.*

II. *நம்பிக்கை உயிர்ப்பிக்கப்பட்டது (24:15-27).*
   A. *இயேசு அவர்களுடன் சேர்ந்துகொள்கின்றார், ஆனால் அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை (வசனம் 16), இது ஒரு வேளை தெய்வீக இடையீட்டினால், அல்லது உயிர்த்தெழு தலின் சாத்தியக்கூற்றிற்கு அவர்கள் "தங்கள் கண்களை மூடிக் கொண்டதால்" (மத்தேயு 13:15) ஏற்பட்டிருந்திருக்கலாம். நாமும்கூட அடிக்கடி, விசுவாசக் குறைவினால் கர்த்தர் நம் அருகில் இருப்பதை உணரத் தவறுகின்றோம் (2 இராஜாக்கள் 6:17).*
   B. *அவர்கள் ஏன் கவலையுடன் இருக்கின்றனர் என்று இயேசு கேட்கின்றார். அவர்கள் தகர்க்கப்பட்ட தங்களின் நம்பிக்கையைப் பற்றிக்கூறுகின்றனர். பின்பு இயேசு, வேதவசனங்களைப் பயன்படுத்தி, சிலுவையில் அறையப்படுதல் என்பது எவ்வாறு தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றில் ஒரு பாகமாக இருந்தது என்பதைக் காண்பிக்கின்றார். இயேசு, ஆதி யாகமத்தில் தொடங்கி (ஆதியாகமம் 3:15; சங்கீதம் 22; ஏசாயா 53 போன்ற) வேதவசனங்களை பயன்படுத்தி அவைகள் தமக்கு எவ்வாறு நடைமுறைப்பட்டுள்ளன என்று விளக்கம் தருகிற அந்தப் பிரசங்கத்தைக் கேட்பதற்கு நீங்கள் விரும்புவீர்கள் அல்லவா?*

C. *அவர்கள் நம்பிக்கை உயிர்ப்பிக்கப்பட்டது! இயேசு அவர்களுக்கு "வேதவாக்கியங்களை விவரிக்கையில்" (24:32), அவர்களின் இருதயங்களில் இருந்ததும் ஆனால் அணைந்துபோயிருந்ததுமான நம்பிக்கையானது தூண்டிவிடப்பட்டு சுவாலிக்கும்படி விசிறிவிடப் பட்டது.*

III. *நம்பிக்கை உய்த்துணரப்பட்டது (24:28-32).*

A. *அவர்கள் எம்மாவூர் சென்று சேர்ந்தபோது, இயேசு அவர்களை விட்டுப் புறப்படத் தொடங்குகின்றார். (அவர் யார்மீதும் தம்மை ஒருக்காலும் வற்புறுத்துவதில்லை.) இது சீஷர்களுக்கு மிக முக்கியமான வேளையாக உள்ளது. அவர்கள் இயேசுவைப் புறப்பட்டுச்செல்லுவதற்கு அனுமதித்தால், தாங்கள் உயிர்த் தெழுந்த கர்த்தரைக் கண்டதை அவர்கள் ஒருக்காலும் அறிந்தி ருக்கமாட்டார்கள்; ஆனால் அவர்கள் அவரை, அன்றிரவு தங்களுடன் தங்கியிருக்கும்படி வேண்டிக்கொண்டனர். இயேசு அவர்களுடைய இல்லத்திற்கு வருகின்றார்; அவர் உங்களுடைய இல்லங்களுக்கும் வர விரும்புகின்றார். அவர் கதவருகில் நின்று கொண்டு தட்டுகின்றார், உங்கள் குரலைக் கேட்பதற்கும் உங்கள் இருதயக் கதவுகள் திறக்கப்படுவதற்கும் உங்களுக்காக காத்திருக் கின்றார் (வெளிப்படுத்தின விசேஷம் 3:20).*

B. *ஒரு வீட்டின் உரிமையாளர், விருந்தின்போது உபசரிப்பாளராக இருப்பது வழக்கம், ஆனால் அவர்கள் அந்தப்பணிப்பொறுப்பை நிறைவேற்றும்படி இயேசுவிடம் கேட்டுக்கொண்டனர். அவர் (இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் செய்திருந்தது போன்று: 9:16; 22:19) அப்பத்திற்காக நன்றிசெலுத்தியபோது, அவர் செய்கின்ற செயலானது சிலவகையில் அவர்களின் இருதயங்களில் பேசுகிறது, அவர்கள் அவரை அடையாளம் கண்டு கொள்கின்றனர் (24:35). இவர் இயேசுதான்! இவர் மரித்திருக்கவில்லை, ஆனால் உயிருடன் இருக்கின்றார்!*

C. *உடனடியாக அவர் மறைந்துவிடுகின்றார்! இயேசு இனியும் மாம் சத்தினால் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதில்லை என்பதை அவர்கள் தம்மை அறிய வேண்டும் - நாமும் அவரை அறிய வேண்டும் - என்று அவர் விரும்பினார். அவர் எவ்விடத்திலும் இருக்க முடியும்; அவர் எல்லா இடத்திலும் இருக்க முடியும் (மத்தேயு 28:20). நம்பிக்கையானது மிகவும் தாழ்விடத்தில் இருக்கும்போது, அவர் உங்கள் அருகில் இருப்பார்!*

IV. *நம்பிக்கை ஒத்திகைபார்க்கப்பட்டது (24:33-35).*

A. *சுவிசேஷத்தின் செய்தி பகிர்ந்துகொள்வதற்கானதாக உள்ளது! இந்த மனிதர்கள் [பிறரிடம்] கூறுவதற்கு வரலாறு ஒன்றைக் கொண்டிருந்தனர்! அவர்கள் இயேசுவைக் கண்டிருந்ததை மற்ற சீஷர்களிடத்தில் கூறுவதற்காக, நள்ளிரவு நேரத்தில் எருசலேமுக்குத் திரும்புவதற்காக, ஏழு மைல்கள் தூரம் ஓடிச்சென்றனர்!*

B. *பின்பு இயேசு அவர்களின் மத்தியில் அறைவீட்டில் தரிசனமா கின்றார் ... மற்றும் சீஷர்கள் நம்பி இணங்கியிருக்க வேண்டும். இரு*

*தனிநபர்கள் தங்கள் நம்பிக்கை மரித்துப்போன நிலையில் “எம்மா ஊருக்குச் செல்லும் சாலையில்” தங்கள் பயணத்தைத் தொடங்கி தங்கள் நம்பிக்கை உயிர்ப்பிக்கப்பட்டவர்களாய் அப்பயணத்தை முடித்த இவ்விடத்தில் நமது பாடத்தை நாம் முடிக்க வேண்டும்!*

*முடிவுரை*

A. *சாதாரண அப்பத்துடன் சாதாரண வீடு ஒன்றில் நடைபெற்ற இந்தச் சாதாரண உணவு வேளையின்போது, அசாதாரண விஷயங்கள் நடைபெற்றன! கர்த்தர் உங்களுக்கென்று வைத்திருக்கின்ற ஆசீர்வாதங்களுக்கு “உங்கள் கண்களைத் திறந்து” அவருக்கு நீங்கள் பதில்செயல் செய்தால் மாத்திரமே, இந்தநாள் உங்களுக்கு ஒரு அசாதாரணமான நாளாயிருக்கக்கூடும்!*

B. *அப்பத்தைப் பற்றி அறிந்திருத்தல் மாத்திரம் உங்கள் பசியைத் திருப்தியடையச் செய்யாது. தண்ணீரைப் பற்றி அறிந்திருத்தல் மாத்திரம் உங்கள் தாகத்தைத் தணித்துவிடாது. தாவர இயலைப் பற்றி அறிந்திருத்தல் மாத்திரம் உங்கள் நாசிகளை மலர்களின் நறுமணத்தினால் நிரப்பிவிடாது. உயிர்த்தெழுதலைப் பற்றி அறிந்திருத்தல் மாத்திரம் உங்களுக்கு நித்தியத்திற்குமான வாழ்வின் நம்பிக்கையை அளித்துவிடாது. உயிர்த்தெழுதலில் விசுவாசம் கொள்ளுங்கள் மற்றும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலம் உங்கள் விசுவாசத்தைக் காண்பியுங்கள் (ரோமர் 6:3, 4)! இந்த நாளை உங்களுக்கு ஒரு அசாதாரணமான நாளாக்கும்படிக்குக் கர்த்தரை அனுமதியுங்கள்!*

# 4

# யோவான்: கிறிஸ்து, தேவகுமாரன்

***தலைப்பு***

*யோவான் சுவிசேஷம் அதை எழுதியவரின் பெயரைக் கொண் டுள்ளது. "இயேசுவுக்கு மிகவும் அன்பாயிருந்த சீஷனான" (21:20, 24), யோவான் என்பவரே இதன் எழுத்தாளர் என்று உள்ளான மற்றும் புறம்பான சாட்சியங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன. "யோவான்" என்பது, "யொகோவா கிருபையுள்ளவராய் இருந்திருக்கின்றார்" என்று அர்த்தப்படும் ஒரு எபிரெயச் சொல்லின் சுருக்க வடிவமாகும்.*

***பின்னணி***

*இது கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய நான்காவதும் இறுதியானதுமான விவர மாகும். இயேசுவின் வாழ்வுபற்றி நான்கு தனித்தனி விவரங்கள் உள்ளது ஏன்? பழைய ஏற்பாடு அவ்வப்போது ஒரே நிகழ்ச்சி பற்றிய இரு விவரங்களைக் கொண்டுள்ளது, ஆனால் நான்கு விவரங்கள் என்பது வேதாகமத்தில் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. தேவன் நான்கு விவரங்களை நமக்குக் கொடுத்தது ஏன் என்பதற்கு இங்கு சில சாத்தியக் கூறுகள் உள்ளன: (1) இவ்விவரங்கள் கிறிஸ்துவின் வாழ்வினுடைய முக்கியத்துவத்தைக் காண்பிக்கின்றன. (2) இவைகள் இவ்விவரங்களின் உண்மைத்தன்மையைச் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நிலை நாட்டுகின்றன. இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் ஒரு விஷயத்தை "நிலைவரப்படுத்துகின்றனர்"; நான்கு என்பது இதைவிட மேலானதாக உள்ளது. (3) இயேசுவின் பன்முக இயல்பின் காரணத்தினால், அவரை ஒரே எழுத்தாளர் ராஜாவாகவும், ஊழியராகவும், மனுஷகுமாரனாகவும், தேவகுமாரனாகவும் சித்தரிப்பதில் நியாயமாய்ச் செயல்பட்டிருக்க இயலாது.*

*யோவான் என்பவர் ஒரு மீனவராக இருந்தார் (மாற்கு 1:19, 20; லூக்கா 5:10), இவர் இயேசுவைப் பின்பற்றும்படி அவரால் அழைக்கப்பட்டார். யோவான் பன்னிருவரில் ஒருவராகத் தேர்வுசெய்யப்பட்ட பின்பு (மத்தேயு 10:2), அவர் உள்வட்டத்தில் இருந்த மூவரில் ஒருவரானார் (மாற்கு 5:37-40; 9:2; 14:33). அவர் இயேசுவுடன் விசேஷித்த உறவு கொண்டிருந்தார் (21:20, 24) மற்றும் இயேசு சிலுவையில் மரித்தபோது அவரது தாயாரைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை இயேசு அவரிடத்தில் ஒப்புவித்தார் (19:25-27). பிற்பாடு யோவான் எபேசுவில் ஊழியம் செய்தார் என்று பலமான ஒரு பாரம்பரிய வரலாறு கூறுகிறது; இது, எபேசுவுக்கு மிகச்சமீபமாய் ஆசியாவின் கடற்கரையோர மாய் இருந்த பத்முதீவிற்கு (வெளிப்படுத்தின விசேஷம் 1:9), யோவான் நாடுகடத்தப்பட்டிருந்த நிகழ்ச்சியுடன் ஒத்துப்போகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 2:1ஐக் கவனிக்கவும்). அதே பாரம்பரியம், யோவான் தமது முதிர் வயதில் எபேசுவுக்குத் திரும்பினார் என்றும் அங்கே அவர் மரித்தார் என்றும் கூறுகிறது. யோவான் சுவிசேஷம் எபேசுவில் எழுதப்பட்டது என்று யூகிப்பது*

நியாயமானதாகவே உள்ளது.

அனேகமாக 90களில் யோவான் இப்புத்தகத்தை எழுதியிருக்கக்கூடும், இது மத்தேயு, மாற்கு, மற்றும் லூக்கா ஆகியோரால் சுவிசேஷநூல்கள் எழுதப்பட்டதற்கு மிகவும் பிற்பட்ட காலமாகும். ஒப்பீட்டு சுவிசேஷப் புத்தகங்கள் ஏற்கனவே முப்பது அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான ஆண்டுகள் சுற்றுக்கு விடப்பட்டிருந்தபடியால், அவர்களின் பாடக் கருத்துகள் பலவற்றை யோவான் மீண்டும் எழுதவில்லை. அவர் கொடுத்த விவரங்கள் பெரும்பாலும் இந்த மூன்று சுவிசேஷ நூல்களுக்குத் துணைக்கருத்தை அளிப்பவையாய் இருக்கின்றன.

யோவான் எழுதிய சுவிசேஷம் தனக்கென்று விசேஷித்த வலியுறுத்தத்தைக் கொண்டுள்ளது. பல தவறான கருத்துக்கள் எழும்பியிருந்தன (கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தின் மீதான பின்னணிக் குறிப்புகளில் "மதநம்பிக்கையின்மை என்ற தத்துவம்" மீதான குறிப்புகளைக் காணவும்). மாம்சம் யாவும் துன்மார்க் கமானது என்று சிலர் போதித்தனர். ஆகையால், அவர்கள் பூமியின்மீது நடந்த இயேசு, "கிறிஸ்துவாக" இருந்திருக்க முடியாது என்று முடிவுசெய்தனர். அவர்கள், அவர் இயேசுவல்ல, ஆனால் ஆவியாக இருந்த கிறிஸ்து மாம்சத்தில் இருந்த இயேசுவைக் கட்டுப்படுத்தினார் என்று போதித்தனர் (1 யோவான் பற்றிய குறிப்புகளைக் காணவும்). ஆகையால் யோவான், "அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (1:14) என்று நமக்குக் கூறுவதின் மூலம் தமது விவரத்தைத் தொடங்கினார்.

யோவான் சுவிசேஷம் இயேசுவின் தெய்வீகத்தின்மீது வலியுறுத்தம் செய்கிறது; அவர் இயேசுவை "தேவகுமாரன்" என்று முன்வைக்கின்றார். 20:31ல் யோவான் தமது சுவிசேஷ விவரத்தை எழுதுவதற்கான காரணத்தைத் தருகின்றார்: "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது." இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, யோவான் இரண்டு முக்கியமான வலியுறுத்தங்களைக் கொண்டுள்ளார்: (1) "நானே" என்று வரும் ஏழு கூற்றுக்களில் பொதியப்பட்டுள்ள இயேசுவின் உரிமைகோருதல்கள் (6:35; 8:12, 58; 10:11; 11:25; 14:6; 15:1), மற்றும் (2) இயேசுவின் அற்புதங்கள். "அடையாளங்கள்" என்பது அற்புதங்களுக்கு யோவானுடைய விசேஷித்த வார்த்தையாக உள்ளது: அற்புதங்கள் என்பவை இயேசுவின் உரிமை கோருதல்கள் உண்மையாய் இருந்தன என்பதற்குத் தேவனிடத்தில் இருந்துவந்த அடையாளங்களாய் இருந்தன (2:23; 3:2; 4:54; 6:2, 14). இயேசுவின் ஏழு அடையாளங்கள் யோவான் சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன (2:1-4; 4:46-56; 5:1-9; 6:14, 26, 30; 6:16-21; 9; 11).

யோவானுடைய விவரத்தில், கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தின் நிரூபணத் திற்காகக் கொடுக்கப்படும் சரியான பதில்செயல் விசுவாசமாக இருக்கிறது. "விசுவாசித்தல்" என்ற வார்த்தை இந்தப் புத்தகத்தில் ஏறக்குறைய நூறு முறைகள் காணப்படுகிறது. நாம் விசுவாசிக்கவில்லையென்றால், நமக்கு நம்பிக்கை எதுவும் கிடையாது. இயேசு, "நானே அவர் என்று விசுவாசிக்காவிட்டால் நீங்கள் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று கூறினார் (8:24). யோவான் யாருக்கு இதை எழுதினாரோ, அவர்களைப் பொறுத்தமட்டில், அவரது விவரம், எல்லாக்

*காலத்திலும் வாழ்கின்ற எல்லா மனிதர்களுக்குமான "உலகளாவிய சுவிசேஷம்," என்று அழைக்கப்பட்டுள்ளது.*

*இயேசுவின் சொந்த ஊழியம் மூன்று ஆண்டுகள்வரையில் இருந்தது என்று பொதுவாகக் கூறப்படுகிறது. இது இயேசுவின் ஊழியத்தின்போது நடைபெற்றதாகக் குறைந்தபட்சம் மூன்று பஸ்கா பண்டிகைகளைப் பற்றி யோவான் குறிப்பிடுகின்றார் என்ற உண்மையின் அடிப்படையிலான கல்வித்துவமான யூகமாக இருக்கிறது (2:23; 6:4; 13:1).*

***வரைகுறிப்பு***

*அறிமுகம் (1:1-18).*

- I. *தேவகுமாரனும் அவரது வெளியரங்கமான ஊழியமும் (1:19-12:58).*
- II. *தேவகுமாரனும் அவரது சீஷர்களும் (13-17).*
  - A. *இணையற்ற பிரியாவிடை உரை (13-16).*
  - B. *மறக்கப்பட்ட கர்த்தருடைய ஜெபம் (17).*
- III. *தேவகுமாரனும் எல்லா மனிதர்களும் (18-21).*
  - A. *கிறிஸ்து காட்டிக்கொடுக்கப்படுதலும் விசாரணைகளும் (18:1-19:16).*
  - B. *கிறிஸ்துவின் மரணமும் அடக்கமும் (19:17-42).*
  - C. *கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் விளக்கமும் (20; 21).*

***யோவான் சுவிசேஷத்தில் இருந்து பாடங்கள்***

*யோவான் சுவிசேஷ விவரமானது எளிமையானதாகவும் ஆழமிகுந்ததாகவும் உள்ளது. கிரேக்க மொழியில் யோவான் சுவிசேஷப் புத்தகமானது, ஆரம்பநிலை கிரேக்க மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க பயன்படுத்தப்படுமளவுக்கு மிகவும் எளிமையானதாக உள்ளது. இதற்கு மறுபுறத்தில், இப்புத்தகம் பல வழிகளில் சுவிசேஷ விவரங்கள் எல்லாவற்றிலும் பெரிதும் ஆழமிகுந்ததாக உள்ளது. இது வாசகரின் வாழ்நாள் முழுவதற்கும் அவரது கவனத்தைப் பற்றியிழுத்து வைக்கக்கூடியதாக உள்ளது.*

*யோவான் 3ல் உள்ள புதுப்பிறப்புப் பற்றிய போதனையானது ஒப்பீட்டு சுவிசேஷங்களில் காணப்படாததும் சிந்தனையைத் தூண்டும் பகுதிகளில் ஒன்றாகவும் உள்ளது. "மறுபடியும் பிறத்தல்" என்பது மனம் மாறுதல் செயல் முறையைப் பற்றிப் பேசும் இன்னொரு வழியாக உள்ளது என்று 1 பேதுரு 1:22, 23, மற்றும் பிற வசனப்பகுதிகளில் இருந்து காண்பித்தல் சுலபமானதாக உள்ளது; இது அடிப்படையில் பேதுருவின் பின்வரும் அறிவுறுத்துதல் போன்றதாகவே உள்ளது: "நீங்கள் மனந்திரும்பி, ... ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (நடபடிகள் 2:38). இருப்பினும், புதிய பிறப்பு பற்றிய கருத்தை அவ்வகையில் கடந்து சென்றுவிடுதல் என்பது இந்தச் சொற்றொடரில் மறைந்துகிடக்கும் அடிப்படையான மாற்றத்தினுடைய செயல்தாக்கத்தைத் தவறவிடுதலாக உள்ளது. யோவான் எழுதிய முதல் நிருபமானது, யோவான் 3க்கு மிகச் சிறந்த விளக்கவுரையாக உள்ளது, அதில் அவர் மறுபடியும் பிறத்தலின் விளைவு பற்றி அடிக்கடி பேசுகின்றார்: 1 யோவான் 2:29; 3:9; 4:7; 5:1, 4.*

*மத்தேயு, மாற்கு, மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்களில் காணப்படாததாக உள்ள இன்னொரு பகுதி யோவான் 14-17 ஆகும். இந்தப் பகுதியானது,*

*இயேசுவின் சீஷர்களை அவரது மரணத்திற்கு ஆயத்தப்படுத்துவதற்காக, அவரால் அவர்களுக்குத் தரப்பட்ட "இணையற்ற பிரியாவிடை உரை"யுடன் தொடங்குகிறது. இது 17ம் அதிகாரத்தில் இயேசுவின் அற்புதமான ஜெபத்தில் உச்சக்கட்டத்தை அடைகிறது: இது அவர் தமக்காக ஜெபித்த ஜெபமாக (வசனங்கள் 1-5), அப்போஸ்தலர்களுக்காக ஜெபித்த ஜெபமாக (வசனங்கள் 6-19), மற்றும் எல்லா விசுவாசிகளுக்காகவும் ஜெபித்த ஜெபமாக (வசனங்கள் 20-26) உள்ளது. இயேசுவின் ஜெபத்தில், வசனங்கள் 20-23ல் காணப்படுகிற ஒருமைப்பாடு என்ற விஷயத்திற்குப் பதில் அளிக்க நாம் நமது பங்கைச் செய்வது அவசியமாக உள்ளது!*

---

## மேல் துண்டில் இருந்து பாடங்கள் (யோவான் 13:1-17)

*இயேசு தமது வாழ்விற்கான காலஅட்டவணையைத் தெளிவாக அறிந்திருந்தார். அவரது சொந்த ஊழியத்தின்போது, அவரது காலம் இன்னும் வரவில்லை என்பது திரும்பத்திரும்ப வலியுறுத்தப்பட்டது (2:4; 7:30; 8:20). இப்போது அவரது காலம் வந்திருந்தது (12:23; 13:1; 17:1). அவர் தமது மரணத்திற்கு முன்பு தமது சீஷர்களிடத்தில் நிறைய விஷயங்களைக் கூற வேண்டியிருந்தது! இருப்பினும், அவரது மாபெரும் பிரியாவிடை உரைக்கு (14-17) அவர்கள் தயாராவதற்கு முன்பு, அவர்களுக்கு மேல் துண்டின் பாடங்கள் அவசியமாயிருந்தன.*

I. *தாழ்மையின் பாடம் (13:1-5).*
   A. *இயேசு மேல்துண்டை எடுத்துக்கொள்கின்றார்.*
      1. *சீஷர்கள் ஒருவர் மற்றவரின் கால்களைக் கழுவுவதற்குப் பதிலாக, தங்களுக்குள் யார் பெரியவர் என்று வாக்குவாதம் செய்து கொண்டிருந்தனர் (லூக்கா 22:24).*
      2. *இயேசு அவர்களின் பாதங்களைக் கழுவத்தொடங்குகையில் அவர் ஒரு பணியாளர்/வேலைக்காரர் ஆனார் (பிலிப்பியர் 2:7, 8; மத்தேயு 20:28; லூக்கா 22:27).*
   B. *நாமும்கூட, "மேல்துண்டை எடுத்துக் கொள்ள வேண்டும்."*
      1. *உலகமானது மேன்மைப்படுத்தப்படுதலைத் தேடுகிறது; கிறிஸ்தவர் சேவை செய்வதற்கு வாய்ப்பை நாடுகின்றார்.*
      2. *நம்மையே நாம் தாழ்த்தக் கற்றுக்கொள்ள வேண்டும். இயேசு, "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் படுவான்" என்று கூறினார் (மத்தேயு 23:11, 12)!*

II. *பரிசுத்தத்தின் பாடம் (13:6-11).*
   A. *இயேசு பேதுருவின் பாதங்களைக் கழுவியபோது, உடல்ரீதியான சுத்தத்தை மாத்திரமல்ல, ஆனால் ஆவிக்குரிய வகையிலான சுத்தத்தையும் வலியுறுத்தினார்.*
      1. *10ம் வசனத்தின் முடிவுப்பகுதியானது உடல்ரீதியான சுத்தத்தையல்ல, ஆனால் ஆவிக்குரிய பரிசுத்தத்தைக் குறிப்பிடுகிறது என்பது தெளிவு (வசனம் 11ஐக் கவனிக்கவும்).*
      2. *இயேசு கால்களைக் கழுவிவிட்டது மட்டுமின்றி; உள்ளாகச்*

சுத்தமாயிருத்தல் எப்படி என்பது பற்றிய பாடம் ஒன்றைப் போதிக்கவும் செய்தார்.

a. நாம் (இயேசுவின் இரத்தத்தில்) கழுவப்பட்டிருந்தால் ஒழிய, அவரோடு நமக்கு எந்த ஐக்கியமும் கிடையாது (நடபடிகள் 22:16; வெளிப்படுத்தின விசேஷம் 1:5).

b. (இரத்தத்தில்) ஒருமுறை "முழுகின" பின்பு, இன்னும் தொடர்ந்து "பாதங்கள்" கழுவப்படுவது நமக்குத் தேவை யாய் இருக்கும் (1 யோவான் 1:9-2:1).

B. நாம் சுத்தமாயிருக்க வேண்டுமென்றால், நாம் கீழ்ப்படிதலுடன் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சந்தர்ப்பப் பொருள் வலியுறுத்துகிறது.

1. பேதுருவின் மேட்டிமையானது அவர் இயேசுவுக்குக் கீழ்ப்படி யாதபடி தடுத்தது. நாம் இரத்தத்தில் தொடர்ந்து கழுவப்பட வேண்டும் என்றால், 1 யோவான் 1:7ல் விவரிக்கப்பட்டுள்ள கீழ்ப்படிதலுள்ள வாழ்வுமுறைப்படி நாம் வாழ வேண்டும்: "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங் களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்."

2. இது பேதுருவினிடத்தில் ஒரு மனப்பதிவை ஏற்படுத்தியது (வசனம் 9ஐக் கவனிக்கவும்; 1 பேதுரு 5:5, 6)!

III. சந்தோஷத்தின் பாடம் (13:12-17).

A. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் "கால்களைக் கழுவிவிட" மன விருப்பமாய் இருக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்தினார்.

1. இது ஆராதனை ஊழியத்தின்போது நடைபெறவேண்டிய சடங்காச்சார நிகழ்ச்சி என்று குறிப்பிடுவதில்லை.

a. இப்படிப்பட்ட சடங்காச்சாரம் ஒன்று இருந்ததென்று புதிய ஏற்பாட்டிலோ அல்லது ஆதிக்கிறிஸ்தவர்களின் எழுத்துக்களிலோ பதிவு எதுவுமில்லை.

b. சபையுடன் தொடர்புடைய வகையில் கால்களைக் கழுவுதல் என்பதற்கான ஒரே குறிப்பு 1 தீமோத்தேயு 5:10ல் மாத்திரம் உள்ளது.

2. இது அவரைப் பின்பற்றுபவர்கள், பிறருக்குச் சேவை செய்வதில், அது மிகவும் அற்பமான வேலையாக இருப்பினும் கூட அதைச் செய்யத் தயாராய் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

B. இதுவே சந்தோஷத்திற்கான வழி என்று இயேசு கூறினார். வசனம் 17ஐக் கவனிக்கவும்: "நீங்கள் இவைகளை அறிந்தி ருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்."

1. உலகமானது அதிகமாகப் பெற்றுக்கொள்வதில், அதி கமாக வைத்திருப்பதில், மற்றும் ஊழியம் கொள்வதில் சந்தோஷத்தை நாடுகிறது. ஆனால் இயேசு, கொடுத்தல்,

தியாகம் செய்தல், மற்றும் ஊழியம் செய்தல் ஆகியவற்றின் மூலமாகவே சந்தோஷம் வருகிறது என்று கூறினார்.

2. தாங்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும் மற்றவர்கள் தங்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றும் நினைக்கின்ற மக்கள்தாம் மிகவும் பரிதாபத்திற்குரியவர்கள்.

*முடிவுரை*

*நீங்கள் கிறிஸ்துவுடனும் அவர் உங்களுக்கு அளிக்கும் இரட்சிப்பிலும் பங்கு பெற விரும்பினால், நீங்கள் உங்களுக்குள் ஒரு ஊழியம் செய்யும் இருதயத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் கிறிஸ்துவினால் சித்தரிக்கப்படும் எண்ணப்போக்கை நடைமுறைப்படுத்த வேண்டும்: ''ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் ...'' (பிலிப்பியர் 2:3-7).*

*வேலையாளாக/ஊழியக்காரனாக இருத்தல் என்பது சுலபமானதல்ல, ஆனால் இயேசு நம் ஒவ்வொருவரையும் "அவரது மேல்துண்டை எடுத்துக்கொண்டு" அவரைப் பின்பற்றும்படி அறைகூவல் விடுக்கின்றார்!*

# 5

# நடபடிகள்: சபை நிலைநாட்டப்படுதலும் பரவுதலும்

***தலைப்பு***

*பெரும்பான்மையான பதிப்புகளில் இப்புத்தகத்தின் தலைப்பு "அப்போஸ்தலர்களின் நடபடிகள்" என்றுள்ளது. இருப்பினும், இது எல்லா அப்போஸ்தலர்களின் எல்லா நடபடிகளையும் தருவதில்லை, ஆனால் சில அப்போஸ்தலர்களின் சில நடபடிகளை மாத்திரம் தருகிறது. குறிப்பாக, இப்புத்தகத்தின் முதல் பகுதி பேதுருவின் நடபடிகளில் சிலவற்றையும் கடைசிப் பகுதி பவுலின் நடபடிகளில் சிலவற்றையும் பதிவுசெய்துள்ளது.*

***பின்னணி***

*நடபடிகள் புத்தகம் பொதுவாக வரலாறு என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது; புதிய ஏற்பாட்டில் இவ்வகையிலான புத்தகம் இது ஒன்றுதான் உள்ளது. பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் தொடங்கி எஸ்தரின் சரித்திரம் வரையிலான புத்தகங்களைப் போன்று, புதிய ஏற்பாட்டில் மத்தேயு சுவிசேஷம் தொடங்கி நடபடிகள் வரையிலான புத்தகங்கள் வரலாற்றுப் பணியாற்றிய சட்டக அமைவை அளிக்கின்றன. பவுலின் நிருபங்களில் பல, இரண்டாம் மற்றும் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணங்கள் மற்றும் பவுல் ரோமாபுரியில் முதன்முறை சிறைவைக்கப்படுதல் ஆகிய காலகட்டங் களுடன் பொருந்துகின்றன.*

*லூக்கா சுவிசேஷம் மற்றும் நடபடிகள் புத்தகம் ஆகியவற்றின் முன்னுரைகள் (லூக்கா 1:1-4; நடபடிகள் 1:1) நடபடிகள் புத்தகம், லூக்கா சுவிசேஷத்தின் தொடர்ச்சியாக இருப்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இந்த இரண்டு புத்தகங்களுமே மருத்துவரான லூக்காவினால் எழுதப்பட்டன. நீங்கள் பவுலின் பயணங்கள் பற்றிப் படிக்கும்போது, மருத்துவர் லூக்காவும் பவுலின் குழுவினருடன் சேர்ந்திருந்தார் என்று சுட்டிக் காண்பிக்கும் "நாங்கள்" வசனப்பகுதிகளைத் தேடிப்பாருங்கள் (லூக்கா சுவிசேஷத்தின் குறிப்புகளைக் காணவும்).*

*லூக்கா சுவிசேஷமும் நடபடிகள் புத்தகமும் ஒன்றின்மீது இன்னொன்று கவிந்துள்ளன. லூக்கா சுவிசேஷம் இயேசு பரத்துக்கேறுதலுடன் முடிகிறது. நடபடிகள் புத்தகம் பரத்துக்கேறுதலுக்குச் சற்றுமுன், இயேசு இன்னும் தமது சீஷர்களுடன் இருந்து, நடபடிகள் 2ன் நாடகத்துவமான நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியைத் தரும் நிகழ்ச்சியில் தொடங்குகிறது.*

*நடபடிகள் 2 வேதாகமத்தில் அச்சாணி போன்ற மைய அதிகாரமாகும். ராஜ்யம், அல்லது சபை, என்பது பெலத்தோடே வரும் என்று இயேசு கூறியிருந்தார் (1:6-8; மாற்கு 9:1). இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு வந்த, யூதர்களின் முதல் பெந்தெகொஸ்தே நாளன்று, அந்த பெலம் வந்தது (2:1-4) மற்றும் ராஜ்யம் நிலைநாட்டப்பட்டது (2:47; கொலோசெயர் 1:13; எபிரெயர் 12:28). அந்த நாளில் பல தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றம் அடைந்தன (லூக்கா 24:46-49; ஏசாயா 2:2, 3; தானியேல் 2:44; யோவேல் 2:28முதல்; முதலியன.).*

*முதன் முறையாக சுவிசேஷம் அதன் பூரணத் தன்மையில் பிரசங்கிக்கப்பட்டது (2:14-36), மக்கள் இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது (2:37-41, 47), மற்றும் புதிய கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய சபையாக ஒன்றுகூடத்தொடங்கி செயல்பட்டனர் (2:42-47).*

*தொடக்கத்தில் இருந்தே, சபை நிலைநாட்டப்படுதலுக்கும் அது பரவுதலுக்கும் பரிசுத்த ஆவியானவரின் பணியானது முக்கியமானதாக இருந்தது. பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவருடைய/ ஆவியானவருக்குள் (1:5) ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டனர், இது அவர்களை அற்புதங்கள் செய்யக்கூடியவர்களாக்கிற்று (2:4முதல்.; 3:1-10முதல்.; 5:12). பின்பு அப்போஸ்தலர்கள், [பிற] கிறிஸ்தவர்களின் தலைகளின்மீது தங்கள் கைகளை வைத்து அவர்களுக்கு அற்புத வல்லமைகளைக் கொடுத்தனர் (6:5, 6, 8; 8:6, 7, 13-18முதல்.). இந்த அற்புதங்கள் இயேசுவைப் பற்றிய ஏவுதல் பெற்ற செய்திகளை உறுதிப்படுத்தின (மாற்கு 16:20; எபிரெயர் 2:4). பரிசுத்த ஆவியானவரின் இந்த அற்புதமான கிரியையுடன் கூடுதலாக, தண்ணீருக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் யாவருக்கும், பரிசுத்த ஆவியானவர் ஒரு வரமாக வாக்களிக்கப்பட்டார் (2:38). அற்புதமற்ற இந்த வரமானது வெற்றிகர மான கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு இன்றியமையாததாக இருக்கிறது (ரோமர் 8:13).*

*ஏவுதல்பெற்ற பிரசங்கியார்கள் [அப்போஸ்தலர்கள்] முதலில் எருசலேமிலும் (1-7), பின்பு எருசலேமைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் (8-12), பின்பு "பூமியின் கடைசி பரியந்தமும்" (13-28) சாட்சிகளாய் இருந்தனர். இவற்றில் முதல் இரண்டு பிரிவுகளில், எருசலேம் நகரம் கவனக்குவிப்பிற்குரிய இடமாய் இருந்தது. 13ம் அதிகாரம் தொடங்கி, அந்தியோகியா நகரம் நடவடிக்கைகளின் மையமாயிற்று.*

*நடபடிகள் புத்தகம் கி.பி. 62ல் எழுதப்பட்டது என்று சற்று உறுதிப்பாட்டுடன் தேதியிடப்பட முடியும் (லூக்கா சுவிசேஷத்திற்கான குறிப்புகளைக் காணவும்). இந்தப் புத்தகம் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் வரலாற்றைக் கூறிமுடிக்கிறது. இப்புத்தகம் பற்றிய மிகமேன்மையான தொகுப்புரை 1:6-8ல் காணப்படுகிறது.*

**வரைகுறிப்பு**

*அறிமுகம் (1).*

I. *சபை நிலைநாட்டப்படுதலும் தொடக்க காலத்தில் அது பரவுதலும் (2-12).*
   A. *எருசலேமில் சபை (2-7).*
   B. *பலஸ்தீனத்தில் சபை (8-12).*

II. *நாகரீகம் அடைந்திருந்த உலகம் முழுவதிலும் சபை பரவுதல் (13-28).*
   A. *பவுலின் முதல் சுவிசேஷப் பயணம் (13; 14).*
   B. *எருசலேமில் ஆலோசனை (15:1-35).*
   C. *பவுலின் இரண்டாவது சுவிசேஷப் பயணம் (15:36-18:22).*
   D. *பவுலின் மூன்றாவது சுவிசேஷப் பயணம் (18:23-21:14).*
   E. *பவுல் எருசலேமில் கைதுசெய்யப்படுதலும் செசரியாவில் சிறையிலிடப்படுதலும் (21:15-26:32).*

F. *பவுலின் ரோமாபுரிப் பயணமும் இரண்டு ஆண்டுகள் சிறையிருத்தலும் (27; 28).*

***நடபடிகள் புத்தகத்தில் இருந்து பாடங்கள்***

*இந்தப் புத்தகத்தின் இருதயம்போன்ற மையப்பகுதியானது இதில் உள்ள பிரசங்கங்களில் இருக்கிறது. நடபடிகள் 2ல் பேதுருவின் நிபுணத்துவம் வாய்ந்த உரையில் தொடங்கி ஒவ்வொரு பிரசங்கமும் "சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை" (1 கொரிந்தியர் 2:2) எவ்வாறு உயர்த்துகின்றன என்று காண்பதற்கு அவற்றை கவனமாய் வாசியுங்கள். அப்போஸ்தலர்கள் யூதர்களின் கூட்டத்திற்குப் பிரசங்கித்த போது கையாண்ட அணுகுமுறைக்கும், நடபடிகள் 17ல் கிரேக்கத் தத்துவஞானிகளுக்கு முன்பாக பவுல் நின்றபோது கையாண்ட அணுகு முறைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் கவனியுங்கள். (கிறிஸ்தவ மக்களுக்கு உரைக்கப்பட்ட ஒரு பிரசங்கத்தை, 20:17-35ல் காணவும்.)*

*நடபடிகள் புத்தகம் "மனமாற்றங்களின் புத்தகம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இதில் மக்கள் இயேசுவினிடமாய் மனமாற்றமடைந்த விவரங்கள் நிறைந்துள்ளது: பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்கள் (2), சமாரியர்கள் (8), எத்தியோப்பிய அலி [மந்திரி] (8), சவுல் (9; 22; 26), கொர்னேலியுவும் அவரது வீட்டாரும் (10; 11), லீதியாளும் அவளது வீட்டாரும் (16), சிறைச்சாலைக்காரர் (16), மற்றும் கொரிந்தியர்கள் (18). இந்த விவரங்கள் சில சிறுவிஷயங்களில் வேறுபட்டிருந்த போதிலும், இன்றியமையாத கருத்துக்கள் ஒன்றுபோலவே உள்ளன: அவர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அதை விசுவாசித்து, தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, ஞானஸ்நானப்படுத்தப்பட்டு, இவ்விதமாக அவர்கள் இயேசுவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டம் அடங்கிய சரீரமான சபையின் அங்கமாயினர் (20:28).*

*தொடக்ககால சபை மிக விரைவாக வளரச் செய்ததற்கான காரணிகளைக் கவனித்தல் என்பது நடபடிகள் புத்தகத்தைப் படிப்பதற்கு ஆர்வமிக்க வழியாக இருக்கிறது: பிரசங்கித்தலில் தைரியம், ஒவ்வொரு உறுப்பினரும் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுதல், தேவனைச் சார்ந்திருத்தல், முதலியன. விசேஷமாக ஜெபத்தைச் சார்ந்திருத்தல் பற்றிக் கவனியுங்கள்: 1:14; 2:42; 3:1; 4:24; 6:4; முதலியன.*

## *3,000 பேர் எவ்வாறு இரட்சிக்கப்பட்டனர் (நடபடிகள் 2)*

*நடபடிகள் 2ல் நாம் சபை நிலைநாட்டப்படுதல், முதல் சுவிசேஷப் பிரசங்கம், முதன்முதலாக மனம்மாறியவர்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளோம். இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்குத் தேவன் ஜாக்கிரதையுடன் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலகட்டமானது, பெரும்பான்மையான யூதமக்களைச் சென்றடையும்படியான காலமான, பெந்தெகொஸ்தே என்னும் அவர்களின் பண்டிகை நாளாயிருந்தது. பன்னிரு அப்போஸ்தலர்கள்தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களாயிருந்தனர் (1:26-2:1), இவர்களை இந்த கணத்திற்காகவே இயேசு தயார்ப்படுத்தியிருந்தார். தேவாலயம்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாயிருந்தது (லூக்கா 24:52, 53), அங்கு எவ்வித காட்சிப்படுதலும் உடனடியாகக் கவனத்தை ஈர்ப்பதாயிருந்தது.*

*இவ்வரலாறு பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் பெறுதலில் இருந்து தொடங்குகிறது (2:1-4). அப்போஸ்தலர்கள், அவர்கள் படித் தறியாத பல்வேறு பாஷைகளில் பேசினர் (2:6, 8, 11). கூட்டம் ஒன்று கூடிற்று, வாயடைத்து நின்றது (2:6, 7, 12). எல்லாம் தயாராயிருந்தது; பேதுரு முன்னே அடியெடுத்து வைத்தார் (மத்தேயு 16:18, 19). அந்த நாளில் "3000 பேர் எவ்வாறு இரட்சிக்கப்பட்டனர்" என்று காண்பதற்கு, நடந்த நிகழ்ச்சிகளின் தொடர்வரிசையை கவனியுங்கள்.*

I. *கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்பட்டதால் (2:14-36).*

 A. *ஒரு சில நாட்களுக்கு முன்பு இயேசுவை மறுதலித்திருந்தவர் இப்போது அவரை அறிவிக்கின்றார். "இயேசுவே தேவகுமார னாகிய கிறிஸ்து" என்பதே பேதுருவின் பாடக்கருத்தாக இருக் கிறது. அவரது நிபுணத்துவம் வாய்ந்த உரையைக் கவனியுங்கள்:*

 1. *அறிமுகம்.*
   a. *கவனிக்கும்படி அழைப்பு (வசனம் 14).*
   b. *அற்புதம் பற்றிய விளக்கம் (வசனங்கள் 15-21).*
   c. *ஆய்வு வாக்கியம் (வசனங்கள் 22-24). மூன்று நிரூபணங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன:*
     (1) *இயேசுவின் அற்புதங்கள் அவர் தெய்வீகமானவர் என்று நிரூபிக்கிறது (வசனம் 22; யோவான் 3:2ஐக் கவனிக்கவும்).*
     (2) *தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் அவர் தெய்வீக மானவர் என்று நிரூபிக்கிறது (வசனம் 23).*
     (3) *உயிர்த்தெழுதல் அவர் தெய்வீகமானவர் என்று நிரூபிக்கிறது (வசனம் 24). பிரசங்கத்தின் மையப் பொருள் இதைப் பற்றியதாக உள்ளது.*
 2. *உயிர்த்தெழுதல் முன்னுரைக்கப்பட்டிருந்தது (வசனங்கள் 25-31).*
   a. *தாவீது அரசர் தன்மைப் பெயர்ச்சொல்லைப் பயன் படுத்தி, மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுதலை முன்னு ரைத்திருந்தார் (வசனங்கள் 25-28).*
   b. *தாவீது தம்மைப்பற்றியே பேசியிருக்க முடியாது, ஏனெனில் அவரது உடல் இன்னமும் மரித்ததாகவும் புதைக்கப்பட்டதாகவும் இருந்தது (வசனம் 29).*
   c. *தாவீது, மேசியாவைப் பற்றித் தீர்க்கதரிசனம் உரைத்த போது, அடிக்கடி தன்மைப்பெயர்ச்சொல்லில் பேசினார். அவர் தம்மைப் பற்றிப்பேசியிருக்கவில்லையென்றால், அவர் கிறிஸ்துவைப்பற்றித்தான் பேசியிருக்க வேண்டும் (வசனங்கள் 30, 31).*
 3. *உயிர்த்தெழுதல் என்பது உண்மைநிலையாக உள்ளது (வசனங்கள் 32-35).*
   a. *அப்போஸ்தலர்களின் சாட்சியம் (வசனம் 32; 1 கொரிந்தியர் 15:1முதல். காணவும்.).*
   b. *அவர்கள் சாட்சியாயிருந்த அற்புதத்தின் நிரூபணம் (வசனங்கள் 33-35).*

4. முடிவுரை: இயேசுவே கிறிஸ்து என்பதற்கான ஆதாரம்; மறுக்கப்பட இயலாததாக உள்ளது (வசனம் 36)!

B. "இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன்" என்பது இரட்சிப்பின் அச்சாணியாக உள்ளது, இது எல்லாப் பிரசங்கங்களுக்கும் அச்சாணியாக இருக்க வேண்டும்!

II. கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வதால் (2:37).

A. அவர்கள் "இருதயத்தில் குத்தப்பட்டனர்"! அவர்கள் பேதுரு கூறியதை விசுவாசித்தனர் என்பது தெளிவு.

1. தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படுவதினால் விசுவாசம் வருகிறது (ரோமர் 10:17). தேவனுடைய வசனமானது இருதயத்தை வெட்டக்கூடிய பட்டயமாயிருக்கிறது (எபேசியர் 6:17; எபிரெயர் 4:12)!

2. மக்கள் இவ்விதமாகத் தொடப்படும்போது மட்டுமே சுவிசேஷம் இரட்சிப்புக்கான தேவபெலனாக முடியும் (ரோமர் 1:16)!

B. அவர்கள் "வாழ்வின் மாபெரும் கேள்வியை" கேட்டதன்மூலம் தங்கள் விசுவாசத்தைச் செயல்படுத்தினர்.

1. அது ஆத்துமாவைக் குறித்துச் செயல்படுவதாக உள்ளது.

2. அது நித்தியத்தைக் குறித்துச் செயல்படுவதாக உள்ளது.

III. கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதால் (2:38-41அ).

A. முதன்முறையாக, கிறிஸ்துவின் அதிகாரத்துடன் பதில் தரப்படுகிறது (வசனம் 38).

1. "நீங்கள் மனந்திரும்பி" - பாவத்தைக்குறித்த உங்கள் எண்ணப் போக்கை மாற்றி, உங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்ளத் தீர்மானியுங்கள்.

2. "ஒவ்வொருவரும்" - விதிவிலக்கு எதுவும் இல்லை.

3. "பாவமன்னிப்புக்கென்று" - உங்களை இருகூறாகக் கிழித்துக் கொண்டிருக்கும் குற்ற உணர்வை நீக்குவதற்கு.

4. "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே" - அவரது அதிகாரத்தி னால்.

5. "ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" - தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுங்கள்.

6. "அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" - நீங்கள் கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்குத் தேவனுடைய ஆவியானவர் உங்களுக்கு உதவுகின்றார்.

B. பேதுரு மேலும் புத்தி சொல்லுமளவுக்கு இது மிகவும் முக்கியமான தாக இருக்கிறது (வசனங்கள் 39, 40).

C. பின்பு, நேர்மையான இருதயம் கொண்டவர்கள் பேதுரு செய்ய வேண்டும் என்று கூறினதைச் செய்தனர் (வசனம் 41அ)!

IV. கிறிஸ்துவுக்கு உடனடியாகக் கீழ்ப்படிவதால் (வசனம் 2:41ஆ).

A. அவர்கள் அந்த நாளிலேயே ஞானஸ்நானம் பெற்றனர்.

B. என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் அறிந்தபின்பு நாளைத் தள்ளிப்போடாதீர்கள்!

V. *கிறிஸ்துவின் சபையுடன் சேர்க்கப்படுவதால் (2:41, 47).*

A. *அவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது, இவ்வித மாகக் கடந்தகாலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட்டனர், தேவன் தமது சபையில் அவர்களைச் சேர்த்துக்கொண்டார்.*

B. *புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கின்ற சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டமாகும். நீங்களும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலம் அந்த சபையின் அங்கமாக முடியும். தேவன் உங்களை சபையில் சேர்த்துக் கொள்வார், மற்றும் அவர் ஒரு தவறான சபையில் உங்களைச் சேர்க்கமாட்டார்.*

VI. *கிறிஸ்துவுடன் தொடர்ந்து செல்வதால் (2:42).*

A. *நாம் ஞானஸ்நானம் பெற்றபின்பு, நாம் எப்படி வாழவேண்டும் என்று கிறிஸ்து விரும்புகின்றபடி நாம் வாழவேண்டும் (1 கொரிந்தியர் 15:58; வெளிப்படுத்தின விசேஷம் 2:10).*

B. *நமது வாழ்வின் விசேஷித்த வெளிப்பாடுகளில் தொடர்ந்து கிறிஸ்துவைக் காண்பித்தல்:*

1. *"அப்போஸ்தலர்களுடைய உபதேசம்" - புதிய ஏற்பாட்டில் காணப்படும் உபதேசம்.*
2. *"அந்நியோந்நியம்" - சபையின் வாழ்விலும் ஊழியத்திலும் நமது இணைந்த பங்கேற்பு (காணிக்கை உட்பட).*
3. *"அப்பம் பிட்குதல்" - இந்த சந்தர்ப்பப்பொருளில் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றல். அதைப் புறக்கணிக்காதீர்கள் (எபிரெயர் 10:25).*
4. *"ஜெபம் பண்ணுதல்" - நமது கர்த்தருடன் நிரந்தரமாக உரையாடுதல் (1 தெசலோனிக்கேயர் 5:17).*

*முடிவுரை*

A. *அந்த நாளில் மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதை நினைத்துப்பார்த்தல் என்பது எவ்வளவு மன எழுச்சிக்குரியதாக உள்ளது! இருப்பினும், அந்த நாளில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கிருந்தனர். இன்னும் அதிகமானவர்கள் இரட்சிக்கப்படாதது ஏன்? அவர்கள் நாம் பேசியுள்ள மேற்கண்ட விஷயங்களைச் செய்திருக்கவில்லை!*

B. *அந்த மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டது போன்று இன்று - இன்றைக்கே - நீங்களும் இரட்சிக்கப்பட முடியும்!*

# 6

# ரோமர்: விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல்

### *தலைப்பு*

*இது பவுலின் முதல் நிருபமாக, அல்லது கடிதமாக உள்ளது. அவருடைய நிருபங்கள் யாவையும், அவற்றைப் பெற்றுக்கொள்பவர்களின் பெயர்களினாலேயே குறிப்பிடப்படுகின்றன. இந்தக் கடிதம் "ரோமாபுரியில் உள்ள தேவப்பிரியர்கள் யாவருக்கும்" அதிலும் குறிப்பாக "பரிசுத்தவான்களாய்," அல்லது கிறிஸ்தவர்களாய் இருந்தவர்களுக்கும் எழுதப்பட்டது (1:2).*

### *பின்னணி*

*பவுல் பதிமூன்று அல்லது பதினான்கு (எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்திற்கான குறிப்புகளை கவனிக்கவும்) கடிதங்களை எழுதினார். அவரது கடிதங்கள் சபைகளுக்கான கடிதங்கள் (ரோமர் - 2 தெசலோனிக் கேயர்) மற்றும் தனிநபர்களுக்கான கடிதங்கள் (1 தீமோத்தேயு - பிலேமோன் அல்லது எபிரெயர்) என்று பிரிக்க முடியும்.*

*ரோமருக்கு எழுதிய நிருபம் முதன் முதலாக எழுதப்பட்டது என்பதால் அல்ல, ஆனால் அது பவுலின் மிகச்சிறந்த எழுத்தாக்கம் என்பதாலேயே நிருபங்களில் முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது. பவுலின் மற்ற பல கடிதங்களைப்போல் இன்றி, ரோமருக்கு எழுதிய நிருபம் ஒரு சபைக் குழுமத்தின் குறிப்பிட்ட பிரச்சனைகளுக்குப் பதில் அளிப்பதில்லை; மாறாக, இது "வேரில் இருந்து கனி வரையில், கிறிஸ்தவத்தைப் பற்றிய உணர்வுப் பூர்வமான கூற்றாக" உள்ளது.*

*ரோமருக்கு எழுதிய நிருபத்தின் தொடக்கப்பகுதியும் முடிவுப்பகுதியும் (1:9-13; 15:22-32; 16:1, 23) இந்த நிருபத்திற்குப் பின்னணி சிலவற்றைத் தருகிறது. பவுல் அகாயாவில் (குறிப்பாக, கொரிந்து நகரத்தில்) இருந்தார். அவர் எருசலேமில் இருந்த ஏழைப் பரிசுத்தவான்களுக்கு நிதி சேகரித்தலை முடித்து இருந்தார், எனவே அது அவர் தமது மூன்றாவது ஊழியப் பயணத்தை முடித்திருந்த காலமாய் இருந்தது. பவுல் இந்தக் கடிதத்தை அனேகமாக, எருசலேமுக்குப் பயணமாவதற்கு முன்பு கொரிந்து நகரத்தில் தங்கியிருந்த மூன்று மாதங்களின்போது எழுதியிருக்கலாம் (நடபடிகள் 20:2, 3; ரோமர் 16:1ஐக் கவனிக்கவும் மற்றும் கெங்கிரேயா என்பது கொரிந்து நகரத்தின் முக்கிய துறைமுகமாய் இருந்தது என்பதையும் நினைவில் வைக்கவும்). இந்த நிருபத்தை எழுதிய காலம் கி.பி. 57ன் பிற்பகுதியாகவோ அல்லது 58ன் முற்பகுதியாகவோ இருக்கலாம்.*

*பவுல் ரோமாபுரிக்குச் செல்ல வேண்டும் என்று நீண்ட நாட்களாக விரும்பியிருந்தார் (நடபடிகள் 19:21ஐக் கவனிக்கவும்). முதலில் எருசலேமுக்கும், பின்பு ரோமாபுரிக்கும், அங்கிருந்து ஸ்பானியா நாட்டிற்கும் செல்ல வேண்டும் என்பதே அவரது திட்டமாய் இருந்தது. ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதியபோது, தாம் எருசலேம் சென்று சேருகையில் இறக்க நேரிடலாம் என்று அறிந்திருந்தார் (நடபடிகள் 20:22-*

*25; 21:13, 14). ஆகையால், எழுதுவதற்கு அவர் விருப்பநோக்கங்கள் பலவற்றைக் கொண்டிருந்தார்: அவர் ரோமாபுரிக்குப் பயணம் செல்ல நேர்ந்தால், இக்கடிதம் ஒரு பயனுள்ள பயணத்திற்குப் பாதை அமைப்பதாய் இருக்கும். இருப்பினும், அவர் அங்கு செல்வது தடைசெய்யப்பட்டால், இந்த நிருபமானது அவர் நிறைவேற்ற நம்பிக்கையாய் இருந்த பல விஷயங்களை நிறைவேற்றுவதாயிருக்கும் (1:11).*

*இப்புத்தகம் தன்னில்தானே இயல்பாக இரு பகுதிகளாகப் பிரிந் துள்ளது: முதல் எட்டு அதிகாரங்கள் "உபதேச" பகுதியாகவும் இப்புத்தகத்தின் இருதயம்போன்ற மையப்பகுதியாகவும் உள்ளன; கடைசி எட்டு அதிகாரங்கள் நடைமுறைப் பயன்பாட்டுப்பகுதியாக உள்ளன, இவை முதல் எட்டு அதி காரங்களில் முன்வைக்கப்பட்டுள்ள சத்தியத்துடன் தொடர்புடைய நடைமுறை விஷயங்களை உரைக்கின்றன (வரைகுறிப் பைக் காணவும்).*

*"விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல்" என்பதே இப்புத்தகத்தின் ஆய்வுக்கருத்தாகும். பவுல் 1:17ல் ஆபகூக் 2:4ஐ மேற்கோள் காட்டுவதன்மூலம் தனது ஆய்வுப்பொருளை உரைக்கின்றார்: "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி." முன்னதாக எழுதப்பட்ட ஒரு நிருபத்தில், கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் உள்ள சிந்தனைகள் பலவற்றை ரோமருக்கு எழுதிய நிருபமானது விரித்துரைக்கிறது (அந்தப் புத்தகத்திற்கான குறிப்புகளைக் காணவும்). ரோமருக்கு எழுதிய நிருபத்தின் சில பகுதிகள் புரிந்துகொள்ளக் கடினமானவைகளாக உள்ளன (2 பேதுரு 3:15, 16), ஆனால் இப்புத்தகமானது அதைப் புரிந்துகொள்வதற்கான போராட்டத்திற்கு மாபெரும் ஊக்குவிப்புப் பரிசுகளை அளிக்கிறது. ஒரு போதகர் வழக்கமாகக் கூறுகிறபடி: "நீங்கள் ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் புரிந்துகொண்டால், தேவன் உங்களைப் புரிந்துகொள்கின்றார்!"*

**வரைகுறிப்பு**

*அறிமுகம் (1:1-17).*

- I. *உபதேசரீதியான விஷயங்கள் (1:18-8:39).*
  - A. *ஆக்கினைத்தீர்ப்பு (1:18-3:20).*
    1. *புறஜாதியார்.*
    2. *யூதர்கள்.*
  - B. *நீதிமானாக்கப்படுதல் (3:21-5:21).*
  - C. *பரிசுத்தமாக்கப்படுதல் (6; 7).*
  - D. *மகிமைப்படுத்தப்படுதல் (8).*
- II. *நடைமுறைக்குரிய விஷயங்கள் (9-16).*
  - A. *விளக்கம் (9-11). விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல் ஒப்புரவாக்கப்பட்டது:*
    1. *இஸ்ரவேல் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தம்.*
    2. *தேவனுடைய உண்மைத்தன்மை.*
  - B. *நடைமுறைப் பயன்பாடு (12:1-15:13).*

*முடிவுரை (15:14-16:27).*

*ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்*

*விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல் என்ற உபதேசம் வேதாகமத்தில் மிகவும் ஆறுதல் அளிக்கும் ஒன்றாக உள்ளது. தேவன் பூரணமான கீழ்ப்படிதலுக்காகக் கண்ணோக்குவதில்லை (அவர் அப்படிச் செய்தாரென்றால், எல்லாரும் இழந்துபோகப்பட்டிருப்போம்: 3:23; 6:23). மாறாக, அவர் விசுவாசத் திற்காகக் கண்ணோக்குகின்றார்; அவர் நமது இருதயங்களில் விசுவாசத்தைக் கண்டார் என்றால், அதை அவர் நாம் நீதிமான்களாய் இருந்ததற்கான விஷய மாக எண்ணுகின்றார் (5:4). இருப்பினும், பவுல் "விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு" என்று போதிக்கவில்லை என்பதை வலியுறுத்த வேண்டும். அவர் கூறுகின்ற விசுவாசமானது கீழ்ப்படிதல் உள்ள விசுவாசமாகும் என்பதை அவர் இக்கடிதத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் குறிப்பிடுகின்றார் (1:5; 16:26). 10:16ல் அவர் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் என்ற கருத்துக்களை ஒன்றிற்குப்பதில் இன்னொன்றாகப் பயன்படுத்துகின்றார்.*

*ரோமருக்கு எழுதிய நிருபம் ஒரு அழகுமிகுந்த மோதிரத்திற்கு ஒப்பாக, 8ம் அதிகாரம் அம்மோதிரத்தில் உள்ள வைரமாக, வசனம் 28 அவ்வைரத்தில் இருந்து வெளிவரும் ஒளிக்கதிராக ஒப்பிடப்பட்டுள்ளது. ரோமர் 8:28 தேவனுடைய அருளிரக்கம் பற்றி வேதாகமத்தில் உள்ள மாபெரும் வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது. அது எல்லாவற்றையும் நன்மையானது என்று கூறுவதில்லை, ஆனால் தேவன் எல்லாவற்றையும் நன்மைக்கு ஏதுவாகச் செயல்படுத்துகின்றார் என்று கூறுகிறது. தேவன் ஜீவனுள்ளவராய் இருக்கின்றார் மற்றும் அவர் உலகத்தில் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் படியாகச் செயல்படுகின்றார்.*

*ரோமர் 12ஐக் காட்டிலும் வேதாகமம் முழுவதிலும் அதிகம் நடைமுறைக்கு உகந்தபகுதியாக வேறு எதுவும் இருப்பதில்லை. அதைக் கற்றுக் கொள்ளுங்கள்; பின்பு அதன்படி வாழுங்கள்!*

## *பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கின்றார் (ரோமர் 8)*

*நாம் ஞானஸ்நானம் பெறுகின்றபோது, தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியானவரை ஒரு வரமாகத் தருகின்றார் (நடபடிகள் 2:38; கலாத்தி யர் 4:6ஐக் காணவும்). இந்த வரம் கிறிஸ்தவர்களை அற்புதங்கள் செய்யக் கூடியவர்களாக்குதல் என்பதை நோக்கமாகக் கொண்டதல்ல (புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், எல்லாக் கிறிஸ்தவர்களும் இவ்வரத்தைக் கொண்டிருந்தனர், ஆனால் எல்லாரும் அற்புதங்கள் செய்யக் கூடியவர்களாய் இருந்ததில்லை). பரிசுத்த ஆவியானவரின் நோக்கம் என்ன? இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்குப் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கின்றார்?*

*புறம்பே இருக்கின்ற பாவிகள் கொண்டிராத சிலவற்றைக் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ளனர். கிறிஸ்தவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொன்றையும் செய்வதில்லை, ஆனால் அவர் சிலவற்றைச் செய்கின்றார். பிலிப்பியர் 1:19ல் பவுல் "ஆவியின் உதவி" என்பது பற்றிக் குறிப்பிடுகின்றார். "உதவி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "ஏராளமான உதவி" என்று அர்த்தப்படுகிறது. நமக்குத் தேவன் தமது ஆவியானவரின் மூலமாக ஏராளமானவற்றை உதவியுள்ளார்.*

*இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர்*

குறைந்தபட்சம் மூன்று வழிகளில் செயல்படுகின்றார்: வசனத்தின் மூலமாக (எபேசியர் 6:17; 2 பேதுரு 1:21); உள்ளாக வாசம்செய்யக்கூடிய அவரது வல்லமை மூலமாக (8:9, 11; 2 தீமோத்தேயு 1:14; 1 கொரிந்தியர் 3:16; 6:19; 1 யோவான் 3:14; 4:13); மற்றும் தேவத்துவத்தில் ஒருவர் என்ற வகையில் அருளிரக்கரீதியாக (8:28). கிறிஸ்தவர்களுக்கு ஆவியானவர் என்ன செய்கின்றார் என்பது பற்றி வசனப்பகுதிகளை நாம் படிக்கையில், அவர் ஒவ்வொரு பணியையும் எவ்வாறு நிறைவேற்றுகின்றார் என்பது பற்றி உபதேசரீதியாகக் கண்டிப்புடன் இருக்க இயலாது. அவர் எவ்வாறு செயல்படுகின்றார் என்பது, அவர் நமது சார்பாகச் செயல்படுகின்றார் என்பதை அறிதலை (மற்றும் விசுவாசித்தலை)விட அதிக முக்கியமானதாக இருப்பதில்லை!

ரோமர் 8ம் அதிகாரமானது கிறிஸ்தவர்களின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை பற்றிய மாபெரும் வசனப்பகுதியாக உள்ளது. இவ்வதி காரத்தின் முதல் பகுதியில், ஆவியானவர் பதினெட்டு அல்லது பத்தொன்பது முறை குறிப்பிடப்படுகின்றார்! கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நமக்கு ஆவியானவர் என்ன செய்கின்றார் என்பது பற்றிய உட்கண்ணோட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் இந்த அதிகாரத்தை ஆய்வுசெய்வோம்.

I. பரிசுத்த ஆவியானவர் நமக்கு வாழ்வின்மீது வெற்றியைக் கொடுக்க முடியும் (8:1-10).
   A. வசனம் 1ல் உள்ள "ஆனபடியால்" என்பது தோல்வியைப் பற்றிப் பேசுகிற 7ம் அதிகாரத்தை குறிப்பிடுகிறது (7:15, 18, 19, 24 ஆகிய வசனங்களைக் கவனிக்கவும்).
   B. ஒரு புதிய கூறு சேர்க்கப்பட்டுள்ளது: தேவனுடைய ஆவியானவர் (வசனங்கள் 1, 2, 4, 5, 9, 10)! நாம் ஆவியானவர் மூலமாக, தோல் விக்குப் பதிலாக, வெற்றியைப் பெற முடியும்!

II. பரிசுத்த ஆவியானவர் நமக்கு மரணத்தின்மீது வெற்றியைக்கொடுக்க முடியும் (8:11).
   A. தேவனுடைய வல்லமையால் கிறிஸ்து மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டார். அதுபோல, நாமும்கூட நமக்குள் வாசம் பண்ணுகிற ஆவியானவரால் எழுப்பப்படுவோம்.
   B. குறிப்பு: நல்லவர்களோ அல்லது கெட்டவர்களோ யாராக இருப்பினும் எல்லாரும் எழுப்பப்படுவோம் என்பதால் (யோவான் 5:28, 29), ரோமர் 8:11 நித்திய ஜீவனுக்கென்று உயிர்ப்பிக்கப் படுதலைக் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும்.

III. பரிசுத்த ஆவியானவர் நமக்கு சோதனையின்மீது வெற்றியைக் கொடுக்க முடியும் (8:13).
   A. ரோமர் 7:24: "இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலை யாக்குவார்?" பதில்: ஆவியானவர் மூலமாக, நாம் சரீரத்தின் செய்கைகளை "ஒடுக்க" ("அவற்றைச் சாவுக்கு உட்படுத்த") முடியும்! நாம் உள்ளான மனுஷனில் ஆவியானவரால் பலப்படுத் தப்படுகின்றோம் (எபேசியர் 3:16, 20).
   B. சிலவேளைகளில், "நான் கிறிஸ்துவ வாழ்க்கையை வாழமுடியும் போது, உடனடியாக நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வேன்" என்று சிலர் கூறுகின்றனர்; ஆனால் ஒருவர் கிறிஸ்தவராயிராமல்

மற்றும் தேவனுடைய ஆவியானவரின் உதவியில்லாமல் கிறிஸ்தவ வாழ்வை வாழ இயலாது!

IV. பரிசுத்த ஆவியானவர் நமக்கு முடிவுசெய்ய இயலாத நிலையின்மீது வெற்றியைக் கொடுக்க முடியும் (8:14அ).

A. வேதாகமத்தில், தேவன் தமது மக்களை "வழிநடத்துகின்றார்" என்று கூறப்பட்டுள்ளது. இவ்வசனத்தில், ஆவியானவர் கிறிஸ்தவர்களை "வழிநடத்துகின்றார்" என்று கூறப்படுகிறது. அதீதமான இரு முனைகளும் தவிர்க்கப்பட வேண்டும்: நாம் ஏற்படுத்தும் ஒவ்வொரு முடிவுக்கும் ஆவியானவரே பொறுப்பாளியாக இருக்கின்றார் என்பதும், ஆவியானவர் நமது வாழ்வில் எவ்வகையிலும் செல்வாக்குக் கொண்டிருப்பதில்லை என்பதும். ஆவியானவர் நம்மைப் பல்வேறு வகைகளில் வழிநடத்தலாம்:

1. மிகத்திட்டவட்டமான (மற்றும் மிகத்தனிச்சிறப்பான) வகையில் அவர் ஏவுதல் செய்த வேதாகமத்தின் மூலமாக.
2. மற்ற சாத்தியக்கூறுகள்:
   a. அருளிரக்கரீதியாக ("திறந்த கதவுகளின்" மூலமாக; 1 கொரிந்தியர் 16:9; முதலியவற்றை காணவும்.).
   b. மனச்சாட்சியின் மூலமாக.
   c. தேவபக்தியுள்ள நண்பர்களின் வழிகாட்டுதல், முதலியவற்றின் மூலமாக.

B. மீண்டுமாக, நாம் "எவ்வாறு" என்பது பற்றி உபதேசரீதியாகக் கண்டிப்புடன் இருக்க முடியாது. நமது வாழ்வில் தேவன் செயல்படுகின்றார் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே மிகவும் முக்கியமானதாக உள்ளது (சங்கீதம் 37:23ஐக் காணவும்).

V. பரிசுத்த ஆவியானவர் நமக்கு நிச்சயமற்ற விஷயங்களின்மீது வெற்றியைக் கொடுக்க முடியும் (8:14ஆ-17, 23).

A. நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது நமக்குத் தேவன் தமது ஆவியைக் கொடுத்தார் என்ற உண்மையானது, நாம் தேவனுடைய வாரிசுகளின் சகல ஆசீர்வாதங்களுடனும் அவரின் பிள்ளைகளாய் இருக்கின்றோம் என்பதற்கு வல்லமைநிறைந்த நிரூபணமாக உள்ளது!

1. "முதல் பலன்கள்" (வசனம் 23) என்பவை அறுவடையின் எஞ்சிய பகுதிக்கு உத்தரவாதமாக உள்ளன.
2. "முதல் பலன்கள்" என்பது ஆவியானவரின் "அச்சாரம்" என்பது போன்ற அதே அர்த்தத்தைக் கொண்டுள்ளது (எபேசியர் 1:13, 14; 2 கொரிந்தியர் 1:21, 22; 5:5). "அச்சாரம்" என்றால் "முன்பணம்" என்பது போன்று, ஒரு "உறுதி" அல்லது "உத்தரவாதம்," என்று அர்த்தம் தருகிறது. பரிசுத்த ஆவியானவர் பரலோகத்தின் மீதான "முன்செலுத்துகையாக" இருக்கின்றார்!

B. வசனம் 16ஐக் காணவும்: "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்." இது "கூறப்பட்டதைக்காட்டிலும்

அதிகம் மேன்மையாக உணருதல்" என்பதைக் குறிப்பிடுவதில்லை. அது வேதாகமத்திலுள்ள ஒரு வாக்குத்தத்தத்துடன் வரையறைப் படுத்தப்படவும் இல்லை. மாறாக, தேவன் தமது ஆவியானவர் மூலமாக என்ன செய்கின்றார் என்பதை நாம் காணுகையில், அவர் நம்மீது அன்புகூருகின்றார் என்பதையும் நாம் அவரது பிள்ளை களாய் இருக்கின்றோம் என்பதையும் நாம் உறுதிப்படுத்திக்கொள் கின்றோம்! இது நமக்குக்கொடுக்கும் தைரியம் மிகப்பெரியது!

VI. *பரிசுத்த ஆவியானவரால் நமக்கு பலவீனத்தின்மீது வெற்றியைக் கொடுக்க முடியும் (8:26, 27).*

A. நாம் யாவருமே சில வேளைகளில் பலவீனமாகிவிடுகின்றோம். பரிசுத்த ஆவியானவர் நமது பலவீனங்களில் நமக்கு உதவுகிறார். "உதவுகின்றார்" என்ற வார்த்தை, *sunantilambano* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது: *sun* ("உடன்"), *anti* ("எதிராக, எதிர்ப் பாக"), *lambano* ("எடுத்துக்கொள்ள அல்லது பெற்றுக் கொள்ள"). மிகக்கனமான ஒரு வீட்டுப்பொருளை [நாற்காலி அல்லது மேசையை] ஒரு நபரால் தூக்க முடியாததை தூக்க முயற்சி செய்வதைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அதன் மறுபுறத்தை யாரேனும் ஒருவர் உங்களுடன் சேர்ந்து தூக்க வேண்டும். அந்த யாரேனும் ஒருவர் பரிசுத்த ஆவியானவராக இருக்கின்றார், உங்களால் தனியே செய்ய இயலாதவற்றை செய்யக்கூடும்படி அவர் உதவுகின்றார்!

B. பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுதல் பற்றிய குறிப்பிட்ட விவரிப்பு ஒன்று தரப்படுகிறது: நாம் ஜெபிக்கும்போது அவர் நமக்கு உதவுகின்றார். "வாக்குக்கு அடங்காத பெருமூச்சுடன்" நமக்காக வேண்டுதல் செய்கின்றார், இவை நாம் வார்த்தையில் விவரிக்க இயலாத நமக்குச் சொந்தமான, ஆழமிகுந்த உணர்வுகளாய் இருக்கின்றன.

முடிவுரை

A. பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வில் செயல்படக்கூடும் முன்பு நாம் அவரைப்பற்றிய யாவற்றையும் புரிந்துகொண்டிருக்க வேண்டுமா? இல்லை. "ஆவிக்கேற்றபடி நடத்தல்" என்பதே நமது வாழ்வில் ஆவியானவர் கிரியை செய்வதற்கான திறவுகோலாக உள்ளது (வசனம் 4), வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இது பரிசுத்த ஆவியானவர் கொடுத்துள்ளதாகப் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற அவரது அறிவுறுத்துதல்களுக்குக் கீழ்ப்படிதல் என்பதாக உள்ளது!

B. பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வாசம்பண்ணுகின்றாரா? இல்லையென்றால், நீங்கள் இயேசுவுக்குச் சொந்தமானவர் அல்ல (வசனம் 9)! நீங்கள் ஞானஸ்நானம் பெற்று இந்த அற்புதமான வரத்தைப் பெற்றுக்கொள்வது அவசியமாய் இருக்கிறது!

# 7

# 1 கொரிந்தியர்: உலகத்தன்மையுடன் போராடுதல்

***தலைப்பு***

*பெற்றுக்கொண்டவர்களின் பெயரைக்கொண்டு குறிப்பிடப்பட்டுள்ள இப்புத்தகம், "கொரிந்துவிலிருந்த தேவனுடைய சபைக்கு" பவுல் எழுதிய புதிய ஏற்பாட்டின் இரண்டு நிருபங்களில் முதலாவதாக உள்ளது (1:2; 2 கொரிந்தியர் 1:1ஐக் காணவும்).*

***பின்னணி***

*கொரிந்து நகரம், ஏதென்ஸ் நகரத்திற்கு மேற்கில், கிரேக்கநாட்டின் பெரும்பரப்பை கீழுள்ள தீபகற்பத்துடன் இணைக்கும் இடைகரையில் இருந்தது. அது வர்த்தகத்தின் அச்சாணியான இடமாகவும் துடுக்குத்தனம் மிகுந்ததாகவும், அதன் துர்க்குணங்களைக்கொண்டு புறதெய்வ வணக்கத்தார் மத்தியிலும்கூட நன்கு அறியப்பட்டதாகவும் இருந்தது (6:9-11ஐக் கவனிக்கவும்). அங்கிருந்த வீனஸ் தெய்வத்திற்கான கோவில் அதில் இருந்த ஆயிரம் "பெண் ஆசாரியர்களுடன்" - இவர்கள் அங்கு "வழிபட வந்தவர்களுக்கு" விபசாரத்தை வழங்கினர் - நன்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. கொரிந்து [சுவிசேஷ ஊழியத்திற்கு] ஒரு சுலபமானகளமாய் இருந்ததில்லை, ஆனால் உலகம் அளித்த விஷயங்கள் பற்றிக் களைப்படைந்து சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள தயாரான மக்கள் அங்கிருந்தனர் (நடபடிகள் 18:10).*

*பவுல் கொரிந்து நகருடன் தொடர்பு கொள்ளும்படி வழிநடத்திய நிகழ்ச்சிகளைப் பற்றி நடபடிகள் புத்தகம் கூறுகிறது. பவுல் தமது இரண்டாவது சுவிசேஷ ஊழியத்தின்போது, "மக்கெதோனிய மனிதனுடைய" தரிசனத்தைக் கண்டார் (நடபடிகள் 16:9); இவ்விதமாக அவர் பிலிப்பி, தெசலோனிக்கே, மற்றும் பெரேயா ஆகிய நகரங்களில் பிரசங்கித்தார். அவர் பெரேயாவில் இருந்து ஏதென்ஸ் [அத்தேனே] நகரத்திற்குச் சென்று அங்கு ஒரு குறுகிய காலம் இருந்துவிட்டு, கடைசியில் கொரிந்து நகரத்திற்கு வந்து சேர்ந்தார். நடபடிகள் 18:1-17 வசனப்பகுதி, அந்தப் பாவம் நிறைந்த நகரத்தில் அவரது ஊழியம் பற்றிக் கூறுகிறது. அங்கு ஒன்றரை ஆண்டுகள் ஊழியம் செய்த பவுல் அதன்பின்பு எருசலேம் வழியாக அந்தியோகியா நகரத்திற்குத் திரும்பினார் (நடபடிகள் 18:22). அவர் கொரிந்துவில் ஒழுக்கவீனம் என்ற குட்டையின் மத்தியில் உயிர்வாழப்போராடிய ஒரு இளம் சபையை விட்டுச்சென்றார்.*

*அந்தியோகியாவில் சற்றுக்காலம் இருந்தபின்னர், பவுல் தமது மூன்றாவது சுவிசேஷப் பயணத்தைத் தொடங்கினார். முன்பு தொடங்கியிருந்த சபைகளைப் பார்வையிட்டபின்பு, அவர் எபேசு நகருக்கு சென்றார். எபேசுவில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது, பவுல் கொரிந்துவில் நடைபெற்ற ஊழியத்துடன் தொடர்புகொண்டிருந்தார் (5:9; 2 கொரிந்தியர் 12:14; 13:1 ஆகிய வசனங்களைக் கவனிக்கவும்). கடைசியாக, அவர் எபேசுவில் இருந்த இரண்டு - அல்லது மூன்று-*

ஆண்டுகளின் இறுதிப்பகுதியின்போது, கொரிந்துவில் இருந்து ஒருவர் ஒரு கடிதம் கொண்டு வந்தார் (16:17). இந்தக்கடிதமும், அத்துடன் அறிக்கைகளும் பவுலை வந்தடைந்து, நாம் "1 கொரிந்தியர்" என்று அழைக்கும் இந்தக் கடிதத்தை எழுதும்படி பவுலைத் தூண்டின (16:18ஐக் கவனிக்கவும்). முதல் ஆறு அதி காரங்கள் பவுல் பெற்றுக்கொண்ட அறிக்கைகள் பற்றி கருத்தாய்வு செய்கின்றன (1:11; 5:1). கடைசி பத்து அதிகாரங்கள், கொரிந்துவில் இருந்து வந்த கடிதத்தில் எழுப்பப்பட்டிருந்த கேள்விகளுக்குப் பதில் அளிப்பவையாக இருக்கின்றன (7:1; "... ப் பற்றி" என்ற சொற்றொடரைக் கண்ணோக்கவும்). இது எழுதப்பட்ட காலம் கி.பி. 55-57 ஆக இருக்கலாம்.

இந்தக் கடிதம் நமக்கு, புறதெய்வ வணக்க சமூகத்தில் தொடக்ககால சபையின் போராட்டங்கள் பற்றியும், அந்தப் போராட்டத்தினால் உண்டான பிரச்சனைகளை ஏவுதல்பெற்ற எழுத்தாளர்கள் எவ்வாறு கையாண்டனர் என்பது பற்றியும் வரைவளைவிலான மாபெரும் சித்தரிப்புகளை அளிக்கிறது. மிகவும் தேவபக்தியற்றதாக விரைவில் மாறிக்கொண்டுள்ள ஒரு உலகத்தில், இப்புத்தகத்தின் செய்தி நமது சமூகத்திற்கு அன்றாடம் மிகவும் ஏற்புடையதாக வளர்ந்துகொண்டுள்ளது.

**வரைகுறிப்பு**

I. அறிக்கைகளுக்குப் பதிலுரை: திருத்துதல் (1-6).
   A. ஊழியர்கள்; பிரிவினை (1-4).
   B. சபையைத் தூய்மையாக்குதல்; ஐக்கியத்தை நீக்கிக்கொள்ளுதல் (5).
   C. உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்காடுதல் (6).

II. கடிதத்திற்குப் பதில்: அறிவுறுத்தல் (7-16).
   A. திருமணப்பிரச்சனைகளும் "மன அழுத்தமும்" (7).
   B. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவுகள் (8-10).
   C. சபைகூடிவருகையில் ஏற்பட்ட பிரச்சனைகள் (11).
      1. பெண்களும் "முக்காடுகளும்."
      2. கர்த்தருடைய பந்தி.
   D. அற்புத வரங்களும் அன்பும் (12-14).
   E. சரீர உயிர்த்தெழுதலின் ரகசியம் (15).
   F. பொருள்சார்ந்த உதவிகள்: கொடுத்தல் (16).

***1 கொரிந்தியர் நிருபத்தில் இருந்து பாடங்கள்***

கொரிந்து நகரில் இருந்த சபை பிரச்சனைகளால் நிறைந்திருந்தது, ஆனால் அது அப்போதும் "தேவனுடைய சபையாகவே" இருந்தது; அதன் உறுப்பினர்கள் இன்னமும் "பரிசுத்தவான்களாகவே" இருந்தனர் (1:2). கர்த்தருடைய சபைக்குழுமம் எதையும் அவ்வளவு விரைவில் விட்டு விடாதீர்கள்.

"உலகத்தன்மையுடன் போராடுதல்" என்பதைக்கொண்டு பண்புப் படுத்தப்படுதலே இந்தக் கடிதத்தின் ஆய்வுக்கருத்தாக இருந்துள்ளது. ஒருவேளை, "உலகத்தன்மை" என்பதை விவரித்துக்கூறப்படுதலானது நமக்கு அவசியமாக இருக்கலாம்! "உலகத்தன்மை" என்பது "இந்த உலகவிஷயங்களில்

*அதிகம் வலியுறுத்தும் காண்பித்தல்" என்பதைக் குறிப்பிடுகிறது. கொரிந்தியர்கள் கொண்டிருந்த பிரச்சனையின் இன்றைய நாட்களுக்கான வெளிப்பாடு பின்வருமாறு: அவர்களைச் சுற்றிலும் இருந்த தேவபக்தியற்ற தன்மையில் ஈடுபாடு. அப்படிப்பட்ட "உலகத்தன்மை"யின் வடிவமானது நம்மிடம் ஒரு பிரதான பிரச்சனையாக இராவிட்டாலும், நாம் வரவிருக்கும் உலகத்தின்மீது வலியுறுத்தம் வைப்பதற்கு மாறாக, இந்த உலகத்தின்மீது வலியுறுத்தத்தை இன்னமும் வைப்பதற்குச் சாத்தியக்கூறு உள்ளதா? நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே சோதித்துக்கொள்வோம்.*

*"அன்றாட வாழ்வில் சுவிசேஷத்தின் நடைமுறை செயல்விளைவு" என்பது இப்புத்தகத்தின் ஆய்வுக்கருத்தை விளக்கியுரைக்கும் ஒருவழியாக உள்ளது. 1 கொரிந்தியர் நிருபம் சிலுவையைப் பற்றிய அபரிவிதமான கருத்துடையதாக உள்ளது (1:23; 2:2; முதலியன.). சிலுவையைப் பற்றிய வரலாறு இருதயத்தைக் கலக்கும் வரலாறாக மாத்திரம் இருப்பதில்லை. அது நமது வாழ்வில் செயல் விளைவை ஏற்படுத்துகிறது.*

*பெரும்பான்மையான மக்களுக்கு, இப்புத்தகத்தின் 13ம் அதிகாரம், அதாவது, வேதாகமத்தில் அன்பு பற்றிய இந்த அதிகாரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. 13ம் அதிகாரத்தை முழுமையாக மதிப்பதற்கு, அதனுடைய சந்தர்ப்பப்பொருளில் அதைக் கண்ணோக்குங்கள். ஆவிக்குரிய அற்புத வரங்கள் என்பவையே இந்த அதிகாரத்தின் கலந்துரையாடலுக்குரிய பாடக்கருத்தாகும் (வரைகுறிப்பைக் காணவும்). பவுலின் நடைமுறையின்படி, அவர் இவ்வரங்களைத் தருவதற்காகக் கொரிந்தியர்கள் தலைகளின்மீது கைகள் வைத்து ஜெபித்திருப்பார் (1:7; நடபடிகள் 19:6; 8:18 ஆகிய வசனங்களைக் காணவும்). அவர்கள் தங்களுக்குக் கிடைத்த வரங்களைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். 12ம் அதிகாரமானது இவ்வரங்களைப் பட்டியலிடுகிறது; 13ம் அதிகாரம், இந்த அற்புத வரங்கள் ஒழிந்துபோகும் என்று கூறுகிறது; 14ம் அதிகாரம் செயல்விளைவில், "நீங்கள் இவ்வரங்களைக் கொண்டிருக்கும் வரைக்கும், அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது இங்குள்ளது" என்று கூறுகிறது. 13ம் அதிகாரத்தில் உள்ள முரண்பாடானது அன்பு மற்றும் அற்புதவரங்கள், அதிலும் விசேஷமாக "பாஷைகளில் பேசும்" வரம் (அவர்கள் படித்தறிந்திராத பாஷைகளில் பேசும் வரம்) ஆகியவற்றிற்கு இடையிலானதாக உள்ளது.*

*இந்தக் கடிதம் இதன்மீது கொண்ட விரும்பத்தக்க செயல்விளைவை ஏற்படுத்திற்று (2 கொரிந்தியர் 7:6முதல்.). மக்கள் ஆவிக்குரிய வகையில் எந்த இடத்தில் இருக்கின்றனர் என்பதல்ல, ஆனால் அவர்கள் தேவனுடைய செய்தியால் தொடப்படக்கூடிய இருதயத்தைக் கொண்டுள்ளனரா என்பதே மக்களிடம் உறவாடக்கூடிய விஷயத்தில் மிகவும் முக்கியமானதாக உள்ளது.*

## *இயேசுவின் மூலமாக வெற்றி! (1 கொரிந்தியர் 15)*

*வெற்றி! இவ்வார்த்தை உங்கள் சிந்தையில் கட்டவிழ்த்துவிடும் உருவகங்கள் யாவை? யுத்தம் அல்லது போரின் முடிவு? விளையாட்டில் ஏற்படுத்திய சாதனையைக் கொண்டாடுதல்? சில தனிப்பட்ட வெற்றிகள்? இவ்வார்த்தை இவற்றைத்தவிர வேறு எதையாவது குறிப்பிடலாம் என்றாலும், இது எப்போதுமே மன எழுச்சியை அர்த்தப்படுத்துகிறது.*

*வேதாகமத்தில் மிகுந்த மன எழுச்சியூட்டும் வெற்றியின் வசனப் பகுதிகளில் என்று, 1 கொரிந்தியர் 15ன் முடிவுப்பகுதியில் காணப்படுகிறது. இந்த அதிகாரத்தை எழுதும்படி பவுலைத் தூண்டியது எது என்று நாம் அறிவதில்லை, ஒருவேளை கிறிஸ்தவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களை அடக்கம் செய்தநிலையில் மறு உறுதிப்பாடு தேவைப்பட்டவர்களாய் இருந்திருக்கலாம். ஒருவேளை பவுல் தமது போதனையைச் சிறுமைப்படுத்த முயற்சித்தவர்கள் பற்றி அறிந்திருக்கலாம் (வசனங்கள் 12, 35). காரணம் எதுவாக இருப்பினும், வேதாகமத்தின் மாபெரும் அதிகாரங்களில் ஒன்று விளைவாயிற்று.*

*1 கொரிந்தியர் 15ன் முடிவில் கொண்டாடப்பட்ட வெற்றியை மிகமேன்மையாக மதிப்பதற்கு, நாம் இவ்வதிகாரத்தை முழுவதும் ஆராய்ந்துபார்ப்போம்.*

I. *உயிர்த்தெழுதலில் உறுதிப்பாடு (15:1-34).*

   A. *பவுல், தாம் பிரசங்கித்த சுவிசேஷத்தை, விசேஷமாக உயிர்த்தெழுதலை அவர்களுக்கு நினைவூட்டுகின்றார் (வசனங்கள் 1-4). அவர் உயிர்த்தெழுதலின் உறுதிப்பாட்டிற்கு இரண்டு நிரூபணங்களைத் தருகின்றார் (வசனங்கள் 3-11).*

      1. *வேத வசனங்கள் (வசனங்கள் 3, 4).*
      2. *கண்ணால் கண்ட சாட்சியங்கள் (வசனங்கள் 5-11).*

         a. *அப்போஸ்தலர்களைப்போல் நம்பத்தகுந்த சாட்சியங்கள்.*

         b. *ஐந்நூறு பேர்களைப்போல் ஏராளமான சாட்சியங்கள்.*

         c. *யாக்கோபு (இவர் கர்த்தரின் சகோதரர் ஆவார்) மற்றும் பவுல் ஆகியோரைப்போல் குறிப்பிடத்தக்க சாட்சியங்கள்; இவர்களின் வாழ்வில் ஏற்பட்டிருந்த மாற்றங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும்!*

   B. *பின்பு பவுல், சரீர உயிர்த்தெழுதல் இல்லையென்றால், இயேசு உயிர்த்தெழவில்லையென்றால்,ஏற்பட்டிருக்கக்கூடிய விளைவுகளை விரைவாகக் குறிப்பிடுகின்றார் (வசனங்கள் 12-19):*

      1. *பவுலின் பிரசங்கம் வீணானதாக, பயனற்றதாக இருந்திருக்கும்.*
      2. *அவர்களின் விசுவாசம் வீணானதாக, நோக்கமற்றதாக இருந்திருக்கும்.*
      3. *அப்போஸ்தலர்கள் தேவனைத் தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்தியிருப்பார்கள்.*
      4. *அவர்கள் இன்னமும் தங்கள் பாவங்களிலேயே இருந்திருப்பார்கள்; அவர்கள் இழந்து போகப்பட்டவர்களாய் இருந்திருப்பார்கள்.*
      5. *மரணமடைந்த கிறிஸ்தவர்கள் அழிந்துபோயிருப்பார்கள்; அவர்கள் என்றென்றுமாக விலகிப்போயிருப்பார்கள்.*
      6. *கிறிஸ்தவர்கள் எல்லா மனிதர்களைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாய் இருந்திருப்பார்கள்.*

   C. *அந்தக் கூற்றுகள் யாவற்றையும் பவுல் பின்வரும் உறுதிப்பாட்டுக் கூற்றினால் தகுதியற்றவைகளாக்குகின்றார்: "ஆனால் கிறிஸ்துவோ உயிர்த்தெழுந்திருக்கின்றார்!" (வசனங்கள் 20-34).*

1. இரண்டு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன (வசனங்கள் 20-23):
   a. கிறிஸ்து நமது "முதற்பலன்களாக," நமது சொந்த உயிர்த்தெழுதலுக்கு உத்தரவாதமாக இருக்கின்றார் (லேவியராகமம் 23:9-14ஐக் கவனிக்கவும்).
   b. ஆதாம் உலகத்திற்குள் மரணத்தைக் கொண்டுவந்தார்; கிறிஸ்து ஜீவனைக் கொண்டுவந்தார்! (ரோமர் 5:12-21ஐக் காணவும்.)
2. மரணம் அழிக்கப்படும் (வசனங்கள் 24-32). வெளிப்படுத்தின விசேஷம் 21:4, "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின. ..." என்று கூறுகிறது.
   a. அதனால்தான் வசனம் 29ல் குறிப்பிடப்பட்டிருந்த ஒருசிலர் "மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெற்றவர்களாய்" இருந்தனர். (இது அவர்கள், மரித்திருந்த கிறிஸ்தவர்களின் இடத்தில் வைப்பதற்காக மக்களை ஞானஸ்நானப்படுத்தினர் என்று அர்த்தப்படலாம்.)
   b. அதனால்தான் பவுல் அவிசுவாசமற்றவர்களின் எதிர்ப்புக்கு முன்பு சகிப்புத் தன்மை கொண்டிருந்தார் (வசனங்கள் 30-32).

D. ஒருநடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது: நாம் உயிர்ப்பிக்கப்பட்டிருப்போம், எனவே நாம் கள்ளப்போதகர்கள் நம்மை வழிவிலக்கி நடத்தும்படி அனுமதித்துவிடக்கூடாது (வசனங்கள் 33, 34).

II. உயிர்த்தெழுதலின் மதிப்பு (15:35-58).

A. நாம் புதிய உடல்களைப் பெற்றுக்கொள்வோம் (வசனங்கள் 35-50)!

1. விளக்கப்பட இயலாதவற்றை, "விளக்குவதில்" வேதாகமம் ஒப்பீடுகளை அடிக்கடி பயன்படுத்துகிறது. பவுல் இயற்கையில் இருந்து விவரிப்புகளுடன் தொடங்குகிறார் (வசனங்கள் 35-41). உயிர்த்தெழுதல் அல்லது உயிர்பிக்கப்பட்ட சரீரம் பற்றிய நமது ஆர்வங்களை திருப்திசெய்வதற்குத் தேவன் முயற்சி செய்வதில்லை, ஆனால் நாம் அறிந்துகொள்ளத் தேவையானவற்றை அவர் நமக்குக் கூறுகின்றார்!
   a. உடல்கள், நாம் இப்போது கொண்டிருப்பவற்றில் இருந்து மாறுபட்ட வடிவம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும்.
   b. புதிய உடல்கள் இப்போது நாம் கொண்டுள்ள உடல்களுடன் தொடர்புபடுத்தப்படுபவைகளாய் இருக்கும். நாம் இன்னமும் நாமாகவே இருப்போம்! ஆளுமைத்தன்மை என்பது கல்லறையிலும் பிழைத்திருக்கும்.
   c. புதிய உடல்கள் மேன்மையானவைகளாக, முடிவற்ற வகையில் மேன்மையானவைகளாக இருக்கும்!

2. “இயல்பான” (உலகம்சார்ந்த) உடலையும் “ஆவிக்குரிய” உடலையும் பவுல் ஒப்பிடுகின்றார் (வசனங்கள் 42-50)! மற்ற விஷயங்களின் மத்தியில் அவர், ஆதாம் மற்றும் கிறிஸ்து ஆகியோரைப் பற்றிய ஒப்பீட்டுக்குத் திரும்புகின்றார் (வசனங்கள் 45முதல்.).

B. நாம் ஜெயங்கொண்டவர்களாய் இருப்போம் (வசனங்கள் 51-57)!
   1. இயேசு திரும்பி வரும்போது என்ன நடக்கும் (வசனங்கள் 51-53)?
   2. இது ஜெயமாக இருக்கிறது (வசனங்கள் 54-57)!
      a. பாவத்தின்மீது ஜெயம்: குற்றம் மற்றும் அதன் விளைவுகளின்மீது ஜெயம்.
      b. மரணத்தின்மீது ஜெயம்!

C. ஒரு இரண்டாவது நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது: நாம் உயிர்ப்பிக்கப்பட இருப்பதால், நாம் ஊக்கம் குன்றிப்போய் விடக்கூடாது; நாம் வெளியேறி விடக்கூடாது. கர்த்தர் திரும்பி வருகையில் கர்த்தருக்கான நமது ஊழியத்திற்குப் பலன் அளிக்கப்படும் (வசனம் 58)!

முடிவுரை

இப்போது நீங்கள் யுத்தங்களில் இழப்படைந்திருக்கலாம், ஆனால் நீங்கள் ஞானஸ்நானத்தின் தண்ணீரில் “அவரோடேகூட இப்போது உயிர்ப்பிக்கப்பட்டிருந்தால்” மற்றும் “புதிய ஜீவனில்” நடந்தால் நிறைவான வெற்றி உங்களுடையதாயிருக்கும். ரோமர் 6, “கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாதிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்” என்று கூறுகிறது (வசனங்கள் 3-5; வசனங்கள் 6, 17, 18 ஆகியவற்றையும் காணவும்).

# 8

# 2 கொரிந்தியர்: பவுலின் இருதயத்தில் இருந்து

***தலைப்பு***

*2 கொரிந்தியர் நிருபம், அதைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது. இது புதிய ஏற்பாட்டில், "கொரிந்துவில் உள்ள தேவனுடைய சபைக்கு" (1:1) எழுதப்பட்ட இரண்டாவது கடிதமாக உள்ளது.*

***பின்னணி***

*இந்தக் கடிதம் 1 கொரிந்தியர் நிருபத்தின் தொடர்ச்சியாக உள்ளது. இவையிரண்டுமே அப்போஸ்தலரான பவுலினால் எழுதப்பட்டன (இவற்றுடன் 1 கொரிந்தியர் 1:1 மற்றும் 2 கொரிந்தியர் 1:1).*

*பவுல் கொரிந்துவில் இருந்த சபைக்கு நிருபத்தை அனுப்பிய பின்பு (1 கொரிந்தியர் நிருபத்திற்கான பின்னணியைக் காணவும்), அவர் தீத்துவை கொரிந்து நகருக்கு அனுப்பினார் (12:18). சற்றுக்குறுகிய காலத்திற்குப் பின்பு, எபேசுவில் அவரது ஊழியம் இடைமறிக்கப்பட்டது (1:8-11; நடபடிகள் 19:23-20:1). அவர் வடக்கே துரோவா நகருக்குச் சென்று, தீத்துவுக்காகக் காத்திருக்கையில் அங்கே ஊழியம் செய்தார். தீத்து வராதபோது, பவுல் மக்கெதோனியாவுக்குக் கடந்து சென்று, அங்கு எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்களுக்காக நிதிகள் சேகரித்தார் (8:1-5; 9:2, 4). கடைசியில் தீத்து அங்கே அவரைச் சந்தித்தார் (2:13; 7:5-7; நடபடிகள் 20:1, 2). தீத்துவின் அறிக்கை பிரதானமாகச் சாதகமானதாகவே இருந்தது. கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் பவுலின் புத்திமதிக்குப் பதில்செயல் செய்திருந்தனர். எடுத்துக்காட்டாக, அவர்கள் 1 கொரிந்தியர் 5 (7:6முதல்.) வசனப்பகுதியில் குறிப்பிடப்பட்ட மனிதனிடத்தில் இருந்து ஐக்கியத்தை விலக்கிக்கொண்டனர் என்பது உறுதி.*

*சிலர் (யூதத்துவப் போதகர்கள், 11:22) பவுலை எதிர்த்து நின்று, அவரை விமர்சித்து, அவரது நோக்கங்கள் தவறானவை என்று எதிர்ப்புரைகூறி, அவரது அப்போஸ்தலத்துவம் குறித்துக் கேள்விகள் கேட்டனர். இதற்கு "நிரூபணமாக," அவர்கள் பவுல் கொரிந்து நகருக்குப் பார்வையிட வரும் திட்டங்களில் ஏற்பட்ட மாற்றம் (1:15-2:1), பவுல் "சிபாரிசுக் கடிதங்கள்" எதையும் கொண்டுசென்ற தில்லை என்ற உண்மை (3:1), அவரது தனிப்பட்ட உடல்தோற்றம் (10:10), மற்றும் அவர் கொரிந்து நகரத்தில் ஊழியம் செய்தபோது கொரிந்தியர்களிடத்தில் இருந்து ஊதியம் எதையும் ஏற்றுக்கொள்ளாதிருந்தார் என்ற உண்மை (11:17) ஆகியவற்றைச் சுட்டிக் காண்பித்தனர்.*

*இவையெல்லாவற்றிற்கும், 2 கொரிந்தியர் நிருபமே பவுலின் பதிலாக இருந்தது. இந்தக் கடிதம் இதற்கு முந்திய நிருபம் எழுதப்பட்டுப் பல மாதங்களுக்குப்பின்னர் (அனேகமாக ஒரு ஆண்டிற்குப்பின், 8:10; 9:2) மக்கெதோனியாவில் இருந்து எழுதப்பட்டிருக்கலாம்.*

*இந்த நிருபத்தில், பவுல் தமது முந்திய கடிதத்திற்குக் கொரிந்தியர்களின் பதில் செயல்களான விசேஷ காணிக்கை (8; 9) மற்றும் விஷயங்களைக் கைக்கொண்டு*

தொடர்செயல்புரிதல் போன்றவற்றைக் குறித்து அகம் மகிழ்கின்றார். இருப்பினும், இந்தக்கடிதத்தின் பெரும்பான்மையான பகுதி, அவரது ஊழியம் மற்றும் அப்போஸ்தலிக்கம் ஆகியவற்றிற்கான தற்காப்பு வாதமாக உள்ளது: "... நான் ஒன்றுமில்லையென்றாலும், மகா பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்தவனாயிராதபடியால், உங்களாலே மெச்சிக்கொள்ளப்பட வேண்டியதாயிருந்ததே. அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவித மான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமை களோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" (12:11, 12; 11:5ஐக் காணவும்). முதல் அதிகாரங்கள் அவரது நண்பர்களுக்கு ஆறுதலாக இருக்கின்றன; கடைசி அதிகாரங்கள் அவரது விரோதிகளுடன் எதிர்த்து நிற்பவைகளாய் இருக்கின்றன. (இவ்விரு பகுதிகளும் தொனியில் மாறுபட்டிருப்பதால் சிலர், 2 கொரிந்தியர் நிருபத்தில் குறைந்தபட்சம் இரு மாறுபட்ட கடிதங்களைக் காணுகின்றனர், ஆனால் அப்படிப்பட்ட கோட்பாட்டிற்கு வசனரீதியாக ஆதாரம் எதுவும் இருப்பதில்லை.)

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு, ரோமர் மற்றும் எபேசியர் நிருபங்களின் பின்னணிகளைக் காணவும்.

**வரைகுறிப்பு**

இது ஒரு உணர்வுப்பூர்வமான கடிதமாக உள்ளது மற்றும் வரைகுறிப் பிடுவதற்குக் கடினமானதாயிருக்கிறது. இது பவுலின் பெரும்பான்மை யான கடிதங்களைப்போல் ஒழுங்குமுறை அமைவு கொண்டிருப்பதில்லை. இருப்பினும், இங்கு, ஒரு எளிய வரைகுறிப்பு தரப்படுகிறது:

I. பவுலும் அவருக்குக் கட்டளையிடப்பட்ட ஊழியமும் (1-7).
   A. அவரது நோக்கங்கள் (1; 2).
   B. அவரது செய்தி (3-5).
   C. அவரது கால அட்டவணை (6; 7).
II. பவுலும் அவருடைய அறைகூவலும்; ஏழைகளுக்கு அவர் பொருள் சேகரித்தல் (8; 9).
III. பவுலும் அவரை விமர்சித்தவர்களும் (10-12).
   A. அவரது தோற்றம் (10).
   B. அவரது அப்போஸ்தலத்துவம் (11; 12).
   C. அவரது வேண்டுகோள் (13).

***2 கொரிந்தியர் நிருபத்தில் இருந்து பாடங்கள்***

2 கொரிந்தியர் நிருபமானது பவுலின் மற்ற எல்லா நிருபங்களைக் காட்டிலும் அதிகம் தனித்துவத்திற்கு உரியதாயிருக்கிறது. இதில் அவர் தமது வாழ்வைப்பற்றி வேறு எவ்விடத்திலும் காணப்பட்டிராத விவரங்களைக் கொடுக்கின்றனர்: அவரது மாம்சத்தில் இருந்த முள், "மூன்றாம் வானம்" வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது (12:2), முதலியன. இருப்பினும், இதில் பவுல் வேறு எந்தக் கடிதத்திலும் இல்லாத வகையில் தமது இருதயத்தை வெளிப்படுத்துகின்றார் என்பதே மாபெரும் தனிச்சிறப்பாகும். பவுல் ஆவிக்குரிய வகையில் மேலான மனிதரல்ல; அவர் உண்மையான இரத்தம் சிந்தினார் மற்றும் உண்மையான கண்ணீர்விட்டார்.

*கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் மற்றும் பொதுவாக ஊழியம் செய்தல் ஆகியவற்றின் ஈடுபாடுடைய மிக விசேஷித்த செய்தி இப்புத்தகத்தில் உள்ளது. ஒரு ஊழியக்காரரின் ஊழியத்தைப் பற்றி நீங்கள் அறிய வேண்டு மென்றால், 1 மற்றும் 2 தீமோத்தேயு மற்றும் தீத்து நிருபங்களைப் படியுங்கள். ஒரு பிரசங்கியாரின் வாழ்வைப்பற்றி நீங்கள் அறிய வேண்டுமென்றால், 2 கொரிந்தியர் நிருபத்தைப் படியுங்கள்.*

*இக்கடிதம் வாழ்வின் எதிரான சூழ்நிலையைக் கையாள்வது எப்படி என்பது பற்றிய விசேஷச் செய்தியொன்றையும் கொண்டுள்ளது. பவுல் தேவனைச் சார்ந்திருக்க வேண்டிய தமது நிலைப்பாடு பற்றித் தொடர்ந்து குறிப்பிடுகின்றார். அவர் கிறிஸ்துமாத்திரமே போதும் என்பது பற்றியும் தமது பலவீனங்களில் தேவன் தமக்கு எவ்வாறு பலம் அளித்தார் என்பது பற்றியும் பேசுகின்றார். ஒவ்வொருவருடைய வாழ்விற்கும் இதில் பாடங்கள் உள்ளன!*

*நீங்கள் இக்கடிதத்தை வாசிக்கையில், பவுலின் இருதயம் உங்கள் இருதயத்துடன் பேசட்டும்.*

---

## *சகல ஆறுதலின் தேவன் (2 கொரிந்தியர் 1:3-11)*

*ஆறுதலைப் பற்றி 2 கொரிந்தியர் 1:3-11, என்ன ஒரு அற்புதமான செய்தியை அளிக்கிறது! இரண்டு கொரிந்தியர் நிருபம் ஆறுதலின் நிருப மாய் இருக்கிறது. இவ்வார்த்தை இந்த நிருபத்தில் இருபத்தி ஒன்பது முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது: வினைச்சொல் வடிவத்தில் பதினெட்டு முறைகளும் பெயர்ச்சொல் வடிவத்தில் பதினோரு முறைகளும். இந்த ஆறுதல் என்பது வெறும் பரிவிரக்கம் அல்ல. இதற்கான கிரேக்க வார்த்தை "உதவிக்கு இன்னொருவரை அருகில் அழைத்தல்" என்பதைக் குறிக்கிறது. இவ்வார்த்தையானது உற்சாகமூட்டுதல் மற்றும் தேற்றுதல் என்ற கருத்துக்களை ஒன்றிணைத்துத் தருகிறது.*

*தேவன் ஆறுதலின் தேவனாயிருக்கின்றார். உண்மையில், அவர் "சகல ஆறுதலின் தேவனாக" இருக்கின்றார் (1:3). அது தேவன் சகல ஆறுதலுக்கும் ஆதாரமூலமாய் இருக்கின்றார் என்று கூறுவதற்கு எபிரெய மொழியில் உள்ள வழிமுறையாகும்.*

I. *நாம் யாவரும் பிரச்சனைகளைக் கொண்டுள்ளோம்.*
   A. *பவுல் தேவனுடைய செய்தியாளராய் இருந்தார், ஆனால் அவரும் பிரச்சனைகளைக் கொண்டிருந்தார்.*
      1. *அவர் ஒவ்வொருவகைப் பிரச்சனையையும் கொண்டிருந்தார் (1:4-6, 8, 9அ).*
         a. *இடர்ப்பாடு, பாடுபடுதல், மற்றும் இவை போன்றவற்றைக் குறிப்பிடுவதற்குக் கிரேக்க மொழியில் பத்து வார்த்தைகள் உள்ளன; இவற்றில் ஐந்து வார்த்தைகள் இவ்வசனப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளன!*
         b. *பவுல் ஊக்கம் இழந்துபோயிருந்ததாகக்கூட ஒப்புக்கொண் டார்: "... எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன" (7:5). ஊக்கமிழந்துபோகுதல் என்பது*

மனிதகுலத்திற்குப் பொதுவானதாக உள்ளது; இது நடக்கும்போது இது வெட்கத்திற்குரியதாக இருப்ப தில்லை.

2. பவுலின் பிரச்சனைகள் எல்லாவற்றிலும் நோக்கம் இருந்தது (ரோமர் 5:3; 8:28). அவருடைய பிரச்சனைகள் அவருக்குப் பின்வரும் விஷயங்களில் உதவின:
   a. பிறருக்கு உதவிசெய்யத் தகுதிப்படுத்துவதில் (1:3, 4).
   b. ஒரு நல்ல உதாரணமாக இருப்பதில் (1:6, 7).
   c. தேவனைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்வதில் (1:9, 10; 12:10).

B. நாமும்கூடப், பிரச்சனைகளைக் கொண்டிருக்கின்றோம் (1:7).
   1. கொரிந்தியர்கள் பிரச்சனைகளைக் கொண்டிருந்தனர்; அது போல நாமும்கூட பிரச்சனைகளைக் கொண்டிருக்கின்றோம்.
   2. நாமும்கூட, ஊக்கம் இழந்துபோகின்றோம்!

II. நமது பிரச்சனைகள் எல்லாவற்றிலும் தேவன் நம்மை ஆறுதல்படுத்த முடியும்.

A. தேவன் பவுலை ஆறுதல்படுத்தினார்.
   1. சில வேளைகளில் தேவன் நமது இடர்ப்பாடுகளில் இருந்து நம்மைக் காக்கின்றார் (பேதுரு சிறையில் இருந்து விடுவிக்கப் பட்டதைக் கவனியுங்கள், நடபடிகள் 12). தேவன் நமது இடர்ப்பாடுகளில் மிகவும் அடிக்கடி நம்மைக் காக்கின்றார்.
   2. தேவன் பல வழிகளில் பவுலை ஆறுதல்படுத்தினார். நமது வேதவசனப்பகுதியில் திட்டவட்டமான மூன்று வழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன:
      a. பவுல் தேவன்மீது கொண்டிருந்த நம்பிக்கையின் மூலமாக (1:9).
      b. தேவன் பவுலை அபாயத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுகையில், தேவனுடைய அருளிரக்கத்தின் மூலமாக: "அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" (1:10).
      c. சக கிறிஸ்தவர்கள் மூலமாக (1:11; 7:6, 13).
   3. இதன் விளைவாகப் பவுல் எதிர்காலத்திற்கென்று பெரிய தைரியத்தை/தன்னம்பிக்கையைக் கொண்டிருந்தார் (1:10)! கடந்தகாலத்தில் அவரைத் தேவன் ஆறுதல்படுத்தியிருந்தார்; நிகழ்காலத்தில் தேவன் அவரை ஆறுதல்படுத்திக் கொண் டிருந்தார்; எதிர்காலத்திலும் தேவன் அவரை ஆறுதல்படுத்து பவராய் இருந்தார்!

B. தேவனை நாம் அனுமதித்தால், அவருடன் நாம் ஒத்துழைத்தால், நம்மையும் அவர் ஆறுதல்படுத்த முடியும் (1:7).
   1. ஒவ்வொரு சூழ்நிலையிலும் பவுல் தம்மால் முடிந்ததைச்

செய்தார்.

2. தேவன் தமது ஆறுதலையோ அல்லது அவரது மற்ற ஆசீர்வாதங்களையோ நம்மீது வலிந்து திணிப்பதில்லை.
3. நாம் தேவனுக்கு வசமாகுவோமென்றால், அவர் செயல்படக் கூடியவராய் இருக்கிறார்.

III. நமது ஆறுதல்கள் நம்முடன் மாத்திரம் நிறுத்திவைக்கப்படக்கூடாததாக உள்ளது.

A. நாம் பிறரை ஆறுதல்படுத்தக்கூடியவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்காக ஆறுதல்படுத்தப்படுகின்றோம் (1:4, 6).

1. பெரும் உபத்திரவமான சூழ்நிலையில் நாம் தேவனுடைய உதவியுடன் உயிர்பிழைக்கின்றபோது, அதே பிரச்சனைகளைக் கொண்டுள்ள பிறருக்கு உதவுவதற்கு நாம் தனிச் சிறப்பான வகையில் தகுதிப்படுகின்றோம். ஒரு கருத்துணர்வில், தேவன் நமக்கு ஒரு விசேஷித்த ஊழியத்தைக் கொடுக்கின்றார்!
2. தேவனால் ஆறுதல்படுத்தப்படுதல் என்பது பிறருக்கு ஏற்பட்டுள்ள சோதனைகள் எப்படிப்பட்டவைகளாய் இருப்பினும், அவர்களுடைய பிரச்சனைகளில் உதவுவதற்காகத் தேவன் நமக்கு நம்பிக்கையின் செய்தி யொன்றைத் தருகிறார்!

B. இந்த வசனப்பகுதியில், எல்லாரும் ஆறுதல்படுத்தப்படுகிறோம் (2:7; 7:5முதல்.).

1. கொரிந்து தீத்துவை ஆறுதல்படுத்திற்று. இவ்விதமாக தீத்து பவுலை ஆறுதல்படுத்த முடிந்தது. பவுல் கொரிந்தி யர்களை ஆறுதல்படுத்தினார். முடிவில், மனந்திரும்பியிருந்த சகோதரரை ஆறுதல்படுத்தும்படி, கொரிந்தியர்களுக்குப் பவுல் புத்தி சொன்னார்.
2. அந்த விதமாகத்தான் தேவனுடைய ஆறுதல் செயல்படுவதாய் இருக்கிறது. அது ஒரு இருதயத்திலிருந்து மற்றொரு இருதயத் திற்கு வழிய வேண்டும்!

முடிவுரை

நாம் ஊக்கப்படுத்தப்பட்டவர்களாய் இருப்போம்! நாம் பிறரை ஊக்கப்படுத்துவோம்!

*9*

# கலாத்தியர்: கிறிஸ்துவுக்குள் சுயாதீனம்

***தலைப்பு***

*கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபமானது அதைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயரால், குறிப்பாக, "கலாத்தியாவில் இருந்த சபைகளின்" (1:2) பெயரால் தலைப்பிடப்பட்டுள்ளது. கலாத்தியா என்பது இப்போதைய துருக்கி நாட்டில் இருந்த பெரிய ரோமமாகாணமாகும். இது மேற்கில் ஆசியா மாகாணம், கிழக்கில் கப்பதோக்கியா, தெற்கில் பம்பிலியா மற்றும் சிலிசியா, வடக்கில் பித்தினியா மற்றும் பொந்து ஆகியவற்றினால் சூழப்பட்டிருந்தது.*

***பின்னணி***

*பவுல் தமது முதல் சுவிசேஷப் பயணத்தில், கலாத்தியா மாகாணத்தின் தெற்குப்பகுதியில் பல சபைக்குழுக்களை நிலைநாட்டியிருந்தார்: இக்கோனியம், லீஸ்திரா, மற்றும் தெர்பை (நடபடிகள் 13:51-14:23). பவுல் தமது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தில், இந்த சபைக்குழுமங்களை மறுபடியும் பார்வையிட்டார் (நடபடிகள் 16:1-3). லீஸ்திராவில் இவரது குழுவினருடன் தீமோத்தேயு இணைந்து கொண்டார். பவுல் தமது மூன்றாவது சுவிசேஷப் பயணத்திலும் கலாத்தியாவுக்குச் சென்றார் (நடபடிகள் 18:23; 1 கொரிந்தியர் 16:1, 2ஐக் காணவும்).*

*கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபம் பவுலின் தொடக்ககாலக் கடிதங்களில் ஒன்றாகும், ஒருவேளை இது அவரது முதல் கடிதமாயிருந்திருக்கும் என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. பவுல் தமது முதல் சுவிசேஷப் பயணத்தின் போது நிலை நாட்டியிருந்த சபைக்குழுமங்களுக்கு, அவர் கடிதங்கள் எழுதினார் என்றால், ஒரு முந்திய தேதி சாத்தியக் கூறுள்ளதாக இருக்கும். இருப்பினும், சிலர் பவுல் தமது இரண்டாவது மற்றும் மூன்றாவது சுவிசேஷப் பயணங்களின்போது மற்ற சபைக் குழுமங்களை நிலைநாட்டினார் என்று யூகிக்கின்றனர் மற்றும் இந்தக்கடிதம் அந்தப் பயணங்களுக்குப்பின்பு எழுதப்பட்டிருக்கலாம் என்று தேதியிடுகின்றனர். கி.பி. 48 மற்றும் 55க்கு இடையில் இக்கடிதம் எழுதப்பட்டது என்று தேதியிடுதல் நமக்குப் பாதுகாப்பானதாக உள்ளது.*

*கலாத்தியருக்கு இந்த நிருபம், தொடக்ககால சபையினால் எதிர் கொள்ளப்பட்ட ஒரு பிரதான பிரச்சனையுடன் போரிடுவதற்காக எழுதப்பட்டது. யூதத்துவப் பின்னணியைக் கொண்டிருந்த சில கிறிஸ்தவர்கள், பழைய ஏற்பாட்டுப்பிரமாணத்தைக் கிறிஸ்தவர்கள் கைக்கொள்வது அவசியம் என்று போதித்துக்கொண்டிருந்தனர் (நடபடிகள் 15:1, 24); இவர்கள் பெரும்பாலும் "யூதத்துவப் போதகர்கள்" என்று அழைக்கப்பட்டனர். பிரமாணத்தை வலியுறுத்திய மற்றவர்களின் மத்தியில், இவர்கள் மதரீதியான சடங்காச்சாரம் என்ற வகையில் கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர் (6:12, 13). இவர்களைப் பவுல் எதிர்த்து நின்றதால் (2:3; 5:2, 3, 6, 11; 6:15), பவுலின் அதிகாரத்தை இவர்கள் எதிர்த்து நின்று, அவர் பேதுரு*

*மற்றும் பன்னிருவரில் எஞ்சிய மற்றவர்களை அழைக்கும் அதே கருத்துணர்வில் அப்போஸ்தலராயிருந்தார் என்பதை மறுத்தனர். இவ்விதமாகப், பவுல் இந்தக் கடிதத்தைத் தமது அப்போஸ்தலத்துவத்திற்கான ஒரு தற்காப்பு வாதத்துடன் தொடங்கினார் (1:1).*

*"கிறிஸ்துவுக்குள் சுயாதீனம்" என்பது இந்தக்கடிதத்தின் திறவுகோல் ஆய்வுக்கருத்தாக உள்ளது (5:1). இருப்பினும், பவுல் அந்தச் சுயாதீனம் [துன்மார்க் கமாய் நடப்பதற்கான] அனுமதியல்ல என்று வலியுறுத்தினார் (5:13, 19-21). நாம் ஞானஸ்நானம் பெற்றபோது, நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டோம் (3:27); இப்போது கிறிஸ்து நமக்குள் வாழ்கின்றார் மற்றும் நமது வாழ்வானது எப்போதுமே நமது கர்த்தருடைய வாழ்வைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும் (5:22-24; 6:2)!*

*இந்தக் கடிதம் பவுலின் எழுதுகோலில் இருந்து வந்த மிகப்பலம் வாய்ந்த மொழிநடையைக் கொண்டுள்ளது (4:16ஐக் கவனிக்கவும்). இந்தக்கடிதமானது, தொடக்கத்தில் பவுலின் வழக்கமான "நன்றி செலுத்துதல்" வசனங்களைக் கொண்டிராத ஒரே கடிதமாகும் என்ற உண்மையானது, பவுல் எவ்வளவாகக் கலவரம் அடைந்திருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கலாம். பவுலின் சொந்தக் கையெழுத்தில் இப்புத்தகம் எழுதப்பட்டது (6:11முதல்.; பவுல் தமது கடிதங்களைப் பிறரிடம் கூறி எழுதச்செய்தல் என்பது அவரது வழக்க மாய் இருந்தது) என்பதற்கான குறிப்பின் கூடுதல் ஒன்று இப்புத்தகம் பற்றிய இன்னொரு தனித்தன்மையாக உள்ளது. ஒருவேளை இது இவ்விஷயத்தைப் பவுல் எவ்வளவு தீவிரமானதாகக் கருதினார் என்று மனதில் பதிய வைப்பதற்காகக் குறிப்பிடப்பட்டிருக்கலாம்.*

**வரைகுறிப்பு**

I. *பவுல் தமது அப்போஸ்தலத்துவத்தைத் தற்காக்கின்றார் (1; 2).*

II. *பவுல் நியாயப்பிரமாணத்தையும் சுவிசேஷத்தையும் வேறுபடுத்தி ஒப்பிடுகின்றார் (3; 4).*

   A. *மோசேயின் நியாயப்பிரமாணம் தற்காலிகமானதாக இருந்தது, இயேசு வரும்வரையில் (3:16, 19) மனிதர்கள் தங்கள் பாவங்கள் பற்றியும், இரட்சிப்பின் அவசியம் பற்றியும், இது ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்துடன் கூட்டப்பட்டது (ஆதி யாகமம் 22:18). நாம் இனியும் பழைய ஏற்பாட்டின் பிரமாணத்தின் கீழ் இருப்பதில்லை (3:24, 25; 4:31; 5:3, 4ஐக் காணவும்).*

   B. *நாம் இப்போது இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம் (3:7, 11, 22: 2:16ஐக் காணவும்), இது கீழ்ப்படிதலில் வெளிப்படுத்தப்படுகிற விசுவாசமாக உள்ளது (3:26, 27).*

III. *பவுல் இந்த சத்தியங்களின் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்து கின்றார் (5; 6).*

**கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்**

*இன்றைய நாட்களில் இன்னமும் யூதத்துவப் போதகர்கள் நம்மி டையில் உள்ளனர், அவர்கள் நம்மைப் பழைய ஏற்பாட்டிற்குத் திரும்ப*

அழைத்துச்சென்று, ஓய்வுநாளை ஆசரித்தல், தனிப்பட்ட ஒரு ஆசாரியத்துவம், தூபம் காட்டுதல், ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் மற்றும் பிற பழக்கங்களை நியாயப்படுத்துகின்றனர். இவர்கள் பவுலின் முடிவுகளைக் கவனித்துக்கேட்பது அவசியமாய் இருக்கிறது. முதலாவது, பழைய ஏற்பாட்டில் இருந்து ஒருவர் எந்த ஒரு விஷயத்தையும் பொறுக்கி எடுத்துத் தேர்ந்துகொள்ள இயலாது. மதரீதியான நடைமுறையொன்றை நியாயப்படுத்துவதற்குப் பழைய ஏற்பாட்டிற்குச் செல்லும் ஒருவர் அதை [பழைய பிரமாணத்தை] முழுவதும் கைக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றார் (5:3). இரண்டாவது, ஒருவர் ஒரேவேளையில் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் அமைப்பின்கீழ் இருக்க இயலாது. ஒருவர் தமது மதரீதியான நடைமுறைகளைப் பழைய ஏற்பாட்டினால் நியாயப்படுத்துவதைத் தேர்ந்துகொள்வார் என்றால், அவர் புதிய ஏற்பாட்டின் கிருபை என்ற அமைப்புமுறையை விட்டுத் தம்மைத் தாமே நீக்கிக்கொள்கின்றார் (5:4); மற்றும் கிருபையின்றி, ஒருவர் இரட்சிக்கப்பட இயலாது!

மோசேயின் பிரமாணத்தின்மூலம் இரட்சிப்பு இல்லை, ஆனால் பிரமாணம் எதுவாக இருந்தபோதிலும், பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமாக இரட்சிப்பு என்ற கருத்திற்குப் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும் என்பதே இந்தக்கடிதத்தில் பவுலின் திட்டவட்டமான போதனையாக இருக்கிறது. இது கிறிஸ்தவத்தில் "பிரமாணங்கள்" எதுவும் இல்லை என்று அர்த்தப்படுத்துவதில்லை. பிரமாணம் இல்லையென்றால், பாவம் என்பதே இராது (ரோமர் 5:13). மனிதர்கள் தொடர்ந்து பாவம் செய்கின்றபடியால் (ரோமர் 3:23), மனிதர்கள் இணக்கமுள்ளவர்களாய் இருப்பதற்காகத் தேவன் பிரமாணங்களைக் கொண்டுள்ளார் என்ற கருத்து தொடருகிறது. புதிய ஏற்பாட்டின் கொள்கைகளைக் குறிப்பிடுவதற்கு "பிரமாணம்" என்ற வார்த்தையைப் புதிய ஏற்பாடு அவ்வப்போது பயன்படுத்துகிறது (6:2ஐக் காணவும்). எவரொருவரும் பிரமாணத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க இயலாது (முழுமையான பிரமாணம் என்று ஒன்றுகூட இருந்ததில்லை; யாக்கோபு 1:25ஐக் காணவும்) என்பதால், பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன்மூலம் எவரொருவரும் இரட்சிக்கப்பட இயலாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இது "அன்பினால் கிரியை செய்யும் விசுவாசம்" (5:6), கிறிஸ்தவராவதற்கு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல் (3:26, 27; மாற்கு 16:16ஐக் காணவும்), அல்லது அன்பு மற்றும் ஊழியம் ஆகியவற்றின் வாழ்க்கையை வாழுதல் (5:14; 6:2) ஆகியவற்றின் இன்றியமையாமையை விலக்கிப்போடுவதில்லை. நாம் நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட்டபின்பும்கூட, நாம் நமது இரட்சிப்பை ஈட்டிக்கொள்வதில்லை என்று இது அர்த்தப்படுகிறது; இன்னமும் நாம் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கம் ஆகியவற்றால் இரட்சிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றோம். ஆகையால், நாம் செய்துள்ளவற்றில் அல்ல, ஆனால் கிறிஸ்துவின் சிலுவையிலேயே நமது மகிமைப்படுதல் இருக்கிறது (6:14; ரோமருக்கு எழுதின நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்).

இந்தப்புத்தகம் இறையியல் மறைமுகக் கருத்துக்களினால் கனமானதாக இருப்பினும், நடைமுறை போதனையும் இதில் ஏராளமாக உள்ளது: கிறிஸ்தவர்கள் ஒருவர் பிறருடன் உறவுபடுதல் எப்படி (5:13-15; 6:1, 2, 10), தேவனையும் தேவனுக்குரிய விஷயங்களையும் மதித்தல் (1:6-9; 6:6, 7), முதலியன. நாம் போதித்து பிரசங்கிக்கும்போது, நமது போதனை நமது

உரையைக் கேட்பவர்களின் வாழ்வில் எவ்வாறு நடைமுறைப்படுகிறது என்பதற்கு எப்போதுமே "நிபந்தனைக்கோடு" இருக்க வேண்டும்.

## தேவன் தமது வாக்குத்தத்தங்களைக் காக்கிறார்! (கலாத்தியர் 3:6-29)

யூதத்துவப் போதகர்கள் கலாத்தியா மாகாணத்திற்கு வந்து, புறஜாதிக் கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் செய்யப்படுவதும் மோசேயின் பிரமாணத்தினுடைய பிறவிதிகளுக்குக் கீழ்ப்படிவதும் அவசியமாக உள்ளது என்று கூறினர். இந்தப்பகுதியில் ஊழியம் செய்திருந்த பவுல் இதனால் கவலையுற்றார் (நடபடிகள் 16:6; 18:23; 1 கொரிந்தியர் 16:1). அவர் கலாத்திய மக்களை புத்திமான்கள் என்று கருதினார்; அவர், "... நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்?" (3:1) என்று கேட்டார். இப்புத்தகத்தின் பெரும்பான்மைப் பகுதியானது, நாம் பழைய ஏற்பாட்டின்கீழ் இருப்பதில்லை என்ற உண்மையை நேரடியாக அல்லது மறைமுகமாகக் கையாளுகிறது. ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தைப் பவுல் அவர்களுக்கு நினைவூட்டும் பகுதியான 3ம் அதிகாரத்தை, நாம் கண்ணோக்குவோம்.

I. சந்ததி பற்றிய மாபெரும் வாக்குத்தத்தம்: (3:6-18).
   A. மனிதன் பாவம் செய்து தேவனைவிட்டு வீழ்ந்தபின்பு, மனிதனின் மீட்புக்கான திட்டத்தை தேவன் உடனடியாக அறிவித்தார்: ஸ்திரீயின் வித்து (ஆதியாகமம் 3:15). அதேவகையான "சந்ததி" வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டது (ஆதியாகமம் 12:1-3; 22:18). இந்த வாக்குத்தத்தம் ஈசாக்குக்கும் (ஆதியாகமம் 26:4) யாக்கோபுக்கும் (ஆதியாகமம் 28:14) திரும்பக் கொடுக்கப்பட்டது.
   B. இந்த மாபெரும் வாக்குத்தத்தத்தின் பல பண்புகளைப் பவுல் வலியுறுத்துகின்றார்.
      1. சந்ததி (இதைப் பவுல், "சிலுவையில் தூக்கப்பட்ட" இயேசு கிறிஸ்துவாக அடையாளம் காணுகின்றார்) வருவதாக இருந்தது (வசனங்கள் 13, 14, 16ஐக் காணவும்).
      2. இந்த வாக்குத்தத்தம் பிரமாணத்தைப் பூரணமாகக் காத்துக் கொள்வதன் அடிப்படையில் இல்லாமல் (வசனங்கள் 10-13), ஆபிரகாமுடைய விசுவாசத்தின் அடிப்படையில் (வசனம் 6) அமைந்திருந்தது.
      3. இந்த வாக்குத்தத்தம் புறஜாதியார் உட்பட (வசனங்கள் 8, 14) எல்லா மக்களையும் அரவணைத்தது.
      4. விசுவாசத்தின் அடிப்படையில் எல்லா மனிதர்களும் இந்த வாக்குத்தத்தத்திற்குச் சுதந்தரவாளிகள் ஆக முடியும் (வசனங்கள் 7-9, 14).

II. ஒரு தற்காலிக அளிப்பு: நியாயப்பிரமாணம் (3:15-22).
   A. ஆபிரகாமுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தம் (மற்றும் அவருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை ஆகியவற்றுடன்) மோசேயின்

*நியாயப்பிரமாணம் தற்காலிகமாகக் கூட்டப்பட்டது.*

1. *வாக்குத்தத்தம் ஏற்படுத்தப்பட்டு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பு - இந்த உடன்படிக்கை யூதாவுக்கு மறு உறுதிப்படுத்தப்பட்டுச் சுமார் 430 ஆண்டுகளுக்குப் பின்பு (ஆதியாகமம் 46:1-4) - நியாயப்பிரமாணம் வந்தது.*
2. *நியாயப்பிரமாணம் இந்த வாக்குத்தத்தத்தைவிடத் தாழ்ந்ததாக இருந்தது.*
   a. *ஒரு மத்தியஸ்தர் மூலமாக நியாயப்பிரமாணம் வந்தது (வசனங்கள் 19, 20); வாக்குத்தத்தமோ தேவனுடன் "முகம்முகமாக" வந்தது.*
   b. *வாக்குத்தத்தம் ஜீவனைக் கொண்டு வருகிறது; நியாயப்பிரமாணமோ அதைக்கொண்டு வரவில்லை (வசனம் 21).*
3. *பின்பு நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?*
   a. *பாவம் நிறைந்த மனிதர்களைத் தண்டித்து உணர்த்துவதற்கு (வசனங்கள் 19-22).*
   b. *மனிதர்களை (குறிப்பாக யூத இனத்தவரை)க் கிறிஸ்துவினிடத்திற்கு "வழிநடத்துவதற்கு" (வசனம் 24).*

B. *நியாயப்பிரமாணம் தனது நோக்கத்தை நிறைவேற்றியபோது, அது எடுத்துப்போடப்பட்டது.*

1. *அது, "அந்தச் சந்ததி [அதாவது, கிறிஸ்து] வருமளவும் மாத்திரம் செல்லத்தக்கதாக இருந்தது" (வசனங்கள் 16, 19).*
2. *இது நடைபெற்றபின்பு, மனிதர்கள் இனியும் நியாயப்பிரமாணத்தின்கீழ் இருப்பது இல்லை (வசனங்கள் 24, 25).*

III. *மெய்சிலிர்க்கச்செய்யும் ஒரு சாத்தியக்கூறு: ஒரு சுதந்தரவாளி (3:22-29).*

A. *சந்ததி வந்திருந்தார், அவர் நமக்காக மரித்திருந்தார் (வசனங்கள் 13, 14, 16, 22, 24)!*

1. *அவர் மரித்தபோது, இது பழைய ஏற்பாட்டு முறைமையின் முடிவாக இருந்தது. (வசனம் 13; கொலோசெயர் 2:14முதல். காணவும்).*
2. *அவர் மரித்தபோது, இது மனிதகுலத்துடனான அவரது உடன்படிக்கையின் தொடக்கமாக இருந்தது (வசனங்கள் 24, 25; எபிரெயர் 9:16, 17ஐக் காணவும்).*

B. *இயேசுவின் புதிய உடன்படிக்கை விசுவாசத்தின் அடிப்படையில் ஆனது (வசனங்கள் 22-26) - ஞானஸ்நானத்தில் வெளிப்படுத்தப்படும் விசுவாசத்தின் (வசனம் 27) - அடிப்படையிலானதாக உள்ளது. இதன் அழகுமிக்க விளைவுகள் பின்வருமாறு:*

1. *நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகின்றோம் (வசனம் 27).*
2. *நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்கின்றோம் (வசனம் 27).*
3. *நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றிணைக்கப்படுகின்றோம் (வசனம் 28).*

4. *நாம் கிறிஸ்துவினுடையவர்களாகின்றோம் (வசனம் 29).*

C. *எல்லா மனிதர்களும் இந்த வாக்குத்தத்தத்திற்கு உள்ளடக்கப்படுகின்றனர் (வசனம் 28); சிலுவையின்கீழ் உள்ள தரை சமதளமாக உள்ளது.*

D. *நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும்போது, நாம் "வாக்குத் தத்தத்தின்படியே சுதந்தரர்களாய்" இருக்கின்றோம் (வசனம் 29)!*

*முடிவுரை*

*தேவன் கடந்த காலத்தில் தமது வார்த்தையைக் காத்திருந்தார்; அவர் இன்றைய நாட்களிலும் இன்னமும் தமது வார்த்தையைக் காத்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் எப்போதுமே அவரில் நிச்சயமாய் இருக்க முடியும்! அவர் உங்களில் நிச்சயமாய் இருக்க முடியுமா?*

# 10

# எபேசியர்: கிறிஸ்துவும் அவரது சபையும்

***தலைப்பு***

*பவுலினால் எழுதப்பட்ட இந்தக் கடிதம், வசனம் 1ல் குறிப்பிடப் பட்டவர்களைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது: "எபேசுவில் இருக்கிற பரிசுத்தவான்கள்." "எபேசுவில்" என்ற சொற்றொடரானது சில பழைய கையெழுத்துப்பிரதிகளில் காணப்படாதபடியால், இது எபேசு தொடங்கி சபைகளின் மத்தியில் சுற்றுக்கு விடப்படுதல் என்ற நோக்கங்கொண்ட ஒரு பொதுவான கடிதமாக இருந்திருக்கலாம். பவுல் எபேசு நகரத்தில் பல ஆண்டுகள் ஊழியத்தில் செலவிட்டிருந்தபோதிலும், இந்த நிருபத்தில், தனிநபர்களுக்குரிய வாழ்த்துதல் எதுவும் காணப்படுவதில்லை என்ற உண்மையானது மேற் கூறப்பட்ட கோட்பாட்டிற்கு ஆதரவளிக்கிறது.*

***பின்னணி***

*எபேசியருக்கு எழுதிய நிருபம், "சிறை நிருபங்கள்" என்று அழைக்கப்படும் நான்கு நிருபங்களில் முதலாவதாக உள்ளது. இந்த நான்கு நிருபங்களுமே பவுலின் கட்டுக்கள் பற்றி குறிப்பிடுகின்றன (3:1; பிலிப்பியர் 1:7, 13, 14; கொலோசெயர் 4:3, 18; பிலேமோன் 9, 13ஐக் காணவும்). இந்த நிருபங்களுக்கு இடையில் பல தொடர்புகள் உள்ளன. இவற்றில் இரு நிருபங்கள் தீகிக்குவினால் எடுத்துச்சென்று தரப்பட்டன (6:21; கொலோசெயர் 4:7). இவற்றில் மூன்று நிருபங்கள் தீமோத்தேயுவைக் குறிப்பிடுகின்றன (பிலிப்பியர் 1:1; கொலோசெயர் 1:1; பிலேமோன் 1). இவற்றில் இரு நிருபங்கள் ஒநேசிமுவைக் குறிப்பிடுகின்றன (கொலோசெயர் 4:7; பிலேமோன் 10). இரு நிருபங்களில், ஒரே பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் வாழ்த்துக்களை அனுப்புகின்றனர் (கொலோசெயர் 4:10-14; பிலேமோன் 23, 24). அனேகமாக இந்த நான்கு நிருபங்களுமே ஒரே காலகட்டத்தில் ஒரே இடத்தில் இருந்து எழுதப் பட்டிருந்தன எனலாம். பவுலின் முதல் சிறையிருப்பின்போது ரோமாபுரி என்பது இதற்குச் சாத்தியமான இடமாக உள்ளது, அங்கிருந்து கி.பி. 60-62ல் இவை எழுதப்பட்டிருக்கலாம்.*

*பவுல் நீண்ட காலமாக எபேசு நகரத்தின்மீது ஆர்வம் கொண்டிருந்தார். அவர் தமது இரண்டாம் சுவிசேஷப்பயணத்தின் தொடக்கத்தில், அந்த திசையின் அருகில் செல்ல விரும்பியிருந்தார், ஆனால் அவருக்குத் தேவன் வேறு திட்டங்களைக் கொண்டிருந்தார். பவுல் அந்தப்பயணத்தில் இருந்து இல்லம் திரும்பிய வேளையில் எபேசுவில் சற்றுக்காலம் தங்கியிருந்தார் (அந்த வேளையில் அங்கு சபை நிலை நாட்டப்பட்டிருக்கலாம்). பவுல் தமது மூன்றாம் சுவிசேஷப் பயணத்தின்போது அங்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஊழியம் செய்தார் (நடபடிகள் 19). அவர் அங்கிருக்கையில், சுவிசேஷமானது அந்தப்பகுதி முழுவதி லும் பரவிற்று (நடபடிகள் 19:10; வெளிப்படுத்தின விசேஷம் 2:11). பவுல் எபேசுவில் இருந்து மக்கெதோனியாவுக்கும் அகாயாவுக்கும் சென்றார் (1 மற்றும் 2 கொரிந்தியர் நிருபங்களில் பின்னணிக்குறிப்புகளைக் காணவும்), பின்பு*

அவர் எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார். திரும்பிச்செல்லும் வழியில் அவர் எபேசுவில் இருந்த சபையின் மூப்பர்களுக்கு மாபெரும் பிரசங்கம் ஒன்றைப் பிரசங்கித்தார் (நடபடிகள் 20:17-38). பவுல் எருசலேம் சென்று சேர்ந்தபோது, அவர் கைது செய்யப்பட்டார். அவர் இரண்டு ஆண்டுகள் செசரியா நகரில் சிறை வைக்கப்பட்டிருந்தார், பின்பு ரோமாபுரியில் இரண்டு ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்தார். பவுல் இக்கடிதத்தை ரோமாபுரியிலிருந்து எழுதியிருப்பார் என்றால், இக்கடிதமானது அவர் எபேசுவுக்குச் சென்று வந்து நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பின்பு எழுதப்பட்டிருக்கும் என்றாகிறது.

எபேசியருக்கு எழுதிய நிருபம் ஓரளவுக்குச் சிறியதாக இருந்தாலும், இது பவுலின் மிகநேர்த்தியான முயற்சிகளில் ஒன்றாக உள்ளது. ஒரு சில அதிகாரங்களில் அவர் மனிதனுடைய மீட்பிற்குக் கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் கொண்டிருந்த மாபெரும் திட்டத்தை முன்வைக்கின்றார் - மற்றும் "கிறிஸ்துவுக்குள்" இருக்கும் ஒவ்வொருவரும் இதன் செயல்விளைவைக் கொண்டிருக்க வேண்டும்.

பிந்திய ஆண்டுகளில், எபேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு ஒரு திறவுகோல் நகரமாக நிலைத்து இருந்தது. பவுல் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டபோது, அவர் எபேசுவுக்கு வந்து, பின்பு அங்கே தீமோத்தேயுவை விட்டுச் சென்றார் என்பது உறுதி (1 தீமோத்தேயு நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்). மேலும், அப்போஸ்தலரான யோவான் தமது வாழ்நாளின் கடைசிப்பகுதியில் எபேசு நகரத்தில் இருந்தார் என்று ஒரு பலத்த பாரம்பரியம் கூறுகிறது (யோவான் சுவிசேஷத்திற்கான குறிப்புகளைக் காணவும்). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கு எழுதப்பட்டது, இது எபேசு நகரத்தில் இருந்த சபையைக் குறிப்பிடுதலைக் கொண்டு தொடங்குகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 2:11).

**வரைகுறிப்பு**

I. உபதேசரீதியான விஷயங்கள்: தேவன் நமக்கு என்ன செய்திருக்கின்றார் (1-3).
   A. பவுலின் வாழ்த்து (1:1, 2).
   B. தேவன் நம்மைக் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்து இருக்கின்றார் (1:3-14).
   C. பவுலின் முதல் ஜெபம் (1:15-23).
   D. தேவன் தமது கிருபையினால் நம்மை இரட்சித்து இருக்கின்றார் (2:1-10).
   E. தேவன் நமக்கு - தம்மோடும் நமது சகமனிதர்களோடும் - சமாதானத்தைக் கொடுத்து இருக்கின்றார் (2:11-22).
   F. தேவன் தமது நித்தியமான நோக்கங்களை வெளிப்படுத்தினார் (3:1-13).
   G. பவுலின் இரண்டாவது ஜெபம் (3:14-21).

II. நடைமுறை: ஆகையால் நாம் என்ன செய்ய வேண்டும் (4-6).
   A. ஒருமைப்பாட்டிற்காகப் பாடுபடுதல் (4:1-6).
   B. தேவன் நமக்குக் கொடுத்துள்ள வரங்களை அவரது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துதல் (4:7-16).

C. *"பழைய மனுஷனை" களைந்துபோடுதல்; "புதிய மனுஷனை" தரித்துக் கொள்ளுதல் (4:17-5:20).*
D. *பிறருடன் எவ்வாறு உறவுபடுவது என்பதைக் கற்றுக்கொள்ளுதல் (5:21-6:9).*
   1. *கணவர்களும் மனைவியர்களும் (5:22-33).*
   2. *பெற்றோர்களும் பிள்ளைகளும் (6:1-4).*
   3. *எஜமானர்களும் வேலைக்காரர்களும் (அடிமைகளும்) (6:5-9).*
E. *கிறிஸ்தவ சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுதல் மற்றும் ஜெபித்தல் (6:10-20).*
F. *முடித்தல் (6:21-24).*

***எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்***

*எபேசியருக்கு எழுதிய நிருபம் "சபை நிருபம்" என்று அழைக்கப்பட் டுள்ளது. இது சபையின் விஷயங்களைப் பற்றிய ஒரு சிறு பாடத்திட்டமாக உள்ளது: கிறிஸ்து, சபையில் எல்லாவற்றிற்கும்/எல்லாருக்கும் தலையாக இருக்கின்றார் (1:22; 5:28ஐக் காணவும்); சபை கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றது (1:22, 23); நாம் சபையாகிய இந்த சரீரத்தில் தேவனுடன் ஒப்புரவாக்கப்படுகின்றோம் (2:16); தேவனுடைய மகிமையும் ஞானமும் சபையின்மூலம் அறியப்படுகின்றன (3:10, 21); சபையானது தேவனுடைய நித்திய திட்டத்தின் அங்கமாயிருந்தது (3:10, 11); சபை என்ற ஒரே சரீரம் மாத்திரம் உள்ளது (4:4; 2-16ஐக் காணவும்); சபை வளரவேண்டும் என்று தேவன் நோக்கங்கொண்டுள்ளார் (4:16); கிறிஸ்துவே சரீரமாகிய சபையின் இரட்சகராய் இருக்கின்றார் (5:23); சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது (5:24); கிறிஸ்து, சபையில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (5:25, 29); சபை பரிசுத்தமானதாக இருக்க வேண்டும் என்று கிறிஸ்து விரும்புகின்றார் (5:25-27); கிறிஸ்துவும் சபையும் ஒன்றாயிருக்கின்றன[ர்] (5:31, 32); கர்த்தருடைய சபையானது சிறிதளவே முக்கியத்துவம் வாய்ந்தது என்று யாரேனும் கூற முடியுமா?*

*பவுலினுல் பயன்படுத்தப்பட்ட "ரகசியம்" என்ற வார்த்தை (1:9; 3:3, 4, 9; 5:32; 6:19) "தூண்டுதல் செய்பவர்களுக்கு மாத்திரம் கிடைக்கப்பெறும் ரகசிய மான விஷயங்கள்" என்பதைக் குறிப்பிடுவதில்லை. மாறாக, அது கடந்தகாலத்தில் ரகசியமாய் இருந்து, ஆனால் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள விஷயங்களைக் குறிக்கிறது (3:3-5). பவுல் தமது வாசகர்கள் (மற்றும் நாம்) "இந்த ரகசியத்தை" அறிய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார் (3:4).*

*"கிறிஸ்துவுக்குள்" என்பது பவுலுக்கு விருப்பமான சொற்றொடர்களில் ஒன்றாக உள்ளது. அவர் இப்படிப்பட்ட சொற்றொடர்களைத் தமது கடிதங்களில் நூற்றுக்கும் அதிகமான முறைகள் பயன்படுத்தியிருக்கின்றார்; இந்தக்குறிப்புகளில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் உள்ளது. இந்தச் சொற்றொடரைக் கவனியுங்கள்; இதை அடையாளமிட்டுக் கொள்ளுங்கள்; இதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியும் என்பது என்ன ஒரு அற்புதமான சிந்தனையாக உள்ளது (பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள் என்ற பகுதி யைக் காணவும்)!*

## *"ஆவியின் ஒருமைப்பாடு"*
## *(எபேசியர் 4:1-6)*

*நடைமுறைப் பயன்பாட்டின் முதல் பகுதி, ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறது (4:3, 13). தேவன் தமது மக்கள் ஒருமைப்பட்டிருக்க வேண்டும் என்று விரும்புகின்றார் (நீதிமொழிகள் 6:19; சங்கீதம் 133:1; யோவான் 17:20-23; 1 கொரிந்தியர் 1:10-13). ஒருமைப்பாட்டிற்கு மந்திரவாதச் சூத்திரங்கள் எதுவும் இல்லை; இதற்கு ஒவ்வொரு கிறிஸ்தவரின் பகுதியில் இருந்தும் ஊக்கமான முயற்சி தேவையாய் இருக்கிறது. நமது வசனப்பகுதி ஒருமைப்பாட்டிற்கு அத்தியாவசியமான இரு விஷயங்களைத் தருகிறது:*

I. *ஆவியிலும் எண்ணப்போக்கிலும் ஒருமைப்பாடு (4:1-3).*

A. *நமது வாழ்வு தேவனுடைய மாபெரும் திட்டம் மற்றும் நோக்கம் ஆகியவற்றுடன் ஒத்திசைவு கொண்டிருக்க வேண்டும் (வசனம் 1; அதிகாரம் 3)!*

1. *இது ஒன்றாயிருப்பதை உள்ளடக்குகிறது (வசனங்கள் 2-6)!*
2. *இது ஒருமைப்பாட்டின் ஆவியுடன் தொடங்குகிறது (வசனங்கள் 2, 3)!*

B. *மற்றவர்களுடன் இணக்கமாய் இருப்பதற்கான நான்கு இன்றியமையாத விஷயங்கள் (வசனம் 2).* KJV *அடைப்புக்குறிக்குள் காணப்படுகிறது.*

1. *தாழ்மை* [lowliness]: *நாம் நம்மைப்பற்றி மிக உயர்வாக எண்ணக் கூடாது (ரோமர் 12:3).*
2. *சாந்தம்* [meekness]: *இது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பலமாகும்; கீழ்ப்படிதல் உள்ள ஒரு ஆவியாகும் (5:21).*
3. *பொறுமை* [long-suffering]: *இது "நீடிய பொறுமை" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது; அதாவது, முன்கோபம் கொள்ளாதிருத்தல்.*
4. *அன்பினால் ஒருவரையொருவர் தாங்குதல்* [forbearing]: *நாம் நமது சொந்தத் தவறுகளைக் குறித்து அறிந்தவர்களாய் மற்றவர் களின் தவறுகளை "சகித்துக் கொள்ள வேண்டும்" (மத்தேயு 17:17ஐக் கவனிக்கவும்).*

C. *"ஆவியில் ஒருமைப்பாட்டை" பராமரிப்பதற்கு முயற்சி தேவைப் படுகிறது (வசனம் 3).*

1. *ஊக்கமுடனிருத்தல்* [endeavoring]: NEB *வேதாகமத்தில்* "spare no effort" [*"முயற்சியை விடாதிருத்தல்"*] *என்றுள்ளது.*
2. *பாதுகாத்தல்* [to keep]: *ஒருமைப்பாடு தேவனிடத்தில் இருந்து வருவதாயுள்ளது (2:14); அதைப் பராமரித்தல் நமது பணியாக உள்ளது.*
3. *ஆவியில் ஒருமைப்பாடு: 1 கொரிந்தியர் 12:13ஐக் கவனிக்கவும். தேவனுடைய ஆவியில் இருந்து வருகிற ஒருமைப்பாடு நாம் பாதுகாக்க வேண்டிய ஒன்றாக உள்ளது (வசனங்கள் 4-6 கிரேக்க மொழியில் ஒரே வாக்கியமாக உள்ளது என்பதைக் கவனியுங்கள்).*

II. போதனை மற்றும் நடைமுறை ஆகியவற்றில் ஒருமைப்பாடு (4:4-6).
   A. தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஆவி மற்றும் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட போதனை ஆகியவற்றிற்கு இடையில் ஒரு சமான நிலை இருக்க வேண்டும்.
      1. நாம் உபதேசத்தை மறந்துவிட்டு "அன்புசெய்தலை" மாத்திரம் கைக்கொள்ள இயலாது.
      2. நாம் கிறிஸ்தவத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்திருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 1:10-13; எபேசியர் 4:13-15; பிலிப்பியர் 2:2).
         a. "ஏழு ஒன்றுகள்" அடிப்படைகளின் மாதிரியாய் உள்ளன (மற்ற அடிப்படைகள் கர்த்தருடைய இராப்போஜனத்தை உள்ளடக்குகின்றன).
         b. அத்தியாவசியமானவைகள், விசுவாச விஷயங்கள், இதற்கு எதிராக-அத்தியாவசியமற்றவைகள், கருத்து விஷயங்கள் (ரோமர் 10:17; 14).
   B. நாம் பொதுவாகக் கொண்டுள்ள விஷயங்களினிமித்தம் நாம் ஒருமைப்பட்டிருக்க வேண்டும்: "ஏழு ஒன்றுகள்."
      1. நிறுவனத்தின் ஒருமைப்பாடு: ஒரே சரீரம் (வசனம் 4).
         a. சபையே சரீரமாக இருக்கிறது (எபேசியர் 1:22, 23; கொலோசெயர் 1:18).
         b. இது "காணக்கூடாத" சரீரமல்ல, ஆனால் உள்ளூர் சபைக் குழுமத்தின் (ரோமர் 16:16) உறுப்பினர்களான கிறிஸ்தவர்களைக் கொண்டதாக உள்ளது (ரோமர் 12; 1 கொரிந்தியர் 12).
      2. ஏவுதலின் ஒருமைப்பாடு: ஒரே ஆவி (வசனம் 4).
         a. சந்தர்ப்பப்பொருளில் இது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது (இந்தப்புத்தகத்தில் பன்னிரெண்டு முறை இக்கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது).
         b. ஆவியானவரின் போதனையினால் வழிநடத்தப்படுதல் (6:17), நாம் ஞானஸ்நானம் பெற்று ஆவியின் கனிகளை (கலாத்தியர் 5:22, 23 ) நமக்குள் மேம்படுத்திக்கொள்ள உதவுவதற்காகப் பரிசுத்த ஆவியானவரை ஒரு கொடையாகப் பெறுகின்றோம் (நடபடிகள் 2:38).
      3. குறிக்கோளின் ஒருமைப்பாடு: ஒரே நம்பிக்கை (வசனம் 4).
         a. மனிதர்கள் பூமிக்குரிய கற்பனை உலகம் போன்ற, பல நம்பிக்கைகள் பற்றிப் போதிக்கின்றனர்.
         b. பரலோகமே கிறிஸ்தவர்களின் "ஒரே நம்பிக்கையாக" உள்ளது (ரோமர் 5:2; கொலோசெயர் 1:5; தீத்து 1:2).
      4. அதிகாரத்துவத்தின் ஒருமைப்பாடு: ஒரே கர்த்தர் (வசனம் 5).
         a. "கர்த்தர்" என்பது "எஜமானர், ஆள்பவர்" என்று அர்த்தப்படுகிறது. இயேசு நமது வாழ்வின் கர்த்தராக இருக்கின்றார் (நடபடிகள் 2:36). இயேசு சகல அதிகாரங்களையும் கொண்டவராக இருக்கின்றார் (1:22, 23;

*மத்தேயு 28:18). நாம் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் (லூக்கா 6:46). நமக்கு ஆவிக்குரிய வேறொரு எஜமானர் இருப்பதில்லை.*

b. *பலர் "ஆண்டவர்" என்று அழைக்கப்படுகின்றனர் (1 கொரிந்தியர் 8:5), ஆனால் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட கர்த்தர் ஒருவர்தான் இருக்கின்றார்.*

5. *போதனையின் ஒருமைப்பாடு: ஒரே விசுவாசம் (வசனம் 5).*

 a. *இது அனேகமாக, புதிய ஏற்பாடு என்று நாம் அழைக்கின்ற போதனையின் அமைவைக் குறிக்கலாம் (யூதா 3).*

 b. *இது இயேசுவில் மையங்கொண்டுள்ள போதனையின் அமைவாக உள்ளது (யோவான் 8:24).*

6. *நடைமுறையில் ஒருமைப்பாடு: ஒரே ஞானஸ்நானம் (வசனம் 5).*

 a. *இது "ஒரே முழுக்காட்டுதல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு ஞானஸ்நானங்களில், பிரதான கட்டளையில் குறிப்பிடப் பட்டுள்ள ஞானஸ்நானம் மாத்திரமே (மத்தேயு 28:18-20), தேவனுடைய திட்டத் தின் அங்கமாக எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இந்த "ஒரே ஞானஸ் நானத்தின்" அத்தியவசியமான கருத்துக்களைப் பற்றிக் கவனியுங்கள்:*

  (1) *தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதல் (நடபடிகள் 8:38, 39; ரோமர் 6:3, 4).*

  (2) *கணக்கு ஒப்புவிக்கவேண்டிய வயதுள்ளவர்கள் (குழந்தைகள் அல்ல) (மத்தேயு 28:19, 20; மாற்கு 16:15, 16).*

  (3) *பாவத்தில் இருந்து இரட்சிக்கப்படுவதற்காக மற்றும் இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்ட சரீரமாகிய சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; 22:16; கலாத்தியர் 3:27).*

 b. *புதிய ஏற்பாட்டின் மாதிரியான "ஒரே ஞானஸ்நானம்" (நடபடிகள் 19:1-5) எல்லாருக்கும் தேவைப்படுகிறது.*

7. *ஆராதனையின் ஒருமைப்பாடு: ஒரே தேவன் (வசனம் 6).*

 a. *தேவனே ஒருமைப்பாட்டின் நிறைவான ஆதாரமூலமாயிருக்கின்றார்.*

 b. *கிறிஸ்தவர்கள், இவ்வுலகம் தேவனால்-படைக்கப்பட்டது ("எல்லாருக்கும் பிதா"), தேவனால் கட்டுப்படுத்தப்படுகிறது ("எல்லார்மேலும்"), தேவனால் நிலைநிறுத்தப்படுகிறது ("எல்லாரோடும்"), தேவனால் நிரப்பப்படுகிறது ("எல்லாருக்குள்ளும்") என்று விசுவாசிக்கின்றனர்.*

c. *நாம் எல்லா விஷயங்களிலும் தேவனைப் பிரியப்படுத்த முயற்சிக்க வேண்டும்!*

*முடிவுரை*

*ஒருமைப்பாடு என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருடைய பணியாக உள்ளது. நீங்கள் சரீரத்தில் இருக்கின்றீர்களா? ஆம் என்றால், நீங்கள் ஆவிக்குரிய ஒருமைப்பாட்டைக் கொண்டிருக்கின்றீர்களா?*

# 11

# பிலிப்பியர்: கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாயிருத்தல்

***தலைப்பு***

*பெற்றுக்கொண்டவர்களின் பெயரைக்கொண்டு பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் பெயரிடப்பட்டுள்ளது. குறிப்பாக, இப்புத்தகம் பிலிப்பி நகரத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டுள்ளது (1:1).*

***பின்னணி***

*பவுல், "மக்கெதோனிய மனிதனின் அழைப்பிற்கு" (நடபடிகள் 16:9, 10) பதில்செயலான தமது இரண்டாவது சுவிசேஷப்பயணத்தின்போது, அவரும் அவரது தோழர்களும், மக்கெதோனியாவில் (இப்போது கிரேக்க நாட்டின் பகுதி) இருந்த ரோமக்குடியேற்றத்தின் முக்கியமான நகரமான பிலிப்பிக்கு கடற்பயணமாய்ச் சென்றனர். பிலிப்பி ஒரு பெரிய நகரமாய் இல்லாவிட்டாலும், வரலாற்றுத் தனிச்சிறப்புக் கொண்டிருந்தது. பவுல் சுவிசேஷத்துடன் அங்கு சென்றதால்தான் நம்மில் பெரும்பான்மையானவர்கள் இந்நகரைப்பற்றி அறிகின்றோம். நடபடிகள் 16, அங்கு பவுலின் ஊழியம்பற்றிச் சிலவிஷயங்களைக் கூறுகிறது: லீதியாள் மற்றும் அவள் வீட்டாரின் மனமாற்றம், அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டிருந்த பெண் குணமாக்கப்படுதல், மற்றும் சிறைச்சாலை அதி காரியின் மனமாற்றம்.*

*பவுல் பிலிப்பி நகரைவிட்டுப் புறப்பட்டுச் சென்றபின்பு, அவர் அங்கிருந்த புதுக்கிறிஸ்தவர்களுடன் ஒரு நெருங்கிய தொடர்பைப் பராமரித்தார். அவர்கள் பவுல் பயணம் சென்றபோதெல்லாம், அவருக்கு உதவி அனுப்பினர் (1:5; 4:15, 16). அவர் தம்மால் இயன்றபோதெல்லாம் அவர்களைச் சென்று பார்ப்பதற்கு விசேஷ முயற்சிகளை மேற்கொண்டார்; அவர் இந்த சபையை மிகவும் நேசித்தார் (4:1). பவுல் ரோமாபுரியில் சிறைப்பட்டிருந்தபோது, அவர் பல "சிறை நிருபங்களை" எழுதினார் (எபேசியருக்கு எழுதிய நிருபம் பற்றிய குறிப்புகளைக் காணவும்). அவற்றில் ஒன்று, போராடிக்கொண்டிருந்த பிலிப்பி நகரின் சபைக்கு எழுதப்பட்ட தாகும் (1:1, 7, 13, 14; 4:22), இது கி.பி. 60-62ல் எழுதப்பட்டது.*

*இந்தக்கடிதம் ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தைப் போன்று, அடிப்படைக் கிறிஸ்தவ சத்தியத்தின் நெருக்கமான நியாயப்படுத்தப்பட்ட ஆய்வுகளை முன்வைப்பதற்கென்று எழுதப்படவில்லை. இது கொரிந்தி யருக்கு எழுதப்பட்ட நிருபங்களைப் போன்று அடிப்படையில், உபதேச மற்றும் ஒழுக்கரீதியான தவறுகளைத் திருத்துவதற்கென்றும் எழுதப்படவில்லை. மாறாக, இது ஒரு தனிப்பட்ட கடிதமாகும்.*

*இதை எழுதுவதற்குப் பவுல் குறைந்தபட்சம் நான்கு காரணங்களைக் குறிப்பிடுகின்றார். முதலாவது, அவர்கள் ரோமாபுரியில் இருந்த அவருக்கு உதவி அனுப்பியிருந்தனர் (1:5; 2:25முதல்.; 4:10, 14, 18), மற்றும் அவர் களுக்கு அவர் நன்றி தெரிவிக்க விரும்பினார். இரண்டாவது, மரணத்திற்கு ஏதுவாக வியாதிப்பட்டிருந்த எப்பாப்பிராதீத்து (2:25-30) மூலமாக உதவி*

*கொண்டுவரப்பட்டிருந்ததால் (2:25; 4:18), பவுல் எல்லா விஷயங்களைக் குறித்தும் அவர்களின் மனங்களை ஆறுதல்படுத்த விரும்பினார். மூன்றாவது, அவர் தீமோத்தேயுவை அவர்களிடத்தில் விரைவில் அனுப்புதல் மற்றும் பார்வையிடுவதற்கான தமது நீண்டகாலத் திட்டங்கள் ஆகியவை பற்றி அவர்கள் அறிய வேண்டுமென்று விரும்பினார் (2:19-23; 1:26; 2:24; பிலேமோன் 22ஐக் காணவும்). நான்காவது, அவர் அன்பு, ஊக்கப்படுத்துதல், மற்றும் பக்தி விருத்தியூட்டுதல் ஆகியவற்றின் செய்தியொன்றை அவர்களுக்கு அனுப்ப விரும்பினார்.*

*இந்தப் புத்தகத்தில் பல ஆய்வுக்கருத்துகள் ஊடாடுகின்றன. சந்தோஷம் என்பது இவற்றில் மிக முக்கியமானதாக உள்ளது (4:4-7). "சந்தோஷம்" மற்றும் "சந்தோஷமாயிருங்கள்" என்ற வார்த்தைகள் இந்தப் புத்தகத்தில் குறைந்தபட்சம் பதினாறு முறைகள் காணப்படுகின்றன. இது ஒரு "நேர்மறையான மன எண்ணப்போக்கினால்" உண்டான சந்தோஷமல்ல. மாறாக, இது கிறிஸ்துவுக்குள் இருக்கிற சந்தோஷமாகும். "கிறிஸ்துவுக்குள்" என்ற அல்லது அதற்கு இணையான சொற்றொடர்கள் இந்தப்புத்தகத்தில் பத்தொன்பது முறைகள் காணப்படுகிறது. நீங்கள் இந்தப்புத்தகத்தை வாசிக்கும்போது, "சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து" என்பதற்கான பல குறிப்புகளைக் கண்ணோக்குங்கள்.*

**வரைகுறிப்பு**

*பிலிப்பியருக்கு எழுதப்பட்ட இந்தக் கடிதம் தனிப்பட்ட கடிதமாயிருப்பதால், இதற்கு வரைகுறிப்பிடச் செய்யப்படும் முயற்சி எதுவும் செயற்கையாக இருத்தல் என்பது அவசியமாயுள்ளது. ஒரு வரைகுறிப்பு கிறிஸ்துவை மையங்கொண்டுள்ளது: அதிகாரம் 1: கிறிஸ்து நமது நோக்கமாயிருக்கின்றார் (1:21). அதிகாரம் 2: கிறிஸ்து நமது முன்மாதிரியாய் இருக்கின்றார் (2:5). அதிகாரம் 3: கிறிஸ்து நமது வெகுமதியாய் இருக்கின்றார் (3:13, 14). அதிகாரம் 4: கிறிஸ்து நமது அளிப்பாய் இருக்கின்றார் (4:13, 19). இங்கு பொருளடக்கங்களின் பட்டியல் ஒன்றுள்ளது:*

I. *பவுலின் வாழ்த்து (1:1, 2).*
II. *பிலிப்பியருக்காக நன்றி செலுத்துதல் மற்றும் ஜெபம் (1:3-11).*
III. *பவுலின் சிறையிருப்பு மற்றும் பொதுவாக உபத்திரவம் ஆகியவை பற்றிய உட்கண்ணோட்டம் (1:12-30).*
IV. *கிறிஸ்துவைப்போன்று தாழ்மையுடனும் கீழ்ப்படிதலுடனும் இருத்தலினுல் ஒன்றித்திருக்க ஊக்கப்படுத்துதல் (2:1-18).*
V. *தீமோத்தேயுவை அனுப்பிவைப்பதற்கான எதிர்காலத்திட்டமும் எப்பாப்பிரோத்தீத்துவை அனுப்பி வைப்பதற்கான உடனடியான திட்டமும் (2:19-30).*
VI. *கள்ளப்போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கைகள்; பவுல் தாமே பின்பற்றத் தகுதியான ஒரு உதாரணத்தை உயர்த்திப்பிடித்திருந்தார் (3).*
VII. *ஒருமைப்பாடு, சந்தோஷம், சரியான எண்ணம் ஆகியவற்றிற்கான பல்வேறு போதனைகள் (4:1-9).*
VIII. *அவர்களின் கொடைக்காகவும், போதுமென்றிருத்தலின் மீதான போதனையுடன் கூடிய நன்றியுணர்வு (4:10-19).*
IX. *முடிவுரை: தனிப்பட்ட வாழ்த்துதலும் ஆசீர்வாதமும் (4:20-23).*

*பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்*

*பிலிப்பியருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் சந்தோஷம் என்பது வெறும் "நேர்மறையான சிந்தையினுடைய எண்ணப்போக்கின்" விளைவாக இராதிருப்பினும், இது கிறிஸ்தவர்களின் பண்பாக இருக்க வேண்டிய நேர்மறையான எண்ணப்போக்கிற்கு நேர்த்தியான சில கருத்துக்களைக் கொண்டுள்ளது (2:5; 3:13, 14; 4:4-8).*

*நம்மில் பெரும்பான்மையானவர்கள் பின்வரும் வார்த்தைகளை அடிக்கடி கேட்டிருக்கின்றோம்: "என்னைப் பெலத்துபடுத்துகிறவர் மூலமாக என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும்" (4:13). இது ஒரு பொதுவான சத்தியமாகப் பயன்படுத்தப்பட முடியும், ஆனால் பவுல் இந்த வார்த்தைகளை எழுதியபோது தமது சிந்தையில் குறிப்பிட்ட சில விஷயங்களைக் கொண்டிருந்தார்: இயேசுவின்மூலம், அவர் தமது நிதிநிலை மற்றும் உடல்நிலை ஆகியவை எப்படியிருப்பினும் திருப்தியாயிருக்கக் கற்றிருந்தார் (4:11, 12). நாம் இயேசுவின்மூலம் திருப்தியாய் இருக்கக் கற்றுக்கொள்ள முடியும்.*

*"கிறிஸ்துவுக்குள்" என்ற சொற்றொடரின் மறைவான கருத்துப் பற்றிக் கல்வியாளர்கள் போராடி இருக்கின்றனர். சிலர் இதை "கிறிஸ்துவுக்குள் ஒன்றித்திருத்தல்" அல்லது "கிறிஸ்துவின் சரீரத்தில் இருத்தல்" என்று விரிவாக்க மொழிபெயர்த்திருக்கின்றனர். இதை உள்ளவாறே வாசித்தல் அனேகமாக மிக நல்லதாயிருக்கும். இயேசுவுடனான இந்த உறவு முறையானது "கிறிஸ்துவுக்குள்" என்று மாத்திரம் கூறும் வகையில் சொல் விளக்கப்படுத்துதல் மாத்திரமே மிக நெருக்கமானதாகவும் தனிப்பட்ட வகையினதாகவும் இருக்கும்.*

*இந்தக் கடிதம் உபதேசரீதியான ஆய்வுக்கட்டுரையாக இல்லாதிருப்பினும், இதில் அழகுமிகுந்த கிறிஸ்துவியல் வசனப்பகுதிகள் அடங்கியுள்ளது: 2:5-11. இது தொடக்ககால கிறிஸ்தவ கீதமாய் இருந்ததென்று சிலர் நினைக்கின்றனர். இது ஒரு ஆழமிக்க வசனப்பகுதியாக உள்ளது, ஆனால் பவுல் இதை ஒரு எளிய நோக்கத்திற்காகவே பயன்படுத்துகின்றார்: நம்மைப் பிறருக்கு சுயநலமின்றி ஒப்புக்கொடுத்தல் என்பதை நமக்குப் போதிப்பதற்காக. இதை நாம் செய்தால், ஒருநாளில் தேவன் நமக்குப் பலன் அளிப்பார்!*

---

## *விலங்குகளில் சந்தோஷமாய் இருப்பது எப்படி? (பிலிப்பியர் 1:3-11)*

*பவுல் ரோமாபுரியில் விலங்கிடப்பட்டு சிறையில் அடைக்கப்பட் டிருந்தார். அவர் சுய இரக்கத்திலும் முறைப்பாட்டிலும் நேரத்தைச் செலவிட்டிருக்க முடிந்திருக்கும். அதற்குப்பதிலாக, அவர் சந்தோஷப்பட்டு அதேசெயலைப் பிறர் செய்யும்படியும் ஊக்கப்படுத்தினார் (4:4-7). நாம் உடல்ரீதியாகச் சிறைப்பட்டிராது இருக்கலாம், ஆனால் பல்வேறு அளவுகளும் நீளங்களும் கொண்ட பல விலங்குகளை நாம் அணிந்திருக்கின்றோம்: வீழ்ந்துகொண்டிருக்கும் உடல் நலம், கசந்து போய்க் கொண்டிருக்கும் ஒரு திருமண உறவு, வேலை தொடர்பான உலைச்சல்கள், நமது இருதயங்களை உடைக்கும் பிள்ளைகள். பவுல் தமது விலங்குகளில் எவ்வாறு சந்தோஷமாய் இருக்க முடிந்தது? நாம் நமது விலங்குகளில் எவ்வாறு சந்தோஷமாய் இருக்க முடியும்? பவுல் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தின் "நன்றி செலுத்தும்" பகுதியில் (1:3-11) இதை நமக்குக்*

கூறுகின்றார்.

I. தேவனுக்கு நன்றிசெலுத்துதலுடன் கடந்த காலத்தைக் கண்ணோக்குங்கள் (1:3-5).

  A. பவுல் பிலிப்பியில் இருந்த சபையுடன் பத்தாண்டுகளாகத் தாம் கொண்டிருந்த இணைவை நினைத்துப் பார்த்தபோது, அவர் விருப்பமான நினைவுகூருதல்களைத் தவிர வேறெதையும் கொண்டிருக்கவில்லை!

    1. அவர்களைப் பற்றிய நினைவுகள் யாவற்றிற்காகவும் அவர் தேவனுக்கு நன்றி செலுத்தினார் (வசனம் 3)!

    2. அவர்கள் யாவருக்காகவும் அவரால் சந்தோஷத்துடன் ஜெபிக்க முடிந்தது (வசனம் 4; வசனங்கள் 7, 8ல் உள்ள "உங்கள் எல்லாருக்கும்" என்பதைக் கவனியுங்கள்).

  B. இது பவுல் பிலிப்பியில் இருந்த வேளையில் நல்ல விஷயங்களைத் தவிர வேறெதுவும் நடைபெறவில்லை - அதாவது, பிலிப்பி நகரத்தில் இருந்த சபை பூரணப்பட்டதாக இருந்ததென்று அர்த்தப்படுகிறதா? இல்லை (4:2; நடபடிகள் 16:16முதல்.).

    1. இது பவுல் சந்தோஷமற்ற விஷயங்களைப் பின்னோக்கித் திரும்பிக் கண்டபோது, அவற்றில் இருந்து வந்த நல்ல விஷயங்களை அவரால் காணமுடிந்தது என்று அர்த்தப்படுவதாயிருக்க வேண்டும் (ரோமர் 8:28).

      a. பிலிப்பியில் அவர் தவறாக நடத்தப்பட்டது சிறைச்சாலை அதிகாரி மனமாற்றம் அடைவதை விளைவித்தது (நடபடிகள் 16:16-34).

      b. அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுச் சென்றது, மற்ற இடங்களில் சுவிசேஷம் பரவுவதை விளைவித்தது (நடபடிகள் 16:39).

    2. இது பவுல் அவர்களைப் பற்றிய நல்ல விஷயங்களை நினைவுகூரத் தேர்ந்துகொண்டார் என்பதை நிச்சயமாகவே அர்த்தப்படுத்துகிறது.

      a. முதலில் இருந்து அப்போது வரைக்கும் சுவிசேஷத்தில் அவர்களுடைய "பங்கேற்றல்" (வசனம் 5).

        (1) "பங்கேற்றல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை [koinonia] பவுலுக்கு ஒரு முக்கியமான வார்த்தையாக இருந்தது (1:7; 2:1; 3:10; 4:15). இது, "பொதுவில் கொண்டிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது, மற்றும் இது "இணைவான ஒரு பங்கேற்பை" குறிக்கிறது.

        (2) பிலிப்பியர்களின் பொதுவான விசுவாசத்தினால், அவர்கள் தாங்கள் கொண்டிருந்தவற்றைப் பவுலுடன் பகிர்ந்துகொண்டனர் (4:10, 15, 16). நாம் ஊழியக்காரர்களை ஆதரிக்கும்போது, நாம் அவர்களின் முயற்சிகளில் பங்கேற்பவர்களாய் இருக்கின்றோம்!

b. *நடந்துமுடிந்த மோசமான விஷயங்களின்மீது நாம் கவனம் செலுத்தி கசப்பு நிறைந்த ஆண்கள் மற்றும் பெண்களாக நாம் முடிந்துபோகக்கூடும், அல்லது நாம் நல்ல விஷயங்களை நினைத்துப்பார்த்து, தேவனுக்கு நன்றிசெலுத்தி, சந்தோஷமானவர்களாய் இருக்கக்கூடும்.*

II. *தேவன்மீது நம்பிக்கையுடன் நிகழ்காலத்தைக் கண்ணோக்குங்கள் (1:6-8).*

A. *பவுல் பிலிப்பியில் இருந்த கிறிஸ்தவர்களை நினைத்துப் பார்த்த போது, அவர் அன்பினால் (வசனங்கள் 7, 8) மற்றும் நம்பிக்கை யினால் (வசனம் 6அ) நிறைந்தார்! இந்தப்புத்தகத்தினூடாக நம்பிக்கை என்ற ஆய்வுக்கருத்து ஓடுகிறது ("நம்பிக்கை" என்பதற் கான கிரேக்க வார்த்தை இதில் ஆறுமுறைகள் காணப்படுகிறது). பவுல் ஏன் நம்பிக்கையாய் இருந்தார்?*

1. *முதலாவது, தேவன் யாராக இருக்கின்றார் என்பதால்: தேவன் நமக்குள் கிரியைகளை நடப்பிக்கச் செய்பவராய் இருக்கின்றார் (வசனம் 6ஆ)!*

a. *பிலிப்பியில் சபை தொடங்கப்பெற்றதற்கான பாராட்டுதல்களைப் பவுல் தமக்கென்று எடுத்துக்கொள்ளாதிருந்தார்; அந்த நல்ல ஊழியத்தைத் தேவன் தொடங்கியதாக அவர் கூறினார்!*

b. *அவர், "தேவன் தொடங்கிய யாவற்றையும், அவர் முடிக்கின்றார்!" என்று கூறினார்.*

2. *இரண்டாவது, பிலிப்பியர்கள் யாராக இருந்தனர் என்பதால்: அவர்களின் நீடியபொறுமையினால் தேவன் அவர்களின் வாழ்வில் கிரியை செய்ய முடிந்தது (வசனங்கள் 7, 8).*

a. *தேவன் தாம் கிரியை செய்வதற்குப் பூரணப்பட்ட மனிதர்களுக்காகக் கண்ணோக்கிக் கொண்டிருப்ப தில்லை: அவர் தங்கள் வாழ்வில் தம்மைக் கிரியை செய்ய அனுமதிக்கின்ற மக்களுக்காகக் கண்ணோக்குகின்றார்.*

b. *குறிப்பாகப், பவுல் அவர்கள் தம்முடன் சுவிசேஷத்துடன் மற்றும் கிருபையுடன் கொண்டிருந்த, ஐக்கியத்தைப் பற்றிக் குறிப்பிட்டார் (வசனம் 7).*

(1) *சுவிசேஷம் தாக்கப்பட்டபோது, அவர்கள் அதன்மீது அன்புகூர்ந்து அதைத் தற்காத்துக்கொண்டனர்.*

(2) *பவுல் சிறைச்சாலையில் இருந்தபோது, அவர்கள் தங்கள் முதுகுகளை திருப்பிக்கொள்ளவில்லை (2 தீமோத்தேயு 1:8), ஆனால் அவருக்கு உதவினர்.*

B. *நமது பணிமுயற்சி எதுவாக இருப்பினும், நாம் விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்களாய் இருந்து, அந்தப் பணிமுயற்சி சரியானதாக இருந்தால், நாம் அதைத் தனியாக எதிர்நோக்குவதில்லை. தேவன் எப்போதுமே நமது வாழ்வில் கிரியை செய்துகொண்டிருக்கின்றார் (2:13; எபேசியர் 3:20ஐக் காணவும்).*

III. எதிர்காலத்தைத் தேவனை நோக்கிய ஜெபத்துடன் கண்ணோக்குங்கள் *(1:9, 10).*

A. *"ஒருவர் எதிர்காலத்தை ஒளிபொருந்தியதாகவோ அல்லது இருள் நிறைந்ததாகவோ கண்ணோக்க முடியும்." பவுல் வாழ்வின் உண்மை நிலைகளைப் புறக்கணித்தவராக இருக்கவில்லை. பிலிப்பியர்கள் அறைகூவல்களைத் தொடர்ந்து எதிர்கொள்வார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். ஜெபம் என்பதே அவரது தீர்வாக இருந்தது! குறிப்பாக, அவர் பிலிப்பியர்கள் கர்த்தருக்குள் பக்குவமடைய வேண்டுமென்று ஜெபித்தார்:*

1. *Agape அன்பில் அவர்கள் வளரவேண்டும் (வசனம் 9அ).*
2. *தேவவசனத்தைப் பற்றிய அறிவில் அவர்கள் வளரவேண்டும் (வசனம் 9ஆ).*
3. *சரியானது மற்றும் தவறானது ஆகியவற்றைத் தீர்மானிக்கும் திறமையில் வளர வேண்டும் (வசனங்கள் 9ஆ; 10அ; எபிரெயர் 5:14ஐக் காணவும்).*
4. *கிறிஸ்தவப் பண்பில் அவர்கள் வளரவேண்டும் (வசனம் 10ஆ).*
5. *"கனிநிறைந்த" வாழ்வை வாழுதலில் அவர்கள் வளரவேண்டும் (வசனம் 11அ; யோவான் 15:8; கலாத்தியர் 5:22, 23ஐக் காணவும்).*

B. *நாம் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் கண்ணோக்கினோமென்றால், நமது திறமையின் மிகச் சிறந்தவற்றைச் செய்ய, நாம் தீர்மானிப்போமாக:*

1. *ஒவ்வொரு நாளும் தேவனுடன் நெருக்கமாக வாழுதல் (வசனம் 11ஆ). அவருக்குள் வாசம்பண்ணுதல். இயேசு, "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறினார் (யோவான் 15:5ஆ).*
2. *எல்லாவிஷயங்களிலும் தேவனை மகிமைப்படுத்துதல் (வசனம் 11ஆ). மத்தேயு 5:15, 16ல், "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று கூறப்படுகிறது.*
3. *கிறிஸ்து வருவார் என்பதை அறிந்து (வசனங்கள் 6, 10), எதிர் காலத்தைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவித்தல் என்பது எல்லாவற்றையும் நன்மைக்கேதுவாகத் திருப்பும்!*

*முடிவுரை*

*நாம் கடந்தகாலத்தை நன்றியற்றநினைவுடனோ அல்லது நன்றியறிதலுடனோ கண்ணோக்க முடியும். நாம் நிகழ்காலத்தை பயத்துடனோ அல்லது நம்பிக்கையுடனோ கண்ணோக்க முடியும். நாம் எதிர்காலத்தை அச்ச உணர்வுடனோ அல்லது ஜெபத்துடனோ கண்ணோக்க முடியும். நாம் நமது சுய பலத்தைச் சார்ந்திருக்கவோ, அல்லது தேவனைச் சார்ந்திருக்கவோ*

கற்றுக்கொள்ள முடியும். இவற்றில் ஒன்று, சந்தோஷம் இல்லாமைக்கு நிச்சய மான வழிவகையாக உள்ளது; இன்னொன்று சந்தோஷத்திற்கு தேவனுடைய வழிவகையாக உள்ளது.

# 12

# கொலோசெயர்: கிறிஸ்துவின் சகலத்திலும் போதுமான தன்மை

***தலைப்பு***

*இந்தக் கடிதம் யாருக்கென்று எழுதப்பட்டதோ, அவர்களின் பெயரைக் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளது: "கொலோசெ பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு" (1:2).*

***பின்னணி***

*கொலோசெ நகரம் எபேசு நகரத்திற்குத் தெற்கே எண்பது அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான மைல்கள் தொலைவில், லவோதிக்கேயாவுக்கு அருகில் இருந்த லைகஸ் பள்ளத்தாக்கு (2:1; 4:13, 15, 16) மற்றும் ஹெரப்போலிஸ் (4:13) ஆகியவற்றில் அமைந்திருந்தது. அந்தப்பகுதிக்குப் பவுல் ஒருக்காலும் பயணம் செய்திருந்ததில்லை என்பது உறுதி என்றிருக்கையில் (2:1), அங்கு கிறிஸ்துவின் ஊழியத்தில் பவுல் வலிவார்ந்த ஆர்வம் கொண்டிருந்தார். அந்தப்பகுதியில் இருந்த சபைக்குழுமங்கள், பவுல் எபேசு நகரில் பிரசங்கித்துக்கொண்டிருக்கையில் (நடபடிகள் 19:10), எப்பாப்பிரோவினால் (1:7; 4:12, 13) நிலைநாட்டப் பட்டிருக்கலாம்.*

*கொலோசெயருக்கு எழுதின நிருபமானது எபேசியருக்கு எழுதிய நிருபத்திற்கு உடன் [சகோதரி] கடிதமாக உள்ளது. இவ்விரண்டுமே பவுலினால் ரோமா புரியில் இருந்து ஒரே வேளையில் எழுதப்பட்டன (கி.பி. 60-62; எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் பின்னணித் தகவல்களைக் காணவும்), மற்றும் இவை ஒன்றுபோன்ற பல தலைப்புகளை, ஒரே மொழிநடையைப் பயன்படுத்தி எடுத்துரைத்துள்ளன. கொலோசெயருக்கு எழுதிய நிருபம் நான்கில் ஒரு பகுதி எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் அறிவுறுத்தல்களை அடக்கியுள்ளது (இவற்றுடன் 1:18 மற்றும் எபேசியர் 1:22, 23; 1:20, 21 மற்றும் எபேசியர் 2:12முதல்.; 1:25-27 மற்றும் எபேசியர் 3:1முதல்.). இருப்பினும், இவ்விரண்டு நிருபங்களிலும் வேறுபட்ட வலியுறுத்தங்கள் உள்ளன. எபேசியருக்கு எழுதிய நிருபம் கிறிஸ்துவின் சபையை வலியுறுத்துகிறது; கொலோசெயருக்கு எழுதிய நிருபம் சபையின் கிறிஸ்துவை வலியுறுத்துகிறது.*

*லைகஸ் பள்ளத்தாக்கில் இருந்த சபைகளில் தேவனுக்கு விரோதமான காரியங்கள் ரகசியமாக உட்புகுந்ததாக (அனேகமாக எப்பாப்பிரோவின் மூலம்; 1:7-9ஐக் காணவும்) பவுலுக்குச் செய்தி வந்தது. இந்த கள்ளப் போதக மானது அனேகமாக தொடக்ககாலத்தில் இருந்து, இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் ஆர்ப்பரித்தெழுந்த "அறிவுசார்ந்த"* ["gnosticism"] *கொள்கையின் வடிவமாயிருக்கலாம்.* "Gnosticism," *என்ற வார்த்தை gnosis என்ற கிரேக்க (இது* "KNOW-sis" *என்று உச்சரிக்கப்படுகிறது) வார்த்தையில் இருந்து வருகிறது, இது "அறிவு" என்று அர்த்தப்படுகிறது. "அறிவுசார்ந்த"* ("NOS-

tics") கொள்கையிலாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மாத்திரம் விசேஷித்த அறிவும், விசேஷித்த ஆவிக்குரிய உட்கண்ணோக்கும் கிடைக்கிறது என்று உரிமைகோரினர். "அறிவுசார்ந்த" கொள்கை என்பது பல நம்பிக்கைகளின் விஷக்கலப்படமாக இருந்தது: ஒரு சிறிது கிறிஸ்தவம், ஒருசிறிது யூதத்துவம், அதிகமாக கிரேக்கத் தத்துவம். இந்த நிருபத்தில், கொலோசெ நகரில் இருந்த "தேவனுக்கு எதிரான கருத்து" பற்றிய சில தனித்தன்மைகளைக் காணமுடியும்: "பக்குவமுள்ளவர்களான" தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மாத்திரமே உரித்தானதென்று உரிமைகோரப்பட்ட விசேஷ அறிவு மற்றும் ஞானம் உள்ளது என்ற கள்ளத்தத்துவம் (1:27, 28; 2:3, 8); சடங்காச்சார விருந்துகள் மற்றும் பண்டிகைகளை (பிரதானமாக யூதமதத்தில் இருந்து தோன்றியவை) கிரேக்கத் தெய்வவணக்க நடை முறைகளுடன் ஒன்றுகலந்து தவறாக நிலைப்படுத்துதல் (2:14-17, 20-23); மற்றும் தூரத்தில் உள்ள தேவனை அடையலாம் என்ற யூகத்தில் தூதர்களை ஆராதித்தல் (2:18, 23).

பவுல் தவறான போதனையைப் பற்றிக் கவலைகொண்டிருந்தார், ஆனால் பெரும்பாலும் அந்தத் தவறு கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியைத் தாக்கியதுதான் அவரை மிகவும் கவலைப்படுத்திற்று: கிறிஸ்துவின் இயல்பு (யோவான் சுவிசேஷத்திற்கான பின்னணிக்குறிப்புகளைக் காணவும்) மற்றும் சகலமும் போதுமானதாய் உடைய கிறிஸ்து. பவுல் நமக்கு கிறிஸ்துவுடன் கூடுதலாக மனிதனின் ஞானமும் தத்துவமும் தேவையில்லை, ஆனால் அதற்கு மாறாக கிறிஸ்துவும் அவருடைய வழியும் மாத்திரமே நமக்குத் தேவையான யாவுமாக உள்ளது என்பதைச் சுட்டிக் காண்பித்தார்.

இந்த நிருபத்திற்கும் பிலேமோனுக்கு எழுதின நிருபத்திற்கும் இடையில் ஒரு விசேஷித்த உறவு உள்ளது. பிலேமோன் கொலோசெ நகரத்தின் சபையில் ஒரு உறுப்பினராய் இருந்தார்; இக்கடிதங்கள் அனேகமாக ஒரே வேளையில் விநியோகிக்கப்பட்டிருக்கலாம் (பிலேமோன் நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்).

**வரைகுறிப்பு**

அறிமுகம் (1:1-14).

I. கிறிஸ்துவின் சகலத்திலும் போதுமான தன்மை உறுதிப்படுத்தப்படுதல் (1:15-2:5).
   A. தேவனால் வெளியாக்கப்பட்டவர் (1:15-23).
   B. பவுலினால் அறிவிக்கப்பட்டவர் (1:24-2:5).
II. கிறிஸ்துவின் சகலத்திலும் போதுமான தன்மை தாக்கப்படுதல் (2:6-23).
   A. கிறிஸ்துவின் போதனைகளினுடைய சகலத்திலும் போதுமான தன்மையின்மீது தாக்குதல் (வசனங்கள் 6-9).
   B. கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தினுடைய போதுமான தன்மையின் மீது தாக்குதல் (வசனங்கள் 10-13).
   C. கிறிஸ்துவின் உடன்படிக்கையினுடைய போதுமான தன்மையின் மீது தாக்குதல் (வசனங்கள் 14-17).
   D. கிறிஸ்துவின் ஆராதனையினுடைய போதுமான தன்மையின்மீது தாக்குதல் (வசனங்கள் 18-23).
III. கிறிஸ்துவின் சகலத்திலும் போதுமான தன்மை நடைமுறைப்படுத்

*தப்படுதல் (3:1-4:6).*

A. *கிறிஸ்தவ வாழ்விற்குச் சகலமும் போதுமானது (3:1-17).*

B. *உறவுமுறைகளுக்குச் சகலமும் போதுமானது (3:18-4:6).*

   1. *இல்லத்தில் உறவுமுறைகள் (3:18-4:1).*
   2. *தேவனுடன் உறவுமுறை (4:2, 3).*
   3. *அவிசுவாசிகளுடன் உறவுமுறை (4:5, 6).*

*முடிவுரை (4:7-18).*

**கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்**

*சிலர் "புதிய ஏற்பாட்டில் தொலைந்துபோன நிருபங்கள்" பற்றி வருத் தப்படுகின்றனர். அவர்கள் 4:16ஐக் குறிப்பிட்டு, லவோதிக்கேயர்களுக்கு எழுதிய நிருபத்தை மற்றவற்றுடன் சேர்த்துக் குறிப்பிடுகின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டில் "தொலைந்துபோன நிருபங்கள்" என்று ஒன்றுமில்லை. ஆம், அனேகமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிராத மற்ற நிருபங்கள் இருந்திருக்கலாம் (1 கொரிந்தியர் 5:9), ஆனால் அவைகள் ஒருக்காலும் புதிய ஏற்பாட்டின் பகுதி யாக இருந்ததில்லை. தேவன் அருளிரக்கத்துடன், நாம் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு, கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு மற்றும் பரலோகத்திற்குச் செல்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் பாதுகாத்திருந்தார் (2 தீமோத்தேயு 3:16, 17).*

*ஒரு பெற்றோராக, விசேஷமாக ஒரு தகப்பனாக இருப்பதில் உள்ள அறைகூவல் மீதான, கொலோசெயர் 3:21 மற்றும் எபேசியர் 6:4 ஆகிய வற்றை ஒப்பிட்டுப்பாருங்கள். "... அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்" என்பது பெற்றோர் தமது பிள்ளைகள் திடனற்றுப்போய்விடாதபடிக்கு அவர்களைச் சிட்சிக்க கூடாது என்று அர்த்தப்படுத்துவதில்லை (எபிரெயர் 12:11ஐக் கவனிக்கவும்). மாறாக, இது பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளைச் சிட்சிக்க வேண்டிய வகையைப் பற்றிப் பேசுகிறது. அதற்கு முந்திய சொற்றொடர் திறவுகோலாக உள்ளது: "அவர்கள் திடனற்றுப் போகாதபடிக்கு" மிகவும் கடுமையான தண்டனையானது, புறக்கணித்தலைப் போன்றே, ஊக்கத்தைக் குறைக்கிறது. சிட்சிக்கத்தவறுகிற ஒரு விஷயத்தைப் பிள்ளைகள், தங்கள் பெற்றோர் அக்கறைகொள்வதில்லை என்பதற்கு அடையாளமாக விளக்கப்படுத்திக் கொள்கின்றனர். எல்லா சிட்சையும் அன்பினால் செய்யப்பட வேண்டும்.*

*கொலோசெயர் 1:28, ஒவ்வொரு பிரசங்கியாரும் அல்லது போதகரும் என்ன செய்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதற்குத் தொகுப்புரையாக உள்ளது: மக்கள் கிறிஸ்துவுக்குள் வளர உதவியாக - தெய்வீக ஞானத்துடன் - பிரசங்கித்தல், எச்சரித்தல், மற்றும் போதித்தல். "தேறினவனாக" (KJVயில் பூரணம்) என்பது "முழுவளர்ச்சி பெற்ற, பக்குவமான" என்று இந்த சந்தர்ப்பப்பொருளில் அர்த்தப்படுகிறது (4:12ஐக் காணவும்).*

## ஒரு மார்க்கப்பிரிவு நகருக்கு வரும்போது (கொலோசெயர்)

*மார்ச்சு 1993ல் டெக்சாஸ் மாகாணத்தின் வாகோ என்ற நகரில், மார்க்கப்பிரிவு ஒன்று முளைத்தெழும்பி தொடர்ந்து நிலைநின்றது, இது உலகத்தின் கவனத்தை*

ஈர்த்தது; ஆனால் டேவிடியன்ஸ் என்ற அந்தக் கிளையானது மதப்பிரிவு என்ற பனிப்பாறையின் முனையாக மாத்திரமே இருக்கிறது. மார்க்கப்பிரிவுகள் உலகம் முழுவதிலும் மலர்கின்றன. அமெரிக்க நாட்டில் மாத்திரம், 18 மற்றும் 28 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்கள் பெரும்பான்மையானவர்களைக் கொண்ட சுமார் முப்பது லட்சம் மக்கள் மார்க்கச் சடங்காச்சாரங்களில் ஈடுபட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மார்க்கப்பிரிவுகள், தனிமை யானவர்களுக்கு, தனிப்பட்ட துன்பங்களினால் இளைப்புற்றவர்களுக்கு, மற்றும் தங்கள் வாழ்வின்மீது பற்றுதலைக் கொள்ளக் கடினமான வேளையைக் கண்டு கொண்டிருப்பவர்களுக்கு விசேஷ ஈர்ப்புகளைக் கொண்டுள்ளன.

ஒரு மார்க்கப்பிரிவு என்பதை விளக்கியுரைப்பது கடினமாகும், ஆனால் பொதுவாகப் பின்வரும் பண்பினங்கள் காணப்படுகின்றன: அவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று உரிமைகோரிக்கொண்டபோதிலும், வழக்கமாக அவர்கள் பிறிதொரு உலகின் கண்ணோட்டங்களில் இருந்து கருத்துக்கூறுகளை எடுத்தாளுகின்றனர். அவர்கள் வேதாகமத்திற்கு உதட்டளவிலான ஆராதனை செலுத்தியபோதிலும், வழக்கமாக அவர்களின் ராஜபக்தியான நபர் வேறொரு அதிகாரியாக, பெரும்பாலும், வேதாகமத்தைப் பற்றி அவர்கள் எதை நம்ப வேண்டும் என்று அவர்களுக்குக் கூறும் வல்லமை நிறைந்த ஆளுமைத்தன்மை உடையவராக இருக்கின்றார். எவ்வித மாறுபாடுமின்றி, மனநிலை (மற்றும் சில வேளைகளில் உடல்ரீதியான) கட்டுப்பாடுகள், கீழ்ப்படுத்துதல் அல்லது ஆதிக்கம் செய்தல் ஆகியவை இருக்கின்றன.

பவுல் ரோமாபுரியில் சிறையில் அடைபட்டிருந்தபோது, கொலோசெ பட்டணத்தில் இருந்த சபையில் மார்க்கப்பிரிவுப் போதனைகள் மேலோங்கி யிருந்ததாக செய்தி வந்தது. இதற்குப் பவுல் தந்த பதிலானது, "ஒரு மார்க்கப்பிரிவு நகருக்கு வரும்போது" நாம் என்ன செய்ய வேண்டும் என்று நமக்குப் போதிக்கிறது.

I. பவுல் உடனடியாகப் பதில் அளித்தார்.
   A. பவுல் சூழ்நிலையைக் கண்டுகொள்ளாதிருக்கவில்லை மற்றும் அது தானாகவே அகன்று விடும் என்று நினைக்கவும் இல்லை. பவுல் கொலோசெ நகருக்குப் பயணம் செய்ய முடியாது இருந்தது, ஆனால் அவரால் அவர்களுக்கு கடிதம் எழுத முடிந்தது. இந்தக் கடிதம் பிரச்சனைக்கு ஏற்ற காலத்தில் எழுதப்பட்ட அவரது பதிலு ரையாக இருந்தது.
   B. மார்க்கப்பிரிவு என்பது நயவஞ்சகமானதாக உள்ளது, அது ஆய்வு செய்யப்படாத நிலையில், விரைவிலேயே பின்பற்றாளர் களை ஆதாயப்படுத்திக்கொண்டு, சுவிசேஷத்தின் சத்தியத்தைக் கீழாக்கிப் போட்டு, சபையின் சமாதானத்தையும் ஒத்திசைவையும் பாழாக்கிப் போடும்.
      1. பவுல் இப்படிப்பட்டவர்களைக் "குறித்துக்கொண்டு" இவர் களைத் தவிர்க்கும்படி கூறினார் (ரோமர் 16:17; KJV). "குறித்தல்" என்றால் "விழிப்புணர்வுடன் இருந்து கவனம் செலுத்துதல்" என்று அர்த்தப்படுகிறது. NASB வேதாகமத்தில், "keep your eye on" ["கண்ணை வைத்துக் கவனமாயிருங்கள்"] என்றுள்ளது. இது "கண்டுகொள்ளாது விடுதல்" என்பதற்கு

எதிர்ப்பதமாகும்.

2. சபையின் நடத்துனர்கள் இதில் முன்நடவடிக்கை எடுத்து வழிநடத்திச் செல்ல வேண்டும் (நடபடிகள் 20:28-31; தீத்து 1:9-11).

II. பவுல் மார்க்கப்பிரிவின் தவறை வெளிப்படுத்தினார்.

A. கொலோசெ நகரத்தில் மறைவாய் உட்புகுந்திருந்த தவறானது, கிறிஸ்தவத்தின் கூறுகளை, கிரேக்கத் தத்துவத்துடனும் யூதச்சடங் காச்சாரத்துடனும் ஒன்றுகலக்க முயற்சிசெய்த அறிவு சார்ந்த கொள்கையின் தொடக்ககால வடிவமாய் இருந்தது (கொலோசெ யருக்கு எழுதிய நிருபம் பற்றிய குறிப்புகளைக் காணவும்). அவர்களின் தவறைக் கண்டனம் பண்ண அவர் தயங்கவில்லை.

1. பவுல் கள்ளப்போதகர்களுக்கு எதிராக சபையைப் பொது வாக எச்சரித்தார் (1:23; 2:4, 8).

2. பவுல் அவர்கள் குற்றப்பட்டிருந்த பல தவறுகளைச் சுட்டிக் காண்பித்தார். அவற்றிற்கு பதில் அளிப்பதில், அவர் அவர் களுடைய மார்க்கப்பிரிவு சொல்லாக்கங்களைத் திறமையாகப் பயன்படுத்தினார்.

a. அவர்கள் தங்களுக்கு விசேஷ “ஞானம்” மற்றும் “அறிவு” இருந்ததாகவும் இவ்விதமாக அவர்கள் “ரகசியங்களை” புரிந்துகொள்ளமுடியும் என்றும் உரிமை கோரினர்.

(1) உண்மையான ஞானம் கிறிஸ்துவில் இருக்கிறது என்று பவுல் கூறினார் (1:28; 2:3; 4:5).

(2) கிறிஸ்துவுக்குள் “ரகசியம்” வெளிப்படுத்தப்பட்டி ருந்தது என்று பவுல் கூறினார் (1:26, 27; 2:2; 4:3; எபேசியருக்கு எழுதிய நிருபம் பற்றிய குறிப்புகளைக் காணவும்).

b. அவர்கள் ஞானத்துடன் இருப்பதற்குக் கிறிஸ்தவத்துடன் கூடுதலாக, ஒருவர் யூதத்துவம் மற்றும் கிரேக்கத் தத்துவம் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் அவசிய மாகும் என்று உரிமைகோரினர்.

(1) பழைய பிரமாணமும் அதன் ஆணைகளும் சிலுவையில் அறையப்பட்டு விட்டன என்று பவுல் குறிப்பிட்டார் (2:14, 16). புதிய ஏற்பாட்டின் ‘‘விருத்தசேதனம்’’ என்பது மாம்சத்திற் குரியதாயிராமல் ஆவிக்குரியதாயிருக்கிறது (2:11).

(2) ஒருவருக்கு, மனித தத்துவமும் பாரம்பரியங்களும் தேவைப்படுவது இல்லை (2:8, 9, 20-22).

c. அவர்கள் ஆராதனைக்கென்று தங்கள் சொந்த முறைமைகளைக் கொண்டிருந்தனர் (“சுய இஷ்ட மான ஆராதனை,” 2:23), இது ஆவிக்குரிய ஜீவிகளின்மீது மூடநம்பிக்கையான பயத்தையும் (2:15) மற்றும் தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையையும் (இது அனேகமாக, தேவனை அடைவதற்கு இவர்கள்

*இடைநிற்பவர்கள் என்ற வகையில் ஏறெடுக்கப்பட்டது, 2:18) ஊக்குவித்தது.*

(1) *பவுல் இவையாவையும் "மாயமானவை" என்று கூறினார் (2:23); இவைகள் கருத்துப்பொருள் எதையும் கொண்டிருப்பதில்லை.*

(2) *இயேசு சிலுவையில் மரித்தபோது, அவர் "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும்" (2:15) உரிந்து போட்டார் (2:14; ஆதியாகமம் 3:15; வெளிப்படுத்தின விசேஷம் 12:11); அவற்றிற்குப் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை - மற்றும் அவற்றை ஆராதிக்க வேண்டிய தேவை நிச்சயமாக இல்லை (வெளிப் படுத்தின விசேஷம் 19:10).*

(3) *தேவனை அடைவதற்குக் கிறிஸ்து சகலமும் போது மானவராக இருக்கின்றார் (2:19; 1 தீமோத்தேயு 2:5ஐயும் காணவும்)!*

d. *அவர்கள் ஞானஸ்நானம் போன்ற கிறிஸ்தவ சடங்குகள் செயல் விளைவற்றவை என்று உரிமைகோரினர்; "பக்குவத் தையும்" மேன்மை நிலையையும் அடைவதற்கு அவர்கள் தங்களின் விசேஷ சடங்குகளையும் ஆச்சாரங்களையும் பரிந்துரைத்தனர்.*

(1) *ஒருவர் தண்ணீர்க் கல்லறையில் இருந்து எழுப்பப் பட்டபோது, அவர் இயேசுவில் ஒரு புதிய ஜீவனைக் கொண்டுள்ளார் என்று பவுல் கூறினார் (2:12, 13).*

(2) *பக்குவம் என்பது மனித தத்துவங்களினால் அல்ல, ஆனால் அதற்கு மாறாக, கிறிஸ்துவின் மூலமாக, கிறிஸ்து விரும்புகிறபடி ஒருவர் வாழ்வதன் மூலமா கவே ஆதாயப்படுத்தப்படுகிறது (1:28; 2:10; 3:1முதல்.; 4:12).*

B. *நமது பிரசங்கித்தலும் போதித்தலும் எப்போதுமே நேர்மறையாக இருக்க வேண்டும், அவை ஒருக்காலும் எதிர்மறையானதாக இருக்கக் கூடாது என்று சிலர் கூறுகின்றனர். இப்படிப்பட்ட கருத்தானது, பகுத்தறிவிற்கும் வேதாகமபோதனைக்கும் எதிரான தாகச் செல்லுகிறது (2 தீமோத்தேயு 4:1-4). நாம் எப்போதுமே நமது அணுகுமுறையில் நேர்மறையாக இருத்தலும், "அன்பில்" பிரசங்கித்தலும் அவசியமாய் இருக்கிறது (எபேசியர் 4:15), ஆனால் சிலவேளைகளில் நாம் தவறுகளை வெளிப்படுத்துதல் தவிர வேறு தெரிவுகள் எதையும் கொண்டிருக்க முடிவதில்லை. இயேசு, "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" என்று கூறினார் (மத்தேயு 7:15; இவற்றுடன் எபேசியர் 5:6; 2 பேதுரு 2:1; 1 யோவான் 4:1).*

III. *பவுல் கிறிஸ்துவை மேன்மைப்படுத்தினார்.*

A. எல்லாவற்றிற்கும் மேலாக, மார்க்கப்பிரிவின் தவறை எதிர் கொள்வதில் பவுல், கிறிஸ்துவை மேன்மைப்படுத்தி, கிறிஸ்து கொடுக்க இயலாத ஏதொன்றையும் கள்ளப்போதகர்கள் அளிக்க இயலாது என்பதை வலியுறுத்தினார். கிறிஸ்து அவர்களின் தேவைக்கு "சகலமும் போதுமானவராக" இருந்தார், அவர் நமக்கும் போதுமானவராக இருக்கின்றார். கிறிஸ்துவைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் காணப்படும் மிகவும் ஆழமான சில கூற்றுக்கள் இங்குள்ளன *(1:15-19; 2:9, 10).*

B. நாம் நமது போதனையில், நமது சிந்தனையில் மற்றும் நமது வாழ்வில், கிறிஸ்துவை மையமாகக் காத்துக்கொள்வோமாக *(1 கொரிந்தியர் 2:2; கலாத்தியர் 6:14)!*

முடிவுரை

A. நாம் ஆவிக்குரிய அச்சுறுத்தல்களைப் பின்தள்ளிவிட்டு முன் செல்ல வேண்டும், ஆனால் புதிய மார்க்கப்பிரிவுகள் காளான் களைப்போல முளைத்தெழும்பக்கூடும். சுவிசேஷத்திற்கான எந்த அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள நாம் எப்போதும் தயாராக இருக்க முடிவது எவ்வாறு? நாம் புதிய ஏற்பாட்டில் உள்ள சத்தி யங்கள், விசேஷமாக இயேசுவைப் பற்றிய சத்தியங்கள் நமது சிந்தைகளில் அபரிமிதமாய் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். போலியான பணத்தாள்களைக் கண்டறிவதற்குப் பயிற்றுவிக்கப்படுபவர்களுக்கு, முதலில் உண்மையான பணத் தாள்களின் பண்புகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன; பின்பு அவர்கள் மாறுபாடு எதையும் கண்டுபிடிக்க முடியும்.

B. நாம் தேவனுக்கும், அவருடைய குமாரனுக்கும், அவரது வார்த் தைக்கும் உண்மையானவர்களாய் நிலைத்திருக்கத் தேவன் நமக்கு உதவுவாராக!

# 13

# 1 தெசலோனிக்கேயர்: புதுக் கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்துதல்

***தலைப்பு***

*இந்தப் புத்தகம் இதைப் பெற்றுக்கொண்டவர்களான, மக்கெதோனியாவின் ஒரு நகரமான தெசலோனிக்கேயில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது (1:1).*

***பின்னணி***

*பவுல் மக்கெதோனிய அழைப்பைப் பெற்றபின்பு (நடபடிகள் 16:9), அவர் முதலில் பிலிப்பி நகரத்தில் பிரசங்கித்தார் (பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்), பின்பு அவர் தெசலோனிக்கே நகருக்குச் செல்வதற்காக, எக்நேஷியன் சாலையில் நூறு மைல்கள் மேற்கே சென்றார் (நடபடிகள் 17:1-9). தெசலோனிக்கே என்ற நகரம், மத்தியதரைக் கடலின் மிகமுக்கியமான கடல்துறைமுகங்களில் ஒன்றாக இருந்தது. அது செல்வமிக்க ஆனால் துன்மார்க்கமான நகரமாயிருந்தது. அதன் அருகில், கிரேக்கர்களின் புராணக்கடவுளர்களுடைய இல்லமாகக் கருதப்பட்ட ஒலிம்பியா மலையின் பனிமூடிய சரிவுகள் இருந்தன.*

*பவுலின் வழக்கப்படி, அவரும் அவருடைய தோழர்களும் முதலில் யூதர்களிடம் சென்று, மூன்று ஓய்வுநாட்களில் அவர்களுடைய ஜெப ஆலயத்தில் பேசினர். யூதர்களில் ஒருசிலர் மாத்திரமே விசுவாசித்தனர், ஆனால் கிரேக்கர்களில் "திரளான கூட்டத்தார்" சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்பவர்களாய் இருந்தனர் (நடபடிகள் 17:4). அவிசுவாசமான யூதர்கள், விரோதத்தினால் நிறைந்து, ஒரு கலகத்தைத் தொடங்கினர். அவர்கள் பவுலையும் சீலாவையும் கண்டுபிடிக்க இயலாதபோது, மற்ற கிறிஸ்தவர்களை நகரத்தின் ஆளுநர்கள் முன்பாக இழுத்துச் சென்றனர். சகோதரர்கள் பவுலையும், சீலாவையும், தீமோத்தேயுவையும் பெரேயா நகருக்கு அனுப்பினர், ஆனால் விரைவிலேயே தெசலோனிக்கேயில் இருந்து அங்கு வந்த யூதர்கள் மீண்டும் கலகத்தைத் தூண்டிவிட்டனர். மீண்டும் ஒருமுறை பவுல் கடந்து சென்றார், இம்முறை அவர் அத்தேனே நகருக்குச் சென்றார். பவுல் தெசலோனிக்கேயில் இருந்த புதுக்கிறிஸ்தவர்கள் பற்றி அக்கறை கொண்டார், ஆனால் அவர் அங்கு திரும்பிச் செல்ல இயலாதிருந்தது (2:17, 18). தெசலோனிக்கேயில் இருந்து தீமோத்தேயு செய்தி கொண்டுவந்தபோது, அது பவுல் பயந்தவண்ணமே இருந்தது. வாழ்வின் சாதாரணப்பிரச்சனைகளோடும்கூட, அவர்களின் இளம் விசுவாசத்திற்கு மூன்று அச்சுறுத்தல்கள் இருந்தன: (1) உபத்திரவம், (2) வாழ்வின் பழைய பாதைக்குத் திரும்புவதற்கான சோதனை, மற்றும் (3) கள்ளப்போதகம். பவுல் தீமோத்தேயுவைத் தெசலோனிக்கே நகருக்குத் திரும்ப அனுப்பினார் (3:2, 3, 5). பின்பு வெகுவிரைவிலேயே, பவுல் கொரிந்து நகருக்குச் சென்றார். தீமோத்தேயு*

நல்ல செய்தியுடன் வருகையில், அவர் அங்கே இருந்தார்: தெசலோனிக்கேயில் இருந்த சகோதரர்கள் அடிப்படையில் விசுவாசத்துடன் நிலைத்திருந்தனர் (3:6). இது பவுல் (தமது முதல் கடிதமாயிராதிருப்பினும்; கலாத்தியருக்கு எழுதிய நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்) தமது முதல் கடிதங்களில் ஒன்றான 1 தெசலோனிக்கேயர் நிருபத்தை எழுதும் சந்தர்ப்பமாக இருந்தது. தெசலோனிக்கேயர்களைக் குறித்த அக்கறை மற்றும் சந்தோஷம் ஆகியவற்றை வெளிப்படுத்துதல் மற்றும் அவர்களின் விசுவாசத்தில் குறைவாய் இருந்த சில விஷயங்களை நிரப்புதல் ஆகியவை இக்கடிதத்தின் நோக்கமாய் இருந்தது (3:10).

இந்தக்கடிதம் கணிசமான அளவுக்கு மிகச்சரியாகத் தேதியிடப்பட முடியும்: கொரிந்துவில் பவுலினுடைய ஊழியம் தொடர்பாக லூக்கா, கல்லியோன் என்பவரைக் குறிப்பிடுகின்றார் (நடபடிகள் 18:12), மற்றும் டெல்பியில் உள்ள கல்வெட்டு ஒன்று, கல்லியோன் அதே நகரில் தங்கியிருந்த தேதியை நாம் அறிய அனுமதிக்கிறது. இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி, கி.பி. 50ல் 1 தெசலோனிக்கேயர் நிருபம் எழுதப்பட்டிருக்கும் என்று நாம் தேதி யிடுகின்றோம்.

**வரைகுறிப்பு**

வாழ்த்து (1:1-4).

I. பவுல் நினைவுகூருதலினால் புதுக்கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்து கின்றார்: அது எவ்வாறு இருந்தது (1:5-3:13).
   A. உங்கள் மனமாற்றத்தை நினைவுகூருகின்றேன் (1:5-10).
   B. உங்கள் மத்தியில் நான் ஊழியம் செய்த வகையை நினைவு கூருகின்றேன் (2:1-13).
   C. நான் உங்களுக்காக அக்கறைகொண்ட விதத்தை நினைவு கூருகின்றேன் (2:14-3:13).

II. பவுல் புத்திகூறுதலினால் புதுக்கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்துகின்றார்: அது எவ்வாறு இருக்க வேண்டும் (4:1-5:22).
   A. பரிசுத்தத்தில் வாழுதல் (4:1-12).
      1. வேசித்தனத்தில் இருந்து விலகியிருத்தல் (4:1-8).
      2. ஒருவர் ஒருவரை அன்புகூர்ந்து நேர்மையுடன் இருத்தல் (4:9-12).
   B. நம்பிக்கை நிறைந்த தன்மையில் வாழுதல் (4:13-5:11).
      1. கிறிஸ்து மீண்டும் வருகின்றார் (4:13-18).
      2. அவர் வருகையில் ஆயத்தமாய் இருங்கள் (5:1-11).
   C. உதவிநிறைந்த தன்மையில் வாழுதல் (5:12-22).

ஆசீர்வாதமும் அறைகூவலும் (5:23-28).

**தெசலோனிக்கேயருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்**

புதுக்கிறிஸ்தவர்கள் “கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்” என்று அழைக்கப் படுகின்றனர் (1 கொரிந்தியர் 3:1); தெசலோனிக்கேயில் இருந்த கிறிஸ்தவர்கள் அப்படித்தான் இருந்தனர். தெசலோனிக்கேயருக்குப் பவுல் எழுதிய இரண்டு நிருபங்களில், அவரது அணுகுமுறையானது உணர்வுள்ள பெற்றோருடையது

போன்றிருந்தது. முதல் கடிதத்தில், அவர் பாலூட்டும் தாய் போன்று (2:7), கரிசனைமிகுந்த தந்தை போன்று (2:11) இருந்தார். அவர்கள் சரியானவற்றைச் செய்யும்படி அவர் வேண்டினார். இரண்டாம் கடிதத்தில், மென்மையான அணுகுமுறை சிலருக்குப் பயன்படவில்லை என்று அறிந்தபோது, அவரது தொனி கடினமானதாயிற்று; அவர்களுக்குக் கட்டளையிட்டார் (2 தெசலோனிக்கேயர் 3:6; முதலியன.). வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு, வெவ்வேறு அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன என்று ஒவ்வொரு பெற்றோரும் அறிவதுபோன்றே, ஒவ்வொரு பிரசங்கியாரும் போதகரும் அறிகின்றனர்.

பவுல் அவர்களின் விசுவாசத்தில் குறைவுபட்டிருந்தவற்றை அளிப்பதற் கென்று எழுதினார் (3:9-13). விசுவாசத்தைப் பெலப்படுத்த இரண்டு விஷயங்கள் இன்றியமையாதவையாக உள்ளன: (1) தேவ வசனத்தைப் படித்தல் (ரோமர் 10:17) மற்றும் (2) அதற்குக் கீழ்ப்படிதல் (யாக்கோபு 2:20). பவுல் இவ்விரண்டையுமே வலியுறுத்தினார்.

இறையியல் கருத்துநோக்கில் இருந்து காணுகையில், 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர் நிருபங்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி அவற்றில் காணப்படும் கலந்துரையாடலினால் முக்கியமானவைகளாய் இருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் இருபத்தி ஐந்து வசனங்களுக்கு ஒன்று என்ற விதத்தில், வசனங்கள் இரண்டாம் வருகையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கையாளுகின்றன. இது வேதாகமத்தில் வலிவார்ந்த ஒரு தலைப்பாக உள்ளது, மற்றும் தெசலோனிக்கேயர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்கள் இப்பாடக்கருத்துப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதலைக் கணிச மான அளவு கூட்டுகிறது.

கிறிஸ்து ஆயிரம் ஆண்டுகள் ஆட்சிசெய்வதற்காக இந்த பூமிக்குத் திரும்பி வருவார் என்று போதிக்கின்றவர்கள், 4:13-18 வசனப்பகுதியானது, துன் மார்க்கருக்கு முன்பு "முதலில்" (வசனம் 16) நல்லவர்கள் எழுப்பப்படுவார்கள் ("முதலாம் உயிர்த்தெழுதல்"), மற்றும் எழுப்பப்பட்ட நல்லவர்கள் ஆகாயத்தில் கிறிஸ்துவை எதிர்கொள்வார்கள், அங்கு அடுத்துவரும் ஏழு ஆண்டுகள் அவர்கள் தங்கியிருப்பார்கள் என்ற "பரவசநிலை," பற்றி கூறுகிறது என்று சொல்லுகின்றனர். "பரவசநிலை" பற்றி வேத வசனங்கள் எதுவும் கூறுவதில்லை. கிறிஸ்துவுக்குள் உயிருடன் இருப்பவர்களுக்கு முன்பு, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் "முதலில்" எழுப்பப்பட்டு அவரைச் சந்திக்கச் செல்வார்கள் (4:16). யோவான் 5:28, 29, நல்ல வர்கள் மற்றும் பொல்லாதவர்கள் ஆகிய இருசாராரும் எழுப்பப்படும் ஒரே "வேளை" உள்ளது என்றே போதிக்கிறது. ஒரே ஒரு உயிர்த்தெழுதல் மாத்திரமே இருக்கும், அதன்பின்பு, உடனடியாக நியாயத்தீர்ப்பு இருக்கும் (எபிரெயர் 9:27).

## "உங்கள் பரிசுத்தமாகுதலும்கூட தேவனுடைய சித்தமாய் இருக்கிறது" (1 தெசலோனிக்கேயர் 4:3-7)

"பரிசுத்தமாகுதல்" என்ற வார்த்தை 4:3-7 வசனப்பகுதியில் மூன்று முறைகள் காணப்படுகிறது. நம்மில் பலர் பரிசுத்தமாகுதல் என்பதைப் பற்றி நிச்சயமற்றவர்களாய் இருக்கின்றோம். பல ஆண்டுகளுக்கு முன்பு, டெக்சாஸ் மாகாணத்தின் கிளிபர்ன் என்ற நகரின் மத்திய சபையில் பிரசங்கித்த கிளென்

வால்லெஸ் என்பவர், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் எழுந்து நிற்கவும் என்று கேட்டுக்கொண்டார். இருவர் மாத்திரம் எழுந்து நின்றனர்: ஒரு மூப்பரும், ஒரு பகுதி நேரப் பிரசங்கியாரும். எஞ்சியவர்கள், தாங்கள் பரிசுத்தமாக்கப்பட்டோமா இல்லையா என்பதை அறிந்திருக்கவில்லை. நீங்கள் தேவனுடைய பிள்ளையாய் இருந்தால், நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளதுபோல் காணப்படாதிருப்பினும், அவ்வாறு நீங்கள் உணராதிருப்பினும், அல்லது அதை நீங்கள் விசுவாசியாமல் இருப்பினும்கூட, நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கின்றீர்கள்!

I. பரிசுத்தமாகுதல் என்பதன் விளக்கம்.

A. "பரிசுத்தமாகுதல்" என்பது "பாவமற்ற பூரணத்தன்மை" என்றல்ல, ஆனால் "பிரித்துவைக்கப்படுதல்" என்றே அர்த்தப்படுகிறது.

1. இவ்வார்த்தை ஒரு நிலை அல்லது சூழ்நிலை என்பதைக் குறிக்க முடியும். இது நாம் கிறிஸ்தவர்களாவதைக் குறிக்கிறது (1 கொரிந்தியர் 6:11). ஒவ்வொரு கிறிஸ்தவரும் பரிசுத்த மாக்கப்பட்ட பரிசுத்தவான்.

2. இவ்வார்த்தை, 4:3-7ல் பயன்படுத்தப்பட்டுள்ள வகையில், ஒரு வாழ்வுமுறையைக் குறிக்க முடியும். நாம் பிரித்து வைக்கப்பட்டுள்ளதால், நாம் அதைப்போல் வாழ வேண்டும். நாம் புறதெய்வ வணக்கத்தாரைப்போல் வாழக்கூடாது என்று அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளோம் (வசனம் 5; மோக இச்சைக்குட் படாமல்).

B. இவ்வார்த்தை ஒப்புக்கொடுத்தல், அர்ப்பணித்தல், அதாவது, ஒரு விசேஷித்த நோக்கத்திற்காகப் பிரித்துவைக்கப்படுதல் என்ற கருத்தையும் கொண்டுள்ளது. இது நமது வேதவசனப்பகுதியில் மறைமுகமாய் உணர்த்தப்பட்டுள்ளது (2 தீமோத்தேயு 2:20, 21ஐக் காணவும்).

1. மற்ற ஒவ்வொருவரைப் போலவும் இருக்க விரும்புதல் என்பது மாபெரும் அபாயமாக உள்ளது. நாம் மாறுபட்டவர்களாய் இருப்பதற்கு நமக்கு தைரியம் தேவைப்படுகிறது (ரோமர் 12:2; 2 கொரிந்தியர் 6:17, 18; யாக்கோபு 4:4; தானியேல் 1; 3; 6).

2. நாம் ஒரு விசேஷித்த வகையில் தேவனுக்குரியவர்களாய் இருக்கின்றோம்; நாம் அதைப்போன்று வாழவேண்டியது அவசியமாக உள்ளது (1 கொரிந்தியர் 6:20).

C. "பரிசுத்ததன்மை" ["holiness"] என்பது "பரிசுத்தமாகுதல்" ["sanctification"] என்ற வார்த்தை வருகிற அதே வேர்ச்சொல்லில் இருந்தே கிளைக்கிறது. "பரிசுத்தம்" என்ற வார்த்தை, தேவனுடைய தன்மையில் இருத்தல், அதாவது, தேவனைப்போல் இருத்தல் என்ற வலியுறுத்தம் கொண்டுள்ளது.

1. தேவன் பரிசுத்தராய் இருக்கின்றார் (ஏசாயா 6:3; வெளிப் படுத்தின விசேஷம் 4:8), எனவே நாம் பரிசுத்தராய் இருக்க வேண்டும் (லேவியராகமம் 20:7). "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைக ளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர்,

*ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதி யிருக்கிறதே" (1 பேதுரு 1:15, 16).*

2. *வேறுபட்டிருப்பதை உலகம் விரும்புவதில்லை, ஆனால் அதுவே தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் நமக்கு விடுக்கப்பட்டுள்ள அறைகூவலாக உள்ளது (தீத்து 2:14; 1 பேதுரு 2:9). நாம் வேறுபட்டவர்களாய் இருப்பதால், நாம் வேறுபட்டவர்களாய்ச் செயல்பட வேண்டும். நமது தேவன், நமது ராஜா, நமது ராஜ்யம், நமது மதிப்பீடுகள், மற்றும் நமது இலக்குகள் வேறுபட்டுள்ளன[ர்].*

II. *பரிசுத்தமாகுதலின் செயல்விளக்கம் (4:3-7).*

A. *"வேசிமார்க்கத்துக்கு விலகியிருத்தல்" (வசனம் 3).*

1. *"நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனு டைய சித்தமாயிருக்கிறது." பாலியல் தூய்மை என்பது தேவனுடைய பிள்ளைகளிடத்தில் விருப்பத்தேர்வுக்குரிய விஷயமாய் இருப்பதில்லை.*
2. *"பாலியல் ஒழுக்கக்கேட்டை," அல்லது பொதுவாக பாலியல் ரீதியான பாவத்தைத் தவிர்த்தல் என்பது பரிசுத்தமாகுதலின் ஒரு விவரிப்பாக உள்ளது.*

B. *"உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து" (வசனம் 5).*

1. *"பாத்திரம்" என்பது அனேகமாக ஒருவரின் சுயசரீரத்தைத் குறிப்பிடலாம் (1 சாமுவேல் 21:5; 2 கொரிந்தியர் 4:7). நாம் நமது இச்சைகளைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.*
    a. *இச்சையும் பாலுறவும் தவறானவை அல்ல. தேவன் பாலுறவை ஏற்படுத்தி வைத்தார். சரியான சூழ்நிலையில், அது சரியானதாகவே உள்ளது: "விவாகம் யாவருக்குள்ளும் கன முள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" (எபிரெயர் 13:4).*
    b. *தவறான வேளையில், தவறான இடத்தில், தவறான நபருடன், பாலுறவு தவறானதாக உள்ளது, உதாரண மாக., வசனரீதியான திருமண உறவுக்குப் புறம்பாகப் பாலுறவு கொள்ளுதல், உங்கள் சொந்தத்துணை தவிர வேறு யாரிடமாவது பாலுறவு கொள்ளுதல் போன்றவை. "வேசித் தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறான்" (1 கொரிந்தியர் 6:18).*
2. *"பாத்திரம்" என்ற வார்த்தை ஒருவரின் மனைவியைக் குறிப்ப தாய் இருக்கலாம் (1 பேதுரு 3:7).*

a. வசனரீதியான துணையுடன் சரியான உறவு கொண்டிருத்தல் என்பதே பாலியல் ஒழுக்கத்தில் மாபெரும் முன்னுதாரணமாக உள்ளது (1 கொரிந்தியர் 7:2-5; நீதிமொழிகள் 5:15, 18-20).

b. இளைஞர்களே, இளம்பெண்களே, நீங்கள் யாரைத் திருமணம் செய்துகொள்வீர்கள் என்று முடிவெடுத்தலானது நீங்கள் மேற்கொள்ளும் மிகமுக்கியமான முடிவுகளில் ஒன்றாக உள்ளது!

C. "ஒருவனும் ... தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும்" (வசனம் 6).

1. பவுல் பரிசுத்தமாகுதலுக்கு இரு விவரிப்புகளைக் கொடுத்துக் கொண்டிருக்கலாம்: பாலியல் பாவத்தில் இருந்து விலகியிருத்தல் மற்றும் உங்கள் வியாபார விஷயங்களில் நேர்மையுடன் இருத்தல். வியாபார விஷயங்கள், பரிசுத்தமாயிருத்தல் அல்லது அதில் குறைவுபடுதல் என்பதைப் பிரதிபலிக்கிறது. பவுல் அனேகமாக இன்னமும் பாலியல் பாவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கலாம்.

a. "விஷயத்தில்" என்பதற்கு முன்பு "இந்த" (KJV) என்ற சொல்லானது மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டுள்ளது.

b. கிரேக்க மொழியில், "விஷயம்" என்பதற்கு முன்னால் திட்டவட்டச் சுட்டுச் சொல் உள்ளது: "the matter." பவுல் விவாதித்துக்கொண்டிருந்த "விஷயம்" என்ன? பாலியல் பாவம்.

2. பாலியல் பாவங்கள் பிறரைப் புண்படுத்துகின்றன: நமது துணைகளை, பிறருடைய துணைகளை, நமது பெற்றோர்களை, சபையை, பாலியல் பாவம் என்பது மக்கள் தொடர்பு சாதனங்களினால் சித்தரிக்கப்படுவதுபோல, "கேளிக்கையும் விளையாட்டும்" அல்ல. அது பிறருடனான நமது உறவுமுறைகளை அழிக்கிறது; அது தேவனுடனான நமது உறவுமுறையை அழிக்கிறது!

முடிவுரை

A. நாம் எவ்வாறு வாழ்கின்றோம் என்பது தேவனுடனான நமது உறவுமுறைக்குப் பின்னோக்கி செல்லுகிறது. யோசேப்பு, "போத்திபார் என்னைக் கொன்றுபோடுவான், எனவே நான் விபசாரம் செய்ய முடியாது" என்று கூறவில்லை. அவர், "தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி?" என்று கேட்டார் (ஆதியாகமம் 39:9). வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால்: "நான் தேவனுக்குரியவனாக இருக்கின்றேன். நான் ஒரு விசேஷித்த வழியில் அவருடையவனாய் இருக்கின்றேன். நான் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கின்றேன், பரிசுத்தமாய் இருக்கின்றேன். நான் இதைச் செய்யமுடியாது!" என்று அவர் கூறினார்.

B. நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கின்றீர்களா? (நீங்கள் ஒரு

*கிறிஸ்தவராய் இருக்கின்றீர்களா?) நீங்கள் அதைப்போன்று வாழ்கின்றீர்களா?*

# 14

# 2 தெசலோனிக்கேயர்:
# புதுக் கிறிஸ்தவர்களைத் திருத்துதல்

***தலைப்பு***

*இந்தப் புத்தகம் இதைப் பெற்றுக்கொண்டவர்களைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது (1:1). இது தெசலோனிக்கேயில் இருந்த சபைக்குப் பவுல் எழுதிய இரண்டாம் நிருபமாகும்.*

***பின்னணி***

*பவுல் தெசலோனிக்கேயில் இருந்த சபைக்கு முதல் கடிதம் எழுதிய சற்றுக்காலத்திற்குப் பின்பு (1 தெசலோனிக்கேயர் நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்), அவர் பெற்றுக்கொண்ட ஒரு அறிக்கையானது (3:11) அவரை இரண்டாவது நிருபம் எழுதும்படி தூண்டிற்று. மற்ற விஷயங்களுடன், சபைக்குழுமங்களில், அவரிடத்தில் இருந்து வந்ததாகக் கூறப்பட்டு தவறைப்போதித்துக்கொண்டிருந்த, கள்ளக்கடிதம் ஒன்று சுற்றுக்குவிடப்பட்டிருந்ததாகச் செய்தியும் வந்தது (2:2). அவரது முதல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த இரு தலைப்புகளின்மீது மேலும் உபதேசம் அவசியமாய் இருந்தது: கர்த்தருடைய இரண்டாம் வருகை (2:2ஐக் கவனிக்கவும்; 1 தெசலோனிக்கேயர் 4:13-5:11ஐக் காணவும்) மற்றும் நேர்மையான உழைப்பின் மதிப்பு (3:11ஐக் கவனிக்கவும்; 1 தெசலோனிக் கேயர் 4:11ஐக் காணவும்).*

*சிலர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஏற்கனவே நடைபெற்று விட்டது என்று போதித்தனர் (NKJV மற்றும் பிற நவீன மொழிபெயர்ப்புகளில், 2:2ஐக் கவனிக்கவும்). ஒருவேளை சிலர் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடன் "எழுப்பப்பட்டு" அவருடன் "ஆளுகை" செய்து கொண்டுள்ளனர் என்ற பவுலின் போதனையை (எபேசியர் 2:5, 6ஐக் கவனிக்கவும்) தவறாகப் புரிந்துகொண்டு, பவுல் சரீர உயிர்த்தெழுதலைக் குறிப்பிடவில்லை என்பதை உணர்ந்தறியாது இருந்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் "உயிர்த்தெழுதல் ஏற்கனவே நடந்தாயிற்று" (2 தீமோத்தேயு 2:18), என்பது கிறிஸ்து ஏற்கனவே வந்துவிட்டார் என்று அர்த்தப்படுத்தியதாக முடிவுசெய்திருக்கலாம். அவர்கள் தங்கள் கோட்பாடுகளினால் தெசலோனிக்கேயில் இருந்த சபையில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர் (1:7; 2:2).*

*சபைக்குழுமத்தில் இருந்த சிலர் வேலை செய்ய மறுத்து, அவர்களைச் சபைக்குழுமம் தாங்க வேண்டும் என்று எதிர்பார்க்கத்தொடங்கினர். அவர்கள் தங்கள் காலத்தை வீண் அலுவல்களிலும், விரோதத்தைத் தூண்டுவதிலும் செலவிட்டு வந்தனர். பலர் இவ்விரு பிரச்சனைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்று நினைத்தனர், அதாவது, பவுலைத் தவறாகப் புரிந்துகொண்டவர்களே இரண்டாம் வருகை நடந்துவிட்டது என்ற கருத்தைப் பரப்பிவந்த வேலை செய்யாதவர்களாயிருந்தனர். கர்த்தர் ஏற்கனவே வந்துவிட்டார் என்று தங்களுக்குத் தாங்களே நம்பிய நிலையில், அவர்கள்*

*வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவுசெய்தனர். இவ்விரு பிரச்சனைகளும் ஒன்றாய் இருந்திருப்பினும் இல்லாவிட்டாலும், இந்தத் தனிநபர்கள் சபைக் குழுமத்தின் ஒத்திசைவைப் பாழாக்கிக் கொண்டிருந்தனர்.*

*"பாவ - மனிதன்" (அல்லது* "the man of lawlessness"*) பற்றிய குறிப்பு (2:3முதல்.,* KJV*) இக்கடிதத்தில் மிகவும் அறைகூவல் விடுக்கும் விஷயங்களில் ஒன்றாக உள்ளது. முதலாவது, பவுல் வேறு வகையில் கூறியிருந்தால் ஒரு நேரடிப்பதிவேடாக இருந்திருக்கக்கூடியதான, இறைவெளிப்பாட்டு மொழிநடையை பயன்படுத்துகின்றார் (வெளிப்படுத்தின விசேஷம் குறிப்புகளைக் காணவும்). இரண்டாவது பவுல், தாம் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை ஏற்கனவே தெசலோனிக்கே சபைக்கு முன்னதாக விளக்கியிருந்தார் (2:5, 6), ஆனால் நாம் அந்த விளக்கத்தைப் பெற்றிருக்கவில்லை. இன்றைய நாட்களில் "பாவமனிதனை" யோவான் பேசுகின்ற "அந்திகிறிஸ்துவாக" அடையாளப்படுத்துதல் என்பது பொதுவான விஷயமாக உள்ளது, ஆனால் "அந்திகிறிஸ்து" என்ற சொற்றொடர், கிறிஸ்து "மாம்சத்தில் வரவில்லை" (2 யோவான் 7) என்று போதிக்கின்ற எவரொருவரையும், விசேஷமாக அறிவுசார்ந்த கொள்கையின் போதகர்களைக் (1, 2, 3 யோவான் நிருபங்களுக்கான குறிப்புகளைக் காணவும்) குறித்தது என்று யோவான் தெளிவாகக் கூறியிருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு, சபையின் ஒரு பகுதியானது இவ்வசனப்பகுதியைப் போப்பிற்கு நடைமுறைப்படுத்திய வேளையில், இன்னொரு பிரிவு அது முகமது நபியைக் குறிப்பதாக நினைத்தது. பவுல் தமது காலத்தில் நடைபெற்ற சில விஷயங்களைக் குறிப்பிட்டவராகக் காணப்படுகின்றார் (2:7), அவர் எதிர்காலத்தில் நடைபெறவிருந்த சில விஷயங்களைக் குறிப்பிடவில்லை. தெசலோனிக்கேயருக்கு இருந்த உட்கண்ணோக்கு நமக்கு இல்லை என்பதால், இதன் அர்த்தம் குறித்து நாம் உபதேசரீதியாக மிகக் கண்டிப்புடன் இருக்க இயலாது. "பாவ மனிதன்" யார் என்பதை நாம் புரிந்து கொண்டாலும் அல்லது ஒருக்காலும் புரிந்துகொள்ள இயலாமல் போனாலும், அவனைப்பற்றிக் குறிப்பிடுவதின்மூலம் பவுல் ஏற்படுத்த வந்த கருத்தைப் பற்றி நாம் புரிந்துகொள்ள முடியும்: கிறிஸ்து ஏற்கனவே திரும்பி வந்திருக்கவில்லை.*

**வரைகுறிப்பு**

*வாழ்த்து (1:1, 2).*

- I. *தெசலோனிக்கேயர்களுக்காக அக்கறை (1:3-12).*
    - A. *அவர்கள் துன்புறுத்தப்பட்டிருந்தனர் (வசனங்கள் 3-6).*
    - B. *கிறிஸ்து திரும்பிவரும்போது, எல்லாவிஷயங்களும் சரியாகும் (வசனங்கள் 7-12).*
- II. *இரண்டாம் வருகை பற்றிய தவறு [ள்ள போதனை]களைத்திருத்துதல் (2).*
    - A. *கர்த்தருடைய மறுவருகை பற்றித் தெளிவுபடுத்தும் கூற்று (வசனங்கள் 1-12).*
    - B. *விலகிச்சென்று விடாதிருக்கும்படிக்கான கட்டளை (வசனங்கள் 13-17).*
- III. *ஒழுக்கமற்றுத் திரிகிறவர்களை விட்டு விலகும்படிக்குக் கட்டளை (3:1-15).*

A. *பெரும்பான்மையானவர்கள் பவுலின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றினர் (வசனங்கள் 1-5).*
B. *அவ்வாறு பின்பற்றாதவர்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் (வசனங்கள் 6-15).*

*ஆசீர்வாதம் (3:16-18).*

***2 தெசலோனிக்கேயர் நிருபத்தில் இருந்து பாடங்கள்***

*பழைய தவறுகள் புதிய உடைகளில் நிலையாக மீண்டும் தோன்று பவைகளாய்க் காணப்படுகின்றன. அதுபோன்றே, இரண்டாம் வருகை, உயிர்த்தெழுதல், மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவை பற்றியிருந்த கடந்த காலக் கருத்துக்கள் யாவும் இன்றைய நாளில் நம்மிடத்தில் மீண்டும் வந்துள்ளன. இப்படிப்பட்ட போதனைகளால், "மனம் சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்" என்று பவுல் இன்னமும் கூறுகின்றார். கிறிஸ்து மறுபடியும் வரும்போது, அதை எல்லாரும் அறிந்துகொள்வார்கள் (நடபடிகள் 1:11; வெளிப்படுத்தின விசேஷம் 1:7); அது நடைபெற்றது என்று கூறுவதற்காக விசேஷித்த உட்கண்ணோக்குடைய போதகர்களை நாம் சார்ந்திருக்க தேவையிராது.*

*2:10-12 வசனப்பகுதியானது வேதாகமத்தில் உள்ளவற்றிலேயே மிகவும் மயிர்க்கூச்செரியச் செய்யும் வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது. இது நாம் யாவரும் நமது இருதயங்களை ஆராய்ந்து பார்க்கவும், "நான் உண்மையிலேயே சத்தியத்தை நேசிக்கின்றேனா?" என்று கேட்கவும் காரணமாக வேண்டும்.*

*பவுல் "பாரம்பரியங்கள்" என்ற வார்த்தையைப் பலமுறை பயன்படுத்துகின்றார் (2:15; 3:6). இவ்வார்த்தை, மனிதர்களிடமிருந்து, அல்லது தேவனிடத்திலிருந்து ஏவுதல் பெற்ற "மனிதர்களால் கையளிக்கப்பட்டது" என்று அர்த்தப்படமுடியும், இவ்விடத்தில் இதையே பவுல் அர்த்தப்படுத்துகின்றார். தேவனுடைய "பாரம்பரியம்" எப்போதும் நல்லதாகவே இருக்கிறது. மற்றவர்கள்மீது கட்டப்பட்டிருக்கிறதான அல்லது தேவனுடைய சித்தத்தை மீறுகிறதான மனிதனுடைய பாரம்பரியம் மோசமானதாக உள்ளது (மத்தேயு 15:1-9).*

*சபை ஒழுங்குமுறை என்பது வேதாகமப் பாடக்கருத்துக்களிலேயே மிகவும் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாக, ஆனால் மிகவும் முக்கியமான, ஒன்றாக உள்ளது. ஒழுங்குமுறைக்கு உட்பட்டிராத பிள்ளையானது பயங்கரமானதாக உள்ளது; ஒழுங்குமுறைக்கு உட்பட்டிராத சபையானது பேரழிவாக உள்ளது. சபை ஒழுங்குமுறைக்கென்று பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்டுள்ள, பதிவுசெய்யப்பட்ட முதல் அறிவுறுத்தலானது 3:6-15ல் காணப்படுகிறது. அதைப்பற்றி கவனநிறைவுடனும் ஜெப நிறைவுடனும் ஆழ்ந்து சிந்தியுங்கள்.*

## *"ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால்" (2 தெசலோனிக்கேயர் 3:6-15)*

*சிலர் வேலை என்பது பாவத்தின் விளைவாக மனிதகுலத்தின்மீது சுமத்தப்பட்ட சாபம் என்று நினைக்கின்றனர், ஆனால் வேலை என்பது தன்னிலே பாவமானது அல்ல. மனிதன் பாவம் செய்வதற்கு முன்பு, அவனுக்கு*

ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தும் வேலை கொடுக்கப்பட்டிருந்தது (ஆதியாகமம் 2:15). தேவனும் இயேசுவும் கிரியை செய்கின்றனர் என்று வேதாகமம் வலியுறுத்துகிறது (யோவான் 5:17). முள்ளுகள், குருக்குகள், மற்றும் நமது உழைப்பில் கூட்டப்பட்ட சிரமங்கள் யாவும் சாபமாய் இருந்தன (ஆதியாகமம் 3:17-19). வேலை என்பது தன்னிலே ஆசீர்வாதமுள்ளதாக, நமது வாழ்விற்கு நோக்கத்தைக் கூட்டுவதாக உள்ளது (எபேசியர் 4:28ஐக் கவனிக்கவும்).

தெசலோனிக்கேயில் இருந்த சபையில், சிலர் வேலைசெய்ய மனதின்றி இருந்தனர் (3:11); அவர்கள் பிறர் தங்களை ஆதரிக்க வேண்டும் என்று நினைத்தனர். ஒருவேளை அவர்கள் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்டனர். ஒருவேளை, அவர்கள் இன்றைய நாட்களில் உள்ள சிலரைப்போன்று, யாரேனும் ஒருவர் "தங்களைப் பிழைப்பூட்ட கடமை கொண்டுள்ளனர்" என்று மாத்திரம் நினைத்திருக்கலாம். அவர்களின் நோக்கம் எதுவாக இருப்பினும், அவர்கள் (மற்றும் நாம்) நேர்மையான உழைப்பில் ஈடுபட மனதாயிருக்க வேண்டியது ஏன் என்பதற்குப், பவுல் வல்லமை நிறைந்த மூன்று காரணங்களைக் கொடுத்தார்:

I. தேவனுடைய கட்டளையினிமித்தம் (3:6, 10, 12).

A. பவுல் புத்திகூறுவதையும் இணங்கச் செய்வதையும் தெரிந்து கொண்டார், ஆனால் தேவைப்படுகிறபோது, அவர் தேவனால் தமக்குத் தரப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்த முடிந்தது மற்றும் அதைப் பயன்படுத்தினார்: "நாங்கள் உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்" (வசனம் 6; வசனங்கள் 10, 12ஐக் காணவும்). அவர் இதைக் கர்த்தரிடத்தில் இருந்து வந்த அதிகாரத்தினால் செய்தார் (வசனங்கள் 6, 12)!

1. "ஏற்றுக்கொண்ட முறைமையின்படி" நடவாமல் "ஒழுங்கற்ற வாழ்வை" நடத்துவதில் (வசனம் 6), அவர்கள் வெளிப்படுத்தப் பட்ட தேவனுடைய சித்தத்திற்கு (வசனம் 10) கீழ்ப்படியா திருந்தனர். தெசலோனிக்கேயர்கள் அமைதியாக வாழும் படிக்கும், தங்கள் சொந்த வேலையைக் கவனிக்கும்படிக்கும், தங்கள் கைகளினால் வேலை செய்யும்படிக்கும் அறிவுறுத்தப் பட்டிருந்தனர் (1 தெசலோனிக்கேயர் 4:11, 12).

2. "வேலை செய்யாதிருக்கிற" (வசனம் 10; KJV: "வேலை செய்ய மாட்டார்கள்") என்பது எண்ணப்போக்கைப் பற்றிப்பேசுகிறது.

a. அவர்கள் ஒரு உடல் ஊனத்தினாலோ அல்லது வாய்ப்புக் குறைவினாலோ வேலை செய்ய இயலாதிருக்கவில்லை. ஒரு விசுவாசி வேலை செய்ய முடியாமல் இருந்து மற்றும் தேவைகளைக் கொண்டிருக்கும்போது, நாம் அவருக்கு உதவிசெய்ய வேண்டும் (யாக்கோபு 2:14-17; 1 யோவான் 3:16-18).

b. இவர்கள் வேலைசெய்ய மனமின்றி இருந்தனர். இவர்களால் வேலைசெய்ய முடியும், ஆனால் இவர்கள் வேலை செய்யமாட்டார்கள்.

3. இப்படிப்பட்ட நபர்கள் "அமைதலோடே வேலைசெய்யும்

படியும், [பிறருடைய சாப்பாட்டிற்குப் பதிலாக] தங்கள் சொந்தசாப்பாட்டை சாப்பிடும்படிக்கும்" பவுல் கட்டளை இட்டார் (வசனம் 12).

B. இது ஒரு முக்கியமற்ற விஷயமாக இருக்கிறதா? இல்லை! தேவன் சிலவற்றைக் கூறுகின்றபோது, அது வலிவார்ந்த வகையில் முக்கியத்துவமானதாக உள்ளது! இது சரிப்படுத்தும் ஒழுங்கு முறையை எச்சரிக்கப் போதுமான அளவு முக்கியமானதாக இருந்தது (வசனம் 6)!

II. பவுலுடைய உதாரணத்தினிமித்தம் (3:7-9).

A. பவுல் இதைப் பிரசங்கிக்க மட்டும் செய்தாரா, அல்லது இதன்படி அவர் வாழ்ந்தாரா? நமது வேத வசனப்பகுதியில், அவர் தெசலோனிக்கேயர்களுக்கு ஊழியம் செய்கையில், தாம் செய்த கைத்தொழில் பற்றி அவர்களுக்கு நினைவூட்டினார் (1 தெசலோனிக்கேயர் 2:9ஐக் காணவும்).

B. பவுல் அவர்களால் ஆதரிக்கப்படுவதற்கு உரிமை கொண்டிருந்தார் (வசனம் 9; லூக்கா 10:7; கலாத்தியர் 6:6; 1 தீமோத்தேயு 5:17, 18ஐக் காணவும்), ஆனால் நேர்மையான உழைப்பின் முன்மாதிரி ஒன்றைக் காண்பிக்க விரும்பியதால், அவர் அந்த உரிமையை விட்டுக் கொடுத்திருந்தார்.

III. பாவத்தின் விளைவுகளினிமித்தம் (3:6, 11-15). (இதை ஒரு கணத்திற்கு சந்தேகப்படாதிருங்கள்; நாம் பாவத்தை - மும்முரமான பாவத்தை - பற்றி, அதன் தொலைதூரம் சென்றடையும் விளைவுகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றோம்.)

A. சபைக்கு விளைவுகள்:

1. வேலைசெய்யாத இவர்கள் சபையின் ஒத்திசைவை நாசம் செய்து கொண்டிருந்தனர்.

a. இவர்கள் "ஒழுங்கற்று" திரிபவர்களாயும் "ஒழுங்குபடுத்தப் படாதவர்களாயும்" இருந்தனர் (வசனங்கள் 6, 11).

b. இவர்கள் "வேலையின்றி சுற்றித் திரிபவர்களாய்" இருந்தனர் (வசனம் 11; 1 தீமோத்தேயு 5:13ஐக் காணவும்).

2. வேலை செய்ய மனதாயிருந்தவர்கள் ஊக்கம்குலைக்கப் பட்டனர் (அவர்கள் "திடனற்று," போயினர்), எனவே பவுல் இவர்களை வற்புறுத்த வேண்டியதாயிற்று (வசனம் 13).

3. சபையின் செல்வாக்கு புண்படுத்தப்பட்டது (1 தெசலோனிக் கேயர் 4:12அவைக் கவனிக்கவும்).

B. வேலைசெய்ய மனதில்லாமல் இருந்தவர்களுக்கான விளைவுகள்:

1. அவர்கள் பிறருக்குப் பாரமாய் இருந்தது மட்டுமின்றி; அவர்கள் நேர்மையான உழைப்பினால் தங்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களையும் தங்களிடம் இருந்தே களவாடினர் (1 தெசலோனிக்கேயர் 4:12ஆவைக் கவனிக்கவும்).

2. அவர்கள் மனந்திரும்பவில்லையென்றால், அவர்கள் வெளிப் படையாக ஒழுங்குபடுத்தப்படுவார்கள் (வசனங்கள் 6, 14,

*15).*

a. *திருத்தும் ஒழுங்குமுறை என்பது ஒழுக்கவீனர்களுக்கு (1 கொரிந்தியர் 5) அல்லது தவறானவற்றைப் போதிப்பவர்களுக்கு (ரோமர் 16:17) மாத்திரமே என்று நாம் நினைக்க லாம், ஆனால் சோம்பலாய் இருத்தல் என்பது கிறிஸ்துவின் சரீரத்தைப் பாதிப்பது போன்று மற்ற சில விஷயங்களே அதைப் பாதிக்கின்றன. ஆகையால், பவுல் இந்தக் கலந்துரையாடலைத் தொடங்கிய விதத்திலேயே இதை அவர் முடிக் கின்றார்: "இவர்களை ஒழுங்குபடுத்துங்கள்" (வசனங்கள் 6, 14).*

b. *இதை நாம் சிலவேளைகளில் "ஐக்கியத்தை விட்டு விலகிக் கொள்ளுதல்" என்று அழைக்கின்றோம். இது தவறுசெய்கிற சகோதருடன் தோழமை கொள்ளாதி ருத்தலை உள்ளடக்குகிறது (வசனம் 14). பவுல் கொரிந்தி யருக்கு "இப்படிப்பட்டவர்களுடன் புசிக்கவும் வேண்டாம்" என்று புத்திகூறினார் (1 கொரிந்தியர் 5:11ஐக் காணவும்). மனந்திரும்பாத சகோதரர் களுடன் இந்த நடவடிக்கைக்கு முன்பு நாம் கொண்டிருந்த உறவை இனியும் கொண்டிருக்கக் கூடாது.*

c. *தவறுசெய்கின்ற சகோதரர் தமது பாவத்திற் காக வெட்கப்பட்டு (வசனம் 14) மனந்திரும்ப வேண்டும் என்பதே இதன் நோக்கமாக உள்ளது. தவறுசெய்கின்றவர்களின் ஆவியானது "கர்த்தராகிய இயேசுவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி" (1 கொரிந்தியர் 5:5) திரும்பக்கொண்டுவருதலே திருத்தும் ஒழுங்குமுறைமைக்கு நோக்கமாக எப்போதும் உள்ளது. வசனம் 15ல் பவுல் தமது கலந்துரையாடலைப் பின்வரும் அறிவுறுத்துதலுடன் நிறைவு செய்தார்: "ஆகிலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்."*

*முடிவுரை*

*நமது பிள்ளைகள் வாழ்வில் தங்கள் சொந்த பாரத்தைத் தாங்களே சுமக்கும் பொறுப்புள்ள குடிமகன்களாக இருக்கும்படி போதித்தலைக் காட்டிலும், ஒருசில விஷயங்களே அதிகமுக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. நாம் "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளுக்கும்" போதிக்க வேண்டும்.*

# 15

# 1 தீமோத்தேயு:
# பிரசங்கியார்களுக்கான கைப்புத்தகம்

***தலைப்பு***

*1 தீமோத்தேயு புத்தகம் அதைப் பெற்றுக்கொண்ட ஒரு இளம் பிரசங்கியாரின் பெயரைக்கொண்டு குறிப்பிடப்படுகிறது (1:2).*

***பின்னணி***

*பவுலின் நிருபங்கள் இயல்பாகவே, சபைக்குழுமங்களுக்கு எழுதப்பட்டவை (ரோமர் - 2 தெசலோனிக்கேயர்) மற்றும் தனிநபர்களுக்கு எழுதப்பட்டவை என்று வகைப்பட்டுள்ளன. 1 தீமோத்தேயு நிருபம் தனிநபர்களுக்கு எழுதப்பட்டவற்றில் முதலாவதாகும். மூன்று நிருபங்கள் கொண்ட தொகுதியில் (1 மற்றும் 2 தீமோத்தேயு, தீத்து.), 1 தீமோத்தேயு நிருபம் "மேய்ப்புப்பணி நிருபங்களில்" ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தக் குறிப்புப்பெயர் அனேகமாக ஊழியக்காரரை "பாஸ்டர்" என்று அழைக்கும் நாமகரணக்கூட்டத்தின் நடைமுறை வழக்கத்தில் இருந்து கிளைத்ததாய் இருக்கலாம். இருப்பினும், புதிய ஏற்பாட்டில், "பாஸ்டர்" என்ற சொற்றொடர் ஊழியருக்கோ அல்லது சுவிசேஷகருக்கோ அல்ல, ஆனால் சபையின் கண்காணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது (நடபடிகள் 20:17, 28; எபேசியர் 4:11; 1 பேதுரு 5:1-4). 1 மற்றும் 2 தீமோத்தேயு மற்றும் தீத்து நிருபங்களை "சுவிசேஷகருக்கான நிருபங்கள்" என்று நினைத்தல் மேன்மையாக இருக்கும்.*

*நடபடிகள் புத்தகத்தின் முடிவில், பவுல் இரண்டு ஆண்டுகளாகச் சிறையில் இருந்தார் (நடபடிகள் 28:30, 31), ஆனால் அவர் விரைவில் விடுதலையாக்கப்படுவதை எதிர்பார்த்திருந்தார் (பிலேமோன் 22). ரோமாபுரி நகரைச் சேர்ந்த கிளெமென்ட் (கி.பி. 95) என்பவரின் கூற்றுப்படி, பவுல் விடுவிக்கப்பட்டு விரிவான பயணம் செய்தார். அவர் மீண்டும் கைதுசெய்யப்படுவதற்கு முன்பு ஏறக்குறைய கி.பி. 64-65ல் அனேகமாக முன்பே திட்டமிட்டிருந்தபடி (ரோமர் 15:24, 28) ஸ்பானியா நாட்டிற்குக்கூடச் சென்றார் (2 தீமோத்தேயு நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்). தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட முதல் நிருபமும், தீத்துவுக்கு எழுதப்பட்ட நிருபமும், அவர் ரோமச்சிறையில் வைக்கப்பட்டிருந்த இரு காலகட்டங்களுக்கு இடையில் எழுதப்பட்டவை என்ற கருத்து பொருத்தமானதாக உள்ளது. பவுல் விடுவிக்கப்பட்டிருந்த இந்தக் காலகட்டத்தின்போது, அவர் தீமோத்தேயுவுடன் எபேசு நகருக்குச் சென்று, பின்பு தீமோத்தேயுவை அங்கே விட்டுவிட்டு, மக்கெதோனியாவுக்குப் பயணத்தைத் தொடங்கினார் (1:3), அவ்வேளையில் அவர் விரைவிலேயே தீமோத்தேயுவுடன் இணைந்துகொள்ளத் திட்டமிட்டிருந்தார் (3:14). அவர் இந்தக் கடிதத்தை அனேகமாக கி.பி. 63-64ல் மக்கெதோனியாவில் இருந்து எழுதியிருக்கலாம்.*

*தீமோத்தேயு, பவுலின் இருதயத்தில் விசேஷித்த வகையில் இடம் பெற்றிருந்தார். அவர் (தீமோத்தேயு) லீஸ்திரா நகரத்தவராய் இருந்தார் (நடபடிகள் 16:1); அவரது தாயும் பாட்டியும் தேவபக்தியுள்ள யூதப் பெண்களாய் இருந்தனர் (2 தீமோத்தேயு 1:5; 3:15). அவர் அனேகமாக, பவுலின் முதல் சுவிசேஷப்பயணத்தின்போது மனமாற்றப்பட்டிருக்கலாம் (1:2; நடபடிகள் 14:6, 7). பவுல் தமது இரண்டாவது பயணத்தின்போது, லீஸ்திரா வழியாகச் சென்ற வேளையில், அவர் தனது குழுவுடன் சேர்ந்து கொள்ளும்படி தனிச்சிறப்பு வாய்ந்த இந்த இளைஞரை அழைத்தார் (நடபடிகள் 16:1-3). அந்த வேளையில் இருந்து, தீமோத்தேயு பவுலின் பயணத்துணையாளியாக, நெருங்கிய நண்பராக, மற்றும் மிகவும் நம்பிக்கைக்குரிய உடன்ஊழியராக இருந்தார் (பிலிப்பியர் 2:19-22).*

*தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட முதல் நிருபம் மிகவும் தனிப்பட்டதாக, சபைவிஷயங்கள் பற்றிய அறுவுறுத்தல்களும், ஒருவர் தம்மை "தேவனுடைய மனிதனாக" (6:11) காத்துக்கொள்ளுதல் எப்படி என்பதற்கான அறிவுரைகளும் கலந்ததாக உள்ளது. இந்த நிருபம், இதைத் தொடர்ந்து வரும் மற்ற இரு நிருபங்களுடன் சேர்ந்து, வசனத்தைப் பிரசங்கிக்கத் தன்னை ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு மனிதரின் வாழ்வு மற்றும் ஊழியம் ஆகியவற்றை வரைகுறிப்பிடுகிறது.*

**வரைகுறிப்பு**

*"ஆரோக்கியமான" என்ற வார்த்தை பவுலினால் பயன்படுத்தப்படுகிறபடி (1:10), "முழுமையான" அல்லது "நலமான" என்ற மருத்துவச் சொற்றொடராகும் (2 தீமோத்தேயு 1:7, 13; 4:3; தீத்து 1:9, 13; 2:1, 8).*

***வாழ்த்து (1:1, 2).***

- I. *ஆரோக்கியமான சபையைக் கொண்டிருத்தல் எவ்வாறு (1:3-3:16).*
  - A. *யுத்த வியாதி (கள்ளப்போதகம்) (1:3-20).*
  - B. *நல்ல ஆரோக்கியப் பழக்கங்களை ஊக்குவித்தல் (2; 3).*
    1. *தேவனுக்குப் பிரியமான ஆராதனை (2).*
    2. *தேவனால் அங்கீகரிக்கப்பட்ட நடத்துவத்துவம் (3).*
- II. *ஆரோக்கியமான பிரசங்கியாராக இருத்தல் எவ்வாறு (4:1-6:19).*
  - A. *சத்தியத்தை - மற்றும் சத்தியத்தை மாத்திரம் - பிரசங்கிப்பதற்கு உங்களை அர்ப்பணியுங்கள் (4).*
  - B. *சபையில் உள்ள வெவ்வேறு குழுக்களுடன் நீங்கள் எவ்வாறு நடந்துகொள்வது என்பதைத் தீர்மானம் செய்யுங்கள் (5:1-6:2).*
    1. *முதிர் வயதுள்ள உறுப்பினர்கள் (5:1, 2).*
    2. *விதவைகள் (5:3-16).*
    3. *மூப்பர்கள் (5:17-25).*
    4. *அடிமைகள் (6:1, 2).*
  - C. *உங்கள் நோக்கங்களைத் தூய்மையானதாகக் காத்துக்கொள்ளுங்கள்; கள்ளப்போதகர்கள் செய்வதுபோல், "பணத்திற்காக" பிரசங்கிக்காதீர்கள் (6:3-19).*

*முடிவில் கட்டளையும் ஆசீர்வாதமும் (6:20, 21).*

***1 தீமோத்தேயு நிருபத்தில் இருந்து பாடங்கள்***

*சபைக்குழுமத்தின் பிரசங்கியார் "பாஸ்டர்" அல்ல; அவர் சுவிசேஷகர் என்ற முறையில், சபைக்குழுமத்தைக் கண்காணிக்கும் பணியைக் கொண் டிருப்பதில்லை. இது அவர் சபைக்குழுமத்திற்குப் பொறுப்பு எதுவும் கொண்டிருப்பதில்லை என்று அர்த்தப்படுத்துவதில்லை. அவர் பல பொறுப் புகளைக்கொண்டிருக்கின்றார் என்பது 1 மற்றும் 2 தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்களின்மூலம் தெளிவாகிறது; அவர் சபைக்குழுமத்தில் நடத்துனர்களில் ஒருவராய் இருக்க வேண்டும். அவர் சபைக்குழுமத்திற்காக முடிவுசெய்வதன்மூலம் அல்ல, ஆனால் தேவபக்தியுள்ள உதாரணம் மற்றும் வசனத்தை உண்மையுடன் பிரசங்கித்தல் ஆகியவற்றின்மூலம் தமது நடத்துவப் பொறுப்புகளை நிறைவேற்றுகின்றனர் (4:16)! இது ஒரு பயபக்திக்குரிய பணியாக உள்ளது!*

*நீங்கள் ஒருமுழுநேரப்பிரசங்கியாராக இல்லாதிருப்பினும்கூட, 1 தீமோத் தேயு நிருபம் உங்களுக்கென்று கூறுவதற்கு அதிகமான விஷயங்களைக் கொண்டுள்ளது. நாம் யாவருமே சத்தியத்தைப்பகிர்ந்து கொள்பவர்களாய் இருக்க வேண்டும் (மத்தேயு 28:18-20). சபைக்குழுமங்கள் மற்றும் தனிப்பட்ட விஷயங்கள் பற்றி இந்த நிருபத்தில் வல்லமை நிறைந்த போதனை உள்ளது. இதைக் கவனமாய் வாசித்து, உங்களுக்குரியதாக எடுத்துக்கொள்ளுங்கள்.*

*செல்வங்கள் பற்றிய போதனையானது (6:6-10, 17-19), நாம் வாழ்கின்ற இந்தப் பொருளாதாய உலகத்திற்கான மிகவும் நடைமுறைக்கு உகந்த பகுதிகளில் ஒன்றாக இப்புத்தகத்தில் உள்ளது. 8ம் வசனத்தில் மாபெரும் அறைகூவல்களில் ஒன்று காணப்படுகிறது: "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்." அதைச் செய்வது எப்படி என்பதைப் பவுல் கற்றிருந்தார் (பிலிப்பியர் 4:11முதல்.); நாம் அதைக் கற்றிருக்கின்றோமா?*

## *"இளைஞர்களுக்கு ஒரு பாடம்!" (1 தீமோத்தேயு 4:12)*

*பவுலின் நாட்களிலும் இளமைப்பருவம் இழிவாகக் கருதப்பட்டது என்பது உறுதி (4:12).*

*பொதுவாக இளம் மக்கள் சிறுமையாகக் கண்ணோக்கப்பட்டாலும், பவுல் தீமோத்தேயுவிடம், அவரது இளமைப்பருவம் இழித்துரைக்கப்படத் தேவை யில்லை என்று கூறினார்: "உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு." ஒரு குழு என்ற வகையில் இளைஞர்கள் முதிய வர்கள் நினைத்தபடி இருக்காத போதிலும், அவர்கள் இன்னமும் உங்களைச் சுட்டிக் காண்பித்து, "இதோ இங்கு இருக்கும் இந்த நபர், இவர் அல்லது இவள் ஒரு நல்லவராக இருக்கின்றார்" என்று கூற முடிய வேண்டும்!*

*ஒரு இளம் பருவத்தினர் என்ற வகையில் நீங்கள் எவ்வாறு மதிப்பளிக்கப்படக்கூடிய வகையில் வாழமுடியும் என்பது கீழே தரப்படுகிறது (4:12):*

I. *விசுவாசிகளுக்கு மாதிரியாய் இருங்கள்.*
   A. *வயதுமுதிர்ந்தவர்கள் இளைஞர்களுக்கு நல்ல முன்மாதிரியாய் இருக்க வேண்டும் என்று நாம் பொதுவாக அறைகூவல் விடுக்கின்*

றோம், ஆனால் பவுல் இளைஞர்களான தீமோத்தேயுவை முன்மாதிரியாய் இருக்கும்படி அறைகூவல் விடுக்கின்றார். இளம் மக்களே, நீங்கள் செல்வாக்குடையவர்களாய் இருக்கின்றீர்கள் - என்பதை உணர்ந்தறியுங்கள்! இளம் நபரென்ற வகையில், நீங்கள் முதிர்வயதுள்ள மனிதர்களுக்குத் தேவையான பண்புகளைக் கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் பின்வருவதுபோன்ற பலதுறை களில் மாதிரியை அமைக்க முடியும்:

1. உங்களின் பலவிதமான திறமைகளைக் கர்த்தருக்கென்று பயன்படுத்துதல்.
2. உயர்குறிக்கோள்.
3. வைராக்கியமும் உற்சாகமும்.

B. முதிர்வயதுள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ வாழ்வை வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர்; அவர்களின் முன்மாதிரியானது மற்றவர்கள்மீது சிறிதளவே செயல்விளைவு கொண்டுள்ளது. ஒரு இளம் நபர் விசேஷித்த வகையிலான வாழ்வுமுறையைக் கொண்டிருக்கின்றபோது, மக்கள் நிமிர்ந்து உட்கார்ந்து அதைக் கவனிக்கின்றனர்! ஒரு நல்ல முன்மாதிரியாயிருப்பது என்று தீர் மானம் செய்துகொள்ளுங்கள்!

II. பின்வரும் வலிவார்ந்த துறைகளில் முன்மாதிரியாய் இருங்கள்:

A. வார்த்தையில் (எபேசியர் 4:2அ).

1. "கெட்ட வார்த்தைகள்" பேசுவதை விட்டொழியுங்கள். தமிழ் மொழியில் நீங்கள் பேச தேர்ந்துகொள்வதற்குப் பல லட்சக் கணக்கான வார்த்தைகள் உள்ளன. அசுத்தமான வார்த்தையை அடைக்கலமாய் நாடும் நபர், மொழியில் தமக்குள்ள பாமரத் தனத்தைக் காண்பிக்கின்றார்.
2. "பக்திவிருத்திக்கு ஏதுவான" வார்த்தைகளைப் பேசக்கற்றுக் கொள்ளுங்கள் (சங்கீதம் 19:14; நீதிமொழிகள் 25:11).
   a. இரக்கம், பரிவுணர்வு, ஊக்கப்படுத்துதல், அன்பு ஆகிய வற்றை உணர்த்தும் வார்த்தைகளைப் பேசுங்கள்.
   b. பிறருக்கு இயேசுவைப் பற்றிப்போதிப்பதற்கு உங்கள் உதடுகளைப் பயன்படுத்துங்கள்.

B. நடக்கையில் (மத்தேயு 5:13-16).

1. வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், இறைச்சியைப் பதப் படுத்திப் பாதுகாப்பதற்கு உப்பு பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் இருந்து மாறுபட்டிருக்க வேண்டியது அவசியம், அதாவது, அவர்கள் சமூகத்தின் கூறுகளைப் பாதுகாப்பவர்களாய் இருக்க வேண்டும்.
2. கிறிஸ்தவர்கள் தங்கள் தனித்தன்மையை இழக்கின்றபோது அவர்கள் "ஒன்றுக்கும் பயனற்றவர்கள்" ஆகின்றனர். மாறு பட்டிருக்கத் தைரியம் உள்ளவர்களாய் இருங்கள்! "நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்ற மற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு" (பிலிப்பியர் 1:27அ),

*"கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்" (2:15)!*

C. *அன்பில் (யோவான் 13:34, 35).*

1. *நாம் தேவனையும் நமது சக மனிதர்களையும் அன்புகூர வேண்டும் (மத்தேயு 22:37-39). நமது உலகமானது பல்வேறு வகைகளில், அன்பற்ற உவகமாக உள்ளது; அதை நீங்கள் வாழ்வதற்கு மேன்மையான இடமாக்க முடியும்.*
2. *கொடுப்பதில்தான் அன்பு முழுமையும் அடங்கியிருக்கிறது (1 கொரிந்தியர் 13:4-7):*
   a. *அன்பு என்பது மக்களைப் பின்னுக்குத் தள்ள விரும்பாது (வசனம் 4அ).*
   b. *அன்பு என்பது மற்றவர்கள் நம்மைக்காட்டிலும் அதிகம் வெற்றியாளர்களாய் இருந்தால் அதினிமித்தம் பொறாமை கொள்ளாது (வசனம் 4ஆ).*
   c. *அன்பு என்பது சினமடையாது (வசனம் 5இ).*
   d. *அன்பு என்பது சந்தேகம் கொள்ளாது (வசனம் 7ஆ).*

D. *விசுவாசத்தில் (எபேசியர் 6:16).*

1. *உலகமானது வருத்தம், பயம், மற்றும் சந்தேகம் ஆகியவற்றினால் நிறைந்துள்ளது. இவ்வுலகத்திற்கு விசுவாசம் எவ்வளவாகத் தேவைப்படுகிறது! விசுவாசத்துடன் வாழ்வது எப்படி என்பதை உலகத்திற்குக் காண்பிப்பதில் முன்மாதிரியாய் இருப்பதே நமது வாழ்வின் முக்கிய நோக்கமாகும். தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஒரு நிச்சயமான நம்பிக்கையுடைய வாழ்வை வாழுங்கள் (ரோமர் 8:28; பிலிப்பியர் 4:13; மத்தேயு 28:20).*
2. *பரிணாமக்கொள்கை மற்றும் மனிதனால் உண்டாக்கப்பட்ட பிறதத்துவங்கள் ஆகியவற்றைக் கொண்டு உங்கள் விசுவாசத்தை அழிப்பதற்கு இன்றைய நாட்களில் சாத்தான் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்துகொண்டிருக்கின்றான். உங்கள் விசுவாசத்தைக் கட்டியெழுப்புங்கள்:*
   a. *உங்கள் வேதாகமத்தைப் படியுங்கள் (ரோமர் 10:17).*
   b. *நீங்கள் கற்றுக்கொண்டவற்றின்படி வாழுங்கள் (யாக்கோபு 2:20). "செத்தவிசுவாசம்" என்பது மதிப்பற்றதாக உள்ளது!*

E. *மாசில்லாத (யாக்கோபு 1:27; 1 தெசலோனிக்கேயர் 5:22).*

1. *இது இருதயத்தில் தொடங்குகிறது (மத்தேயு 5:8; நீதிமொழிகள் 23:7). உங்கள் ஆத்துமா உங்கள் சிந்தனையின் நிறத்தை சாயம் ஏற்றுகிறது. நீங்கள் வாசிப்பவை எவை என்பதைப் பற்றி அக்கறையாயிருந்து கவனியுங்கள்.*
2. *நீங்கள் சாத்தானின் இருமடங்குத் தாக்குதலின்கீழ் இருக்கின்றீர்கள்; அவன் உங்கள் விசுவாசத்தை அழிக்க முயற்சி செய்கின்றான். அதே வேளையில், அவன் உங்களைப் பாவம் குறித்துப் பரிசோதனை செய்து பார்க்கத் தூண்டும்படி*

*முயற்சிக்கின்றான். இந்தத் தாக்குதல்கள் ஒன்றாய் இணைந்து வருகின்றன. அவன் உங்களைத் தேவபக்தியற்ற வாழ்வு வாழும்படி செய்யமுடிந்தது என்றால், பின்பு நீங்கள் வேதாகமத்தை ஒரு தொந்தரவாக உணர்வீர்கள் மற்றும் விசுவாசத்தை அழிக்கும் கோட்பாடுகளை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வீர்கள். நீங்கள் உங்கள் நேர்மையையும் உங்கள் விசுவாசத்தையும் காத்துக்கொள்ளவேண்டுமென்றால், மாசில்லாமல் இருக்கத் தீர்மானியுங்கள்!*

3. *இளம் மக்கள், கற்பு என்ற துறையில் விசேஷமான சில அறை கூவல்களைக் கொண்டுள்ளனர் (2 தீமோத்தேயு 2:22). "இளமைக்குரிய இச்சைகள்," என்பதில் பாலியல் தூய்மை மாத்திரம் உள்ளடங்கியிருப்பதில்லை, ஆனால் அதுவும் நிச்சயமாகவே அடங்கியுள்ளது. நீங்கள் சோதிக்கப்படும்போது, "விலகியோடுங்கள்"! அந்த சோதனையில் இருந்து தப்பி ஓடுங்கள்!*

*முடிவுரை*

A. *நீங்கள் எப்போதும் தேவனுடைய வசனத்தைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதே உங்களுக்கு எங்கள் ஜெபமாய் இருக்கிறது (சங்கீதம் 119:9-11).*

B. *நீங்கள் இதை ஏற்கனவே செய்யாதிருந்தால், உங்கள் இளம் வாழ்வைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவிப்பதற்கு, இப்போதே சரியான வேளையாகும்: "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் வராததற்கு முன்னும், ... அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை" (பிரசங்கி 12:1)!*

# 16

# 2 தீமோத்தேயு: வெளிச்சத்தைக் கையளித்தல்

***தலைப்பு***

*இது பவுலின் இளம் தோழரும் பயணத் துணைவருமானவருக்கு எழுதப்பட்ட இரண்டாவது கடிதமாகும் (1:2).*

***பின்னணி***

*பவுல் 2 தீமோத்தேயு நிருபத்தை எழுதியபோது, அவர் ரோமாபுரியில் இருந்தார் (1:17), மற்றும் அங்கு அவர் சிறைச்சாலையில் இருந்தார் (1:8; 2:9). இருப்பினும், இந்தக் கடிதத்தின் தொனியானது, தொடக்ககால "சிறை நிருபங்களில்" இருந்து மாறுபட்டதாக ஒலிக்கிறது (எபேசியருக்கு எழுதிய நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்). அவற்றில், அவர் விடுதலையாக் கப்படுவதை எதிர்பார்த்திருந்தார் (பிலேமோன் 22); இதில், அவர் தமக்கு மரணம் என்பது தவிர்க்க முடியாதது என்று நம்புகின்றார் (4:6முதல்.). நிகழ்ச்சிகளின் வரிசைத்தொடரை நம்மால் மிகச்சிறப்பான முறையில் மறு கட்டுமானம் செய்யக்கூடிய வகையில், பவுல் ரோமாபுரிச் சிறையில் இருந்து இரு ஆண்டுகளுக்குப்பின்பு விடுவிக்கப்பட்டார் (நடபடிகள் 28:30). பின்பு அவர் விரிவாகப் பயணம் செய்து, அவ்வேளைகளில் 1 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய நிருபங்களை எழுதினார் (இப்புத்தகங்கள் பற்றிய குறிப்புகளைக் காணவும்). கி.பி. 64ல், ரோமாபுரி பற்றி எரிந்தது, மற்றும் இதற்கு நீரோ கிறிஸ்தவர்களைக் குற்றம் சாட்டினான். இவ்வேளையில் பவுல்மீண்டும் ஒருவேளை துரோவா நகரில் (3:13) அல்லது நிக்கொப்போலி நகரில் (தீத்து 3:12), கைதுசெய்யப்பட்டார் மற்றும் ரோமாபுரிக்குத் திரும்பி வந்தார். இந்த இரண்டாம் சிறைவைப்பு 2 தீமோத் தேயு நிருபத்தை எழுதிய வேளையாயிருந்தது. இதன் காலம் கி.பி. 64-65ஆக இருந்திருக்கலாம்.*

*இந்த நிருபத்தைப் பவுல் எழுதிய வேளையில், தீமோத்தேயு எங்கிருந்தார் என்று நம்மால் நிச்சயிக்க முடியவில்லை. அவர் எபேசுவில் தமது ஊழியத்தை முடித்துவிட்டு வேறு எங்காவது சென்றிருந்தார் என்பது உறுதி (4:12).*

*பவுல், தீமோத்தேயுவை "சீக்கிரமாய் ... புறப்பட்டு வா" என்று வற்புறுத்தினார் (4:9). வயதான அந்த ஊழியர், "மாரிக்காலத்துக்கு முன்பு நீ வந்து சேரும்படி ஜாக்கிரதைப்படு" என்று வேண்டுகோள் விடுத்தார் (4:21). தீமோத் தேயு மாரிக்காலத்துக்கு முன்பு வந்து சேராவிட்டால், வசந்தகாலம் வரையில் பயணம் என்பது கூடாததாயிருக்கும். தீமோத்தேயு மாரிக்காலத்துக்கு முன்பு வந்துசேராவிட்டால், பவுல், தீமோத்தேயு அல்லது மாற்குவின் தோழமையை ஒருக்காலும் மகிழ்வுடன் அனுபவிக்க இயலாது என்பதே இதன் மறைவான கருத்தாக உள்ளது (4:11); மேலும் அவரது மேலங்கியும் தோல்சுருள்களும் (4:13) அவருக்கு எவ்வகையிலும் மதிப்பு டையவைகளாய் இருந்திருக்கமாட்டா.*

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பவுல் வசந்தகாலம் வரும் வரையிலும் உயிருடன் இருக்க மாட்டார்.

வெளிச்சத்தை எரியும்படி காத்துக்கொள்ளவும், பின்பு அதைப் பிறரிடத்தில் கையளிக்கவும் இளம் மனிதரிடம் (தீமோத்தேயுவிடம்) அதைக் கையளித்தல் என்பதே இந்தக் கடிதத்தின் நோக்கமாக இருந்தது (2:2). இந்தப் பணிமுயற்சிக்கென்று தீமோத்தேயுவை ஊக்குவிக்கவும் பவுலின் சொந்த ஊழியத்திற்குத் தடைசெய்ய முயற்சித்த மனிதர்களைக் குறித்து எச்சரிக்கவும் பவுல் முயற்சி செய்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, பவுல் தமது இடர்ப்பாடுகள் யாவற்றிலும் தமக்கு உதவிசெய்திருந்த மற்றும் இப்போதும் உதவிசெய்வார் என்று (பவுல் உறுதியாக நம்பியிருந்த) இயேசுவின்மீது தாம் கொண்டிருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தினார் (4:8, 17, 18). தீமோத்தேயு என்ற இளம் மனிதர் தாம் பெற்றுக்கொண்ட கட்டளைக்கு உண்மையாய் நிலைத்திருந்தால், அவருடனும் இயேசு இருப்பார் என்பது இதன் மறைவான கருத்தாக உள்ளது (4:1, 5, 22). இந்தக் கடிதத்தை முழுமையாக மதிப்பதற்கு, தீமோத்தேயுவினுடைய இடத்தில் உங்களை வைத்துப் பாருங்கள். பவுலின் இடத்தில் இருந்து செயல்படுதல் என்பது என்ன ஒரு அறைகூவலாக உள்ளது!

பாரம்பரியக் கூற்றின்படி, பவுல் ரோமாபுரியில் கி.பி. 64 அல்லது 65ல் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

**வரைகுறிப்பு**

வாழ்த்து (1:1, 2).

- I. பவுல், தீமோத்தேயுவை உற்சாகப்படுத்துகின்றார் (1:3-2:26).
    - A. விசுவாசமுள்ளவனாயிரு (1:3-18).
    - B. உறுதியாய் நிலைத்திரு (2:1-13).
    - C. தேவனால் அங்கீகரிக்கப்பட்டவனாயிரு (2:14-26).
- II. பவுல், தீமோத்தேயுவை எச்சரிக்கின்றார் (3:1-4:8).
    - A. விசுவாச விலக்கம் குறித்து எச்சரிக்கையாயிரு (3:1-9).
    - B. விசுவாசத்தைத் தற்காத்துக்கொண்டிரு (3:10-17).
    - C. வசனத்தைப் பிரசங்கி (4:1-8).

முடிவுக்குறிப்புகள்: வாழ்த்துக்கள், தனிப்பட்ட வேண்டுகோள்கள், ஆசீர்வாதம் (4:9-22).

**2 தீமோத்தேயு நிருபத்தில் இருந்து பாடங்கள்**

ஒரு தனிநபரின் "புகழ்பெற்ற கடைசி வார்த்தைகள்" பெரும்பாலும் தனிச்சிறப்புடையவைகளாய் இருக்கின்றன. 2 தீமோத்தேயு நிருபத்தில் நாம் உலகத்தில் வாழ்ந்த மாபெரும் மனிதர்களில் ஒருவரான: பவுல் என்ற அப்போஸ்தலரினால் கடைசியாகப் பதிவுசெய்யப்பட்ட வார்த்தைகளைக் கொண்டிருக்கின்றோம். இந்த வார்த்தைகள் வாசிக்கத் தக்கவையாகவும் மீண்டும் மீண்டும் ஆழ்ந்து யோசிக்கத் தக்கவையாகவும் உள்ளன.

இந்த நிருபம் (மற்றும் 1 தீமோத்தேயு, தீத்து நிருபம்) ஆகியவற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியானது 1:14ல் காணப்படுகிறது: "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்." "நற்பொருள்" என்பது தேவனு

டைய வசனமாகிய நற்பொருளைக் குறிக்கிறது *(1:13)*, இது பவுலிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. "காத்துக்கொள்" என்பது பாதுகாப்பாக வைத்துக்கொள்வதை அர்த்தப்படுத்துகிறது. தேவனுடைய வசனம் நாம் பாதுகாத்து வைத்துக்கொள்ளும்படி கொடுக்கப்பட்ட புதையலைப் போன்றதாக உள்ளது; நாம் அதை நமது வாழ்வு முழுவதிலும் காத்துக்கொள்ள வேண்டும்!

இந்த நிருபத்தில் தேவனுடைய வசனத்தின்மீது மாபெரும் வலியுறுத்தம் உள்ளது. அது ஏவுதலினால் கொடுக்கப்பட்டுள்ளது *(3:16, 17)*. அதை "நிதானமாய்ப் பகுப்பது" *(2:15,* KJV*)* அல்லது "சரியாகக் கையாளுவது" (ASV) எவ்வாறு என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும். தேவவசனத்தைத் தொடர்ந்து கருத்தாக்கத்துடன் பயன்படுத்துதல் என்பதே இதைச் செய்யக்கூடிய ஒரே வழிமுறையாகும்.

*2:24-26*ல், நாம் பிறருக்குப் போதிப்பதில் பயன்படுத்த வேண்டிய எண்ணப்போக்கு மற்றும் அணுகுமுறை உட்பட "கர்த்தருடைய ஊழியக்காரன்," பற்றிய வனப்புமிக்க சித்தரிப்பைக் காணுகிறோம்.

*3:1-7*ல் உள்ள வார்த்தைகள், இன்றைய நாட்களின் தலைப்புச் செய்திகளில் இருந்து, நேரடியாக வந்துள்ளவை போன்று ஒலிக்கின்றன அல்லவா?

நாம் யாவரும் தேவவசனமாகிய நற்பொருளைக் காத்துக்கொள்ளும்படியான கட்டளையை ஏற்றுக்கொள்ளவும் அதை உண்மையுடன் பிறருக்குக் கையளிக்கவும் தேவன் நமக்கு உதவுவாராக *(2:2)*!

## சகோதரரே, விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுங்கள்! *(2 தீமோத்தேயு 4:1-8)*

பவுலினால் எழுதப்பட்டவற்றிலேயே கடைசி வார்த்தைகள் அனேகமாக, 2 தீமோத்தேயு 4ல் காணப்படுகின்றன எனலாம். அவற்றில் சிலுவையின் வயதுமுதிர்ந்த போர்வீரர், ஒரு இளம் போர்வீரனுக்குத் தம் கடைசி கட்டளைகளைக் கொடுக்கின்றார். விசுவாசத்தைக் காத்துக் கொண்டிருந்த பவுல் (வசனம் 7), அதே செயலைச் செய்யும்படி தீமோத்தேயுவுக்கு அறைகூவல் விடுக்கின்றார். தீமோத்தேயு இவ்வார்த்தைகளை தமது கண்களில் கண்ணீருடன் வாசித்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

இவ்வார்த்தைகள் சுவிசேஷத்தின் முழுநேர ஊழியர்களுக்கு விசேஷித்த தனிச்சிறப்பைக் கொண்டிருப்பினும், 8ம் வசனத்தில், பவுல் எல்லாக் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்குகின்றார். நம் எல்லாரிடத்திலும் சுவிசேஷம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது (மத்தேயு 28:18-20; முதலியன.). ஆகையால், நாம் ஒவ்வொருவரும், "விசுவாசத்தைக் காத்துக் கொள்ளும்படி" அறைகூவல் விடப்பட வேண்டும்.

I. மாண்புமிக்க ஒரு கட்டளை: வசனத்தைப் பிரசங்கியுங்கள் (3:16, 17; 4:1, 2)!
   A. நாம் எப்போது பிரசங்கிக்க வேண்டும்? சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும். மக்கள் அதை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்.
   B. நாம் எதைப் பிரசங்கிக்க வேண்டும்?
      1. தவறு செய்கின்றவர்களைக் கடிந்துகொள்ளுதல்.

2. பாவத்தைத் தொடர்ந்து செய்பவர்களைக் கண்டித்து உணர்த்துதல் (1 தீமோத்தேயு 5:20). இப்படிப்பட்ட தனிநபர்களைப்பற்றிப் பவுல் தீத்துவுக்கு, "விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள்" என்று கூறினார் (தீத்து 1:14).
3. தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படியுமாறும், விசுவாசத்தில் நிலைத்திருக்குமாறும் யாவருக்கும் புத்திகூறுதல். தீத்து 2:15, "இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள் ..." என்று கூறுகிறது.

C. நாம் எப்படிப் பிரசங்கிக்க வேண்டும்?
1. பொறுமையுடன்.
2. உபதேசத்துடன்.

II. ஒரு தீவிரமான அச்சுறுத்தல்: விசுவாச விலக்கம் வருகிறது (4:3-6; 1 தீமோத்தேயு 4:1-3).

A. விசுவாச விலக்கத்தின் படிகள் (வசனங்கள் 3, 4).
1. அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்கமாட்டார்கள்.
2. அவர்கள் தாங்கள் விரும்பும் விஷயங்களைப் போதிக்கும் போதகர்களைக் கண்டுபிடித்துக்கொள்வார்கள்.
3. அவர்கள் சத்தியத்தில் இருந்து தவறான விஷயங்களுக்குத் திரும்புவார்கள் (1 தீமோத்தேயு 1:4; 4:7; தீத்து 1:13).

B. விசுவாச விலக்கத்திற்குத் தீர்வு: உறுதியாக நிலைத்து நின்று பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் ...
1. ஜாக்கிரதையாய் இருப்பவர்கள்.
2. உபத்திரவத்தை ஏற்றுக்கொள்ளும் தன்மையுள்ளவர்கள்.
3. இழந்துபோகப்பட்டவர்கள் பற்றிய பாரம் உள்ளவர்கள்.
4. தங்களின் ஊழியப் பகுதிகளில் முற்றிலும் செயல்படும் தன்மையுள்ளவர்கள்.

III. மனக்கிளர்ச்சியூட்டும் வாக்குத்தத்தம்: பலன் ஒன்று காத்திருக்கிறது (4:6-8).

A. பவுல் தமது விசுவாசத்தைக் காத்துக்கொண்டதால், பின்வரும் விஷயங்களில் அவர் தைரியம் மற்றும் தன்னம்பிக்கை நிறைந்து காணப்பட்டார்.
1. அவர் தமது நிகழ்காலத்தை உற்றுநோக்குகையில் (வசனம் 6; பிலிப்பியர் 2:17).
2. அவர் தமது கடந்தகாலத்தை உற்றுநோக்குகையில் (வசனம் 7; 1 தீமோத்தேயு 6:12).
3. அவர் தமது எதிர்காலத்தை உற்றுநோக்குகையில் (வசனம் 8அ).

B. நாம் விசுவாசத்தைக் காத்துக்கொண்டால், நாமும்கூட தைரியமும் தன்னம்பிக்கையும் உடையவர்களாய் இருக்க முடியும் (வசனம் 8ஆ). எபிரெயர் 6:10, "ஏனென்றால், உங்கள் நற்கிரியையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து

> *வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே" என்று கூறுகிறது.*

*முடிவுரை*

*நாம் "அவர் பிரசன்னமாகுதலை விரும்புகிறோமா"? பவுல், "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்று கூறினார் (4:8; இவற்றுடன் வெளிப்படுத்தின விசேஷம் 22:20; 1 கொரிந்தியர் 16:22). நாம் கிறிஸ்துவின் மறுவருகைக்குத் தயாராய் இருக்கின்றோமா? "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய்ப் பிரசங்கம் பண்ணு; ..." (வசனங்கள் 2, 3).*

# 17

# தீத்து மற்றும் பிலேமோன்: விஷயங்களை முறைப்படுத்துதல்

*தலைப்பு*

*தீத்து புத்தகம் அதைப் பெற்றுக்கொண்டவரின் பெயரைக்கொண்டு அழைக்கப்படுகிறது (1:4). தீத்து என்பவர் பற்றி நடபடிகள் புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அவர் மதிப்புமிகுந்த ஒரு உடன் ஊழியக்காரராயிருந்தார் என்பது பவுலின் கடிதங்களில் இருந்து தெளிவாகிறது (2 கொரிந்தியர் 2:13; 7:6, 13, 14; 8:6, 16, 23; 12:18; கலாத்தியர் 2:1, 3; 2 தீமோத்தேயு 4:10). தீத்து ஒரு கிரேக்கராய் இருந்தார் (கலாத்தியர் 2:3), இவரைப் பவுல் மனம்மாற்றினார் (தீத்து 1:1). பவுல் எப்போதுமே தீத்துவைக் கடினமான சூழ்நிலைகளுக்குள் அனுப்புபவராகக் காணப்பட்ட படியால், அவர் பவுலின் "இடர்ப்பாட்டுப் பணியாளர்" என்று அழைக்கப்படுகின்றார்.*

*பிலேமோன் நிருபமும் அதைப் பெற்றுக்கொண்டவர் பெயரால் அழைக்கப்படுகிறது (வசனம் 1). அப்புத்தகத்தின் கருத்துபொருளான ஒநேசிமு என்பவர் (வசனம் 10), கொலோசே பட்டணத்தில் இருந்தவர் என்பதால் (கொலொசெயர் 4:9), பிலேமோன் அந்த நகரத்தில் வாழ்ந்தார் என்று நாம் யூகிக்கலாம் (இவற்றுடன் கொலோசெயர் 4:7-9 மற்றும் பிலேமோன் 10-12).*

***பின்னணி***

*பிலேமோனுக்கு எழுதிய நிருபம் பவுல் ரோமாபுரியில் முதன்முறை சிறையில் இருந்தபோது எழுதப்பட்டது (எபேசியர் நிருபத்திற்கான குறிப்புகளில் காணவும்). பிலேமோனுக்கும் அவரிடம் இருந்து ஓடிப்போன அடிமையும் பவுலினால் ரோமாபுரி நகரில் மனமாற்றப்பட்டவருமான ஒநேசிமுவுக்கும் இடையில் இருந்த உறவை "முறைப்படுத்துதல்" என்பதே இந்தத் தனிநபருக்குரிய கடிதத்தின் நோக்கமாகும். பவுல் தாம் விரைவில் விடுதலையாகலாம் என்று எதிர் பார்த்ததாகக் காணப்படுகிறது (வசனம் 22ஐக் காணவும்).*

*ரோமாபுரியில் பவுல் தமது முதல் சிறையிருப்பில் இருந்து விடுவிக்கப்பட்டார் மற்றும் நடபடிகள் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டிராத கூடுதல் பயணங்களையும் பிரசங்கித்தல்களையும் செய்தார் என்பது உறுதி (1 தீமோத்தேயு நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்). இந்தக் காலகட்டத்தின் போது, பவுலும் தீத்துவும் கிரேத்தா தீவிற்குப் பயணம் சென்றனர், அங்கு சபைக்குழுமத்தில் குறைவாய் இருப்பவற்றை "நிறைவாக்கும்படி" பவுல் தீத்துவை விட்டுச்சென்றார் (தீத்து 1:5).*

*கிரேத்தா தீவு என்பது மத்திய தரைக்கடலில் கிரேக்க நாட்டிற்குத் தென்கிழக்கில் அமைந்துள்ள ஒரு தீவு ஆகும். சுவிசேஷம் முதன்முதலாக எருசலேமில் பிரசங்கிக்கப்பட்டபோது, அங்கே கிரேத்தா தீவில் இருந்தும் மக்கள் வந்திருந்தனர் (நடபடிகள் 2:11); ஒருவேளை அவர்களில் சிலர் மனமாற்றம்*

*அடைந்து சுவிசேஷத்தைத் தங்கள் சொந்தத் தீவிற்கு எடுத்துச் சென்றிருக்கலாம். கிரேத்தா தீவில் இருந்த மக்கள் பெலிஸ்தர்களின் பின்சந்ததியார்களாய் இருந்தனர். அவர்கள் தைரியமிகுந்த மாலுமிகளாகவும் வில்வீரர்களாகவும் இருந்தனர், ஆனால் அவர்கள் "ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள்" என்று பெயர்பெற்றிருந்தனர் (தீத்து 1:12). அது சுவிசேஷ விதையை விதைப்பதற்கு மிகச் சிறப்புவாய்ந்த மண்ணாக இருக்கவில்லை, ஆனால் தேவன் எல்லா மனுஷர்களையும் குறித்து அக்கறை கொண்டவராய் இருக்கின்றார் (நடபடிகள் 10:34, 35).*

*பவுல் தீத்துவுக்கு நிருபத்தை எழுதியபோது, அவர் நிக்கொப்போலி நகருக்குச் சென்று கொண்டு இருந்தார் என்பது உறுதி (தீத்து 3:12), இந்த நகரம் மேற்கு கிரேக்க நாட்டில் இருந்தது; ஒரு வேளை அவர் மக்கெதோனியா வழியாகக் கடந்து சென்றிருக்கலாம். குறைவாய் இருப்பவற்றை நிறைவாக்குதல் எப்படி என்பது பற்றிப் பவுல் தீத்துவுக்கு எழுதினார், ஆனால் அவர் பிற காரணங்களுக்காகவும் நிருபத்தை எழுதினார் என்பது உறுதி: (1) தீத்துவுக்கு முன்பிருந்த கடினமான பணிப்பொறுப்பில் அவரை உற்சாகப்படுத்துவதற்காக, (2) ஒரு அதிகாரத்துவம் வாய்ந்த அப்போஸ்தலிக்கக் கடிதத்தைத் தீத்துவுக்குக் கொடுப்பதன்மூலம் அவரது நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்காக.*

*தீத்துவுக்கு நிருபம் கிரேத்தா தீவுவாசிகள் புரிந்துகொள்ளக்கூடிய அதிகாரத்துவ பாணியில் எழுதப்பட்டிருக்கிறது. இருப்பினும், உறுப்பினர்களுக்கு மதியீனமாய் இராத அறிவுறுத்துதல்களுடன் கூடுதலாக, இப்புத்தகத்தில் எல்லாப் பிரசங்கியார்களுக்கும் தெளிவான கட்டளையும் (தீத்து 2:7, 8) புதிய ஏற்பாட்டினுடைய மாபெரும் உபதேச வசனப்பகுதிகள் இரண்டும் (தீத்து 2:11-14; 3:3-7) அடங்கியுள்ளன.*

*தீத்து, நிக்கொபோலி நகரில் பவுலைச் சந்தித்த பின்பு, அவர் அங்கே கைதுசெய்யப்பட்டு, ரோமாபுரிக்குக் கூட்டிச்செல்லப்பட்டார் என்று சிலர் நினைக்கின்றனர்; அவருடன் தீத்துவும் சென்றிருக்கலாம் (2 தீமோத்தேயு 4:10).*

*தீத்துவுக்கு எழுதிய நிருபத்திற்கான வரைகுறிப்பு*

I. *வலுவான நடத்துவத்தை நியமிப்பதன்மூலம் குறைவானவற்றை நிறைவாக்குதல் (1).*
   A. *வலுவான கிறிஸ்தவக் கணவர்களாகவும் தந்தையர்களாகவும் இருப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் (வசனங்கள் 5-9).*
   B. *கள்ளப்போதகர்களுடன் விவாதம் செய்யக்கூடிய திறமை வாய்ந்த மனிதர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் (வசனங்கள் 10-16; 3:9-11ஐக் காணவும்).*

II. *ஆரோக்கியமான உபதேசத்தைப் போதிப்பதன்மூலம் குறைவானவற்றை நிறைவாக்குதல் (2; வசனங்கள் 1, 15 ஆகியவற்றைக் கவனிக்கவும்).*
   A. *ஆரோக்கியமான உபதேசம் கட்டளையிடப்பட்டது (வசனங்கள் 1, 7, 8, 15).*
   B. *ஆரோக்கியமான உபதேசம் எல்லாக் காலத்திற்கும் (வசனங்கள் 2-8), எல்லா ஊழியக்காரர்களுக்கும் (வசனங்கள் 9, 10) நடைமுறைப்படக் கூடியது.*
   C. *ஆரோக்கியமான உபதேசம் விளக்கியுரைக்கப்பட்டது (வசனங்கள்*

*11-14).*

III. *நல்ல ஊழியங்களை உற்சாகப்படுத்துவதன்மூலம் குறைவானவற்றை நிறைவாக்குதல் (3; வசனங்கள் 1, 8, 14 ஆகியவற்றைக் கவனிக்கவும்).*

   A. *நல்ல ஊழியங்களுக்கான தேவை (1:16; 2:7, 14 ஆகியவற்றைக் காணவும்).*

      1. *குடிமக்கள் என்ற வகையில் (வசனங்கள் 1, 2).*
      2. *சுவிசேஷகர்கள் என்ற வகையில் (வசனங்கள் 8, 14).*

   B. *நல்ல ஊழியங்களுக்கான நோக்கம்: தேவனுடைய அன்பு (வசனங்கள் 3-7).*

***தீத்துவுக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்***

*கிரேத்தா தீவில் இருந்த சபையில் பலத்த நடத்துவத்துவம் என்பது (1:5) மிகவும் குறைவுபட்டு இருந்த விஷயமாகும். நல்ல நடத்துவத்துவம் என்பது சபையானது இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதற்கு அத்தியாவசியமானதாகும். ஒரு சபைக்குழு கணிசமான காலம் கூடிவந்திருந்தும் அங்கே மூப்பர்கள் இல்லையென்றால், அதில் பொதுவாகச் சில விஷயங்கள் குறைவுபடுகின்றன எனலாம். தகுதியுள்ள மனிதர்கள் இராத வகையில் ஒரு சபைக்குழுமம் தனக்கு மூப்பர்களை ஒருக்காலம் நியமிக்கக் கூடாது. ("வசனரீதியல்லாத வகையில் ஒருங்கமைக்கப்பட்டிருத்தலைக் காட்டிலும், வசனரீதியாக ஒருங்கமைவு இல்லாதிருத்தல் மேன்மையானதாகும்.") அவசியமான தகுதிகளைக் கொண்ட மனிதர்கள் கூடிய விரைவிலேயே மேம்படுத்தப்பட முயற்சிகள் யாவையும் மேற்கொள்ளப்பட வேண்டும் (1:5-9).*

*மூப்பர்களை நியமிக்கும் பொறுப்பு (1:5), (சுவிசேஷகர் என்ற வகையில்) தீத்துவுக்கு இருந்தது என்ற விஷயம், அவர் மூப்பர்கள்மீது அதிகாரம் கொண்டிருந்தார் என்பதை நிரூபிக்கிறதென்று சிலர் போதிக்கின்றனர் ("சுவிசேஷ ஊழியத்துவ அதிகாரம்"). நடபடிகள் 6:1-6 வசனப்பகுதியானது, மூப்பர்களை நியமித்தல் என்பது சபைக்குழுமத்தினால் செய்யப்பட வேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கிறது. சுவிசேஷ ஊழியர் செய்ய வேண்டியதெல்லாம் அவர்களை அமர்த்துவதுதான். ("அவர்களுக்குரிய இடத்தில் வைப்பதுதான்.") அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாபதியை அவர் பதவியில் அமர்த்திவைக்கும் ஒருவர், அதன்பின்பு அந்த ஜனாதிபதிமீது அதிகாரத்துவம் கொண்டிருப்பதில்லை. அதேபோன்று தான், மூப்பர்களை அமர்த்திவைக்கும் பிரசங்கியார், அவர்கள்மீது அதிகாரத்துவம் கொண்டிருப்பதில்லை.*

*2:11-14 மற்றும் 3:3-7 ஆகிய வசனப்பகுதிகளைக் குறித்துத் தியானியுங்கள். தேவன் நமக்குச் செய்துள்ளவற்றைப் பற்றியும் இது நமது வாழ்வில் எவ்வாறு செயல்விளைவை ஏற்படுத்த வேண்டும் என்பது பற்றியும் ஆழ்ந்து சிந்தியுங்கள்!*

***பிலேமோனுக்கு எழுதிய நிருபத்தின் வரைகுறிப்பும் பாடங்களும்***

*கீழ்வரும் பிரசங்க வரைகுறிப்பைக் காணவும்.*

## வரிகளுக்கு இடையில் வாசித்தல் (பிலேமோன்)

*நீங்கள் அஞ்சல் மூலமாக ஒரு தபாலைப் பெறுகின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அது எங்கிருந்து வந்தது என்ற முகவரியை நீங்கள்*

கண்ணோக்குகின்றீர்கள்; அது ஒரு நண்பரிடத்தில் இருந்து வந்துள்ளது. நீங்கள் மகிழ்ச்சியுடன் கேட்கப்படும் "நன்றாயிருக்கின்றீர்களா? நான் நலமுடன் இருக்கின்றேன்" என்ற கேள்வி-குறிப்பை எதிர்பார்த்து, மேல் உறையைத் திறக்கின்றீர்கள். அதற்குப் பதிலாக, உங்கள் நண்பர் உங்களுக்குத் தமது இருதயத்தை ஊற்றியிருக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். ஒரு வேளை அதில் உள்ள வார்த்தைகள் உங்களை மகிழ்விக்கலாம் ... அல்லது கவலைப்படுத்தலாம் ... அல்லது உங்களைச் சித்தம் கலங்கச் செய்யலாம். உணர்வுப்பூர்வமாகக் கலக்கம் அடைந்த நீங்கள் அந்தக் கடிதத்தை வைத்துவிட்டுக் குறுக்கும் நெடுக்குமாக நடக்கின்றீர்கள். உங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்திய பின்பு நீங்கள் அந்தக் கடிதத்தின் பக்கங்களைத் திரும்ப எடுத்து, மெதுவாக, கவனமாகத் திரும்பவும் வாசிக்கின்றீர்கள். இவ்வேளையில் நீங்கள் தொடக்கத்தில் கண்டிராத விஷயங்களைக் கண்டறிகிறீர்கள். நீங்கள் மீண்டும் கடிதத்தைக் கீழே வைக்கின்றீர்கள், ஆனால் அதன் வார்த்தைகள் உங்கள் சிந்தையில் தங்கியிருக்கின்றன. தொடர்ந்து நீங்கள் படிப்படியாக, அச்செய்தியின் அதிகமான மறைபொருளைக் காணுகின்றீர்கள்.

பிலேமோனுக்கு எழுதப்பட்ட சுருக்கமான கடிதம் இதைப்போன்றதாகவே உள்ளது. பிலேமோன் என்பவர் கொலோசே நகரத்தில் இருந்த சபையின் நடத்துனராயிருந்தார். அவர் பவுலினால் மனம் மாற்றப்பட்டிருக்கலாம் (வசனம் 19ஆ); அவரைப் பவுல் ஒரு நெருங்கிய நண்பராக எண்ணினார் என்பது உறுதி. பிலேமோனின் வீட்டு வாயிற்படியில் ஒருநாள் வந்து நின்ற தீகிக்கு (கொலோசெயர் 4:7), "ரோமாபுரியில் உள்ள உங்கள் நண்பரான பவுலிடத்தில் இருந்து நான் உங்களுக்கு ஒருகடிதம் கொண்டு வந்திருக்கின்றேன்" என்று கூறுவதைக் கற்பனை செய்துபாருங்கள். பிலேமோன் அந்தக் கடிதச்சுருளைப் பெறுவதற்காகப் புன்னகையுடன் முன்னோக்கி வருகின்றார். அதைச் செய்கையில் அவர், அவருக்குத் தவறு செய்திருந்த இன்னொருவரை, தாம் ஒருக்காலும் அவரைக் காணப் போவதில்லை என்று நினைத்திருந்த ஒருவரை தீகிக்குவுடன் நிற்கக் காண்கிறார்: அவர் ஒநேசிமு (கொலோசெயர் 4:7-9), பிலேமோனின் வீட்டில் திருடிவிட்டு, இரவிலேயே ஓடிப்போன ஒரு அடிமை. பிலேமோனின் புன்னகை முகச்சுளிப்பாக மாறுகிறது; அவரது கன்னங்களில் கோபத்தின் அடையாளம் பொங்குகிறது. கசப்பான வார்த்தைகள் அவரது சிந்தையில் பெருக்கெடுக்கின்றன, அவர் பேசுவதற்காகத் தமது வாயைத் திறக்கின்றார். "தீகிக்கு, பிலேமோன் அவர்களே, பவுலிடத்தில் இருந்து வந்துள்ள இக்கடிதத்தை நீங்கள் வாசித்து முடிக்கும் வரையில் ஒரு வார்த்தையும் பேசிவிடாதீர்கள்" என்று எச்சரிக்கின்றார். பாரப்பட்ட, (பெருமூச்சுடன்) பிலேமோன் அமர்ந்து வாசிக்கத் தொடங்குகிறார்.

இந்தக் கடிதம் புதிய ஏற்பாட்டில் தனித்துவம் வாய்ந்ததாக உள்ளது. முதல் வாசிப்பில், இது ஒரு தனிப்பட்ட செய்தித்தொடர்பின் துணுக்காக, பவுல் வாழ்ந்திருந்த காலகட்டத்தின் சில விஷயங்களைக் குறிப்புணர்த்த அனுமதிப்பதாகக் காணப்படுகிறது. நாம் இதை வாசித்து, மீண்டும் வாசிக்கையிலும், இதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கையிலும், எந்தக் காலத்திற்குமான பாடங்கள் இதில் உள்ளன.

I. அடிமைத்தனமும் சமூகப் பிரச்சனைகளும்.

   A. இந்தக் கடிதமானது அந்தக்காலத்தில் இருந்த அடிமைத்தன நடைமுறை பற்றிய வெளிச்சத்தில் படிக்கப்பட வேண்டும்.

1. ஒநேசிமு ஒரு அடிமையாக, பிலேமோனின் உடமையாக இருந்தார். களவு செய்தல் என்ற செயலுடன் கூடுதலாக ஓடிப்போகுதல் என்பதைக்காட்டிலும், அதிக மோசமான செயல் எதையும் ஒரு அடிமை செய்வதென்பது மிகக்கடின மானதாக இருந்தது. இதற்கு மிகக் கடுமையான தண்டனை கொடுக்கப் பிலேமோன் எல்லா உரிமையும் கொண்டிருந்தார். (பவுல், ஒநேசிமுவின் குற்றத்தைக் குறைத்துக் கூறவில்லை.)
2. அடிமைத்தனம் என்பது கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் நிற்கும் நிலைப்பாட்டிற்கு எதிரானதாக உள்ளது, ஆனால் புதிய ஏற்பாடு, எஜமானர்களுக்கும் அடிமைகளுக்கும் விசேஷ அறிவுறுத்தல்களைக் கொடுக்கிறது (எபேசியர் 6:5-9; கொலோசெயர் 3:22-4:1). அடிமைத்தனம் என்பது முற்றிலுமாகக் கண்டனம் பண்ணப்பட்டதாக, நாம் படித்துக் கொண்டுள்ள இப்புத்தகத்தில் [நிருபத்தில்]கூட நாம் காணுவதில்லை. ஏன்?
   a. முன்னுரிமைகள். கிறிஸ்தவமானது ஒரு சில ஆண்டுகளில் மண்ணுக்குத் திரும்பக்கூடிய சரீரத்தைப் பார்க்கிலும், நித்திய காலத்தை ஏதேனும் ஓரிடத்தில் செலவிடக்கூடிய ஆத்துமா பற்றி அதிக அக்கறை கொண்டுள்ளது.
   b. நடைமுறை. இது ஜாக்கிரதையாய் கையாளவேண்டிய வெடிக்கும் சூழ்நிலையாக இருந்தது.
      (1) கிறிஸ்தவ அணுகுமுறையானது ஒருக்காலும் புரட்சிகரமானதாக இருந்ததில்லை.
         (a) அதிகாரத்தில் உள்ளவர்கள் கிறிஸ்தவர்களாய் இராதிருப்பினும், நாம் அவர்களை மதிக்க வேண்டும் (ரோமர் 13: 1முதல்.).
         (b) நாம் நமது தலைவர்களுக்காக, சமாதானம் இருக்கும்படி ஜெபிக்க வேண்டும் (1 தீமோத்தேயு 2:1முதல்.).
      (2) கிறிஸ்தவக் கொள்கைகளைப் போதித்து, இருதயங்களை மாற்றுவதன்மூலம் வாழ்வை மாற்றுதல் என்பதே கிறிஸ்தவ அணுகுமுறையாகும்.
      (3) இந்த அணுகுமுறை செயல்பட்டது. கிறிஸ்தவக் கொள்கைகள் போதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இடங்களில், அடிமைத்தனம் நிறைவாக ஒழிக்கப்பட்டது.

B. இன்றைய நாட்களில் நமக்கு இப்பாடம் தேவைப்படுகிறது. கிறிஸ்தவர்கள் சமூகத் தீமைகள் பற்றி அக்கறை கொண்டிருக்க வேண்டும். இருப்பினும், சமூக மாற்றம் என்பது நமது அடிப்படை இலக்காக இருக்கலாகாது, மாறாக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டும். நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் இயேசு நமக்குக் கொடுத்துள்ள அற்புதமான கொள்கைகளையும் உண்மையுடன் பிரசங்கித்துப் போதிக்கையில், சமூகப்பிரச்சனைகளைத் தீர்க்

கின்றோம்!

II. சகோதரர்களும் மன்னித்தலும்.

A. பிலேமோனின் இக்கட்டான நிலையை முற்றிலுமாக மதிப்பிடுதல் என்பது நமக்குக் கடினமானதாக உள்ளது. ஒநேசிமு மிகக் கடுமையான தண்டனை பெறத் தகுதியாய் இருந்தார். பிலேமோன் பவுலை மனம் புண்படச்செய்யவோ அல்லது தனது வீட்டாரிடத்தில் மதிப்பை இழக்கவோ விரும்பாதிருந்தார். இது எவரொருவரும் எக்காலத்திலும் எதிர்கொண்டுள்ள "மன்னிப்பின் பிரச்சனைகளிலேயே" மிகவும் சிக்கலானதாக இருந்தது. இதைப் பவுல் எவ்வளவு நுட்பமாகக் கையாண்டார் என்பதைக் கவனியுங்கள்.

1. பவுல் தமது நண்பரான பிலேமோனைப் பாராட்டுதல் என்ற நேர்மறையான வகையில் தொடங்கினார் (வசனங்கள் 4-7).
2. பவுல் வற்புறுத்தவில்லை; அவர் வேண்டுகோள் விடுத்தார் (வசனங்கள் 8, 9, 14).
3. பவுல் தம்மை "முதிர்வயதானவன்" மற்றும் "கட்டப்பட்டவன்" (வசனம் 9) என்று குறிப்பிட்டதன் மூலமாகவும், கூடுதலாக, "என்னைப்போல் அவனை ஏற்றுக்கொள்ளும்" (வசனம் 17) என்று கூறியதன் மூலமாகவும், தமது தியாகத்தை மென்மையாகச் சிந்தனைக்குக் கொண்டுவந்தார்.
4. ஒநேசிமு ஒரு செயல்துடிப்புள்ள, ஊழியம் செய்கின்ற கிறிஸ்தவரானார் (வசனங்கள் 11-13) என்றும், அவர் பிலேமோனுக்குப் பிரயோஜனமுள்ளவராய் இருப்பாரென்றும் (வசனம் 16) அவர் (பவுல்) வலியுறுத்தினார்.
5. அவர் வார்த்தைகளின் விளையாட்டுடன் நகைச்சுவையை அறிமுகப்படுத்தினார் (வசனம் 11). "ஒநேசிமு" என்றால் "பிரயோஜனமுள்ளவன்" அல்லது "பயனுள்ளவன்" என்று அர்த்தப்படுகிறது. "சிலவற்றில் பிரயோஜனமுள்ளதென்பது" கடந்த காலத்தில், "ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாததாக" இருந்தது; அவர் கிறிஸ்தவர் என்ற வகையில், உண்மையில் "சிலவற்றிற்குப் பிரயோஜனமுள்ளவராய்" இருப்பார்.
6. நடந்துமுடிந்த எல்லாவற்றிலும் தேவனுடைய கரம் இருந்திருக்கலாம் என்று அவர் மறைமுகமாய் உணர்த்தினார் (வசனம் 15).
7. குற்றத்தைக் குறைத்து மதிப்பிடாமல், அவர் சேதத்தைத் தாம் செலுத்திவிடுவதாகக் கூறினார் (வசனங்கள் 18, 19அ; வசனம் 18 இப்புத்தகத்தின் திறவுகோல் வசனமாக உள்ளது).
8. பிலேமோன் தம்மைத்தாமே பவுலுக்குத் தரவேண்டும் என்பதைப் பவுல் நினைவூட்டினார் (வசனங்கள் 19ஆ, 20).
9. அவர் பிலேமோனின் முடிவின்மீது தமக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தினார் (வசனம் 21).

B. சபையில், ஒரு சகோதரர் இன்னொரு சகோதரருக்கு எதிராகப் போர்தொடுக்கையில், இருதயத்தை தொடக்கூடிய சூழ்நிலைகள் உதிக்கின்றன. ஒவ்வொருவரும் "கிறிஸ்தவர்களைப்போன்று"

*செயல்பட்டால் பெரும்பாலான பிரச்சனைகள் தீர்த்துவைக்கப்பட முடியும்! நாம் மன்னித்தல் என்பதை, அது கட்டளையிடப் பட்டுள்ளது என்பதற்காக மாத்திரம் அல்ல, ஆனால் நாம் கர்த்தருக்குப்பட்டுள்ள கடனுக்காகக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாயுள்ளது (எபேசியர் 4:32)!*

III. *கிறிஸ்துவும் சிலுவையும்.*

A. *பவுல் ஆலோசனையாகக் கூறிய விஷயமானது அவரது நாட்களில் இருந்த சமூகநியதிக்கு எதிரானதாக இருந்தது. ஒரு அடிமையை மன்னிக்கும்படிப் பவுல் பிலேமோனுக்கு ஆலோசனை கூறக்கூட முடிந்தது எவ்வாறு? பவுல் இயேசுவினால் அபரிமிதமாய் நிறைந்தி ருந்தார் (கலாத்தியர் 2:20). பவுல் ஆலோசனை கூறிய விஷயமானது கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றிற்கு இணையானதாக உள்ளது.*

1. *நாம் பிறந்தபோது "சிலவற்றில் பிரயோஜனமுள்ளவர்களாய்" பிறந்தோம்; நமது வாழ்வில் பாவம் பிரவேசித்த பின்பு, நாம் "ஒன்றுக்கும் பிரயோஜனமற்றவர்களாய்" ஆனாம். ஒநேசிமு வைப்போன்று, நாம் சுவிசேஷத்துடன் தொடர்புகொண்ட போது, நமது நிலையை உணர்ந்தறிந்தோம்.*
2. *இயேசு, "நான் உங்கள் கடனைச் செலுத்துவேன்" என்று கூறினார். பின்பு அவர் உங்களின் சார்பாகவும் எனது சார்பாகவும், பிதாவினிடத்தில் "இவர்களை நீர் என்னை ஏற்றுக்கொள்வதுபோல் ஏற்றுக்கொள்ளும்" என்று கூறினார்!*
3. *நாம் மீண்டுமாக, "சிலவற்றில் பிரயோஜனமுள்ளவர்களாக" தேவனுக்கும் மனிதருக்கும் பயன்நிறைந்தவர்களாக இருக்கின் றோம்!*

B. *அதையேதான் இயேசு பவுலுக்குச் செய்திருந்தார், எனவே அவர் அதை பிலேமோன் ஒநேசிமுவுக்குச் செய்யும்படி ஆலோசனை தெரிவிக்கத் தயங்கவில்லை. கர்த்தர் நமக்குச் செய்துள்ளவற்றை நாம் உணர்ந்தறிய முடியுமென்றால், அது ஒவ்வொன்றைப் பற்றிய நமது வெளிக்கண்ணோக்கை மாற்றும்!*

*முடிவுரை*

*தீத்துவுக்கு எழுதிய மற்றும் எபிரெயருக்கு எழுதிய நிருபங்களுக்கு இடையில் செருகப்பட்டுள்ள இச்சிறு புத்தகத்தில் வல்லமை நிறைந்த பல பாடங்கள் கண்டறியப்பட முடியும். இதை நாம் வாசிப்பது, மீண்டும் வாசிப்பது, இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பது, மற்றும் இதன் வரிகளுக்கு இடையில்கூட வாசிப்பது மிகவும் அவசியமாய் இருக்கிறது.*

# 18

# எபிரெயர்: ஊக்கமூட்டுதலுக்கான வார்த்தை

***தலைப்பு***

*எபிரெயருக்கு எழுதிய நிருபம் அதைப் பெற்றுக்கொண்டவர்களைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது. "எபிரெயர்" என்பது எபிரெய மொழி பேசும் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது, வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இது யூதக்கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. இந்தக் கடிதத்தின் பொருளடக்கம், இது யூதப்பின்னணியைக்கொண்ட வாசகர்களுக்கான கடிதம் என்பதை உறுதிப்படுத்துகிறது.*

***பின்னணி***

*இப்புத்தகத்தின் எழுத்தாளர் தம்மை அடையாளப்படுத்திக் கொள் ளாதபடியால், இப்புத்தகத்தை யார் எழுதியிருப்பார் என்பது பற்றி கணிசம ான அளவுக்கு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. லூக்கா, தீமோத்தேயு, அப்பொல்லோ, பர்னபா, சீலா, ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள், மற்றும் பிறர் இதை எழுதியிருக்கக்கூடும் என்று விரிவான கோட்பாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன, ஆனால் இவைகளில் ஏதொன்றிற்கும் வரலாற்றுப் பூர்வமான ஆதாரம் எதுவும் இருப்பதில்லை. பவுல் இந்த நிருபத்தை எழுதினார் என்ற பலத்த பாரம்பரியக்கூற்று உள்ளது. தொடக்ககாலக் கல்வியாளர் ஓரிகன் என்பவர், எபிரெயருக்கு நிருபத்தை யார் எழுதினார் என்று "தேவன் மாத்திரமே நிச்சயமாக அறிவார்" என்று அடிக்கடி கூறியதாக மேற்கோள் காண்பிக்கப்படுவது உண்டு; ஆனால் ஓரிகன் தமது சக கிறிஸ்தவர் ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், பவுல் தான் இதன் எழுத்தாளர் என்பதில் தமக்குச் சந்தேகம் எதுவும் இல்லை என்று சுட்டிக்காண்பித்திருந்தார். பவுலின் எழுத்து உதவியாளராகச் செயல்பட்டவர் யார் என்பது பற்றி அவரது புகழ்பெற்ற குறிப்புரை அக்கறை கொண்டிருந்தது. இந்த நிருபத்தின் பல விஷயங்கள் பவுலைப் பற்றிய நினைவூட்டுதலாக இருக்கையில், இதில் மற்ற பல விஷயங்கள் பவுலின் வழக்கமான நடையில் இருந்து மாறுபட்டவைகளாய் இருக்கின்றன என்பதே பிரச்சனையாகும். இந்தத் தொகுப்பானது பவுலினாலோ அல்லது அவரது தோழர்களில் ஒருவராலோ எழுதப்பட்டிருக்க வாய்ப்புகள் உள்ளன, ஆனால் அந்தக் கருத்துப் பற்றி ஒருவர் மிகச்சரியான முடிவுகூற இயலாது. பரிசுத்த ஆவியானவரே இதன் உண்மை எழுத்தாளர் என்பது நினைவில் வைக்கப்பட வேண்டிய முக்கிய விஷயமாக உள்ளது.*

*இந்தக் கடிதம் எல்லா இடங்களிலும் உள்ள யூதக்கிறிஸ்தவர்களுக்கு இது எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை, ஆனால் இதனை எழுதி யவர் தனிப்பட்ட வகையில் அறிந்திருந்த கிறிஸ்தவர்களின் குழு ஒன்றிற்கு (13:18, 19) இது எழுதப்பட்டது. இந்தக் கிறிஸ்தவர்கள் ஒரு சபைக்குழுமத்திற் குள்ளாகவே இருந்த ஒரு சிறு பிரிவினராய் இருந்திருக்கக் கூடும் (13:17, 24). அவர்கள் சற்றுக்காலமாகக் கிறிஸ்தவர்களாய் இருந்திருந்தனர் (5:12;*

*10:32). அவர்கள் கிறிஸ்தவ வாழ்வை உற்சாகத்துடன் தொடங்கியிருந்தனர் (6:10; 10:33, 34); அவர்கள் உபத்திரவங்களைக்கூடச் சகித்திருந்தனர் (10:31, 32). இருப்பினும், அவர்கள் ஊக்கம் இழந்து போயிருந்தனர். அவர்கள் ஆராதனையில் கலந்துகொள்ளாதிருந்தனர் (10:25). அவர்கள் விசுவாசவிலக்கம் என்ற அபாயத்தில் இருந்தனர் (2:1முதல்.; 6:1-6; 10:26-31). இந்த நிருபத்தில் உள்ள விவாதவரிசையானது, அவர்கள் யூதத்துவத்திற்குத் திரும்பும்படி சோதிக்கப்பட்டிருந்தனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*“விசேஷித்த” என்பது இப்புத்தகத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தை பன்னிரெண்டு அல்லது பதிமூன்று முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. யூதத்துவத்தைக் காட்டிலும் கிறிஸ்தவத்தில் ஒவ்வொன்றும் விசேஷித்ததாக உள்ளது என்று இதன் எழுத்தாளர் வலியுறுத்துகின்றார். நகல் எடுக்கப்பட்ட பிரசங்கம், நடைமுறைப் புத்திமதிகளுடன் கூடிய ஒன்றுவிட்டொன்று வரும் விவாதங்கள் என்பதே இதன் எழுத்துநடையாக உள்ளது (வரைகுறிப்பைக் காணவும்). இதன் எழுத்தாளர் தமது முயற்சி முழுவதையும், “புத்திமதியான வார்த்தைகள்” என்று அழைத்தார் (13:22). “புத்திமதி” என்பது ஒரு கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து வருகிறது, அவ்வார்த்தையில் “உடன் அழைத்தல்” என்ற நேரடி அர்த்தம்தரும் வினைச்சொல்லும், “புத்திகூற,” “வேண்டுகோள் விடுக்க,” “ஆறுதல்படுத்த” என்று பல்வேறு வகையில் மொழிபெயர்க்கப் படக்கூடிய வார்த்தையும் சேர்ந்துள்ளன. “உற்சாகமூட்டுதல்,” என்ற வார்த்தை மகிழ்விற்குரிய உடன்பாடாக உள்ளது, இது புத்திகூறுதல் மற்றும் ஆறுதல்படுத்துதல் என்ற கருத்துக்களை ஒன்றிணைக்கிறது. எபிரெயருக்கு எழுதிய நிருபம் “உற்சாகமூட்டுதலின் வார்த்தையாக” உள்ளது.*

*யூதப்பலி முறைமையானது இந்தப் புத்தகம் எழுதப்பட்ட கால கட்டத்தில் நடைமுறையில் இருந்ததென்பது உறுதியாகையால் (9:6-10; 13:10), இப்புத்தகம் கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன்பு எழுதப்பட்டிருக்கலாம்.*

*இப்புத்தகத்தின் விவாதங்களைப் புரிந்துகொள்வதற்கு, லேவியராகமம், எண்ணாகமம், மற்றும் யாத்திராகமம் ஆகிய புத்தகங்களில் வரைகுறிப்பிடப்பட்டபடி யூதத்துவ அமைப்பு முறை பற்றிய அடிப்படை அறிவு நமக்குத் தேவைப்படுகிறது.*

**வரைகுறிப்பு**

I. *விவாதம்: தீர்க்கதரிசிகள் மற்றும் தூதர்கள் ஆகியோரைக் காட்டிலும் கிறிஸ்து விசேஷித்தவராக இருக்கின்றார் (1).*
II. *புத்திகூறுதல் (2:1-4).*
III. *விவாதம்: தூதர்கள் மற்றும் மோசே ஆகியோரைக் காட்டிலும் கிறிஸ்து விசேஷித்தவராக இருக்கின்றார் (2:5-3:6).*
IV. *புத்திகூறுதல் (3:7-4:16).*
V. *விவாதம்: கிறிஸ்து விசேஷமான ஆசாரியத்துவத்தைக் கொண்டுள்ளார், பாகம் 1 (5:1-10).*
VI. *புத்திகூறுதல் (5:11-6:20).*
VII. *விவாதம்: கிறிஸ்து விசேஷமான ஆசாரியத்துவத்தைக் கொண்டுள்ளார், பாகம் 2 (7:1-10:18).*
VIII. *புத்திகூறுதல் (10:19-13:25).*

*எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்*

*நம்மில் பெரும்பான்மையானவர்கள் யூதப்பின்னணியைக் கொண்டிரா திருப்பினும், நாம் ஊக்கம் குன்றியவர்களாகி வாழ்வின் பழைய வழிக்குத் திரும்பும்படி சோதிக்கப்படுகின்றோம். எபிரெயருக்கு எழுதிய நிருபமானது, நம் யாவருக்கும் வல்லமை நிறைந்த செய்தியைக் கொண்டுள்ளது: உலகமானது கிறிஸ்துவைக் காட்டிலும் மேன்மையான எதையுமே அளிக்க இயலாது!*

*இயேசுவை நமது பிரதான ஆசாரியராக முன்வைக்கும் புதிய ஏற்பாட்டுப் புத்தகம் இது ஒன்றே. இப்புத்தகத்தில் அவர் பத்துமுறை "பிரதான ஆசாரியர்" என்றும் மற்ற முறைகள் "ஆசாரியர்" என்றும் குறிப்பிடப்படுகின்றார். 4:14-16 வசனங்கள் திறவுகோல் வசனங்களாகும். இயேசு நமது பிரதான ஆசாரியராக இருப்பதால், நாம் தேவனுடைய கிருபாசனத்தைத் தைரியமாய்க் கிட்டிச்சேர முடியும்!*

*நீங்கள் இந்த நிருபத்தைப் படிக்கையில், பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையில் உள்ள வேறுபாடுகள் தொடர்ந்து குறிப்பிடப்படுவதை, விசேஷமாக 8-10 அதிகாரங்களில் அவ்வாறு குறிப்பிடப்படுவதைக் கவனியுங்கள். எவரொருவரும் தங்கள் மதரீதி யான நடைமுறைக்குப் பழைய ஏற்பாட்டிற்குத் திரும்பும்படி விரும்ப வேண்டியதென்ன?*

*5:11-14ல் இந்த நிருபத்தைப் பெற்றுக்கொண்டவர்களின் அடிப்படைப் பிரச்சனை சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. "புத்திகூறுதலின்" பெரும்பான் மையான பகுதியானது படர்க்கைப் பெயரிலுள்ளது, ஆனால் இந்தப் பகுதி நேரடியாக முன்னிலைப் பெயரில் உள்ளது: "நீங்கள் கேள்வியில் மந்த முள்ளவர்களானபடியால்" (வசனம் 11). இந்தக் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் வளரத் தவறியிருந்தனர்; அவர்கள் கிறிஸ்துவுக்குள் பக்குவமடையத் தவறியிருந்தனர். நம்மில் எத்தனைபேர், பல ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்களாய் இருந்தும், இன்னமும் ஆவிக்குரிய வகையில் குழந்தையாகவே இருந்து வருகின்றோம்?*

---

## ஆத்தும நங்கூரம்
## *(எபிரெயர் 6:9-20)*

*எழுத்தாளர் தமது வாசகர்களுக்கு நடைபெறக்கூடிய பயங்கரமான விஷயங்கள் யாவை என்று அப்போதுதான் சுட்டிக்காண்பித்திருந்தார் (6:1-8), ஆனால் இப்போது அவர் செயல்விளைவில், "நாங்கள் இன்னும் உங்கள்மேல் நம்பிக்கையாய் இருக்கின்றோம்" (6:9) என்று கூறுகின்றார். அவர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதற்கு இன்றியமையாதவை யாவை? அவர்கள் நம்பிக்கையைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். நம்பிக்கை என்பது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது! "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; ..." (1 கொரிந்தியர் 13:13). இது எபிரெயர் 6:19ல் "ஆத்தும நங்கூரம்" என்று அழைக்கப்படுகிறது. இது நமக்குப் பாதுகாப்பைக் கொடுக்கிறது. நாம் எவ்வாறு நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டிருக்க முடியும்? நமது வேத பாடப்பகுதியானது நம்பிக்கையின் பல்வேறு ஆதாரமூலங்களை நமக்குத் தருகிறது:*

I. *தேவனுடைய இயல்பினிமித்தம் நாம் நம்பிக்கையைப் பெற்றிருக்க முடியும் (6:10ஆ).*
   A. *தேவன் அநீதியுள்ளவராய் இருப்பதில்லை.*
   B. *தேவன் மறந்துவிடுவதில்லை. மனிதப்பிறவிகள் என்ற வகையில், நாம் மறந்துவிடுகின்றோம்; ஆனால் தேவன் மறப்பதில்லை.*

II. *நம்மால் இயன்ற அளவு மிகச்சிறப்பாகச் செயல்படுவதினிமித்தம் நாம் நம்பிக்கையைப் பெற்றிருக்க முடியும் (6:10அ, 11, 12).*
   A. *நாம் தேவனுக்காகச் செய்யும் ஊழியத்தை அவர் மறப்பதில்லை.*
   B. *நாம் ஊக்கத்துடன் அவருக்குத் தொடர்ந்து ஊழியம் செய்தால், நாம் "நம்பிக்கையின் முழு நிச்சயத்தை" கொண்டிருக்க முடியும்!*

III. *கடந்தகாலத்தில் தேவனுடைய சித்தத்தின்படி செய்திருந்தவர்களைத் தேவன் ஆசீர்வதித்து இருப்பதனிமித்தம் நாம் நம்பிக் கையைப் பெற்றிருக்க முடியும் (6:12ஆ-15).*
   A. *கடந்த காலத்தில் விசுவாசத்துடன் சகித்திருந்தவர்களைத் தேவன் ஆசீர்வதித்தார் (அதிகாரம் 11).*
   B. *ஒரு உதாரணம் என்ற வகையில், ஆபிரகாமைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். ஆபிரகாம் நம்பிக்கை கொண்டிருந்தபடியால் சகிப்புத் தன்மையுடன் இருந்தார்; அவர் உண்மையிலேயே செய்வேன் என்று தேவன் கூறியவற்றைச் செய்வார் என்று நம்பினார். கடைசியில் எல்லா வாக்குத்தத்தங்களும் நிறைவேற்றப்பட்டன!*

IV. *தேவன் பொய்யுரையாதவர் என்பதினிமித்தம் நாம் நம்பிக்கையைப் பெற்றிருக்க முடியும் (6:16-18).*
   A. *தேவன் தம்மீதே ஆணையிட்டார் (6:13; ஆதியாகமம் 22:16); இந்தச் சிந்தனை இப்போது விரிவாக்கப்படுகிறது.*
   B. *தேவன் ஒரு வாக்குத்தத்தத்தை அளிக்கும்போது, அதன்மீது நீங்கள் உங்கள் வாழ்வைப் பணயம் வைக்க முடியும்!*

V. *நாம் இயேசுவின்மீது நம்பிக்கையைக் கொண்டிருக்க முடியும் (6:18ஆ-20).*
   A. *நம்பிக்கையானது எங்கு நங்கூரமிடப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள்: "திரைக்குள்ளாக [உட்புறமாக]," அதாவது, பரலோகத்தில் (வசனம் 19)!*
   B. *அந்த நங்கூரத்தைப் பாதுகாப்பதற்குப் பரலோகத்தில் இருக்கிறவர் யார் என்பதைக் கவனியுங்கள்: இயேசு (வசனம் 20). அவர் நமக்காக, "ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுள்ள பிரதான ஆசாரியரா யிருக்கும்படிக்கு" (2:17; 2:18ஐக் காணவும்). 4:14-16ல், "வானங் களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகு மாரனாகிய இயேசு என்னும் மகாபிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லா தவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால்,*

நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" என்று நமக்குக் கூறப்படுகிறது.

*முடிவுரை*

*"நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச்செய்தார். அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும், திரைக் குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது, ..." (6:18, 19). உங்கள் வாழ்வு "நிலையும் உறுதியுமான" இந்த நங்கூரத்தைக் கொண் டுள்ளதா? நீங்கள் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின்மூலமாக அதைப் "பற்றிக்கொண்டு" இருக்கின்றீர்களா?*

# 19

# யாக்கோபு: நடைமுறைக் கிறிஸ்தவம்

***தலைப்பு***

*யாக்கோபு எழுதிய நிருபம், அதை எழுதியவரின் பெயரைக்கொண்டு அழைக்கப்படுகிறது, "யாக்கோபு, தம்மை தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன்" என்று அடையாளப்படுத்திக் கொள்கின்றனர் (1:1).*

***பின்னணி***

*யாக்கோபு நிருபம் வழக்கமாக, "பொது நிருபம்" என்று வகைப்படுத் தப்படுகிறது (அனேகமாக இது எபிரெயருக்கு நிருபத்தை யார் எழுதினார் என்பதைப் பொருத்து, முதல் பொது நிருபமாய் இருக்கலாம்). "பொது" என்றால் பவுலினால் எழுதப்பட்டதல்ல என்றும் ஒரு குறிப்பிட்ட சபைக் குழுமத் திற்கு அல்லது தனிநபர்களுக்கு எழுதப்பட்டதல்ல என்றும் அர்த்தப்படுகிறது. பவுலின் நிருபங்கள் அவற்றை பெற்றுக்கொண்டவரின் பெயரால் அழைக்கப்படுகின்றன; பொது நிருபங்கள், அவற்றை எழுதியவர்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றன.*

*இதன் எழுத்தாளர் நன்கு அறியப்பட்டவர் என்பதும், அவர் தம்மை "யாக்கோபு" என்று அழைத்துக்கொள்வதே போதிய அடையாளப்படுத்து தலாயிருந்தது என்பதும் உறுதி. நீக்கிப்போடுதல் என்ற செயல்முறையின் மூலம் இவர் எந்த யாக்கோபு என்பதை நாம் தீர்மானிக்கின்றோம். புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்ற பெயரில் நான்குபேர் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் நன்கு அறியப்படாதவர்கள் என்பதால், அவர்களை நீக்கிப்போட முடியும் (லூக்கா 6:16; மாற்கு 15:40). யாக்கோபு என்ற பெயரில் உள்ள மூன்றாவது நபர், செபதேயுவின் குமாரனும், அப்போஸ்தலரு மாயிருந்தவராவார், இவர் நன்கு அறியப்பட்டவர், ஆனால் கி.பி. 44க்கு முன்பே இவர் வேதசாட்சியாக மரித்துவிட்டார் (நடபடிகள் 12:2). இது கர்த்தரின் அரைசகோதரரான யாக்கோபு (இவரின் தாய் மரியாள், ஆனால் இவரின் தந்தை யோசேப்பு மற்றும் இயேசுவின் தந்தை தேவன்; மத்தேயு 13:55, 56ஐக் காணவும்) என்பவரே இந்த நிருபத்தை எழுதினார் என்ற கருத்தைவிட்டுச் செல்கிறது.*

*முதலில் யாக்கோபு இயேசுவின்மீது விசுவாசம் கொண்டிருக்கவில்லை (யோவான் 7:3-5), ஆனால் கர்த்தர் உயிர்த்தெழுந்தபின்பு அளித்த தரிசனம் ஒன்று (1 கொரிந்தியர் 15:7) இவரது வாழ்வை மாற்றியது. இவர் எருசலேமில் இருந்த சபையில் முக்கியத்துவம் வாய்ந்த நபராக எழுந்து நின்றார் (நடபடிகள் 1:13, 14; 12:17; 15:13முதல்.; 21:18; கலாத்தியர் 1:19; 2:9). இவர் தமது உண்மை மற்றும் நேர்மை ஆகியவற்றினால் "நீதியுள்ள" யாக்கோபு என்று அழைக்கப்பட்டார். அவர் தொடர்ந்து முழங்காற்படியிட்டு ஜெபித்ததால், அவரது முழங்கால் கள் ஒட்டகத்தின் முழங்கால்களைப் போன்று காய்ப்புக் காய்த்து இருந்தன என்று கூறப்படுகிறது. கடைசியில், இவர் செல்வமும் ஊழலும் மிகுந்த, யூதத்*

தலைவர்களின் கோபத்திற்கு ஆளானார். இவர் நியாயப்பிரமாணத்தை மீறினார் என்ற சாக்குப்போக்கை வைத்து, இவரை அவர்கள் தேவாலயத்தின் கோபுரத்தில் இருந்து கீழே தூக்கியெறிந்து, கல்லால் எறிந்து, பின்பு தண்டால் அடித்து அவரது உயிரைப் பறித்தனர். இவர் தம்மைக் கொலைசெய்தவர்களுக்காகத் தமது உதடுகளில் ஜெபத்துடன் இறந்தார் என்று கூறப்படுகிறது.

கர்த்தருடைய அரைசகோதரரான யாக்கோபு இந்த நிருபத்தின் எழுத்தாளர் என்றால், இது இந்த நிருபம் எழுதப்பட்ட காலம், இடம், மற்றும் சூழ்நிலை ஆகியவற்றைப் பற்றிச் சில விஷயங்களைக் கூறுகிறது. இது எழுதப்பட்ட இடம் எருசலேமாக இருந்திருக்கலாம். இது எழுதப் பட்ட காலம் கி.பி. 44க்கும், அவ்வேளையில்தான் செபதேயுவின் குமாரனான யாக்கோபு மரித்த பின்பு, இந்த யாக்கோபு முக்கியமானவரானார், மற்றும் இந்த யாக்கோபு மரித்த கி.பி. 62க்கும் இடைப்பட்ட காலமாகும். (இது, யாக்கோபு நிருபம் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களிலேயே முதலாவதாக எழுதப்பட்டது என்று அர்த்தப்படுகிறது.) இது பிரதான ஆசாரியரான அனனியா மற்றும் ரோம ஆளுநர் பேலிக்ஸ் ஆகியோரின்கீழ் அடக்குமுறை நடந்த காலமாக, பஞ்சம் அந்தப் பகுதியை ஏழ்மைப்படுத்திய காலமாக (நடபடிகள் 11:27முதல்.) இருந்தது.

இந்தக் கடிதம் "சிதறியிருக்கிற பன்னிரெண்டு கோத்திரங்களுக்கு" எழுதப்பட்டது (1:1). "பன்னிரெண்டு கோத்திரங்கள்" என்ற சொற்றொடர் யூதமக்கள் யாவரையும் குறிக்கக்கூடும் (நடபடிகள் 26:6, 7); ஆண்டுகளினூடே யூதர்கள் பல அடக்குமுறையாளர்களால் சிதறடிக்கப்பட்டிருந்தனர். இருப்பினும், யாக்கோபு, எல்லா யூதர்களையும் குறிப்பிடவில்லை. அவர் தமது வாசகர்களை "மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் கொண்டுள்ள சகோதரர்கள்" என்று பதினைந்து முறைகள் அடையாளப்படுத்துகின்றார் (2:1). இந்த உண்மையும், இத்துடன் கூடுதலாக இப்புத்தகம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ள யூதத்துவச் சொற்றொடராக்கங்களும் (1:1; 2:2, 11, 21, 25; 5:17), இப்புத்தகம் உபத்திரவத்தினிமித்தம் சிதறியிருந்த யூதக்கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டிருக்கலாம் என்ற கருத்தை ஏற்படுத்துகிறது (நடபடிகள் 8:1முதல்.).

இப்புத்தகம் நடைமுறைக் கிறிஸ்தவம் பற்றிய வல்லமைநிறைந்த சிறு தொகுப்பாக உள்ளது. இது "கிறிஸ்தவர்களின் நீதிமொழிகள் புத்தகம்" என்று அழைக்கப்பட்டுள்ளது, ஏனென்றால் இது ஒரு தலைப்பில் இருந்து இன்னொரு தலைப்பிற்கு விரைவாகக் கடந்து செல்கிறது. இது ஒரு சொல் தொகுப்பின் கடைசியில் உள்ள வார்த்தையை அதற்கு அடுத்து வரும் சொல் தொகுப்பின் முதல்வார்த்தையாக அடிக்கடி திரும்பக்கூறுதல் என்ற இலக்கியரீதியான கருவியமைப்பொன்றைப் பயன்படுத்துவதன்மூலம் கருத்துக்களின் தொடர்க்கோவையை சாதிக்கிறது.

**வரைகுறிப்பு**

வாழ்த்து (1:1).

I. உண்மையான விசுவாசம் சோதனைகளினால் பலப்படுத்தப்படுகிறது (1:2-18).

II. உண்மையான விசுவாசம் வெளிப்படுத்தப்படுகிறது (1:19-27).

III. உண்மையான விசுவாசம் பட்சபாதமற்றதாக உள்ளது (2:1-13).

IV. *உண்மையான விசுவாசம் செயல்படுவதாக உள்ளது (2:14-26).*
V. *உண்மையான விசுவாசம் நாவை அடக்குகிறது (3:1-12).*
VI. *உண்மையான விசுவாசம் பரத்திலிருந்து வரும் ஞானத்தை அறிகிறது (3:13-18).*
VII. *உண்மையான விசுவாசம் உலகத்தன்மையையும் விரோதத்தையும் தவிர்க்கிறது (4:1-12).*
VIII. *உண்மையான விசுவாசம் எப்போதும் தேவனுடைய சித்தத்தை ஆழ்ந்து சிந்திக்கிறது (4:13-17).*
IX. *உண்மையான விசுவாசம் செல்வங்களின் அபாயங்களைத் தவிர்க்கிறது - மற்றும் அது பொறுமையைச் கற்றறிகிறது (5:7-12).*
X. *உண்மையான விசுவாசம் ஜெபத்தின் வல்லமையை அறிகிறது (5:13-18).*
XI. *உண்மையான விசுவாசம் இழந்துபோகப்பட்டவர்களைப் பற்றி அக்கறை கொள்கிறது (5:19, 20).*

***யாக்கோபு நிருபத்தில் இருந்து பாடங்கள்***

*யாக்கோபு, இயேசுவின் அரைசகோதரராய் இருந்தும்கூட, தம்மை "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ... ஊழியக்காரன்" என்றே குறிப்பிடுகின்றார் (1:1). ஒருவேளை இது தாழ்மையின் வெளிப்பாடாக இருக்கலாம், அல்லது ஒருவேளை யாக்கோபு, இயேசுவுடனான ஆவிக்குரிய உறவுமுறையானது சரீரப்பிரகாரமான உறவுமுறையைக் காட்டிலும் அதிகமுக்கியத்துவம் வாய்ந்தது என்ற அவரது கூற்றை (மாற்கு 3:31-35) இவ்விடத்தில் பிரதிபலித்திருக்கலாம்.*

*யாக்கோபு நிருபத்திற்கும் மலைப்பிரசங்கத்திற்கும் இடையில் பல இணைகருத்துகள் உள்ளன (இவற்றுடன் 1:2 மற்றும் மத்தேயு 5:10-12; 1:5 மற்றும் மத்தேயு 7:7-12; 1:19, 20 மற்றும் மத்தேயு 5:22; 1:22 மற்றும் மத்தேயு 7:24-27).*

*"விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு" என்பது பிரபலமான உபதேச மாக உள்ளது. வேதாகமத்தில் "விசுவாசத்தினால் மாத்திரம்" என்ற சொற்றொடர் காணப்படும் ஒரே இடமான* KJV *2:24ல், "விசுவாசத்தினால் மாத்திரமல்ல" என்றுதான் கூறப்படுகிறது.*

*நாவு என்ற பாடக்கருத்து யாக்கோபு புத்தகத்தில் திரும்பத் திரும்ப வருவதாக உள்ளது: 1:26; 3:1-12; 4:11, 12; 5:12. நமது நாவை அடக்குதல் என்பது நாம் கொண்டுள்ள மிகக்கடினமான போராட்டங்களில் ஒன்றாக உள்ளது!*

## ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்தல் (யாக்கோபு 5:19, 20)

*யாக்கோபு சரீரப்பிரகாரமாகவோ அல்லது ஆவிக்குரிய வகையிலேயோ வியாதிப்பட்டவர்கள்மீது அக்கறை கொண்டிருக்க வேண்டியது பற்றி இப்போதுதான் கூறி முடித்திருந்தார் (5:15, 16). இந்தப் புத்தகத்தின் கடைசி இரண்டு வசனங்களில், ஆவிக்குரிய வியாதிப்பட்டவர்கள்மீது அவரது பிரதான அக்கறை காணப்படுகிறது. வலிவார்ந்த இப்பாடங்களை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.*

I. *தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறவர் வழிவிலகுதல் சாத்தியமாகவே*

உள்ளது.

A. தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறவர் பாவம் செய்து இழந்துபோகப்படுதல் சாத்தியமாக உள்ளது என்பதைச் சிலர் மறுக்கின்றனர். இந்த எண்ணப்போக்கு, பழைய ஏற்பாடு (1 நாளாகமம் 28:9) மற்றும் புதிய ஏற்பாடு (1 கொரிந்தியர் 9:27; 10:12; கலாத்தியர் 5:4; எபிரெயர் 10:26) போதனைக்கு நேர்மாறானதாக உள்ளது. இந்தக் கருத்துப் பற்றி 5:19, 20ஐக் காட்டிலும் வல்லமை நிறைந்த வசனப்பகுதி எதுவும் இல்லை.

1. இந்தக் கருத்தின்கீழ் உள்ள தனிநபர், அந்நியமான பாவியல்ல, ஆனால் கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரர் ஆவார்: "சகோதரரே, உங்களில் ஒருவன் ... ."

2. "தப்பிப்போகுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "அலைந்து திரிதல், விலகிச் செல்லுதல்" என்று அர்த்தப்படுகிறது, இது ஒரு மலைச்சிகரத்தில் இருந்தோ அல்லது ஒரு பாதையில் இருந்தோ விலகிச் செல்லுதல் என்ற வகையில் ஆனதாகும். அவர்கள் "சத்தியத்தில்" இருந்து விலகிச் சென்றுள்ளனர் (யோவான் 8:32; 17:17; 1 பேதுரு 2:22).

3. இப்படிப்பட்டவர் திரும்பக் கொண்டுவரப்படவில்லை என்றால்: "மரணம்," அதாவது, ஆவிக்குரிய மரணம் என்பதே இவரின் அடைவிடமாய் இருக்கும் (ஏசாயா 59:1, 2; 1 தீமோத்தேயு 5:6; வெளிப்படுத்தின விசேஷம் 20:15)!

B. நாம் இந்த சத்தியத்தை முற்றிலுமாக மதித்தால், இவ்விஷயம் நடைபெறுவதைத் தவிர்க்க நாம் மாபெரும் முயற்சியை மேற்கொள்வோம்!

1. மக்களுக்கு நாம் ஞானஸ்நானம் கொடுத்த பின்பு, அவர்களுக்குத் தொடர்ந்து போதிப்போம் (மத்தேயு 28:19, 20).

2. பின்வாங்கி அலைந்து திரிகின்றவர்களைத் திரும்பக் கொண்டுவர நம்மால் இயன்ற யாவற்றையும் நாம் செய்வோம்!

II. தவறு செய்கின்ற பிள்ளையைத் திருப்பிக் கொண்டுவருதல் என்பது சாத்தியமாகவே உள்ளது.

A. இவ்வசனங்களின் பிரதான வலியுறுத்தம் எதிர்மறையானதாக அல்ல, ஆனால் நேர்மறையானதாகவே உள்ளது. தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறவர் இழந்து போகப்படுதல் என்பதின் மீதல்ல, ஆனால் நம்பிக்கை உண்டு என்பதின்மீதே வலியுறுத்தம் உள்ளது: "உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, ..." (வசனங்கள் 19, 20).

B. அவிசுவாசியாகிவிட்ட ஒவ்வொரு கிறிஸ்தவரையும் நம்மால் திரும்பக்கட்டுவிக்க இயலாது, ஆனால் நாம் அன்பையும் அக்கறையையும் காண்பித்தால் பலர் அதை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாய் இருப்பார்கள். "திரளான பாவங்களை மூடுவான்" என்ற சொற்றொடர் நீதிமொழிகள் 10:12ல் இருந்து எடுக்கப்பட்டதாகக்

காணப்படுகிறது: *"அன்பு திரளான பாவங்களை மூடும்."*

1. அவர்மீது நீங்கள் தனிப்பட்ட வகையில் ஆர்வமாய் இருக்கின்றீர்கள் என்பதைக் காண்பியுங்கள். அவரது வாழ்வின்மீது ஈடுபாடு கொள்ளுங்கள்.
2. அவரது ஆவிக்குரிய தேவைகள் பற்றி அவருடன் பேசுங்கள் (2 தீமோத்தேயு 4:2; எபிரெயர் 10:24). அன்பு என்பது அன்பு கூறப்பட்டவர்களுக்கு மிகச்சிறந்தவற்றை நாடுகிறது. என் சகோதரர் இழந்துபோகப்படும் அபாயத்தில் இருந்து, நான் அவரிடத்தில் அதைப் பற்றிப் பேசாதிருந்தால், நான் அவர்மீது அன்புகூருவதில்லை என்றாகிறது. சிலரை ஊக்கப்படுத்தினாலே போதுமானதாக உள்ளது; மற்றவர்களுக்குப் பிரதானமான போதனைகள் அவசியமாகிறது (எபிரெயர் 5:12).
3. அவருக்காக ஜெபியுங்கள் (5:15, 16) - மற்றும் நீங்கள் அவருக்காக ஜெபிக்கின்றீர்கள் என்பதை அவர் அறிய அனுமதியுங்கள்.

III. தேவனுடைய பிள்ளையாயிருந்து தவறு செய்கின்றவரைத் திருப்பிக் கொண்டுவருதல் என்பது நமது பொறுப்பாக இருக்கிறது.

A. இவ்வசனப்பகுதி, "சகோதரரே, உங்களில் ஒருவன் ..." என்று தொடங்குகிறது. தவறுசெய்கிறவரைத் திருப்பிக் கொண்டுவரும் பணியில் ஈடுபடுபவர் தேவனுடைய இன்னொரு பிள்ளையாயிருக்கின்றார் (கலாத்தியர் 6:1முதல்.). அவிசுவாசமுள்ளவர் பொறுப்புடையவராய் இருக்கிறார்; ஒவ்வொருவரும் தம்மைக் குறித்து கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இருப்பினும், விசுவாசியாயிருக்கிறவர்கள், தவறுகிற சகோதரரைத் திருப்பிக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளனர்.

B. தவறு செய்கின்றவர்களை மீளக்கட்டியெழுப்ப நாம் விரும்ப வேண்டியது ஏன் என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன:

1. அவர் நமது சகோதரர், அவருக்காகவும் கிறிஸ்து மரித்தார்.
2. நாம் அவிசுவாசமுள்ளவர்கள் ஆகக்கூடும்: "உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி" (1 கொரிந்தியர் 10:12ஐக் காணவும்). நாம் தப்பித்திரிந்துகொண்டிருந்தால், நம்மீது யாரேனும் அக்கறையாய் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புவோமா? (மத்தேயு 7:12ஐக் காணவும்.)
3. தேவன் நமது திரளான பாவங்களை மூடியிருக்கின்றார். அதையே நம் சகோதரருக்கும் செய்யப்பட நாம் விரும்ப வேண்டும்.
4. தவறு செய்கிறவர்கள் எதிர்மறையான செல்வாக்கினால் பாதிக்கப்படக்கூடும்.
5. ஒரு சகோதரர் இல்லம் திரும்ப உதவுதல் என்பது மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறது.
6. அவர் இரட்சிக்கப்படுகிறாரா இல்லையா என்பதை நமது முயற்சிகள் தீர்மானிக்கலாம்.
    a. ஒருவரின் பாவங்கள் மூடப்பட்டு மன்னிக்கப்படுதலைப்

பெறுதல் என்பது எவ்வளவு ஆசீர்வாதமாக உள்ளது (சங்கீதம் 85:2; நெகேமியா 4:5ஐக் காணவும்)!

b. நமது பாவங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மூடப் பட்டுள்ளன (1 யோவான் 1:7, 9).

7. இழந்துபோகப்பட்டவர்கள் பற்றிய நமது எண்ணப்போக்கு, நமது சொந்த இரட்சிப்பிற்கு வலிவார்ந்த காரணியாக இருக்க முடியும்! தேவனே, நாங்கள் லூக்கா 15ன் மூத்த சகோதரன் போன்று இராதிருக்க எங்களுக்கு உதவும்! நாம் நம்மையும் அலைந்து திரிகிற நமது சகோதரர்களையும் இரட்சித்துக்கொள்ள முயற்சிசெய்வோமாக (1 தீமோத்தேயு 4:16).

முடிவுரை

யாக்கோபு தமது நிருபத்தை வாழ்த்துதலோ, ஆசீர்வாதமோ, சம்பிரதாய மான முடிவுரையோ, அல்லது பிரியாவிடை உரையோ எதுவுமின்றி முடிக்கின்றார். யாக்கோபு நிருபம் முடிவில் நடைமுறைக்குரியதாக, ஏற்புடையதாக, மற்றும் அறைகூவல் விடுப்பதாக உள்ளது. அவரது வார்த்தைகளை நாம் நமது இருதயத்தில் ஏற்றுக்கொள்வோமாக!

# 20

# 1 பேதுரு: கண்ணியத்துடன் பாடுபடுதல்

**தலைப்பு**

*பேதுருவின் முதல் நிருபம், அதை எழுதியவரின் பெயரால் அழைக்கப் படுகிறது: "இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய, பேதுரு" (1:1). அப்போஸ்தலரான பேதுருவே இதை எழுதினார் என்பது தொடக்ககால எழுத்தாளர்களின் முடிவாயிருக்கிறது. பேதுரு என்றால் "பாறை" அல்லது "கல்" என்று அர்த்தம்.*

**பின்னணி**

*இது இன்னொரு "பொதுவான நிருபம்" ஆகும். 2 பேதுரு; 1, 2, 3 யோவான்; யூதா ஆகியவை மற்ற பொதுவான நிருபங்கள் ஆகும்.*

*பேதுரு வேதாகமத்தில் நன்கு அறியப்பட்டவர்களில் ஒருவரா யிருக்கின்றார். இவரை நாம் இவரின் தெளிவான "மனிதத்துவப்பண்பு" கொண்டு அடையாளப்படுத்த முடியும். பாரம்பரியத்தின்படி கி.பி. 64ல் தொடங்கிய நீரோவின் உபத்திரவப்படுத்துதல் காலத்தின்போது, பேதுரு கி.பி. 65-67ல் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டார்.*

*பேதுருவின் நிருபங்கள் சபையைப் பெலப்படுத்திப் போஷிக்க வேண்டுமென்று இந்த அப்போஸ்தலருக்கு இயேசு இட்ட கட்டளையின் பகுதி நிறைவேற்றமாக எழுதப்பட்டிருக்கலாம் (லூக்கா 22:32; யோவான் 21:15-17). முதல் கடிதம், "பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களிலே ... தெரிந்துகொள்ளப் பட்ட பரதேசிகளுக்கு" எழுதப்பட்டது (1:1, 2). இவை சிறிய ஆசியாவின் வடக்குப் பகுதியில் இருந்த ஐந்து ரோம மாகாணங்களாகும்; இவை இப்போது துருக்கி எனப்படும் நாட்டின் பெரும்பகுதியாக உள்ளன. "சிதறியிருக்கிறவர்களில் ... பரதேசிகள்" என்ற சொற்றொடர் யூத வாசனையைக் கொண்டுள்ளது, ஆனால் கிறிஸ்தவர்கள்கூடச் சிதறடிக்கப்பட்டிருந்தனர் (நடபடிகள் 8:1முதல்.). "பரதேசிகள்" என்பது இவ்வுலகம் கிறிஸ்தவர்களின் இல்லம் அல்ல என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதற்குப் பேதுரு கையாண்ட வழிமுறையாகும் (2:11). இப்புத்தகத்தின் சொற்றொடர் அமைப்பானது, பேதுரு புறஜாதி வாசகர்களைத் தம் சிந்தையில் அடிப்படையாகக் கொண்டிருந்தார் என்று சுட்டிக்காண்பிக் கிறது (2:10; 4:3, 4; முதலியன.).*

*5:12ல், பேதுரு தமது முதல் கடிதத்தைத் தொகுத்துரைக்கின்றார்: "உங்களுக்குப் புத்திசொல்லும்படிக்கும், நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சியிடும் படிக்கும், நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி ... அனுப்பியிருக்கிறேன்!" துன்புறுதல், பாடுபடுதல், மற்றும் சோதனைகள் ஆகியவை பேதுருவின் சிந்தையில் இருந்தன என்பது தெளிவு; அவர் இப்புத்தகத்தில் துன்புறுதல் பற்றிப் பதினாறு முறைகள் குறிப்பிடுகின்றார். 5:12ல் அவர், "தேவனுடைய கிருபையினாலே நீங்கள்*

*சோதனைகளில் நிலைத்து நிற்கமுடியும் என்று நீங்கள் அறியும்படிக்கு இதை எழுதினேன்" என்று கூறுகின்றார். இப்புத்தகம் இயேசுவின் பாடுகளை அவரது பின்பற்றாளர்களுக்கு ஒரு முன்மாதிரி என்ற வகையில் வலியுறுத்துகிறது (2:21-25; 3:18முதல்.; 4:1, 13; முதலியன.).*

*இதில் குறிப்படப்பட்டுள்ள பாடுகள் என்பது கி.பி. 64ல், ரோமாபுரியில் ஏற்பட்ட தீவைப்புச் சம்பவத்திற்குப் பின்பு, நீரோவினால் தொடங்கிவிடப்பட்ட உபத்திரவங்கள் என்றிருந்தால் இப்புத்தகம் அந்தக் காலகட்டத்திற்கும், பேதுருவின் மரணத்திற்கும் இடையில் எழுதப்பட்டிருக்கலாம்; இது அனேகமாக, கி.பி. 64-67ல் எழுதப்பட்டிருக்கலாம்.*

*இந்தக் கடிதம் எந்த இடத்திலிருந்து எழுதப்பட்டது என்பது இதைப் பற்றி மிகவும் கேள்விக்குரிய விஷயங்களில் ஒன்றாக உள்ளது. பேதுரு இதை எழுதும்போது, தாம் பாபிலோனில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார் (5:13). இது ரோமாபுரியைக் குறிப்பிடும் குறிச்சொல் என்று பலர் நினைக்கின்றனர்: பேதுரு தமது கடைசி நாட்களை ரோமாபுரியில் செலவிட்டார் என்று தொடக்ககாலப் பாரம்பரியம் கூறுகிறது; ரோமாபுரியானது "பாபிலோன்" என்று அழைக்கப்படுதல் பொதுவான விஷயமாகவே இருந்தது (வெளிப்படுத்தின விசேஷம் 17:18). மற்றவர்கள், பேதுரு தாம் எங்கிருந்தார் என்பதை மறைப்பதற்குக் காரணம் எதுவும் இருக்கவில்லை என்று கூறி இதை மறுக்கின்றனர்; அவர்கள் பேதுரு தமது பல பயணங்களின்போது, ஐப்பிராத்து நதிக்கரையில் இருந்த உண்மையான பாபிலோனில் இருந்திருக்கலாம் என்று வலியுறுத்துகின்றனர் (நடபடிகள் 12:17). இந்த நேர்மாறான கருத்தைத் தீர்த்து வைப்பதற்கு வழி எதுவும் இல்லை, ஆனால் பேதுரு தமது காலத்தை ரோமா புரியில் செலவிட்டிருப்பினும், அது "பேதுரு முதல் போப்பாக இருந்தார்" என்ற உரிமை கோருதலை செல்லத்தக்க தாக்குவதில்லை. 1 பேதுரு நிருபத்தில் இந்த அப்போஸ்தலர் தம்மை சபை முழுவதின்மீது "போப்" என்றல்ல, ஆனால் "ஒரு மூப்பர்" என்றே அடையாளப்படுத்துகின்றார் (5:1; அதாவது, ஒரு உள்ளூர் சபைக்குழுமத்தில் ஊழியம் செய்யும் பலரில் ஒருவர்) ("உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தை," வசனம் 2).*

**வரைகுறிப்பு**

*வாழ்த்து (1:1, 2).*

- I. *தேவனுடைய உண்மையான கிருபை (1:3-2:10).*
  - A. *சாட்சியம்: மாபெரும் இரட்சிப்பு (1:3-12).*
  - B. *பொதுவான புத்திமதி (1:13-2:10).*
- II. *தேவனுடைய உண்மையான கிருபை நாம் நிலைநிற்க உதவுகிறது (2:11-3:12).*
  - A. *பல்வேறு உறவுமுறைகளில் நிலைநிற்குதல் (2:11-3:7):*
    1. *அவிசுவாசிகளுடன் உறவுமுறை (2:11, 12).*
    2. *அரசாங்கத்துடன் உறவுமுறை (2:13-17).*
    3. *எஜமானர்களுடன் உறவுமுறை (2:18-25).*
    4. *திருமணத்தில் உறவுமுறை (3:1-7).*
  - B. *பொதுவான புத்திமதி (3:8-12).*
- III. *தேவனுடைய உண்மையான கிருபை நாம் சோதனைகளில் நிலைநிற்க*

*உதவுகிறது (3:13-5:11).*

A. *சாட்சியம்: சோதனைகளைப் புரிந்துகொள்ளுதல் (3:13-4:19).*
   1. *சோதனைகளைச் சகிப்பதன் அவசியம் (3:13-22).*
   2. *சோதனைகளைச் சகிக்கையில் வாழ்வது எவ்வாறு (4:1-11).*
   3. *சோதனைகளின் நோக்கம் (4:12-19).*

B. *பொதுவான புத்திமதி (5:1-11).*

*முடிவுரை மற்றும் ஆசீர்வாதம் (5:12-14).*

***1 பேதுரு நிருபத்தில் இருந்த பாடங்கள்***

*"நலமும் வளமுமான சுவிசேஷம்" என்பது இன்றைய நாட்களில் பிரபல மானதாக உள்ளது. "நீங்கள் கிறிஸ்தவராக மாத்திரம் இருங்கள்," "உங்கள் பிரச்சனைகள் யாவும் அகன்றுவிடும்" என்று நமக்குக் கூறப்படுகிறது. இந்தக்கருத்திற்கு நேர்மாறான வகையில், இயேசுவும் அப்போஸ்தலர்களும், கர்த்தரை பின்பற்றுபவராய் இருக்கையில் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து நேர்மையாய் எடுத்துரைத்தனர் (மத்தேயு 5:11; நடபடிகள் 14:22; 2 தீமோத்தேயு 3:12). தேவன் தமது பிள்ளைகளிடத்தில் இருந்து எல்லாப் பிரச்சனைகளையும் நீக்கிப்போடுகின்றார் என்பதல்ல, ஆனால் அதற்கு மாறாக, அவருடைய கிருபையினால் நாம் பிரச்சனைகளைச் சகிக்க முடியும் என்பதும் அவற்றினால் நாம் மேன்மையானவர்களாக்கப்பட முடியும் என்பதுமே 1 பேதுரு நிருபத்தின் செய்தியாக உள்ளது.*

*ஒரு நபர், உலகப்பிரகாரமான வாழ்வை வாழ்ந்திருந்து (4:3ஐக் காணவும்) பின்பு கிறிஸ்தவராகின்றபோது, தமது உலகப் பிரகாரமான நண்பர்கள் அவருடைய தீர்மானத்தைக் குறித்து மனவெழுச்சியடைய வில்லை என்பதை அறியும்போது திகைப்பும் ஏமாற்றமும் அடைகின்றார் (4:4ஐ ஆழ்ந்து சிந்திக்கவும்).*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் கண்ணியத்துடன் பாடுபடுதலைக் கற்றுக்கொள்வது அவசியமாய் இருக்கிறது. விசேஷமாக, நாம் காரணமின்றி பாடுபடும்போது, எதிர்த்துத் தாக்காமல், தமது பிதாவினிடத்தில் நம்பிக்கையாய் இருந்த இயேசுவைப் பின்பற்றுகின்றவர்களாக இருக்க வேண்டும்.*

## *சாராளின் மகள்கள் (1 பேதுரு 3:1-7)*

*ஆபிரகாம் விசுவாசிகளுக்குத் தந்தையாக இருக்கின்றார் என்றால் (ஆதி யாகமம் 17:5; ரோமர் 4:11), சாராள் விசுவாசிகளுக்குத் தாயாக இருக்கின்றாள் (ஆதியாகமம் 17:16; ஏசாயா 51:2). அவள் கல்தேயரின் ஊர் என்ற பட்டணத்தில் இருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கும் அதற்கு அப்பாலும்கூட ஆபிரகாமுடன் இருந்தாள். ஆபிரகாமுக்குத் தூதர்கள் தரிசனமானபோது, அவள் வேதாகமத்திலேயே முதன் முதலாக உபசரிப்பைக் காண்பித்த பெண்ணாகக் குறிப்பிடப்பட்டாள். கடைசியில் ஈசாக்கு பிறந்தபோது, அது ஆபிரகாமின் விசுவாசத்தைப்போன்றே சாராளின் விசுவாசத்தினாலும் நடந்த விஷயமாயிற்று (எபிரெயர் 11:11).*

*திருமணத்தின் குறிப்பிட்ட சில கொள்கைகளை விவரிப்பதற்குச் சாராளின் வாழ்வு பயன்படுத்தப்பட்டுள்ளது (3:5, 6). "நீங்கள் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்" என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். 1 பேதுரு*

*3:1-7ல் இருந்து வருகிற நமது பாடம், சாராளின் மகள்கள் யாவருக்கும் ஒரு பாராட்டுரையாகவும், விசுவாசத்தில் அப்படிப்பட்ட முன்மாதிரியாகும்படி எல்லாப் பெண்களுக்கும் ஒரு அறைகூவலாகவும் இருக்கிறது.*

I. *சாராளின் மகள்கள் மனவிருப்பத்துடன் கீழ்ப்படிகிறவர்களாய் இருக்கின்றனர் (3:1, 2, 4-6).*
   A. *"அந்தப்படி" (வசனம் 1) என்பது தேவனுடைய சித்தத்திற்கு மன விருப்பத்துடன் கீழ்ப்படிந்த இயேசுவின் உதாரணத்தை (2:21-25) குறிக்கிறது.*
      1. *கீழ்ப்படிதல் என்பது கீழாயிருத்தல் என்று எவ்வகையிலும் குறிப்பிடுவதில்லை.*
         a. *இயேசு தேவனுக்கு எவ்வகையிலும் கீழானவர் அல்ல (பிலிப்பியர் 2:5).*
         b. *கணவனும் மனைவியும் "ஒருமிக்க நித்திய ஜீவனாகிய கிருபையைப் பெறுவதில்" உடன் சுதந்தரர்களாய் இருக்கின்றனர் என்று பேதுரு வலியுறுத்தினார் (வசனம் 7,* KJV*). ஒருவரைவிட மற்றவர் முக்கியமானவராக இருப்பதில்லை.*
      2. *இது தேவனுடைய சித்தத்திற்குப் பதில்செயல் செய்வதைக் குறிக்கிறது (2:15ஐக் கவனிக்கவும்)! இயேசுவைப் போன்றே நாமும் தேவனுடைய திட்டத்திற்குக் கீழ்ப்படிதல் அவசியமாய் இருக்கிறது; அவர் மிகச்சிறந்தவற்றை அறிகின்றார்.*
   B. *இந்த நிருபத்தில் உபத்திரவம் என்பதே பேதுருவின் முழு ஆய்வுக்கருத்தாயிருப்பதால், அவர் கிறிஸ்தவரல்லாத ஒரு கணவருடன் திருமண வாழ்வில் இணைந்துள்ள கிறிஸ்தவப் பெண்ணைப் பற்றிச் சித்தரிக்கின்றார். கீழ்ப்படிதல் என்ற கொள்கையானது எல்லாத் திருமணங்களுக்கும் நடைமுறைப்படுவதாக உள்ளது (ஆதியாகமம் 3:16; எபேசியர் 5:22-24; கொலோசெயர் 3:18; தீத்து 2:5).*
      1. *"கீழ்ப்படிதல்" என்பது "கீழ்ப்பதவியில் வைத்தல்" என்று அர்த்தப்படுகிற இராணுவ சொற்றொடரில் இருந்து வருகிறது (1 கொரிந்தியர் 11:3ஐக் கவனிக்கவும்).*
      2. *"போதனையின்றி" என்பது "வற்புறுத்துதல் (நச்சரிப்பு) இன்றி" என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. "நடக்கை" என்பது "வாழ்வு முறை" என்று அர்த்தப்படுகிறது. தேவபக்தியுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்துதலில் மாபெரும் வல்லமை உள்ளது!*
      3. *இந்தக் கீழ்ப்படிதல் புறம்பானதாக மாத்திரமல்ல, ஆனால் கீழ்ப்படிதல் உள்ள ஆவியைப் பிரதிபலிக்கிறது.*
         a. *உண்மையான மரியாதை (வசனம் 2ல்,* NASB*; மற்றும்* KJV *வேதாகமங்களில்* "fear" *என்றுள்ளது); (எபேசியர் 5:33ஐக் காணவும்).*
         b. *"சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி" (வசனம் 4).*
   C. *சாராளைப் பற்றிய விவரிப்பு (வசனங்கள் 5ஆ, 6அ).*
      1. *"ஆண்டவன்" என்பது மரியாதைக்குரிய சொற்றொடராகும்*

*(ஆதியாகமம் 18:12ஐக் காணவும்). "அழைத்தல்" என்பது நிகழ்கால வினையெச்சமாக உள்ளது, இது தொடர்ந்து நடக்கும் செயலைக் குறிக்கிறது.*

2. *இது அவள் தனது சொந்தக் கருத்துக்களைப் பற்றி ஒருக் காலும் மனதில் எண்ணியது இல்லையென்றாலும், அவள் ஒருக்காலும் தனது கருத்துக்களையோ அல்லது விருப்பங் களையோ வெளிப்படுத்தியதில்லை என்றும் அர்த்தப்படுவ தில்லை (ஆதியாகமம் 21:10ஐக் கவனிக்கவும்). இது அவள் தங்களின் குடும்பத்தில் ஆபிரகாம் தலையாய் இருப்பதை மனப்பூர்வமாக விரும்பினாள் என்று அர்த்தப்படுகிறது.*

II. *சாராளின் மகள்கள் அமைதியும் மாண்பும் மிகுந்த கண்ணியத்தைக் கொண்டிருக்கின்றனர் (3:2-5).*

A. *"கற்புள்ள நடக்கை" (வசனம் 1, KJV) என்பது "தூய வாழ்வைக் குறிக்கிறது" (தீத்து 2:4, 5). ஒரு விவரிப்பானது புறம்பான அலங்கரிப்புகளைத் தவிர்க்கிறது (வசனம் 3).*

1. *ஏசாயா 3:16-25ல் தரப்பட்டுள்ள "அழகுபடுத்தும் உதவிப் பொருட்களை" கண்ணோக்குங்கள். பேதுருவின் மூன்று வகைப்பாடுகள் இன்னமும் நம்முடன் இருக்கின்றன: சிகை அலங்கரிப்பு, ஆபரணங்கள் மற்றும் [விலையேறப்பெற்ற] உடையணிதல்.*
2. *சாராளின் மகள்கள், நவநாகரீக மோகம் கொண்டவர்களாக அல்ல (ரோமர் 12:2), ஆனால் அடக்கம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றைக் கொண்டவர்களாகப் பண்புபடுத்தப்படு கின்றனர் (1 தீமோத்தேயு 2:9, 10ஐக் காணவும்).*

B. *சாராளின் மகள்கள் தங்கள் வெளித்தோற்றம் பற்றி முற்றிலும் அக்கறையற்று இருக்க வேண்டும் என்று அவசியமில்லை (வசனங்கள் 3-5).*

1. *சாராய் என்ற பெயர் "இளவரசி" என்று அர்த்தம் தருகிற "சாராள்," என்று மாற்றப்பட்டது (ஆதியாகமம் 17:15முதல்.). அவள் அழகிலும் (ஆதியாகமம் 12:14), சகிப்புத்தன்மையிலும் ஒரு இளவரசியாக இருந்தாள் என்பது உறுதி.*
2. *அவர்கள் தங்களின் தோற்றத்தை மேன்மையாக்கிக் கொள்ள செயற்கையானவற்றைச் சார்ந்திருப்பதில்லை; அவர்களின் பண்பு அவர்களின் தோற்றத்தை மேன்மையாக்குகிறது. அவர்கள் கண்ணியத்துடன் பேசி நடக்கின்றனர்.*
   a. *"அலங்கரித்தல்"* ["adorn"] *என்பது நாம்* "cosmetics" [*அழகுச் சாதனங்கள்*] *என்ற வார்த்தையைப் பெறுகிறதான கிரேக்க வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.*
   b. *சாராளின் மகள்கள் ஒருவரால் விலைகொடுத்து வாங்கப் பட இயலாத "உள்ளான" அழகுசாதனங்களினால் அழ கூட்டப்படுகின்றனர்.*

III. *சாராளின் மகள்கள் உள்ளான மற்றும் அழியாத அழகைக் கொண்டி*

*ருக்கின்றனர் (3:3-6).*

A. *இங்கு கேள்வி என்பது ஒருவரின் வாழ்க்கை மீதான வலியுறுத்தம் பற்றியதாக உள்ளது; 3ம் வசனம் ஒரு தடையல்ல, அல்லது பெண்கள் உடைகள் அணிய முடியாது!*

   1. *உள்ளான குணத்தின்மீதும் (வசனம் 4) தேவனைப் பிரியப்படுத்துவதன்மீதும் வலியுறுத்தமுள்ளது: "தேவனுடைய பார்வையில்" (வசனம் 4), "தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த" (வசனம் 5).*
   2. *"நன்மை செய்தல்" (சரியானவற்றைச் செய்தல்) என்பதே சாராளின் வாழ்வினுடைய வலியுறுத்தமாயிருந்தது (வசனம் 6).*

B. *நமது முன்னுரிமைகள் மாம்சப் பிரகாரமானவைகளாய் இராமல், ஆவிக்குரியவைகளாய் இருக்கிறபோது, குறைந்தபட்சம் பின்வரும் இரு விளைவுகள் ஏற்படுகின்றன:*

   1. *என்ன நடந்தாலும் நாம், "ஒரு ஆபத்துக்கும் பயப்படாமல்" அதாவது, "பயமடையாது" அவற்றை எதிர்கொள்கின்றோம் (வசனம் 6) (நீதிமொழிகள் 3:25ஐக் கவனிக்கவும்). (கிறிஸ்தவரல்லாத ஒரு துணைவரிடம் இருந்தும்கூட) உபத்திரவம் வரும்போது, தேவன் நம்மோடு இருப்பார்!*
   2. *உள்ளான அழகுக்கும், உருவத்தில் பொலிவு அல்லது மென்மையான தோல் ஆகியவற்றிற்கும் தொடர்பெதுவும் இல்லை; காலம் என்பது உள்ளான அழகை அழிப்பதில்லை, ஆனால் அதை மேன்மையுறச் செய்கிறது (வசனங்கள் 3-5, NIVஐக் கவனிக்கவும்)!*

IV. *சாராளின் மகள்கள் அன்புடன் மதிக்கப்படுகின்றனர் (3:7).*

A. *கணவர்கள் மற்றும் மனைவியர்கள் ஆகியோருக்குப் பாதைவழி ஒன்றாகவே உள்ளது ("அந்தப்படி," வசனம் 7). மரியாதை என்பது பரஸ்பரம் தரப்படுவதாக இருக்க வேண்டும்.*

   1. *"அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்." "கனம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது KJV வேதாகமத்தில் இன்னும் பலம்வாய்ந்ததாயிருக்கிறது. இது 2:7ல் "விலையேறப் பெற்றது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவள் விலையேறப் பெற்றவள் என்பதை அறிய அவளை அனுமதியுங்கள்!*
   2. *"பெலவீன பாண்டம்" என்பது மதிப்பையல்ல, ஆனால் உடல் பெலத்தைக் குறிக்கிறது. எளிதில் உடையக்கூடிய பூ ஜாடியானது துருப்பிடித்த வாளியைவிட அதிக மதிப்புள்ளதாக இருக்கிறது.*

B. *சாராள் மதிக்கப்பட்டு அன்புகூரப்பட்டாள் - அதே விஷயத்தை அவளது மகள்களும் பெற்றுக்கொள்கின்றனர் (நீதிமொழிகள் 18:22; 31:28).*

   1. *அவளுக்குப் பின்பு அவளுடைய மகள்களைப் போலவே சாராளும், ஆபிரகாமுடன் "நித்தியஜீவனாகிய கிருபைக்கு*

*சுதந்தரவாளியாக" இருந்தாள் - இதில் அவள் உடல்ரீதியாக ஈசாக்கினுடைய பிறப்பிலும் (சங்கீதம் 127:3), ஆவிக்குரிய வகையில் தேவனுடைய வழியைப் பின்பற்றுவதிலும் (1:4) சுதந்தரவாளியாயிருந்தாள்.*

2. *ஆபிரகாம் அவளை நேசித்து அவளை மதித்தார்.*
   a. *அவர் ஆகார் குறித்து சாராளுடைய விருப்பங்களை மதித்தார் (ஆதியாகமம் 16:6; 21:10, 12).*
   b. *அவர் தமது பரந்த வீட்டுக்காரியங்களை விசாரிக்கும் பணியில் அவள்மீது நம்பிக்கை வைத்து ஒப்புவித்தார்.*
   c. *அவள் மரித்தபோது, அவர் துக்கித்தார் (ஆதியாகமம் 23:2).*

*முடிவுரை*

*சாராளின் மகள்கள் யாவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக! நீங்கள் சாராளின் ஒரு மகளாய் இருக்கின்றீர்களா? "நீங்கள் சரியானவற்றைச் செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருப்பீர்களானால், அவளுக்கு [சாராளுக்கு]ப் பிள்ளைகளாய் [மகள்களாய்] இருப்பீர்கள்" (வசனம் 6,* NIV*).*

# 21

# 2 பேதுரு மற்றும் யூதா: விசுவாசத்திற்காகப் போராடுதல்!

*தலைப்பு*

*பேதுருவின் இரண்டாம் நிருபமும் யூதா எழுதிய நிருபமும் அவற்றை எழுதியவர்களின் பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகின்றன. பேதுரு நன்கு அறியப்பட்டவராய் இருக்கின்றார். "யாக்கோபின் சகோதரரான யூதா அல்லது [யூதாஸ்], ..." நன்கு அறியப்பட்டவராய் இருப்பதில்லை; அவர் இயேசுவின் இன்னொரு அரைசகோதரர் ஆவார் (மத்தேயு 13:55, 56; யாக்கோபு நிருபம் பற்றிய குறிப்புகளில் காணலாம்). இவ்விரு தொகுப்புகளின் உண்மைத்தன்மை கேள்வி கேட்கப்பட்டுள்ளது, ஆனால் உள்ளான மற்றும் புறம்பான என்ற இருவகை ஆதாரங்களுமே இவற்றின் உண்மைத் தன்மைக்குச் சாட்சியளிக்கின்றன.*

***பின்னணி***

*2 பேதுரு 3:1ல் இந்த அப்போஸ்தலர், "பிரியமானவர்களே, இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன் ..." என்று கூறுகின்றனர். முதல் கடிதம், கி.பி. 64ல் நீரோ கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தத் தொடங்கிய பின்பு எழுதப்பட்டது - மற்றும் பேதுரு கி.பி. 65-67ம் ஆண்டில் மரித்தார் - என்றால், இந்த இரண்டாம் நிருபம், முதல் நிருபம் எழுதப்பட்ட பின்பு சற்றுக்காலத்திலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும். இவ்விரு கடிதங்களும் ஒன்றுக்கொன்று துணைக்கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கின்றன: முதலாவது கடிதம் வெளியில் இருந்து சபைக்கு ஏற்படும் தாக்குதல்களை (உபத்திரவங்களை) கையாளுகையில், இரண்டாவது கடிதம் உள்ளாக ஏற்படும் (கள்ளப்போதகம் என்ற) தாக்குதல்களைக் கையாளுகிறது. 2 பேதுரு 1:14, 15ல் பேதுரு, தமது மரணம் விரைவில் நேரவிருந்தது மற்றும் அவர் மரித்த பின்னும்கூட, அவரது எழுத்துக்கள் இந்த விஷயங்களைச் சகோதரர்களுக்கு நினைவூட்ட வேண்டும் என்பதைத் தெளிவாக்கினார்.*

*யூதா எழுதிய சிறு நிருபம் 2 பேதுருவைப் போன்றதாகவே உள்ளது (2 பேதுரு 2:1-3:3 மற்றும் யூதா 4-19 ஆகிய வசனப்பகுதிகளைக் கவனிக்கவும்). யூதா "பொதுவான இரட்சிப்பைப்பற்றி" எழுதுவதற்கு நோக்கங் கொண்டார் (வசனம் 3; இவற்றுடன் 1 பேதுரு 1:9, 10), ஆனால் கிறிஸ்தவர்கள் "தங்கள் விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடும்படி" அவர்களை ஊக்குவித்தல் அவசியம் என்று அவர் நம்பியிணங்கினார் (வசனம் 3). ஒருவேளை அவர் பேதுருவின் இரண்டாம் நிருபத்தினுடைய பிரதியொன்றைக் கண்டு, பேதுருவின் எச்சரிக்கை உண்மையாயிற்று என்பதை உணர்ந்து அறிந்து (வசனம் 17), அதே எச்சரிக்கையைத் தமது செல்வாக்கு மேலோங்கியிருந்த வட்டாரத்திற்கு அனுப்ப முடிவு செய்திருக்கலாம். இந்தச் சூழ்நிலை சரியானதாயிருந்ததென்றால்,*

இக்கடிதம் அனேகமாக 60களின் பிற்பகுதியிலோ அல்லது 70களின் தொடக்கப் பகுதியிலோ, ஒருவேளை எருசலேமில் இருந்து எழுதப்பட்டி ருக்கலாம். நாம் சூழ்நிலைகளைக் கற்பனை செய்துகாண மாத்திரமே முடிகிறது. பேதுருவும் மற்றும் யூதாவும், இந்த எச்சரிக்கை திருப்பிக்கூறப் படுமளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததென்று உணர்ந்த பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டனர் என்பதுதான் நினைவுகூற வேண்டிய முக்கிய விஷயமாக உள்ளது.

**வரைகுறிப்புகள்**

***2 பேதுரு: "கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!"***

*வாழ்த்து (1:1, 2).*

- I. *கள்ளப்போதகத்திற்கு எதிராகப் பாதுகாப்பு (1:3-21).*
  - A. *அறிவில் தொடர்ந்து வளருதல் (வசனங்கள் 3-11).*
  - B. *சத்தியத்தை ஞாபகப்படுத்துவதில் தொடர்ந்து நிலைத்திருத்தல் (வசனங்கள் 12-21).*
- II. *கள்ளப்போதகம் பற்றிய எச்சரிக்கை (2).*
  - A. *கள்ளப்போதகர்கள் இருத்தல் (வசனங்கள் 1-9).*
  - B. *கள்ளப்போதகர்கள் பற்றிய விளக்கம் (வசனங்கள் 10-16).*
  - C. *கள்ளப்போதகர்களின் முடிவு (வசனங்கள் 17-22).*
- III. *கள்ளப்போதகர்களின் உதாரணம் (3).*
  - A. *கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை மறுதலித்தல் (வசனங்கள் 1-13).*
  - B. *இரண்டாம் வருகையின் வேண்டுதல்கள்: நாம் வாழ வேண்டிய வாழ்வு (வசனங்கள் 14-18).*

***யூதா: "விசுவாசத்திற்காகப் போராடுதல்!"***

- I. *அறிமுகம் (வசனங்கள் 1-4).*
- II. *எச்சரிக்கை (வசனங்கள் 5-16).*
- III. *புத்திகூறுதல் (வசனங்கள் 17-25).*

***2 பேதுரு மற்றும் யூதா நிருபங்களில் இருந்து பாடங்கள்***

*ஒரு அறைகூவல் - புதிதாக மனம் மாறியவர்கள், விசுவாசத்தில் பக்குவம் அடைந்தவர்கள், மற்றும் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளவர்கள் என்ற - எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்துகிறது. வளருதல் என்பதே அந்த அறைகூவலாகும் (2 பேதுரு 1:5-7; 3:18). ஆவிக்குரிய வகையில் நாம் எங்கிருக்கின்றோம் என்பது நாம் எங்கு செல்கின்றோம் என்பதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை.*

*சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தின் அடிப்படை விஷயங்கள் பற்றி "சலிப்பு" அடைந்திருப்பதாக முறையிடுகின்றனர்: "இந்த விஷயங்களை நாங்கள் ஏற்கனவே கேட்டிருக்கின்றோமே!" இந்த விஷயங்கள் குறித்து மாபெரும் ஒழுங்குமுறையுடன் நினைவூட்டப்பட வேண்டியது நமக்கு அவசிய மாயிருக்கிறது (2 பேதுரு 1:12-15; 3:1). நாம் ஜாக்கிரதையாய் இராவிட்டால், மாபெரும் பழைய சத்தியங்கள் பற்றி அறியாத ஒருதலைமுறையை நாம்*

*வளர்ப்பவர்கள் ஆகிவிடுவோம், ஏனென்றால் நமது பிரசங்கியார்களும் போதகர்களும் "நவமான விஷயங்களை" (நடபடிகள் 17:21) போதிக்க வேண்டும் என்று நாம் அவர்களை நம்பி இணங்கச் செய்துவிடுவோம்.*

*கள்ளப்போதகர்கள் இன்னமும் ஏராளமாய் இருக்கின்றனர்; அதை ஒருக்காலும் சந்தேகப்பட வேண்டாம். அவர்களின் முடிவு - மற்றும் நாம் அவர்களை நோக்கி எடுத்துச் செல்லும் நிலைப்பாடு - இன்னமும் ஒரேமாதிரியாகவே உள்ளது. "விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும்!" (யூதா 1:3).*

*வேதாகமத்தில் இணைக்கப்பட்டிராத யூதப்புத்தகங்கள் இரண்டில் உள்ளவை பற்றிய (வசனங்கள் 9, 14, 15) யூதாவின் குறிப்புகளைக் குறித்துச் சிலர் கவலைப்படுகின்றனர். பவுல் அவ்வப்போது, ஏவுதல் பெற்றிராத ஆதாரமூலங்களில் இருந்து குறிப்புகளைக் காண்பித்தார் (நடபடிகள் 17:28; 1 கொரிந்தியர் 15:33; தீத்து 1:12). இது யூதாவோ அல்லது பவுலோ தங்களின் ஆதாரமூலங்கள் எல்லாவற்றையும் அங்கீகரித்தனர் என்று அர்த்தப்பட வேண்டிய அவசியம் இல்லை.*

*யூதா ஒரு அழகிய ஆசீர்வாதத்துடன் தமது நிருபத்தை முடிக்கின்றார் (வசனங்கள் 24, 25).*

---

## *அந்த நாளை மறவாதீர்கள்! (2 பேதுரு 3)*

*நினைவில் வைத்திருத்தல் என்பது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது! பேதுரு, தீர்க்கதரிசிகளும் மற்றும் அப்போஸ்தலர்களும் என்ன பேசியிருந்தனர் (3:2) என்பது பற்றி, குறிப்பாக "கர்த்தருடைய நாளைப் பற்றி" (3:10). அவர்கள் என்ன பேசியிருந்தனர் என்பது குறித்துத் தமது வாசகர்களின் நினைவை "தூண்டிவிட்டார்" (3:2). "கர்த்தருடைய நாள்" என்ற சொற்றொடர், மக்கள் அல்லது நாடுகளின்மீது நியாயத்தீர்ப்பளிக்கத் தேவனின் வருகையைக் குறிப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது (யோவேல் தீர்க்கதரிசனப் புத்தகத்தில் காணவும்). புதிய ஏற்பாட்டில் இச்சொற்றொடர், நியாயத்தீர்ப்பின் கடைசி நாளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது (1 கொரிந்தியர் 1:7, 8; 5:5; 2 கொரிந்தியர் 1:14; 2 தெசலோனிக்கேயர் 2:2; 2 பேதுரு 3:10, 12).*

*நாம் காணக்கூடிய, கேட்கக்கூடிய, தொடக்கூடிய, மற்றும் சுவைக்கக்கூடிய விஷயங்களினால் மூடப்பட்டுவிடுகின்றோம்; "மகாநாள் ஒன்று வருகிறது" என்பதையும் நாம் நினைவுகூற வேண்டியது அவசியமாய் இருக்கிறது!*

I. *அந்த நாள் பற்றிய ஆதாரத்தை நினைவில் வையுங்கள் (3:1-9, 17).*
   A. *ஏளனம் செய்பவர்கள் (2ம் அதிகாரத்தின் கள்ளப்போதகர்கள்), கிறிஸ்து திரும்பவும் வருவார் என்பதை (வசனங்கள் 3, 4) மறுதலித்துக் கொண்டிருந்தனர்.*
      1. *வாக்குத்தத்தம் செய்யப்பட்டதில் இருந்து நீண்ட தாமதம்.*
         a. *கிறிஸ்துவும் தூதர்களும் அந்த வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தியிருந்தனர் (யோவான் 14:1முதல்.; நடபடிகள் 1:11), ஆனால் முப்பது ஆண்டுகளில் கிறிஸ்து திரும்பவும் வந்திருக்கவில்லை.*
         b. *இன்றைய நாட்களில் ஒருவர், "இந்த வாக்குத்தத்தம் ஏற்படுத்தப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகள்*

ஆகிவிட்டது; அவர் திரும்பவும் வராதிருக்கிறாரே!" என்று கூறலாம்.

2. தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் உலகம், நிலையான, நிலைப்புத் தன்மையுள்ள, திடீர்ப்பிரளயத்தால் ஏற்படும் அழிவினின்று இந்த அண்டம் விடுதலையாயுள்ளது என்ற கருத்தை மறைமுகமாய் உணர்த்துகிறது.

B. இவ்விவாதங்களுக்குப் பேதுரு எதிர்முறைமையில் பதில் அளிக்கின்றார் (வசனங்கள் 5-9).

1. இந்த அண்டமானது திடீர்ப்பிரளய நிகழ்ச்சிகள் நடக்க முடியாத, "நிலையானதோ, நிலைப்புத்தன்மையுள்ளதோ" அல்ல.

a. இந்த பூமியானது பெருவெள்ளத்தினால் அழிக்கப்பட்டது (வசனம் 6). "ஜலப்பிரளயம்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையில் இருந்தே நாம் "cataclysm" ["திடீர்ப்பிரளயம்"] என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகின்றோம். பூமியானது ஒருமுறை அழிக்கப்பட்டது; அது திரும்பவும் நடைபெறக் கூடும்!

b. அடுத்தமுறை இது நெருப்பினால் அழிக்கப்படும் (வசனம் 7)! இந்த அணுயுகத்தில், மக்கள் இந்தக் கருத்தை இன்னமும் ஏளனம் செய்து கொண்டிருப்பதில்லை. (இருப்பினும், மனிதன் அல்ல, ஆனால் தேவனே, அழிவை ஏற்படுத்தும் "சுவிட்சை அழுத்துவார்.")

2. காலம் மாறியுள்ளது என்ற உண்மை, வாக்குத்தத்தம் ஒழிக்கப் பட்டது என்று நிரூபிப்பதில்லை.

a. நம்மைப்போல் தேவன் காலத்தினால்-கட்டுப்பட்டிருப்ப தில்லை (வசனம் 8; சங்கீதம் 90:4ஐக் காணவும்).

b. தாமதம் என்பது மனிதகுலத்திற்கு ஒரு கொடையாக, மனந்திரும்புவதற்காக அனைத்து வாய்ப்புகளையும் தருவதாக உள்ளது (வசனம் 9; வசனம் 15ஐக் காணவும்). எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (எசேக்கியேல் 18:23; ரோமர் 11:32; 1 தீமோத்தேயு 2:4)!

C. அந்த மகாநாள் உண்மையிலேயே நடைபெறப்போகிறது (வசனம் 10அ)! இன்றைய நாட்களில் இதை மறுக்கின்ற "அறிவார்ந்த" சிந்தைகளினுல் வழிதவறிப்போய்விடாதீர்கள் (வசனம் 17)!

II. அந்த நாளைப் பற்றிய சித்தரிப்பை நினைவில் வையுங்கள் (3:7, 10, 12, 13).

A. அது ஒரு திருடனைப்போல் எதிர்பாராத வேளையில் வரும்: (வசனம் 10அ; மத்தேயு 24:36, 43, 44; மாற்கு 12:42; 1 தெசலோனிக் கேயர் 5:2, 3; வெளிப்படுத்தின விசேஷம் 3:3; 16:15 ஆகிய வசனங் களைக் காணவும்). கிறிஸ்துவின் வருகை ஒரு குறிப்பிட்ட நாளில் இருக்கும் என்று கருத்துக் கூறுபவர்கள் எவ்வளவு மதியீனமாய் இருக்கின்றனர்!

B. *அது இணையெதுவுமற்ற அழிவின் காலமாயிருக்கும் (வசனம் 10ஆ; 7ஆ; மத்தேயு 24:35ஐக் காண்க).*

1. *வானங்கள் (சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்) மடமட வென்று அகன்று போகும் (வசனம் 12ஐக் காணவும்).*
2. *பூதங்கள் மிதமிஞ்சிய வெப்பத்தினால் (வசனம் 12) வெந்து உருகிப்போகும் (சிதைவுற்று, கரைந்து போகும் - வசனம் 11அவைக் காணவும்).*
3. *பூமியும் அதில் உள்ள கிரியைகள் யாவும் (மனிதனின் சாதனைகளும் உருவாக்கங்களும்) எரிந்துபோகும்.*

C. *அது நியாயத்தீர்ப்பின் காலமாயிருக்கும் (வசனம் 7ஆ)!*

1. *நடபடிகள் 17:30, 31; எபிரெயர் 9:27 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.*
2. *மனிதர்களின் அழிவு* (KJV: "perdition") *தேவபக்தியற்ற (மனம் வருந்தாத, வசனம் 9). அவர்கள் ஆவிக்குரிய வகையில் "அழிவார்கள்" (வசனம் 9; 2 தெசலோனிக்கேயர் 1:8ஐக் காணவும்).*

D. *ஆயத்தமாக இருப்பவர்களுக்கு, அது "புதிய வானமும் புதிய பூமியும்" வருகிற நாளாகவும் இருக்கும் (வசனம் 13; ஏசாயா 65:17ஐக் காணவும்)!*

1. *இது நீதிமான்கள் நித்தியத்திற்கும் வாழும் இடமாகும். இயேசுவின் வாக்குத்தத்தத்தின்படி (யோவான் 14:1*ff*). "*புதிய *வானமும் புதிய பூமியும்," உயிர்ப்பிக்கப்பட்டவர்களின்* ஆவிக்குரிய *உடல்கள் இருக்கும் இடமாகும் (1 கொரிந்தியர் 15). அங்கு நீதிமான்கள் வாசம்பண்ணுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 21; 22).*
2. *சிலருக்கு, அது ஒரு மகிழ்ச்சியான நாளாயிருக்கும்! மற்றவர்களுக்கோ, அது நாட்களிலேயே மிகவும் துன்பத்திற்குரியதாயிருக்கும். உங்களுக்கு அது எப்படியிருக்கும்?*

III. *அந்த நாளுக்கென்று ஆயத்தம் பண்ணுதல் அவசியமானது என்பதை நினைவில் வையுங்கள் (3:11-14, 18).*

A. *இரண்டாம் வருகை பற்றிய வேதாகமரீதியான உபதேசமானது இறையியல் உண்மையாக மாத்திரம் இருப்பதில்லை; நாம் உண்மையிலேயே விசுவாசித்தால், அது மற்ற எந்த விஷயத்தைக் காட்டிலும் அதிகமாக நமது வாழ்வில் செயல்தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்!*

B. *"நீங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்?" (வசனம் 11).*

1. *பரிசுத்தமான வாழ்க்கையை வாழும் தேவபக்தியுள்ள மக்கள் (வசனம் 11; வசனம் 14), இதற்கு நேர்மாறாக தேவபக்தியற்ற மக்கள் (வசனம் 7).*
2. *எதிர்பார்த்துக் காத்திருக்கும் நபர்கள் (வசனங்கள் 12-14அ).*
   a. *"காத்திருத்தல்" என்பது "ஆவலோடு காத்திருத்தல், எதிர்பார்த்திருத்தல்" என அர்த்தப்படுகிறது. (நாம் "அவரது*

*பிரசன்னத்தை விரும்புபவர்களாய்," இருக்க வேண்டும், 2 தீமோத்தேயு 4:8.)*

b. *முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்கள் கர்த்தர் வர வேண்டும் என்று ஊக்கத்துடன் ஜெபித்தனர் (1 கொரிந்தியர் 16:22; வெளிப்படுத்தின விசேஷம் 22:20).*

3. *சமாதானம் நிறைந்த நபர்கள் (வசனம் 14).*
4. *வளர்ந்த, பக்குவப்பட்ட நபர்கள் (வசனம் 18).*

*முடிவுரை*

A. *நீங்கள் கிறிஸ்தவராக இல்லாதிருந்தால், அல்லது ஒரு அவிசுவாச மான கிறிஸ்தவர்களாய் இருந்தால், கர்த்தர் உங்களை அன்புகூருவ தாலும், நீங்கள் பதில்செயல் செய்வதற்கு உங்களுக்கு இன்னொரு வாய்ப்பளிப்பதற்காகவுமே (வசனம் 9) தமது வருகையைத் தாமதப்படுத்துகின்றார்! நீங்கள் மனந்திரும்புதலுக்குள் வந்தால் இன்றே இரட்சிக்கப்படமுடியும் (லூக்கா 13:3; நடபடிகள் 17:30; 2:38; 8:22, 23)!*

B. *நாம் பாடும் ஒரு பாடலில் உள்ள, "வருவிருக்கும் நாளுக்கு நீர் ஆயத்தமாய் இருக்கின்றீர்களா?" என்ற வரிகளைக் கவனியுங்கள்.*

# 22

# 1 யோவான்: நித்திய ஜீவனின் உறுதிப்பாடு

**தலைப்பு**

*யோவானின் முதல் நிருபம் இதை எழுதிய அப்போஸ்தலரான யோவானுடைய பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது. அவர் இப்புத்தகத்தில் தம்மை அடையாளப்படுத்திக்கொள்வதில்லை, ஆனால் தேவனுடைய இரண்டு சீஷர்களான போலிகார்ப்பும் பாப்பியஸூம், இந்தப் புத்தகம் அவரால் எழுதப்பட்டதென்று குறிப்பிட்டு இதிலிருந்து மேற்கோள் காண்பித்துள்ளனர்.*

**பின்னணி**

*யோவான் அனேகமாக தமது சுவிசேஷ விவரத்தை எழுதி முடித்த பின்பு 1, 2, 3 யோவான் நிருபங்களை எழுதியிருக்கலாம். அவர் கிறிஸ்துவின்மீது விசுவாசத்தை ஏற்படுத்த (அல்லது பலப்படுத்த), இயேசுவின் வாழ்வைப் பற்றி எழுதினார் (யோவான் 20:31). அவர் விசுவாசிகள் பூரணத்தன்மைக்கு (அல்லது பக்குவத்திற்கு) கடந்து செல்ல உதவுவதற்காக, அதாவது அவர்களின் சந்தோஷம் "பூரணப்படுவதற்காக" (1:4; 5:13) 1 யோவான் நிருபத்தை எழுதினார்.*

*யோவானின் சுவிசேஷத்தில் "விசுவாசித்தல்" என்பது - திறவுகோல் வார்த்தையாக உள்ளது; 1 யோவானில் திறவுகோல் வார்த்தையாக உள்ளது, "அறிதல்" என்பதாகும். "அறிதல்" என்பதும் அதிலிருந்து தொடங்கும் மற்ற வார்த்தைகளும் முப்பது முதல் நாற்பது தடவைகள் இப்புத்தகத்தில் காணப்படுகின்றன. நிச்சயமான உறுதித்தன்மை என்பதின் மேல் வலியுறுத்தம் உள்ளது.*

*"அறிதல்" என்ற வார்த்தையை யோவான் தொடர்ந்து பயன்படுத்துதலானது, வார்த்தைகளின்மீது விளையாட்டாக உள்ளது. "அறிதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தை gnosis என்பதாகும், மற்றும் யோவான் தமது நாட்களில் இருந்த அறிவுசார்பியத்திற்கு எதிராக யுத்தம் செய்கின்றார். அறிவுசார்பியத்தைக் கொண்டிருந்தவர்கள், விசேஷித்த அறிவைக் கொண்டிருந்ததாக உரிமைகோரினர் (யோவான் மற்றும் கொலோசெயருக்கு எழுதிய நிருபம் ஆகியவற்றிற்கான குறிப்புகளைக் காணவும்).*

*அறிவுசார்பியக் கொள்கையாளர்களில் பல வகையினர் இருந்தனர், ஆனால் அவர்கள் யாவருமே பருப்பொருளைத் துன்மார்க்கமானது என்று நினைத்தனர். இது அவர்களுக்கு (இயேசுவின்) திருஅவதாரம் பற்றி வினோதமான கண்ணோட்டத்தைக் கொடுத்தது. ஒரு குழுவானது, கிறிஸ்து இயேசு என்ற மனிதரைக் கட்டுப்படுத்துபவராக மாத்திரம் இருந்தார் மற்றும் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு அவரை விட்டுப் பிரிந்தார் என்று நம்பியது. இன்னொரு குழுவானது, கிறிஸ்து ஒரு மாயத்தோற்றமான உடலைக் கொண்டிருந்தார், அவர் பாடுபடுவதாகத் தோற்றம் மாத்திரம் அளித்தார் என்று கூறியது. யோவான் சுவிசேஷத்தில் போன்றே 1 யோவான் நிருபத்திலும், கிறிஸ்து மாம்சத்தில் வந்தார் என்பதை இந்த அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார் (4:2, 3;*

*2 யோவான் 7ஐக் காணவும்).*

*பருப்பொருள் துன்மார்க்கமானது/சரீரம் பொல்லாதது என்ற கண்ணோட்டம், இந்தக் கள்ளப்போதகர்களுக்குப் பாவம் பற்றியும் ஒரு வினோதமான கண்ணோட்டத்தைக் கொடுத்தது. சிலர், தங்கள் வாழ்வில் உடலுக்கு சந்தோஷம் அளிக்கக்கூடிய எதையும் நீக்கிப்போட முயற்சித்தல் என்ற ஒரு முனைப் பகுதி வரைக்கும் சென்றனர் (கொலோசெயர் 2:21ஐக் கவனிக்கவும்). இருப்பினும், பெரும்பான்மையானவர்கள் இதற்கு நேர் எதிரான முனைப்பகுதிகளுக்குச் சென்றனர், அவர்கள் மாம்சத்தின் செயல்கள் எதுவும் ஆத்துமாவைப் பாதிப்பதில்லை என்று கூறினர். இவ்விதமாக யோவான், தேவ னுக்குக் கீழ்ப்படிதல் (2:4) மற்றும் தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர் (3:10).*

*இது வயது முதிர்ந்த கிறிஸ்தவர், ஆவிக்குரிய வகையில் தமது பிள்ளை களாய் இருந்தவர்களுக்கு எழுதிய வலிவார்ந்த கடிதம் ஆகும். இது அன்பினால் நிறைந்துள்ள புத்தகமாகும் (இவ்வார்த்தை இதன் ஐந்து அதிகாரங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது), ஆனால் இது மிகவும் நேரடியான புத்தகமாகவும் உள்ளது. இது ஆசியாவில் இருந்த சபைகளில் சுற்றுக்கு விடப்படுதலை நோக்கங்கொண்டு இருந்திருக்கலாம். இது அனேக மாக எபேசு நகரில் இருந்து எழுதப்பட்டிருக்கலாம்; கி.பி. 90 என்பது, இதை எழுதிய காலமாகும் (யோவான் சுவிசேஷத்திற்கான குறிப்புகளைக் காணவும்). இந்தப் புத்தகத்தில் யோவான், உபத்திரவத்தின்கீழ் சகிப்புத்தன்மையுடன் இருத்தலைப்பற்றிக் குறிப்பிடுவதில்லையாதலால், இது அனேகமாக, கி.பி. 94-95ல் டொமீஷியனின்கீழ் உபத்திரவம் தொடங்குவதற்குச் சற்றே முன்னதாக நிலவிய சமாதானமான காலகட்டத்தில் எழுதப்பட்டிருக்கலாம்.*

***வரைகுறிப்பு: நித்திய ஜீவனின் உறுதிப்பாடு (5:13)***

*அறிமுகம் (1:1-4).*

- I. *ஒளியில் நடப்பதன்மூலம் உறுதிப்பாடு (1:5-2:29).*
  - A. *தேவன் ஒளியாய் இருக்கின்றார் (1:5-7; 2:8-11ஐக் காணவும்).*
  - B. *பின்வருபவற்றின்மீது வலியுறுத்தம்:*
    1. *கட்டளைகள் (2:3-8).*
    2. *பாராட்டுரைகள் (2:12-14).*
- II. *அன்பில் நிலைத்திருப்பதன்மூலம் உறுதிப்பாடு (3; 4).*
  - A. *நடைமுறை அன்பு (3:11முதல்.).*
  - B. *பூரணமான அன்பு (4:7முதல்.); தேவனுடைய அன்பு (4:8, 16).*
- III. *விசுவாசத்தைச் செயல்படுத்துதல்மூலம் உறுதிப்பாடு (5:1-12).*

*முடிவுரை: வாழ்வின் உறுதிப்பாடுகள் (5:13-20).*

***1 யோவான் நிருபத்தில் இருந்து பாடங்கள்***

*தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில், நாம் ஒருக்காலும் மனநிறைவடைபவர்கள் ஆகக்கூடாது (1 கொரிந்தியர் 10:12), ஆனால் நாம் - நமது சுயத்தில் அல்ல, ஆனால் தேவனுடைய கிருபையில் - அமைதியான நம்பிக்கையினால் பண்புபடுத்தப்பட வேண்டும். பவுல், "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, ... கர்த்தர் அந்நாளிலே அதை*

எனக்குத் தந்தருளுவார்" என்று கூறினார் (2 தீமோத்தேயு 4:8).

"... நாமும் ஒளியிலே நடந்தால் ... இயேசுகிறிஸ்துவின் இரத்தம் ... சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1:7) என்று அறிந்திருப்பதில் நாம் தைரியம் கொண்டிருக்க முடியும். "ஒளியில் நடத்தல்" என்பது குறைவின்றி மற்றும் பரிபூரணமாக வாழுதல் என்று அர்த்தப்படுவதில்லை (அப்படி அர்த்தப்படுமென்றால், நம்மிடத்தில் சுத்திகரிப்பதற்குப் பாவம் எதுவும் இராது). மாறாக, அது கர்த்தருக்குக் கீழ்ப்படுவதில் அமைந்திருக்கும் இருதயத்தின் விளைவான, ஒரு வாழ்க்கைமுறையைக் குறிக்கிறது.

மனச்சான்று மென்மையாக இருந்தால், சில வேளைகளில் நாம் குற்றம் பற்றி உணர்வடைவோம், ஆனால் விதிப்படி, தேவன் தமக்கு முன்பாக நாம் தைரியம் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகின்றார் (வசனம் 21). அவரைப் பிரியப்படுத்துவதே நமது விருப்பமாய் இருக்கிறது என்றால், "[கிருபையும் இரக்கமும் நிறைந்துள்ளன] தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராய் இருக்கிறார்" (3:20) என்பதை நினைவில் வைத்திருத்தல் முக்கிய மானதாக உள்ளது. பரலோகத்திற்குச் செல்லும் பயணத்தை நாம் மகிழ்ச்சியுடன் அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்!

## நாம் பாவம் செய்யும்போது (1 யோவான் 1:5-2:3)

கிறிஸ்தவர்கள் பாவம் செய்கின்றனர் (1:8, 10). பாவம் என்றால் என்ன? இதைப்பற்றி யோவான் 1 யோவான் 2:16; 3:4; 5:17ல் நமக்குக் கூறுகின்றார். இனியும் பாவம் செய்துகொண்டிருப்பதில்லை என்று சிலர் உரிமை கோருகின்றனர் என்று காணப்படுகிறது. இன்றைய நாட்களில் மக்களில் சிலர் பாவம் பற்றி உணர்வற்று இருக்கின்றனர்; அவர்கள் பாவத்தை ஒரு வியாதி, சமூகத்திற்கெதிரான நடக்கை, தவறுகள், உளவியல் பிரச்சனைகள் என்றெல்லாம் அழைக்கின்றனர், ஆனால் அதை பா-வ-ம் என்று அழைப்ப தில்லை. நாம் பாவம் செய்வோமா என்பதல்ல, ஆனால் நாம் அதை எவ்வாறு கையாளுவோம் என்பதே கேள்வியாக உள்ளது (ரோமர் 3:23; 6:23). நாம் ஆர்வமற்றவர்களாகவோ ("நான்செய்தது அவ்வளவு மோசமானதல்ல") அல்லது ஊக்கம் குறைந்தவர்களாகவோ ("நான் முயற்சிசெய்ய வேண்டிய அவசியம் இல்லை") இருக்க வேண்டும் என்று சாத்தான் விரும்புகின்றான். இந்த ஆர்வ மற்ற நிலை (2:1) மற்றும் ஊக்கம் குறைந்தநிலை (1:4) ஆகியவற்றை யோவான் இங்கு கையாளுகின்றார்.

நாம் பாவம் செய்யும்போது, மூன்று விஷயங்களை நாம் நினைவில் வைக்க வேண்டியுள்ளது:

I. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து சுத்திகரிக்கிறது என்பதை நினைவில் வையுங்கள் (1:7).

   A. நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது, கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் சுத்திகரிக்கப்பட்டதையும் (எபிரெயர் 9:22; 10:4, 10; வெளிப்படுத்தின விசேஷம் 1:5), நாம் கிறிஸ்துவின் இரத்தத்துடன் தொடர்புகொண்டதையும் (ரோமர் 6:3-6) பெரும்பான்மையானவர்கள் உணர்ந்தறிகின்றோம். நமது பாவங்கள் கழுவப்பட்டன என்பதை அறிதல் எவ்வளவு அற்புத மான விஷயமாய் இருக்கிறது (நடபடிகள் 22:16)! இருப்பினும்,

*சிலர் கிறிஸ்துவின் இரத்தம் நம்மைத் தொடர்ந்து சுத்திகரிக்கிறது என்ற வகையில் நாம் மன்னிப்பின் அற்புதமான உணர்வைத் தொடர்ந்து பெறமுடியும் என்பதை உனர்ந்தறிவதில்லை: 1:7ம் வசனம் தொடர்ந்து நடைபெறும் செயல்பாட்டைச் சுட்டிக் காண்பிக்கும் நிகழ்கால வினைச்சொல்லைப் பயன்படுத்துகிறது!*

B. *இதற்கு ஒரு நிபந்தனை உள்ளது: "நாமும் ஒளியிலே நடந்தால்" (வசனம் 7). இது எதனை அர்த்தப்படுத்துகிறது?*

   1. *"தேவன் ஒளியாயிருக்கின்றார்" (1:5; சங்கீதம் 27:1ஐக் காணவும்); நாம் தேவனுடன் நடப்பது அவசியமாயிருக்கிறது. இயேசுவும் ஒளியாயிருக்கிறார் (யோவான் 1:5-9; 8:12); நாம் இயேசுவுடன் நடப்பது அவசியமாயிருக்கிறது. ஒளி என்பது தேவனுடைய வசனத்தில் இருந்து வருகிறது (சங்கீதம் 119:105, 130). நாம் வேதாகமத்தின்படி நடப்பது அவசிய மாய் இருக்கிறது (ஆமோஸ் 3:3ஐக் கவனிக்கவும்).*
   2. *"நடத்தல்" என்பது நாம் வாழும் வழியைக் குறிக்கிறது. இன்றைய நாட்களில் நாம் "வாழ்வுமுறை" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றோம். தேவனுடைய வசனத்தின் வெளிச் சத்தில் நடத்தல் என்பது தேவன் நம்மால் இயன்றஅளவு எவ்வளவு சிறப்பாகச் செயல்படவேண்டு மென்று விரும்புகின் றாரோ, அதைச் செய்தலாகும் (2 தீமோத் தேயு 2:15அ; எபிரெயர் 11:6; பிலிப்பியர் 3:13, 14). நாம் பரிபூரணப்பட்டவர்களாய் இருக்கமாட்டோம், ஆனால் நாம் எழுந்து தொடர்ந்து நடக்க வேண்டியது அவசியமாகும். (இயேசுவின்) இரத்தம் தொடர்ந்து நம்மைச் சுத்திகரிக்கும்!*

II. *தேவன் நமது பாவங்களை மன்னிப்பதற்கு உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதை நினைவில் வையுங்கள் (1:9).*

A. *இது முந்திய வாக்குத்தத்தத்தில் இருந்து மாறுபட்ட வலியுறுத்தம் கொண்டுள்ளது. சிலர், "நான் மன்னிக்கப்பட்டேன் என்பதை எவ்வாறு அறிவது?" என்று கேட்கின்றனர். தேவன் உண்மையுள்ள வராகவும் நீதியுள்ளவராகவும் இருக்கின்றார்!*

   1. *தேவன் உண்மையுள்ளவராய் இருக்கின்றார்; நீங்கள் அவரை நம்ப முடியும் (1:7).*
   2. *தேவன் நீதியுள்ளவராய் இருக்கின்றார்; அவர் நியாயமுள்ள வராய் இருக்கின்றார். நமது பாவங்களுக்காக இயேசு மரித்த போது, தேவனுடைய நீதி திருப்திப்படுத்தப்பட்டது (2:2ல் உள்ள "நிவிர்த்தி செய்தல்" என்பதன் அர்த்தம்; அதுவே). தேவன் தமது சகல நியாயத்திலும் நமது பாவங்களை மன்னிக்க முடியும்! (மன்னித்தல் பற்றிக் கவலைப்படுகின்ற கிறிஸ்தவர், இயேசுவின் மரணம் போதுமானதா என்று சந்தேகப்படுகின்றார்!)*

B. *இதற்கு ஒரு நிபந்தனை உள்ளது: "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்" (வசனம் 9). மக்கள் தங்கள் பாவங்களை மறைக்க, மறக்க, அவற்றிற்குச் சாக்குபோக்குக்கூற, அவற்றிலிருந்து*

*தப்பியோட முயற்சி செய்கின்றனர். நாம் அவற்றை அறிக்கையிட வேண்டியது அவசியம் என்று யோவான் கூறுகின்றார் (நீதிமொழிகள் 28:13ஐக் கவனிக்கவும்).*

1. *"அறிக்கையிடுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கக் கூட்டு வார்த்தை, நாம் பாவம் செய்துள்ளதை ஒப்புக்கொள்வது என்று மாத்திரம் அர்த்தப்படுவதில்லை; அது "சிலவற்றைக் கூறுதல்" - தேவனைப் போன்றே கூறுதல் - என்று அர்த்தப்படு கிறது. நாம் பாவத்தை தேவன் பார்ப்பது போன்றே பார்க்க வேண்டும், அது எவ்வளவு பயங்கர மானது என்பதை உணர்ந்தறிந்து அந்தப் பாவத்தில் இருந்து திரும்ப வேண்டியது என்பதே நாம் செய்ய வேண்டிய செயல் என்பதையும் உணர்ந்தறிய வேண்டும் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16).*
2. *"நான் வருந்துகிறேன்" என்று வெற்று வார்த்தைகளைக் கூறி, அது தன்னைக் குறித்து அக்கரை எடுத்துக்கொள்ளும் என்று நினைத்தல் பற்றி யோவான் பேசுவதில்லை. முதலில், ஒளியில் நடக்கப் பிரயாசப்படுதல், இரண்டாவது, நாம் அவ்வாறு செய்யத்தவறுகிறபோது இருதயம் உடைந்திருத்தல் ஆகிய வற்றையே அவர் அர்த்தப்படுத்துகின்றார்!*

III. *நமக்காகப் பிதாவிடம் பரிந்துபேச ஒருவர் இருக்கின்றார் என்பதை நினைவில் வையுங்கள் (2:1).*

A. *சுத்திகரிக்கப்படுதல் மற்றும் மன்னிக்கப்படுதல் ஆகியவற்றின்மீது யோவானின் வலியுறுத்தத்திலிருந்து, சிலர் தேவன் மன்னித்து விடுவார் என்பதால் பாவம் செய்வது பரவாயில்லை என்று சிலர் புரிந்து கொள்ளக்கூடும். இதை வசனம் 1அவில் யோவான் மறுத்துரைக்கின்றார். இங்கு கிரேக்க மொழியில் நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப்படுவதில்லை, ஆனால் ஒருமுறை மாத்திரம் நடைபெறும் செயலைக் குறிக்கும் வினைச்சொல் பயன் படுத்தப்படுகிறது. யோவான், "நீங்கள் ஒரு பாவம் செய்வதைக் கூட நான் விரும்புவதில்லை!" என்று கூறுகிறார். இதற்கு மறுபுறத்தில், அவர் நாம் ஒளியில் நடந்துகொண்டிருப்பினும் (தொடர்ந்து நடக்கும் செயல்), நாம் பாவம் செய்வோம் (ஒரு முறை பாவம் செய்தல், இது பாவம் நிறைந்த வாழ்வுமுறையாக இருப்பதில்லை) என்பதை அவர் அறிந்திருக்கின்றார். இங்கு அவரது மூன்றாவது ஊக்கமூட்டும் கருத்துள்ளது: "நாம் ஒரு பரிந்துரையாளரைக் கொண்டிருக்கின்றோம்."*

1. *"பரிந்துரையாளர்" என்பது உதவிசெய்ய "உடன் அழைக்கப்படும் ஒருவர்" என அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையில் இருந்து வருவ தாகும். இது நீதிமன் றங்களில் வாதிடும் வழக்கறிஞர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.*
2. *இயேசு நமக்காக வேண்டுதல் செய்கின்றார் (ரோமர் 8:34; எபிரெயர் 4:15, 16)!*

B. *மீண்டுமாக இதற்கு ஒரு நிபந்தனை உள்ளது: "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டால்" (2:3).*

1. *தேவனுடன் நமது உறவுமுறை சரியான வகையில் உள்ளது என்பதை நாம் எவ்வாறு அறியமுடியும்? நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பாக, அவரது சித்தத்தின்படி செய்வதால் (2:4, 5).*
2. *நம் இருதயங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்வதில் மையங்கொண்டுள்ளனவா? அடிமையானவன் கீழ்ப்படிய வேண்டும் என்பதால் அதைச் செய்கின்றான்; வேலையாட்கள் கீழ்ப்படிய வேண்டியது அவசியம் என்பதால் அதைச் செய் கின்றனர்; பக்குவம் அடைந்த தேவனுடைய பிள்ளையானவர், தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்புவதால் அதைச் செய்கின்றார்.*

*முடிவுரை*

*இந்த வாக்குத்தத்தங்கள் நமக்குக் கொடுக்கும் தைரியம்தான் என்ன! இந்த வாக்குத்தத்தங்கள் தேவனுக்கென்று வாழ அர்ப்பணித்துள்ள தேவனு டைய பிள்ளைக்கு மாத்திரமே தரப்பட்டுள்ளன. நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவராயிருக்கின்றீர்களா? நீங்கள் அவ்வாறாவது அவசியமாகும்!*

# 23

# 2 மற்றும் 3 யோவான்: கிறிஸ்தவ உபசரிப்பில் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை

***தலைப்பு***

*இரண்டு மற்றும் மூன்று யோவானின் நிருபங்கள் அவற்றை எழுதிய வரின் பெயரைக்கொண்டு அழைக்கப்படுகின்றன. "அன்பான அப்போஸ் தலர்தான்" இந்த நிருபங்களை எழுதினார் என்று தொடக்ககால எழுத்தாளர்கள் அடையாளப்படுத்துகின்றனர்.*

***பின்னணி***

*யோவான் சுவிசேஷமும், 1, 2, 3 யோவான் நிருபங்களும் ஒரே நபரால் எழுதப்பட்டன என்பதை சாட்சியங்களின் வரிசையொன்று நிரூபிக்கிறது. முதலாவது, யோவான் சுவிசேஷமும் 1 யோவான் நிருபமும் ஒரே எழுத்தாளரால் எழுதப்பட்டன (இவற்றுடன் யோவான் 1:1 மற்றும் 1 யோவான் 1:1). இரண்டாவது, ஒரே தனிநபர் 1 மற்றும் 2 யோவான் நிருபங்களை எழுதினார்: இவ்விரு புத்தகங்களுமே வயதுமுதிர்ந்த ஒரு நபரால் எழுதப்பட்டன, இவ்விரண்டுமே அறிவுசார்பியம் பற்றிக் கவலைப்படுகின்றன (1 யோவான் நிருபம் பற்றி குறிப்புகளைக் காணவும்), மற்றும் இவை இரண்டுமே ஒரேவித மான வார்த்தை களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்துகின்றன. மூன்றாவது, ஒரே நபர் 2 மற்றும் 3 யோவான் நிருபங்களை எழுதினார் (இவற்றுடன் 2 யோவான் 1, 12 மற்றும் 3 யோவான் 1, 13, 14).*

*2 மற்றும் 3 யோவான் ஆகிய இரு நிருபங்களுமே தனிப்பட்ட கடிதங்களாயிருக்கின்றன; அவைகள் 1 யோவான் நிருபத்தில் எடுத்துரைக் கப்பட்டவற்றில் சில ஆய்வுபொருள்களைக் கையாளுகின்றன. இவைகள் அனேகமாக ஒரே காலகட்டத்தில் ஒரே இடத்தில் இருந்து எழுதப்பட் டிருக்கலாம்: எபேசு நகரில் கி.பி. சுமார் 90ல் (யோவான் சுவிசேஷம் மற்றும் 1 யோவான் நிருபம் ஆகியவற்றிற்கான குறிப்புகளைக் காணவும்). இவைகள் 1 யோவான் நிருபத்துடன் அனுப்பப்பட்டிருக்கலாம். இந்த நிருபங்கள், தொடக்ககால சபையில் இருந்த நெருங்கிய உறவுமுறை பற்றிய குறிப்புகளை நமக்குத் தருகின்றன.*

*இரண்டு யோவான் நிருபம் "தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்கு" எழுதப்பட்டது. இது சபையைக் குறிப்பதற்கு உருவகநடையாக இருக்கலாம் (எபேசியர் 5:23, 24, 29-32); ஆனால் இந்தக் கடிதத்தின் மென்மையான தனிப்பட்ட தொனியானது, இது ஒரு கிறிஸ்தவத் தாயாக, ஒருவேளை எபேசுவுக்கு அருகில் வாழ்ந்தவர்களாக இருக்கலாம் என்று காண்பிக்கிறது. சிலர், "தெரிந்துகொள்ளப்பட்ட" (eklekte) அல்லது "அம்மாள்" (kuria) என்ற வார்த்தையை ஒரு தனிநபரின் பெயராக்க* ("Electa" *அல்லது* "Cyria") *முயற்சி செய்கின்றனர். "தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாள்" என்பது ஒரு*

*தனிநபராயிருந்தால், புதிய ஏற்பாட்டில் இது ஒன்று மாத்திரமே ஒரு பெண்ணுக்கு எழுதப்பட்ட கடிதமாயிருக்கிறது.*

*மூன்று யோவான், "காயு" என்ற நபருக்கு எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டில் காயு என்ற பெயரில் குறைந்தபட்சம் மூன்று பேர் இருக்கின்றனர் (நடபடிகள் 19:29; 20:4, 5; ரோமர் 16:23). இவர்களில் எவராவது, 3 யோவான் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டார்களா என்பது நமக்குத் தெரியவில்லை, ஆனால் இவர் ஒரு நல்ல கிறிஸ்தவர் என்பது தெளிவாகிறது.*

*"உபசரிப்பு" என்பது இவ்விரு புத்தகங்களையும் இணைக்கிற ஆய்வுக் கருத்தாகும். உபசரிப்பு என்பது புதிய ஏற்பாட்டுக்கிறிஸ்தவத்தின் வலிவார்ந்த பகுதியாக இருந்தது (எபிரெயர் 13:1, 2). பயணத்தின் சிரமங்கள் மற்றும் பொதுவான தங்கும் இடங்களின் வருந்தத்தக்கநிலை ஆகியவை, உபசரிப்பை இரு மடங்கு முக்கியமானவையாக்கின. ஆதரித்தல் மற்றும் கவனித்தல் ஆகியவற்றின் இந்த வெளிப்பாடு, பயணம் செய்கின்ற சுவிசேஷ ஊழியர்களுக்கு விசேஷமாகத் தேவைப்பட்டது (மத்தேயு 10:11-13ஐக் கவனிக்கவும்). இவ்விரு கடிதங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்களின் உபசரிப்பினிமித்தம் குறிப்பிடத்தக்கவர்களாய் இருந்தனர் (3 யோவான் 5-8). "தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளை," உண்மையில், கள்ளப்போதகர்களை உபசரித்தல் பற்றி எச்சரிக்க வேண்டியிருந்தது (2 யோவான் 9-11). அன்றாடம் அதிகம் தனித்துவமற்றதாகிவரும் உலகத்தில், உபசரிப்பு பற்றிய வேதாகம வலியுறுத்தம் புத்துணர்வூட்டுவதாயிருக்கிறது.*

***2 யோவான் நிருபத்தின் வரைகுறிப்பு***

I. *யோவான் தொடங்குகின்றார் (வசனங்கள் 1-3).*
II. *யோவான் பாராட்டுகின்றார் (வசனம் 4).*
III. *யோவான் கட்டளையிடுகின்றார் (வசனங்கள் 5, 6).*
  A. *அன்பு கூருவதற்கு.*
  B. *கீழ்ப்படிதலுக்கு.*
IV. *யோவான் எச்சரிக்கின்றார் (வசனங்கள் 7-11).*
  A. *கள்ளப்போதகர்களை அடையாளம் கண்டுகொள்ளுங்கள்.*
  B. *தவறை மறுத்துரையுங்கள்.*
V. *யோவான் முடிக்கின்றார் (வசனங்கள் 12, 13).*

***2 யோவான் நிருபத்தில் இருந்து பாடங்கள்***

*அறிவுசார்பியக் கொள்கையாளர்கள் "தொடக்ககால நவீனவியலாளர்கள்" என்று அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேதவசனத்தின் வரலாற்று உண்மை களையும் ஒழுக்கக் கட்டளைகளையும் நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளாதி ருந்தனர். அவர்கள் மனிதனின் ஆவிக்குரிய நன்மைக்கு அவசியமானயாவும் வேதவசனங்களில் அடங்கியுள்ளன என்பதை நம்பாதிருந்தனர். துரதிர்ஷ்டவச மாக, அவர்கள் தங்கள் நவீன எதிர்க்கொள்கைகளைக் கொண்டிருந்தனர்.*

*இன்றைய நாட்களில் உணர்வியலாளர்கள், கிறிஸ்து திரும்பி வருவதற்கு முன்பு வினோதமான உருவங்கொண்ட "அந்திகிறிஸ்து," என்பவன் வருவான் என்று பேசுகின்றனர். இருப்பினும், யோவான், இந்தச் சொற்றொடர் ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின்பு வாழவிருந்த தனிநபர் ஒருவரையல்ல, ஆனால் தமது*

*நாட்களில் இருந்த, மாம்சத்தில் வந்த கிறிஸ்துவை மறுதலிக்கும் அறிவுச்சார்ந்த கொள்கையாளர்கள் யாவரையும் குறித்தது என்பதைத் தெளிவாக்கினார் (வசனம் 7; 1 யோவான் 2:18, 19, 22; 4:1-6ஐக் காணவும்).*

*வசனங்கள் 9-11ஐ, நாம் இருதயத்தில் வைக்க வேண்டியது அவசிய மாயிருக்கிறது. தவறான போதனைகளை மன்னித்து விட்டுவிடுகின்றோம் என்ற மனப்பதிவை ஏற்படுத்தும் எந்த ஒரு விஷயத்தையும் நாம் ஒருக்காலும் செய்யக்கூடாது.*

*2 யோவான் 12 மற்றும் 3 யோவான் 13, 14 ஆகிய வசனங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள் (புதிய ஏற்பாட்டின் இருபத்தியோரு நிருபங்களினால் மெய்ப்பிக்கப்படுகின்றபடி), கடிதங்கள் எழுதுவதில் மதிப்புள்ளது, ஆனால் சில விஷயங்களை முகம் முகமாய் வெளிப்படுத்துவது மிகமேன்மையானதாக உள்ளது.*

***3 யோவான் நிருபத்திற்கான வரைகுறிப்பும் பாடங்களும்***

*பிரசங்க வரைகுறிப்பைக் காணவும்.*

## ஊக்கமூட்டுவதற்கு ஒரு அஞ்சலட்டை (3 யோவான்)

*வேதாகமத்தில் ஒரு அதிகாரம் கொண்ட ஐந்து புத்தகங்கள் அடங்கி யுள்ளன: ஒன்று பழைய ஏற்பாட்டிலும் (ஒபதியா) நான்கு புதிய ஏற்பாட்டிலும் (பிலேமோன், 2 மற்றும் 3 யோவான், யூதா) உள்ளன. தொடக்ககால வசனங்களில், 3 யோவான் நிருபம் மிகவும் சிறியதாயிருந்தது. யாரோ ஒருவர், இது ஒரு "கடிதம்" என்பதற்குப் பதில், ஒரு "அஞ்சலட்டை" என்று அழைக்கப்பட வேண்டும் என்று கருத்துத்தெரிவித்துள்ளார். யோவான் எழுதிய இந்த மூன்றாம் நிருபம், அப்போஸ்தலரான யோவானிடத்திலிருந்து காயு என்ற பெயர் கொண்ட ஒரு நண்பருக்கு வந்த கடிதமாக உள்ளது. இந்த நெருங்கிய குறிப்பு மூன்று மனிதர்கள்மீது மையங்கொண்டுள்ளது.*

I. *காயுவின் வளமை (வசனங்கள் 1-8).*
   A. *சத்தியத்திற்காக ஊழியம் செய்பவர்களை ஊக்கப்படுத்துவதில் யோவான் நம்பிக்கை கொண்டிருந்தார்.*
      1. *உள்ளூர் சபையில் நடந்துகொண்டிருந்த விஷயங்கள் பற்றி காயு மனவேதனையுற்றார் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை (வசனங்கள் 9, 10).*
      2. *பிரச்சனையைக் கையாள்வதற்கு முன், யோவான் தமது நண்பரை ஊக்கப்படுத்தினார்.*
         a. *அவர் காயுவின்மீது தாம் கொண்டிருந்த அன்பை வெளிப் படுத்தினார் (வசனங்கள் 1, 2, 5, 11).*
         b. *அவர் காயுவுக்காக ஜெபித்தார் (வசனம் 2).*
         c. *அவர் காயு "சத்தியத்திலே நடந்து கொண்டிருப்பதற்காக," பொதுவாகவும் (வசனங்கள் 3-6அ), பயணம் செய்யும் சுவிசேஷ ஊழியர்களுக்கு அவர் காண்பித்த உபசரிப்பிற் காகக் குறிப்பாகவும், அவரைப் பாராட்டினார் (எபிரெயர் 13:1, 2).*
            (1) *"அவர்களை வழிவிட்டனுப்புதல்" என்பது,*

அவர்களின் பயணத்தின்போது அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் பிறபொருட்களைக் கொடுத்தல் என்று அர்த்தப்படுகிறது (1 கொரிந்தியர் 16:6; தீத்து 3:13).

(2) தவறுகளைப் போதிக்கின்றவர்களை நாம் இவ்வாறு ஆதரிக்கக்கூடாது (2 யோவான் 9-11); சத்தியத்தைப் போதிக்கின்றவர்களை நாம் ஆதரிக்க வேண்டும் (லூக்கா 10:7; கலாத்தியர் 6:6-10); 1 கொரிந்தியர் 9:7-11).

d. அவர் காயுவிடம் உபசரிப்பைத் தொடர்ந்து காண்பிக்கும்படி அறைகூவல் விடுத்தார் (வசனங்கள் 6ஆ-8).

B. கர்த்தருக்கு ஊழியம் செய்ய முயற்சிப்பதில் ஊக்கம் இழந்து போகின்ற மக்களை நாம் அறிகிறோம். அவர்களை நாம் எப்போதும் ஊக்கப்படுத்த வேண்டும்!

II. தியோத்திரேப்புவின் மேட்டிமை (வசனங்கள் 9, 10).

A. சத்தியத்தை எதிர்ப்பவர்களைக் கடிந்துரைப்பதில் யோவான் நம்பிக்கை கொண்டிருந்தார்.

1. புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் எல்லாம் நன்றாயிருந்தது, அதாவது, ஒவ்வொரு உறுப்பினரும் மற்ற உறுப்பினர்களால் அன்புகூரப்பட்டு ஆதரிக்கப்பட்டிருந்தார் என்று நினைக்கும்படி நாம் சோதிக்கப்படலாம்; ஆனால் விஷயம் அவ்வாறு இருக்கவில்லை. மக்கள் இருக்கும் இடங்களில், எல்லாம் பிரச்சனை இருக்கிறது.

2. காயு ஆராதித்துக்கொண்டிருந்த சபைக்குழுமம், தியோத்திரேப்பு என்ற பெயருடைய "பிரசங்கரீதியான புல்டோசரை" கொண்டிருந்தது.

a. அவர் "முதன்மையாய் இருக்க விரும்பினார்"; அவர் முதல் நபராய் இருக்க விரும்பினார்; அவர் தமது சொந்தவழியைக் கொண்டிருந்தார் (மத்தேயு 18:1முதல்.; 20:25-28; 23:6ஐக் காணவும்).

b. காயுவைப் போலின்றி, அவர் உபசரிப்பு இல்லாதவராயிருந்தார் (லூக்கா 10:16ஐக் காணவும்). அவர் யோவானுக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டைக் கொண்டுவந்து சபை ஒழுங்கு நடவடிக்கையை, தம்முடன் கருத்து ஒருமிக்காதவர்களை விலக்கி வைப்பதற்குத் தனிப்பட்ட ஆயுதமாகப் பயன்படுத்திக்கொண்டார்.

c. "நான் வந்தால், அவன் ... செய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்வேன்" என்று யோவான் கூறினார்.

B. துரதிர்ஷ்டவசமாக, சிலர் "சபை முதலாளிகளாய்" இருக்க விரும்புகின்றனர். மதரீதியான பத்திரிக்கையொன்றில் தியோத்திரேப்பு பற்றிய பாடம் ஒன்று ஒருமுறை வெளியாயிற்று. அதற்குப் பின்பு இருபது இடங்களில் இருந்த சபையின் நடத்துனர்கள், "தனிப்பட்ட வகையில் தாக்குதல்" காரணமாக, அப்பத்திரிக்

*கைக்குத் தங்களின் சந்தாவை ரத்துச்செய்துவிட்டனர் என்று அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் அறிவித்தார்.*

1. *தியோத்திரேப்பு போன்ற எண்ணப்போக்கை நாம் ஊக்குவிக்காமல் இருக்க வேண்டும்!*
2. *நாம் தியோத்திரேப்பு போன்றிராததை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் (மாற்கு 10:44).*

III. *தேமேத்திரியுவைப் புகழுதல் (வசனங்கள் 11, 12).*

A. *சத்தியத்திற்குச் சாட்சிகளாய் இருப்பவர்களைப் புகழ்வதில் யோவான் நம்பிக்கை கொண்டிருந்தார்.*

1. *சபையில் பிரச்சனைகள் நிலவுகிறபோது, வசனங்கள் 9, 12ல் அந்தப் பிரச்சனையை உண்டாக்கியவர்களைப்போல் அதே ஆவியுடன் நாமும் பதில்செயல் செய்யலாம். சரீரம் பிளவு அடைதலும் கிறிஸ்துவின் ஊழியத்திற்குப் பழுதுபார்க்க முடியாத வகையில் சேதம் ஏற்படுதலுமே விளைவாகும். உண்மையில், யோவான், "தியோத்திரேப்புபோலின்றி, தேமேத்திரியு போலிருங்கள்" என்றே கூறினார் (வசனம் 11).*
2. *தேமேத்திரியு இந்தக் கடிதத்தைக் கொண்டு சென்ற பயணம் செய்யும் சுவிசேஷ ஊழியராக இருந்திருக்கலாம். அவர் யாராக இருந்தாலும், நேர்த்தியான குறிப்புரைகளைக் கொண்டிருந்தார்: சபையின் பரிந்துரைகள், சத்தியம் (அதாவது, அவரது வாழ்வு சத்தியத்தின்படியானதாய் இருந்தது), மற்றும் யோவான்.*

B. *நாமும்கூட, இவ்வகையான, பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளும்வகையில் வாழ்வோமாக. நாம் எப்போதுமே அங்கீகரித்தலுக்குத் தகுதியானவர்களை அங்கீகரிப்போமாக.*

IV. *யோவானின் பின்னுரை (வசனங்கள் 13, 14).*

A. *யோவான், "சீக்கிரமாய் உன்னைக் காணலாம்" (அப்பொழுது காரியங்களை நேராக்கிக் கொள்ளலாம்; வசனம் 10ஐக் காணவும்) என்று கூறினார்.*

B. *அதேவேளையில், சூழ்நிலைகளினிமித்தம் கலக்கத்தினால் நிறைந்திருப்பதற்குப் பதிலாக, "உனக்குச் சமாதானம் உண்டாவதாக." நீங்கள் நண்பர்களைக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.*

*முடிவுரை*

*சபையில் பிரச்சனைகள் நிலவுகின்றபோது, நான் அந்தப் பிரச்சனையின் பாகமாய் இருக்கின்றேனா அல்லது தீர்வின் பாகமாய் இருக்கின்றேனா? நான் ஒரு காயுவாக இருக்கின்றேனா, தேமேத்திரியுவாக இருக்கின்றேனா, அல்லது தியோத்திரேப்புவாக இருக்கின்றேனா?*

# 24

# வெளிப்படுத்தின விசேஷம்: நாம் ஜெயம்கொள்வோம்!

***தலைப்பு***

*இப்புத்தகத்தின் தலைப்பு, இதன் முதல் வசனத்தின் கடைசிப்பகுதியில் உள்ள வார்த்தைகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது: "இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷம்." பல வேதாகமங்களில், இப்புத்தகம் "யோவானின் வெளிப்படுத்துதல்," என்று தலைப்பிடப்பட்டுள்ளது, ஆனால் இது உண்மையில் யோவான் மூலமாக இயேசு வெளிப்படுத்தினதாக உள்ளது.*

***பின்னணி***

*புதிய ஏற்பாட்டின் கடைசிப்பிரிவாகிய "தீர்க்கதரிசனம்," என்பது ஒரே ஒரு தொகுப்பை உடையதாயிருக்கிறது: வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகம்.*

*"வெளிப்படுத்துதல்" என்பதற்குரிய கிரேக்க வார்த்தை, apokalupsis என்பதாகும். இறைவெளிப்பாட்டு இலக்கியம் என்பது ஒரு விசேஷித்த வகையிலான இலக்கியமாகும். ஏற்பாடுகளுக்கு இடையில் எழுதப்பட்ட ஏவுதல்பெற்றிராத புத்தகங்களில் இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன, ஆனால் வேதாகமத்தில் ஒரு சில உதாரணங்களே உள்ளன: எசேக்கியேல் புத்தகத்தின் சில பகுதிகள், தானியேல் புத்தகத்தின் கடைசிப்பாதி, சகரியா புத்தகத்தின் சில வசனப்பகுதிகள், மற்றும் வெளிப்படுத்தின விசேஷம். இறைவெளிப்பாட்டு இலக்கியம் இடர்ப்பாடுகளின் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இது அடையாளங்களில் (யாருக்கு செய்தி சேரவேண்டுமோ அவர்களுக்கு மாத்திரம் "வெளிப்படுத்தவும்" மற்றவர்களுக்கு மறைக்கவும் கூடிய வகையிலான குறிச்சொற்கள்) எழுதப்பட்டது. இப்படிப்பட்ட இலக்கியம், அடக்குமுறைக்கு உட்பட்டிருந்தவர்களை ஊக்கப்படுத்துவதற்காக (பொதுச் சொற்றொடர்களில்) எதிர்காலத்தை முன்னுரைத்தது.*

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் அடிப்படையாக அடையாளங்களின் நான்கு வகைகள் பயன்படுத்தப்படுகின்றன: (1) பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள். இப்புத்தகத்தைப் புரிந்துகொள்வதற்குப் பழைய ஏற்பாடு பற்றிய அறிவு அவசியமாகிறது. (2) எண்கள். பழங்காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு, குறிப்பிட்ட எண்கள் குறிப்பிட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக, "3" என்பது தெய்வீகத்தின் எண்ணாகவும், "4" என்பது மனிதத்துவத்தின் எண்ணாகவும் இருந்தது. இவ்விதமாக, 3+4 ("7") என்பதும் 3×4 ("12") என்பதும் முழுமையான அல்லது பூரணமான எண்களாய் இருந்தன. "10" அல்லது "10"ன் எந்த ஒரு மடிப்பெருக்க எண்ணும் முழுமையான எண்ணாகக் கருதப்பட்டது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பெரும்பான்மையான எண்கள், "3," "4," அல்லது "10" என்ற எண்களுடன் தொடர்புடையவைகளாய் இருக்கின்றன. (3) வரலாற்றுக் குறிப்புகள். பெரும்பான்மையான வரலாற்றுக் குறிப்புகள் ரோமப்பேரரசுடன் தொடர்புடைய குறிப்புகளாக உள்ளன. எடுத்துக் காட்டாக, "மகா பாபிலோன்" (இது 18ம் அதிகாரத்தில் ஒரு நகர*

மாகக் குறிப்பிடப்படுகிறது) என்பது "ஏழு மலைகளின்"மீது அமைந்துள்ளது என்பதைக் கவனிக்கவும் (17:9). இது ரோமாபுரி நகரத்திற்கான குறிப்பாயுள்ளது. (4) வேறு எவ்விடத்திலும் காணப்படாத தனிவகைப் பட்ட அடையாளங்கள். இவைகள் சந்தர்ப்பப்பொருளின் அடிப்படையில் விளக்கப்பட வேண்டும். இவற்றில் சில வேதவசனப்பகுதியிலேயே அடையாளப்படுத்தப்படுகின்றன (எடுத்துக்காட்டாக, 12:9ன் "வலுர்ப்பம்" என்பது சாத்தானைக்குறிக்கிறது).

வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படும் அடையாளத்துவ மொழி நடையினிமித்தம், இப்புத்தகமானது தன்னிலேயே ஈர்க்கத்தக்க விளக்கங்களைத் தருகிறது. இவற்றில் சில சார்புநிலையில் இன்னலற்றவை களாய் இருக்கின்றன. "எதிர்காலவியலாளரின்'' கண்ணோட்டம் போன்ற (ஆயிரம் ஆண்டுகள் முன்னரசாட்சி), மற்றவைகளோ வேதாகமத்தின் பிற வசனப்பகுதிகளுக்கு முரண்படுகின்றன. கடுமையான உபத்திரவத்தில் இருந்த கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்துதல் என்பதே இப்புத்தகத்தின் முதன்மை நோக்கமாயிருந்தது. எதிர்காலவியல் அணுகுமுறை (இப்புத்த கத்தை இன்றைய நாட்களின் தலைப்புச்செய்திகளுக்குப் பொருத்தமான தென்று "விளக்கியுரைத்தல்'' மற்றும் இப்புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதி இன்னமும் எதிர்காலத்தில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளால் ஆனதென்று கண்ணோக்குதல்) என்பது, சிங்கங்களுக்கு இரையாக எரியப்படவிருந்த கிறிஸ்தவருக்கு அதிகம் ஆறுதல் அளிப்பதாயிருந்திராது.

இப்புத்தகத்தை வாசிப்பதில், ஒவ்வொரு காட்சியினுடைய "பெரிய கருத்தை'' தேடுங்கள்; விவரங்களில் கண்ணோக்கை மங்கவிடாதீர்கள். இப்புத்தகம் ஒரு எளிய செய்தியைக் கொண்டுள்ளது: விஷயங்கள் இப்போது, மோசமானவைகளாகக் காணப்பட்டாலும், நீங்கள் தேவனுடைய பக்கத்தில் நிலைத்து இருந்தால், நீங்கள் [உபத்திரவத்தை] மேற்கொள்வீர்கள்; நீங்கள் வெற்றியடைவீர்கள்!

இப்புத்தகத்தின் எழுத்தாளர் தாம் யோவான் என்று மாத்திரம் அடையாளப்படுத்துகின்றார் (1:1, 4, 9). இது இப்போது துருக்கி என்று அழைக்கப்படும் நாட்டின் கடற்கரையில் ஏஜியன் கடலில் இருந்த பத்மு தீவிற்கு நாடுகடத்தப்பட்டிருந்த (1:9) யோவானுக்கு, மிகச்சிறப்பாகப் பொருந்துகிறது. "ஆசியாவில் இருந்த ஏழு சபைகளே" இந்தப் புத்தகத்தைத் தொடக்கத்தில் பெற்றுக்கொண்டனர் (1:4), இவைகள் ஆசியா (இப்போது இது துருக்கியின் மேற்குக் கடற்கரைப் பகுதியாகும்) என்ற ரோம மாகாணத்தில் உண்மையிலேயே இருந்த ஏழு சபைக்குழுமங்களாகும். இது அனேக மாக, நீரோ அல்லது டொமீஷியன் என்ற அரசனின் ஆளுகையின்போது, ரோம அரசினால் கிறிஸ்தவர்கள் கடுமையாக உபத்திரவப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். நீரோவின் காலத்தில் உபத்திரவம் என்பது அதிகமாக உள்ளூரிலேயே நிகழ்ந்தபடியால், பல எழுத்தாளர்கள் இது டொமீஷியனின் காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்ற கருத்தையே முன்மொழிகின்றனர். இது அவனது ஆட்சிக்காலத்தின் முடிவில் எழுதப்பட்டிருக்கலாம் என்றால், கி.பி. 94-96 என்பதே இப்புத்தகம் எழுதப்பட்ட காலமாகும்.

**வரைகுறிப்பு**

I. ஏழு பொன் குத்துவிளக்குகளுக்கு மத்தியில் கிறிஸ்து உலாவுதல்: ஏழு

*சபைகள் (1-3).*

II. *ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகம்: ஒரு வெளிப்படுத்துதல் (4-7).*

III. *ஏழு எக்காளங்கள் ஊதப்படுதல்: ஒரு எச்சரிக்கை (8-11).*

IV. *சபையின் விரோதிகளின் அறிமுகம்: பெரிய வலுசர்ப்பமும் இரு மிருகங்களும் (12-14).*

V. *தேவகோபத்தின் ஏழு கலசங்கள் ஊற்றப்படுதல்: தண்டணை (15; 16).*

VI. *சபையின் விரோதிகள் அழிக்கப்படுதல்: மகாபாபிலோன் உட்பட, வலுசர்ப்பம் தவிர (17-19).*

VII. *வலுசர்ப்பம் அழிக்கப்படுதல், புதிய வானமும் புதிய பூமியும் (20-22).*

**வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திலிருந்து பாடங்கள்**

*"மிருகத்தின் எண்" (13:18) என்பது ஏதேனும் ஒரு நாளில் மனிதர்களின் நெற்றியில் பதிக்கப்படுகிற உண்மையான எண்ணாக இருப்பதில்லை. "6," என்ற எண், ஏறக்குறைய "7" (முழுமைத்துவம்) என்றிருப்பதால், அது (ஏறக்குறைய "7" என்றிருப்பதால்) பழங்காலத்தில் வஞ்சகத்தையும், (அது "7" ஆக இருப்பதில்லை யாதலால்) தோல்வியையும் குறிப்பதாகக் கருதப்பட்டது. "666" என்ற எண், (துன்மார்க்க சக்தியான) மிருகமானது பல மக்களை வஞ்சிக்கும், ஆனால் கடைசியில் தோல்வியடையும் என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. துன்மார்க்கம் வெற்றியடையாது!*

*வெளிப்படுத்தின விசேஷம் 20ன் "ஆயிரம் ஆண்டுகள்" என்பது நேரடியாக ஆயிரம் ஆண்டுகள் கொண்ட காலத்தைக் குறிப்பிடுவதில்லை. "1000" என்பது 10×10×10 என்பதாக உள்ளது, அதாவது, "முழுமைத்துவம்" வலு-வாகக் கூறப்படுகிறது. இது, இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்றபோது (நடபடிகள் 2:33-36; 1 கொரிந்தியர் 15:25) தொடங்கப்பட்ட, அவருடைய முழுமையான, பூரணமான, முற்றிலுமான ஆளுகையைக் குறிக்கிறது. துன் மார்க்கம் இவ்வுலகத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது போன்று காணப்படலாம், ஆனால் இயேசு கட்டுப்பாடு செலுத்துகின்றவராய் இருக்கிறார். "நல்லவர்கள்" வெற்றியடைவார்கள்!*

*நாம் இன்றைய நாட்களில் நம்மைப் பற்றிக் கண்ணோக்கும்போது, ஊக்கம்குறைந்துபோவதென்பது சுலபமாகும். இப்படிப்பட்ட எதிர்சூழ் நிலைகளில் நாம் எவ்வாறு வெற்றியடைய முடியும்? முதல் நூற்றாண்டின் முடிவில் இருந்த கிறிஸ்தவர்கள், அவர்களைப் பற்றிக் கண்ணோக்கியபோது, ரோமாபுரியினுடைய "வெற்றிகொள்ளப்பட முடியாத" வல்லமையைக் கண்டனர். கிறிஸ்தவம் எவ்வாறு உயிர் வாழ முடியும்? அது உயிர்வாழ்ந்தது. அது கர்த்தருடைய பலத்தின் மூலமாக, ரோமாபுரிப் பேரரசின்மீது வெற்றிசிறந்தது! என்ன நடந்தாலும், கர்த்தருடன் நிலைத்து நின்று, விசுவாசத்தில் நிலைகொண்டிருக்க வேண்டும் என்பதே, நமக்குச் செய்தியாக உள்ளது (2:10). யாரோ ஒருவர், "இப்புத்தகத்தின் கடைசி அதிகாரத்தை நான் வாசித்தி ருக்கின்றேன் - நமது பக்கமே வெற்றியடைகிறது!" என்று கூறியிருக்கின்றார்.*

---

## தன்னை தகுதியாக்கிக் கொண்டிருந்த சபை (வெளிப்படுத்தின விசேஷம் 3:14-22)

*எபேசு நகரில் இருந்து சுமார் எண்பது மைல்கள் தொலைவில், எரப்போலிஸ்*

*என்ற இடத்திற்கு அருகில் (கொலோசெயர் 4:13), லவோதிக்கேயாவின் சிதிலங்கள் பரவிக்கிடக்கின்றன. அந்த நகரம் அகழ்ந்து (தோண்டி) எடுக்கப்படவில்லை, கனத்த வளைவுகள் மற்றும் பிற கட்டிட அமைப்புகளின் உச்சிகள், அந்த நகரம் மற்றும் அங்கு தன்னைக் தகுதியாக்கிக் கொண்டிருந்த மேன்மை வாய்ந்த சபை ஆகியவற்றிக்குக் கவலையான நினைவூட்டும் வகையில் மாபெரும் கல்லறை நினைவுத் தூண்கள் போன்று பாறையான மண்ணில் இருந்து வெளியே நீட்டிக் கொண்டுள்ளன.*

*இந்த நகரத்தைப் பற்றிய மூன்று விஷயங்கள் குறிப்பிடப்பட வேண்டும். முதலாவது, லவோதிக்கேயா ஒரு நிதிநிலை நிர்வாக மையமாயிருந்தது; அது ஆசியாவிலேயே செல்வமிகுந்த நகரமாயிருந்தது. மக்கள் தங்கள் செல்வம் குறித்தும் சுய உதவியில் இயங்குதல் குறித்தும் மேன்மைபாராட்டினர். இரண்டாவது, அது ஒரு மருத்துவ மையமாயிருந்தது. உலகத்தில் நன்கு அறியப்பட்டிருந்த மருத்துவர்களில் சிலர் அங்கே இருந்தனர். அவர்கள் காதுகள் மற்றும் கண்களில் ஏற்படும் நோய்களுக்கு மருத்துவம் செய்வதில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். மூன்றாவது, இது தனது உடைத் தயாரிப்பு நிறுவனங்களுக்காக, அதிலும் விசேஷமாக, மிகவும் கருப்பான செம்மறி ஆட்டின் உயர்தர ரோமத்தில் இருந்து தயாரிக்கும் உடைகளுக்காகப் புகழ் பெற்றிருந்தது.*

I. *இயேசு தொடங்குகின்றார் (3:14).*
   A. *இந்த சபைக்குழுமம் அனேகமாகப் பவுல் லவோதிக்கேயாவில் இருந்தபோது, தொடங்கப்பட்டிருக்கலாம் (கொலோசெயர் 2:1; 4:15, 16).*
   B. *இயேசுவைப் பற்றிய விவரிப்பு.*
      1. *"ஆமென் என்பவர்." இந்த ஒரு இடத்தில் மாத்திரமே இச்சொற்றொடர் ஒரு தகுதிப் பெயராகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது "உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி" என்பதைக் குறிக்கிறது.*
      2. *"தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்" (கொலோ செயர் 1:15-17). இயேசு பரலோகத்தில் இருந்து வந்தவராய் இருக்கின்றார். அவர்மீது நம்பிக்கை வைக்கப்பட முடியும்.*

II. *இயேசு கண்டனம் பண்ணுகின்றார் (3:15-17).*
   A. *வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் வாசிக்கப்படுவதைக் கேட்பதற்காக இந்த சபையார் கூடியிருந்த வேளையில் நீங்கள் அவ்விடத்தில் இருந்ததாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். பிலதெல்பியா சபை புகழப்பட்டதை அவர்கள் கேள்வியுறுகின் றனர். தங்களைப் பற்றிய புகழ்ச்சி நிச்சயம் அதைவிடப் பெரியதா யிருக்கும் என்று எதிர்பார்க்கின்றனர். பின்பு அவர்கள் வசனங்கள் 15-17ஐ வாசிக்கக் கேட்கின்றனர்! இந்த சபைக்குப் பாராட்டுரை என்று எதுவுமே இல்லை! இன்னொரு சபையும் (சர்தை) குழு என்ற வகையில் பாராட்டு எதையும் பெறாதிருந்தது, ஆனால் அது உண்மையாயிருந்த "ஒருசில பெயர்களைக்" கொண்டிருந்தது. இந்தக் கடிதம் எவரொருவருக்கும் எவ்விதமான பாராட்டுரையையும் கொண்டிருக்கவில்லை!*
   B. *கண்ணோட்டங்களில் நேரெதிர்த்தன்மை.*

1. *லவோதிக்காவில் இருந்த கிறிஸ்தவர்களை வெதுவெதுப்பான வர்கள் என்று இயேசு அழைத்தார்!*
   a. *அவர்கள் அனலாகவோ அல்லது குளிராகவோ இருக்க வில்லை. அவர்கள் [விசுவாசத்தைக் கைவிட்டு] வெளியேற விடவில்லை, ஆனால் அவர்கள் மிகக்குறைந்த அளவே கொண்டிருந்ததில் திருப்தியடைந்திருந்தனர்.*
   b. *இயேசு அவர்கள் அனலாயாவது குளிராயாவது இருந் திருக்க வேண்டுமென்று தாம் விரும்பியதாகக் கூறினார். அவர்கள் முற்றிலுமாக உள்ளேயிருந்திருக்க வேண்டும் அல்லது முற்றிலுமாக வெளியே இருந்திருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். வெதுவெதுப்பான கிறிஸ்த வர்கள், இன்னும் தாங்கள் கர்த்தருக்குரியவர்களாய் இருப்பதாக உரிமை கோருகின்றனர், இவர்கள் விசுவாசத்தை மறுதலித்து ஆனால் அதைக் குறித்து நேர்மையாய் ஒப்புக்கொள்ளுகின்றவர்களைக் காட்டிலும், கிறிஸ்துவின் ஊழியத்தில் மாபெரும் முட்டுக்கட்டையாய் இருக்கின்றனர்.*
   c. *"வாந்திபண்ணுதல்" என்பது emeo என்ற கிரேக்க வார்த் தையில் இருந்து வருகிறது, இதில் இருந்தே நாம்* "emetic" *என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகின்றோம். வெது வெதுப்பான நீர் என்பது வாந்தியெடுத்தலைத் தூண்டி விடுகிறதாக உள்ளது. (குறிப்பு: ஏரப்போலி நகருக்கு அருகில் இன்னமும் வெதுவெதுப்பான நீரூற்றுகள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.)*
2. *அவர்கள் தங்களை ஆவிக்குரிய வகையில் செல்வந்தர்கள் என்றும், ஒன்றும் தங்களுக்கு தேவையில்லை என்றும் நினைத் திருந்தனர்; இந்த எண்ணப்போக்கானது அனேகமாக அவர்களின் நிதிநிலை செல்வத்தன்மையைப் பிரதிபலிப்பதாக இருக்கலாம். இருப்பினும், இயேசு, அவர்களை "நிர்ப்பாக்கிய முள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியும்" என்று விவரிக்கின்றார்.*
   a. *அவர்கள் பாராட்டப்பட வேண்டிய மக்களாய் இருப்ப தற்குப் பதிலாக, பரிதாபத்திற்குரியவைகளுடன் ஒப்பிடப்படு கின்றனர்.*
   b. *உலக செல்வங்களின் மையத்தில், அவர்கள் ஆவிக்குரிய வகையில் "தரித்திரராக" இருந்தனர். ஒரு மருத்துவ மையத்தில், அவர்கள் "பார்வையற்றவர்களாக" இருந்தனர். உடை தயாரிக்கும் மையத்தில், அவர்கள் "நிர்வாணிகளாய்" இருந்தனர்.*

III. *இயேசு ஆலோசனை அளிக்கின்றார் (3:18, 19).*

A. *அவர்களுக்குப் பின்வருபவை தேவைப்பட்டன (வசனம் 18):*

1. *அவர்களின் தரித்திரத்திற்கு: "நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்" - அதாவது, உண்மையான செல்வங்கள், பரலோகத்தின்*

செல்வங்கள்.

2. அவர்களின் நிர்வாணத்திற்கு: "வெண்வஸ்திரங்கள்" - இயேசுவைச் சார்ந்திருத்தல் (7:14; 19:8).
3. அவர்களின் பார்வையற்ற தன்மைக்கு: "கலிக்கம்" - எது முக்கியமானது என்பதைப் பற்றிய தகுதியான கண்ணோக்கு.

B. இயேசு அவர்களின்மீது அன்புகூர்ந்திருந்தபடியால், வெளிப்படையாய்ப் பேசுகின்றார் (வசனம் 19).

IV. இயேசு முடிக்கின்றார் (3:20-22).

A. மிகவும் கடுமையாகத் தாக்கும் இந்தக் கடிதத்தில், இயேசு மிகவும் மென்மையான அழைப்பைக் கொடுக்கின்றார் (வசனம் 20); அவர் திருப்தியாயிருத்தல் என்ற அவர்களின் கூட்டைத் துளைத்து உட்புக விரும்புகின்றார்.

B. ஏழு கடிதங்களில் மற்ற எதிலும் இராத மாபெரும் வாக்குத்தத்தத்துடன் இயேசு இந்தக் கடிதத்தை முடிக்கின்றார் (வசனம் 19). அவருடைய சிங்காசனத்தில் அவருடன் அமர்தல் என்பது, லவோதிக்கேயராக இருத்தல் என்ற உலகப்பிரகாரமான கனத்தைவிட மாபெரும் கனமாய் இருக்கும்.

முடிவுரை

மேட்டிமை என்ற விஷயம் உங்களைக் கர்த்தருக்குக் கீழ்ப்படியத் தடைசெய்ய அனுமதிக்காதீர்கள். நீங்கள் சுயநிறைவு கொண்டவர்களாய் இருப்பதில்லை. கர்த்தர் உங்களுக்குத் தேவை. அவர் உங்கள் வாழ்வினுள் வந்து வாழ அனுமதியுங்கள்.